

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0001.jpg

இலங்கைத் தமிழர்

— ஒரு சுருக்க வரலாறு —

சிரேஷ்ட பேராசிரியர் **ப. புஷ்பரட்ணம்**
தொல்லியல் இணைப்பாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0002.jpg

இலங்கைத் தமிழர்

ஒரு சுருக்க வரலாறு

நூலாசிரியர்

சிரேஷ்ட பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்
தொல்லியல் இணைப்பாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நூல் வடிவமைப்பும் பதிப்பும்:
உமா பதிப்பகம், மலேசியா

நூல் வடிவமைப்பாளர்:
செல்வராசா நிசாகுலன்

ஒருங்கிணைப்பாளர்:
கந்தசாமி பார்த்திபன்

முதற்பதிப்பு 2017

பதிப்புரிமை:
© தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

ISBN 978-3-906871-15-8

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0003.jpg

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துரை



இலங்கைத் தமிழரின் வரலாறும், அவர்களின் மரபுரிமை அடையாளங்களும் கண்டறிந்து ஆவணப்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு புலம்பெயர்ந்து வாழும் எம் மக்களிடையே மேலோங்கி வருவதை எம்மால் உணர முடிகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு பேராசிரியர் ப.புஷ்பரட்ணத்தால் எழுதப்பட்டிருக்கும் 'இலங்கைத் தமிழர் வரலாறு' என்ற நூலுக்கு வாழ்த்துரை வழங்குவது எனக்கு மட்டற்ற மனமகிழ்வைத் தருகிறது. இன்று 45க்கும் மேற்பட்ட நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அந்நியமான புதிய சூழலில் இனம், மதம், மொழி, பண்பாடு என்பவற்றால் முற்றிலும் வேறுபட்ட மக்களுடன் ஒன்றிணைந்து வாழ நேரிட்டாலும், தமது இன அடையாளங்களையும், மரபுரிமைகளையும் பாதுகாப்பதிலும், அவற்றைத் தம்மை அடுத்து வரும் சந்ததியினருக்குக் கொண்டு செல்வதிலும் தீவிர அக்கறை காட்டி வருவதையும் நாம் அறிவோம். இந்த உணர்வாலும், ஆர்வத்தாலும் இன்று எம்மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் அரச பாடசாலைகளில் தமிழ்மொழி, தமிழர் வரலாறு, பண்பாடு என்பன தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பிள்ளைகளுக்கு கற்பிக்கப்பட்டு வருகின்றன. சில நாடுகளில் தமிழ் தாய்மொழியாக அங்கீகரிக்கப்பட்டு அரச நியமனங்களில் தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்றோருக்கு முன்னுரிமையும் கொடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வங்கீகாரங்களை எல்லாம் கருத்திற் கொண்டு புலம்பெயர்ந்து வாழும் எமது எதிர்காலச் சந்ததியினர் தமிழையும், தமிழர் பண்பாட்டையும் தொடர்ந்து முன்னெடுக்க பேராசிரியர் புஷ்பரட்ணம் அவர்களால் எழுதப்பட்ட இலங்கைத் தமிழர் வரலாறு என்ற நூலை வெளியிட முன்வந்திருக்கும் சுவிற்சர்லாந்து தமிழ்க் கல்விச் சேவையையும், அதன் ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி பார்த்திபனையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறு, பண்பாடு பற்றி இதுவரை சொல்லப்பட்டதை விட சொல்லாமல் விடப்பட்டிருப்பதே அதிகமாகும். இவை இலங்கையில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் தொல்லியல் ஆய்வுகளால் துலக்கம் பெறும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அப்பணிகளில் அதீத அக்கறை காட்டிவரும் பேராசிரியர் புஷ்பரட்ணம் இந்நூலில் சில புதிய கருத்துக்களையும், முடிவுகளையும் முன்வைத்திருப்பதைக் காணமுடிகிறது. அவற்றுள் இலங்கைத் தமிழர் தமிழ் நாட்டிலிருந்து தமிழ்மொழி பேசும் மக்களாக இலங்கை வருவதற்கு முன்னரே அவர்களின் மூதாதையினர் இலங்கையில் வாழ்ந்துள்ளனர் என்பதற்கும், வட இலங்கை பண்டுதொட்டு பாளிமொழியில் நாகதீபம், தமிழில் நாகநாடு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0004.jpg

என அழைக்கப்பட்டமைக்கு அதன் பௌதீக அம்சங்களை விட இங்கு தோன்றி வளர்ந்த தனித்துவமான பண்பாடே காரணம் என்பதற்கும், நல்லூர் இராசதானிக்கு முன்னரே இலங்கையில் தமிழ் அரசமரபு தோன்றியிருந்தது என்பதற்கும் இலங்கை வரலாறும், பண்பாடும் தமிழ் சிங்கள மக்களின் கூட்டு முயற்சியால் தோன்றி வளர்ந்ததென்பதற்கும் அவர் முன்வைத்திருக்கும் நம்பகரமான தொல்லியல், இலக்கிய ஆதாரங்கள் முக்கிய அம்சங்களாகப் பார்க்கப்பட வேண்டியவை. அனைவருக்கும் பயன்படும் வகையில் இலகு மொழிநடையில் எழுதப்பட்டிருக்கும் இந்நூல் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இலங்கைத் தமிழர் வரலாற்றையும், பண்பாட்டையும் தெரிந்து கொள்ளப் பெரும் உதவியாக இருக்கும் என நம்புகிறேன். இந்நூலை ஆக்கியுள்ள பேராசிரியர் புஷ்பரட்ணம் ஏற்கனவே ஈழத் தமிழரின் மரபுரிமை அடையாளங்கள் என்ற ஆவணத் தொகுப்பையும் ஆக்கியுள்ளார். இந்நூல்களை வெளியிட முன்வந்திருக்கும் சுவிற்சர்லாந்து தமிழ் கல்விச்சேவை இவற்றைப் புலம்பெயர்ந்த நாடுகளுக்கு மட்டுமல்ல இலங்கை மக்களுக்கும் பயன்படும் வகையில் அவற்றின் வெளியீடுகளை விரிவுபடுத்த வேண்டும் என்பது எனது விருப்பமாகும். இவ்விடத்தில் இவ்வரிய பணிகளைச் செய்திருக்கும் பேராசிரியர் புஷ்பரட்ணத்தை மனதாரப் பாராட்டுவதுடன், அவர் தொடர்ந்து இப்பணிகளைச் செய்ய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

நன்றி,

சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்

துணைவேந்தர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0005.jpg

முன்னுரை



புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களிடையே குறிப்பாக இளம் சந்ததியினரிடையே அவர்களது பூர்வீகம், தாய்நாட்டின் வரலாறு சார்ந்த தேடல்கள் அதிகரித்துள்ளன. அவர்கள் கற்றுவரும் தமிழ்மொழிப் பாடநூல்களில் இவ்விடயங்கள் தொடர்பான பாடங்கள் இடம்பெற்றிருப்பினும் மாணவர் அவற்றை விரிவாகச் சான்றாதாரங்களுடன் விளங்கிக் கொள்வதற்கும், ஆசிரியர்கள் இப்பாடங்களைக் கற்பிப்பதற்குத் தேவையான மேலதிக தேடல்களுக்கும் ஈழத்தமிழர் வரலாறு தொடர்பான வழிகாட்டி நூல் ஒன்றின் தேவை வெகுவாக உணரப்பட்டது.

இதன் காரணமாக, சுவிற்சர்லாந்து வாழ் தமிழ்க் குழந்தைகளுக்கான தமிழ்மொழி பாடநூல்களை ஆக்குவதற்குத் துணைபுரிந்த பேராசிரியர்களுள் ஒருவரான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மூத்த பேராசிரியரும், தொல்லியல் இணைப்பாளருமான ப. புஷ்பரட்ணம் அவர்களுடன் நாம் இது தொடர்பாகக் கலந்துரையாடிய போது, அதன் இன்றியமையாமையை முழுமனத்துடன் ஏற்று, தனது கடமைகளுள் ஒன்றெனக் கருதி '**இலங்கைத் தமிழர் - ஒரு சுருக்க வரலாறு**' எனும் இந்நூலை ஆக்கித் தந்துள்ளார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamil Eelam Archive

பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் தனக்குரிய ஆய்வின் பின்புலமாகத் தொல்லியலைக் கொண்டிருந்த போதிலும் தமிழியல், சமூகவியல், வரலாற்றியல் முதலியவற்றிலும் சிறப்புத் தேர்ச்சியுடையவர். இவர் பேராசிரியர்களான கா. இந்திரபாலா, சி. க. சிற்றம்பலம், பொ. இரகுபதி, செ.கிருஷ்ணராஜா, திருமதி சோ.கிருஷ்ணகுமார். வி. சிவசாமி, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, திரு. சீலன்கதிர்காமர் முதலியோரின் மாணவர். உலகப்புகழ்பெற்ற தொல்லியல், கல்வெட்டியல் ஆய்வாளரும் பேராசிரியருமான வை. சுப்பராயலு அவர்களின் மேற்பார்வையில் தொல்லியல் ஆய்வுத்துறையிலே கலாநிதிப்பட்டம் பெற்றவர். வரலாறு, தொல்லியல் சார்ந்த பத்துக்கு மேற்பட்ட நூல்களையும், நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதிய பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் அவர்கள் உலகப்புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர்களால் நன்கு அறியப்பட்டவர். இவர், ஈழத்தின் குறிப்பாக வட- கிழக்குப் பிராந்தியத்தின் தொன்மை வாய்ந்த இடங்களைத் தேடிக்கண்டறிந்து, அகழ்வாய்வுசெய்து ஈழத் தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை ஆதாரத்துடன் நிறுவிக்கொண்டிருப்பவர்.

பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் அவர்கள், வரலாற்றுக் குறிப்புகளுடன் இக்காலம் வரை தமது தொல்லியல் ஆய்வுகள் மூலம் கண்டறிந்த பல ஆதாரங்களையும் இந்நூலில் இணைத்து ஈழத்தமிழர் வரலாற்றை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0006.jpg

விளக்கியுள்ளார். மேலும் தமது ஆய்வுக்குப் பக்கபலமாக, தொடர்புபட்ட வேறுபல அறிஞர்களது கண்டுபிடிப்புகளையும் கருத்துகளையும் பதிவு செய்துள்ளார்.

ஈழத்தமிழர் தம் பூர்வீக வரலாற்றை, சிறப்புகளை காலத்துக்குக் காலம் பதிவு செய்வதில் வெற்றி கண்டிருக்கவில்லை எனும் கருத்து நிலவி வருகிறது. அதன் காரணமாக கிடைக்கும் நூல்களில் காணப்படும் முழுமைப்படுத்தப்படாத, திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றையே தமிழ் மாணவர்கள் கற்கவேண்டியுள்ளது.

ஈழத்தமிழர் வரலாற்றை அறிந்துகொள்ள மற்றும் ஆய்வுக்குட்படுத்த விரும்புபவர்களுக்கு இந்நூல் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்விடயத்தில் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கும் இந்நூல் வழிகாட்டியாக அமையும்.

ஈழத்திலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களுடைய தாய்மொழி, பண்பாட்டு மற்றும் வரலாற்றுக் கல்விக்குத் துணைபுரிய வேண்டியவர்களாக ஈழத்திலுள்ள பல்கலைக்கழகங்களும், பேராசிரியர்களும் அறிவியலாளர்களும் உள்ளனர்.

இவ்வகையில், பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் அவர்களது இவ் வரலாற்றுப்பணியைத் தமிழ்ச்சமூகம் சார்பில் உளமாரப் போற்றுகின்றோம். இந்நூலைக் குறுகிய காலத்தில் ஆக்கித் தருவதற்கான அவரது அயராத உழைப்பையும், அவரது குடும்பத்தினரது தியாகத்தையும் பெரிதும் மதிக்கின்றோம்.

இந்நூலுக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மூத்த பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களது வாழ்த்துரை அமைந்துள்ளது. அவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

தமிழீழ ஆவணகம்
Tamileelam Archive

மேலும், இந்நூலைக் குறுகிய காலத்தில் நாம் எதிர்பார்த்தவாறு சிறப்பாக வடிவமைத்து, பதிப்பித்துதவிய மலேசியா உமா பதிப்பகத்தின் உரிமையாளர் டத்தோ ஆ. சோதிநாதன் அவர்களுக்கும், இந்நிறுவனத்தின் தலைமை வடிவமைப்பாளர் திரு. செ. நிசாகுலன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இவ்வாறு எமது மக்களது அறிவுத் தேடல்களுக்கும், குழந்தைகளின் கல்விக்கும் உதவிவரும் உயரிய உள்ளங்களை நாமும் எமது மக்களும் மனதாரப் போற்றி நிற்கின்றோம்.

நன்றி,

கந்தசாமி பார்த்திபன்

ஒருங்கிணைப்பாளர்,

தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0007.jpg

நூல் அறிமுகம்



சுவிற்சர்லாந்தில் தமிழ் மொழி பாடநூல் தொடர்பாக பேராசிரியர் அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் தி. சிவலிங்கராஜா ஆகியோருடன் இணைந்து நடாத்திய கலந்துரையாடலின் போது அதில் கலந்துகொண்ட அந்நாட்டு தமிழ்க் கல்வியாளர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்குரிய தமிழ்ப் பாடநூல்களில் இடம்பெற்றிருக்கும் இலங்கை வரலாற்றைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் ஆசிரியர்களும், மாணவர்களும் ஆர்வம் குறைவாக இருப்பதால் அப்பாடங்களை தமிழ் மொழிப் பாட நூல்களில் இருந்து அகற்றுமாறு கூறினர். இதற்கு இலங்கை வரலாற்றுப் பாட நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருந்த இந்நூல்களில் தமிழர் வரலாற்றையோ, தமிழர் பண்பாட்டையோ தெரிந்து கொள்ள முடியாதிருந்தமை முக்கிய காரணம் என்பதை எம்மால் உணரமுடிந்தது. இந்நிலையில் அந்நாட்டில் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக எம்மால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகளில் இலங்கைத் தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, தமிழர் மரபுரிமை தொடர்பான விடயதானங்களை முன்னிலைப்படுத்திக் கூறப்பட்ட போது அதில் கலந்து கொண்ட பலரும் தமது முன்னைய கருத்துக்களை மாற்றி நாம் முன்னிலைப் படுத்திய பாடவிதானங்களையே தமக்குரிய வரலாற்றுப் பாட நூல்களில் சேர்த்து ஆசிரியர்களுக்கான ஒரு வரலாற்றுப் பாடநூல் எழுதப்பட வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தினர். அவர்களின் வேண்டுதலை நிறைவு செய்யும் நோக்கிலேயே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

நாம் சுவிற்சர்லாந்தில் தங்கியிருந்த காலப்பகுதியில் அங்குள்ள தமிழ்மொழிப் பாடசாலைகள் சிலவற்றுக்குச் சென்று, அங்கு வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு படிக்கும் மாணவர்கள் பலரும் தமது சொந்த நாடு, தமது கிராமங்கள், கிராமத்து உறவுகள், அவர்களின் பண்பாடுகள் என்பவற்றை அறிவதில் அதிக ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். ஆசிரியர்களும் வரலாற்றுப் பாட நூல்களுக்கு அப்பால் தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு பற்றிச் சொல்லிக் கொடுக்கும் போது மாணவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு கேட்பதாகக் கூறுகின்றனர். ஆயினும் அந்நாட்டு மரபுரிமை அம்சங்களை நேரில் பார்த்துப் படிப்பதற்கு செய்யப்பட்டுள்ள வசதி வாய்ப்புக்கள் தமிழரின் பாரம்பரிய அம்சங்களைப் பார்த்துப் படிப்பதற்கு இல்லை என ஆசிரியர்கள் கூறிய குறைபாடுகளையும் எம்மால் அவதானிக்க முடிந்தது. இவற்றைக் கருத்தில் கொண்டே தமிழரின் மரபுரிமை அடையாளங்கள் என்ற ஆவணத் தொகுப்பும் ஆக்கப்பட்டுள்ளது. இவையிரண்டும் தற்போது

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0008.jpg

சுவிற்சர்லாந்து தமிழ்க் கல்விச் சேவையால் ஒன்றாக வெளியீடு செய்யப்படுவது மனநிறைவைத் தருகிறது.

'இலங்கைத் தமிழர் வரலாறு' என்ற இந்நூல் முடிந்தளவுக்கு வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்கள் புரிந்து கொள்வதற்காக இலகு தமிழில் எழுதப்பட்டதாக உணர்கிறேன். ஆயினும் தமிழரின் இருப்பு பற்றிய விடயதானங்கள் அறிவியல் சார்ந்து கூறவேண்டியிருந்ததால் அவ்விடயங்களை விரிவாகக் கூறுவது தவிர்க்க முடியாதிருந்தது. சில இடங்களில் 'கூறியது கூறல்' நூலின் குறைபாடாகத் தோன்றலாம். ஆயினும் பொருள் விளக்கம் கருதி அவற்றைத் தவிர்க்க விரும்பவில்லை. இந்நூல் குறுகிய காலப்பகுதியில் எழுதப்பட்டிருந்தாலும் ஆசிரியர்களும் மாணவர்களும் இலங்கைத் தமிழர் வரலாறு, பண்பாடு பற்றி அறியப் பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

இவ்விடத்தில் இந்நூல் உருவாக்கத்தில் எனக்கு உதவியாக இருந்த அன்பர்களை நினைவுபடுத்திக் கொள்வதை எனது கடமையாகக் கருதுகிறேன். சுவிற்சர்லாந்தில் வாழும் ஆசிரியர்கள், மாணவர்கள் நலன் கருதி இலங்கைத் தமிழர் வரலாறு, பண்பாடு தொடர்பான நூல் ஒன்றை எழுத வேண்டும் என்ற எண்ணக்கருவை முதலில் என்னுள் விதைத்தவர் சுவிற்சர்லாந்து தமிழ்க் கல்விச்சேவை ஒருங்கிணைப்பாளர் திரு. கந்தசாமி பார்த்திபன் அவர்கள். அவரே அவ்விதை முளைவிட்டு ஒரு நூலாக வெளிவரப் பலநிலைகளிலும் பங்காற்றியுள்ளார். இந்நூலுக்கு எமது பல்கலைக்கழகத் துணைவேந்தர் வாழ்த்துரை வழங்கியிருப்பதை எனது நூலுக்கான அங்கீகாரமாகப் பார்க்கிறேன். தமிழரின் நவீன கால வரலாறு தொடர்பான இவ்வாக்கத்திற்கு பயனுள்ள தரவுகளை அவ்வப்போது வழங்கியவர் திருமதி அனித்தா சசிகரன் அவர்கள். நூலின் எழுத்துப் பிழைகளை ஒப்புநோக்கி சரி பார்த்தவர்கள் செல்வி. சரீனா, செல்வி. யோகரூபினி, செல்வி. வோசிகா, செல்வி. நிரோசிகா அவர்கள். நூலுக்கான புகைப்படங்களை தயாரித்து தந்தவர் செல்வி. விஜயரூபி அவர்கள். இவர்கள் அனைவருக்கும் என் இதயபூர்வமான நன்றிகள்.

மேலும் உரிய காலத்தில் இந்நூலைச் சிறப்புற வடிவமைத்து எம்மை மகிழ்வித்த உமாபதிப்பக உரிமையாளர் டத்தோ ஆ. சோதிநாதன் அவர்களையும், இந்நிறுவனத்தின் தலைமை வடிவமைப்பாளர் திரு. செ. நிசாகுலன் அவர்களையும் இந்நூல் வெளிவரும் நிலையில் நினைவுபடுத்திக் கொள்வதை எனது நன்றிக் கடனாகப் பார்க்கிறேன். திரு. நிசாகுலன் அவர்கள் புலம்பெயர்ந்த தமிழர்களின் படைப்புக்கள் பலவற்றை வடிவமைத்ததன் மூலம் தமது மேதாவிலாசத்தை அடையாளப்படுத்திய ஒருவர். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவனாக இருந்த காலத்தில் இருந்து அறிவேன். அந்த உரிமையில் எனது நூல் சிறப்பாக இருப்பதற்கு அரும்பாடுபட்டவர். அவருக்கு எனது நன்றிகள்.

நூலாசிரியர்

Tamilnetam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0009.jpg

உள்ளடக்கம்

1. இலங்கையின் பூர்வீக மக்களும் பண்பாடும் 1
2. இலங்கையில் மொழிவழிப் பண்பாட்டின் தோற்றம் 43
3. நாகநாடும் (நாகதீபம்) தமிழர்களும் 75
4. பொலநறுவை இராசதானியும் தமிழர்களும் 99
5. பொலநறுவையின் வீழ்ச்சியும் வன்னியும் 127
6. யாழ்ப்பாண இராச்சியம் 165
7. ஐரோப்பியர் ஆட்சியில் இலங்கைத் தமிழர் 193
8. உசாத்துணை நூல்கள், கட்டுரைகள் 225

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0011.jpg

இயல் ஒன்று

இலங்கையின் பூர்வீக மக்களும் பண்பாடும்

அறிமுகம்

தென்னாசியாவில் பல்லினப் பண்பாடு கொண்ட மக்கள் வாழ்ந்து வரும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இது இந்து சமுத்திரத்தின் மத்தியில் தென்னிந்தியாவின் தென்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவாகும். இந்தியாவில் இருந்து ஒடுங்கிய பாக்குநீரிணையால் இலங்கை தனித் தீவாகப் பிரிக்கப்பட்டிருப்பதனால் இந்தியாவில் காலத்திற்கு காலம் தோன்றி வளர்ந்த பண்பாடுகள் சமகாலத்தில் ஈழத்திலும் செல்வாக்குச் செலுத்தக் காரணமாக இருந்துள்ளது. அதேவேளை அதன் இயற்கை எல்லைகள் இலங்கையின் வரலாறும், பண்பாடும் இலங்கைக்கே உரிய தனிப்போக்குடன் வளரவும் உதவியுள்ளது. இத்தீவின் அமைவிடமும், அதன் பௌதீக வளங்களும்,இயற்கையாகக் கிடைத்த முத்து, இரத்தினம், யானை, யானைத் தந்தம், சங்கு, சிற்பி மற்றும் ஏலம், கறுவா, கராம்பு முதலான வாசனைத் திரவியங்களும் பண்டுதொட்டு பல நாட்டவரையும் இத்தீவைக் கவரச் செய்தது. இவற்றின் விளைவால் பல நாட்டுப் பண்பாடும் ஈழத்தின் பண்பாடு வளர்வதற்கு உதவின அல்லது ஈழப் பண்பாட்டுடன் கலந்தன எனக் கூறலாம். இவற்றின் காரணமாக ஆதிகாலத்திலிருந்து இத்தீவு பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படக் காரணமாகியது. அவற்றுள் இலங்காபுரி, தம்பன்ன, (தம்பபன்னி, தப்ரபேன், தப்ரோன்), இரத்தினதுவீபம், ஈழம், லங்கா, இலங்கை, ஸ்ரீலங்கா ஆகியவை குறிப்பிடத்தக்கன. அவற்றுள் தம்பன்ன, இலங்கை, ஈழம் ஆகிய பெயர்கள் வரலாற்று அறிஞர்களின் அதிக கவனத்தை கொண்ட பெயர்களாக காணப்படுகின்றன.

Tamileelam Archive

ஆரம்பத்தில் இலங்கையின் குறிப்பிட்ட பிராந்தியத்தை அல்லது குறிப்பிட்ட இடத்தைச் சுட்டி நின்ற சில பெயர்கள் காலப்போக்கில் முழு இலங்கையையும் குறிக்கும் பெயர்களாக மாறியதாகத் தெரிகிறது. அவற்றுள் பாளி மொழியில் தம்பன்ன எனவும், தமிழில் ஈழம் எனவும் அழைக்கப்படும் பெயர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. பாளி இலக்கியங்கள் கி.மு 6ஆம் நூற்றாண்டில் விஜயன் வந்திறங்கிய இடமாக வடமேற்கு ஈழத்தில் இருந்த "தம்பன்ன" என்ற இடத்தைக் குறிப்பிடுகிறது. இப்பெயரே காலப்போக்கில் முழு இலங்கையையும் குறிக்கும் பெயராக மாறியது. இது நாடுகளின் மொழி வேறுபாட்டிற்கு ஏற்ப தம்பபன்னி, தப்ரபேன், தப்ரோன் என அழைக்கப்பட்டு வந்துள்ளது. பாக்கர் என்ற அறிஞர் இப்பெயர் இலங்கையின் தென்கிழக்கே பாய்கின்ற "தம்பன்வ" என்ற ஆற்றின் பெயரால் ஏற்பட்டதாகக் கூறுகிறார் *(Parkar 1909)*. பேராசிரியர் பரணவிதான தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூர் என்ற ஊரின் ஊடாகப் பாயும் ஆறு ஒன்று தாமரபரணி என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருவதால் அப்பிராந்தியத்தில் இருந்து முத்துக்குளிக்க வந்த மக்களால் வடமேற்கு இலங்கைக்கு இடப்பட்ட பெயரே பாளி மொழியில் தம்பன்ன என மாற்றம் பெற்றிருக்கலாம் எனக் கூறுகிறார் *(Paranavithana 1961:24)*. ஆனால் தமிழகத்தில் கி.பி 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தாமரபரணி என்ற பெயரில் ஒரு ஆறு அழைக்கப்பட்டதற்கு கல்வெட்டுக்களிலோ அல்லது இலக்கியங்களிலோ ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆனால் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து தமிழகத்திலிருந்து மக்கள் புலம்பெயர்வும், பண்பாடும் இலங்கையில் பரவியமைக்கு நம்பகரமான ஆதாரங்கள் காணப்படுகின்றன. அதிலும் தமிழக - இலங்கை நாகரிகத்திற்கு வித்திட்ட

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0012.jpg

பெருங்கற்காலப்பண்பாட்டுச் சின்னங்கள் தாமரபரணி ஆறு ஓடும் ஆதிச்சநல்லூரும், வடமேற்கு ஈழமும் ஒரு பிராந்தியத்திற்கு உரியவை என மயங்கும் அளவிற்கு நெருங்கிய ஒற்றுமை கொண்டு காணப்படுகிறது. இதனால் பண்டைய காலத்தில் பாளி மொழியில் "தம்பன்ன" அல்லது தமிழில் தாமரபரணி என வடமேற்கு ஈழத்தைக் குறித்த பெயரே தமிழகத்தில் ஆதிச்சநல்லூரில் உள்ள ஆறு "தாமரபரணி" என அழைக்கப்படக் காரணமாக இருந்திருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.



ஈழம் தொடர்பாகத் தமிழகத்தில் கிடைத்த கல்வெட்டு

"ஈழம்" என்பது ஈழத்தைக் குறித்த இன்னொரு முக்கிய இடப்பெயராகும். தமிழகத்தில் கி.பி 1ஆம் நூற்றாண்டில் எழுந்த பட்டினப்பாலை எனும் சங்க நூலில் "ஈழத்துணவும் காளகத்து ஆக்கமும்" என்ற வரிகளால் இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு உணவு ஏற்றுமதி செய்யப்பட்ட செய்தி சொல்லப்படுகிறது. இதிலிருந்து இந்நூல் எழுந்த காலத்தில் "ஈழம்" என்ற பெயரால் ஈழம் அழைக்கப்பட்ட மரபு தமிழகத்திற்கு நன்கு பரீட்சயமாக இருந்தமை தெரிகிறது. இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இந்நூல் எழுந்த காலத்துக்கு சற்று முற்பட்ட காலத்தைச் சேர்ந்த தமிழகத்தில் திருப்பரங்குன்றம் என்ற இடத்திலுள்ள பிராமிக் கல்வெட்டு ஈழத்துக் குடும்பிகன் (ஈழத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவன்) அங்கு வாழ்ந்த சமணத்துறவிக்கு அமைத்துக் கொடுத்த கற்படுக்கை பற்றிக் கூறுகிறது. ஏறத்தாழ இதன் சமகாலத்திற்குரிய பூநகரியில் கிடைத்த பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்களில் "ஈழ", "ஈல" என்ற பெயர்களும், அநுராதபுரத்தில் உள்ள பிராமிக் கல்வெட்டில் "ஈளபரத" (ஈழத்துப் பரதவர்) என்ற பெயரும் காணப்படுகின்றன. இவை ஈழம் என்ற நாட்டுப் பெயரைக் குறித்திருக்கலாம் என எண்ணத்தூண்டுகின்றது. சங்கப் பாடலைப் பாடிய புலவர்களில் ஒருவராக ஈழத்துப் பூதந்தேவனார் காணப்படுகிறார். அதில் அடைமொழியாக வரும் "ஈழம்" என்ற சொல் ஈழத்தைக் குறிப்பதாக உள்ளது. சமகால ஈழப் பிராமிக் கல்வெட்டுக்களில் பூகன், பூத என்ற பெயர்களும், அதன் பெண்பால் பெயர் பூதி எனவும் வருகின்றன. சங்க காலத்தை தொடர்ந்து இலங்கையிலும், தமிழகத்தில் பல்லவர், சோழர், பாண்டியர் ஆட்சிக்காலக் கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் இலங்கையைக் குறிக்க ஈழம் என்ற பெயரே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு அங்குள்ள ஆலயம் ஒன்றிற்கு 30 ஈழக் காசுகள் தானமாகக் கொடுக்கப்பட்ட செய்தி பற்றிக் கூறுகிறது. இதிலிருந்து ஈழக்காசு பற்றிய தொன்மை ஆதாரம் ஈழத்தில் இருந்துள்ளமை தெரிகிறது. இதனைத் தொடர்ந்து 10ஆம், 11ஆம் நூற்றாண்டு கால சோழக் கல்வெட்டுக்களில் ஈழக்காசு, ஈழக்குருங்காசு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. முதலாம் பராந்தக சோழன் ஈழத்தை வெற்றி கொண்டதன் நினைவாக ஈழக்காசு, ஈழக்குருங்காசு என்ற பெயரில் நாணயங்கள் வெளியிட்டதை அவன் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவை பொன், செப்பு முதலான உலோகங்களில் வெளியிடப்பட்ட நாணயங்களைக் குறித்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. தமிழகத்தில் பல்லவர் காலக் கல்வெட்டில் "ஈழப்பூட்சி" என்ற சொல் காணப்படுகிறது. இச்சொல் "கள்" உற்பத்தி செய்வோரிடம் இருந்து அறவிடப்படும் வரியைக் குறிக்கிறது. இதனால் கள் உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் ஈழவர் எனவும் அழைக்கப்பட்டனர்.

"தெங்கும் பனையும் ஈழவர் ஏறாப்பெறாதாராகவும்" என்று சில நிலமானியம் தொடர்பான கல்வெட்டுக்களில் குறிப்புக்கள் வருகின்றன. தற்போது வடஈழத்தில் பூநகரியில் உள்ள கிராஞ்சி என்ற கிராமம் முன்னைய காலத்தில் "ஈழவூர்" என அழைக்கப்பட்டதை அங்குள்ள ஓலைச்சுவடிகளில்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0013.jpg

இருந்து அறியமுடிகிறது. அண்மைக்காலத்தில் "ஈழம்" என்ற பெயர் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் "ஈழம்" என்பது ஒரு தமிழ்ச் சொல் எனவும், அச்சொல் பனை வளத்தோடு தொடர்புடையதாகத் தோன்றிய பெயர் எனவும் கூறியுள்ளனர் (பத்மநாதன் 2011: 5). ஈழத்தில் பனைமர உற்பத்தி எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையிட்டு அறிஞர்கள் மத்தியில் பலதரப்பட்ட கருத்துக்கள் உள்ளன. பேராசிரியர் பத்மநாதன் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஈழத்தில் பனை மரங்கள் உற்பத்தி செய்யும் மரபு தோன்றியிருக்கலாம் எனக் கூறுகிறார் (மேலது: 5). இக்கூற்று பொருத்தப்பாடாக இருக்குமானால் "ஈழம்" என்ற பெயர் பனைவளம் நிறைந்த வடஈழத்தை அல்லது வடஈழத்தின் ஒரு பகுதியைக் குறித்த ஒரு பெயராக இருந்து காலப்போக்கில் முழு நாட்டையும் குறிக்கும் பெயராக மாறியதெனக் கருதலாம்.

பாளி இலக்கியங்களும் பூர்வீக மக்களும்

தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற சிறப்பு இலங்கைக்கு உண்டு. கி.மு 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் பரவியபோது கூடவே வரலாற்றைப் பேணும் மரபும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. பௌத்தமதம் தொடர்பான செய்திகளை பௌத்த விகாரைகளில் இருந்து வாய்மொழிச் செய்தியாகப் பேணி வந்த பௌத்த குருமார் அம்மதத்திற்கு தொண்டாற்றிய மன்னர்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு வரலாற்றுச் சம்பவங்களையும் பேணிவந்தனர். அவ்வாறு பேணப்பட்ட வரலாற்று சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டே கி.பி 4ஆம் நூற்றாண்டில் தீபவம்வம், கி.பி 6ஆம் நூற்றாண்டில் மகாவம்சம் அதைத் தொடர்ந்து சூளவம்சம் முதலான பாளி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இப்பாளி இலக்கியங்கள் பௌத்த மதத்தை அதிலும் குறிப்பாக தேரவாத பௌத்த மதத்தின் தோற்றம், பரவல், வளர்ச்சி தொடர்பான வரலாற்றை முன்னிலைப்படுத்திக் கூறுவதையே முக்கிய நோக்காகக் கொண்டெழுந்தவை. ஆயினும் அவ்விலக்கியங்களே ஈழத்தின் ஆதிகால வரலாற்றை அறிய உதவும் முதன்மை நூலாகப் பார்க்கப்பட்டு வருகின்றது. அவற்றுள் இலங்கையின் பூர்வீக மக்கள், பண்பாட்டு உருவாக்கம் தொடர்பான வரலாற்றைக் கூறுவதில் மகாவம்சம் முக்கிய மூலாதாரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்நூலில் விஜயன் வருகை தொடக்கம் மகாசேன மன்னன் காலம் வரையான 1000 ஆண்டுகால வரலாறு தொடர்ச்சியாகக் கூறப்பட்டுள்ளது. இந்நாட்டின் பூர்வீக மக்கள் பற்றிக் கூறும் இந்நூல் கி.மு 6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வடஇந்தியாவிலிருந்து விஜயன் தலைமையில் குடியேறிய 700 தோழர்களுடன் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தொடங்கியதாகக் கூறுகிறது (Mahavamsa vi-vii.51-55). இவர்களது வருகைக்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களை இயக்கர், நாகர் என இந்நூலிலும், ஏனைய பாளி நூல்களிலும் குறிப்பிடப்பட்டாலும் வரலாற்று அறிஞர்கள் அவர்களை மனிதப் பிறவிகளற்ற அமானுஜர்கள் என்றே விளக்கமளித்துள்ளனர் (Mendis 1946:8, Paranavitana 1961181-82). இதன் மூலம் விஜயன் வழிவந்த சிங்கள மக்களே இலங்கையின் பூர்வீக மக்கள் என்றும், அவர்களுடன் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தொடங்குகின்றதென்ற ஆழமான கருத்தும் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாளி நூல்களில் தமிழர், தமிழ் மன்னர்கள், அவர்களது மதங்கள் தொடர்பான வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஆயினும் இவர்களை இலங்கைக்குரிய மக்களாகக் குறிப்பிடாது அக்கரையில் இருந்து (தமிழகத்தில் இருந்து) வணிகராக, படையெடுப்பாளராக, ஆக்கிரமிப்பாளராக வந்து போன அந்நியர் எனக் குறிப்பிடுகின்றன. விஜயனும், அவனது 700 தோழர்களும் வடஇந்தியாவிலிருந்து இலங்கையில் குடியேறியதாகப் பாளி இலக்கியங்கள் கூறுவதை சிங்கள மக்களின் மூதாதையினர் வடஇந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதற்கு அடிப்படை ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது. ஆனால்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0014.jpg

அதே பாளி இலக்கியங்கள் விஜயனுக்கும், அவனது 700 தோழர்களுக்குமான மணப்பெண்களும், 18 தொழில் தெரிந்த 1000 குடும்பங்களும் தமிழ் நாட்டிலிருந்து (பாண்டி நாட்டிலிருந்து) வந்து இலங்கையில் குடியேறியதை விஜயன் காலத்திலேயே தமிழர்களின் மூதாதையினர் தமிழ்நாட்டிலிருந்து வந்ததற்கு ஆதாரமாகக் கொள்ள முற்படவில்லை. இதனால் இலங்கை வரலாற்று நூல்களில் பாளி இலக்கியக் கருத்துக்களே தற்காலம் வரை செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. இதற்கு ஆதாரமாக 1960 பதுகளில் வெளியிடப்பட்ட "இலங்கையின் பௌதீகவியல் மானிடவியல்" என்னும் அருங்காட்சியக நூலில் "இலங்கையில் வேடர்கள் பூர்வீக குடிகள், சிங்களவர் ஆதிவரலாற்றுக் காலத்தில் வடஇந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறியோரின் வழித்தோன்றல்கள், தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து குடியேறியவர்கள், முஸ்லீம்கள் அரேபியாவிலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் வழித்தோன்றல்கள், பறங்கியர் இங்கு வாழ்ந்த போர்த்துக்கேயரது, ஒல்லாந்தரது பிற்காலச் சந்ததியினர்" எனக் கூறப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிடலாம்.

தொல்லியலும் பூர்வீக மக்களும்

உலகின் பல நாடுகளில் தொல்லியல் ஆதாரங்களைப் பயன்படுத்தி வரலாறு எழுதப்படுவதற்கு முன்னர் அந்நாடுகளின் வரலாறு தொடர்பாக மக்களிடையே நிலவிய ஐதீகங்கள், வாய்மொழிச் செய்திகள், மரபுக்கதைகள் என்பனவும், அவற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த வரலாற்று இலக்கியங்களுமே அந்த நாடுகளின் வரலாறாகப் பார்க்கப்பட்டது. ஐரோப்பியரால் முதன்முதலாக வரலாற்று இலக்கியங்களுடன் தொல்லியல் சான்றாதாரங்களையும் பயன்படுத்தி வரலாறு எழுதும் மரபு தோன்றியது. இதனால் பல நாடுகளின் முன்னைய வரலாற்று நம்பிக்கைகள் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டது. சில நாடுகளில் நம்பகத் தன்மையுடைய தொல்லியல் ஆதாரங்களால் கட்டியெழுப்பப்பட்ட புதிய வரலாற்று உண்மைகளுக்கு மாறாகப் பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரலாற்றை நோக்கும் மரபும் காணப்படுகின்றது. இலங்கையில் 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இருந்து வரலாற்று இலக்கியங்களுடன் தொல்லியற் சான்றுகளையும் பயன்படுத்தி வரலாறு எழுதும் மரபு தோன்றியது. பிரித்தானிய நிர்வாகிகளும், இராணுவ அதிகாரிகளும் பல்வேறு நோக்கங்களுக்காக புராதன அநுராதபுரம், பொலநறுவை முதலான இராசதானிகளுக்குச் சென்ற போது அங்கு அழிவடைந்த இராசதானிகளின் கட்டிடங்கள், வழிபாட்டுத் தலங்கள், கைவிடப்பட்ட குளங்கள், அணைக்கட்டுக்கள், கால்வாய்கள், கல்வெட்டுக்கள் முதலானவற்றைக் கண்டுபிடித்தமை தொல்லியல் ஆய்வை முன்னெடுக்கக் காரணமாயின. இக்காலப் பகுதியில்தான் கைகர் என்ற மேற்கு நாட்டவர் பாளி மொழியில் அமைந்திருந்த இலக்கியங்களை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்திருந்தார். இதன் மூலம் பாளி இலக்கியங்களில் சொல்லப்பட்ட இடங்கள், வரலாற்றுச் சம்பவங்களைக் கண்டறிந்து ஆய்வு நடாத்துவது பிரித்தானியர் காலத் தொல்லியல் ஆய்வின் முக்கிய நோக்கமாக இருந்தது.

பாளி இலக்கியங்கள் தேரவாத பௌத்த மதத்தையும், அம்மதத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த மன்னர்களையும், அம்மதத்தைப் பின்பற்றிய மக்களையும் முதன்மைப்படுத்திக் கூறும் நோக்கில் எழுதப்பட்டவை. இதனால் தேரவாத பௌத்த மதம் தவிர்ந்த ஏனைய மதங்களின் வரலாறும், மக்களின் வரலாறும் இந்நூல்களில் புகைபடிந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இவற்றைக் கருத்தில் கொண்டே மகாவம்ச நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்த கைகர் இந்நூலில் சொல்லப்பட்டதல்ல பிரச்சனை சொல்லாமல் விடப்பட்டதே பிரச்சனை என்பதைச் சூசகமாகக் குறிப்பிடுகின்றார். இத்நிலையில் பாளி இலக்கியங்களில் சொல்லப்பட்ட வரலாற்றை ஆதாரங்களாகக் கொண்டு பிரித்தானியர் காலத் தொல்லியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டமை பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்றை நியாயப்படுத்தவே பெரிதும் உதவியுள்ளன. இதன் மூலம் சிங்கள மக்கள் ஆரியமொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0015.jpg

எனவும், தமிழர்கள் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இனவேறுபாட்டை ஏற்படுத்தும் கருத்து நிலை தோன்றுவதற்கு பிரித்தானியர்காலத் தொல்லியல் ஆய்வுகளே பெரிதும் காரணமாக இருந்தது. ஆயினும் பாக்கர் போன்ற மேற்கு நாட்டவர் ஈழத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கு வவுனியாவில் பெரியபுளியங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களை ஆதாரமாகக் காட்டினார். மேலும் அவர் மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் பேலிவாவியை வன்னியிலுள்ள வவுனிக்குளம் என அடையாளப்படுத்தி அது எல்லாள மன்னனின் சாதனைகளில் ஒன்று எனவும், முல்லைத்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட இலக்குமி நாணயங்கள் எல்லாள மன்னனால் வெளியிடப்பட்டவையாக இருக்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார். இவரின் சமகாலத்தவரான லூயிஸ் என்ற அறிஞர் வன்னிப் பிராந்தியத் தொல்லியல் ஆய்வின் போது கண்டுபிடித்த இந்து, பௌத்த ஆலயங்களின் கட்டிட, சிற்ப அழிபாடுகள், கல்வெட்டுக்கள், வன்னிச் சிற்றரசர்களின் இராசதானிகள், வாழ்விடங்கள், வரலாற்றுப் பழமைவாய்ந்த குளங்கள், அணைக்கட்டுக்கள், கலிங்குகள், கால்வாய்கள் என்பவற்றின் அழிபாடுகளைக் குறிப்பிட்டு தமிழகத்தைக் காட்டிலும் தூய தமிழ்ப் பெயர்கள் கொண்ட கிராமங்கள் வன்னியில் இருப்பதாகக் குறிப்பிட்டார். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் எழுந்த இக்கருத்துக்கள் இலங்கைத் தமிழருக்கு தொன்மையான வரலாறு உண்டு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆயினும் ஈழத்து வரலாறு தொடர்பாக பிற்காலத்தில் எழுந்த ஆய்வுகளில் இக்கருத்துக்கள் அதிகம் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் பெரும்பாலும் விஜயன் வருகையினைத் தொடர்ந்து ஏற்பட்ட எழுத்து, மொழி, மதம், கலை, பண்பாடு என்பன பற்றியும், அவற்றில் ஏற்பட்ட அபிவிருத்திகள் பற்றியும் கண்டறிவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டது. இவற்றை முன்னெடுத்துச் சென்றதில் 1960களில் இருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் செயற்படத் தொடங்கிய தமிழ், சிங்கள வரலாற்று அறிஞர்களை உள்ளடக்கிய ஆய்வுக்குழுவிற்கு முக்கிய பங்குண்டு. 1970களில் இருந்து இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போக்கும், ஆய்வுப்பரப்பும் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றகரமாக இருந்தது. இதற்கு தென் இலங்கையின் சில பல்கலைக்கழகங்களில் தொல்லியல் கற்கை நெறிகள் தொடங்கப்பட்டமை, தொல்லியல் ஆய்வுகளில் நவீன விஞ்ஞானத் தொழில்நுட்ப வசதிகள் இணைக்கப்பட்டமை, தொல்லியற் திணைக்களம், மற்றும் தென் இலங்கை பல்கலைக்கழகங்கள் முன்னெடுத்த தொல்லியல் அகழ்வாய்வுகளில் பிரித்தானியா, ஜேர்மன், அமெரிக்கா முதலான நாடுகளின் தொல்லியல் அறிஞர்களும் இணைந்து கொண்டமை முக்கிய காரணங்களாகும். இவற்றின் காரணமாக விஜயன் (வரலாற்றுக்கு முற்பட்ட காலம்) வருகைக்கு முற்பட்ட கால மக்கள், பண்பாடு பற்றிய உண்மைகள் ஓரளவிற்கு வெளிச்சத்திற்கு வரத்தொடங்கின. இதற்கு உதாரணமாக 1970களில் கலாநிதி சிரான்தெரனியகல வடஇலங்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுப் பகுதியில் கண்டுபிடித்த கற்கால மக்கள் தொடர்பான சான்றுகள், சமகாலத்தில் அமெரிக்கப் பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் கலாநிதி விமலாபேக்லே யாழ்ப்பாணத்தில் கந்தரோடை, புத்தள மாவட்டத்தில் பொம்பரிப்பு ஆகிய இடங்களில் கண்டுபிடித்த பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய மக்கள் தொடர்பான சான்றுகள், 1980-1984 காலப்பகுதியில் பேராசிரியர் ஜோன்காஸ்வெல் தலைமையில் மாதோட்டத்தில் நடாத்தப்பட்ட அகழ்வாய்வுகள், 1981 இல் தொடங்கப்பட்ட யுனெஸ்கோ பண்பாட்டு முக்கோணத்திட்டம், 1988-1991 காலப்பகுதியில் களனிப்பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு நிறுவனம் இபன்கடுவ என்ற இடத்தில் மேற்கொண்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் தொடர்பான அகழ்வாய்வுகள், 1990-1991 காலப்பகுதியில் பிரித்தானியா நாட்டுத் தொல்லியலாளரான பேராசிரியர் ஆல்சின், கலாநிதி கன்னிங்காம் அநுராதபுரத்தில் நடாத்திய அகழ்வாய்வுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாய்வுகள் இலங்கையின் பூர்வீக மக்கள் தொடர்பாகப் பாளி இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0016.jpg

எழுப்பப்பட்ட பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகள் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படவேண்டும் என்பதைத் தெளிவாகக் கோடிட்டுக்காட்டுகின்றன.

1974 இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் செயற்பாடுகள் தமிழ்ப் பிரதேசங்களில் தொல்லியல் ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பாக அமைந்தது. அத்துறையின் முதல் தலைவராக இருந்த பேராசிரியர் இந்திரபாலா தென் இலங்கை பல்கலைக்கழகங்கள் சிலவற்றைப் போல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் தொல்லியற்துறையை உருவாக்க ஆக்கபூர்வமான முன்முயற்சிகளை மேற்கொண்டார். வரலாற்றுப் பாடநெறிக்குள் தொல்லியற் பாடங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் தமிழ்ப் பிரதேசங்களில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்வதற்கான சூழ்நிலை தோன்றியது.அவற்றைத் தொடக்கி வைத்து நடைமுறைப்படுத்தியதில் கலாநிதி பொ. இரகுபதிக்கு முக்கிய இடமுண்டு. அவர் ஆனைக்கோட்டையில் அடையாளப்படுத்திய பெருங்கற்கால ஈமச்சின்னம் 1980 இல் பேராசிரியர் இந்திரபாலா தலைமையில் வரலாற்றுத்துறை ஆசிரியர்களால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இதன் மூலம் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்தின் முதலாவது பெருங்கற்கால மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

இக்கண்டுபிடிப்பைத் தொடர்ந்து கலாநிதி இரகுபதி தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொண்ட ஆய்வில் 40க்கும் மேற்பட்ட புராதன குடியிருப்பு மையங்களைக் கண்டுபிடித்து அவற்றின் தலைமைக் குடியிருப்பாக கந்தரோடையை அடையாளப்படுத்தியுள்ளார் *(Ragupathy 1987)*. தொடர்ந்து இக்கட்டுரை ஆசிரியர் பூநகரி (1993, 2004), சாட்டி (2004-2005), புளியங்குளம் (2014), கப்பாச்சி (2015), கட்டுக்கரைக் குளம் (2016), நாகபடுவான் திருமங்களாய் போன்ற மையங்களில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் புராதன குடியிருப்பு மையங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2011 இல் தொல்லியற் திணைக்களமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையும் இணைந்து கந்தரோடையில் அகழ்வாய்வை மேற்கொண்டது. இந்த அகழ்வாய்வின் மூலம் 1970 களில் விமலா பெக்லி யாழ்ப்பாணத்தின் பூர்வீக மக்கள் தொடர்பாக முன்வைத்த கருத்து மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. இத்தொல்லியல் ஆய்வுகளால் யாழ்ப்பாண இராச்சியம் தோன்ற முன்னர் பாளி இலக்கியங்களிலும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் எழுந்த வரலாற்று ஆய்வுகளிலும் புகைபடர்ந்திருந்த வட இலங்கையின் பூர்வீக மக்கள் பற்றிய ஆய்விற்குப் புதுவெளிச்சம் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறலாம்.

சமகாலத் தொல்லியல் ஆய்வுகளும் பூர்வீக மக்களும்

இலங்கையின் பூர்வீக மக்கள் பற்றிய சமீபகால ஆய்வுகள் விஜயன் யுகத்திற்கு முன்னர் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தொடங்கிவிட்டதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இலங்கையின் மக்களின் இன அடையாளங்களுக்கு உடற்கூற்றியல் வேறுபாடுகள் காரணமல்ல, பண்பாட்டு வேறுபாடுகளே காரணம் எனக் கூறும் பேராசிரியர் சேனக பண்டாரநாயக்கா அப்பண்பாட்டு வேறுபாடுகளை இலங்கையில் மனித நாகரிக வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து ஆராய்ந்து பார்க்க வேண்டுமெனக் கூறுகிறார் (சேனக பண்டாரநாயக்கா *1985:1-23*). பேராசிரியர் சத்தமங்கல கருணாரத்னா, ராஜ்சோமதே போன்ற அறிஞர்கள் பாளி இலக்கியங்களில் கூறப்படும் 'யக்', நாக மக்கள் அமானுசர்கள் அல்ல அவர்கள் இலங்கையில் வாழ்ந்த பூர்வீக இனக்குழுக்கள் என்பதற்கு கல்வெட்டுக்களை ஆதாரமாகக் காட்டுகின்றனர். அண்மையில் பொ.இரகுபதி எழுதிய "வல்லியக்கனும் வல்லிபுரநாதரும்" என்ற கட்டுரையில் 2500 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் வழிபாட்டில் பாரம்பரியமாக இருந்து வந்த இயக்கர் வழிபாடு (யக் வழிபாடு) எவ்வாறு அண்மைக்காலங்களில் வல்லிபுரநாதர் ஆலயமாக மாறியதென்பதை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0017.jpg

ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டி இலங்கைத் தமிழரது பண்பாட்டு அடையாளங்கள் பூர்வீக மக்களது பண்பாட்டிலிருந்து தொடங்க வேண்டும் என்பதற்கான காரணத்தையும் கோடிட்டுக் காட்டியிருந்தார் (இரகுபதி 2006:1-23). ஆதியில் இலங்கையின் பல இன மக்களுக்கும், மன்னர்களுக்கும் பொதுவாக இருந்த "நாக" என்ற பெயர் படிப்படியாகச் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து மறைந்து போக அப்பெயர் தமிழ்ச்சமூகத்தில் தொடர்ந்தும் புழக்கத்தில் இருந்து வருகின்றது. இதற்கு உதாரணமாக நாகன், நாகி, நாகதேவன், நாகராசன், நாகம்மாள், நாகவண்ணன், நாகநாதன், நாகமுத்து முதலான தனிநபர் பெயர்களும், அவர்கள் வாழ்விடங்களில் புழக்கத்திலுள்ள நாகர்கோயில், நாகமுனை, நாகபடுவான், நாகதேவன்துறை, நாகமலை, நாகதாழ்வு முதலான இடப்பெயர்களும், கிராமங்கள் தோறும் காணப்படும் நாக வழிபாட்டு ஆலயங்களும் சான்றாக உள்ளன. இப்பெயருக்கு 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு உண்டு என்பதை இப்பெயர்களின் வரலாற்றை பின்நோக்கிப் பார்த்தால் தெரியவரும். இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களிடையே தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வந்த குறியீடுகள் அவர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் அக்குறியீடுகள் அப்பண்பாட்டுடன் மறைந்து போகாது அவை பிற்காலத்தில் தமிழர் சமூகத்தில் மாடுகளுக்கு இடப்படும் குறியீடுகளாகவும், சலவைத் தொழிலாளர் பயன்படுத்தும் அடையாளச் சின்னங்களாகவும் தற்காலம் வரை புழக்கத்திலிருப்பதை ஆதாரங்களாகக் காட்டலாம் (புஷ்பரட்ணம் 1999:62-7). இவ்வாதாரங்கள் இலங்கைத் தமிழரின் வரலாறு இந்நாட்டில் மனித வரலாறு தொடங்கிய காலத்தில் இருந்து பார்க்கப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக்காட்டுவதாக உள்ளன.

கற்கால மக்கள் (Stone Age People)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



இந்தியாவில் இற்றைக்கு 600,000 வருடங்களுக்கு முன்னரே மனித வரலாறு தொடங்கி விட்டதாகக் கூறப்படுகிறது. இதன் சமகாலத்தில் இலங்கையில் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கிழக்கு இலங்கையில் புல்மோட்டைக் கடற்கரை மணல் படிவுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது கண்டறியப்பட்ட உயிரினச் சுவடுகள் சில இற்றைக்கு 2,50,000 வருடங்களுக்கு முன்னர் அதிலும் குறிப்பாக 500000 வருடங்களுக்கு முன்னர் கற்கால மக்கள் வாழ்ந்திருக்கலாம் என்பதை எடுத்துக் காட்டுவதாகத் தொல்லியலாளர் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த ஊகங்களை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளால்தான் உறுதி செய்து கொள்ள வேண்டும். ஆயினும் 125000 ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் மத்திய பழங்கற்கால (Middle Palaeolithic) மக்கள் வாழ்ந்தற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இதற்கு தென் இலங்கையில் முந்தல், இரத்தினபுரி போன்ற இடங்களிலும், வடஇலங்கையில் இரணைமடு (Iranamadu Formation) போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட கற்கருவிகள் சான்றாகக் காட்டப்படுகிறது (Deraniyagala 1992:686, 2004:4). வடஇலங்கையில் இரணைமடுவுக்கு வடக்கே வெற்றிலைக்கேணி, தெற்கே மாங்குளம், தென்மேற்கே மன்னார் வரை இக்கற்கால மக்கள் வாழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. இவ்வாய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட குவாட்ஸ் (Quartz) வகையைச் சார்ந்த பெரிய குத்துக்கருவிகள் (Choppers),

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0018.jpg

வெட்டுக்கருவிகள் (Flakes) என்பவற்றின் அடிப்படையில் இம்மக்கள் நாடோடிகளாகத் திரிந்து வேட்டையாடுதலில் ஈடுபட்டிருக்கலாம் எனத் தெரிகிறது (Deraniyagala 2004:5). இரத்தினபுரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது இக்கருவிகளுடன் மனித எலும்பின் சில பாகங்களும் கிடைத்துள்ளன. இவை கோமோ சேப்பியன் (Homo Sapiens) இனவகையைச் சேர்ந்தவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது (Deraniyagala 2004:4). ஆயினும் இக்கால மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு தொடர்பான பிற சான்றுகள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. இதனால் இம்மக்களுக்கும் பிற்காலத்தில் இலங்கையில் வாழ்ந்த மக்களுக்கும், பண்பாட்டிற்கும் இடையே இருந்திருக்கக் கூடிய தொடர்புகளை கூறமுடியாதிருக்கிறது.

நுண்கற்கால மக்கள் (Mesolithic People)

இலங்கையில் கற்காலப் பண்பாட்டு மக்களைத் தொடர்ந்து ஓரளவு நாகரிக முன்னேற்றமுடைய நுண்கற்கால மக்கள் கி.மு. 37,000 இல் இருந்து வாழ்ந்ததற்கான சான்றுகள் பரவலாகக் கிடைத்துள்ளன. இச்சான்றுகள் ஹற்றன் உயர் சமவெளி தொடக்கம் மன்னார், வில்பத்து ஆகிய தாழ்நிலங்கள், சப்பிரகமுவவின் மத்திய மழைக்கோட்டு காடுகள் வரை ஏறத்தாழ 75 இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வட இலங்கையில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் மாதோட்டம், பூநகரி, இரணைமடு, புளியங்குளம், கட்டுக்கரைக் குளம் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் காலத்தால் முந்திய பண்பாட்டு எச்சங்களும், மனித எலும்புக் கூடுகளும் பலாங்கொடைக்கு அண்மையில் உள்ள குகைகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதால் இப்பண்பாட்டை பலாங்கொடைப் பண்பாடு எனவும், இங்கு வாழ்ந்த மனிதர்களை பலாங்கொடை மனிதன் எனவும் அழைக்கப்படுகின்றது. மானிடவியலாளர் இம்மக்களின் பிற்காலச் சந்ததியினரே தற்காலத்தில் இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் வேடர்கள் எனக் கூறுகின்றனர்.

Tamileelam Archive

இலங்கையில் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்த குகை மற்றும் சமவெளிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கிடைத்த சான்றுகள் இப்பண்பாட்டின் தோற்றமும் மறைவும் இடத்திற்கு இடம் வேறுபட்டதாகக் காணப்படுகிறது (Deraniyagala 1992: 695-701, 2004:6). இந்த வேறுபாடுகளுக்கு ஆரம்பத்தில் இலங்கையின் குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் வாழ்ந்த இம்மக்கள் காலப் போக்கில் தமக்குச் சாதகமான பௌதீக சூழல்கள் காணப்பட்ட இடங்களை நோக்கிப் புலம்பெயர்ந்து அவ்விடங்களில் குடியேறியிருக்கவேண்டும். அல்லது இலங்கைக்கு வெளியேயிருந்து இம்மக்கள் வெவ்வேறுபட்ட காலங்களில் புலம்பெயர்ந்து வந்து இவ்விடங்களில் குடியேறியிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.



பூநகரியில் கிடைத்த நுண்கற்காலக் கருவிகள்

நுண்கற்காலப் பண்பாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கையில் கற்கருவிகளே முக்கிய பங்கு வகித்தன. இவை பெரும்பாலும் கோணவடிவிலும், பிறை வடிவிலும் வடிவமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் பெரும்பாலான கல்லாயுதங்கள் குவாட்ஸ் (Quartz), சேட்ஸ் (chert) போன்ற கற்களில் இருந்தும், மிக அரிதாக யஸ்பர் (Jasper) போன்ற கற்களில் இருந்தும் வடிவமைக்கப்பட்டிருந்தன (Deraniyagala

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0019.jpg

1992:266-70, 688-94, 2004:8). அத்துடன் எலும்பு, மான்கொம்பு என்பவற்றால் வடிவமைக்கப்பட்ட முனைகள், ஊசிகள் போன்ற கருவிகளையும் இம்மக்கள் பயன்படுத்தியதற்கு சான்றுகள் உண்டு (Seniveratne 1085:149,Deraniyagala 1992:278-81, 2004:9). இப்பண்பாட்டில் காணக்கூடிய தனித்துவமான சிறப்பம்சங்களில் ஒன்று அம்மக்கள் பயன்படுத்திய மிகச் சிறிய கல்லாயுதங்களாகும். இவை பொதுவாக 4 செ.மீ க்கும் குறைவான நீளத்தில் மிகவும் செம்மையாக வடிவமைக்கப்பட்டிருந்தன. இந்த அம்சம் பழைய கற்கால கற்கருவிகளைவிட நுண்கற்காலக் கருவிகள் தொழில்நுட்பம், கலையுணர்வு என்பவற்றை கருத்திற் கொண்டு வடிவமைக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டுகிறது. இம்மக்களின் இருப்பிடங்கள் மிக அரிதாகவும், சிறிதாகவும் காணப்பட்டன. அவை ஏறத்தாழ 50 சதுர மீற்றரில் ஒரு சில மையக் குடும்பங்கள் வாழக் கூடிய நிலையில் அமைந்திருந்தன (Deraniyagala 1992:351, 2004:8). இம்மக்கள் வாழ்விடங்களில்தான் இறந்தவர்களையும் அடக்கம் செய்தனர். பாகியன் (Fa-hein Cave) மற்றும் ரணவிலா குகைகளில் (Ranaella Cave) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது இறந்த மனிதனின் ஒரு சில எலும்புகளை மட்டும் அடக்கம் செய்து அதன் மேல் செம்மண்ணால் பூசப்பட்டிருந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இம்மரபு அக்கால மக்களின் சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படுகிறது (Deraniyagala 1992: 465-7, 696). இம்மக்கள் பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப நாடோடிகளாக இடத்திற்கு இடம் சென்று பலவகைப்பட்ட உணவுகளைச் சேகரித்துள்ளனர். பெலன்பண்டிபலச (Bellan-bandi-palasa) குகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இம்மக்கள் பலவகைப்பட்ட தானியங்கள், கிழங்குவகைகள், பழங்கள், காட்டு விலங்குகள், மீன் போன்ற கடல் உணவுகளைப் பயன்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளன. இச்சான்றுகளில் இருந்து இம்மக்கள் உணவுகளைச் சேமித்து வைக்கும் பழக்கத்தையும், நெருப்பின் பயன்பாட்டையும் ஓரளவு அறிந்திருந்தனர் என்பது மேலும் தெரியவந்துள்ளது. 30,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கணிப்பிடப்பட்டுள்ள பெலி குகையில் (Beli Cave) இருந்து உப்பு படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இதிலிருந்து அக்காலத்தில் மலைநாட்டிற்கும் கீழ்நாட்டிற்கும் இடையே வலைப்பின்னலான தொடர்புகள் இருந்தமை தெரிகிறது (Deraniyagala 1992:326, 2004:9).

நுண்கற்கால மக்களின் கலைப் படைப்புக்களையும், கலையுணர்வையும் அறிந்து கொள்ளக்கூடிய சான்றுகள் அதிகம் கிடைக்கவில்லை. இப்பண்பாட்டுக்குரிய சான்றுகள் காணப்பட்ட குகைகளில் பலவகைப்பட்ட குகைச் சித்திரங்கள் (Cave Art) காணப்படுகின்றன. இவை வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த வேடர்களின் கலைப்படைப்புக்களாகக் கருதப்படுகிறது. சிரான் தெரனியகல இக்குகை ஓவியங்கள் சில வரலாற்றுக்கு முற்பட்ட நுண்கற்கால மக்களுக்கு உரியவையாக இருக்கலாம் எனக் கருதுகிறார் (1992:465, 2004:10). குருவித்தைக்கு அண்மையில் உள்ள பதடொம்பா (Batadomba Cave 31,000-11,500) குகையில் இருந்து சங்கிலிருந்து வடிவமைக்கப்பட்ட மணிகள் (beds of shell), கடல் ஓடுகள், சங்கு, சிப்பி என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அக்கால மக்களின் கலையுணர்வையும் கடற்கரையோடு இம்மக்களுக்கிருந்த தொடர்பையும் எடுத்துக்காட்டுகின்றன. அண்மையில் பிரேமதிலக என்ற ஆய்வாளர் ஹற்றன் சமவெளியில் கிடைத்த தானிய விதைகளை ஆய்வுக்கு (Palynological Evidence) உட்படுத்தியதில் இருந்து கி.மு 17000 இல் இருந்து வாற்கோதுமை (barley), ஓட்ஸ் (Oats) எனப்படும் தானியங்கள் இம்மக்களால் பயிரிடப்பட்டமை தெரியவந்துள்ளது (Deraniyagala 2004:10).

பொம்பரிப்பிலும், அநுராதபுரத்திலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக அதன் மேற்படையில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் பெருங்கற்கால மக்கள் இலங்கைக்கு புலம்பெயர்ந்து வந்தனர் என்பதைவிட அப்பண்பாடு பரவிய போது இங்கு வாழ்ந்த நுண்கற்கால மக்களே அப்பண்பாட்டையும் பின்பற்றினர் என்ற கருத்தும் ஒரு சில அறிஞர்களால் முன்வைக்கப்படுகிறது. ஆனால்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0020.jpg

நுண்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படாத இடங்களில் அதன் தொடக்ககாலக் குடியேற்றமாகப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகள் பல இடங்களில் காணப்படுவதால் இக்கருத்து மேலும் ஆராயப்பட வேண்டியுள்ளது.

மானிடவியல் அறிஞர்கள் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த நுண்கற்காலமக்கள் ஒரே இனவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடுகின்றனர். தொல்லியலாளர்கள் இலங்கையில் நுண்கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளுக்கும் தென்னிந்தியாவில் பயன்படுத்தப்பட்ட கருவிகளுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றனர். அதிலும் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இரு பக்க அலகுடைய நுண்கற்காலக் கல்லாயுதங்கள் தமிழகத்தில் பாம்பன் கடற்கரைக்கு அண்மையில் உள்ள தேரிக் கலாசாரத்துடன் ஒரே பிராந்தியம் எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமை கொண்டுள்ளன *(Kennedy 1990:34)*. மொழியியலாளர்கள் மொழி அடிப்படையில் ஈழம், தென்னிந்திய நுண்கற்கால மக்களிடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வொற்றுமைகளின் அடிப்படையில் இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் தென்னிந்தியா அதிலும் குறிப்பாக தமிழகத்தில் உள்ள தேரி மணற்குன்றுப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வந்தனர் எனக் கூறுகின்றனர். இந்திரபாலா வடஇலங்கை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு தமிழகத்தின் தொடக்க வாயிலாக இருப்பதால் தமிழகத்தில் இருந்து புலம் பெயர்ந்த இம்மக்கள் முதலில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலேயே குடியேறியிருக்க வேண்டும் எனக் கருதுகிறார். கலாநிதி இரகுபதி 1980களில் தொல்லியற் திணைக்களத்துடன் இணைந்து புல்மோட்டையிலும், மாந்தைக்கு வடக்கே பூநகரிப்பிராந்தியத்திலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின் போது நுண்கற்காலக் கருவிகள் சிலவற்றைக் கண்டுபிடித்துள்ளார் *(இரகுபதி 1982- 1983:4-6)*. இக்கட்டுரை ஆசிரியர் 1993-2004 காலப்பகுதியில் இப்பிராந்தியத்தின் கடற்கரை சார்ந்த கிராமங்களான கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய கிராமங்களில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வின் போதும், கல்முனையில் மாதிரி ஆய்வுக்குழி அமைத்து மேற்கொண்ட அகழ்வாய்வின் போதும் நுண்கற்காலப் பண்பாட்டில் பெரிதும் பயன்படுத்தப்பட்ட குவாட்ஸ், சேட்ஸ் வகையைச் சார்ந்த சில கருவிகளும், அவற்றின் பாகங்களும் கண்டுபிடிக்க முடிந்தது *(புஷ்பரட்ணம் 1993)*. இவற்றை நோக்கும் போது தமிழகத்திலிருந்து பரவிய நுண்கற்காலப் பண்பாடும், அப்பண்பாட்டு மக்களும் யாழ்ப்பாணத் தீபகற்பம் உட்பட வடஇலங்கை ஊடாகவே நாட்டின் ஏனைய இடங்களுக்குப் பரவின எனக் கூறலாம்.

ஈழத்தில் பெருங்கற்காலப் பண்பாடு

நாடோடிகளாக உணவுக்காகவும், இருப்பிடத்திற்காகவும் அலைந்து திரிந்த மக்கள் எப்போது அவ்வாழ்க்கை முறையில் இருந்து விடுபட்டு ஓரிடத்தில் நிலையாகக் குடியேறி, நிரந்தர பொருளாதார உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கினார்களோ அப்போதே நாகரிக வரலாறு தொடங்குகிறது. இந்த மாற்றம் உலகின் பல நாடுகளில் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்குள்தான் நிகழ்ந்துள்ளதை தொல்லியல் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. இதனால்தான் மனித வரலாற்றில் 95 வீதமான காலத்தை நாடோடிச் சமுதாயம் வாழ்ந்த வரலாறாகவும், மீதமுள்ள ஐந்து வீத காலத்தை நாகரிக சமுதாயம் வாழ்ந்து வரும் காலமாகவும் கூறப்படுகிறது. இந்த நாகரிக உருவாக்கம் உலகின் எல்லா நாடுகளிலும், எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் நிகழ்ந்ததாகக் கூறமுடியாது. இது நாட்டிற்கு நாடு, இடத்திற்கு இடம் வேறுபட்ட காலச் சூழ்நிலையில் தோன்றியுள்ளது. இதற்கு நாகரிகம் தோன்றிய இடங்களின் அமைவிடம், பௌதீக வளங்கள், பிற இடங்களுடன், நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த சாதகமாக இருந்த பௌதீக வளங்கள் என்பன காரணமாக இருந்துள்ளதைக் காணலாம். இலங்கையை பொறுத்தவரை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0021.jpg

இந்த நாகரிக உருவாக்கம் ஏறத்தாழ இற்றைக்கு 3000 ஆண்டளவிலேயே ஏற்பட்டுள்ளதை தொல்லியல் ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன.

தொல்லியல் ஆய்வுகள் அதிகம் வளர்ச்சிபெறாத நிலையில் இலங்கையின் நாகரிகம் தோன்றிய காலத்தையும், அதற்கான காரணங்களையும் ஆய்வு செய்த அறிஞர்கள் பலரும் அதற்கு பாளி இலக்கியங்களில் வரும் பூர்வீக குடியேற்றங்கள் பற்றிய கதைகளை அடிப்படை மூலாதாரமாகப் பயன்படுத்தினர். இவ்விலக்கியங்கள் இற்றைக்கு 2500 ஆண்டளவில் வடஇந்தியாவிலிருந்து விஜயன் தலைமையில் வந்து குடியேறிய மக்களுடனேயே மனித வரலாறும், நாகரிக வரலாறும் தொடங்கியதாகக் கூறுகின்றன. பாளி இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யும் அறிஞர்கள் இலங்கையில் நிலையான குடியேற்றங்கள், குளநீர்ப்பாசன விவசாயம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன விஜயன் வருகையுடன் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். மேலும் இக்குடியேற்றம் பற்றிய கதையை வடஇந்தியாவிலிருந்து ஏற்பட்ட ஆரியர் குடியேற்றம் என எடுத்துக் கொண்ட அறிஞர்கள் அம்மக்களின் வழிவந்த பிற்காலச் சந்ததியினரே சிங்கள மக்கள் எனவும் விளக்கம் அளித்தனர். பாளி இலக்கியங்கள் கூறும் விஜயன் கதையை பண்டைய காலத்தில் வடஇந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே இருந்து வந்த வர்த்தக, பண்பாட்டு உறவுகள் பற்றிய சான்றுகளாக எடுத்துக் கொள்ள இடமுண்டு. ஆயினும் அக்கதையை இலங்கையில் வடஇந்தியக் குடியேற்றம் ஏற்பட்டதற்குரிய கதையாக எடுத்துக் கொள்வதற்கு நம்பகரமான தொல்பொருள் சான்றுகள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. அதற்கு மாறாக விஜயன் வருகை நிகழ்ந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மிகப்பெரிய அளவில் தென்னிந்தியாவின் தென்பகுதியிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டுமக்கள் புலம்பெயர்ந்து வந்து குடியேறியதற்கான நம்பகரமான தொல்லியல் ஆதாரங்களே இலங்கையின் பல்வேறு வட்டாரங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பண்பாட்டை தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஒப்பிட்டு ஆராய்ந்த தொல்லியல், மானிடவியல் அறிஞர்கள் இலங்கைக்கு இப்பண்பாட்டைப் பரப்பிய மக்களைத் திராவிடர் என அழைக்கின்றனர். இவற்றின் அடிப்படையில்தான் பேராசிரியர் சேனக பண்டாரநாயக்கா "விஜயன் யுகத்திற்கு" முந்திய நாகரிக வரலாறு இலங்கையில் தோன்றிவிட்டதாகக் கூறுகிறார். இதனால் சமகாலத்தில் இலங்கையின் நாகரிகத் தொடக்க காலம் பற்றிய ஆய்வானது பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய ஆய்வாகவே காணப்படுகிறது.

1849 இல் இருந்து பயன்படுத்தப்படும் பெருங்கற்காலப் பண்பாடு என்ற சொல் ஆதிகாலத்தில் இறந்தவர்களுக்காக பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதன் காரணமாகத் தோன்றியதாகும். பண்டைய காலங்களில் உலகின் பல நாடுகளில் கற்களைப் பயன்படுத்தி பல்வேறு வடிவங்களில், பல அளவுகளில் ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் வடிவமைப்புக்களில் நாடுகளிடையே வேறுபாடுகள் காணப்பட்டாலும், இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையில் ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டன என்பதில் பொதுவான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆயினும் திராவிட மொழிபேசும் தென்னிந்திய மாநிலங்களிலும், இலங்கையிலும் இப்பண்பாட்டின் பல்வேறு அம்சங்களில் குறிப்பாக இம்மக்கள் பயன்படுத்திய கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள், தாழிகள், இரும்புக் கருவிகள், சுடுமண் உருவங்களில், சமய நம்பிக்கைகள் என்பவற்றில் பொதுவான ஒற்றுமைத்தன்மை காணப்படுவதால் இப்பண்பாடு இப்பிராந்தியங்களுக்குரிய தனித்துவமான அம்சமாக நோக்கப்படுகிறது. ஈமச்சின்னங்களை அமைக்கப் பெரிய கற்களைப் பயன்படுத்தியதால் பெருங்கற்காலம் என்ற பெயர் ஏற்பட்டாலும் பெரிய கற்கள் காணப்படாத இடங்களில் குறிப்பாக தென்னிந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இப்பண்பாட்டுக்குரிய கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Black and Red ware), இரும்பின் பயன்பாடு போன்ற சின்னங்கள் காணப்பட்ட இடங்கள் பெருங்கற்கால ஊரிருக்கைப் பகுதியெனவும், இச்சின்னங்களுடன் தாழியடக்கம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0022.jpg

(Urn), நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் (Extended burial) போன்ற ஈமச்சின்னங்கள் காணப்பட்ட இடங்கள் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் எனவும் அழைக்கும் மரபு காணப்படுகிறது. தற்காலத்தில் பெருங்கற்காலப் பண்பாடு என அழைப்பதற்குப் பதிலாக அப்பண்பாட்டில் முன்னிலைப்படுத்தப்படும் இரும்பின் தொழில் நுட்பம், கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் அவை புராதன இரும்புக்காலப் பண்பாடு (Early iron age culture) எனவும், கறுப்புச் சிவப்பு நிறப் பண்பாடு (Black and Red Ware Culture) எனவும் அழைக்கப்படுகிறது.

இன்று தென்னாசியா, தென்கிழக்காசியா, கிழக்காசிய நாடுகள் பலவற்றின் தொடக்ககாலப் பண்பாடு பற்றிய ஆய்வில் தொல்லியலாளர்கள் பலரினது கவனத்தை ஈர்த்த அம்சமாகப் பெருங்கற்காலப் பண்பாடு திகழ்கிறது. இவ்வாய்வு இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட ஈமச்சின்னம் பற்றிய ஆய்வாக மட்டும் அமையாது, கூடவே அக்காலகட்டத்தில் வாழ்ந்த மக்களது பலதரப்பட்ட பண்பாட்டுப் பரிமாணங்கள் பற்றிய ஆய்வாகவும் விளங்குகிறது. இலங்கையிலும், தென்னிந்தியாவின் சில வட்டாரங்களிலும் வரலாற்றுக் காலம் தொடங்குவதற்கு முன்னோடியான நிலையான குடியிருப்புக்கள், நீர்ப்பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்களின் (Black and Red Wares) பயன்பாடு, மந்தை வளர்ப்பு, சிறு தொழில் நுட்ப வளர்ச்சி போன்ற அம்சங்கள் இப்பண்பாட்டுடன் தோன்றி வளர்ந்ததால் இது இந்நாடுகளின் வரலாற்று உதய காலமாகவும் (Proto Historic Period), ஆக்க காலமாகவும் (Formation Period) பார்க்கப்படுகிறது. தென்னிந்தியாவின் பண்டைய நாகரிகம், அரச தோற்றம், நகரமயமாக்கம், சமூக உருவாக்கம் பற்றிய ஆய்வுகளின் தொடக்கப்புள்ளியாகப் பெருங்கற்காலப் பண்பாடு நோக்கப்படுகிறது *(Rajan 1984)*. இதனால் இலங்கையில் ஏற்பட்ட இப்பண்பாட்டு அம்சங்களின் தோற்றத்தையும், பண்பாட்டு மாற்றங்களையும் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாடு தோன்றி வளர்ந்ததன் பின்னணியில் நோக்குவது பொருத்தமாகும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பெருங்கற்காலப் பண்பாட்டின் பரவல்

இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் பெருங்கற்காலப் பண்பாட்டின் பரவல் புதிய கால கட்டத்தின் தொடக்கமாக அல்லது திருப்பு முனையாக அமைந்ததெனக் கூறலாம். இது புதிய நாகரிகத்தின் அறிமுகமாக மட்டுமன்றி புதிய மக்களின் புலப்பெயர்வாகவும் அமைந்துள்ளது. பெருங்கற்காலப் பண்பாடும், அப்பண்பாட்டு மக்களின் புலம்பெயர்வும் முன்னர் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்த இடங்களிலும், ஏனைய இடங்களிலும் ஏற்பட்டதால் புதிய குடியேற்றங்கள் தோன்றி இந்நாட்டின் மக்கள் தொகை அதிகரிக்க காரணமாகியது. நுண்கற்காலப் பண்பாட்டில் நாடோடிகளாக உணவுக்கு அலைந்து திரிந்த மக்கள் இப்போது நிரந்தரமாக ஓர் இடத்தில் தங்கி உணவு உற்பத்தியில் ஈடுபடும் நிலை உருவாகியது. கற்கருவிகளைப் பயன்படுத்தி வந்த மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டில் இரும்பு, செம்பு முதலான உலோகங்களைப் பயன்படுத்தி புதிய தொழில் நுட்பங்களை உருவாக்கினர். பெருங்கற்காலப் பண்பாட்டை தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஒப்பிட்டு விரிவாக ஆய்வு செய்த ஈழத்தின் முதன்மைத் தொல்லியலாளர்களில் ஒருவரான சுதர்சன் செனிவரட்னா அப்பண்பாட்டுடன் தோன்றிய புரட்சிகரமான மாறுதல்கள் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

> "தொழில் நுட்பத்துடன் கூடிய இரும்பினது பயன்பாட்டின் தொடக்க நிலை, மட்பாண்டங்களை வனைவதற்குரிய சில்லின் அறிமுகம், நிலத்தைப் பண்படுத்துவற்கான ஏரின் பயன்பாடு, நெற்செய்கை தோற்றம், கால்வாயுடன் கூடிய, சூள நீர்ப்பாசன முறை, சிறு தொழில் நுட்பத்தின் ஆரம்பம், மக்கள் வாழ்வதற்கு ஏற்றவகையில் முன்னரைக்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0023.jpg

காட்டிலும் சுற்றாடலைக் கட்டுப்படுத்தி பயன்பெறும் நிலை, கிராமக்குடியிருப்புக்களின் தோற்றம், வலைப்பின்னல் கொண்ட பண்டமாற்று மையங்களின் தோற்றம், மக்கள் பெருக்கம் அதிகரிப்பதற்கான சூழ்நிலையின் உருவாக்கம், குறுநில அரசுகளின் தோற்றம், குதிரைகளின் அறிமுகம், புதிய ஈமச் சின்னங்களின் தோற்றம், புதிய மட்பாண்ட உருவாக்கம் (கறுப்பு- சிவப்பு நிறம்)"என்பனவாகும் *(Seneviratne 1985).*

இக்கூற்று இலங்கையின் நாகரிக வரலாறு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடங்கியதை துல்லியமாக எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இலங்கையில் முன்னர் கற்காலம் சிறப்பாக நுண்கற்காலப் பண்பாடு நிலவிய சில மையங்களிலும், ஏனைய பல வட்டாரங்களிலும் பெருங்கற்காலப் பண்பாடு தோன்றி வளர்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக பெருங்கற்காலப் பண்பாடு பரவியிருந்தமை தெரிகிறது. இதை அநுராதபுரம், பொம்பரிப்பு, மாந்தை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளின் போது நுண்கற்காலப் பண்பாட்டின் மேற்படையில் பெருங்கற்காலச் சின்னங்கள் கிடைத்திருப்பதைக் கொண்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் இவ்விடங்களில் பெருங்கற்காலப் பண்பாடு பரவிய போது முன்னர் இங்கு வாழ்ந்த நுண்கற்கால மக்கள் இப்பண்பாட்டைப் பின்பற்றியிருக்க வேண்டும். அல்லது பெருங்கற்காலப் பண்பாடு இப்பண்பாட்டை உள்வாங்கியிருக்கலாம். ஆயினும் ஒப்பீட்டளவில் நுண்கற்காலப் பண்பாடோ அதற்கு முற்பட்ட கற்காலப் பண்பாடோ நிலவியிராத இடங்கள் பலவற்றில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவியதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் அவ்விடங்களில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் குடியேறியதன் பின்னரே மனித வரலாறு தொடங்கியதெனக் கூறலாம். இந்த அம்சம் இலங்கையின் பெருங்கற்காலப் பண்பாடு தென்னிந்தியப் பின்னணியில் பார்க்கப்பட்டாலும், அது பெருமளவுக்கு தென்தமிழகத்தோடர்பு கொண்டு வளர்ந்ததையே உறுதிப்படுத்துவதாக உள்ளது. ஏனெனில் வடதமிழகம் உட்பட தென்னிந்தியாவின் பல்வேறு வட்டாரங்களில் நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாகப் புதிய கற்காலப்பண்பாடு (Neolithic Culture) அல்லது செம்புக்காலப் பண்பாடு (Chalcolithic Culture) காணப்படுகிறது. இந்த அம்சம் தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் காணப்பட்டாலும் பெரும்பாலான இடங்களில் நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாகப் பெருங்கற்காலப் பண்பாடும், சில இடங்களில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தொடங்குவதைக் காணமுடிகிறது. இதனால் இலங்கையில் தோன்றி வளர்ந்த பெருங்கற்காலப் பண்பாட்டைத் தென்தமிழகத்துடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பெருமளவுக்குப் பொருத்தமாகும்.

தென்னிந்தியாவிற்கு பெருங்கற்காலப் பண்பாட்டைப் பரப்பிய மக்கள் யார்? இப்பண்பாடு எங்கிருந்து பரவியது? போன்ற கேள்விகளுக்கு அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. இப்பண்பாட்டைப் பரப்பியோர் திராவிட மொழி பேசியோர் எனப் பலரும், இந்தோ-ஆரிய மொழி பேசியோர் எனச் சிலரும் கருத்து தெரிவித்துள்ளனர். ஆயினும் இப்பண்பாடு நிலவிய தொடக்க காலத்தில் அப்பண்பாட்டை பின்பற்றிய மக்களின் மொழியை அடையாளம் காண உதவும் எழுத்தாவணங்கள் காணப்படாததால் இந்த மக்கள் எந்த மொழியைச் சார்ந்தவர்கள் எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாதிருக்கிறது. ஆனால் இப்பண்பாட்டு மக்களது ஈமச்சின்னங்களில் காணப்பட்ட எலும்புக் கூடுகளை ஆய்வு செய்த அறிஞர்கள் இவர்களை ஒரு கலப்பின (Hybrid) மக்கள் எனக் கூறுகின்றனர் *(Thapar and Rahman 1996:274).* தீபகற்ப இந்தியாவில் இற்றைக்கு 3200 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இப்பண்பாடு நிலவியதற்கான ஆதாரங்கள் பல்வேறு வட்டாரங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கால அடிப்படையிலும், ஈமச்சின்னங்களின் வடிவமைப்பில் காணப்படும் தனித்துவமான அம்சங்களையும் வைத்து நோக்கும் போது முதலில் வடமேற்குத் தக்கணத்தில்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0024.jpg

பரவிய இப்பண்பாடு பின்னர் அங்கிருந்தே தென் தக்கணத்திலுள்ள கர்நாடகத்திற்குப் பரவியதெனக் கூறப்படுகிறது. பின்னர் இங்கிருந்தே கிருஷ்ணா நதிக்கரையோரமாக கிழக்கே ஆந்திராவுக்குச் சென்று அங்கிருந்து கோதாவரி மற்றும் பொண்ணையாறு வழியாகத் தமிழகத்திற்குப் பரவியதாகக் கூறப்படுகிறது. தென் கர்நாடகத்தில் பெங்களூர் மற்றும் கோலார் மாவட்டங்களில் கண்டறியப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்களுக்கும் வடதமிழகத்தில் தருமபுரி, வடஆர்க்காடு மாவட்டங்களில் காணப்பட்ட ஈமச்சின்னங்களுக்கும் இடையிலான ஒற்றுமைகளை நோக்கும் போது தமிழகத்திற்குப் பெருங்கற்காலப் பண்பாடு பரவுவதில் கர்நாடகம் முக்கிய பங்கு வகித்ததெனக் கூறப்படுகிறது. கர்நாடகத்திலிருந்து வடதமிழகம் பரவிய இப்பண்பாடு அங்குள்ள வளம்மிகுந்த நிலப்பகுதிகளில் இருந்து தமிழ்நாட்டின் பெருநதிகளான காவேரி, பாலாறு, பொன்னையாறு, தாமிரபரணி ஆகியவற்றை வளம்படுத்தும் நிலப்பகுதிகளில் பரவியது. இவ்விடங்களில் பரவலாகக் கண்டறியப்பட்ட தாழி அடக்கங்கள் (Urn Burials), கல்வட்ட வட்டக்கங்கள் (StoneCircles) என்பன பொதுவாக நெற்பயிர்ச் செய்கைக்கு உகந்த பகுதிகளிலேயே அதிகமாக பின்பற்றப்பட்டிருந்ததை தொல்லியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் *(Seneviratne 1984:26-27)*. இவ்வாறு வடமேற்கு தக்கணம், தென்தக்கணம் (கர்நாடகம்) கேரளம், வடதமிழகம் அங்கிருந்து தாமரபரணியாற்றை நோக்கி தென்தமிழகம் பரவிய இப்பண்பாடு பின்னர் அங்கிருந்தே இலங்கைக்குப் பரவியதெனக் கூறப்படுகிறது. பேராசிரியர் இந்திரபாலா "பெருங்கற்காலப் பண்பாடு (ஆதிஇரும்புக்காலப் பண்பாடு) இலங்கைக்கு தென்தமிழ்நாட்டிலிருந்து வந்தது என்பதில் ஐயமில்லை. அகத்தியர் மலைப்பிரதேசத்திலிருந்து இப்பண்பாடு வைப்பாறு, வைகை, சிற்றாறு, தாமரபரணி ஆகிய நதிகளின் ஓரமாகத் தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கரையை வந்தடைந்தது. வாசுதேவநல்லூர் மற்றும் ஆதிச்சநல்லூர், வைகை நதிச் சமவெளி ஆகிய இடங்களை வந்தடைந்ததும், தொடர்ந்து இலங்கையை நோக்கி இப்பண்பாடு பரவுவது திண்ணமாகியது".எனக் கூறுகிறார் *(இந்திரபாலா 2006: 93)*. தென்தமிழகத்தில் ஆதிச்சநல்லூரிலும் அதற்கு எதிரே அமைந்த வடமேற்கு இலங்கையிலும் காணப்பட்ட பெருங்கற்காலப்பண்பாட்டிற்குரிய பல்வேறு அம்சங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்த அறிஞர்கள் இவை ஒரு பிராந்தியத்திற்குரிய பண்பாடு எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமை கொண்டிருப்பதாகக் கூறியுள்ள கருத்து இதை மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது *(BegleyVimala 1967: 49-96, Sitrampalam 1990)*.

தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் இப்பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடக்க காலம் கி.மு.1200 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. தென்தமிழகத்தில் இதன் தோற்ற காலம் கி.மு 1000 ஆக இருக்கலாம் என்பதை ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் பெறப்பட்ட சான்றுகளின் காலக்கணிப்புக்கள் உறுதி செய்கின்றன. ஏறத்தாழ இதே காலப்பகுதியில் இலங்கையிலும் இப்பண்பாடு பரவியிருக்கலாம் என்பதை அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது கிடைத்த சான்றுகளின் காலக் கணிப்புக்கள் உறுதி செய்கின்றன. இக்காலக்கணிப்பு இலங்கையின் ஏனைய இடங்களில் தோன்றி வளர்ந்த பெருங்கற்காலப் பண்பாடு தொடர்பான முன்னைய காலக்கணிப்பு முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தலாம். சமீப காலங்களில் தென்தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலத் தாழியடக்க முறைகளைப் பிற ஆதாரங்களுடன் தொடர்புபடுத்தி விரிவாக ஆய்வு செய்த இந்தியாவின் முதன்மைத் தொல்லியலாளர்களில் ஒருவரான பேராசிரியர் இராஜன் கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களை அமைக்கும் மரபு வடக்கிலிருந்து படிப்படியாகத் தெற்குநோக்கிப் பரவியதன் அடிப்படையில் தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டின் காலம் கணிக்கப்பட்டாலும், இம்மரபு வடக்கிலிருந்து பரவ முன்னரே தென்தமிழகத்தில் கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள், இரும்பின் பயன்பாடும் தாழியடக்க முறைகளுடன் தோன்றிவிட்டதாகக் கூறுகிறார். இக்கருத்து ஏற்கப்படுமானால் இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாடு தோன்றிய காலம் மேலும் முன்னோக்கிச் செல்லலாம்.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0025.jpg

தென்தமிழகத்திலிருந்து ஏற்பட்ட பெருங்கற்கால மக்களது புலப்பெயர்வும், பண்பாடும் முதலில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்டு படிப்படியாக நாட்டின் உட்பகுதிக்குப் பரவியதை சான்றுகள் உறுதி செய்கின்றன. இதற்கு இலங்கைக்கும் தென்தமிழகத்திற்கும் இடையிலான கிட்டிய இடைவெளி கொண்ட கடல்வழித் தொடர்பு முக்கிய காரணமாக இருந்திருப்பினும் குறைந்தளவு தொழில் நுட்பத்துடன் புதிய குடியேற்றங்களை அமைப்பதற்கு ஏற்ற சாதகமான சூழ்நிலைகள் இவ்விடங்களில் காணப்பட்டமையும் இன்னொரு முக்கிய காரணமாகும். இக்காரணங்கள் இடத்திற்கு இடம் வேறுபட்டதாக இருந்திருப்பினும் பொதுவாக கரையோரப் பகுதிகளில் சிறிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இலகுவாக அழிக்கக் கூடிய பற்றைக்காடுகள், கடல் உணவைப் பெறக்கூடிய ஆழம் குறைந்த பரவைக்கடல், சாதாரண தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நீரைப் பெறக் கூடிய மணற்பாங்கான இடங்கள், இயற்கையாகக் கிடைத்த கனிமங்கள், கடல்சார் தொடர்புகளுக்குச் சாதகமாக இருந்த இயற்கைத் துறைமுகங்கள் என்பன காரணமாக இருந்தன எனக் கூறலாம். இவ்வாறு கரையோரங்களில் ஏற்பட்ட பெருங்கற்காலக் குடியிருப்புக்களும், பண்பாடும் காலப்போக்கில் படிப்படியாக நாட்டின் உட்பகுதிக்கும், ஏனைய இடங்களுக்கும் பரவின. இதற்கு நாட்டின் உட்பகுதியில் காணப்பட்ட பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான செம்மண், நீர்நிறைந்த தன்மை, மத்திய கோட்டு அடர்ந்த மழைக்காடுகள், வதிவிடங்களை அமைப்பதற்கு ஏற்ற புவியியல் தன்மை (terrain), காலநிலை, கடற்கரையுடன் தொடர்பை ஏற்படுத்த சாதகமாக இருந்த ஆறுகள், நதிகள், உள்நாட்டு வர்த்தகத் தொடர்புகள், இரும்பு, செப்பு படிமங்கள் என்பன இம்மக்களைக் கவர்ந்த முக்கிய காரணங்களாகும். சுதர்சன் செனிவரட்ணா வடமேற்கு இலங்கையின் கடற்கரைப் பகுதியில் (northwest coast) உள்ள பொம்பரிப்பு மற்றும் கொல்லன்கந்த (Pomparippu and Kollankantta) ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்களினதும் நாட்டின் உட்பகுதியில் (Inland) குறிப்பாக அநுராதபுரம், கல்சோகொன்கந்தா (Galsonkanatta) ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்களினதும் வடிவவமைப்பில் (Black andred pottery forms) காணப்பட்ட ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டி வடமேற்கு இலங்கையில் இருந்தே வடஇலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும்இப்பண்பாடு பரவியதாகக் கூறுகிறார் *(Seneviratne 1985:65)*. அதில் பெருங்கற்கால மக்கள் நிரந்தர குடியேற்றங்களை தீர்மானிப்பதில் கனிமங்கள் காணப்பட்ட இடங்கள் அதிலும் குறிப்பாக இரும்பு, செம்பு காணப்பட்ட இடங்கள் அல்லது இன்னோரிடத்தில் இருந்து இலகுவாகப் பெறக் கூடிய இடங்கள் முக்கிய பங்கு வகித்ததை காணக் கூடியதாக இருக்கிறது எனக் கூறுகின்றார் *(Seneviratne 1995:115)*.

இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய ஆய்வுகள்

இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாடு தொடர்பான சான்றுகள் 1889 களில் இருந்து தெரிய வந்திருந்தாலும், இலங்கை நாகரிக உருவாக்கத்தில் அப்பண்பாடு பெறும் முக்கியத்துவம் பற்றிய ஆய்வுகள் பெரும்பாலும் 1970களின் பின்னரே உணரப்பட்டது. ஆரம்பகால ஆய்வுகள் பெரும்பாலும் கந்தரோடை (வடஇலங்கை), பொம்பரிப்பு, மாதோட்டம் (வடமேற்கு இலங்கை),அநுராதபுரம், வில்பத்து (வட மத்திய இலங்கை), திசமாறகம (தென் இலங்கை) ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் கடந்த இரு சகாப்த காலங்களில் 50க்கும் மேற்பட்ட இடங்களில் இப்பண்பாடு பற்றிய சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. அதில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் குடியிருப்புக்களுக்குரிய ஆதாரங்களும், 40 இடங்களில் ஈமச்சின்னங்கள் தொடர்பான சான்றுகளும் கிடைத்துள்ளன. இவற்றைத் தவிர இன்னும் சில இடங்களில் இப்பண்பாடு தொடர்பான சான்றுகள் கிடைத்திருந்தும் அவற்றின்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0026.jpg

முக்கியத்துவம் இப்பண்பாடு பற்றி வெளிவந்த ஆய்வுகளில் இன்னும் இடம்பெறாது காணப்படுகின்றன.

1980களின் பின்னர் வடஇலங்கையிலும், தென் இலங்கையிலும் பல இடங்களில் இப்பண்பாட்டு ஈமச் சின்னங்களும், குடியிருப்பு பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1980களில் கலாநிதி இரகுபதி யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டையிலும், காரைநகரிலும் நீளக்கிடத்தி அடக்கம் செய்யும் ஈமச்சின்னங்கள் (Extended burials) கண்டுபிடித்ததைத் தொடர்ந்து அவர் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் மூலம் ஏறத்தாழ 40க்கு மேற்பட்ட வரலாற்று உதய கால (Proto Historic Period), வரலாற்றுத் தொடக்க கால (Early Historic Period) மற்றும் வரலாற்றுக் குடியிருப்புக்கள் அமைந்திருந்த இடங்களை அடையாளப்படுத்தியுள்ளார் *[Ragupathy 1987]*. 1989-2004 காலப்பகுதியில் இந்நூலாசிரியரால் பெருநிலப்பரப்பில் கல்முனை தொட்டு மாதோட்டத்திற்கு தெற்கே வீரபாண்டியன் முனைவரையுள்ள பூநகரிப்பிராந்தியத்தின் கடற்கரையை சார்ந்த பிரதேசத்தில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வில் பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிப்படுத்தும் பலவகைச் சான்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன *[புஷ்பரட்ணம் 1993]*.



பூநகரியில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலச் சின்னங்கள்

தென் இலங்கை கேகாலை மாவட்டத்தில் பாக்கர் என்பவர் மேற்கொண்ட ஆய்வின் மூலம் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பெருங்கற்காலப் பண்பாடு நிலவியதற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆயினும் முறையான அகழ்வாய்வுகள் மிக அண்மைக்காலங்களிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஒப்பீட்டளவில் வடமேற்கு, வடக்கு, கிழக்கு இலங்கையை காட்டிலும் குறைந்தளவிலான ஆதாரங்களே இங்கு கிடைத்துள்ளன. மிகச் சமீப காலங்களில் மேல்மாகாணத்திலும், தென்மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் புதிய சில தொல்லியல் மையங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தென்மேற்கு இலங்கையில் ஹல்அதர (Gal-atara - Cist burial) மகேவிர (Makevita) ஆகிய இடங்களிலும், கிருண்டி ஓயா (KirindiOya), கும்புக்கன் ஓயா (Kumbukkan Oya) ஆகிய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலக் குடியிருப்பு மையங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவற்றின் காலம் கி.மு 500-கி.மு 300 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது *(Paul Sinclear, RajSomadeva 2002:219-229)*. மேலும் 1996 இல் ஒஸ்மன் பொபி ஆராய்ச்சி, ராஜவிக்கிரமசிங்க இணைந்து *(Osumon Bopearachchi and Raja Wckramasinghe1999:7)* அக்குறுகொட (Akurugada) ரிதிகம முதலான இடங்களில் (Ridyagama) மேற்கொண்ட ஆய்வுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்த அகழ்வின் போது கி.மு 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய செறிவான கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்களுடன் குறியீடுகள் பொறிக்கப்பட்ட பல மட்பாண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. ரிதிகமவில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகளில் காணப்படும் குறியீடுகளை தமிழகத்தில் கொடுமணல் என்ற இடத்தில் கிடைத்த மட்பாண்டக்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0027.jpg

குறியீடுகளுடன் ஒப்பிடப்பட்டு, இரு நாடுகளுக்கும் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் இடையிலான ஒற்றுமைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவற்றை நோக்குமிடத்து தமிழகத்திலிருந்து பரவிய பெருங்கற்காலப் பண்பாடு இலங்கையில் தென்கரை வழியாக உள்நாட்டுக்குப் பரவியமை தெரிய வருகிறது *(BopearachchiandWickremasinhe 1999:56)*. வடகிழக்கு மற்றும் கிழக்கு இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய சான்றுகள் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டாலும் 1980களின் பின்னரே அது பற்றிய ஆய்வு ஓரளவு முறையாக மேற்கொள்ளப்பட்டதெனக் கூறலாம். இதற்கு யான்ஓயா கழிமுகப் பிரதேசமும், யான்ஓயாவை வளம்படுத்தும் தம்மன்ன கொடல்ல, குருஹல்ஹின்ன, வடிகவல, கொக்கப், திபுல்வவ, ராபாவ ஆகிய இடங்களில் கண்டறியப்பட்ட கற்கிடை பெருங்கற்கால ஈமச்சின்னங்களைக் குறிப்பிடலாம். தமிழகத்தில் இதையொத்த ஈமச்சின்னங்கள் புதுக்கோட்டை மற்றும் தமிழகத்தின் கிழக்கு கரையோரப் பிரதேசத்தில் காணப்பட்டதால் அங்கிருந்தே வடகிழக்கு இலங்கைக்கு இப்பண்பாடு பரவியதாகக் கூறப்படுகிறது *(Seneviratne 1984:283)*. அதேபோல் இங்குள்ள நதிகள் வழியாகவே வடமத்திய இலங்கைக்கும் இப்பண்பாடு பரவியதாகக் கருதப்படுகின்றது *(Seneviratne 1984:283, இந்திரபாலா 2006:102)*. இப்பண்பாடு நிலவிய காலகட்டத்தில் தமிழ் இனக்குழுவினர் வாழ்ந்ததை திருகோணமலை மாவட்டத்தில் சேருவில் என்ற இடத்தில் காணப்படும் பிராமிக் கல்வெட்டும் உறுதிப்படுத்துகிறது (இந்திரபாலா *2006: 102)*. கிழக்கு இலங்கையில் மிகப்பெரிய கற்கிடை ஈமச்சின்னங்கள் காணப்படும் இடமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கதிரவெளி காணப்படுகிறது. மகாவலி ஆற்றின் கழிமுகப்பகுதியில் குரங்கு படையெடுத்த வேம்பு எனப்படும் இடத்தில் பாறைக் கற்களால் அமைக்கப்பட்ட கற்படை ஈமச் சின்னங்கள் காணப்படுகின்றன. இதன் சுற்றாடலில் உள்ள சேருவில், இலங்காதுறை, ஈச்சலம்பத்தை ஆகிய வட்டாரங்களில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள், கரும் செம் மட்பாண்ட ஓடுகள் என்பன ஆதியில் இங்கு பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் இருந்திருக்கலாம் என்பதைச் சான்றுபகர்கின்றன (இந்திரபாலா *2006:103)*.

மேற்கூறப்பட்ட இடங்களில் காணப்படும் பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய சான்றுகள் கி.மு.1ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் பெருங்கற்காலப் பண்பாட்டைப் பின்பற்றிய மக்கள் இலங்கையில் பரவலாக வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதி செய்வதாக உள்ளன. தீபகற்ப இந்தியாவில் சில இடங்களில் மேற்கொள்ளப்பட்ட விரிவான அகழ்வாய்வுகளில் பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக குடியிருப்பு, ஈமச்சின்னம், குளம், வயற்பரப்பு என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆனால் இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் குறிப்பிட்ட ஒரு பெருங்கற்கால பண்பாட்டு மையத்துக்குள் இந்த நான்கு அம்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. விமலா பேக்கிலே பொம்பரிப்பில் கண்டுபிடிக்கப்பட்ட தாழியடக்க ஈமச் சின்னங்களுக்கு கிழக்கே பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் இருந்திருக்கலாம் எனக் குறிப்பிட்டிருந்தாலும் அவை சமகாலத்திற்கு உரியவையா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இலங்கையின் மிகப் பெரிய பெருங்கற்கால குடியிருப்பு மையமாக அடையாளம் காணப்பட்ட அநுராதபுரத்திலும், கந்தரோடையிலும் குடியிருப்பு, குளம், வயற்பரப்பு என்பன அடையாளம் காணப்பட்ட போதும் அங்கு ஒரு ஈமச்சின்னம் தானும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனைக்கோட்டையிலும், இபின்கட்டுவாவிலும் (Ibbankattuwa) பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் அங்கு குடியிருப்புக்களுக்குரிய சான்றுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இது இலங்கையின் பெருங்கற்காலப்பண்பாட்டு மையங்கள் என அடையாளம் காணப்பட்ட இடங்கள் இன்னும் முறையான அகழ்வாய்வுகளுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதையே காட்டுகின்றன.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0028.jpg

இலங்கையின் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள்

பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்று அப்பண்பாட்டு மக்கள் இறந்தவர்களுக்காக அமைத்த ஈமச்சின்னங்களாகும். குறைந்தளவு தொழில் நுட்பத்துடன் அழியும் பொருட்களைப் பயன்படுத்தி தமது இருப்பிடங்களை உருவாக்கிய இம்மக்கள் இறந்தவர்களுக்கான ஈமச்சின்னங்களை கற்களையும், தாழிகளையும் பயன்படுத்தி அதிக தொழில் நுட்பத்துடன் உருவாக்கியமை அவர்களது பண்பாட்டில் ஈமச்சின்னங்கள் அதியுன்னத நிலையில் இருந்ததைக் காட்டுகின்றது. இலங்கையில் இவ்வீமச் சின்னங்கள் சில இடங்களில் கற்களையும், பாறைகளையும் கொண்டு அமைக்கப்பட்ட போது வேறு சில இடங்களில் தாழிகளைப் பயன்படுத்தியும் உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் சில இடங்களில் கற்களோ, தாழிகளோ பயன்படுத்தாது வெறுமனே நிலத்தில் குழியமைத்தும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வேறுபாடுகளுக்கு இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்த இடங்களில் காணப்பட்ட பௌதீக வளங்கள் காரணமாக இருப்பினும் அவை குறிப்பிட்ட அளவுகளில், பொதுவான விதி முறைகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்டிருப்பது பெருங்கற்காலப் பண்பாட்டில் ஈமச்சின்னங்கள் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. இந்த அம்சம் இறந்தவர்களுக்கு மறுபிறப்புண்டு என்ற சமய நம்பிக்கை பெருங்கற்கால மக்களது பண்பாட்டிலேயே தோன்றிவிட்டதைக் காட்டுகிறது. மேலும் ஈமச்சின்னங்களின் வடிவங்கள், அவற்றில் பின்பற்றப்பட்ட தொழில் நுட்பங்கள், ஈமச்சின்னங்களில் இறந்தவரது உடலோடு அடக்கம் செய்யப்பட்ட பலதரப்பட்ட பாவனைப் பொருட்கள் என்பவற்றை ஆய்வு செய்யும் போது இவ்வீமச்சின்னங்களை அமைப்பதில் பல கலைஞர்கள், வேறுபட்ட தொழில் பிரிவினரும் பங்கு கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. இந்த அம்சங்கள் இலங்கையின் சமூக உருவாக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டிலேயே தோன்றிவிட்டதைக் காட்டுகிறது. இதுவே இப்பண்பாட்டுடன் அரசு உருவாகுவதற்கான காரணங்களாகவும் அமைந்து விடுகிறது. ஈழத்தில் காணப்படும் பெருங்கற்கால ஈமச் சின்ன வடிவங்களை ஆய்வு செய்த சுதர்சன் செனிவரட்னே அவை தீபகற்ப இந்தியாவில் காணப்பட்ட ஈமச்சின்னங்களுடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டுகிறார். தீபகற்ப இந்தியாவில் அதன் பௌதீகத் தன்மைக்கு 40க்கும் மேற்பட்ட ஈமச்சின்ன வகைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் கல்லறை (Cistburial), கற்கிடை (Dolment), தொப்பிக்கல், குடைக்கல் (umbrellastone), தாழியடக்கம் (Urnburial), ஈமப்பேழை (Sarcophagus), குழியடக்கம் (Pitburial), கல்வட்டங்கள் (Cairs circiles), குத்துக்கல் (Menhirs), நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் (Extendedburial) முதலான ஈமச்சின்னங்கள் அதிக அளவில் புழக்கத்தில் இருந்துள்ளமை தெரிகிறது. ஆயினும் இவ்வீமச்சின்னங்கள் அனைத்தும் இலங்கையில் பின்பற்றப்பட்டிருக்கும் எனக் கூறுவதற்கு இதுவரை ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆயினும் இலங்கையின் பௌதீகத் தன்மைக்கு ஏற்ப கல்லறை, கல்வட்டங்கள், கற்கிடை, தாழியடக்கம், நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் முதலான ஈமச்சின்னங்கள் புழக்கத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவ்வகை ஈமச்சின்னங்கள் தீபகற்ப இந்தியாவில் பல வட்டாரங்களில் புழக்கத்திலிருந்தாலும் இலங்கைக்கு அவை தென்தமிழகத் தொடர்பால் பரவியிருக்கலாம் என்பதை இரு பிராந்திய ஈமச்சின்ன வடிவங்களில் காணப்படும் ஒற்றுமைகள் உறுதி செய்கின்றன. அவற்றுள் முக்கிய ஈமச்சின்னங்களையும், அவை காணப்படும் பிரதான பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்கள் சிலவற்றையும் நோக்கலாம்.

ஈமச் சின்ன வடிவங்கள்

இலங்கையில் பெருங்கற்கால மக்கள் உருவாக்கிய ஈமச் சின்னங்கள் அவர்கள் வாழ்ந்த இடத்தின் பௌதீக வளங்களுக்கு ஏற்ப அவற்றின் வடிவங்களும், தன்மைகளும் வேறுபட்டனவாக காணப்படுகின்றன.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0029.jpg

அவை இறந்தவர்களது உடல்களை உயர்வான முறையில் அடக்கம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டன என்பதை அவற்றின் வடிவமைப்புக்களும் அவற்றில் இடப்பட்ட நிவேதனப் பொருட்களும் உறுதி செய்கின்றன. இலங்கையில் உயர்வான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கற்களை அறுத்தும், இயற்கையான பாறைகளைச் செதுக்கியும் ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்ட பிராந்தியங்களில் வடக்கு மற்றும் வடகிழக்கு இலங்கைக்கு தனிச்சிறப்புண்டு. இங்கு மிகப்பெரிய கற்கள் கொண்டு ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் காணப்பட்டாலும் அவற்றை அமைப்பதில் சில வேறுபாடு காணப்படுவதால் தொல்லியலாளர் அவற்றின் வடிவங்களுக்கு வேறுபட்ட பெயர்கள் கொண்டு அழைக்கின்றனர் நான்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி அறைபோன்ற வடிவில் அமைக்கப்பட்டு நான்கு கற்களும் நிலத்திற்கு கீழே அமைய அதன் மேற்பாகம் கற்களால் மூடிய நிலையே கல்லறை (cistburial) எனப்படும். இந்த நான்கு கற்களும் நிலத்திற்கு கீழே அமைய அதன் அரைப்பங்கு நிலத்திற்கு மேலே மூடிய நிலையிலுள்ள ஈமச்சின்னம் கற்பதுக்கை என அழைக்கப்படுகிறது (DolmentCist). இந்த நான்கு கற்களும் நிலத்திற்கு மேலே அமைந்து அது மேசை வடிவிலாக இருக்கும் போது அது கற்திட்டை (Dolment) எனப் பெயர் பெறுகிறது. இன்னும் சில கல்லறைகள் மூன்று அல்லது நான்கு பகுதிகளாக அமைக்கப்பட்டு அவற்றில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் ஈமச்சின்னம் தொடர் கல்லறை என அழைக்கப்படுகிறது (Transepted Cistburial). சில ஈமச்சின்னங்களில் கல்லறையில் அல்லது தாழியில் இறந்தவரது உடலை இட்டு அதைச் சுற்றி கற்களால் மூடிய வடிவம் பரல் உரு பதுக்கை என அழைக்கப்படுகிறது (Stonecrcleburial). இப்பெயர்கள் இலங்கை தென்னிந்திய பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் பற்றிய ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் தொல்லியலாளரால் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் சமீப காலங்களில் இவ்வடிவங்கள் எல்லாம் பொதுவாக கல்லறை மற்றும் கற்பதுக்கை என்ற பெயர்களுக்குள் உள்ளடக்கப்படுவதைக் காணலாம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கல்லறை (CistBurial)

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்களுள் கல்லறை மிக முக்கியமானதாகும். இவ்வீமச்சின்னங்கள் ஆந்திராவில் உள்ள சித்தூர், தமிழகத்தில் புதுக்கோட்டை மற்றும் தமிழகத்தின் கிழக்கு கரையோரப் பிரதேசத்தில் காணப்படும் கல்லறைகளை ஒத்திருப்பதால் அங்கிருந்தே வடகிழக்கு இலங்கைக்கு இவ்வீமச்சின்ன மரபு பரவியதாகக் கூறப்படுகிறது *(Seneviratne 1984:283)*. இவ்வகை ஈமச் சின்னங்கள் இலங்கையில் யாழ்ஓயா கழிமுகப் பிரதேசமும், தம்மன்ன கொடல்ல, குருஹல்ஹின்ன, வடிகவல, கொக்கப், திபுல்வவ, ராபாவ, மாமடுவ, மச்சகம,இப்பன்கட்டுவ, பின்வேவ போன்ற இடங்களிலும் கண்டறியப்பட்டுள்ளது *(மேற்படி 1984: 246-260)*. இப்பண்பாடு நிலவிய காலகட்டத்தில் தமிழ் இனக்குழுவினர் வாழ்ந்ததை திருகோணமலை மாவட்டத்தில் சேருவில் என்ற இடத்தில் காணப்படும் பிராமிக்கல்வெட்டும் சான்று பகர்கிறது *(இந்திரபாலா 2006: 102)*. வடகிழக்கு இலங்கையில் நிலவிய கல்லறை ஈமச்சின்ன மரபே இங்குள்ள நதிகள்





இப்பன்கடுவ கல்லறை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0030.jpg

வழியாக வடமத்திய ஈழத்திற்கும் பரவியதாகக் கூறப்படுகிறது (Seneviratne 1984:283, இந்திரபாலா 2006:102). கிழக்கீழத்தில் மிகப்பெரிய கல்லறை ஈமச்சின்னங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கதிரவெளியிலும், குரங்கு படையெடுத்த வேம்பிலும், இதன் சுற்றாடலில் உள்ள சேருவில், ஈழத்துறை, ஈச்சலம்பத்தை ஆகிய வட்டாரங்களிலும் காணப்படுகின்றன (இந்திரபாலா 2006:103).

கற்பதுக்கை (Dolment)

இலங்கையில் பின்பற்றப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்ன வகைகளுள் கற்பதுக்கையும் ஒன்றாகும். தோற்ற அமைப்பில் இது கல்லறையை ஒத்திருந்தாலும், கல்லறையில் நான்கு கற்பலகைகளும் மண்ணில் புதையுண்டிருக்கும் போது கற்பதுக்கையில் அக்கற்பலகைகளின் ஒருபகுதி நிலத்திற்கு கீழே அமைய ஏனைய பகுதிகள் நிலத்திற்கு மேலே இருக்குமாறு அமைக்கப்பட்டிருப்பது சிறிய வேறுபாடாக உள்ளது. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய இவ்வீமச்சின்ன மரபு சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் தொடர்ந்து பின்பற்றப்பட்டதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன (ராஜன் 2004:28-30). அதிலும் சங்க இலக்கியத்தில் இவ்வீமச்சின்னம் பற்றிய குறிப்புக்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக அகநானூற்றில் வரும் "அம்பின் விசை இட வீழ்தோர் எண்ணு வரம்பு அறியா உவல் இடு பதுக்கை" (அகம் 109:7-8),"வில் இட வீழ்ந்தோ பதுக்கை" (அகம் 157:5), புறநானூற்றில் வரும் "அம்புவிட வீழ்தோ வம்பப் பதுக்கை" (புறம் 3:21), நற்றிணையில் "பதுக்கை நீழல் ஒதுக்கு இடம் பெறாஅ" முதலான செய்திகளைக் குறிப்பிடலாம். இலங்கையில் இவ்வகை ஈமச்சின்னங்கள் காணப்படும் இடங்களில் கிழக்கு இலங்கையில் கதிரவெளி, படிகம்பொல ஆகிய இடங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இதையொத்த கற்பதுக்கைகள் பண்டைய சேரநாடான தற்போதய கேரள மாநிலத்தில் அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் அங்கிருந்தே இம்மரபு இலங்கைக்கு பரவியதெனக் கூறப்படுகிறது (Sitrampalam 2001:78).

கல்வட்டங்கள் (Stonecircle)

பெருங்கற்கால ஈமச்சின்னங்களின் இன்னொரு வடிவம் கல்வட்டங்களாகும். தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பெரிதும் பின்பற்றப்பட்ட ஈமச் சின்னங்களில் இதுவும் ஒன்றாகும். நிலத்தின் தன்மைக்கு ஏற்ப ஆழமாக குழியமைத்து அதற்குள் இறந்தவரது உடலின் பாகங்களையும், நிவேதனப் பொருட்களையும் தாழியில் அல்லது கல்லறையில் இட்டு அதைச் சுற்றி வட்டமான கற்களை குவியலாக மூடுவதன் மூலம் இவ்வகை ஈமச்சின்னம் உருவாக்கப்படுகிறது. சில இடங்களில் வட்டமான கற்களுடன் சதுரம் அல்லது முக்கோண வடிவிலான கற்களைக் கொண்டும் ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதுண்டு. தமிழகத்தில் இவ்வீமச்சின்னத்தில் இறந்தவர் நினைவாக நடுகற்கள் நாட்டப்பட்டும் காணப்படுகிறது. சங்க இலக்கியத்தில் இவ்வீமச்சின்னங்கள் பரல் உயர் பதுக்கை எனப் பல இடங்களில் கூறப்பட்டுள்ளதால்



பரல் உயர் பதுக்கை - செட்டிக்குளம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0031.jpg

தமிழில் கல்வட்டங்கள் என்பதற்குப் பதிலாக பரல் உயர் பதுக்கை என்றே இன்று அழைக்கப்பட்டு வருவதைக் காணலாம் (ராஜன் 2004: 27-30). அகநானூற்றில் "பரல் உயர் பதுக்கை" என வரும் குறிப்பு (அகம் 91:10) புறநானூற்றில் "பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி, மரல் வகுந்து தொடுத்து செம்பூங்கண்ணியொடு, அணி மயிற் பிலி சுட்டி, பெயர் பொறித்து இனி நட்டனரே கல்லும் கன்றொடு கறவை தந்து பகைவர் ஓட்டிய நெடுந்தை" எனக் கூறப்பட்டுள்ளது (புறம் 264:8-13). இதற்கு பரல் உயர் பதுக்கையுடன் நடுகல்லும் நாட்டப்பட்டிருந்ததே காரணமாகும்.

ஈழத்தில் இவ்வகை ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு இடமாக வடஇலங்கையில் உள்ள மாமடு என்ற இடம் குறிப்பிடப்படுகிறது. இந்நிலையில் இவ்வகை ஈமச் சின்னமொன்று இக்கட்டுரை ஆசிரியரால் அண்மையில் வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குள பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொங்குராயன்மலை என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வீமச் சின்னம் முழுமையாக அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்படுமானால் இப்பிரதேசத்தின் பூர்வீக வரலாறு புதுவெளிச்சம் பெறும். ஆயினும் யானைகளின் அதிக நடமாட்டம் இவ்விடத்தில் நீண்டநேரம் தங்கியிருந்து அகழ்வாய்வு செய்யத் தடையாக உள்ளது. எமது ஆய்வின் போது இதன் சுற்றாடலில் 10 -ற்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களும், புராதன குடியிருப்புக்களுக்குரிய சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கி.மு. 2ஆம்- கி.பி.4ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. இவ்வாதாரங்கள் முன்பொரு காலத்தில் இப்பிரதேசத்தில் செறிவான குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிசெய்கின்றன.

குடைக்கல் ஈமச்சின்னம் (Umbrellastone Burial)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பெரிய கல்லின் வெளிப்பாகத்தை குடை போன்ற வடிவில் செதுக்கி அதன் உட்பாகத்தில் ஆழமான குழியை ஏற்படுத்தி அதற்குள் இறந்தவரது எலும்புகளுடன் நிவேதனப் பொருட்களையும் இட்டு அடக்கம் செய்யப்படும் முறை குடைக்கல் ஈமச்சின்னம் என அழைக்கப்படும். தமிழகத்தில் சேர நாட்டில் (இன்றைய கேரளம்) இது அதிக அளவில் பின்பற்றப்பட்டதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.ஈழத்தில் இவ்வகையான ஈமச்சின்ன மரபு பின்பற்றப்பட்டிருந்ததற்கு இதுவரை உறுதியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆயினும் 2005ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வேலணைக் கிராமத்தில் சாட்டி என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இவ்வகை ஈமச்சின்ன மரபு இருந்திருக்கலாம் என்பதற்கு ஆதாரம் கிடைத்துள்ளது. இங்கு பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான உறுதியான ஆதாரங்கள் தொல்லியல் மேலாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (சிற்றம்பலம், Rajupathy 1987). அப்பின்னணியில் வைத்து நோக்கும் போது இங்கு கண்டுபிடிக்கப்பட்ட குடைக்கல் ஈமச்சின்னத்தைப் பெருங்கற்காலத்தைச் சேர்ந்ததாகக் கருத இடமுண்டு. வைரமான கற்கள் எதுவும் காணப்படாத இப்பிராந்தியத்தில் இவ்வீமச் சின்னம் மட்டும் வைரமான கல்லில் அமைக்கப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. ஏறத்தாழ இரண்டடி உயரமுடைய வைரமான இக்கல் குடைபோன்ற வடிவில் அதன் மேற்பாகம் செதுக்கப் பட்டு, அதன் உட்பகுதி ஒன்றரை அடி ஆழத்தில் வட்டமாகக் குடையப்பட்டு அதற்குள் மனித மிருக எலும்புகள் வைக்கப்பட்டு மண்ணில் புதையுண்ட நிலையில்



குடைக்கல் – சாட்டி

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0032.jpg

கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனுள் இருந்த எலும்புகளை ஆய்வு செய்த யாழ்ப்பாணப் பலகலைக்கழக மருத்துவ பீடத்தினர் அவற்றுள் சிறிய எலும்புகள் வயது குறைந்த மனிதனுக்கு உரியதெனவும், மிகப் பெரிய எலும்புகள் குதிரைக்கு உரியதெனவும் அடையாளப்படுத்தி உள்ளனர். இவ்வீமச்சின்னம் காணப்பட்ட குழிக்குள் களிவிரும்புகளுடன் (IronSlacks), பல வகைப்பட்ட மட்பாண்ட ஓடுகளும் கிடைத்திருப்பதால் சேர நாட்டை ஒத்த குடைக்கல் ஈமச்சின்ன மரபு சாட்டியிலும் பின்பற்றப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

தாழியடக்கம் (Urn Burial)

தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பலவகை ஈமச்சின்னங்கள் பயன்பாட்டில் இருந்த போதும், சங்க இலக்கியத்தில் அதிகம் பேசப்படும் ஈமச் சின்னங்களில் ஒன்று தாழியடக்கமாகும். இது பெருங்கற்காலப் பண்பாட்டின் இறுதியில் இருந்த நிலையைப் பிரதிபலிப்பதாக தொல்லியலாளர் கருதுகின்றனர். இம்மரபு சங்க காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதற்கு பழந்தமிழ் இலக்கியத்தில் வரும் இரு பாடல்களை உதாரணங்களாகக் காட்டலாம்:

பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல் வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியடு,
அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து
இனிநட்டனரே! கல்லும், கன்றொடு
கறவை தந்து பகைவர் ஒட்டிய
நெடுந்தகை கழிந்தமை அறியாது
இன்றும் வருங்கொல், பாணரது கடும்பே?

(உறையூர் இளம்பொன் வாணிகனார் 264)

"சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுவோர்
தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்"

(மணிமேகலை 6.111.11.66-67).

இதில் சுடுபவர்களையும் (cremation), இறந்தவர்களை ஓரிடத்தில் வைப்பதையும் (Post-excarnation), குழியில் இடுவதையும் (pitburial), நிலத்திற்கடியில் கல்லறை அமைத்து வைப்பதையும் (Rockchamberorcistburial), தாழிகளில் இட்டு அதன் மேல் மூடிகொண்டு மூடுவதையும் (urnburialencappedwithlid) தெளிவாகக் குறிப்பிடுகிறது. பெருங்கற்காலத் தாழியடக்க முறையில் தாழிகள் பெரும்பாலும் கரும் சிவப்பு பானையோடுகளால் வனையப்பட்ட மூடிகள் கொண்டு மூடப்பட்டிருந்ததை அகழ்வாய்வுகளில் கிடைத்த சான்றுகள் உறுதி செய்கின்றன. இதனை நற்றிணையில் வரும் "மா இருந் தாழி கவிப்ப, தா இன்று கழிக, ஏற் கொள்ளாக்- கூற்றே" என்ற வரிகள் உறுதிசெய்வதாக உள்ளன (நற்றிணை 271:11-12). சங்க கால மன்னர்கள் தாழியிலும் அடக்கம் செய்யப்பட்டனர் என்பதை பதிற்றுப்பத்துப் பாடலும் (44.11, 11.22-23), புறநானூற்றில் வரும் பாடல்களும் (புறம் 228.1, 10-15) உறுதி செய்கின்றன. சாதாரண பெண்களும் தாழியில் அடக்கம் செய்யப்பட்டனர் என்பதற்கு தும்பிசேர் கீரனார் தமது "கலம் செய்கோவே கலம் செய்கோவே" எனத் தொடங்கும் சிறப்புமிகு புறப்பாடலில் குறிப்பிடுகிறார்(புறம் 256.1-7). இவ்வாதாரங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய தாழியடக்க முறை சங்க காலத்திலும்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0033.jpg

அதன் பின்னரும் அரசன் தொட்டுச் சாதாரண குடிமகன் வரை அடக்கம் செய்யப் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரிகிறது (ராஜன் 2004:23).



ஈமத்தாளி – பொம்பரிப்பு

ஈழத்துப் பெருங்கற்காலப் பண்பாட்டிலும் தாழியடக்க முறை பின்பற்றப்பட்டதற்கு தெக்கம், கரம்பன் குளம், ஆணைக்கோட்டை, பூநகரி, குஞ்சுப்பரந்தன் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமத் தாழிகளை, தாழிகளின் பாகங்களை ஆதாரமாகக் குறிப்பிடலாம் (Seneviratne 1984: 246-247, Ragupathy 1987, புஷ்பரட்ணம் 1993:14-40). ஆயினும் தமிழகத்தில் ஆதிச்சநல்லூரை அடுத்து அதிக அளவில் பெருங்கற்காலத் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாக வடமேற்கு இலங்கையில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள பொம்பரிப்பு என்ற இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ்விடம் கடற்கரையில் இருந்து நான்கு மைல் தொலைவில் கால ஓயா முகத்துவாரப் பகுதியில் அமைந்துள்ளது. இவ்விடம் அமைந்துள்ள வடமேற்கு இலங்கையில் தான் வரலாற்றுப் பழமைவாய்ந்த துறைமுகங்களும், நகரங்களும் காணப்படுகின்றன. அவற்றுள் மல்வத்து ஓயா முகத்துவாரத்தில் உள்ள மாதோட்டத் துறைமுகம், மொதரகம் ஆற்றங்கரையில் அமைந்துள்ள மகன என்ற நகரம், கால ஓயா முகத்துவாரத்தில் உள்ள உருவெல என்ற பழைய நகரம் என்பவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். 1920 களில் கோகாட் என்பவர் பொம்பரிப்பில் மேற்கொண்ட ஆய்வுகளில் பல வடிவங்களில் அமைந்த தாழிகள், கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்கள், குறியீடுகளுடன் கூடிய சிவப்பு நிற மட்பாண்டங்கள், மனித, மிருக எலும்புகள், இரும்பு, செம்பு என்பவற்றால் அமைந்த கருவிகள், கல்மணிகள் கண்டுபிடிக்கப்பட்டன (Hocard1922-28:50-51). இவரைத் தொடர்ந்து 1956-57, 1964-65 காலப்பகுதிகளில் இலங்கைத் தொல்லியற் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வுகளின் போது மேலும் பல ஈமத்தாளிகள் கண்டுபிடிக்கப்பட்டன (Paranavithana 1956: 13-15,Deraniyagala 1957:8, 16-17,Godakumbura 1967:94,Senaratne 1969:27). ஆயினும் 1970 இல் பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் விமலாபேக்கிலே இங்கு மேற்கொண்ட விரிவான அகழ்வாய்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த அகழ்வின் மூலம் ஏறத்தாழ 3-4 ஏக்கர் பரப்பில் சராசரியாக 1.5 அல்லது 2 மீற்றர் இடைவெளியில் 8000க்கு மேற்பட்ட பெருங்கற்கால ஈமத் தாழிகள் (urnburial) அடையாளம் காணப்பட்டன (VimalaBegley 1981:53). இத்தாழிகளில் ஏறத்தாழ 10000 முதல் 12000 வரையான மக்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இத்தாழிகள் பெரும்பாலும் 1 முதல் 1.1/4 மீற்றர் வரையான உயரமும், 40-90 சென்ரி மீற்றர் விட்டமும் உடையன. இவை ஏறத்தாழ 1 1/2 மீற்றர் ஆழத்தில் புதைக்கப்பட்டு அதன் வாய்ப்பகுதி சட்டி அல்லது கற்களால் மூடப்பட்டிருந்தது. இத்தாழிக்குள் இறந்த மனிதனின் உடலின் சில பாகங்களோடு, பலவடிவங்களில் அமைந்த மட்பாண்டங்கள், சட்டிகளில் படையற் பொருட்களான வெண்கல ஊசிகள், வெண்கலக் காப்புக்கள், கண்ணாடி மணிகள் பறவை, மிருக எலும்புகள் போன்ற பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. சில தாழிகளில் பலதரப்பட்ட வயதினரை உடைய பலரது எலும்புகள் ஒரே தாழிக்குள் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. இந்த அம்சம் குடும்ப உறுப்பினர் பலரது எலும்புகளை காலத்திற்கு காலம் சேர்த்து வைத்து ஒரே காலத்தில் ஒரே தாழியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் அல்லது அவர்கள் அனைவரும் ஒரே காலத்தில் இறந்திருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. புதிய கற்காலப் பண்பாட்டில் குழந்தைகளை அடக்கம் செய்வதற்காகப்

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0034.jpg

பயன்படுத்தப்பட்ட தாழிகள் பெருங்கற்காலப் பண்பாட்டில் முதியவர்களையும் அடக்கம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது என்பதற்கு பொம்பரிப்பில் கிடைத்த தாழிகளும் சிறந்த சான்றாகும்.

இங்கு காணப்பட்ட தாழியடக்க முறைமை, தாழியின் தோற்ற அமைப்பு, செய்முறை, அலங்காரம், மட்பாண்டக் குறியீடுகள், தாழிகளுடன் காணப்பட்ட கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்கள், ஏனைய படையற் பொருட்கள் பெருமளவுக்கு தென் தமிழகத்தில் உள்ள ஆதிச்சநல்லூர், கொற்கை, பெருமாள்மலை, போர்க்களம், அமிர்தமங்கலம் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமத் தாழியடக்க முறைகளோடு நெருங்கிய ஒற்றுமை உடையன. விமலா பேக்கிலே இலங்கையின் வரண்ட வலயப் புவியியல் பண்புகள் தமிழகப் புவியியல் பண்புகளை ஒத்துக் காணப்பட்டதால் தமிழகப் பெருங்கற்கால மக்கள் தமக்குப் பரீட்சயமான புவியியல் பண்புகளைக் கொண்ட இன்னொரு இடத்திற்குச் செல்வது பொதுவான இயல்பு எனக் கூறுகிறார். அவர் பொம்பரிப்பில் காணப்பட்ட கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள், பிற பெருங்கற்காலச் சின்னங்களை அநுராதபுரம், கந்தரோடை போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சின்னங்களுடன் ஒப்பிட்டு இப்பண்பாடு பொம்பரிப்பில் இருந்து மாந்தை, கந்தரோடை வரை நிலைத்திருக்கலாம் எனக் கூறுகிறார் (மேற்படி: 53-59). சுதர்சன் செனிவரட்னா நாட்டின் உட்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்களின் தோற்ற அமைப்பில் காணப்படும் ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டி வடமேற்கு இலங்கையில் இருந்தே நாட்டின் உட்பகுதிக்கு இப்பண்பாடு பரவியதெனக் கூறுகிறார். பொம்பரிப்பில் கண்டுபிடிக்கப்பட்ட தாழியடக்க ஈமச் சின்ன முறைகள், தாழிகளின் தோற்ற அமைப்பு, கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பன பொம்பரிப்புக்கு நேர் எதிரே தமிழகத்தில் உள்ள ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலப் பண்பாட்டின் ஒரு பிராந்தியம் எனக் கூறக் கூடிய அளவிற்கு ஒற்றுமை உடையன. இச்சான்றுகளின் அடிப்படையில் தென்னிந்தியாவின் தென்பகுதியில் இருந்து இலங்கைக்கு பெருங்கற்காலப் பண்பாடு பரவிய போது அதை முதலில் உள்வாங்கிய இடங்களில் ஒன்றாகப் பொம்பரிப்பைக் கருத இடமுண்டு *(Seneviratne 1984)*.

Tamileelam Archive

நீளக்கிடத்தி அடக்கம் செய்யும் ஈமச்சின்னம் (Extended Burial)



பெருங்கற்கால மனிதன் – ஆனைக்கோட்டை

இலங்கை பெருங்கற்காலப் பண்பாட்டில் பின்பற்றப்பட்டிருந்த இலகுவான ஈமச்சின்ன முறைகளில் ஒன்று நீளக்கிடத்தி அடக்கம் செய்யும் முறையாகும். இது இறந்தவரது உடலை நிலத்தில் நீள்சதுரமாக வெட்டப்பட்ட குழிக்குள் வைத்து அவ்வுடலைச் சுற்றி பலவகை மட்பாண்டங்களில் படையற் பொருட்களை இட்டுப் பின்னர் அவ்வுடலை மண்ணால் மூடிவிடும் முறையைக் குறிக்கிறது. தென்தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் இம்முறை பின்பற்றப்பட்டிருந்ததற்குப் பரவலான சான்றுகள் கிடைத்துள்ளன. இதற்கு மணற்பாங்கான இவ்விடங்களில் ஈமச் சின்னங்களை அமைப்பதற்குரிய கற்கள் காணப்படாமையே முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது. இலங்கையில் இவ்வகையான ஈமச்சின்னங்கள் மணற்பாங்கான வடக்கு, வடமேற்கு இலங்கையில் உள்ள ஆனைக்கோட்டை, காரைநகர், மாதோட்டம் ஆகிய இடங்களில் பின்பற்றப்பட்டதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0035.jpg

(Vimala Begley 1981:53-95, சுயபரியவால 1987). அவற்றுள் ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.

இவ்விடம் யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஆறு மைல் தொலைவில் நாவாந்துறை கடற்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ளது. இத்தொல்லியல் மையத்தைக் கண்டுபிடித்த கலாநிதி இரகுபதி இங்கு இரண்டு சதுரமைல் பரப்பில் ஆறு தொல்லியல் மையங்களும், இரண்டு ஏக்கர் பரப்பில் பெருங்கற்கால ஈமச்சின்னங்களும் இருக்கலாம் எனக் கூறுகிறார். 1980 இல்பேராசிரியர் இந்திரபாலா தலைமையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினருடன் இணைந்துமேற்கொண்ட அகழ்வாய்வில் இரு இடங்களில் நீளக்கிடத்தி அடக்கம் செய்யப்பட்ட இரு ஈமச்சின்னங்கள் (Extendedburials) கண்டுபிடிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் என்ற வகையில் இவற்றிற்குத் தனி முக்கியத்துவம் உண்டு. இவ்விரு ஈமச்சின்னங்களும் பத்தடி இடைவெளியில் நான்கடிஉயரம் கொண்ட மண்மேட்டின் மூன்றாவது மண்படையில் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வீமச் சின்னங்களில்கிழக்கு மேற்குத் திசையை நோக்கிய வண்ணம் அடக்கம் செய்யப்பட்டிருந்த ஏறத்தாழ 5 அடி நீளமுடைய இரு மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் முதலாவது ஈமச்சின்னம் (Extendedburial) சற்றுக் காலத்தால் முற்பட்டதாகக் கணிக்கப்பட்டுள்ளது. அதில் இரு கைகளும் கட்டப்பட்ட மனித எலும்பைச் சுற்றி பலவகைப்பட்ட மட்பாண்டங்களில் நிவேதனப் பொருட்கள் படைக்கப்பட்டிருந்தன. அம்மட்பாண்டங்களில் கறுப்புச்-சிவப்பு, தனிக்கறுப்பு, சிவப்பு நிற கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் என்பன குறிப்பிடத்தக்கன. சில மட்பாண்டங்களில் சுறா, மீன், மிருக எலும்புகள், நண்டின் ஓடுகள் என்பவற்றுடன் சிற்பி, சங்கு போன்ற பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. சில மட்பாண்டங்களில் குறியீடுகள் காணப்பட்டன. அத்துடன் தலைமாட்டில் வைக்கப்பட்ட கறுப்புச்-சிவப்பு நிற வட்டிலில் சுறா எலும்பு மாலையுடன் குறியீடும், பிராமி எழுத்துப் பொறித்த கொண்ட முத்திரை மோதிரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

Tamileelam Archive

இரண்டாவது ஈமச்சின்னம் சற்றுக் காலத்தால் பிற்பட்டதென்பதை அவ்வீமச்சின்னத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட உரோம மட்பாண்டங்கள் (RoulettedWare), இலக்குமி நாணயம் என்பன உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் ஈமச்சின்னத்தின் அமைப்பும், அதனுடன் காணப்பட்ட மட்பாண்டங்களும், படையற் பொருட்களும் முதலாவது ஈமச்சின்னத்தை பெருமளவுக்கு ஒத்தனவாகக் காணப்பட்டன. இவ்வீமச் சின்னங்களின் காலத்தை உறுதிப்படுத்தக்கூடிய விஞ்ஞானபூர்வமான காலக் கணிப்பு முறை பயன்படுத்தப்படாவிட்டாலும் இங்கு கிடைத்த காலத்தை வரையறை செய்யக் கூடிய மட்பாண்டக்குறியீடுகள், பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள், முத்திரை மோதிரம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு இவ்வீமச் சின்னங்களின் காலத்தை 2200 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கூறலாம்.



ஆனைக்கோட்டை முத்திரை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0036.jpg

குழியடக்கம் (Pit Burial)

இது பெருங்கற்கால மக்களால் பின்பற்றப்பட்ட இன்னொருவகை ஈமச்சின்ன வடிவமாகும். இது நிலத்தில் செயற்கையான குழியொன்றை அமைத்து அதற்குள் இறந்த மனிதனின் உடலை முழுமையாகவோ அல்லது உடலின் முக்கிய பாகங்களையோ குழிக்குள், அல்லது குழிக்குள் வைக்கப்பட்ட மட்பாண்டத்திற்குள் இட்டு அதன் அருகே மட்பாண்டங்களில்நிவேதனப் பொருட்களை வைத்து பின்னர் குழியின் வாய்பகுதியை கற்பலகைகள் கொண்டு மூடிவிடுவதன் மூலம் ஏற்படுத்தப்பட்டது. தீபகற்ப இந்தியாவில் இவ்வகையான குழியடக்கங்கள் தக்கணம் மற்றும் தென்னிந்தியா அதிலும் சிறப்பாகத் தென்தமிழகத்தில் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட குழியடக்கம் சில இடங்களில் கற்பதுக்கை ஈமச்சின்னத்துடன் இணைந்த நிலையில் காணப்பட்டன. ஆனால் ஈழத்தில்பொம்பரிப்பு, மகேவிற்ற ஆகிய இடங்களில் தனித்தும், பின்வேவ கல்அதற ஆகிய இடங்களில் கல்லறையுடன் இணைந்த நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொம்பரிப்பில் கண்டுபிடிக்கப்பட்ட குழியடக்கம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது *(Begly 1970:69)*.

அண்மையில் சாட்டி என்ற இடத்தில் இக்கட்டுரை ஆசிரியரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் குழியடக்க முறையைச் சார்ந்ததாகக் காணப்படுகிறது. இவ்விடம் யாழ்ப்பாண நகரத்தில் இருந்து ஆறு மைல் தொலைவில் வேலணைப் பிரதேசத்தின் கடற்கரைப்பகுதியில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களில் சாட்டியும் ஒன்றாகும். 2005ஆம் ஆண்டு இவ்வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது ஏறத்தாழ 30க்கும் மேற்பட்ட இடங்களில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் இருந்ததற்கானசான்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 10 மண்மேடுகள் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது அங்கிருந்த ஈமச்சின்னங்கள் 1 முதல் 2 அடி விட்டமும், ஏறத்தாழ 10 முதல் 12 அடி உயரமும் கொண்ட சிறிய கிணற்று வடிவில் அமைக்கப்பட்டு இருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த அம்சம் பெருங்கற்காலப் பண்பாட்டில் பின்பற்றப்பட்ட குழியடக்க ஈமச் சின்னத்தை நினைவுபடுத்துவதாக உள்ளது. இவற்றின் அத்திவாரங்கள் சில ஈமச்சின்னக் குழிகளில் கற்களைக் கொண்டு நட்சத்திர வடிவிலும், ஏனையவை சுடுமண், மரம், கல் என்பவற்றைப் பயன்படுத்தி வட்டவடிவிலும் அமைக்கப்பட்டிருந்ததை அடையாளம் காணமுடிந்தது. இவ்வீமச்சின்னங்கள் அனைத்தும் குறிப்பிட்ட







சாட்டி அகழ்வாய்வு - 2004-2005

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0037.jpg

ஒரு ஒழுங்கு விதிமுறைப்படி அமைக்கப்பட்டவையாகும். அதில் பெருங்கற்கால சின்னங்களுடன் காணப்பட்ட மனித எலும்புகளை மூடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வைரமான கற்பலகைகள் பிற இடத்திலிருந்து கொண்டு வந்து பயன்படுத்தப்பட்டுள்ளமை ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதன் முக்கியத்துவத்தை புலப்படுத்துவதாக உள்ளது.



சாட்டி அகழ்வாய்வு - 2004-2005

இப்பலகைகள் பெரும்பாலும் குழிக்குள் இடப்பட்ட எலும்புகளை மூடுவதற்கே பயன்படுத்தப்பட்டன. சில குழிகளில் மட்பாண்டங்களில் இடப்பட்ட எலும்புகளை மூடுவதற்காகவும் இவை பயன்படுத்தப்பட்டன. இவ்வீமச் சின்னங்களில் மனித எலும்புகளுடன் சில வகை மிருகங்கள், பறவைகள், கடல் உயிரினங்கள் என்பவற்றின் எலும்புகளும் இடப்பட்டிருந்தன. மேலும் மனித எலும்பைச் சுற்றி பல அளவிலும், பல வடிவங்களிலும் வைக்கப்பட்டிருந்த மட்பாண்டங்களில் இரும்புக் கருவிகளுடன் பெருமளவிலான களிவிரும்புகள் (Ironslack),கல்மணிகள், கைவளையல்கள், தானியவகை, சங்கு, சிற்பி, வேட்டைக் கருவிகள், கூராகத் தீட்டப்பட்ட பெருமளவு மான்கொம்புகள், மருத்துவ உபகரணங்கள் (அம்மி, சாணைக்கற்கள்),சங்கு, சிற்பி, நாளாந்தம் பயன்படுத்திய கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பனவும் கிடைத்துள்ளன. ஈமச்சின்னங்களின் சுற்றாடலில் மேலாய்வில் கிடைத்த மெருகூட்டப்பட்ட கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Early Black and Red Ware) இவற்றின் காலத்தை கந்தரோடை, அநுராதபுரத்துடன் தொடர்புபடுத்துகின்றன. ஆனால் இவ்வகையான மட்பாண்டங்கள் எவையும்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0038.jpg

அகழ்வு செய்யப்பட்ட ஈமச்சின்னங்களில் இருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கிடைத்த ஒரு சில கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்களும் மெருகூட்டப்படாத (unpolishedblackand red ware) சற்றுப் பிற்பட்ட கால மட்பாண்டங்களாக உள்ளன. இருப்பினும் அகழ்வாய்வுகளின் போது பெருங்கற்கால ஈமச்சின்னங்களுடன் மங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரை நாணயம், மட்பாண்டக் குறியீடுகள், ஓரிரு பிராமி எழுத்துக்கள் கொண்ட மட்பாண்ட ஓடுகள் என்பன இவ்வீமச்சின்னங்களுக்குரிய பெருங்கற்கால மக்கள் சாட்டியில் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

பெருங்கற்கால ஊரிருக்கைப் பகுதிகள் (Megalithic Habitation Sites)

பெருங்கற்கால மக்களது வாழ்விடப்பகுதிகளில் இருந்து கிடைத்த பலதரப்பட்ட சான்றாதாரங்கள் அக்கால மக்களது வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், மக்கள் தொகை, குடும்ப சமூக உறவுமுறைகள், வாழ்விடங்கள், உணவு உற்பத்தி முறைகள், தொழில் நுட்ப வளர்ச்சி, மதநம்பிக்கைகள், கலைமரபு, அழகியல், உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்புகள் என்பவற்றை எடுத்துக் காட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தென்னிந்தியாவில் பெருங்கற்காலக் குடியிருப்புக்களும், அவற்றுடன் தொடர்புடைய ஈமச் சின்னங்களும் குறிப்பிட்ட ஒரு தொல்லியல் வட்டத்திற்குள் இருந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக தமிழகத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொடுமணல் என்ற இடத்தில் கிடைத்த சான்றுகளைக் குறிப்பிடலாம் (ராஜன் 2004). ஆனால் இலங்கையில் ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட வட்டத்திற்குள் குடியிருப்பு பகுதிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. குடியிருப்பு பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்ட வட்டாரங்களுள் ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. உதாரணமாக இலங்கையின் முதலாவது அரச தலைநகராக இருந்த அநுராதபுர வட்டாரத்தில் செறிவான பெருங்கற்காலக் குடியிருப்புக்களுக்குரிய ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டும் அங்கு இதுவரை ஒரு இடத்தில் தானும் பெருங்கற்கால ஈமச்சின்னம் இருந்ததற்கான ஆதாரம் கண்டறியப்படவில்லை (Seneviratne 1984). இதற்குப் பரந்த அளவில் முறையான அகழ்வாய்வுகள் அங்கு மேற்கொள்ளப்படாமையே முக்கிய காரணம் எனக் கூறலாம். இருப்பினும் இதுவரை தெரியவந்துள்ள பெருங்கற்கால ஊரிருக்கைப்பகுதிகளையும், அவற்றின் அமைவிடங்களையும் வைத்து நோக்கும் போது கி.மு 1000க்குப் பின்னர் இலங்கை நாகரிக வரலாறு படிப்படியாக பெருங்கற்காலப் பண்பாட்டால் ஒருமுகப்பட்ட நிலையில் நெறிப்படுத்தப்பட்டன எனக் கூறலாம். இதுவரை பத்துக்கு மேற்பட்ட பெருங்கற்கால ஊரிமையங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஓரிரு பிரதான இலங்கை குடியிருப்பு மையங்களின் வரலாற்று முக்கியத்துவத்தை நோக்கலாம்.

Tamileelam Archive

அநுராதபுரம்

இலங்கையில் ஓரளவுக்கு விஞ்ஞானபூர்வமான தொல்லியல் அகழ்வாய்வுக்கு உட்பட்ட இடங்களில் புராதன இராசதானியாக இருந்த அநுராதபுரத்திற்கு தனிச் சிறப்புண்டு. வடமேற்கு இலங்கையில் பொம்பரிப்பிலுள்ள பெருங்கற்காலத் தாழித் தலத்திற்கும், வடகிழக்கிழத்தில் யான்ஓயா கல்லறை ஈமச்சின்னத் தலத்திற்கும் இடைப்பட்ட இப்பிரதேசம் 1913 இருந்து அண்மைக் காலம் வரை பல்வேறு இடங்களில் அகழ்வாய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன (Ayrto, 1913, Hocart, 1924, Paranavitana, 1936, Deraniyagala 1957, Godakumbara, 1961, Codrington, 1969, Deraniyagala 1972, 1984, 1990, Coningham, 1990, 1991). அந்த ஆய்வுகளில் இருந்து இலங்கையின் ஏனைய வட்டாரங்களைக் காட்டிலும் இப்பிராந்தியத்திலேயே மிகப்பெரிய அளவில் பெருங்கற்கால மக்களது குடியிருப்புக்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0039.jpg

இருந்திருக்கலாம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. மிகச்சமீப காலத்தில் தெரணியகலா மற்றும் பிரித்தானிய தொல்லியல் அறிஞர்களான அல்ஜின், ரொபின் கனிகாம் ஆகியோர் இணைந்து இங்கு மேற்கொண்ட அகழ்வாய்வின் போது இவ்வட்டாரத்தின் தொடக்க காலத்தில் நுண்கற்கால மக்களும் (Mesolithic people) அதையடுத்து பெருங்கற்கால அல்லது இரும்புக்கால மக்களும் (Iron Age people), அதன் தொடர்ச்சியாக வரலாற்றுத் தொடக்க கால மக்களும் (Early historic People) வாழ்ந்ததற்கான வேறுபட்ட மூன்று கலாச்சார மண்படைகளை அடையாளம் கண்டுள்ளனர். அவற்றுள் பெருங்கற்கால மக்களது குடியிருப்புக்களின் தொடக்க காலம் கி.மு 1000க்கும் கி.மு 800க்கும் இடைப்பட்டது எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இங்குள்ள சிற்றாடல் (Citadal), சல்கவத்த (Salgaha Watta) போன்ற இடங்களில் நடாத்தப்பட்ட விரிவான அகழ்வாய்வுகளில் இருந்து பெருங்கற்கால மக்களது குடியிருப்புக்களின் விஸ்தீரணம் நுண்கற்காலப் பண்பாட்டிற்குப் பின்னர் கி.மு 700இல் 10 கெக்டேற்றராகவும், கி.மு 500இல் 50 கெக்டேற்றராகவும், கி.மு 3இல் 100 கெக்டேற்றராகவும் அதிகரித்திருந்ததாகக் கணிப்பிடப்பட்டுள்ளது *(Allchin 1989: 3, 12)*. பெருங்கற்காலக் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து கண்டறியப்பட்ட சிறு சிறு குளங்கள், நீர்பாசனக் கால்வாய்களின் அழிபாடுகள், நிலத்தைப் பண்படுத்தி, விவசாய உற்பத்தியில் ஈடுபட்டதை உறுதிப்படுத்தும் பலதரப்பட்ட உழவு கருவிகள், நெல், கோதுமை முதலான தானிய எச்சங்கள், நாளாந்த வாழ்கையில் பயன்படுத்தப்பட்ட இரும்பு, செம்பு என்பவற்றால் அமைந்த கருவிகள், ஆயுதங்கள் என்பன கிடைத்துள்ளன. மேலும் இங்கு நிரந்தரமான குடியிருப்புக்களை ஏற்படுத்திய பெருங்கற்கால மக்கள் தமது இருப்பிடங்களை களிமண்ணையும், மரத்தையும் கொண்டு அமைத்திருந்தனர் என்பதற்குரிய சான்றுகளும் கிடைத்துள்ளன *(Deraniyagala 1972: 58)*. இவ்வாறு குடியிருப்புக்களை அமைக்கும் மரபு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் மறைந்து போகாது அதன் தொடர்ச்சி தற்காலம் வரை நிலைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இலங்கையின் பௌத்த சிங்கள கட்டிடக் கலை மரபின் தோற்றம் பற்றி ஆராய்ந்த சேனக பண்டாரநாயக்கா அதன் தோற்றம் சுதேச கட்டிடக் கலைமரபை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததென்பதற்கு பெருங்கற்கால ஈமச்சின்னங்களையும், அக்காலக் குடியிருப்புக்களையும் ஆதாரமாகக் காட்டுகிறார்.

Tamileelam Archive

கந்தரோடை

அநுராதபுரத்தை அடுத்து இலங்கையின் இன்னொரு முக்கிய பெருங்கற்காலக் குடியிருப்பு மையமாக வடஇலங்கையில் உள்ள கந்தரோடை காணப்படுகிறது. யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே சுண்ணாகம் வட்டாரத்தில் கடற்கரையில் இருந்து மேற்கே ஆறு மைல் தொலைவில் இவ்விடம் அமைந்துள்ளது. கடல்மட்டத்திலிருந்து 28-30 அடி உயரத்தில் அமைந்த இவ்விடம் 3.2 சதுரக் கிலோமீட்டர் பரப்புடையது. இதில் இரண்டு கிலோ மீட்டர் அளவில் புராதன குடியிருப்புகளுக்குரிய தொல்லியற் சின்னங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இரண்டாவது பெருங்குளங்களைக் கொண்டுள்ள இவ்விடத்தினூடாகப் பாயும் வழுக்கையாறு மழை காலத்தில் கந்தரோடையை கடலுடன் தொடர்புபடுத்துகிறது. கந்தரோடையின் வரலாற்றுப் பழமை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து உணரப்பட்டது. 1917-19 காலப்பகுதியில் போல்பீரிஸ் இங்கு மேற்கொண்ட கள ஆய்வும், சிறிய அளவிலான அகழ்வாய்வும் இவ்விடத்தின்



கந்தரோடை அகழ்வாய்வு - 2011

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0040.jpg

வரலாற்றுத் தொன்மையை வெளிப்படுத்திய முதல் ஆய்வு எனக் குறிப்பிடலாம். போல்பீரிஸ் இவ்வாய்வுகளின் போது அதிக எண்ணிக்கையில் கிடைத்த சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு அநுராதத்தை அடுத்து இலங்கையில் தோன்றிய புராதன நகரமாக கந்தரோடையைக் குறிப்பிடுகிறார் *(Peris 1919:45-57)*.



கந்தரோடையில் பெருங்கற்காலக் குடியிருப்புக்கள்

போல்பீரிஸ்சைத் தொடர்ந்து கி.பி 1960 ஆம் ஆண்டும் இலங்கைத் தொல்லியல் திணைக்களம் இங்கு சிறிய அளவில் தொல்லியல் அகழ்வாய்வினை (small scale horizontalexcavation) மேற்கொண்டது. இந்த ஆய்வின் முக்கிய நோக்கம் புதையுண்டிருந்த பௌத்த கட்டிடங்களை வெளிக்கொணர்ந்து அதை மீளக் கட்டியமைப்பதாகும். ஆயினும் 1970 பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருளக ஆய்வாளர்கள் மேற்கொண்ட அகழ்வாய்வுதான் முன்னைய ஆய்வுகளைவிடப் பல வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கூறலாம். இந்த ஆய்வு தொடர்பான அறிக்கை இன்னும் வெளிவராத நிலையில் ஆய்வுக்குப் பொறுப்பாக இருந்த விமலாபேக்கிலே எழுதிய கட்டுரை ஒன்றில் இருந்து இதன் முக்கியத்துவத்தை ஓரளவுக்கு அறியமுடிகிறது. இந்த ஆய்வின் போது தற்போது பௌத்த தூபிகள் காணப்படும் இடங்களுக்கு அருகில் நான்கு மீற்றர் ஆழத்தில் இரு ஆய்வுக்குழிகள் அமைக்கப்பட்டு அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய வரலாற்று உதயகாலப் படையும், அதைத்தொடர்ந்து வரலாற்றுத் தொடக்க காலப் படையும் அடையாளம் காணப்பட்டன *(Begley 1973:191-96)*. பொம்பரிப்பு, அநுராதபுரம் ஆகிய இடங்களில் இடைக்கற்காலப் (Mesolithicculture) பண்பாட்டை அடுத்துப் பெருங்கற்காலப் பண்பாடும், அதையடுத்து வரலாற்றுத் தொடக்க காலப் பண்பாடும் காணப்பட்டன. ஆனால் கந்தரோடையில் இடைக்கற்காலப் பண்பாட்டுக்குரிய சான்றுகள் காணப்படாது பெருங்கற்காலப்பண்பாடும், அதையடுத்து வரலாற்றுத் தொடக்ககாலப்பண்பாடும் காணப்பட்டன. இதிலிருந்து யாழ்ப்பாணத்தின் ஆரம்பகாலக் குடியிருப்பு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடங்கியதை அறிய முடிகிறது. இந்த அகழ்வின் போது வரலாற்று உதய கால கலாசாரப்படைக்கு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0041.jpg

மேற்படையில் வரலாற்றுத் தொடக்க காலச் சின்னங்கள் காணப்பட்டன. அதில் மூன்றாவது கலாசாரப்படையில் கறுப்பு -சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Black-and-redware), உரோம மட்பாண்டங்கள், பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடு (Brahmi potsherd), நாணயங்கள் என்பனவும், நான்காவது கலாசாரப்படையில் பௌத்த மத எச்சங்களும் காணப்பட்டன *(Seneviratne1984: 243)*. எனவே வேறுபட்ட கலாசாரப்படைகளுக்கிடையிலான தொடர்புகளை நோக்கும் போது வரலாற்று உதய கால மக்களே வரலாற்றுக் காலப் பண்பாட்டையும் வளர்த்தெடுத்தனர் என்பது தெரிகிறது. இங்கு கிடைத்த பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய மட்பாண்டங்களில் குவளைகள், வட்டில்கள், பானைகள் என்பன வடிவமைப்பில் அநுராதபுரம், பொம்பரிப்பு, குருகல்கின்ன, திபுலவேவ, மக்வேத்த ஆகிய இடங்களில் கிடைத்த மட்பாண்டங்களைப் பெரிதும் ஒத்தவையாகும் (சிற்றம்பலம் *1993:12)*. விமலாபேக்கிலே இந்த ஒற்றுமைகள் கந்தரோடையில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களும் தென்னிந்தியத் திராவிட மக்களும் ஒரே இனத்தவராக அல்லது நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டுவதாகக் குறிப்பிடுகிறார் *(Begley 1973:191-96)*. மேலும் அவர் கந்தரோடை, பொம்பரிப்பு பெருங்கற்கால மட்பாண்டங்களிடையே காணப்படும் நெருங்கிய ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டி இம்மக்களின் குடியிருப்புக்கள் பொம்பரிப்புத் தொட்டு கந்தரோடை வரை இலங்கையின் கரையோரப் பிராந்தியங்களில் தொடர்ச்சியாக இருந்திருக்கலாம் எனவும் குறிப்பிடுகிறார். அண்மையில் இக்கட்டுரை ஆசிரியர் கல்முனை தொட்டு மாந்தைக்கு வடக்கே நாச்சிக்குடாவரை மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வின் போது செறிவாகப் பெறப்பட்ட கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள், கல்மணிகள், இரும்புக்கருவிகள் என்பவற்றை நோக்கும் போது அவரின் கருத்துப் பொருத்தமாகவே தெரிகிறது.

கந்தரோடையில் பெருங்கற்கால குடியிருப்பு பகுதிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகள் விஞ்ஞானபூர்வமான காலக் கணிப்பிற்கு உட்படுத்தாத நிலையில் இப்பண்பாட்டின் தோற்ற காலம் கி.மு நான்காம் நூற்றாண்டிற்கும் கி.மு முதலாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாக இருக்கலாமென விமலாபேக்கிலேயால் கணிப்பிடப்பட்டது. ஆனால் அண்மைக்காலத்தில் அச்சான்றுகள் காபன் காலக்கணிப்பிற்கு உட்படுத்தப்பட்ட போது அவற்றுள் பல சான்றுகள் இப்பண்பாட்டின் தோற்ற காலத்தை கி.மு500 இலிருந்து கி.மு100 வரை எடுத்துக்காட்டிய போது, இரு சான்றுகள் அவற்றின் தோற்ற காலத்தை கி.மு1000 என கணித்துள்ளது. இக்காலக் கணிப்பு பொருத்தமாக இருப்பின் இலங்கையில் முதலாவது பெருங்கற்காலக் குடியிருப்பு நிகழ்ந்த இடங்களில் ஒன்றாகக் கந்தரோடையையும் எடுத்துக் கொள்ள இடமுண்டு.

இலங்கையில் அநுராதபுரத்தை அடுத்து முக்கிய பெருங்கற்காலக் குடியிருப்பு மையங்களில் ஒன்றாக கந்தரோடை எடுத்துக் கொள்ளப்பட்டாலும், அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்டது போன்ற விரிவான அகழ்வாய்வுகள் இங்கு மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து கிடைத்த குளநீர்ப்பாசன விவசாயம், மந்தை வளர்ப்பு, மற்றும் பெருங்கற்கால மட்பாண்டங்களுடன் மங்கிய நிலையில் காணப்பட்ட மட்பாண்டக் குறியீடுகள், பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள், உள்நாட்டு வெளிநாட்டு நாணயங்கள், கல் மணிகள், உரோம மட்கலன்கள் என்பவற்றை நோக்கும் போது அநுராதபுரம், மகாகமை போன்று இங்கும் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் நகரமயமாக்கமும், அரச உருவாக்கமும் நிகழ்ந்ததெனக் கருதலாம் (சுயபரியவால *1987:57-62)*. மேற்குறிப்பிட்ட இரு குடியிருப்பு மையங்களைத் தவிர மேலும் எட்டு இடங்களில் செறிவான பெருங்கற்காலக் குடியிருப்பு மையங்கள் இருந்தற்கான சான்றுகள் ஈழத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவ்விடங்களில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் விரிவான ஆய்வுகள் இலங்கையின் பூர்வீக வரலாற்றில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களுக்குரிய இடத்தை மேலும் தெளிவு பெறச் செய்யலாம் என நம்பலாம்.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0042.jpg

பெருங்கற்காலப் பண்பாடும் சமகாலத் தமிழரும்

தொல்லியல் அறிஞர்கள் தென்தமிழகத்தைப் போல் இலங்கை பெருங்கற்காலப் பண்பாட்டை இலங்கையின் ஆக்க காலமாக, வரலாற்று உதய காலமாக எடுத்துக் கொள்கின்றனர். இதற்கு இப்பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்திகள் இலங்கையின் வரலாற்றுக் காலம் தொடங்குவதற்கு அத்திவாரமாக அமைந்தமை காரணமாகும். திராவிட மொழிகளில் முதலாவது வளமான தமிழ் இலக்கிய மரபு தமிழகத்தில் தோன்றுவதற்கு பெருங்கற்காலப் பண்பாடே பின்னணியாக இருந்ததெனக் கூறும் தொல்லியலாளர் சங்க இலக்கியத்தில் வரும் பல பண்பாட்டு அம்சங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டின் பிற்காலப் பகுதிக்கு உரியதென்பதற்குப் பொருத்தமான தொல்லியல் ஆதாரங்களை எடுத்துக் காட்டுகின்றனர் (ராஜன் 2005). இலங்கையின் பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த மக்களே வரலாற்றுக் கால நாகரிகத்தையும் வளர்த்தெடுத்தனர் என்பதை அப்பண்பாட்டு மையங்களில் காணப்படும் வரலாற்றுத் தொடக்க காலப் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள், பிராமிக் கல்வெட்டுக்கள், நாணயங்கள், நகரங்களின் அழிபாடுகள், சமயம் சார்ந்த கட்டிட, சிற்பக் கலைகள், பாளி இலக்கியங்களில் வரும் பூர்வீக குடியிருப்பு மையங்கள், நகரங்கள், துறைமுகங்கள், வர்த்தக மையங்கள் தொடர்பான குறிப்புக்கள் உறுதி செய்கின்றன. ஆயினும் பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரவலுடன் அறிமுகமான நிலையான குடியிருப்புக்கள், குளநீர்ப்பாசன விவசாயம், சிறுதொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக இலங்கை ஒரே சீரான வளர்ச்சியைப் பெற்றதெனக் கூறமுடியாது. அவை இலங்கையின் பலதரப்பட்ட இயற்கைச் சூழல் காரணமாகவும், வளமான மண், நீர்நிலை, இயற்கை கனிமங்கள், வணிகத் தொடர்பு என்பன காரணமாக வேறுபட்ட நிலையில் அம்மக்களது வாழ்கைத் திறன்கள் வளம் பெறக் காரணமாக இருந்ததெனக் கூறலாம்.



இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்பட்ட சில குறியீடுகள்



இலங்கை – தமிழக பெருங்கற்கால மட்கபண்டங்களில் காணப்பட்ட சில குறியீடுகள்



பெருங்கற்கால ஈமச்சின்னங்கள், குளங்கள், கால்வாய்களை அமைப்பதிலும், குறிப்பிட்ட மையங்களில் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபம் வளர்ச்சி பெறுவதிலும் பலதரப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து செயற்பட நேர்ந்தமை ஈழத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் நகரமயமாக்கம், அரச உருவாக்கம் தோன்றுவதற்கும் முக்கிய காரணமாக இருந்தன எனக் கூறலாம். பாளி இலக்கியங்களிலும்,

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0043.jpg

பிராமிக் கல்வெட்டுக்களிலும் நாம் காணும் வரலாற்றுத் தொடக்ககால இனக்குழுத் தலைவர்கள், குறுநில அரசர்கள், சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவர்கள் பயன்படுத்திக் கொண்ட வேள், ஆய், பருமக, ராஜா, கமணி, குடும்பிக முதலான பட்டங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டில் தோன்றிய அரச உருவாக்கத்தின் தொடக்க காலச் சான்றாகக் கொள்ளலாம்.

பெருங்கற்காலப் பண்பாட்டுடன் அறிமுகமான இரும்பின் உபயோகம் இலங்கையின் விவசாய உற்பத்தியிலும், சிறுதொழில் நுட்ப வளர்ச்சியிலும் புரட்சிகரமான மாற்றங்கள் நிகழ்வதற்கு வாய்ப்பாக அமைந்தன. நிலத்தைப் பண்படுத்தவும், குளங்கள், கால்வாய்களை அமைக்கவும், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பலதரப்பட்ட இரும்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டமை கிராமக் குளங்களை அடிப்படையாகக் கொண்ட நிலையான குடியிருப்புக்கள், நிரந்தர பொருளாதாரக் கட்டமைப்பு தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது. பயிர்ச் செய்கையில் ஏற்பட்ட மிகை உற்பத்தி பண்டமாற்றுக்கு வழிவகுத்ததுடன், அதனால் ஏற்பட்ட ஓய்வு நேரம் இப்பண்பாட்டு மக்களை சிறுதொழில் நுட்பத் துறையில் ஈடுபடவும், கலைகளைப் படைக்கவும் தூண்டுதலாக அமைந்தன. ஈழத்தில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய மையங்களில் குறிப்பாக அநுராதபுரம், பொம்பரிப்பு, இபன்கடுவா, மாமடுவ, கதிரவெளி, கந்தரோடை, பூநகரி முதலான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பலதரப்பட்ட ஈமச்சின்னங்கள், மட்பாண்டங்கள், கல்மணிகள், இரும்பு, செம்பு, வெண்கலம் முதலான உலோகங்களில் வடிவமைக்கப்பட்ட கலைப்பொருட்கள், சமயச் சின்னங்கள், சுடுமண் உருவங்கள், சங்கு, சிப்பி, மீன் எலும்புகள் என்பவற்றால் செய்யப்பட்ட கலைப் பொருட்கள், பாவனைப் பொருட்கள் என்பவற்றை நோக்கும் போது பெருங்கற்காலச் சமூகத்தில் பலதரப்பட்ட தொழில் வினைஞர்கள் இருந்துள்ளனர் என்பது தெரிகிறது. இவற்றின் மூலம் பெருங்கற்காலச் சமூகத்தில் தொழில் திறன்மிக்க கட்டிடக்கலைஞர்கள், சிற்பக் கலைஞர்கள், மட்பாண்டம் வனைவோர், விவசாயிகள், வணிகர்கள், கடலோடிகள் எனப் பலதரப்பட்ட தொழில்களும், தொழில் பிரிவினரும் இருந்துள்ளனர் என்பது தெரிகிறது. இவை பெருங்கற்காலப் பண்பாட்டுடன் இலங்கையில் சமூக உருவாக்கம் ஏற்பட்டதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையின் சமூக உருவாக்கம் பற்றிய ஆய்வுகளில் அதன் முக்கிய அம்சங்களில் ஒன்றான சமூக அந்தஸ்து மற்றும் சமூக வேறுபாடுகள் என்பன பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றியதென எடுத்துக் காட்டப்படுகிறது. இதற்கு ஆதாரமாக ஈமச் சின்னங்களை அமைப்பதில் பின்பற்றப்பட்ட தொழில் நுட்பம், அவற்றின் வடிவமைப்பு மற்றும் அவற்றில் இடப்பட்ட நிவேதனப் பொருட்கள், விலையுயர்ந்த உலோகப் பொருட்கள், ஈமத்தாழிகள், கல்லறைகள், மட்பாண்டங்களில் இடப்பட்ட குறியீடுகளை ஆதாரமாகக் காட்டுகின்றனர். பேராசிரியர் சுதர்சன் செனிவரட்னா இபன்கடுவாவில்



மாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் குறியீடுகள்



சலவைத் தொழிலாளர் குறியீடுகள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0044.jpg

கண்டுபிடிக்கப்பட்ட கி.மு ஏழாம் நூற்றாண்டுக்குரிய கல்லறையில் நிவேதனப் பொருளாக இடப்பட்ட பொன்னால் அமைந்த பொருட்களையும், உயர்ந்த கல்மணிகளையும், கல்லறையில் இடப்பட்ட குறியீடுகளையும் ஆதாரம் காட்டி அக்கல்லறை குறுநில மன்னனுக்கு அல்லது சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்த ஒருவருக்கு அமைக்கப்பட்ட ஈமச்சின்னமாக இருக்கவேண்டும் எனக் கூறியிருப்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. இதனால் வரலாற்றுத் தொடக்க காலச் சமூகப் பிரிவுகள், பலதரப்பட்ட தொழில்ப் பிரிவுகள் பற்றிப் பாளி இலக்கியங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள் தரும் குறிப்புக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டு உருவாக்கத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியெனக் கூறலாம்.

பெருங்கற்காலப் பண்பாட்டில் தென்தமிழகத்தையும், இலங்கையும் இணைக்கும் முக்கிய பண்பாட்டு அம்சங்களில் மட்பாண்டங்களில் இடப்பட்டுள்ள குறியீடுகளுக்கு முக்கிய பங்குண்டு. தென்னாசியாவில் சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்கும், பிராமி எழுத்தின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட 1200 ஆண்டு காலத்தில் வழக்கிலிருந்த ஒருவகை எழுத்துவடிவமே குறியீடுகளாகும். இவற்றில் எண்பது வீதமான குறியீடுகள் சிந்துவெளியில் புழக்கத்திலிருந்த குறியீடுகளை ஒத்தவையாகும். ஆயினும் சிந்துவெளி மறைவுக்குப் பின்னர் தென்னிந்தியாவில் பயன்பாட்டிலிருந்த குறியீடுகளில் எழுபத்தைந்து விழுக்காடு தமிழகப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் காணப்படுகின்றன. இக்குறியீடுகளில் பல இலங்கை பெருங்கற்கால மட்பாண்டங்களில் பெறப்பட்டிருப்பதுடன் அவை பெருமளவுக்கு தமிழக பெருங்கற்கால மட்பாண்டங்களில் பெறப்பட்ட குறியீடுகளை ஒத்தவையாகவும் காணப்படுகின்றன. இக்குறியீடுகள் பற்றிய ஆய்வு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து தொடங்கப்பட்ட போதும் இக்குறியீடுகள் கருத்துப் பரிமாற்றத்திற்குரிய வரிவடிவங்களாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்ற கருத்தின் அடிப்படையில் அகழ்வாய்வில் கிடைத்த இக்குறியீடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஆயினும் தமிழகத்தில் வல்லம் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கீழ்ப் படையில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகள் மேற்படையில் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் கிடைக்கத் தொடங்கியதன் பின்னர் படிப்படியாக மறைந்து போவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த வேறுபாடுகளை அவதானித்த அறிஞர்கள் பிராமி எழுத்து பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் இக்குறியீடுகள் அக்கால மக்களிடையே ஒருவித ஒலிப்பெறுமானத்தை அல்லது கருத்துப் பெறுமானத்தை கொண்டிருந்ததுடன் அக்குறியீடுகளில் இருந்தே பிராமி எழுத்து உருவாகியிருக்க வேண்டும் என்ற புதிய கருத்தையும் முன்வைத்துள்ளனர் (ராஜன் 2005:31).

இலங்கையிலும், தமிழகத்திலும் பெருங்கற்காலப் பண்பாட்டில் புழக்கத்திலிருந்த குறியீடுகள் அப்பண்பாட்டின் மறைவைத் தொடர்ந்து அவை முற்றாக மறைந்ததெனக் கூறமுடியாது. மாறாகப் பிற்பட்ட காலத்திலும் பயன்படுத்தப்பட்டமைக்கு நாணயங்கள், கல்வெட்டுக்கள், முத்திரைகள் என்பவற்றில் பல சான்றுகள் காணப்படுகின்றன. அதிலும் தமிழகத்தைக் காட்டிலும் இலங்கையில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டமைக்கு பிராமிக் கல்வெட்டுக்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன (Paranavithane 1970:). ஆயினும் காலப் போக்கில் இலங்கையின் பிற சமூகங்களில் இக்குறியீடுகள் படிப்படியாக வழக்கொழிந்து போக அவற்றுள் சில தற்காலத்திலும் இலங்கைத் தமிழர் சமூகத்தில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதினைக் காணலாம் (புஷ்பரட்ணம் 1993: 80-83).

தமிழர்களின் புனிதச் சின்னமாகக் கருதப்படும் மாடுகளுக்கு குறியிடும் மரபு தற்காலத்திலும் காணப்படுகிறது. இதன் நோக்கம் மாடுகளின் உரிமையாளர்களை இலகுவாக அடையாளம் காண்பதாக இருக்கலாம். குறிகள் இடப்படும் போது மாடுகளின் உரிமையாளரது பெயரின் முதல் எழுத்தை ஆங்கிலத்தில் அல்லது தமிழில் குறிசுட்டிருப்பதுடன், மாடுகளின் வயிற்றுப்பகுதியிலும், பின்பக்க கால்ப்பகுதியிலும் சிலவேளைகளில் தலையின் தாடைப்பகுதியிலும் குறிசுடும் மரபு காணப்படுகிறது.

Tamilealam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0045.jpg

இக்குறியீடுகள் மாடுகளின் உரிமையாளரின் சமூக, சமய, பிரதேச, குடும்ப வேறுபாடுகளை அடையாளப்படுத்துவதற்காக இடப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆயினும் இக்குறியீடுகளின் வடிவமைப்புக்களை நோக்கும் போது அவற்றில் பெரும்பாலானவை பெருங்கற்கால மட்பாண்டங்களிலும், பண்டைய நாணயங்கள், கல்வெட்டுக்களிலும் இடம்பெற்றுள்ள குறியீடுகளையே பெரிதும் ஒத்தவையாகக் காணப்படுகின்றன. அதேபோல் கலவைத் தொழிலில் ஈடுபடுவோர் பிறரது ஆடைகளை இலகுவாக அடையாளம் காண்பதற்கு அவற்றின் உரிமையாளர்களது பெயரின் முதல் எழுத்தை ஆங்கிலத்தில் அல்லது தமிழில் ஆடையின் ஓரத்தில் குறித்துவிட்டு அதன் அருகில் வேறுபட்ட வடிவங்களில் அமைந்த குறியீடுகளையும் பயன்படுத்தி வருகின்றனர்.

இக்குறியீடுகளைப் பயன்படுத்துவதன் நோக்கம் சமூக, குடும்ப மற்றும் இடத்தின் வேறுபாட்டை இலகுவாகத் தெரிந்து கொள்வதாகும். இக்குறியீடுகளும் பண்டைய காலத்தில் ஈழத்தில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளை ஒத்தவையாகவே உள்ளன. இந்த ஒற்றுமைகளை ஆதாரம் காட்டி பெருங்கற்காலப் பண்பாட்டில் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டதன் நோக்கமும், அவை வெளிப்படுத்திய கருத்துக்களும், செய்திகளும் எந்தவித மாற்றமும் இன்றி தற்காலத்திலும் தொடர்வதாகக் கூறமுடியாது. கால மாற்றத்திற்கு ஏற்ப அவை பயன்படுத்தப்பட்டதன் நோக்கமும், வெளிப்படுத்தி நிற்கும் கருத்துக்களும் வேறுபட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் தற்காலத்தில் மாடுகளையும், ஆடைகளையும் இலகுவாக அடையாளம் காண்பதற்குரிய ஒலிப்பெறுமானமுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி வரும் மக்கள் அப்பெயர்களுக்கு அருகே பண்டைய காலத்தில் வழக்கிலிருந்த ஒலிப்பெறுமானமற்ற குறியீடுகளையும் ஏன் பயன்படுத்தினார்கள் என்ற



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamil Archive









கட்டுக்கரை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட இந்துமதச் சின்னங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0046.jpg

கேள்வியில்தான் அவற்றின் முக்கியத்துவம் மேலோங்கிக் காணப்படுகிறது. இதற்கு பெருங்கற்காலச் சமூக வழக்கில் முதன்மைபெற்ற சில அம்சங்கள் அப்பண்பாடு மறைந்ததன் பின்னரும் அப்பண்பாட்டு வழிவந்த மக்களிடையே தொடர்ந்து நிலைத்திருப்பது காரணம் எனக் கூறலாம். இதற்கு உதாரணமாக இலங்கைத் தமிழர் மத்தியில் இன்றும் வழக்கிலுள்ள மேலும் சில பண்பாட்டு அம்சங்களை குறிப்பிடலாம்.

பெருங்கற்காலப் பண்பாட்டில் இறந்தவரது உடலைப் பானையில் (தாழி) இட்டு அடக்கம் செய்யும் மரபு காணப்படுகிறது. இதற்கு தென்தமிழகத்திலும், இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்ட தாழியடக்க ஈமச் சின்னங்கள் சிறந்த சான்றுகளாகும். தற்காலத்தில் வடஇலங்கையிலுள்ள இரணைதீவு, நாச்சிக்குடா, நெடுந்தீவு போன்ற இடங்களில் இறந்தவரை அல்லது இறக்கும் வயதை அடைந்த ஒருவரை பானையில் தூங்குகிறார் அல்லது உறியில் தூங்குகிறார் எனக் கூறும் மரபு காணப்படுகிறது. இறந்த ஒருவரது உடலை குடியிருப்பின் ஒதுக்குப்புறத்தில் வைத்துவிட்டு தசைகள் நீங்கியதன் பின்னர் அவற்றின் எலும்புகளைத் தாழியில் இட்டுப்புதைப்பது பெருங்கற்காலப் பண்பாட்டின் இன்னொரு முக்கிய அம்சமாகும். இதற்கு வடமேற்கு இலங்கையில் உள்ள பொம்பரிப்பில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமத் தாழிகள் சிறந்த உதாரணங்களாகும். தற்காலத்தில் கூட இறந்தவரது உடல் எரியூட்டப்பட்ட மூன்றாவது நாளில் எஞ்சியுள்ள இறந்தவரது எலும்புகளையும், சாம்பலையும் பானையில் இட்டு பாதுகாத்து வைத்து அவற்றை அவரது அந்திமக்கிரிகை நாளில் கடலில் கரைக்கும் மரபு காணப்படுகிறது. ஈழத்தில் பயன்பாட்டிலிருந்த புராதன நாணயங்கள் பெரும்பாலும் பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் மற்றும் அதன் சுற்றாடலிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த அம்சம் தமிழர் பண்பாட்டில் சுடுகாட்டில்வைத்து இறந்தவர்களுக்கு நாணயங்களை வாய்க்கரிசியாகப் போடும் மரபை நினைவுபடுத்துகிறது.

தென்னிந்தியாவின் இந்து மதத்தின் தொன்மை பற்றி ஆராய்ந்தவர்கள் அதன் தொடக்கமாக பெருங்கற்காலப் பண்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்களை ஆதாரமாகக் காட்டுகின்றனர். தமிழகத்திலும், இலங்கையிலும் இப்பண்பாட்டின் சமயச் சின்னங்கள் பெரும்பாலும் சுடுமண் உருவங்களாகவும், குறியீடுகளாகவும் வழிபடப்பட்டன. இதற்கு தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், ஈழத்தில் கந்தரோடை, பொம்பரிப்பு, பூநகரி போன்ற பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சுவஸ்திகா, இருதலை, முத்தலைச் சூலங்கள், வேல், சேவல் சின்னங்கள் என்பன ஆதாரங்களாகக்





நாகபடுவான் அகழ்வாய்வு - 2017

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0047.jpg

காட்டப்படுகின்றன. இம்மரபைச் சங்க இலக்கியமும், பழந்தமிழ் இலக்கியங்களும் உறுதிப்படுத்துகின்றன. இம்மரபு பல்லவரின் ஆட்சி தோன்றும்வரை தமிழகத்தில் நிலைத்திருந்தது. சமகாலத்தில் ஈழத்திலும் இம்மரபு செல்வாக்குப் பெற்றிருந்ததற்கு அண்மையில் மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளத்தை அண்டிய சுருவில் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்த சான்றுகளைக் குறிப்பிடலாம். இச்சான்றுகள் ஒன்பது மீற்றர் நீள அகலத்தில் மூன்றாவது கலாசார மண்படையில் ஒரு ஆலயம் அல்லது சமயச் சடங்குகள் நடைபெற்ற செங்கட்டி அத்திவார அழிபாடுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டவையாகும். அவற்றுள் சுடுமண்ணாலான ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம், லிங்கவடிவங்கள், விநாயகர், ஆண், பெண் தெய்வ உருவங்கள், ஐயனார் வழிபாட்டுடன் பெரிதும் தொடர்புடைய யானை, குதிரை, எருது, மயில், பாம்பு என்பன அகத்தியர் கதையை நினைவுபடுத்தும் சிறிய குடங்கள் (வாயிற் பகுதியில் இருந்து வெளிவரும் தெய்வ அல்லது மனித உருவம் கொண்டவை) முதலான சுடுமண் உருவங்களும், சூலம், பிறை, வேல் முதலான குறியீடுகளும் குறிப்பிடத்தக்கன. இந்த ஆய்வுக்குழியின் தொடர்ச்சியாக மேலும் சமயச்சின்னகள் இருப்பதற்கான அறிகுறிகள் அதிகம் காணப்படுகின்றன. தமிழகத்திலோ அல்லது ஈழத்தின் ஏனைய இடங்களிலோ ஒரு குறிப்பிட்ட மிகச் சிறிய வட்டத்திற்குள் அதிக எண்ணிக்கையிலான சமயச் சின்னங்கள் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை.

இச்சமயச் சின்னங்களை தமிழகத் தொல்லியலாளர் பெருங்கற்காலப்பண்பாட்டுக்கு உரியதாக கருதுகின்றனர். ஈழத்து தொல்லிலாளர் இற்றைக்கு 1600 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கூறுகின்றன. காலம் உறுதிப்படுத்த வேண்டியிருப்பினும் பெருங்கற்காலப் பண்பாட்டை ஒட்டி வழிவந்த மக்கள் வேறுபட்ட தெய்வங்களை வழிபடும் அளவிற்கு அவர்களின் செறிவான தொன்மைக் குடியிருப்புகள் கட்டுக்கரையில் இருந்தமைக்கு இவை நம்பகரமான சான்றுகளாகும். இவ்வாதாரங்கள்



நாகபடுவான் அகழ்வாய்வில் கிடைத்த சமயச் சின்னங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0048.jpg

தமிழ், சிங்கள மக்களின் வரலாறு சிறப்பாக இலங்கைத் தமிழர் வரலாறும், பண்பாடும் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து தொடங்குவதைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

மேலும் பூநகரி பிரதேசசபை நிர்வாக எல்லைக்கு உட்பட்ட நாகபடுவான் கிராமத்தில் கடற்கரையை அடுத்துள்ள காட்டுப்பகுதியில் கானாமோட்டைக் குளக்கட்டுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீக இந்து மதம் பரவியிருந்த இடங்களையும், அவற்றின் தொடக்க காலங்களையும் அடையாளப்படுத்திக் கொள்வதில் முக்கியத்துவம் பெறுகிறது. இவ்விடத்தில் 2017 ஆம் ஆண்டின் முற்பகுதியிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து இலங்கைத் தொல்லியற் திணைக்களம் மற்றும் மத்திய கலாசார நிதியத்தின் ஆதரவுடன் விரிவான அகழ்வாய்வினை மேற்கொண்டு வருகின்றனர். இந்த அகழ்வுக்காக மூன்று மீற்றர் நீள அகலத்தில் ஆறு ஆய்வுக்குழிகள் ஏற்படுத்தப்பட்டு அகழ்வாய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் தாழியின் உடைந்த பாகங்கள், பல வடிவங்களில், பல அளவுகளில் அமைந்த மட்பாண்டங்கள், இரும்பு உருக்கப்பட்டதன் எச்சங்கள், அதிக எண்ணிக்கையிலான சுடுமண் சிலைகள், சிற்பங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் மன்னார் மாவட்டத்தில் உள்ள கட்டுக்கரைக் குளத்தைப் போல் இங்கிருக்கும் கானாமோட்டைக் குளத்தை அண்டிப் புராதன குடியிருப்புகள் இருந்ததை உறுதி செய்கின்றன. அவற்றுள் இரண்டு ஆய்வுக் குழிகளில் இருந்து கண்டறியப்பட்டு



பானைக்குள் வைக்கப்பட்டிருந்த நாக உருவம்



தற்கால நாக வழிபாட்டு ஆலயம் எருவன் - கொடிகாமம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0049.jpg

வரும் சமயச் சின்னங்கள் இங்கு குடியிருந்த பூர்வீக மக்களுக்கான மிகப்பெரிய வழிபாட்டு மையம் இருந்திருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதாக உள்ளன.

கலாநிதி இரகுபதி இவ்விடம் நாகபடுவான் என அழைக்கப்படுவதற்கு இங்கு பண்டுதொட்டு நாகத்தைக் குலமரபுச் சின்னமாகக் கொண்ட மக்கள் வாழ்ந்து வருவதே காரணம் எனக் குறிப்பிடுகிறார். பழந்தமிழ் இலக்கியங்களில் படுவம், படுவான் என்பதற்கு ஆழமான குளம், நீர்நிலை, சேற்றுநிலம் எனப் பொருள் கொள்ளப்படும் (Burrow D.E.D:3192). இவ்வாதாரங்கள் 'நாககுளம்' எனப் பொருள் கொள்ளப்படும் பெயரே தற்காலத்திலும் பழைய தமிழ் சொல்லில் 'நாகபடுவான்' என அழைக்கப்பட்டு வருவது அதன் பழமைக்கு சிறந்த சான்றாகும். இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் இந்துக் கடவுளருடன் தொர்புடைய பத்துக்கும் மேற்பட்ட சுடுமண் ஆண், பெண் தெய்வச் சிலைகள், இலிங்க வடிவங்கள், நந்தியின் பாகங்கள், ஆமை, யானை, கருடன் முதலான சிற்பங்கள் கிடைத்திருந்தாலும் நாக உருவங்களே அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. அவை தனிச் சிற்பங்களாகவும், மண் பானைகள், சட்டிகள், தெய்வச் சிலைகளின் பீடங்கள் என்பவற்றுடன் இணைந்தும் கிடைத்துள்ளன. சில தட்டையான சட்டியின் (வட்டிலில்) விளிம்பில் ஐந்து நாகத்தின் தலைகளும், ஐந்து நாகத்தையும் இணைத்த நிலையில் அவற்றின் வால்ப்பகுதி சட்டியின் மையத்தில் சுருண்ட நிலையிலும் காணப்பட்டது. அவற்றுள் ஒரு ஆய்வுக்குழியின் மையப் பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகள் நாக வழிபாட்டின் முக்கியத்துவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் முக்கிய சான்றுகளாக உள்ளன.

இம்மையத்தில் சிறிய வாய்ப்பகுதியை உடைய பெரிய மண்பானை ஒன்று மண் நிரம்பிய நிலையில் காணப்பட்டது. இப்பானையின் அடிப்பாகம் வட்டமான துவாரம் ஏற்படுத்தப்பட்டு அதன் அடிப்பகுதி நிலத்துடன் பொருந்துமாறு புதைக்கப்பட்டிருந்தது. பானையின் மேற்பகுதியில் கவிழ்ந்த நிலையில் நான்கு சிறிய கலசங்களும் வைக்கப்பட்டிருந்தன. இப்பானையைச் சுற்றி சுடுமண்ணாலான சதுர வடிவான மூன்று பீடங்களும், அப்பீடங்களில் அமர்ந்திருந்த தெய்வ உருவத்தின் கால்கள் இப்பானையைத் தொட்ட நிலையிலும் காணப்பட்டன. இந்த மூன்று பீடங்களை அடுத்து இப்பானையை ஒட்டி மண் சட்டியின் விளிம்பில் படமெடுத்த நிலையில் ஐந்து தலை நாகம் காணப்பட்டது. இந்நிலையில் பானையில் நிரம்பியிருந்த மண்ணை அகற்றிப் பார்த்த போது அதற்குள் சுடுமண்ணாலான நாகச் சிற்பம் மண்ணில் நாட்டப்பட்டு அதை மூடி இப்பானை வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. பானையிலிருந்து எடுக்கப்பட்ட நாக வடிவம் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய நாக வடிவங்களைக் காட்டிலும் தத்துவரூபமாக வடிவமைக்கப்பட்டிருந்தமை அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. கலாநிதி இரகுபதி பானையின் விளிம்பைச் சுற்றி கவிழ்ந்த வடிவில் உள்ள சிறிய கலசங்களைப் பாம்புப் புற்றில் வரும் சிறிய துவாரங்களாகவும், பானையின் சிறிய வாய்ப்பகுதி பாம்புப் புற்றிலிருந்து வெளியேறும் வழியை உணர்த்துவதாகவும் குறிப்பிட்டு பிற்காலத்தில் பாம்புப் புற்றை நாக தெய்வத்தின் ஆலயமாகக் கொண்டு படையல் செய்து வழிபடும் மரபு தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்த பூர்வீக வழிபாட்டு மரபையே நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட இவ்வழிபாட்டு மையம் உறுதிப்படுத்துவதாகவும் கூறுகிறார். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பாம்புப் புற்றை நாக வழிபாட்டுக்குரிய ஆலயமாக வழிபடும் மரபு பண்டுதொட்டு இருந்து வருகிறது. வன்னிப் பெருநிலப்பரப்பில் ஊற்றுப்புலம், இரணைமடு, தென்மராச்சியில் எருவன், வலிகாமத்தில் மானிப்பாய், நாவாலி போன்ற இடங்களில் இன்றும் பாம்புப் புற்றுக்குப் படையல் செய்து வழிபடும் மரபு காணப்படுகிறது. சில இடங்களில் கற்களால் அமைக்கப்பட்ட ஆலயத்தின் கருவறையில் பாம்புப் புற்றைப் பிரதான தெய்வமாக வைத்து வழிபடும் மரபு காணப்படுகிறது.

தென்னாசியாவில் நாகத்தை குலமரபுத் தெய்வமாகக் கொண்டு வழிபடும் மக்கள் தமது தனிநபர்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0050.jpg

பெயர்களிலும், தாம் வாழும் இடத்தின் பெயரிலும் 'நாக' என்ற சொல்லை முன்னெட்டுப் பெயராகப் பயன்படுத்தும் மரபு பண்டுதொட்டு இருந்து வருகிறது. இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வடஇலங்கையை நாகதீபம் என்ற பெயரால் தனித்து அடையாளப்படுத்திக் கூறுகின்றன. இது தமிழில் நாகநாடு எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. மகாவம்சம் விஜயன் தலைமையிலான மக்கள் வடஇந்தியாவில் இருந்து வந்து இலங்கையில் குடியேற முன்னர் இங்கு வாழ்ந்த மக்களை நாக இனத்தவர் எனக் கூறுகின்றது. பேராசிரியர் சத்தமங்கல கருணாரத்தின நாகர் இலங்கையில் வாழ்ந்த இனக்குழு என்பதற்கு 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களை ஆதாரமாகக் காட்டுகிறார் *(Karunaratne 1984:56)*. பேராசிரியர் பரணவிதான, கலாநிதி சிரான் தெரணியகல போன்ற அறிஞர்கள் இலங்கை நாகரீகத்திற்கு வித்திட்ட பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த நாக இன மக்கள் எனக் கூறுகின்றனர் *(Deraniyagala 1992: 735)*. பேராசிரியர் சுப்பராயலு நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட நாக வழிபாட்டு மையம் பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக இருக்கலாம் எனக் கூறுகிறார். பேராசிரியர் இந்திரபாலா இலங்கையில் வாழ்ந்த நாக இன மக்களே காலப்போக்கில் தமிழ்மொழி பேசும் மக்களாக மாறினர் எனக் கூறுகிறார் *(Indrapala 2005:172-173)*. இப்புலமையாளர்களின் கூற்றுக்கள் நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட நாக வழிபாட்டுச் சின்னங்கள் அவ்வழிபாட்டு மரபின் தொன்மையை மட்டுமன்றி, தமிழரின் பூர்வீக வரலாற்றையும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகக் கூறலாம்.

எனவே ஈழத்தில் ஏற்பட்ட பெருங்கற்கால மக்களது புலப்பெயர்வும், அவர்களோடு அறிமுகமான பண்பாடும் ஈழ நாகரிக உருவாக்கத்தின் தொடக்கப் புள்ளியாக அமைந்ததெனக் கூறலாம். இப்பண்பாடு தொடர்பான ஆய்வுகள் மேலும் விரிவுபடுத்த வேண்டியவையாக இருப்பினும், இதுவரை கிடைத்த ஆதாரங்கள் ஈழத்தின் பூர்வீக மக்கள், பண்பாடு தொடர்பான பாரம்பரிய கருத்துக்களையும், நம்பிக்கைகளையும் மீள்வாசிப்பிற்கு உட்படுத்த உதவியுள்ளன என்பதில் எந்தவித ஐயமுமில்லை. இதனால் ஈழ வரலாற்றை எழுத முற்படும் ஒருவர் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நிலைத்திருந்த பெருங்கற்காலப் பண்பாட்டைப் புறக்கணித்து விட்டு அதன் வரலாற்றை தொடங்க முடியாதென்பதே யதார்த்த பூர்வமான உண்மையாகும். ■

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0051.jpg

2

இலங்கையில் மொழிவழிப் பண்பாட்டின் தோற்றம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0052.jpg

இயல் இரண்டு

இலங்கையில் மொழிவழிப் பண்பாட்டின் தோற்றம்

அறிமுகம்

கி.மு.3 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னர் இங்கு நிலவிய பெருங்கற்காலப் பண்பாட்டுடன் பொதுவானதொரு பண்பாடு இலங்கை முழுவதிலும் காணப்பட்டது. இப்பண்பாட்டின் பரவல், செறிவு, வளர்ச்சி, அவற்றின் வளங்கள் என்பன இடத்திற்கு இடம் வேறுபட்டு காணப்பட்டமைக்கு அவ்வவ்விடங்களில் காணப்பட்ட பௌதீக வளங்கள் காரணமாக இருப்பினும் அவை பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஏற்பட்ட அபிவிருத்திகளாகும். இப்பண்பாடு அறிமுகமாவதற்கு முன்னர் இலங்கையில் மலைநாடு தொட்டு தாழ்நிலம் வரை ஏறத்தாழ 75க்கு மேற்பட்ட இடங்களில் இடைக்கற்கால அல்லது நுண்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அண்மையில் வடஇலங்கையில் புளியங்குளம், கட்டுக்கரைக் குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளிலும் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்திருக்கக் கூடிய ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றை நோக்கும் போது இப்பண்பாட்டு மக்கள் இலங்கையில் பரவலாக வாழ்ந்திருக்கலாம் எனத் தருத இடமுண்டு.

தமிழீழ ஆவணகம்
Tamileelam Archive

நுண்கற்காலப் பண்பாடு இலங்கை - தென்னிந்தியா முழுவதற்கும் பொதுவான பண்பாடாக இருந்துள்ளது. இனம், மொழிகள், பண்பாட்டுக் கூறுகள், தொழில் நுட்பம் என்பவற்றில் பொதுத்தன்மை காணப்பட்டது (இந்திரபாலா 2006: 87). இப்பண்பாட்டைத் தொடர்ந்து முன்னேற்றகரமான பெருங்கற்காலப் பண்பாடும், மக்களும் இலங்கைக்கு புலம்பெயர்ந்து வந்தபோது அப்பண்பாட்டை முன்பு இங்கு வாழ்ந்த நுண்கற்கால மக்கள் பின்பற்றினர் அல்லது பெருங்கற்காலப் பண்பாடு அப்பண்பாட்டை உள்வாங்கிக் கொண்டது எனக் கூறலாம். இதனால் வரலாற்றுக் காலத்தில் இருந்து மொழியடிப்படையில் தமிழ், சிங்களம் என வேறுபடுத்திப் பார்க்கப்படும் மக்கள் இன அடிப்படையில் ஒரு இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவதே பொருத்தப்பாடாகும் (இந்திரபாலா 2006: 86). அதில் தமிழ் மொழி பேசும் மக்கள் தமிழ்நாட்டிலிருந்து தமிழ் மொழி பேசும் மக்களாக இலங்கைக்கு வருவதற்கு முன்னரே அவர்களின் மூதாதையினர் வரலாற்றிற்கு முற்பட்ட கற்காலத்திலிருந்து இலங்கையில் வாழ்ந்துள்ளனர் (புஷ்பரட்ணம் 2003 : 2-41, இந்திரபாலா 2006: 86). இவற்றை விளங்கிக் கொள்ள பௌத்த மதத்துடன் தோன்றிய புதிய பண்பாட்டையும், மொழிகளையும் நோக்குவது பொருத்தமாகும்.

பௌத்த மதமும் தமிழரும்

பௌத்த மதத்தின் அறிமுகம் பெருங்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் ஏற்பட்ட இன்னொரு புதிய பண்பாட்டின் தொடக்க காலமாகப் பார்க்கப்படுகிறது. இம்மதம் கி.மு.3 ஆம் நூற்றாண்டில் வடஇந்தியாவிலிருந்து மௌரிய மன்னன் அசோகனது

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0053.jpg

ஆட்சியில் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்ட போது இலங்கையில் நிலவிய பெருங்கற்கால பொருளாதாரக் கட்டமைப்பும், சமூகப் பிரிவுகளும் பௌத்த மதம் குறுகிய காலத்தில் பரவுவதற்கும், வளர்வதற்கும் சாதகமாக இருந்தது. இம்மதத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த மக்களில் பெரும்பான்மையோர் பின்பற்றியிருக்கலாம் என்பதை இப்பண்பாட்டு மையங்களை அண்மித்துக் காணப்படும் பௌத்த மதத்துடன் தொடர்புடைய பிராமிக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. பாளி இலக்கியங்கள் குறிப்பிடும் தொடக்ககால பௌத்த ஆலயங்கள் கூடப் பெரும்பாலும் இப்பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களை ஒட்டியதாகவே காணப்படுகின்றன. பௌத்தம் ஒரு புதிய மதத்தின் அறிமுகம் மட்டுமன்றி அது இலங்கையில் எழுத்து, மொழி, இலக்கியம், வரலாற்றைப் பேணும் மரபு, கட்டிடக்கலை, பௌத்த சங்கம் என்பனவும் புதிதாகத் தோற்றம் பெறக்காரணமாகியது. இதனால் இலங்கையில் புதிய பண்பாடு தோற்றம் பெற்றது.

பௌத்த மதத்துடன் இலக்கிய மொழியான பாளியும், கல்வெட்டு மொழியான பிராகிருதமும் அறிமுகப்படுத்தப்பட்டது. பிராகிருத மொழி இலங்கையில் மட்டுமன்றி பௌத்த மதம் பரவிய அனைத்து நாடுகளிலும் கி.பி 4ஆம் நூற்றாண்டு வரை (கி.மு. 3 முதல் கி.பி. 4 வரை) கல்வெட்டு மொழியாக இருந்துள்ளது. சமகாலத்தில் தமிழகத்தில் தமிழ் கல்வெட்டு மொழியாக இருந்தும் அவற்றில் 25 விழுக்காடு பிராகிருதச் சொற்கள் அதில் கலந்து எழுதப்பட்டுள்ளன. கல்வெட்டு மொழியாக இருந்த பிராகிருத மொழியைச் சில அறிஞர்கள் சிங்கள மொழிக்கு முன்னோடியான மொழி (Proto Sinhala) என அழைக்கின்றனர். வேறு சிலர் பழைய சிங்களம் எனக் கூறுகின்றனர். பிராகிருதம் என்பது பழைய மொழி என்ற பொருளைக் கொண்டது. இம்மொழிச் சொற்கள் பலவற்றைத் தமிழ் உட்பட பிற மொழிகள் கடன் பெற்றுள்ளன. தெலுங்கு மொழி பேசும் ஆந்திர மாநிலத்தில் உள்ள நந்திக்கம், புட்டுகாமம் முதலான இடப்பெயர்கள் 11 ஆம் நூற்றாண்டில் முக்கிய அரச தலைநகராக இருந்துள்ளன. தமிழகத்தில் உள்ள அதிரம்பரக்கம், அயிங்காமம், பெரியகையகம் என்பன வரலாற்றுப் பழமை வாய்ந்த இடப்பெயர்களாக உள்ளன. இவற்றில் பொது விகுதியாக வரும் கம, காம என்பது பிராகிருத மொழியில் இருந்து பெறப்பட்டவை. சமகாலத்தில் பாளி இலக்கியங்களிலும், பிராமிக் கல்வெட்டுகளிலும் இவை இடப்பெயர்களின் பொதுவிகுதியாக வருகின்றன. இவற்றில் இருந்தே தமிழில் உள்ள வலிகாமம், வீமன்காமம், மல்லாகம், சுண்ணாகம், கொடிகாமம், பனங்காமம், தம்பலகாமம் முதலான இடப்பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஆயினும் ஒப்பீட்டளவில் இலங்கையின் சிங்கள மொழி உருவாக்கத்தில் பிராகிருத மொழிக்கு முக்கிய பங்குண்டு எனலாம். இதனால் பௌத்த மத்தைப் பின்பற்றிய பெரும்பான்மை மக்கள் காலப்போக்கில் சிங்கள மொழி பேசும் பௌத்தர்களாக மாறியபோது இன்னொரு பிரிவு மக்கள் பிராகிருத மொழிக்கு உட்படாது தமிழ் மொழி பேசிய இனக்குழுவாக மாறினர் *(Indrapala 2005)*.

பௌத்த மதம் இலங்கையில் குறிப்பிட்ட இனம், மொழி அல்லது குறிப்பிட்ட இடத்திற்குரிய மதமாக வளரவில்லை. அது அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து இலங்கையின் பல பிராந்தியங்களுக்கும் பரவியதற்கு தொல்லியல், இலக்கிய ஆதாரங்கள் உண்டு. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் பௌத்த துறவியான சங்கமித்தையால் கொண்டு வரப்பட்ட புனித சின்னமான வெள்ளரசக்கிளையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள ஜம்புக்கோளப் பட்டினத்தில் வந்திறங்கி அங்கிருந்து அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்டதாக மஹாவம்சம் என்ற நூல் கூறுகிறது. தேவநம்பியதீஸன் தனது ஆட்சியில் ஜம்புக்கோளப்பட்டினத்திற்கு அண்மையில் திஸமாரகம விகாரையும், அதற்கு வெளியே பஞ்சினரமா என்ற விகாரையும் (மன்னார்?) கட்டியதாக இந்நூல் மேலும் கூறுகிறது. பிற்காலத்தில் ஜம்புக்கோளபட்டினத்தில் இருந்த விகாரையை கனிட்ட தீஸன் (கி.பி. 167 - 186), வொகரிக தீஸன் (கி.பி. 209- 211), முதலாம் விஜயபாகு போன்ற மன்னர்கள் புதுப்பித்துக் கட்டப்பட்ட செய்திகளும் காணப்படுகின்றன. இவ்வரலாற்றுக் குறிப்புக்களை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0054.jpg

வன்னிப் பிராந்தியத்தின் சில இடங்களிலும், யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கந்தரோடை, சுண்ணாகம், மகியப்பிட்டி, வல்லிபுரம், நவகிரி, நெடுந்தீவு, நயினாதீவு முதலான இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட புத்தர், போதிசத்துவர் சிலைகள், பௌத்த வழிபாட்டு எச்சங்கள் என்பன உறுதி செய்கின்றன.

வரலாற்று அறிஞர்களில் ஒரு பிரிவினர் இலங்கையில் கண்டுபிடிக்கப்படும் புராதன பௌத்த மதம் தொடர்பான சான்றாதாரங்களை ஒரு மதத்தின் பண்பாட்டுச் சின்னங்களாகப் பார்க்காது குறிப்பிட்ட இனம் முன்பொருகாலத்தில் வாழ்ந்ததன் அடையாளமாகவே நோக்குகின்றனர். ஆனால் இலங்கையில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கு வடஇந்தியத் தொடர்பு ஒரு காரணமாக இருப்பினும் அதன் வளர்ச்சிக்கு தமிழக, ஆந்திர செல்வாக்கே முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்துள்ளன. பேராசிரியர் பரணவிதான இலங்கையின் தொடக்க காலப் பௌத்த கலைப்படைப்புக்கள் ஆந்திராவில் இருந்து கொண்டுவரப்பட்டதாகக் கூறுகிறார். பாளி இலக்கியங்கள் தமிழகத்திலிருந்து வந்த புத்தத்த (Buddhatta), புத்தகோஸ (Buddha Hosa) தர்மபால (Dharmapala) முதலான பௌத்த துறவிகள் இலங்கையில் தேரவாத பௌத்தத்திற்கு ஆற்றிய பணிகளை முக்கியப்படுத்திக் கூறுகின்றன. தமிழகத்தில் தோன்றிய பௌத்த காப்பியமான மணிமேகலை என்ற நூல் அறவணவடிகள், மணிமேகலை முதலானோர் இலங்கையில் நாகநாடு, மணிபல்லவம், இரத்தினதீவம் முதலான இடங்களுக்குச் சென்று அங்குள்ள பௌத்த பாதபீடிகையைத் தரிசித்ததாகக் கூறுகிறது. அவற்றுள் நாகநாடு, மணிபல்லவம் ஆகிய இடங்கள் யாழ்ப்பாணத்தையும், இரத்தினதீவம் சிவனொளிபாத மலையையும் குறிப்பதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது *(திருநாவுக்கரசு 1978: 62)*. அவற்றுள் தமிழகத்தில் இருந்து 40 காதம் தொலைவில் உள்ள மணிபல்லவம் நெடுந்தீவு என்ற இடத்தையே குறிப்பதாக அண்மைக்கால ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இலங்கையை சேர்ந்த பௌத்த துறவிகள் தமிழ்நாட்டிற்குச் சென்று அங்குள்ள பௌத்த பள்ளிகளில் கல்வி கற்றதற்கும், தமிழ்நாட்டுப் பௌத்த குருமார் இலங்கையில் உள்ள பௌத்த விகாரைகளில் தங்கியிருந்து பாளி இலக்கியங்களுக்கு விளக்கவுரை எழுதியதற்கும் ஆதாரங்கள் உண்டு. சோழ நாட்டு தமிழ் பிக்குவான மகிந்தனே மகாசேனன் ஆட்சியில் (கி.பி. 3ஆம் நூற்றாண்டில்) இலங்கையில் வந்து மகாயான பௌத்த மதத்தைப் பரப்புவதற்கு காரணமாக இருந்துள்ளான்.

இவ்வரலாற்றுச் சம்பவங்கள் தமிழகத்தைப் போல் சமகாலத்தில் இலங்கையிலும் தமிழர்களில் கணிசமானவர்கள் பௌத்தர்களாக, பௌத்த மதத்தை ஆதரித்தவர்களாக இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. இதைப் பாளி இலக்கியங்களும் சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களும் உறுதிசெய்கின்றன. அநுராதபுர அரசில் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் 22 ஆண்டுகள் (கி.மு. 177-155) ஆட்சி புரிந்த சேனன், குத்திகன் ஆகிய தமிழ் மன்னர்களும், கி.மு. 2ஆம் நூற்றாண்டில் 44 ஆண்டுகள் (கி.மு. 145-101) நீதி தவறாது ஆட்சிபுரிந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனும் தமது பழைய மத நம்பிக்கையை கைவிடாத போதிலும் பௌத்த மதத்திற்கு ஆதரவாக ஆட்சி செய்தார்கள் என மகாவம்சம் கூறுகிறது *(Mahavamsa XXI:34)*. வடஇலங்கையில் பெரியபுளியங்குளம், அநுராதபுரம், அம்பாறையில் குடுவில், திருகோணமலையில் சேருவில் ஆகிய இடங்களில் காணப்படும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழ் வணிகர்கள் பௌத்த துறவிகளுக்கு, பௌத்த சங்கத்திற்கு வழங்கிய குகைகள், கற்படுக்கைகள் என்பன பற்றிக் கூறுகின்றன *(Paranavithana 1970)*. பிராகிருதம் பௌத்த மதத்திற்குரிய மொழியாக இருந்தும் இலங்கையில் உள்ள பல பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழ் மொழிக்கேயுரிய சிறப்பெழுத்துக்களைக் கொண்டிருப்பதுடன், அவற்றில் தனிநபர், உறவுமுறை, பட்டம், சமூகம், சார்ந்த பெயர்கள் தமிழிலும், பிராகிருதமயப்படுத்தப்பட்ட தமிழ்ப் பெயர்களாகவும் எழுதப்பட்டிருப்பது அக்கல்வெட்டுக்களைப் பொறிப்பித்தவர்கள் பௌத்த மதத்தவர்களாக அல்லது பௌத்த மதத்தை ஆதரித்தவர்களாக இருந்துள்ளனர் என்பதைக் காட்டுவதாக உள்ளன. அண்மையில் பேராசிரியர் கிருஸ்ணராஜா கந்தரோடையில் பௌத்த சின்னங்கள் காணப்படும் சுற்றாடலில் மேற்கொண்ட

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0055.jpg

களவாய்வின் போது பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட சாசனங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்துள்ளார். அச்சாசனங்கள் தமிழ் மற்றும் பிராகிருத மொழிகளில் அமைந்திருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது (கிருஸ்ணராஜா 1998).



நெடுந்தீவிலுள்ள பௌத்த தூபி



நெடுந்தீவிலுள்ள பௌத்த தூபியில் உள்ள தமிழ்க் கல்வெட்டுகள்

கி.பி. 5ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் 4 ஆண்டுகள் ஆட்சி புரிந்த பரிந்தனும் (441-444), 16 ஆண்டுகள் ஆட்சி புரிந்த அவன் தம்பி குட்டபரிந்தனும் (கி.பி. 444-460) பௌத்த மதத்திற்கு ஆற்றிய பணிகளை அநுராதபுர, அறகமக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இதனால் குட்டபரிந்தன் பரிதேவன், புத்ததாஸன் முதலான பட்டங்களைப் பெற்றதாக அநுராதபுரக் கல்வெட்டுக் கூறுகிறது. இலங்கையில் சோழர் ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து இலங்கை பௌத்த சங்கத்திற்கும் தமிழக சோழ நாட்டுப் பௌத்த சங்கத்திற்கும் இடையே நெருங்கிய நட்புறவு ஏற்பட்டது. சோழநாட்டுப் பௌத்த துறவியான தீபங்கரர் இலங்கையில் சிங்கள பௌத்த துறவியான ஆனந்த வரைதன என்பவரிடம் கல்வி கற்றவர். இவர் சோழங்க தீபங்கர் என இலங்கையில் அழைக்கப்பட்டார். இவரைப் போல் சோழ நாட்டைச் சேர்ந்த காசியப்பர், புத்தமித்திரர், ஆனந்தர், அநுரத்தர் முதலான தமிழ்ப் பௌத்த துறவிகள் இலங்கையில் பணிபுரிந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன (இந்திரபாலா 2006 : 294). திருகோணமலையில் கண்டுபிடிக்கப்பட்ட 16 தமிழ்க் கல்வெட்டுக்கள் தமிழ்ப் பௌத்தத்துடன் தொடர்புடையவை. இவை சோழர் ஆட்சியில் இலங்கையில் தமிழ்ப் பௌத்தம் நிலவியதற்குச் சான்றுகளாகும். நெடுந்தீவில் காணப்படும் பௌத்த தூபியில் மூன்று கல்வெட்டுக்கள் தமிழிலும், கிரந்தத்திலும் எழுதப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் 14ஆம், 15 ஆம் நூற்றாண்டுகளிலும் இங்கு தமிழ்ப் பௌத்தம் இருந்ததற்குச்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0056.jpg

சான்றுகளாகும். கி.பி. 14-15 ஆம் நூற்றாண்டளவில் எழுந்த நம்பொத்த என்ற சிங்கள இலக்கியம் அநுராதபுரத்திற்கு வடக்கிலமைந்த தமிழ்ப்பட்டினத்தில் (தெமிள பட்டணமத்தில்) பௌத்த யாத்திரிகர்கள் சென்றுவரக்கூடிய இடங்களாக தெல்லிப்பளை, மல்லாகம், நாகர்கோவில், வீமன்காமம், ஊர்காவற்துறை, நயினாதீவு, காரைதீவு, புங்குடுதீவு, தனத்தீவு (நெடுங்கேணி) முதலான இடங்களைக் கூறுகிறது. இவற்றை நோக்கும் போது முன்னொரு காலத்தில் இங்கு வாழ்ந்த தமிழர்களுள் பௌத்த மதத்தைப் பின்பற்றியவர்களும் இருந்துள்ளனர் என்பது தெரிகிறது. இதற்கு நெடுந்தீவிலுள்ள 15-16 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்-கிரந்த மொழிக் கல்வெட்டுக்களுடன் கூடிய பௌத்த தூபிகளை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

தமிழ் மொழியின் தோற்றம்

பாளி இலக்கியங்கள் பண்டைய காலத்தில் தமிழகத்தை அடுத்து தமிழர்கள் வாழ்ந்த இடமாகவும், தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்த இடமாகவும் இலங்கையை குறிப்பிடுகின்றன. ஆயினும் இவ்விலக்கியங்களிலும், இவற்றை அடிப்படை மூலாதாரமாகக் கொண்டு எழுந்த பிற்கால வரலாற்று நூல்களிலும் இவர்களை இலங்கையின் பூர்வீக இடமாகக் கொண்ட தமிழர்களாகப் பார்க்கப்படவில்லை. ஆயினும் கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து தோன்றிய கல்வெட்டுக்கள், எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள், நாணயங்கள் என்பன இலங்கையின் பண்டைய கால எழுத்து, மொழி, இனக்குழுக்கள் சார்ந்த வரலாற்று ஆய்வுகளில் நம்பத்தகுந்த சான்றுகளாகக் காணப்படுகின்றன. அவற்றுள் கி.மு.3ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 4ஆம் நூற்றாண்டுவரை ஏறத்தாழ 700 ஆண்டுகள் புழக்கத்தில் இருந்த பிராமிக் கல்வெட்டுக்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இதுவரை ஏறத்தாழ 1500க்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு எண்ணிக்கையான கல்வெட்டுக்கள் இலங்கையை தவிர தென்னாசியாவின் வேறு எந்த இடத்திலும் கண்டுபிடிக்கப்படவில்லை. இவை பௌத்த துறவிகளுக்கு, பௌத்த சங்கத்திற்கு பலதரப்பட்ட மக்கள் நன்கொடையாக வழங்கிய குகை, கற்படுக்கை, குளம், கால்வாய், தானியங்கள், நாணயங்கள் என்பன பற்றிக் கூறுகின்றன. இக்கல்வெட்டுக்களை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சத்தமங்கல கருணாரத்தின, கலாநிதி ஆரிய அபயசிங்க, பெர்ணாந்தோ போன்ற அறிஞர்கள் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட தமிழ்மொழிக்கான சிறப்பான எழுத்துக்களையும், எழுத்துவடிவங்கள், கல்வெட்டு அமைப்பு என்பவற்றைத் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களுடன் ஒப்பிட்டு பௌத்த மதத்துடன்

தற்கால எழுத்து	தமிழகப் பிராமி	இலங்கைப் பிராமி	அசோகப் பிராமி
இ ஈ			
ன			
ற			
ள			
ழ			

தமிழ்மொழிக்குரிய சிறப்பான பிராமி எழுத்துகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0057.jpg

வடஇந்தியப் பிராமி (அசோக பிராமி) எழுத்து இலங்கையில் பரவ முன்னர் தென்னிந்தியாவிலிருந்து பரவிய திராவிடி எழுத்து (தமிழ்ப் பிராமி) இங்கு புழக்கத்திலிருந்ததாகக் குறிப்பிட்டனர். ஆனால் பேராசிரியர் பரணவிதான இலங்கை மக்களும், பண்பாடும் வடஇந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்ததன் இன்னொரு தொடர்ச்சியான நிகழ்ச்சியே பிராமிக் கல்வெட்டுக்கள் எனவும், இக்கல்வெட்டு மொழியான பிராகிருதம் பழைய சிங்களம் எனவும், ஆகவே இலங்கையில் எங்கெல்லாம் பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் முன்பொரு காலத்தில் சிங்கள மக்களே வாழ்ந்தனர் என்பதற்கு இவை மேலும் முக்கிய ஆதாரம் எனக் குறிப்பிட்டுள்ளார் *(Paranavitana, S., 1970).*

இலங்கையில் பௌத்த மதம் வடஇந்தியாவிலிருந்து பரவிய போது அம்மதம் தென்னாசியாவின் ஏனைய பல வட்டாரங்களுக்கும் பரவியதற்கு ஆதாரங்கள் உண்டு . இதனால் அவ்வட்டாரங்களில் சுதேச மொழிகள் வழக்கிலிருந்தும் கி.பி. 4ஆம் நூற்றாண்டு வரை பிராகிருதமே கல்வெட்டு மொழியாக இருந்துள்ளது. இதற்கு விதிவிலக்காக தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் 25 விழுக்காடு பிராகிருதச் சொற்களாக இருந்தாலும் கல்வெட்டு மொழியாகத் தமிழ் இருந்தது. அத்துடன் அக்கல்வெட்டுக்களில் தமிழ் மொழிக்கே தனித்துவமான ற, ன, ள, ழ போன்ற எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டதுடன், ஏனைய பிராமி எழுத்துக்கள் பலவற்றின் வடிவங்களும் தோற்ற அமைப்பில் வடபிராமி எழுத்து வடிவங்களில் இருந்து வேறுபட்டவையாக இருந்தன. இந்த வேறுபாட்டால் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழி அல்லது தமிழ்ப் பிராமி என அழைக்கப்படும் போது தென்னாசியாவின் ஏனைய வட்டார எழுத்துக்கள் பெரும்பாலும் அசோகப் பிராமி அல்லது வடபிராமி என்ற பெயரால் அழைக்கப்படுகிறது *(Mahadevan, I, 2004).* இலங்கையை பொறுத்தவரை இங்கு பயன்பாட்டிலிருந்த பிராமிக் கல்வெட்டுக்களின் மொழி பிராகிருதமாக இருப்பினும், அம்மொழியில் பல தமிழ்ப் பெயர்ச் சொற்கள் கலந்து காணப்படுவதுடன் தமிழ் மொழிக்கே தனித்துவமான சிறப்பெழுத்துக்களும் (ற, ன, ள, ழ) பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது *(புஷ்பரட்ணம் 2004).* அத்துடன் ஏனைய பிராமி எழுத்துக்கள் பலவற்றின் வடிவங்களும் (க, இ, ஈ, ம. ப, வ, ந, போன்ற எழுத்துக்கள்) வடபிராமி எழுத்துக்களைவிட தமிழ்ப் பிராமி எழுத்து வடிவங்களைப் பெரிதும் ஒத்தவையாகக் காணப்படுகின்றன. மேலும் பௌத்த, சமணக் குகைகளின் அமைப்பும், ஓரிரு வரிகளில் பொறிக்கப்பட்ட சாசனங்களும், கூட்டெழுத்துக்கள் பயன்படுத்தாத தன்மை என்பனவும் வடஇந்தியக் கல்வெட்டு மரபில் இருந்து இலங்கையையும் தமிழகத்தையும் ஒற்றுமைப்படுத்தும் முக்கிய அம்சங்களாகக் காணப்படுகின்றன. மேலும் வடஇந்தியாவில் பிராமிச் சாசனங்களை எழுதுவதற்கு 40 எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்ட போது, இலங்கையில் அது 37 எழுத்துக்களாகவும், தமிழகத்தில் 26 எழுத்துக்களாகவும் இருந்துள்ளன. இலங்கையில் கிடைத்த அனைத்துப் பிராமிக் கல்வெட்டுக்களும் பௌத்த மதத்திற்குரிய பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறு எழுதுவதற்கு தேவையான வடபிராமி எழுத்துக்கள் இலங்கையில் புழக்கத்தில் இருந்துள்ளன. அப்படியிருந்தும் பல கல்வெட்டுக்களில் வடபிராமி எழுத்துக்குப் பதிலாக தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன், ஏனைய பிராமி எழுத்துக்கள் பலவற்றின் வடிவ அமைப்புக்களும் தமிழகப் பிராமி எழுத்துக்கள் என மயங்கும் அளவிற்கு நெருங்கிய ஒற்றுமை கொண்டு காணப்படுகின்றன *(புஷ்பரட்ணம் 2012).*

இலங்கையில் முதலில் பயன்படுத்தப்பட்ட பிராமி எழுத்து வடஇந்தியாவிலிருந்து பௌத்த மதத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தால் அவ்வெழுத்தை முதலில் எழுதப் பழகிக் கொண்ட இலங்கை மக்கள் அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்க வாய்ப்பில்லை. காலப்போக்கில் மக்களின் கலைரசனைக்கு ஏற்ப அல்லது அவர்களின் தேவைக்கு ஏற்ப சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் அதற்குப் பல ஆண்டுகள் எடுத்திருக்கும். ஆனால் இலங்கையில் இதுவரை காலத்தால் முந்தியவை எனக் கணிக்கப்பட்ட அநுராதபுரம், வெசகிரி, மிகிந்தலை ஆகிய இடங்களில் உள்ள பிராமிக்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0058.jpg

கல்வெட்டுக்கள் பலவற்றில் வடபிராமி எழுத்துடன் தமிழ் மொழிக்குரிய சிறப்பெழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன், ஏனைய பிராமி எழுத்துக்கள் பலவற்றின் வடிவங்களும் தமிழகப் பிராமி எழுத்துக்களை ஒத்தவையாகவே உள்ளன *(Karunaratne 1984)*. இவற்றை நோக்கும் போது பௌத்த மதத்துடன் வடபிராமி எழுத்து அறிமுகமாவதற்கு முன்னரே தமிழகத்தில் இருந்து பரவிய தமிழ்ப் பிராமி எழுத்து பயன்பாட்டிலிருந்தது எனக் கூறமுடியும்.

தமிழில் உள்ள உறவுப் பெயர்கள்



மருமான்



மருமகன்



மறுமான்



பருமகன்



பருமகள்

தென்னாசியாவில் சுதேச மொழிகள் அந்நாட்டு மக்களின் பேச்சு மொழியாக வழக்கில் இருந்த போதும் பௌத்தம் பரவியதன் பின்னர் சுதேச மொழிக்குப் பதிலாகப் பிராகிருதமே கல்வெட்டு மொழியாக பல நூற்றாண்டுகள் வழக்கில் இருந்துள்ளதைக் காணமுடிகிறது. தமிழகத்தில் தமிழ் கல்வெட்டு மொழியாக இருந்தும் அக்கல்வெட்டுக்களில் 25 விழுக்காடு சொற்கள் பிராகிருதமாக இருந்துள்ளது. இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அனைத்துப் பிராமிக் கல்வெட்டுக்களும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருந்தாலும் அவற்றில் வரும் 50 விழுக்காடு பெயர்ச் சொற்கள் தமிழாகவும், பிராகிருத மயப்படுத்தப்பட்ட தமிழ்ப் பெயர்களாகவும் காணப்படுகின்றன. இதற்கு ஆதாரமாகக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள தனிநபர் (பூதன், மல்லன்), உறவுமுறை (மகன், மகள், மருமகன் மறுமகன், சகலன்), சமூகம் (பரதவர்), குலம் (நாக குலம்), பட்டம் (வேள், ஆய்), இடப்பெயர் (குளம், ஆவி, வாவி மலை, நாடு) சார்ந்த பெயர்களைக் குறிப்பிடலாம் *(புஷ்பரட்ணம் 2004)*. மேலும் இக் கல்வெட்டுக்களில் காணக்கூடிய இன்னொரு சிறப்பு வடஇந்தியாவில் பரவலாகப் பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ள ஆஸிரிய, நாஹ முதலான பெயர்கள் இலங்கை பிராமிக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் தமிழகத்தைப் போல் ஆசிரிய, நாக, ணாக என தமிழ்மயப்படுத்தி

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0059.jpg

எழுதப்பட்டிருப்பதாகும். மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் வடஇந்தியாவிலிருந்து வடபிராமி எழுத்தும், பிராகிருத மொழியும் இலங்கை அறிமுகமாவதற்கு முன்னரே தமிழகத்தைப் போல் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் இங்கும் தமிழ்ப் பிராமி எழுத்தும், தமிழ் மொழியின் பயன்பாடும் தோன்றியிருந்தன என்பதைக் காட்டுகிறது.



திஸமாறஹமவில் கண்டுபிடிக்கப்பட்ட
2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட
தமிழ்ச் சாசனம்

வடபிராமி எழுத்து இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்னர் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் பொதுவான எழுத்து மரபு இருந்திருக்கலாம் என்பதற்கு சமீப காலங்களில் இலங்கையிலும் தமிழகத்திலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது பெருங்கற்காலப் பண்பாட்டுடன் மங்கிய நிலையில் கிடைத்த பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் முக்கிய சான்றாக அமைகின்றன. பொதுவாக வடஇந்தியாவில் முதலில் பிராமி எழுத்து தோன்றி அங்கிருந்தே பௌத்த மதத்துடன் ஏனைய இடங்களுக்குப் பரவியது எனக் கூறப்படுகிறது. ஆயினும் வடஇந்தியாவில் வழக்கத்தில் இருக்காத பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் தமிழகத்திலும், இலங்கையில் இருந்தமைக்கான ஆதாரங்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன. இது பிராமி எழுத்து மரபில் இரு நாடுகளுக்கும் இடையே இருந்த ஒற்றுமையை எடுத்துக்காட்டுகிறது எனலாம். அண்மையில் தமிழகத்தில் ஆதிச்சநல்லூரிலும், இலங்கையிலும் அநுராதபுரத்திலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள் பல பெருங்கற்காலப் பண்பாட்டுடன் மங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மட்பாண்டங்கள் நவீன காலக்கணிப்புக்களுக்கு உட்படுத்திய போது அவற்றின் காலம் இரு நாடுகளுக்கும் பௌத்தம் பரவுவதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது (Conigham, Robin., 200k). அவற்றுள் அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து மட்பாண்டச் சாசனங்களும் இதுவரை முழுமையாகப் பிரசுரிக்கப்படாவிட்டாலும், பிரசுரிக்கப்பட்ட மூன்று சாசனங்களில் உள்ள பிராமி எழுத்தின் வடிவங்கள் தமிழ்ப் பிராமி எழுத்து வடிவங்களைப் பெரிதும் ஒத்தவையாக உள்ளன. வடஇலங்கையில் இரணைமடு, பூநகரி, கந்தரோடை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளின் போது வடபிராமியில் பயன்படுத்தப்படாத தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்கள் சில கண்டறியப்பட்டுள்ளன. மிகச் சமீபத்தில் இலங்கைத் தொல்லியற் திணைக்களமும், ஜேர்மன் ஆய்வுக் குழுவினரும் இணைந்து தென்இலங்கையில் திசமாறகம என்ற இடத்தில் அடையாளம் காணப்பட்ட பெருங்கற்கால மையம் ஒன்றில் அகழ்வாய்வை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0060.jpg

மேற்கொண்டனர். இந்த அகழ்வின் போது பெருங்கற்காலச் சின்னங்களுடன் மங்கிய நிலையில் மட்பாண்டச் சாசனம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சாசனம் மிகப் பெரிய கறுப்பு - சிவப்பு நிற மட்குடம் ஒன்றின் விளிம்பை ஒட்டியதாக எழுதப்பட்டுள்ளது. இச்சாசனம் தமிழ் மொழியில் எழுதப்பட்டிருப்பதுடன் தமிழ் மொழிக்கே சிறப்பான "ற" என்ற எழுத்தும் பயன்படுத்தப்பட்டிருப்பது இதன் தனிச் சிறப்பம்சமாகும். ஐந்து எழுத்துக்களைக் கொண்ட கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்சாசனத்தின் இரு சொற்களுக்கிடையே இரண்டு குறியீடுகள் காணப்படுகின்றன. இதில் இடப்பக்கத்தில் இருந்து வலப்பக்கமாக உள்ள மூன்று எழுத்துக்களையும் "திரிளி" எனவும், வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாக உள்ள இரு எழுத்துக்களையும் "முறி" எனவும் வாசித்திருக்கும் தென்னிந்தியாவின் முதன்மைச் சாசனவியலாளர் ஐராவதம் மகாதேவன் "முறி" என்ற சொல் வணிகர்களுக்கிடையே நடந்த ஒப்பந்தத்தைக் குறிப்பதாகக் கூறுகிறார் *(Mahadevan 2010)*. இவ்வாசகத்தைப் பொருத்தம் எனக் கூறும் கலாநிதி இரகுபதி சாசனத்தில் வரும் "முறி" என்ற சொல் ஒப்பந்தத்தைக் குறிக்காது "திரளி" என்ற சொல்லைப்போல் பங்கு, அளவீடு, பகுதி என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகிறார். மேலும் அவர் இச்சாசனம் பானை முடியின் விளிம்பில் எழுதப்பட்டிருப்பதால் அப்பாத்திரம் உணவை, தானியத்தை அல்லது வேறு பொருட்களை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறார். ஆனால் இச்சாசனத்தை வலமிருந்து இடமாகவும், இடமிருந்து வலமாகவும் வாசிப்பதற்குப் பதிலாக ஐந்து எழுத்துக்களையும் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாக வாசித்தால் இச்சாசனத்தை "புழைதி முறி" என வாசித்து இதற்குப் புழைதி அல்லது புழைத்தியின் அளவு பாத்திரம் எனப் பொருள் கொள்வது பொருத்தமாகத் தெரிகிறது *(Pushparatnam 2014:541-545)*. இதன் சமகாலத்திற்குரிய இலங்கையில் உள்ள நான்கு பிராமிக் கல்வெட்டுக்களில் புலைய என்ற பெயர் காணப்படுகிறது. இதன் பெண்பாற் சொல்லாக மட்பாண்டச் சாசனத்தில் வரும் புழைய அல்லது புழைத்தி என்ற பெயர் இருக்கலாம். எவ்வாறாயினும் இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னர் தென் இலங்கையில் தமிழ் எழுத்து, தமிழ் மொழியின் பயன்பாடு இருந்ததற்கு இச்சாசனம் முக்கிய ஆதாரமாகக் காணப்படுகிறது என்பதில் ஐயமில்லை.

Tamileelam Archive



தென்னிலங்கையில் கிடைத்த தமிழ் நாணயங்கள்

1999 ஆம் ஆண்டு தென் இலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்நாணயங்கள் சிலவற்றில் உதிரன், கபதிகஜபன், மஹாசாத்தன், தஸபிடன், திஸபுரசடணாகராசன் முதலான தமிழ்ப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்நாணயங்களில் தமிழ்மொழிக்கே சிறப்பாகவுள்ள றன்னகர மெய்யெழுத்துக்கள் காணப்படுகின்றன. அத்துடன் இரண்டு பெயர்களிலே உயர்திணை ஆண்பால் ஒருமையினைக் குறிக்கும் "அன்" என்னும் விகுதி தனிச் சொல்லாக எழுதப்பட்டுள்ளமை மிக முக்கிய அம்சமாகக் காணப்படுகிறது *(Pushparatnam 2002: 5-6)*. இந்நாணயங்களைத் தமிழ்ச் சிற்றரசர்கள் தென்இலங்கையில் வெளியிட்டிருப்பதன் மூலம் அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட மக்களில் பெரும்பான்மையோர் தமிழராக இருந்திருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு.

இப்புதிய கண்டுபிடிப்புக்கள் எல்லாம் பிராமி எழுத்து தோன்றிய சூழல், தோன்றிய காலம், தோன்றிய இடம், பரவிய வழிமுறைகள் என்பவற்றையிட்டுப் புதிய கருத்துச் சூழலை உருவாக்கியுள்ளன. இந்நிலையில் இலங்கையில் தமிழ் மொழி, தமிழ் வரிவடிவம் தோன்றிய வரலாற்றுப் பின்னணியை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0061.jpg

தமிழகத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் தோன்றியதாகப் பார்ப்பதே பொருத்தமாகும். ஏனெனில் பெருங்கற்காலப் பண்பாட்டின் வழியாக இலங்கையில் வரலாற்றுக் காலம் தோன்றியதைச் சுட்டிக்காட்டும் பிராமிச் சாசனங்கள் அக்காலத்தில் தமிழ் மொழி, தமிழ் எழுத்து என்பன வழக்கிலிருந்த தரவுகளை மட்டும் தரவில்லை. அவர்கள் மொழியால் தனியொரு இனக்குழுவாக, சமூகமாக, ஆளும் வர்க்கமாக வாழ்ந்தனர் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. ஏனெனில் அநுராதபுரம், வவுனியா, அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களில் கிடைத்த கி.மு 3-2 ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழ் வணிகர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டது பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் அநுராதபுரத்திலுள்ள கல்வெட்டு தமிழ் வணிகர்கள் ஒன்றுகூடி வணிக நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை நடாத்துவதற்காக அமைக்கப்பட்ட மண்டபம் பற்றியும் கூறுகிறது. இக்கல்வெட்டுக்கள் தனிநபர் பெயருக்கு முன்னால் அவர்களைத் தமிழ் (தமிட) வணிகர் என விழிப்பதன் மூலம் மொழியால் அவர்கள் தனியொரு இனக்குழுவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை தெரிகிறது. இலங்கையில் கிடைத்த 21 பிராமிக் கல்வெட்டுக்களில் சங்க காலத்தை ஒத்த "வேள்" என்ற பட்டப் பெயர் காணப்படுகிறது *(Pushparatnam P, 1999)*. பேராசிரியர் ரோமிலாதபார் வடமொழியில் "ராஜா" என்ற பட்டப் பெயர் என்ன கருத்தைக் கொண்டுள்ளதோ அதேகருத்தை தமிழில் "வேள்" என்ற பட்டமும் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார் *(Thapar 1984:83)*. இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வவுனியாவில் பெரியபுளியங்குளம் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டில் வரும் "வேள்" என்ற பெயரையும், அதில் வரும் தமிழ்ப் பிராமி எழுத்தையும் சுட்டிக்காட்டிய பாக்கர் என்ற அறிஞர் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஈழத்தில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கு இக்கல்வெட்டை ஒரு ஆதாரமாகக் காட்டியுள்ளார் *(Parkar 1909)*. ஒரு மொழி தோன்றிப் பல ஆண்டுகளுக்குப் பின்னரே அதற்குரிய எழுத்துக்கள் தோன்றுகின்றது. சில மொழிகளுக்கு எழுத்துக்கள் தோன்றாமலும் உள்ளன. இலங்கையில் கி.மு. 3ஆம் நூற்றாண்டளவில் தமிழுக்குரிய எழுத்துக்கள் தோன்றியதற்கு நம்பகரமான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதனால் தமிழ் எழுத்து தோன்ற முன்னரே அதற்குரிய மொழி பயன்பாட்டிலிருந்துள்ளமை தெரிகிறது. இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் இந்திரபாலா இலங்கையில் தமிழ் மொழியின் தோற்றம் ஏறத்தாழ கி.மு. 5ஆம் நூற்றாண்டெனக் (இற்றைக்கு 2500 ஆம் ஆண்டளவில்) கூறியிருப்பது பொருத்தமாகத் தெரிகிறது.

நகரமயமாக்கமும் தமிழர்களும்



பூநகரியில் கிடைக்கப்பெற்ற சங்ககால நாணயங்கள்

ஒரு நாட்டில் அல்லது ஒரு வட்டாரத்தில் நாகரிகம் உருவாக்கம் ஏற்பட்டதை அடையாளப்படுத்தும் முக்கிய பண்பாட்டு அம்சங்களில் ஒன்று நகரமயமாக்கமாகும் (Urbanisation). தென்தமிழகத்திலும், இலங்கையில் இது பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றியதாக தொல்லியலாளர்கள் அடையாளப் படுத்தியுள்ளனர். இப்பண்பாட்டுடன் தோன்றிய குளநீர்ப்பாசன விவசாயம், சிறுதொழில் நுட்பவளர்ச்சி காரணமாக மிகை உற்பத்தி ஏற்பட்டது. இதனால் பண்டமாற்று, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் என்பன இப்பண்பாட்டுடன் தோற்றம் பெற்றது. இதனால் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய எல்லா இடங்களிலும் நகரமயமாக்கம் ஏற்பட்டதெனக் கூறமுடியாது. அவை கடல் தரை போக்குவரத்திற்குச் சாதகமான இடங்கள், இயற்கை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0062.jpg

கலிமங்கள், பல நாட்டவரையும் கவரக்கூடிய வணிகப் பொருட்கள் என்பன கிடைக்கக் கூடிய இடங்களை மையப்படுத்தியே தோன்றியுள்ளன. இவ்விடங்களில் பல்வேறு பண்பாடுகளைக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்களும், பிற மக்களும் வணிகத்தின் பொருட்டு ஒன்று கூடியதால் அவ்விடங்களில் மக்கள் குடியிருப்பு அதிகரித்து அவை நகரங்களாகப் படிப்படியாக மாற்றமடைந்தன. இலங்கையில் அநுராதபுரம், மகாகமை, கந்தரோடை. மாந்தை முதலான இடங்கள் முதலில் நகரமயமாக்கத்திற்கு உட்பட்ட மையங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. போல் பீரிஸ் அநுராதபுரத்தை அடுத்து இலங்கையில் தோன்றிய இரண்டாவது பெரிய நகரமாகக் கந்தரோடையைக் குறிப்பிடுகிறார்.



வட இந்திய நாணயங்கள் (கி.மு. 4 ஆம் நூற்றாண்டு)



சங்ககால நாணயங்கள் (கி.மு. 3 - கி.பி. 2 ஆம் நூற்றாண்டுகள்)



உரோம நாணயங்கள் (கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டுகள்)



சீன நாணயங்கள் (கி. பி. 9-12 ஆம் நூற்றாண்டுகள்)

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0063.jpg

இவ்விடங்களில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய காலத்திலேயே தமிழகத்தில் இருந்து சிலவகை மட்பாண்டங்கள், விலையுயந்த கற்கள், கல் மணிகள் இறக்குமதி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இத்தொல்லியல் மையங்களில் பெருங்கற்கால மட்பாண்டங்களுடன் மங்கிய நிலையில் காலத்தால் முந்திய வடஇந்திய அச்சுக் குத்தப்பட்ட நாணயங்களும், தமிழகத்தில் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து புழக்கத்திலிருந்த சேர, சோழ, பாண்டிய நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ இவற்றின் சமகாலத்தில் இலங்கையில் வெளியிடப்பட்ட முத்திரை மற்றும் திச நாணயங்களும், சற்றுப் பிற்பட்ட காலத்தில் கிரேக்க, உரோம நாடுகள் இலங்கையுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளை எடுத்துக்காட்டும் மட்பாண்டங்கள், மதுச்சாடிகள், நாணயங்கள் என்பனவும் கிடைத்துள்ளன. மேற்குறிப்பிட்ட இடங்களைத் தவிர அண்மைக் கால ஆய்வுகளில் இலங்கையில் குறிப்பாக வடஇலங்கையில் மேலும் சில இடங்களில் கி.மு. 3ஆம் நூற்றாண்டுகளில் இருந்து நகரமயமாக்கம் ஏற்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் பூநகரி, யாழ்ப்பாணக் கோட்டை அமைந்துள்ள பிராந்தியங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.



யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்வுகள்



உரோம மட்கலன்கள்
- யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்வுகள்

பொதுவாக யாழ்ப்பாண நகரத்தின் தோற்ற கால வரலாறு 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் கட்டிய கோட்டையுடன் தோன்றியதென்ற கருத்தே காணப்படுகிறது. ஆனால் 2010 ஆம் ஆண்டிலிருந்து கோட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் மேலாய்வுகளும், தொல்லியல் அகழ்வாய்வுகளும் 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இவ்விடம் வணிக மையமாக இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கோட்டையின் உட்பகுதியில் இரு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் 16 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திற்குரிய சீன, அரேபிய, சோழ மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள், பீங்கான்கள் மற்றும் சீன, தமிழக நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மூன்றாவது இடத்தில் இயற்கை மண்வரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது அதன் இறுதி கலாசார மண் அடுக்கில் புராதன குடியிருப்புக்குரிய மட்பாண்டங்களுடன் மங்கிய நிலையில் உரோம நாட்டு அம்போரா மதுச் சாடிகளின் உடைந்த பாகங்களும், மட்கலன்களும் அதிக அளவில் கிடைக்கப்பட்டுள்ளன. 1924இல் இக்கோட்டை அமைந்த பகுதியில் 20 உரோமர் காலத் தங்க நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0064.jpg

இவ்வாதாரங்களை வைத்து நோக்கும் போது யாழ்ப்பாண நகரத்தின் தோற்றத்தை உரோமர் காலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு.



சீன மட்பாண்டங்கள்
– யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்வுகள்



சீன நாணயங்கள்
– யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்வுகள்

வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து (கி.மு.3ஆம் நூற்றாண்டு) இலங்கைத் தமிழர் கடல்சார் வாணிபத்துடன் தொடர்புடையவர்களாக இருந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த முதல் தமிழ் மன்னர்களான சேனன் குத்திகன் ஆகியோர் மேலைநாடுகளில் இருந்து இலங்கையில் குதிரைகளைக் கொண்டு வந்த கப்பல் தலைவனின் பிள்ளைகள் என மகாவம்சம் கூறுகிறது. ஏறத்தாழ இதன் சமகாலத்திற்குரிய இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு பிராமிக்கல்வெட்டுக்கள் தமிழர்கள் ஒரு குழுவாக வாணிபத்தில் ஈடுபட்டது பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் அநுராதபுரத்தில் உள்ள கல்வெட்டு தமிழ் வணிகர்கள் வணிகம் சம்பந்தமாக அமைக்கப்பட்ட மண்டபம் பற்றிக் கூறுகிறது. அம்மண்டபத்தில் உள்ள இருக்கைகளில் யார் யார் அமர வேண்டும் என்பதற்காக இருக்கைகளில் அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதில் கப்பல் தலைவன் உயர்வாக மதிக்கப்பட்டான் என்பதை அடையாளப்படுத்தும் வகையில் அவனது இருக்கை உயரமாக அமைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ இதன் சமகாலத்திற்குரிய 21 கல்வெட்டுக்கள் பரதவ சமூகம் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் அதிக எண்ணிக்கையிலான கல்வெட்டுக்கள் வவுனியா மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுக்களில் "பரத" என்ற பெயருக்கு உரியவர்கள் பெரும்பாலும் அரச தூதுவர்களாகவும், வணிகர்களாகவும் பணிபுரிந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளன *(Paravithana 1970, புஷ்பரட்ணம் 2002)*. இப்பரத என்ற பெயரை சமகால தமிழகப் பரதவ சமூகத்துடன் ஒப்பிட்டு ஆய்வு செய்த மலோனி, சுதர்சன் செனிவரட்ண போன்ற அறிஞர்கள் இரு நாடுகளிலும் இச்சமூகத்தினர் கடல்சார் நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தமைக்கான சான்றாதாரங்களை எடுத்துக்காட்டியுள்ளனர். இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 2-1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 22 பிராமிக்கல்வெட்டுக்களில் "வேள்" என்ற தமிழுக்குரிய பட்டப் பெயர் காணப்படுகிறது. இப்பெயருக்குரியவர்களில் கணிசமானவர்கள் கடல்சார் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்கள் என்பதை அவர்கள் வகித்த குதிரை வணிகன், அரச அதிகாரி, வர்த்தகர்களிடம் வரி அறவிடுவோர் முதலான பதவிகள் உறுதிசெய்கின்றன *(புஷ்பரட்ணம் 2002)*. மேற்கூறப்பட்ட ஆதாரங்களை வைத்து நோக்கும் போது இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் நகரமயமாக்கம் ஏற்பட்டதில் இங்கிருந்த தமிழர்களுக்கு முக்கிய பங்குவகித்தனர் எனக் கூறமுடியும்.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0065.jpg

தமிழ் அரச உருவாக்கம்



ஆனைக்கோட்டை முத்திரை

இலங்கை வரலாறு பற்றிப் பாளி இலக்கியங்களை மையப்படுத்தி எழுந்த பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளும், ஆய்வுகளும் சமகால தொல்லியல், மானிடவியல், சமூகவியல், வரலாற்று மொழியியல் ஆய்வுகளால் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. அவை இலங்கைத் தமிழரின் தொன்மையான வரலாற்றையும், வரலாற்றுத் தொடர்ச்சியையும் ஆராயவும், எழுதவும் நம்பிக்கை தருவதாக உள்ளன. இதற்கு இலங்கைத் தமிழரின் வரலாறு இங்கு மனித வரலாறும், நாகரிக வரலாறும் தொடங்கிய காலத்திலிருந்து பார்க்கப்படுவது அவசியமாகும். இதன் மூலம் இலங்கைத் தமிழரிடையே தோன்றிய அரச மரபு, தமிழ் மன்னர்களின் ஆட்சி, அவர்களின் இருப்பிடம் பற்றிய முன்னைய ஆய்வுகள் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படலாம்.

தமிழக அரச உருவாக்கம் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் அவற்றின் தொடக்கப் புள்ளியாகப் பெருங்கற்காலப் பண்பாட்டைக் குறிப்பிடுகின்றனர். இப்பண்பாட்டுடன் பலர் ஒன்று சேர்ந்து உருவாக்கிய குளங்கள், கால்வாய்கள், கற்கள், தாழிகள் கொண்டு அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்கள், சிறு தொழில் நுட்பச் சாலைகள், கடல்சார் வர்த்தகம் என்பன தோன்றின. இப்பணிகள் தனி மனிதனால் செய்ய முடியாததால் அவர்களை வழிநடத்தும் தலைவர்கள் தோன்றினர். அதன் தலைவர்களே அரச உருவாக்கத்தின் ஆரம்பகால ஆட்சியாளர்கள். எல்மேன் என்ற அறிஞர் இவற்றை இனக்குழு நிலையில் இருந்து அரசு உருவாகுவதற்கு இடைக்கட்டமாகத் தோன்றிய அரசுகள் எனக் குறிப்பிடுகிறார். அண்மையில் இலங்கை - தென்னிந்திய அரச உருவாக்கம் பற்றி ஆய்வு செய்த பேராசிரியர் சுதர்சன் செனிவரட்னா தமிழகத்தைப் போல் இலங்கையில் அரச உருவாக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றியதெனக் குறிப்பிடுகிறார்.

இலங்கையில் இப்பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களை அண்டியே பெரும்பாலான பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அக்கல்வெட்டுக்கள் பலவற்றில் ராஜ, மகாராஜா, கமணி, குடும்பிக, வேள், ஆய், பருமுக (பெருமகன்), பருமகள் முதலான அதிகார வட்டத்திற்குரிய பட்டப்பெயர்கள் காணப்படுகின்றன. இப்பட்டப் பெயருக்குரியவர்களில் பலர் சிற்றரசர்கள், இனக்குழுத்தலைவர்கள், அரச அதிகாரிகள், சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவர்கள், குடும்பத்தலைவர்களாக இருந்துள்ளனர் என்பதைக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன *(Paravithana 1970)*. இலங்கையின் அரச உருவாக்கம் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் குணவர்த்தனா அநுராதபுரம் இலங்கை பலமான மைய அரசாக எழுச்சி பெற்ற போது அதற்கு வடக்கிலும், தெற்கிலும் 268 இற்கு மேற்பட்ட குறுநில அரசுகள், தலைவர்களின் ஆட்சி இருந்ததென்பதற்கு பாளி இலக்கியங்களையும், பிராமிக் கல்வெட்டுக்களையும் ஆதாரமாகக் காட்டுகிறார் *(Gunawardana 1985:1-39)*. இக்கல்வெட்டுக்களில் வரும் பட்டப் பெயர்களுள் பருமக, வேள், ஆய் என்பன தமிழுக்குரிய பெயர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன *(Paranavithna 1970, 1982)*. அவற்றுள் "பருமக" என்ற பெயர் தமிழில் பெருமகன் என்ற பெயரின் பிராகிருத வடிவம் எனக் கூறப்படுகிறது. இதனால் இப்பெயருக்குரிய அனைவரையும் தமிழர்களாகக் கொள்ளமுடியவில்லை. இருப்பினும் ஒரு சில கல்வெட்டுக்களில் இப்பெயர் "பருமகன்", "பருமகள்" என எழுதப்பட்டிருப்பதால் இப்பெயரில் தமிழ்த் தலைவர்களும் இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0066.jpg

இலங்கையில் வேள் ஆட்சி

இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியங்களிலும் வரும் வேள், வேளு, வேலு முதலான பெயர்கள் அதிகாரத்தில் இருந்த ஒருவரைக் குறிக்கும் பெயராகக் காணப்படுகிறது. இது சங்க கால தமிழகத்திற்குச் சமமான காலத்திலேயே இலங்கைத் தமிழரிடம் வேள் ஆட்சி தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. பேராசிரியர் பரணவிதானா பதிப்பித்த இலங்கையின் தொடக்ககாலப் பிராமிக் கல்வெட்டுக்கள் (Early Brahmi Inscriptions in Ceylon) என்ற நூலில் 21 கல்வெட்டுக்களில் வேள் என்ற சொல் காணப்படுகிறது. அவர்களில் 13 பேர் தலைவர் என்ற பொருளிலும், 2 பேர் கிராம அதிகாரியாகவும், ஒரு கல்வெட்டில் குதிரை மேற்பார்வையாளராகவும் (Superintendent of Horse), 2 கல்வெட்டுக்களில் பௌத்தமத விசுவாசியாகவும் (Lay-devotee), ஒரு கல்வெட்டில் குடும்பத்தலைவனாகவும் (House holder), மற்றைய கல்வெட்டில் வரிசேகரிப்பாளனாகவும் (Revenue officer) இருந்துள்ளனர்.

பேராசிரியர் வேலுப்பிள்ளை மேலும் ஐந்து கல்வெட்டுக்களில் வேள் என்ற பெயர் இருப்பதை அடையாளப்படுத்தி அப்பெயர்களைப் பேராசிரியர் பரணவிதான தவறாக வாசித்திருப்பதாக சுட்டிக்காட்டுகிறார் *(Veluppillai 1980:12)*. சமகாலப் பாளி இலக்கியங்களில் அதன் மொழிக்கு ஏற்ப வேல, வேலு சுமண எனக் குறிப்பிடப்படுகிறது. மகாவம்சம் இலங்கையிலிருந்து வேள் நாடு பற்றிக் கூறுகிறது. இது பாளி மொழியில் "வெளோஜானபதொதலிய" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது *(Mahavamsa V. XIII:69)*. இதற்கு "அவர்களது வேள் அவர்களது நாடு" என்ற பொருளாகும் (பூங்குன்றன் 1999:79). பேராசிரியர் ரோமிலாதாபர் வடமொழியில் "ராஜா" என்ற பட்டப் பெயர் என்ன கருத்தைக் கொண்டுள்ளதோ அதே கருத்தையே தமிழில் "வேள்" என்ற பட்டமும் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார் *(Thapar1984:83)*. இதனால் வேள் என்ற பட்டத்திற்குரிய அனைவரும் குறுநில மன்னர்களாக அல்லது ஆட்சியாளர்களாக இருந்தனர் எனக் கூறுவதற்கு ஆதாரங்கள் இல்லை.

Tamileelam Archive

சங்க இலக்கியத்தில் 2400 பாடல்களில் 20க்கும் குறைவான பாடல்களில் வேள், வேளிர் பற்றிப் பேசப்படுகிறது. ஆனால் இப்பெயர் குறிப்பிட்ட குடித்தலைவர்களை மட்டுமன்றி சமூகத்தில் செல்வாக்கு மிக்க பிற தலைவர்களையும் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதையே இலங்கை பிராமிக் கவ்வெட்டுக்களில் வேள் என்ற பெயருக்குரியவர்கள் வகித்த வேறுபட்ட பதவிகளும் உணர்த்துவதாகக் கொள்ள இடமுண்டு. தமிழகத்தில் வேள் என்ற பெயரை ஆநிரை கவர்தலில் தலைமைவகித்த தலைவர்களும், வணிகத் தலைவர்களும் பயன்படுத்தியதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. இலங்கையிலும் இப்பெயரை குதிரை வணிகர்கள், குதிரை மேற்பார்வையாளர்கள் கொண்டிருந்தமைக்குப் பிராமிக் கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியங்களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன *(புஷ்பரட்ணம் 2002)*.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்த அறிஞர்களில் சிலர் "வேள்" என்ற சொல்லின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்ந்துள்ளனர். 1880இல் வடஇலங்கையில் பெரியபுளியங்குளக் கல்வெட்டில் "வேள்" என்ற சொல்லை அவதானித்த பாக்கர் அறிஞர் அதை "வேளா" என வாசித்து அதில் காணப்படும் தமிழ் மொழிக்குரிய "ள" என்ற எழுத்தை ஆதாரம் காட்டி இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்து வந்ததற்குரிய ஆதாரமாக இதைக் காட்டினார் *(Parkar1981:436)*. ஆயினும் இலங்கைக்குரிய பிராமி எழுத்து வடஇந்தியாவிலிருந்து வந்தவை என்ற கருத்துடைய அறிஞர்கள் பலரும் இவை தமிழ்ச் சொல்லாகவோ, தமிழ்ப் பிராமிக்குரிய எழுத்தாகவோ கருதவில்லை. மாறாக இவரின் வாசிப்போடு உடன்படாத கோல்சிமித், முல்லர், பெல் போன்றோர் இவ்வெழுத்தை அசோகப் பிராமிக்குரிய "லு" எனக் கூறி இச்சொல்லை வேலு என வாசித்தனர். இவர்களின் வாசிப்பே பொருத்தம் எனக் கூறும் இலங்கையின்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0067.jpg

முதன்மை வரலாற்று அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் பரணவிதான கல்வெட்டுக்களில் வரும் இச்சொல்லும், பாளி இலக்கியங்களில் வரும் வேளு என்ற சொல்லும் ஒன்றெனக் கூறினார். ஆனால் இலங்கையில் "ள" எழுத்துப் பயன்படுத்தும் மரபு கி.பி 2ஆம் நூற்றாண்டின் பின் ஏற்பட்டது எனக் கருதும் இவர் பாளி இலக்கியங்களில் "லு" க்குப் பதிலாக "ளு" பயன்படுத்தப்பட்டது தவறு என்றார் *(Paranavithana1970:xxv)*. இக்கருத்தை நியாயப்படுத்த காலத்தால் முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் கட (Kada) , அடி (Adi) போன்ற சொற்கள் கி.பி 2ஆம் நூற்றாண்டின் பின் அளி (Ali) , களி (Kali) என மாற்றம் அடைந்ததை சான்றாகக் காட்டினார். ஆனால் ஆரம்பகாலக் கல்வெட்டுக்களில் "ள" க்குப் பதிலாக "ட" பயன்படுத்தும் மரபு காணப்பட்டாலும் காலத்தால் முந்திய பிராமிக் கல்வெட்டுக்களில் இரு எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இலங்கையில் வடபிராமிக்கு முன் தென் பிராமி எழுத்து (தமிழ்ப்பிராமி) புழக்கத்திலிருந்ததாகக் கூறும் பேராசிரியர் சத்தமங்கல கருணாரத்னா கி.மு 3-2ஆம் நூற்றாண்டுகளில் தமிழுக்குரிய "ழ","ள"போன்ற எழுத்துக்கள் பயன்பாட்டில் இருந்ததைச் சான்றுகளுடன் சுட்டிக்காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது *(Karunaratne 1984:32)*. தென்னிந்திய அரச உருவாக்கம் பற்றி ஆராய்ந்த செனிவரட்னா சங்க இலக்கியத்தில் வரும் வேள், வேளிர் என்ற சொல்லும் இலங்கை பிராமிக் கல்வெட்டில் வரும் வேள் என்ற சொல்லும் ஒன்றெனக் கூறி இது திராவிட மொழிக்குரியதெனக் குறிப்பிட்டுள்ளார் (1985:54).

தமிழக அரசு தோற்றம் பற்றிய ஆய்வில் பிற குறுநில மன்னர்கள் பெறாத முக்கியத்துவத்தை வேள், வேளீர் பெறுகின்றனர். இப்பெயர் சங்க இலக்கியத்தில் வேள், வேளிர் எனவும், கி.மு 3-2 ஆம் நூற்றாண்டுக்குரிய மாங்குளம், மேட்டுப்பட்டி, கரூர், மறுகால்தலை ஆகிய இடங்களில் உள்ள பிராமிக்கல்வெட்டுக்களில் வேள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது *(Mahadevan 1966:61)*. வேளீர் என்பது வேள் என்ற சொல்லின் பன்மை வடிவமாகும்.தமிழகத்தில் வேந்தர் ஆட்சிக்கு முன் வேளிர் ஆட்சி தோன்றியது எனக் கூறும் பூங்குன்றன் இவர்கள் ஐந்து திணைகளிலும் தனித்தனியே உருவான குடித்தலைவர்கள் எனக் கூறுகிறார் (1999). கி.மு 4ஆம் நூற்றாண்டுக்குரிய தாரநாதரின் இந்தியாவில் புத்தசமய வரலாறு என்ற நூலில் வடஇந்தியாவில் மௌரிய தலைநகரிலிருந்து ஆட்சிபுரிந்த பிந்துசாரன் தமிழக வேளிர், வேந்தர்களுடன் தொடர்பு கொண்டதாகக் கூறுகிறது. சங்க இலக்கியம் வேளிரை தொல்குடியினர் எனவும், தன்னிகரில்லாத் தலைவர்கள் எனவும் கூறுகின்றது.

தமிழகத்திலிருந்தே இலங்கைக்கு பெருங்கற்காலப் பண்பாடு பரவியது என்ற கருத்துடைய பேராசிரியை செண்பகலட்சுமி வேளிரின் தோற்றத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்துகிறார். இப்பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் தமிழ்நாட்டிற்குரிய சிறப்பம்சம் எனக் கூறும் இவர் வேளாண்மையுடன் தொடர்பு உடையவர்கள் இப்பண்பாட்டை உருவாக்கியவர்கள் எனக் கூறி வேளிர் வாழ்ந்த இடங்களுக்கும், இப்பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படும் இடங்களுக்கும் இடையிலான ஒற்றுமையை தொடர்புபடுத்தலாம் என்றார் மேலும் அவர் வேளாண்மை மக்களும், போர் மறவரும் இரு பிரிவினராக இருப்பினும் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்ந்தனர் என்றார். இதில் வேளாண்மையில் ஈடுபட்ட மக்களைப் பாதுகாக்கும் போர் மறவராக வேளிர் இருந்திருக்கலாம் *(Thapar 1984:32)*. பேராசிரியர் சுதர்சன் செனிவரட்னா வேளிர் வாழ்ந்த இடங்களுக்கும், பெருங்கற்கால ஈமத்தாழிகள் காணப்படும் இடங்களுக்கும் இடையிலான ஒற்றுமையை விரிவாக எடுத்துக்காட்டுகிறார் *(Senivaratna1993:70)*. பேராசிரியர் இராஜன் பெருங்கற்கால நடுகற்களுக்கும் வேளிரின் தோற்றத்திற்கும் தொடர்பிருக்கலாம் என்பதற்கு செங்கல், தருமபுரி நடுகற்களை சான்றாதாரம் காட்டுகிறார் *(Rajan 1996:220)*. அண்மையில் பண்டைய தமிழகத்தில் அரச உருவாக்கம் என்ற தலைப்பில் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்ட தமிழ்நாட்டு தொல்பொருள் துறையின் ஆய்வாளர் திரு. பூங்குன்றன் அரச உருவாக்கத்தில் வேள், வேளிருக்குரிய பங்களிப்பை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0068.jpg

விரிவாக விளக்கி இதையொத்த அரச உருவாக்கம் சமகாலத்தில் இலங்கையிலும் ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கு இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களை சான்றாகக் காட்டியுள்ளார் (பூங்குன்றன் 1999).

சங்க இலக்கியத்தில் வேள், வேளிர் போர் மறவர்களாகப் பல இடங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் கேகாலை மாவட்டத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றில் கொடயவேள் என்ற சொல் காணப்படுகிறது. கொடய என்பதை கோட்டை என மொழிபெயர்த்த பரணவிதான இச் சொல்லின் மூலம் வடமொழியில் கொஸ்டிகா எனக் கூறி கொடயவேள் என்ற சொல்லுக்கு கோட்டையின் படைத்தளபதி வேலு என விளக்கம் கொடுத்துள்ளார் (Paranavithana 1970: no.778). வேலு என்பதை தமிழ்ச்சொல்லான வேள் எனக் கூறும் பேராசிரியர் வேலுப்பிள்ளை கொடய என்ற பிராகிருதச் சொல்லுக்கு தமிழில் கோட்டை என விளக்கம் கொடுக்கிறார் (1980:13).

எல்லாளன், துட்டகாமினி போராட்டத்தில் துட்டகாமினி படையிலிருந்த தளபதியாக வேளுசுமண என்பவன் குறிப்பிடப்படுகிறான். இவ்வாறான தளபதிகள், தலைவர்கள் எல்லாளன் படையிலும் இருந்ததாகத் தெரிகிறது. ராஜவாகினி என்ற நூல் வேளுசுமண என்ற ஒற்றன் காக்கவண்ணதீசனை சிறைப்பிடித்து அடிமையாக்குவதாக எல்லாள மன்னனிடம் உறுதி கூறியதாகக் கூறுகிறது (Ellawala 1969:61). இங்கே வேள், வேளுசுமண என்ற பெயர்கள் படைத்தளபதியாக கூறப்படுவது சங்க இலக்கியத்தில் வேள், வேளிர் போர் மறவர்களாக வர்ணிக்கப்படுவதை நினைவுபடுத்துவதாக உள்ளது.

சங்க இலக்கியத்தில் வரும் வேள்கலிநாடு, வேள்நாடு, வேளிர் என்பன வேள் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடு, ஊர் எனக் கூறப்படுகின்றது. இது அரசியலிலும், சமூகத்திலும் செல்வாக்குப் பெற்ற தலைவர்களை நினைவுபடுத்தும் வகையில் அவர்கள் வாழ்ந்த இடங்களுக்கு சங்ககாலத்திலேயே பெயரிடப்பட்டதைக் காட்டுகிறது. இம்மரபு இலங்கையிலும் இருந்திருக்கலாம் என்பதை திருகோணமலை மாவட்டத்திலுள்ள கி.பி 2ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு உறுதிசெய்கிறது. இக்கல்வெட்டு இங்கிருந்த "வேள் கிராமம்"என்ற பெயரிலிருந்த இடம் பற்றிக் கூறுகிறது (Paranavithana 1970: no.78). இவ்வாதாரம் சங்காலத் தமிழகத்தைப் போல் "வேள்" என்ற குறுநில மன்னனின் அல்லது இனக்குழுத் தலைவர்களின் பெயரில் இலங்கையிலும் இடப்பெயர்கள் தோன்றியிருக்கலாம் எனக் கருதஇடமுண்டு.

Tamileelam Archive

ஒரு நாட்டின் பண்டைய கால வரலாற்றை அறிய உதவும் நம்பகரமான தொல்லியல் ஆதாரங்களுள் நாணயங்களும் ஒன்றாகும். இவை கல்வெட்டுக்களைப் போல் விரிவான தரவுகளைத் தராவிட்டாலும் அவற்றில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள், பெயர்கள், சின்னங்கள் என்பன நாணயங்கள் வெளியிடப்பட்ட காலப் பகுதிக்குரிய எழுத்து, மொழி, மதம், ஆட்சியாளர்கள் பற்றி அறியப் பெரிதும் உதவுகின்றன. பண்டைய வடஇந்திய வரலாற்றில் இலக்கியங்களில் இடம்பெறாத அரச வம்சங்களை, ஆட்சியாளர்களை தெரியப்படுத்தியதில் நாணயங்களுக்கு முக்கிய இடமுண்டு. சங்க கால நாணயங்கள் பற்றிய அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்கள், ஆய்வுகளிலிருந்து சங்க இலக்கியங்களில் சொல்லப்படாத சேரர், அதியமான் போன்ற அரச வம்சங்களைச் சேர்ந்த சில மன்னர்களை அடையாளம் காணமுடிந்துள்ளது. இலங்கையை பொறுத்தவரை இங்கிருந்த தமிழருக்கான அரசு 13 ஆம் நூற்றாண்டின் பின்னரே தோன்றியதென்ற ஆழமான கருத்து நீண்டகாலமாக இருந்து வந்ததால் இக்காலத்திற்கு முன்னர் இங்கு புழக்கத்திலிருந்த தமிழ் நாணயங்களைத் தமிழ் நாட்டு அரச வம்சங்களுக்குரிய நாணயங்களாகவே பார்த்தனர். ஆனால் அண்மைக்கால ஆய்வுகள் சங்க காலத்திற்குச் சமமான காலத்திலேயே இலங்கைத் தமிழரிடம் நாணயங்கள் வெளியிடும் மரபு தோன்றியதை உறுதிப்படுத்துகின்றன (Pushparatnam 2002). இவ்வாதாரங்கள் சமகாலத்தில் இலங்கையில் தமிழரிடம் அரச மரபு தோன்றியதற்கு மேலும் சான்றாகும்.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0069.jpg

1999 இல் தென் இலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் வீடு கட்டுவதற்கு அத்திவாரம் வெட்டிய போது பிராமி எழுத்துப் பொறித்த நூற்றுக்கணக்கான ஈய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்நாணயங்கள் கி.மு. 2-1ஆம் நூற்றாண்டளவில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதை நாணயங்களின் எழுத்தமைதி கொண்டு உறுதிப்படுத்த முடிகிறது. தமிழகத்தில் பிராமி எழுத்துப் பொறித்த பல நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்நாணயங்கள் அனைத்திலும் அதன் பின்பக்கத்தில் சங்க கால அரச வம்சங்களின் அரச இலட்சனையான மீன், புலி, அம்பு வில் என்பன பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் தென் இலங்கையில் கிடைத்த நாணயங்களில் இவ்வகையான அரச இலட்சனைகள் இடம்பெறவில்லை. மாறாக பலவகைப்பட்ட சின்னங்கள், குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த வேறுபாடுகள் இந்நாணயங்கள் இலங்கையில் வெளியிடப்பட்டவை என்பதை உறுதிசெய்கின்றன. அதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இந்நாணயங்களுக்குரிய சுடுமண் அச்சுக்களும் இங்கு கிடைத்துள்ளன. இந்நாணயங்களை ஆய்வு செய்ய பேராசிரியர் பொபேஆராய்ச்சி மற்றும் ராஜா விக்கரமசிங்கே இந்நாணயங்கள் இரண்டில் தமிழ் மொழிக்குரிய "ன" என்ற எழுத்து இருப்பதாக அடையாளப்படுத்தியிருந்தனர்.

இக்கட்டுரை ஆசிரியர் இந்நாணயங்களை மேலும் ஆய்வு செய்த போது உதிரன், கபதிகஜபன், மகாசாத்தன், தஸபிஜன், திசபுரசடணாகராசன் முதலான பெயர்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களையும் அடையாளம் காணமுடிந்தது. இந்நாணயங்களில் தமிழ் மொழியின் சிறப்பெழுத்தான "ன" என்ற எழுத்துப் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன், அவற்றில் தமிழில் ஆண்பாலைக் குறிக்கும் "அன்" என்ற விகுதி பெயரின் பின்னொட்டாக காணப்படுகிறது. இது தமிழ் மொழிக்குரிய சிறப்பான அம்சமாகும். இவற்றில் இருந்து இந்நாணயங்களைத் தமிழ்ச் சிற்றரசர்களே வெளியிட்டனர் என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. அதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் மேற்குறித்த நாணயம் ஒன்றில் "திசபுரசடணாகராசன்" என்ற பெயர் காணப்படுகிறது. இதில் வரும் "அரசன்" என்ற சொல் தமிழ்மயப்படுத்தப்பட்ட பிராகிருதச் சொல்லாக இருக்கலாம். இச்சொல் தமிழகத்திற்கு முன்னோடியாக ஈழத்தில் பயன்படுத்தப்பட்டதற்கு இந்நாணயம் சிறந்த சான்றாகும். நாணயத்தில் வரும் வாசகத்தின் பொருள் திசபுரம் என்ற இடத்தில் ஆட்சி புரிந்த சடணாகராசன் என்ற அரசனால் இந்நாணயம் வெளியிடப்பட்டது என்பதாகும். இந்த இடத்தில் பாளி இலக்கியங்களில் வரும் குறிப்பொன்றை சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும். கி.மு. 2ஆம் நூற்றாண்டில் நடந்த எல்லாளன் - துட்டகாமினி போராட்டம் பற்றிக் கூறும் மகாவம்சம் துட்டகாமினி என்ற மன்னன் எல்லாளன் என்ற தமிழ் மன்னனை அநுராதபுரத்தில் வெற்றி கொள்வதற்கு முன்னர் தென்



தென்னிலங்கையில் கிடைத்த தமிழ் நாணயங்கள்



திஷபுரசடணாகராசன்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0070.jpg

இலங்கையில் இருந்த 32 தமிழ்ச் சிற்றரசர்களை வெற்றி கொள்ள நேரிட்டதாகக் கூறுகிறது. இக்கூற்று தென் இலங்கையில் தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்ததற்கு ஆதாரமாகக் காணப்படுகிறது. அதை உறுதிப்படுத்தும் நம்பகரமான தொல்லியல் ஆதாரமாக இங்கு கிடைத்த நாணயங்கள் காணப்படுகின்றன.

தென் இலங்கையில் தமிழ் நாணயங்கள் வெளியிடப்பட்டதன் சமகாலத்திலும், சற்றுப் பிற்பட்ட காலத்திலும் வடஇலங்கையில் தமிழ் மொழியில் அமைந்த நாணயங்கள் வெளியிடப்பட்டதற்கு கந்தரோடை, பூநகரி, உடுத்துறை போன்ற இடங்களில் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கந்தரோடை, பூநகரியில் கிடைத்த நாணயங்கள் அக்குறுகொட என்ற இடத்தில் கிடைத்த நாணயங்களின் சமகாலத்தவை. பெருமளவு ஈயம் கலந்த இந்நாணயங்களில் பொறிக்கப்பட்ட பிராமி எழுத்துக்கள் தேய்வடைந்து காணப்பட்டாலும் அவை தமிழ்ப்பிராமியில் எழுதப்பட்டவை என்பதை அடையாளம் காணமுடிகிறது. உடுத்துறையில் கிடைத்த செப்பு நாணயம் கி.பி. 1ஆம் 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதன் முன்பக்கத்தில் பொறிக்கப்பட்ட பெயரைப் பேராசிரியர் சுப்பராயலு நாகவம்சம் எனவும், ஐராவதம் மகாதேவன் நாகபூமி எனவும் வாசித்துள்ளனர். சமகால இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் பிராகிருத மொழியில் நாஹ என எழுதப்பட்ட இப்பெயர் இந்நாணயத்தில் தமிழில் நாக என எழுதப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் வட இலங்கையில் பாளி மொழியில் நாகதீப(ம்), தமிழில் நாகநாடு என அழைக்கப்பட்டது. இதனால் நாணயத்தில் வரும் பெயர் வம்சத்தை அல்லது வடஇலங்கையை குறித்திருக்கலாம். நாணயத்தின் பின் பக்கத்தில் பொலம் என்ற சொல் காணப்படுகிறது. சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களில் பொல என எழுதப்பட்ட சொல் இதில் பொலம் என எழுதப்பட்டுள்ளது. பொல, பொலம் என்பது உயர்ந்தவன், பொன், செல்வம் என்பதைக் குறிக்கிறது. இப்பெயர் நாணயத்தில் வருவதால் இந்நாணயத்தை வெளியிட்டவன் உயர்ந்தவன் என்ற பொருளில் பொறிக்கப்பட்டிருக்கலாம்.



நாகபூமி என்ற பெயர் பொறித்த நாணயம்
– உடுத்துறை



பொலம் என்ற பெயர் பொறித்த நாணயம்
– உடுத்துறை

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamil Eelam Archive

மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் அநுராதபுரம் பலமான அரசாக எழுந்த போது அதற்கு வடக்கிலும், தெற்கிலும் பல சிற்றரசர்களின் ஆட்சி நடைபெற்றதை உறுதி செய்கின்றன. அவற்றுள் தமிழ்ச் சிற்றரசர்களும் இருந்துள்ளனர் என்பது உறுதியாகிறது. இவ்வாதாரம் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த தொடக்ககால தமிழ் மன்னர்கள் யார் என்ற கேள்விகளுக்கு விடைகாண ஆதாரமாக உள்ளன.

அநுராதபுரத்தில் தமிழ் மன்னர்களின் ஆட்சி

இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டின் பின்னணியில் பல இனக்குழுத்தலைவர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர்கள் ஆகியோரின் ஆட்சி தோன்றியதற்கு நம்பகரமான ஆதாரங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் அநுராதபுர அரசு பலமான அரசாக எழுச்சி பெற்றது. இவ்வரசின் வரலாற்றை கி.மு.3ஆம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0071.jpg

நூற்றாண்டில் இருந்து தொடர்ச்சியாகக் கூறும் வரலாற்று இலக்கிய மரபு இலங்கைக்கு உள்ளது. இவ்வரலாற்று இலக்கியங்களில் இருந்து முற்பட்ட அநுராதபுர கால அரசைத் தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் மாறிமாறி ஆட்சி புரிந்ததை அறியமுடிகிறது. ஆயினும் பௌத்த மதத்தை அதிலும் குறிப்பாகத் தேரவாத பௌத்த மதத்தை ஆதரித்த மன்னர்களின் வரலாற்றையும், அவர்களின் வரலாற்றுச் சாதனைகளையும் விரிவாகக் கூறும் இவ்விலக்கியங்கள் தமிழ் மன்னர்களின் சாதனைகளை குறைந்த அளவில் தானும் கூறவில்லை. இந்த உண்மைகளைப் புரிந்து கொள்வதற்கு அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்கள் பற்றிப் பாளி இலக்கியங்களில் சொல்லப்பட்டவற்றை நோக்குவது பொருத்தமாகும்.

அநுராதபுரத்தில் தேவநம்பியதீச மன்னனைத் தொடர்ந்து கி.மு. 3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மகாசிவ, ஸூரதிஸ போன்ற மன்னர்கள் ஆட்சி செய்தனர். இவர்களுள் ஸூரதிஸ ஆட்சி செய்த காலத்தில் ஸேன, குத்திக என்ற தமிழர்கள் இலங்கை மீது படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றிய வரலாறு பாளி இலக்கியங்களில் தரப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் சகோதரர்கள். இவர்களின் தந்தை குதிரைகளைக் கப்பல்களில் கொண்டு சென்று வணிகம் நடாத்தியவர். இரு தமிழர்களும் அநுராதபுரத்தில் ஆட்சி நடாத்திய ஸூரதிஸ மன்னனைத் தோற்கடித்து இருபத்திரண்டு ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி நடாத்தியதாக மகாவம்சம் கூறுகின்றது. வரலாற்றறிஞர் சிலர் மௌரியப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தமிழ்நாட்டு ஆட்சியாளர்களும், பிரதானிகளும் பலமடைந்ததால் அநுராதபுர அரசின் பலவீனத்தை பயன்படுத்தி அதை வெற்றி கொண்டனர் எனக் கூறுகின்றனர்.

பேராசிரியர் சுதர்சன் செனிவரட்னா சமகால இலங்கை, தமிழக வரலாற்று மூலங்களில் பரதவ சமூகம் குதிரை வர்த்தகத்தில் ஈடுபட்டது பற்றிக் கூறுவதனால் இப்படையெடுப்பை மேற்கொண்டவர்கள் பரதவ குலத்தை சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் இப் படையெடுப்பு பற்றிய சான்றுகள் எவையும் தழிழ்நாட்டு வரலாற்று மூலங்களில் காணப்படவில்லை. இவர்களின் தந்தை குதிரை வணிகம் செய்பவர் எனக் குறிப்பிடப்படுவதனால் இதை அரச சார்பற்ற தமிழர் படையெடுப்பாகவே கொள்ள வேண்டும். பாளி நூல்கள் இரு தமிழ் மன்னர்களும் பௌத்த மதத்திற்கு தீங்கு விளைவிக்காது ஆட்சி செய்தனர் என குறிப்பிட்டாலும், அவர்கள் பௌத்தத்திற்கு தொண்டாற்றியது பற்றி செய்திகள் எவையும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் கிரியைகளைச் செய்வதற்கான கதம்பநதி நீரை (மல்வத்து ஓயா நீரை) நகருக்கு கொண்டு வருவதற்காக கால்வாய் வெட்டிவித்தனர் என மகாவம்சம் குறிப்பிடுகிறது. இது நீர் சம்பந்தமான நடவடிக்கையாக இருப்பதனால் இம் மன்னர்கள் பிராமணிய மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

தேவநம்பியதீஸனின் தம்பியான அஸேல என்பவன் ஸேன, குத்திக மன்னர்களிடம் இருந்து அநுராதபுர அரசை கைப்பற்றி 10 ஆண்டுகள் ஆட்சி நடாத்தினான். அக்கால கட்டத்தில்தான் எல்லாளன் என்ற தமிழ் மன்னன் அஸேல மன்னனை வெற்றி கொண்டு 44 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்தான். தமிழில் எல்லாளன் என அழைக்கப்படும் இம்மன்னன் பாளி மொழியில் "எளாரா" என்றும், பிற்பட்ட சிங்கள வரலாற்று நூல்களில் "எளாள" எனவும் அழைக்கப்பட்டான் (இந்திரபாலா. கா 2006:184). நீண்டகாலம் இலங்கையில் ஆட்சி செய்த முதல் மன்னர்கள் என்பதை நியாயப்படுத்தும் வகையில் அவனது நெறி தவறாத, நீதி வழுவாத ஆட்சி பற்றி பல கதைகள் கூறப்படுகின்றன. இவை மனுநீதி கண்ட சோழன் பற்றிய கதைகளை எமக்கு நினைவுபடுத்துகின்றன. தன்மகனால் கொல்லப்பட்ட பசுக் கன்றின் தாய்க்கும், பாம்பொன்றுக்கு இரையான குஞ்சையிழந்த தாய்ப் பறவைக்கும், பருவம் தப்பிப் பெய்த மழையால் இடருற்ற ஒரு முதிய பெண்ணுக்கும் எல்லாளன் நீதி வழங்கினான் எனப் பல கதைகள் கூறப்படுகின்றன. இவ்விடத்தில் இலங்கையில் தோன்றிய முதல் பாளி இலக்கியங்களில்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0072.jpg

ஒன்றான தீபவம்சம் நூலில் எல்லாளனைப் பற்றிக் கூறிய வரலாற்றின் சுருக்கத்தை நோக்கலாம்.

> "எலாரா என்ற பெயருடைய சத்திரியன் அஸேலனை வெற்றி கொண்டு நாற்பத்தினான்கு ஆண்டுகள் அறவழியில் ஆட்சி நடாத்தினான். ஆசை, அச்சம், வெறுப்பு, மாயை ஆகிய வழிகளை விலக்கி, ஒப்பற்றவனாக அறவழியில் ஆண்டான். மாரியிலும், கோடையிலும் மழைக் காலத்திலும் மழை இல்லை. பின்னர் இவன் அறத்தால் வானம் ஓயாது மழை பொழிந்தது. ஏழு வாரம் மழை பொழிந்தது. வானம் இரவில் மழை பொழிந்தது. பகலில் மழை இல்லை".

தீபவம்சத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட எல்லாளன் வரலாறு மகாவம்சத்தில் சற்று விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதில் சோழநாட்டிலிருந்து இங்கு வந்த உயர் குடியிற் பிறந்த எளாரா என்னும் தழிழன் அஸேல மன்னனை வென்று நாற்பத்தினான்கு ஆண்டுகள் தகராறு தீர்ப்பதில் நண்பர்களுக்கும் பகைவர்களுக்கும் சமநீதி செலுத்தி ஆண்டான் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் எல்லாளன் தழிழகத்திலிருந்து படையெடுத்து வந்து ஆட்சியை கைப்பற்றிய அந்நிய நாட்டவன் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் இவனது நீதி தவறாத ஆட்சியை சிறப்பித்துக்கூறும் இந்நூல் அவன் தவறான மத நம்பிக்கையை கைவிடாத போதும் அரசமரபைப் பேணி பௌத்த சங்கத்திற்கு தன் ஆதரவை வழங்கினான் எனக் குறிப்பிடுகிறது. மகாவம்சத்தை மொழி பெயர்த்த கைகர் தவறான மத நம்பிக்கை என்பது இந்துமதத்தை குறிப்பதாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார். ஆகவே எல்லாளனின் நீதியான ஆட்சியும் பௌத்த மதத்திற்கு அளித்த ஆதரவுமே அவன் மக்கள் எதிர்ப்பின்றி நாற்பத்தினான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்யக் காரணம் எனக்கூறலாம். ஏனெனில் எல்லாளனுக்கு எதிராக துட்டகாமணி மேற்கொண்ட போரை இனப்போராட்டமாக, புனிதப்போராட்டமாக சித்தரித்துக்காட்டிய மகாவம்ச ஆசிரியர் போரில் எல்லாளன் கொல்லப்பட்டதும் துட்டகாமினி அவனுக்கு அளித்த கௌரவம் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

> "காமினி மன்னன் எல்லாளனுக்கு ஈமக் கிரியைகளை நடத்துவதற்கு நகரத்தில் பறை சாற்றுவித்து, ஒரு யோசனை தூரத்தில் வாழ்ந்த மக்களை வருவித்து, எல்லாளன் வீழ்ந்த இடத்தில் உடலைத் தகனம் செய்து, அவ்விடத்தில் ஒரு சைத்தியம் எழுப்பி, அதனை மக்கள் வழிபட வேண்டும் எனப் பணித்தான்".

துட்டகாமினியின் இச்செயல் எல்லாளன் மீது மக்கள் கொண்டிருந்த அளவு கடந்த மதிப்பை அவன் நன்கு உணர்ந்திருந்ததைக் காட்டுகிறது.இந்நினைவுச் சின்னத்திற்கு இலங்கை மக்கள் துட்டகாமினி ஆட்சிக் காலத்தில் மட்டுமன்றி பிற்காலத்திலும் தொடர்ந்து கௌரவம் கொடுத்து வழிபட்டு வந்ததற்குப் பல ஆதாரங்கள் உண்டு. மகாவம்சத்தின் உரை நூலான "வங்ஸத்தப்பகாஸினீ" என்ற பாளி நூலில் எல்லாளனுக்கு எழுப்பிய சமாதியையும் (சைத்தியம்), பின்னர் அதன் அருகே கட்டப்பட்ட எல்லாளன் படிமத்தைக் கொண்ட கட்டிடத்தையும் குறிப்பிட்டு அக்காலத்தில் மக்கள் அவற்றை வழிபட்டு வருவதாகக் கூறப்படுகிறது. பதினான்காம் நூற்றாண்டளவில் எழுந்த "ஸத்தர்மாலங்காரய" என்ற சிங்கள நூலிலும் அதன் ஆசிரியர் இச்சமாதி வழிபடப்பட்டு வந்தது பற்றிக் குறிப்பிடுகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிங்கள மக்கள் "எளலொஹொன" (எல்லாளன் சமாதி) என்ற பெயரால் வழிபடப்பட்டு வந்ததைக் காணமுடிகின்றது. (இந்திரபாலா 2006:287). இதனால்தான் எல்லாளன் இலங்கையின் இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றில் பெரிதும் புகழுக்குரிய மன்னனாக நினைவு கொள்ளப்பட்டு வருகிறான். இதற்குரிய காரணங்கள் பற்றிப் பேராசிரியர் இந்திரபாலா (2006:184) அண்மையில் எழுதிய நூல் ஒன்றில் கூறியிருக்கும் கருத்தை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0073.jpg

"இலங்கையில் ஆட்சி நடாத்திய தமிழ் மன்னர்களுள் மிகவும் பிரபல்யம் பெற்றவனாக இன்றுவரை பலராலும் நினைவு கூறப்படுபவனாக விளங்குபவன் எல்லாளன் என்றால் அது மிகையாகாது. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு வரை இலங்கையில் வாழ்ந்த தமிழரால் மறக்கப்பட்ட ஒரு வரலாற்றுப் பேர்வழியாக இருந்தாலும், கடந்த 2200 ஆண்டுகளாக சிங்கள மக்களால் மறக்கப்படாத ஒரு தமிழ் மன்னனாக எல்லாளனைக் கருதலாம். இதற்குக் காரணம் எல்லாளனுடைய நீதி பற்றிய கதைகள், மனுநீதி கண்ட சோழன் கதைகள் போல, கடந்த 2200 ஆண்டுகளாகச் சிங்கள மக்கள் மத்தியில் பரம்பரை பரம்பரையாக வழங்கி வந்தமையும், எல்லாளன் – துட்டகாமிணி போர் பற்றிய வரலாறு மறக்கப்படாது பேணப்பட்டு வந்தமையும் எனலாம்" எனக் குறிப்பிடுகிறார்.

எல்லாள மன்னனைப் பாளி இலக்கியங்கள் நீதி தவறாது 44 ஆண்டுகள் ஆட்சி செய்தவன் எனப் புகழ்ந்து கூறுவதன் மூலம் அவனது ஆட்சியை ஈழத்தின் பலதரப்பட்ட மக்களும் ஏற்றுக்கொண்டார்கள் என்பதையே காட்டுகிறது. இதற்கு அவனது நீண்டகால ஆட்சியில் அவன் மக்கள் நன்மைக்காகப் பொருளாதார, பண்பாட்டு பணிகளை ஆற்றியமை முக்கிய காரணமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அப்படியிருந்தும் நீதி தவறாத அவனது ஆட்சி பற்றிக் கூறும் பாளி இலக்கியங்களில் அவன் நீண்டகாலம் ஆட்சியில் மக்களுக்காக ஆற்றிய பணிகள் பற்றி எதுவித குறிப்பும் காணப்படவில்லை. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் (1909) இலங்கை வரலாற்றை எழுதிய ஆங்கிலேய நாட்டவரான எச்.பாக்கர் பாளி இலக்கியங்களில் தமிழ்மன்னன் எல்லாளன் சாதனைகள் மறைக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் பெலிவாபியை எல்லாளன் ஆட்சியின் சாதனை எனவும், அது தற்போதய வவுனிக்குளமாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார். ஆகவே எல்லாளனைப் பற்றிப் பாளி இலக்கியங்களில் சொல்லப்பட்ட உண்மைகளை விட சொல்லாமல் விடப்பட்ட உண்மைகளே அதிகமாக இருக்கும். ஏனெனில் 26 ஆண்டுகள் ஆட்சி செய்த துட்டகாமினியின் வரலாற்றுச் சாதனைகளை 801 செய்யுளில் கூறும் மகாவம்சம் 44 ஆண்டுகள் ஆட்சி செய்த எல்லாள மன்னனின் வரலாற்றை வெறும் 21 செய்யுள்களில் மட்டும் கூறிமுடிக்கின்றது. எதிர்காலத்தில் அவனது வரலாறு தொடர்பான நம்பகத் தன்மையுடைய ஆதாரங்கள் கிடைக்குமாயின் அவை இலங்கையின் பண்டைய கால வரலாற்றில் எல்லானனுக்குரிய வகிபாகத்தைச் சரியாக மதிப்பிட வழியேற்படுத்தும் என நம்பலாம்.

எல்லாளன், துட்டகாமினி ஆகிய மன்னர்களின் ஆட்சியைத் தொடர்ந்து அநுராதபுரத்தில் 19மன்னர்கள் 200 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்தனர். முன்னைய ஆட்சியாளர்களுடன் ஒப்பிடும் போது இம்மன்னர்களின் ஆட்சிக்காலம் சிறப்புடையதாக இருக்கவில்லை. இக்காலத்தில் அரசியல் குழப்பங்கள், கொலைகள், அரசியல் சூழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. பல மன்னர்கள் சுயநலங்கொண்ட ஆட்சியை மேற்கொண்டனர். வேறு சில மன்னர்கள் பலவீனமான ஆட்சியை நடத்தினர். ஒரு சில மன்னர்கள் திறமையும், நாட்டுப்பற்றும், மக்கள் நலனில் அக்கறையும் கொண்டு ஆட்சி செய்தனர். துட்டகாமினியின் பின் ஆட்சி செய்தவர்களுள் அவன் தம்பி சத்தாதிசன் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு மன்னனாக இருந்தான். இவனது 18 ஆண்டுகால ஆட்சியில் (கி.மு 137-119) பௌத்த மதம் நன்னிலையை அடைந்தது. இவன் ஆட்சியைத்தொடர்ந்து ஆட்சியுரிமை பற்றிய தகராறுகள் தோன்றின. இவனது மூத்த புதல்வன் வஞ்சதிகன் அமைச்சர்களாலும், பௌத்த சங்கத்தினராலும் புறக்கணிக்கப்பட்டு துலந்தனன் என்பவன் அரசனாக்கப்பட்டான். ஆயினும் அரசியல் குழப்பம் தொடர்ந்து நிகழ்ந்தது. இதனால் சத்தாதிசன் இளைய புதல்வனாகிய வட்டகாமினி இக்கலகங்களை அடக்கி ஆட்சியைக் கைப்பற்றினான். இவன் காலத்தில் தான் மீண்டும் தமிழ் மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டது.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0074.jpg

வட்டகாமினி தனது ஒரு வருட ஆட்சிக்காலத்தில் இரு அரசியல் படையெடுப்புக்களை சந்தித்தான். தெற்கே உருகுனையில் தீசன் என்ற பிராமணன் வட்டகாமினிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டான் வடக்கே தமிழர்கள் படையெடுத்து வந்து மாதோட்டத்தில் வந்திறங்கி அநுராதபுரத்தை நோக்கி முன்னேறினர். இரு படையெடுப்புக்களையும் சமாளிக்க முடியாத வட்டகாமினி தீசன் என்ற பிராமணனுடன் சமாதானம் செய்து தமிழரை வெற்றி கொண்டால் ஆட்சியை ஒப்படைப்பதாகக் கூறினான். இதையேற்று தமிழருடன் போரிட்ட தீஸன் இறுதியில் தோல்வியடைந்தான். வெற்றியடைந்த தமிழர் படை அநுராதபுரத்தை நோக்கி முன்னேறியபோது கொலம்பகால என்ற இடத்தில் வட்டகாமினியின் படையை எதிர்த்து போரிட்டது. இதில் வட்டகாமினி தோல்வியடைய அவன் களத்தினின்று தப்பியோடினான். அநுராதபுர நகருக்குள் விரைந்து தன் குடும்பத்தவருடன் ஒரு இரதத்தில் நகரை விட்டு வெளியேறினான். வெற்றி கொண்ட ஏழு தமிழ்ப் பிரதானிகளும் அரசைக் கைப்பற்றினர். அவர்களுள் ஐவர் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி நடாத்தினர். ஆட்சி நடத்தாத இருவரில் ஒருவன் வட்டகாமினியின் மனைவி ஸோமாதேவியுடனும், இன்னொருவன் புத்தரது பிச்சாப்பாத்திரத்துடனும் தாய்நாட்டிற்குத் திரும்பினர். அவர்களில் ஒருவன் தமிழ் பௌத்தனாக இருக்கவேண்டும். ஏனைய ஐந்து பிரதானிகளில் முதலில் ஆட்சி நடாத்தியவன் பெயர் பாளியில் புலஹதன் எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இவன் 3 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனைக் கொன்று 2ஆவது தமிழ் மன்னனான பாஹிய என்பவன் 2 ஆண்டுகள் ஆட்சி நடாத்தினான். அவனைப் பனயமாற என்பவன் வெற்றி கொண்டு 7 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனையும் பிளையமாற என்பவன் கொன்று 7 மாதம் ஆட்சி புரிந்தான். இறுதியாக தாடிக என்பவன் இவனைக் கொன்று 2 ஆண்டுகள் ஆட்சி நடாத்தினான். இதன் மூலம் 5 தமிழ் மன்னர்களும் 14 ஆண்டுகள் ஏழு மாதங்கள் அநுராதபுரத்தில் ஆட்சி நடாத்த முடிந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.

இத்தமிழ் மன்னர்களின் ஆட்சி பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இவர்களுக்கும் சமகாலத்தில் தமிழ்நாட்டில் ஆட்சி செய்த பாண்டிய வம்சத்திற்கும் இடையே தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றனர். மகாவம்சத்திலும், இலங்கை பிராமிக்கல்வெட்டுக்களிலும் வரும் மாற என்ற பதம் சங்க இலக்கியத்தில் பாண்டியரைக் குறிக்கும் மாறன் என்ற பெயரை ஒத்ததாகக் கூறப்படுகிறது. மெண்டிஸ் என்ற அறிஞர் நக்கீரர் இயற்றிய சங்கப்பாடலில் வரும் பழையமாறனுக்கும் இலங்கைக்கு படையெடுத்து வந்த பணயமாறனுக்கும் தொடர்பு இருக்கலாம் எனக் கூறியுள்ளார். கிருஸ்ணஜயங்கார் குறிஞ்சிப்பாட்டில் வரும் தமிழ் பிரகதத்தனும் இலங்கைக்கு படையெடுத்து வந்த புலஹதனும் ஒருவனே எனக் கருதுகிறார். வரலாற்றாசிரியர்கள் சமகாலப் பிராமிக்கல்வெட்டுக்களில் பாண்டியரைக் குறிக்கும் பெயர்களையும் அதிலுள்ள மீன் இலட்சனைகளும் இதற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளனர். அநுராதபுரத்தில் தாடிக என்பவன் ஆட்சி செய்து கொண்டிருந்த போது தோல்வி கண்ட வட்டகாமினி மீண்டும் படையெடுத்து வந்து அநுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அவன் ஏறத்தாழ 12 வருடங்கள் (கி.மு 89 -76) உள்நாட்டுக் குழப்பங்கள் இன்றி ஆட்சி நடாத்தியதாகத் தெரிகிறது.

வட்டகாமினியின் பின்னர் மகாசூளி மகாதீசன் என்பவன் 14 ஆண்டுகள் (கி.மு 76 -62) ஆட்சி செய்தான். இவனது ஆட்சியின் பிற்பகுதியில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. அரச மரபைச் சேராத சோரநாகன் என்பவன் தனக்குப் புகழிடமளிக்காத விகாரைகளைத் தரைமட்டமாக்கினான். இவனது ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த அனுலா என்பவள் ஐவரை ஒருவர் பின்னர் ஒருவராக மணம் முடித்து அவர்களை ஆட்சியில் அமர்த்தியதாக பாளி வரலாற்று ஏடுகள் கூறுகின்றன. அனுலாவை மணந்து ஆட்சியாளராக வந்த ஐவரில் வடுக என்ற தமிழன் அநுராதபுரத்தில் தச்சுத் தொழிலாளியாக இருந்தவன் என மகாவம்சம் கூறுகின்றது. சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களில் இப்பெயருக்குரியவர்கள் தச்சுத் தொழில் புரிந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இவன் ஓர் ஆண்டும் ஒரு மாதமும்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0075.jpg

ஆண்ட பின்னர் அனுலா அவனைக் கொன்று இன்னொருவரை மணந்து அவனை ஆட்சியாளனாக அமர்த்தினாள். பின்னர் அவனையும் கொன்றுவிட்டு நீலிய என்ற தமிழ்ப் பிராமணனை மணந்து அவனை ஆட்சியில் அமர்த்தினாள். அவன் 6 மாதம் ஆட்சி செய்த பின்னர் அவனையும் கொன்று இறுதியில் தானே அநுராதபுரத்து அரசியானாள். இதில் தமிழ் மன்னர்களாகக் கூறப்படும் வடுக மற்றும் நீலிய ஆகிய இருவரும் முன்னைய தமிழ் மன்னர்களைப் போல் படையெடுப்பாளர்களாக வந்தவர்கள் எனக் கூறாது அநுராதபுரத்தில் வாழ்ந்த தமிழர்கள் என மகாவம்சம் கூறுவதிலிருந்து இவர்களைச் சுதேச தமிழ் மன்னர்களாக கருத இடமுண்டு. இதில் இவரை மணந்து அவர்களை ஆட்சியாளராக அமர்த்திய அனுலா இறுதியில் தானே அரசியாக மாறியதன் மூலம் இலங்கை வரலாற்றில் அரசியாக வந்த முதற்பெண் என்ற பெருமைக்குரியவளாகிறாள். இருப்பினும் இவளது நடத்தையால் இவளை பெண் குலத்திற்கே மாசு கற்பிக்கும் பெண்ணாக மகாவம்சம் சித்தரிக்கின்றது.

கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட காலத்திலிருந்து அநுராதபுர அரசியலில் குறிப்பிடத்தக்க சில முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. முன்பு போல் இக்காலப் பகுதியிலிருந்து தமிழர் படையெடுப்பும், தமிழர் ஆட்சியும் அநுராதபுர அரசில் ஏற்பட்ட அதேவேளை, ஆட்சியுரிமை இழந்த சிங்கள மன்னர்கள் சிலர் தமிழ்நாடு சென்று தமிழர் படையினர் உதவியோடு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதினைக் காணலாம். இளநாகன் என்பவன் அநுராதபுரத்தில் ஆட்சி செய்தபோது (கி.பி 35 - 44) இவனுக்கும் இலம்பகர்ணர் என்ற மரபினருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு பற்றி மகாவம்சம் கூறுகிறது. இம்மரபினரின் ஆதிகால வரலாறு தெரியவில்லை. இருப்பினும் ஆதிகால அரசியல் வரலாற்றில் இவர்கள் முக்கிய பங்கு கொண்டனர் என்பதை உணர்தல் வேண்டும். இளநாகன் தனது ஆட்சியில் இவர்களைத் தண்டிப்பதற்காக அவர்களை சண்டாளர்களின் கீழ் வேலை செய்ய வைத்தான். இந்த அவமானத்தைப் பொறுக்க முடியாத இம்மரபினர் அரசனுக்கு எதிராக கலகம் செய்து ஆட்சியைப் பெற்று இளநாகனை சிறையில் அடைத்தனர். இவன் சிறையிலிருந்து தப்பி தமிழ்நாடு சென்று 3 ஆண்டுகள் சென்றதன் பின்னர் தமிழர் படையுடன் வந்து இழந்த தனது ஆட்சியைப் பெற்றுக் கொண்டான். 6 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த இம்மன்னன் தனது ஆட்சிக்காலத்தில் (கி.பி 38 - 44) தன்னைச் சிறையில் அடைத்த இலம்பகர்ணரை பழிவாங்க எண்ணி அவர்களது தலைகளைக் கொய்யும் படி தனது படையினருக்கு கட்டளையிட்டான்.இளநாகனின் பின்னர் அவன் மைந்தன் சந்தமுகசிவ (சந்திரவதன) ஆட்சியைக் கைப்பற்றி தமிழாதேவி என்ற தமிழ்ப் பெண்ணை மணந்து 8 வருடம் 6 மாதம் ஆட்சி நடாத்தினான். இத் தமிழாதேவியே தன் கணவன் இறந்ததன் பின்னர் இஸரசமணத்திற்கு (இசுறுமனியா) ஏற்படுத்திக் கொடுத்த நீர்ப்பாசனத் திட்டத்தைத் தொடர்ந்தும் செய்தாள் என மகாவம்சம் கூறுகின்றது. இங்கு தான் 6ஆம் நூற்றாண்டின் பின்னர் தமிழர் கலைப்படைப்புக்கள் பல தோன்றின என்பது நினைவு கொள்ளத்தக்கது. பின்னர் சந்தமுக சிவனை அவன் தம்பி யகலாலதீசன் என்பவன் கொன்று அநுராதபுரத்தில் 7 வருடம் 8 மாதம் ஆட்சி புரிந்தான். இவனைத் தொடர்ந்து ஸபா என்பவன் அரசைக் கைப்பற்றி 6 ஆண்டுகள் (கி.பி 59 -65) ஆட்சி செய்தான். இவனை இலம்பகர்ண மரபைச் சேர்ந்த வசபன் வெற்றி கொண்டதன் மூலம் மீண்டும் இம்மரபினர் ஆட்சி அநுராதபுரத்தில் இடம்பெறத் தொடங்கியது.

இவ்வம்சத்தின் முதல் மன்னனாக வசபன் விளங்கினான். இவன் அநுராதபுரத்தை ஆட்சி செய்த ஸபா என்பவனைத் தோற்கடித்து 44 ஆண்டுகள் (கி.பி 65 - 109) ஆட்சி செய்தான். இவனது ஆட்சியில் உள்நாட்டுக் குழப்பமோ, அந்நியப் படையெடுப்போ ஏற்படாததினால் அமைதியான நீண்டகால ஆட்சி நிலவியது. வசபனுக்குப் பின் இவன் மகன் வங்கநாசிகதீசன் 3 ஆண்டுகள் (கி.பி 109 - 112) ஆட்சி செய்தான். இவனது ஆட்சியில் இவனது இரு சகோதரர்கள் உருகுணையிலும், மாயரட்டையிலும் ஆட்சி புரிந்தனர். இதனால் நாடு அரசியல் ரீதியாக பலவீனப்பட்டது. இராஜாவலிய என்ற சிங்கள நூல் இவன் ஆட்சியில் சங்ககால மன்னர்களுள் தலை சிறந்தவனாகிய கரிகாற்சோழன் இலங்கை

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0076.jpg

மீது படையெடுத்து 12000 சிங்களவர்களைச் சிறைபிடித்து காவேரிக்கு அணை கட்டுவித்தான் எனக் கூறுகின்றது. இப்படையெடுப்புப் பற்றி தமிழ்நாட்டு வரலாற்று மூலங்களில் எதுவித குறிப்பும் காணப்படவில்லை. ஆனால் பிற்காலத்திற்குரிய கலிங்கத்துப்பரணியும், லெய்டன் செப்பேடும் இவன் காவேரிக்கு அணை கட்டியதாக கூறுகிறது. இதனால் ராஜவலிய கூறும் கரிகாற்சோழனது படையெடுப்பு எக்காலத்திற்குரியதென்பதை திடமாகக் கூறமுடியாதிருக்கின்றது.

வங்கநாசிகதீசனை அடுத்து ஆட்சிக்கு வந்த முதலாம் கஜபாகு ஆட்சியில் (கி.பி 112 - 134) நாடு மீண்டும் ஒற்றுமைப்பட்டு அரசியலிலும், சமயத்திலும் அபிவிருத்தி கண்டது. இராஜவலிய, பூஜாவலிய போன்ற நூல்களிலும், பிற சிங்களக் கதைகளிலும், பாடல்களிலும் கஜபாகு ஒரு படையெடுப்பைத் தென்னிந்தியாவிற்கு மேற்கொண்டு தன் தந்தையின் காலத்தில் இங்கிருந்து கொண்டு செல்லப்பட்ட சிங்களக் கைதிகளை மீட்டு வந்ததோடு மேலும் பல தமிழ்க் கைதிகளை அங்கிருந்து கொண்டு வந்ததாகக் கூறுகின்றன. கஜபாகுவிற்கும் சேர மன்னன் செங்குட்டுவனுக்கும் தொடர்பு இருந்ததாக மரபுக்கதைகள் கூறுவதால் சேர மன்னனின் பகைவனாகிய சோழ மன்னனுடன் பகைமை பூண்டிருக்கலாம் என வரலாற்றாசிரியர்களால் ஊகிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் கண்ணகிக்கு சேரன்செங்குட்டுவன் கோயில் எழுப்பி விழா எடுத்தபோது அவ்விழாவிற்கு வந்திருந்தவர்களில் இலங்கை வேந்தன் கஜபாகுவையும் ஒருவனாக சிலப்பதிகாரம் கூறுகிறது. இராஜாவலியும், சிங்கள நாட்டுப் பாடல்களும் கஜபாகு கண்ணகியின் சிலம்புடன் நாடு திரும்பியதாகக் கூறுகின்றன. இம்மன்னன் வடஇலங்கையில் கந்தரோடையில் (அங்கணக்கடவை) பத்தினிக்கு கோயில் அமைத்தான் என முதலியார் இராஜநாயகம் கூறுகிறார். இவ்வரலாற்றுக் கதைகளை உறுதிப்படுத்த நம்பகரமான ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் இவை கஜபாகு காலத்தில் இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே இருந்த அரசியல், பண்பாட்டுத் தொடர்புகளை எடுத்துக் காட்டுவதாகக் கொள்ள இடமுண்டு.

கஜபாகு மன்னனைத் தொடர்ந்து மகமல்லகநாகன் (கி.பி 134 - 140), பாதிகதீசன் (கி.பி 140 -164) கனிட்டதீசன் (கி.பி 164 -192) ஆகிய மன்னர்கள் ஏறத்தாழ 50 ஆண்டுகள் அமைதியான ஆட்சியை மேற்கொண்டனர். இவர்களின் பின் ஆட்சிக்கு வந்த குஞ்ஜநாகன் (கி.பி 192 -194), குஞ்சநாகன் (கி.பி 194 -195) ஆகியோர் ஆட்சியில் இந்த அமைதி குலைந்தது. இக்காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தினால் பௌத்த பிக்குகள் தமிழ்நாடு செல்ல நேரிட்டது. படைத்தளபதியாக இருந்த ஸ்ரீநாகன் குஞ்சநாகனை வெற்றி கொண்டு தனது ஆட்சியில் (கி.பி 195 -214) மீண்டும் அமைதியை ஏற்படுத்தினான். இவன் மரணத்தைத் தொடர்ந்து அவன் மகன் வொகாரிகதீசன் ஆட்சிக்கு வந்தான். இவன் ஆட்சியில் (கி.பி 214 -236) இவர் தம்பி அபயநாகன் ஆட்சியுரிமையைப் பெறுவதற்காக தமிழ்நாடு சென்று அங்கு தமிழர் படையுதவியைப் பெற்று அநுராதபுர அரசைக் கைப்பற்றி 9 ஆண்டுகள் (கி.பி 236 - 244) ஆட்சிபுரிந்தான். அபயநாகனுக்குப் பின் மஹியங்கனையைச் சேர்ந்த மூன்று இலம்பகர்ண இளவரசர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். முதலில் அரசைப் பெற்ற சங்கதிசன் 4 ஆண்டுகள் (கி.பி 247 - 251) ஆட்சி புரிந்தான். இவனுக்குப் பின் ஸ்ரீசங்கபோதி என்ற 2ஆம் இளவரசன் ஆட்சியைக் கைப்பற்றி 3 ஆண்டுகள் (கி.பி 251 - 253) ஆட்சி செய்தான். இவன் பஞ்சசீலங்களில் ஒன்றான கொல்லாமையைக் கடைப்பிடித்து மக்களுக்கு துன்பம் விளைவிக்காது ஆட்சி புரிந்ததினால் சிங்கள மக்கள் மத்தியில் இன்றும் இவன் போற்றப்படுகின்றான். இவனுக்குப் பின்னர் மேகவண்ணஅபயன் என்ற பெயரை உடைய இளவரசன் ஆட்சியைக் கைப்பற்றி 13 வருடங்கள் (கி.பி 253 -266) ஆட்சி புரிந்தான். இம்மன்னனைக் காட்டிலும் இவனது 2ஆவது மகன் மகாசேனன் ஆட்சிக்காலத்தில் தான் இலங்கையில் பொருளியல், சமயத்துறையில் பல மாறுதல்களை அடைந்தது. இவனது 28 ஆண்டுகால ஆட்சியில் (கி.பி 276 -303) நீர்ப்பாசனத்துறைக்கு இவன் ஆற்றிய பணியால் மின்னேரியாத் தெய்வம் எனப் போற்றப்பட்டான். இவன் கடைப்பிடித்த மதக்கொள்கையால் இந்துமத வளர்ச்சி தடைப்பட்டது.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0077.jpg

இக்காலத்தில் பௌத்த கலாச்சாரத்தை எதிர்த்து இந்துப்பாரம்பரியம் வளர்ச்சியடைந்த கிழக்கு மாகாணத்தில் மூன்று சிவாலயங்களை அழித்து அவ்விடங்களில் பௌத்த விகாரைகளைக் கட்டியதாக மகாவம்சம் கூறுகின்றது. இவன் தமிழ்நாட்டைச் சேர்ந்த சங்கமித்திரர் என்பவனின் உதவியோடு பௌத்த மதத்தின் இன்னொரு பிரிவான மகாஞான பௌத்தத்தை வளர்க்கப் பாடுபட்டான். இதனால் தேரவாத பௌத்தமதச் சார்புடைய மகாவம்சத்தில் இவனது வரலாறு ஒரு சில செய்யுள்களில் மட்டுமே கூறப்பட்டுள்ளது.

மித்தசேனன் ஆட்சியின் போது பண்டு என்பவன் தலைமையில் ஒரு தமிழர் படையெடுப்பு ஏற்பட்டது. சூளவம்சத்தில் இப்படையெடுப்பிற்கு தலைமை தாங்கியவனை பண்டு எனக் கூறியிருப்பதால் இவர்கள் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்பது வரலாற்றாசிரியர்கள் பலரது கருத்தாகும். இக்காலத் தமிழ்நாட்டு அரசியல் பின்னணியை நோக்கினால், அங்கு களப்பிர மன்னர்கள் பாண்டிநாட்டைக் கைப்பற்றி பாண்டியரை ஆதிக்கத்திலிருந்து நீக்கினர் என்று அறியமுடிகிறது. இச்சூழ்நிலையில் பாண்டிய வம்சத்தை சேர்ந்த சிலர் அநுராதபுரத்திற்கு வந்திருக்கலாம். மஹாநாம மன்னனின் தமிழ் அரசி பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவளாக இருந்திருந்தால் அத்தொடர்பாலும் பாண்டிய வம்சத்தவர் அநுராதபுரத்தில் ஆட்சி பெற வாய்ப்பேற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது (இந்திரபாலா 2006:205). இதேவேளை ராஜாவலிய, பூஜாவலிய போன்ற சிங்கள நூல்களில் இவர்களைச் சோழ நாட்டவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எவ்வாறாயினும் இப்படையெடுப்பைத் தொடர்ந்து அநுராதபுர அரசு கைப்பற்றப்பட்டு அங்கு தமிழர் ஆட்சி தொடங்கியதை வரலாற்று மூலாதாரங்கள் எடுத்துரைக்கின்றன.இவர்களுள் பண்டு (கி.பி 436 - 441), அவன் மகன் பரிந்த (கி.பி 441 - 444), இவனின் சகோதரர்கள் குட்டபரிந்த (கி.பி 444 - 460), திரிதன், தாட்டிகன் (கி.பி 460 - 463), பிடியன் ஆகிய தமிழ் மன்னர்கள் மாறி மாறி இருபத்தேழு ஆண்டுகள் ஆட்சி செய்தனர். சூளவம்ச இவர்களின் ஆட்சி தென் இலங்கையில் பரவவில்லையெனக் கூறுகிறது. ஆனால் பரிந்தனின் அறகம கல்வெட்டும், தாட்டிகனின் கதிர்காமக்கல்வெட்டும் அங்கும் இவர்களின் ஆதிக்கம் பரவியிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. இம்மன்னர்களில் சிலர் பௌத்தர்களாகவும், பௌத்தமதத்தை ஆதரித்தவர்களாகவும் காணப்பட்டனர். 16 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த குட்டபரிந்தனின் அநுராதபுரக் கல்வெட்டு இவனை பரிதேவன் எனவும், புத்ததாசன் எனவும் கூறுகிறது. இக்கல்வெட்டிலிருந்து குட்டபரிந்தனும் அவனது மனைவியும் பௌத்த விகாரைக்கு தானம் செய்தது பற்றி அறியமுடிகிறது. இதேபோல் பரிந்தனின் அறகம கல்வெட்டு இவன் பௌத்தமதத்தை ஆதரித்தது பற்றிக் கூறுகிறது. சமகாலத்தில் தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சியில் தமிழப் பௌத்தம் நன்கு வளர்ச்சியடைந்திருந்ததினாலும், அங்கிருந்து வந்த புத்தகோஸ, புத்ததத்த, தர்மபால போன்ற பௌத்தத் துறவிகள் இலங்கையில் பௌத்த மதத்தை பரப்பியதினாலும் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த தமிழ்மன்னர்கள் பௌத்தமதத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கலாம் எனக் கூறலாம்.

சூளவம்சம் பண்டு என்பவன் அநுராதபுரத்தை வெற்றி கொண்டான் எனக் கூறியிருப்பதைப் போல் யாழ்ப்பாண வைபவமாலை இக்காலத்தில் பண்டு மன்னன் ஒருவன் மணற்றி என அழைக்கப்படும் யாழ்ப்பாணத்திற்கு வந்ததாகவும், இவன் காலத்தில் வடபகுதியிலிருந்த முக்குவர்கள் கிழக்கு மாகாணத்திற்கு துரத்தப்பட்டதாகவும் கூறுகிறது. இப்பண்டுவும், சூளவம்ச கூறும் பண்டுவும் ஒருவனா? என்பதை திட்டவட்டமாக கூறமுடியாவிட்டாலும் அநுராதபுரத்தில் ஆட்சிசெய்த பண்டுவின் ஆதிக்கம் தென்இலங்கை வரை பரவியிருந்ததால் இவனின் செல்வாக்கு யாழ்ப்பாணத்திலும் இருந்திருக்கும் எனக் கருத இடமுண்டு.

அநுராதபுரத்தில் தமிழர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்த போது அவர்களை வெற்றி கொள்வதற்கான

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0078.jpg

இயக்கம் ஒன்று தென் இலங்கையில் வளர்ச்சியடைந்திருந்தது. இதற்குத் தாதுசேனன் தலைமை தாங்கினான். இவன் மோரிய குலத்தைச் சேர்ந்தவன். இக்குலத்தின் பூர்வீகம் சரியாகத் தெரியவில்லை. சங்க இலக்கியத்தில் இக்குலம் பற்றிய குறிப்புகள் வருவதால் இவர்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கலாம் என்ற கருத்துண்டு. ஸபா என்பவன் யசவாகதிசனிடம் அரசைக் கைப்பற்றிய போது அநுராதபுரத்தில் தங்கியிருந்த மோரியர் அங்கு தொடர்ந்து வாழ அஞ்சி தென் இலங்கை சென்றதாக சூளவம்சம் கூறுகின்றது. தாதுசேனனிடம் இளமையில் காணப்பட்ட வீரமும், துணிவும் எதிர்காலத்தில் தமிழரிடமிருந்து நாட்டை விடுவிக்க உதவும் என இவன் மாமன் நம்பினான். சூளவம்ச கூற்றின்படி இவன் இளமைக்காலத்தில் அநுராதபுரத்திலுள்ள தீககந்த பிரிவெனாவில் தன் மாமனான பிக்குவிடம் ஒரு "சாமணேரா" வாக வாழ்ந்து வந்தான். அங்கு வாழ்வதால் தமிழர் ஆட்சியால் வரக்கூடிய ஆபத்தை உணர்ந்த இவன் மாமன் கலாஓயாவிற்கு அப்பாலிலுள்ள ஒரு விகாரைக்கு பாதுகாப்பாக அழைத்துச் சென்றான். தமிழ்மன்னர்களுக்கு தாதுசேனன் பற்றிய செய்திகள் எட்டவே இவனைச் சிறைப்பிடிக்க முயன்றனர். இதை அறிந்த தாதுசேனன் தமிழர் படை வருவதற்கு முன்னரே உருகுணைக்குச் சென்று விட்டான். ஒரு விடுதலை இயக்கத்திற்கு தலைமை தாங்கும் தகுதி இவனிடம் காணப்பட்டதினால் உருகுணையில் வாழ்ந்த சிங்களப் பிரதானிகள் மகிழ்ச்சியடைந்து தமது ஆதரவை நல்கினர் என சூளவம்சம் கூறுகின்றது. இவர்களின் ஆதரவோடு பெரும்படை திரட்டி தமிழருக்கு எதிராக பெரும் போரை ஆரம்பித்தான். ஆனால் தமிழர் படை பலமாகவும் அவர்களுக்குச் சார்பாக சில சிங்களப் பிரதானிகள் இருந்தாலும் தாதுசேனன் எதிர்பார்த்ததைப் போல் இலகுவில் தமிழ் ஆட்சியாளர்களை வெற்றிகொள்ள முடியவில்லை. இதனால் இப்போர் 20 ஆண்டுகள் நீடித்ததாக சூளவம்சம் கூறுகிறது. இறுதியில் பிடியன் என்ற தமிழ்மன்னனை இவன் வெற்றி கொண்டு ஆட்சியைக் கைப்பற்றினான். இதன் மூலம் தமிழர் பிடியில் இருந்து அரசை விடுவித்து விடுதலை வீரனாக சூளவம்சம் இவனைப் புகழ்ந்துரைக்கிறது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இவனது 18 வருடகால (கி.பி 459 - 477) ஆட்சி பிற்பட்ட அநுராதபுரகால வரலாற்றில் பெரிதும் போற்றத்தக்கது. தமிழர் ஆட்சியில் வெற்றி கொண்டமையும், சீனாவுடன் கலாசார தொடர்புகளை ஏற்படுத்தியமையும், புதிய நீர்ப்பாசனக் குளங்களை ஏற்படுத்தியமையும் வரலாற்றில் இவனுக்கு நிலையான இடத்தை தேடிக்கொடுத்தது. ஆயினும் இவனது மரணம் பரிதாபத்திற்குரிய சம்பவமாகவே சூளவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. இவனது சேனைத்தளபதி, மருமகனுமான மிகாரன் செய்த சூழ்ச்சியால் இவன் கொல்லப்பட்டான். தாதுசேனனுக்குப் பின்னர் அரசனாக வரவேண்டிய மொகல்லான் காசியப்பன்,மிகாரன் செய்த சுழ்ச்சியால் அவன் தமிழ்நாட்டிற்கு தப்பியோட காசியப்பன் ஆட்சி நடாத்தினான். இவன் கால (கி.பி 477 - 495) அரசியல் வரலாறு சூளவம்சத்திலும், சிங்கள காலவேடுகளிலும் அதிகம் முக்கியப்படுத்தி கூறவில்லை. தமிழர் படையெடுக்கலாம் என அஞ்சி தலைநகரை சிகிரியா மலைக்குன்றிற்கு மாற்றினான். அங்குள்ள வரலாற்றுப் புகழ்மிக்க ஓவியங்கள் இவன் வரலாற்றைத் தற்காலம் வரை நினைவுபடுத்த உதவுகின்றன.

காசியப்பனின் பின் அநுராதபுரத்தை ஆட்சி செய்தவர்களுள் மொகல்லான் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவன். காசியப்பனுக்கு அஞ்சி தமிழ்நாட்டில் தஞ்சமடைந்திருந்த இவன் நிகந்தர்கள் மூலம் அநுராதபுர அரசியல் நிலைமையை அறிந்து தமிழர் படையுடன் வந்து ஆட்சியைக் கைப்பற்றினான். நிகந்தர் என்றால் சமணரைக் குறிக்கும். சமகாலத்தில் தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சியில் பௌத்தமும், சமணமும் செல்வாக்குப் பெற்றிருந்ததனால் இலங்கையில் தங்கியிருந்த தமிழ்ச் சமணனையே சூளவங்ஸ நிகந்தர்கள் என அழைத்திருக்க வேண்டும். மொகல்லாளன் தமிழ் படை உதவிபெற்று ஆட்சியைக் கைப்பற்றிய போதிலும் மீண்டும் தமிழர் படையெடுப்பு தனக்கெதிராக ஏற்படலாம் என அஞ்சினான். இதற்காக நாட்டின் கரையோரப் பகுதிகள் இவன் ஆட்சியில் (கி.பி 495- 512) பலப்படுத்தப்பட்டதாக

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0079.jpg

சூளவம்சம் கூறுகிறது.மொகல்லாளனுக்குப் பின்னர் அநுராதபுர அரசியலில் ஏற்பட்ட குழப்ப நிலைகள் சிலாகாலன் அரசைப் பெறக் காரணமாகியது. இவன் காசியப்பன் காலத்தில் அவன் சேவையில் அமர்ந்த இலம்பகர்ண மரபைச் சேர்ந்த தாடபூபதி என்பவனது மகனாவான். இவன் தனது ஆட்சிக்காலத்தில் (கி.பி 522-535) தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த மகாயானக் கருத்துக்கள் இலங்கையில் வளர்வதற்கு ஆதரவாக இருந்தான். கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் பல்லவ அரசு ஒரு பேரரசாக வளரத் தொடங்கியதுடன் ஈழத்துடனான அரசியல் உறவுகள் இன்னொரு வடிவத்தைப் பெற்றது. அதை அடுத்துவரும் இயலில் காணலாம்.

மேற்கூறப்பட்ட பாளி இலக்கிய ஆதாரங்கள் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கால அநுராதபுர அரசின் வளர்ச்சியில் தமிழ் மன்னர்களும், தமிழக அரசியல் தொடர்புகளும் பெரும்பங்கு வகித்ததை எடுத்துக்காட்டுகின்றன. அதிலும் அநுராதபுர அரசின் முதல் 200 ஆண்டுகால வரலாற்றை நோக்கும் போது அங்கு தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் மாறி மாறி ஆட்சி புரிந்ததினைக் காணலாம். இக்காலப்பகுதியில் ஆட்சிபுரிந்த 21 மன்னர்களில் 10 பேர் தமிழர்கள் ஆவார். அவர்கள் 80 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்துள்ளனர். அவர்களுள் 8 தமிழ்மன்னர்களை இலங்கை மீது படையெடுத்த அந்நியர், ஆக்கிரமிப்பாளர், பாண்டிய-சோழநாட்டவர், தமிழ் வர்த்தகர் என மகாவம்சம் கூறுகின்றது. ஆனால் தமிழக வரலாற்று மூலங்களில் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கை உடனான அரசியல் உறவுகள் பற்றி எந்தக் குறிப்புக்களும் காணப்படவில்லை. இக்காலத்தில் எழுந்த சங்க இலக்கியம் பெருமளவுக்கு காதலையும், வீரத்தையும் போற்றிப் பாடுகிறது. இவ்விலக்கியம் சங்ககால தமிழகத்தில் மூவேந்தர்களுக்கிடையிலான போர்கள் பற்றியும், போரில் வெற்றி பெற்ற மன்னர்களின் வீரத்தைப் பற்றியும் போற்றிப்பாடுகிறது. சற்றுப் பிற்காலத்தில் எழுந்த சிலப்பதிகாரம் சேரன் செங்குட்டுவன் இமயம்வரை படையெடுத்துச் சென்று அங்கிருந்து கொண்டுவந்த கல்லைக்கொண்டு கண்ணகிக்கு சிலை வடித்ததாக அவர்களின் வீரத்தைப் பெருமையுடன் கூறுகிறது. ஆனால் இலங்கையுடனான தமிழகம் கொண்டிருந்த வர்த்தக, பண்பாட்டு தொடர்புகளைக் கூறும் இவ்விலக்கியங்களில் இலங்கையுடனான அரசியல் உறவு பற்றியோ, தமிழ் நாட்டிலிருந்து படையெடுத்துச் சென்று அங்கு ஆட்சி நடாத்திய தமிழ் மன்னர்களைப் பற்றியோ எதுவும் கூறப்படவில்லை. இந்த மௌனம் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களையிட்டுப் பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன.

ஏனெனில் பாளி இலக்கியங்களில் குறிப்பிடப்படும் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களது பெயர்களுக்கும், சமகாலத்தில் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த சங்ககால மன்னர்கள், குறுநிலத் தலைவர்கள் ஆகியோரது பெயர்களுக்கும் இடையே ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. சில அறிஞர்கள் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த பழையமாற, பிழையமாற ஆகிய பெயர்களுக்கும் சங்ககாலப் பாண்டிய மன்னர்களது பெயர்களுக்கும் இடையே ஒற்றுமை இருக்கலாம் எனக் கருதுகின்றனர். ஆனால் இப்பெயர்கள் தமிழகத்தில் சங்ககாலத்தில் புழக்கத்திலிருந்த பெயர்களை விட இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் பெயர்களையே பெரிதும் ஒத்ததாக உள்ளன.

இந்த இடத்தில் இன்னொரு முக்கிய அம்சத்தையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகத் தெரிகிறது. இலங்கையிலும், தமிழகத்திலும் ஏறத்தாழ பெருங்கற்காலப் பண்பாட்டுடன் அரச உருவாக்கம் நிகழ்ந்ததைத் தொல்லியல் ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன. தமிழகத்தில் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய அரசுகள் ஓரளவு பலமான அரசாக எழுச்சியடைந்தாலும் அதன் சமகாலத்தில் 200க்கு மேற்பட்ட இனக்குழுத் தலைவர்கள், குறுநிலத் தலைவர்கள் ஆகியோரின் ஆட்சி இருந்ததையும், அவர்களுக்கிடையே ஆள்புல அதிகாரம் போராட்டங்கள் நிகழ்ந்ததையும் சங்க இலக்கியம், பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. இந்நிலையே சமகால இலங்கையிலும்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0080.jpg

இருந்ததைப் பிராமிக் கல்வெட்டுக்களும், பாளி இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. இந்நிலையில் தமிழகத்தின் இயற்கை எல்லையைத் தாண்டி இன்னொரு நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டை ஆட்சி செய்யும் அளவிற்கு தமிழகத்தில் பலமான அரசு தோன்றியிருக்கவில்லை. அதிலும் 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்த எல்லாளன் சோழ நாட்டிலிருந்தும், அவன் தோல்வியடைந்த போது அவனுக்குச் சார்பாக பாலுகன் தலைமையில் பல நூறு படைவீரர்கள் தமிழகத்தில் இருந்தும் இலங்கை மீது படையெடுத்து வந்தனர் எனப் பாளி இலக்கியங்கள் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. அவ்வாறான படையெடுப்புக்கள் தமிழகத்திலிருந்து ஏற்பட்டிருக்குமாயின் வீரத்தை முன்னிலைப்படுத்தி எழுந்த சங்க இலக்கியத்தில் அவை இடம்பெற்றிருக்கும். பாளி இலக்கியங்கள் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் ஆரம்பத்தில் தென்இலங்கையின் சிற்றரசர்களாக இருந்து வந்தவர்கள் எனக் கூறுகின்றன. இது போன்ற தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி தென் இலங்கையிலும், வடஇலங்கையிலும் இருந்துள்ளன. இதனால் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களைத் தமிழ்நாட்டுடன் மட்டும் தொடர்புபடுத்திப் பார்க்காது அநுராதபுரத்திற்கு வடக்கிலும், தெற்கிலும் ஆட்சி செய்து கொண்டிருந்த தமிழ்ச் சிற்றரசர்களுடனும் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமாகும் (புஸ்பரட்ணம் 2002, இந்திரபாலா 2006). ■

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0081.jpg

3

நாகநாடும் (நாகதீபம்) தமிழர்களும்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0082.jpg

இயல் மூன்று

நாகநாடும் (நாகதீபம்) தமிழர்களும்

வரலாற்றுத் தொடக்க காலத்திலிருந்து இலங்கையின் பிரதேச எல்லைகள் அவற்றின் இயற்கை அமைப்பிற்கு ஏற்ப அமைந்திருந்திருக்கலாம் என்பதை கி.மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்து அநுராதபுர அரசின் வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கூறும் பாளி இலக்கியங்களில் இருந்து அறிய முடிகிறது. வேறுபட்ட இப்பிரதேச அடையாளங்கள் ஏழாம் நூற்றாண்டிலிருந்து மேலும் நிர்வாக எல்லைகளாக வளர்ந்திருந்தன என்பதை வரலாற்றேடுகளில் குறிப்பிடப்படும் ரோஹண (தென்னிலங்கை), மலய (இலங்கையின் மத்தியில் உள்ள மலைநாடு), உத்தர தேசம் (வடஇலங்கை) மற்றும் பசின தேசம் (கீழ் நாடு), தக்கண தேசம் (தென்நாடு) என்பவற்றிலிருந்து அறிய முடிகிறது. இவற்றின் எல்லைகள் பாளி இலக்கியங்களில் சரிவரக் குறிப்பிடப்படாவிட்டாலும் இவை அநுராதபுரத்தை மையமாகக் கொண்ட மைய அரசிற்கு தெற்கிலும், வடக்கிலும், கிழக்கிலும் இருந்த பிரதேசங்கள் என்பதை இலகுவாக அறிந்து கொள்ள முடிகிறது. அவற்றுள் உத்தரதேசம் என அழைக்கப்படும் பிரதேசம் அல்லது அதன் ஒரு பகுதியே கி.மு ஆறாம் நூற்றாண்டிலிருந்து நாகதீபம் என்ற பெயரால் தனித்து அழைக்கப்படுகிறது. பாளி மொழியில் அமைந்த இப்பெயர் தமிழில் நாகநாடு என அழைக்கப்படுகிறது. இப்பெயர் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை வரலாற்று ஏடுகளில் இடம்பெற்றிருப்பதை நோக்கும் போது இலங்கை வரலாற்றில் தனித்துவமான பாரம்பரிய வரலாறு கொண்ட பிராந்தியங்களில் நாகதீபமும் (நாகநாடு) ஒன்று என்பதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

வடஇலங்கைக்கு நாகதீப(ம்) அல்லது நாகநாடு என்ற பெயர் ஏற்பட்டமைக்கு இப்பிராந்தியத்தில் பண்டுதொட்டு நாக இன மக்கள் வாழ்ந்து வந்தமை முக்கிய காரணமாகும். இந்நாகதீபத்தின் எல்லைகள் ஆதிகால, இடைக்கால வரலாற்றில் அநுராதபுரத்திற்கு வடக்கில் உள்ள பிராந்தியங்களை (வடஇலங்கையை) மட்டுமன்றி கிழக்கிலங்கையில் திருகோணமலை வரை பரந்திருந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் வாழ்ந்த பூர்வீக இனக்குழுக்களுள் நாக இனக்குழுவுக்கு முக்கிய இடமுண்டு. அதனால் அவ்வினக்குழுவைத் தவிர்த்துவிட்டு இலங்கை மக்களின் பூர்வீக வரலாற்றை அறியமுடியாது. கி.மு.6ஆம் நூற்றாண்டில் வடஇந்தியாவிலிருந்து ஏற்பட்ட விஜயன் வருகையுடன் ஈழத்தில் மனித வரலாறு தொடங்குவதாகக் கூறும் மஹாவம்சம் அவன் தலைமையில் குடியேற்றம் நிகழமுன்னர் இங்கு வாழ்ந்த இனக்குழுக்களுள் ஒன்றாக 'நாக' இன மக்களைக் குறிப்பிடுகிறது *(Mahavamsa: vi-vii, 51-55)*. இதன் மூலம் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னரே நாகர் என்ற இனக்குழு ஈழத்தில் வாழ்ந்ததெனக் கூறலாம்.

மஹாவம்சம் கூறும் 'நாக' என்ற பெயர் கொண்ட இனக்குழு ஈழத்தில் வாழ்ந்ததை சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களும் உறுதிசெய்கின்றன. இக்கல்வெட்டுக்களை ஆய்வு செய்த பேராசிரியர் பரணவிதான இவற்றில் குறிப்பிடப்படும் நாககுலம் என்பது நாக குடும்பத்தைக் குறிப்பதாக விளக்கம் தருகிறார் *(Paranavitana 1970:106)*. ஆனால் பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்ணா இது இனக்குழுவுக்குரிய பெயர் என்பதற்கு பிராமிச் சாசனங்களுடன் மஹாவம்சத்தில் வரும் வரலாற்றுக் குறிப்புக்களையும் தொடர்புபடுத்திக் காட்டுகிறார் *(Karunaratne1984:56)*. தொல்லியலாளர் மஹாவம்சத்தில் விஜயன் வருகைக்கு முன்னர் வாழ்ந்த இனமாக நாகரைக் குறிப்பிடுவதால் இம்மக்கள் நுண்கற்காலப் பண்பாட்டிற்குரிய ஆதிஒஸ்ரலோயிட் இனக்குழுவாக அல்லது பெருங்கற்காலப் பண்பாட்டை தோற்றுவித்த திராவிட

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0083.jpg

இனக்குழுவாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர் (Deraniyagala 1992:735). மஹாவம்சம் கூறும் நாக இனக்குழுவை மனிதப் பிறவிகள் அற்ற அமானுஜர் என விளக்கம் கொடுத்த பேராசிரியர் பரணவிதான கூட பொம்பரிப்பில் பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் தனது முன்னைய கருத்தை மாற்றி இவர்களைத் திராவிட இனமாகக் குறிப்பிடுகிறார். பேராசிரியர் இந்திரபாலா நாகர் ஈழத்தில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய காலத்தில் (ஆதி இரும்புக் காலத்தில்) நாட்டின் பல்வேறு வட்டாரங்களில் வாழ்ந்த இனக்குழு என்றும், தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து வந்த இவ்வினம் காலப்போக்கில் அநுராதபுரத்திலும், தென்னிலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலும் உருவாக்கிக் கொண்டிருந்த பிராகிருத மொழி தழுவிய பேரினக் குழுவுடன் கலந்து கொள்ள, ஏனையோர் வடக்கில் தமிழ் இனக்குழுவுடன் கலந்து கொண்டனர் எனக் குறிப்பிடுகிறார் (Indrapala 2005:172-73). நாகர் ஆதியில் ஈழத்தின் பல்வேறு பிராந்தியங்களில் வாழ்ந்திருந்தாலும் அநுராதபுரத்திற்கு வடக்கில் உள்ள பிராந்தியமே நாகதீபம் எனக் குறிப்பிடப்படுகிறது. இதற்கு இப்பிராந்தியத்தின் பூர்வீக மக்களாக நாகர்கள் இருந்தமையும், அவர்கள் எதிரேயுள்ள தமிழகத்துடன் கொண்ட தொடர்பால் தமிழ் மொழி பேசும் மக்களாக வாழ்ந்தமையும் முக்கிய காரணமாக இருக்கலாம்.

வரலாற்றுத் தொடக்ககாலத்தில் நாக என்ற பெயர் பல இன மக்களிடையே பயன்படுத்தப்பட்டு வந்தாலும் காலப்போக்கில் அப்பெயர் வடஇலங்கையையும், பெரும்பாலும் தமிழ் மக்களையும் குறித்து நின்றதற்கு இலக்கியங்களிலும், பிராமிக் கல்வெட்டுக்களிலும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பௌத்த மதத்துடன் தொடர்புடைய பிராமிச் சாசனங்கள் நம்பத்தகுந்த ஆதாரங்களாக உள்ளன.இச்சாசனங்களில் பௌத்த சங்கத்திற்கு தானமளித்தவர்களின் பெயர்,பட்டம், பதவி, சமூக அந்தஸ்து, குடும்ப, சமூக உறவு முறைகள், தொழில், சமய நம்பிக்கைகள், ஊர்ப்பெயர் என்பவற்றுடன் அக்காலத்தில் வாழ்ந்த இனம், குலம், வம்சம், சமூகம் சார்ந்த பல பெயர்களும் காணப்படுகின்றன. இப்பெயர்களில் பெரும்பாலானவை பிற்காலத்தில் மொழி வழக்காலும், பண்பாட்டு மாற்றத்தாலும் திரிபடைந்துள்ளன அல்லது வழக்கொழிந்து விட்டன எனக்கூறலாம். ஆனால் சில பெயர்கள் தொடர்ந்தும் புழக்கத்தில் இருந்துள்ளன. அதில் ஒன்றே தமிழில் 'நாக' என்றும்,பிராகிருதத்தில் 'நஹ' 'நக' என்றும் அழைக்கப்பட்ட பெயராகும். இப்பெயர் ஏறத்தாழ 200க்கு மேற்பட்ட பிராமிச் சாசனங்களில் காணப்படுகின்றன. இலங்கைப் பிராமிச் சாசனங்களில் வரும் தனிநபர் பெயர்களில் இப்பெயரே எண்ணிக்கையில் அதிகமாகும். இந்த அம்சத்தை சமகால இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்களிலும் காணமுடிகிறது. இப்பெயருக்குரியவர்கள் இனக்குழுத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், குருசில்கள், வணிகர்கள், கலைஞர்கள், படைவீரர்கள் என அக்காலத்தில் செல்வாக்குடன் இருந்ததைக் காணமுடிகிறது. ஆயினும் இப்பெயர் இலங்கையில் மட்டுமன்றி சமகாலத்தில் தென்னாசியாவின் பல்வேறு வட்டாரங்களிலும் புழக்கத்தில் இருந்துள்ளமைக்கு ஆதாரங்கள் உண்டு. வடஇந்தியாவில் அரசமைத்த குப்தரும், தென்னிந்தியாவில் ஆட்சி புரிந்த சாதவாகனரும் தம்மை நாக குலத்திலிருந்து வந்தவர்கள் எனக் குறிப்பிடுகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள நாகபட்டினம் நாகர்களின் தலைநகர் என்ற ஐதீகமும் காணப்படுகிறது. சங்ககாலம் தொட்டு குறுநிலத் தலைவர்கள், புலவர்கள் மற்றும் தனிநபர் பெயருடன் இணைந்துள்ள இப்பெயர் தமிழகத்தில் புழக்கத்தில் இருந்த நாடு, பட்டினம், ஊர் ஆகிய இடப்பெயர்களின் முன்னொட்டுச் சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது (Pillai1975:37). இவ்வாறு தென்னாசியாவில் பரந்துபட்ட அளவில் இப்பெயரைப் பயன்படுத்தியமைக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் அவற்றுள் மதவழிபாட்டில் நாகபாம்பை குலமரபுச் சின்னமாகக் கருதிய மக்கள் வாழ்ந்தமையே இப்பெயர் ஏற்பட முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.

மஹாவம்சம் விஜயன் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த மக்களில் ஒருபிரிவினரை நாகர் எனக் குறிப்பிடுகிறது. கி.மு.3ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கைத்தமிழர் மொழியடிப்படையில்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0084.jpg

ஒரு இனக்குழுவாக வாழத்தொடங்கியதை வவுனியா (பெரியபுளியங்குளம்), அநுராதபுரம், அம்பாறை (குடுவில்), திருகோணமலை (சேருவில்) போன்ற இடங்களில் கிடைத்த பிராமிச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன (Indrapala 2005:141-44). இதற்குள் நாக என்ற இனக்குழுவும் கலந்திருக்கலாம் என்பதற்கு இப்பிராமிச் சாசனங்களிலேயே ஆதாரங்கள் காணப்படுகின்றன. இச்சாசனங்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டதால் அம்மொழிக்கு ஏற்ப இப்பெயர் பெரும்பாலான சாசனங்களில் 'நஹ', 'நஹஸ', 'நஹய', 'நஹலி' என்று எழுதப்பட்டுள்ளது. ஆயினும் சில சாசனங்களில் இதற்கு மாறாக தமிழ்மயப்படுத்தப்பட்டு 'நாக' 'நக' 'ணக' 'ணாக' எனவும் எழுதப்பட்டுள்ளன (Paranavitana 1970:nos 1120,1998. 1982:nos:126,138,180,267).இப்பெயரை பிராகிருத மொழியில் எழுதும் போது அதில் வடபிராமிக்குரிய 'ஹ'(Ga) என்ற எழுத்தே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இலங்கையில் இதற்குப் பதிலாக பல சாசனங்களில் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் 'க'(Ka) என்ற எழுத்தே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இப்பெயரைப் பேராசிரியர் பரணவிதானா 'நக' (Naka) என்றே வாசித்துள்ளார். பிராகிருத மொழி வழக்கில் நெடில் குறிலாவது வழக்கமாக இருப்பதால் இதை 'நாக' (Nāka) என வாசிப்பதே பொருத்தமாகும் (பத்மநாதன் 2006:35). இருப்பினும் சில சாசனங்களில் தமிழகத்தைப் போல் நெடிலுக்குரிய குறியீடு பயன்படுத்தப்பட்டு இப்பெயர் நாக (Nāka) என்றும் எழுதப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது (Paranavitana 1970: nos.1157, 1120. 1982:). தமிழகப் பிராமிச் சாசனங்களில் நாக என்பதைச் சில சமயங்களில் 'ணாக' என்று எழுதும் வழக்கம் காணப்படுகிறது (Mahadevan 1966:no33). இது இரு மொழிவழக்கின் காரணமாக உச்சரிப்பில் ஏற்பட்ட தடுமாற்றத்தால் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு (பத்மநாதன் 2006:35). இந்த அம்சம் சமகால இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகிறது. இது நாக என்ற பெயரை ணாக என எழுதுவதில் இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்பைக் காட்டலாம்.



சடணாகராசன்

பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் அப்பண்பாட்டு மக்கள் பிராமி எழுத்தின் பயன்பாட்டை அறிந்திருந்தனர் என்பதை அப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டுள்ள சாசனங்களில் இருந்து தெரியவருகிறது. இவ்வகையான சாசனங்கள் பெரும்பாலும் தமிழகத்திலும்,இலங்கையிலும் கிடைத்திருப்பதால் இது இரு நாடுகளுக்கும் உரிய தனிப்பண்பாடாகக் கருதலாம். அண்மையில் தமிழகத்தில் ஆதிச்சநல்லூரிலும்,இலங்கையில்அநுராதபுரத்திலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது இப்பண்பாட்டுக்குரிய மட்பாண்டங்களில் பல பிராமி எழுத்துப் பொறிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மட்பாண்டங்கள் நவீன காலக்கணிப்புக்களுக்கு உட்படுத்திய போது அதில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களின் காலம் பௌத்த மதத்துடன் வடபிராமி எழுத்து அறிமுகமாவதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது (Conigham, Robin., 2002). பொதுவாக எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் அக்காலச் சமூகத்தில் வணிகப் பொருட்களை இடத்திற்கு இடம் எடுத்துச் செல்லும் கொள்கலன்களாகப் பயன்படுத்தப்பட்டதால் அவற்றில் தனிநபர்களின் பெயர்களே பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான பெயர்கள் தமிழக மட்பாண்டங்களில் அறியப்பட்டுள்ளன. அவற்றுள் நாக, ணாக, போன்ற பெயர்களும் இடம்பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது (Subrayalu 1991, Rajan 1994). அண்மையில் வடஇலங்கையில் இரணைமடு, பூநகரி கந்தரோடை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது பெருங்கற்காலச் சின்னங்களுடன் தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (புஷ்பரட்ணம்: 1993, கிருஷ்ணரா :1998). அவற்றுள் இரணைமடுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0085.jpg

மட்பாண்ட கலவோட்டில் 'நாக' என்ற பெயர் காணப்படுகிறது. இப்பெயரை தமிழகத்தின் முதன்மைச் சாசனவியலாளர் ஐராவதம் மகாதேவனும் உறுதிப்படுத்தியிருந்தார்.



வடஇலங்கை இரணைமடுவில் கிடைத்த பிராமி எழுத்துகள் பதித்த மட்பாண்டங்கள்

பிராமிக் கல்வெட்டுக்களில் பரவலாக வழக்கிலிருந்த 'நாக' என்ற தனிநபர் பெயர் சமகாலப் பாளி இலக்கியங்களில் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த தமிழ், சிங்கள மன்னர்களின் பெயர்களிலும் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக துல்லநாஹ (கி.மு.119), கல்லநாஹ (கி.மு.109-103), சோறநாஹ (கி.மு.63-51), மகாநாஹ (கி.பி.7-19) இளநாஹ (கி.பி.33-43), மல்லநாஹ (கி.பி.136-143), குஜநாஹ (கி.பி.186-187) குஞ்சநாஹ (187-189), ஸ்ரீநாஹ (கி.பி.189-209), அபயநாக (231-240) ஸ்ரீநாஹ (கி.பி.240-242), போன்ற மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம். இதில் நாஹ என்ற பெயர் மன்னர்களின் இயற்பெயரின் பின்னொட்டுச் சொல்லாக வருவதையும், ஸ்ரீநாஹ என்ற பெயருக்குரியவர்கள் மாறிமாறி அநுராதபுரத்தில் ஆட்சி செய்ததையும் நோக்கும் போது இப்பெயர் குலப்பெயராக அல்லது வம்சப்பெயராகப் பயன்படுத்தியிருக்கலாம் எனக் கூறலாம். மேலும் இதில் வரும் மன்னர்களின் பெயர்கள் பாளி மொழிக்கு ஏற்ப திரிபடைந்திருந்தாலும் அவர்களில் சிலரைத் தமிழ் அரசர்களாகவும் அடையாளம் காணமுடிகிறது. பேராசிரியர் பத்மநாதன் மேற்கூறப்பட்ட நாக மன்னர்களுள் கல்லாட்டநாக, குஜ்ஜநாக, குஞ்சநாக ஆகிய மன்னர்களின் பெயர்கள் தமிழ் மொழியோடு தொடர்புடையவை என்பதற்கு பொருத்தமான ஆதாரங்களை எடுத்துக்காட்டியுள்ளார் (பத்மநாதன் 2006:33-34). இதற்கு மேலும் உதாரணமாக தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் கிடைத்த பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்களைக் குறிப்பிடலாம். இங்கு கி.மு 3-2ஆம் நூற்றாண்டுக்குரிய நூற்றுக்கணக்கான நாணயங்கள் கிடைத்துள்ளன. இந்நாணயங்களில் பொறிக்கப்பட்ட பெரும்பாலான பெயர்கள் பிராகிருத மொழிக்கு உரியதாக இருப்பினும் சில பெயர்கள் தமிழிலும், தமிழ்மயப்படுத்தப்பட்ட பிராகிருதத்திலும் உள்ளன. இதில் சிறப்பாக கருத்தில் எடுக்க வேண்டிய முக்கிய அம்சம் சில நாணயங்களில் தமிழ் மொழிக்கே சிறப்பான 'ன' (ற), 'ள' (ள) போன்ற எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாகும். இந்நாணயங்களை வெளியிடக் காரணமாக இருந்த குறுநிலத் தலைவர்கள் அல்லது அதிகாரம் பெற்றிருந்த தலைவர்கள் நாக இனக் குழுவுக்குரிய தமிழர்கள் என்பதற்கு நாணயங்களில் பொறிக்கப்பட்ட 'நாக' அல்லது 'ணாக' என்று பொறிக்கப்பட்ட நாணயங்கள் சான்றாக உள்ளன (Bopearachchi 1999:51-60, Pushparatnam 2003:67-78). அதில் சிறப்பாக குறிப்பிடத்தக்க அம்சம் இங்கு கிடைத்த நாணயமொன்றில் அதை வெளியிட்ட சிற்றரசனின் பெயர் 'சடணாகராசன்' என எழுதப்பட்டுள்ளது (Pushparatnam 2002: 5-6). இதன் மூலம் இம்மன்னனது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த மக்களில் ஒரு பிரிவினராவது தமிழ் மொழி பேசிய நாக இன மக்களாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0086.jpg

இலங்கையில் பலதரப்பட்ட சமூகத்திலும் தனிநபர் பெயராக இருந்த நாக என்ற பெயர் சமகாலத்தில் வடஇலங்கையைக் குறித்த இடப் பெயராக அழைக்கப்பட்டதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. அநுராதபுர அரசை முதன்மைப்படுத்திக் கூறும் முதல் வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மஹாவம்சம் கி.மு.6ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்த போது நாகதீபத்தில் இரு நாக மன்னர்களிடையே ஏற்பட்ட சிம்மாசனப் போராட்டத்தை தீர்த்துவைத்ததாகக் கூறுகிறது *(Mahavamsa 8:54)*. இதில் மஹாவம்சம் கூறும் புத்தர் வருகை ஒரு ஐதீகமாக இருப்பினும் இந்நூல் எழுதப்பட்ட கி.பி 6ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்திற்கு வடக்கில் இருந்த பிராந்தியம் நாகதீபம் என்ற பெயரால் அழைக்கப்பட்டதை இவ்வரலாற்றுச் செய்திகள் உறுதிப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளலாம். ஆதிகாலத்தில் இந்தியாவை அடுத்து இலங்கையுடன் அதிக அளவில் வணிக உறவை ஏற்படுத்திக் கொண்ட வரலாறு கிரேக்க, உரோம நாட்டு வணிகர்களுக்கு உண்டு.

இவ்வுறவுகள் பெரும்பாலும் வடஇலங்கைத் துறைமுகங்கள் ஊடாக நடைபெற்றதை மாதோட்டம், கந்தரோடை, யாழ்ப்பாணக் கோட்டை, பூநகரி, சாட்டி போன்ற இடங்களில் பெறப்பட்ட கிரேக்க, உரோம நாடுகளுக்குரிய பலவகை மட்பாண்டங்கள், மதுச்சாடிகள், நாணயங்கள் என்பன உறுதி செய்கின்றன. இவ்வணிக உறவுகள் பற்றிக் கூறும் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நாட்டவரது நூல்களில் இலங்கையில் இருந்த முக்கிய கரையோரப்பட்டினங்களில் ஒன்றாக 'நாகடிப' என்ற இடம் கூறப்பட்டிருப்பதுடன், அவ்விடம் அவர்கள் வரைந்த தேசப்படத்தில் இலங்கையின் வடபகுதியில் இருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது *(Weerakody 1997:87)*. இது பாளி இலக்கியங்களில் குறிப்பிடப்படும் நாகதீபம் என்பது அறிஞர்களின் பொதுவான கருத்தாகும்.



தொலமியின் வரைபடத்தில் நாகநாடு (நாகடிப)

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0087.jpg



2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகநகர் பற்றிய கல்வெட்டு

அநுராதபுரத்திற்கு வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட கி.மு.1ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமிச் சாசனம் ஒன்று இங்கிருந்த 'நாகநகர்' பற்றிக் கூறுகிறது *(Karunaratne 1984:82)*. இது நாகர்கள் வாழ்ந்த நகரம் என்ற பொருளில் அமைந்துள்ளது. பிராகிருத மொழியில் 'நஹநஹர' (Naganagara) என எழுதப்படும் இப்பெயர் இச்சாசனத்தில் தமிழில் ந(ா)கநகர் (Nakanakar) என எழுதப்பட்டுள்ளது. நகர் என்பது ஒரு தமிழ்ச் சொல். இது தமிழிலும் மலையாளத்திலும் நகர் (Nakar) எனவும், வடமொழியில் நஹர (Nagara) என்றும் அழைக்கப்படும். ஆனால் பேராசிரியர் பரணவிதானா இப்பெயரை 'நகர' என வாசித்திருப்பதன் மூலம் இதை வடமொழி சார்ந்த பெயராக எடுத்துக் கொள்கிறார் *(Paranavitana 1970:112)* ஆனால் ஆதிப்பிராமிச் சாசனங்களில் மெய்யெழுத்தை குறிக்கப் புள்ளிகள் இடப்படாததால் அவை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மெய்யெழுத்தாக எடுத்து வாசிக்க வேண்டியுள்ளது. இதனால் சாசனத்தில் 'நகர' என்ற சொல்லின் இறுதியில் வரும் எழுத்தை 'ரா' (ra) என வாசிக்காது 'ர்' (r) என வாசிப்பதே பொருத்தமாகும். கலாநிதி இரகுபதி சாசனத்தில் வரும் இந்த 'நாகநகர்' அக்காலத்தில் கந்தரோடையின் தலைநகராக இருந்திருக்கலாம் அல்லது கந்தரோடையைக் குறித்திருக்கலாம் எனக் கருதுகிறார் *(Ragupathy 1991)*. ஆனால் நிக்லஷ் என்ற அறிஞர் கி.பி.9ஆம் நூற்றாண்டுக்குரிய சாசனமொன்றில் வரும் நாகநகரை ஆதாரம் காட்டி சாசனத்தில் வரும் நாகநகரை வவுனியாவுக்கு வடக்கில் இருந்த ஒரு நகரம் என அடையாளப்படுத்துகிறார் *(Nicholas 1963:81)* இந்நகரம் எங்கு அமைந்திருந்தாலும் இந்த நகரில் வாழ்ந்த நாகர்கள் தமிழர்களாக இருந்தனர் என்பதை இச்சாசனம் உறுதிப்படுத்துகிறது என்பதில் ஐயமில்லை.

Tamileelam Archive



வல்லிபுர பொற்சாசனத்தில் நாகதீபம்

1936 ஆம் ஆண்டு வடஇலங்கையில் வல்லிபுரம் என்ற இடத்தில் பிராமி எழுத்துப் பொறித்த பொற்சாசனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு பொற்சாசனமாகும். கி.பி.3ஆம் நூற்றாண்டுக்குரிய இச்சாசனத்தில் 'நகதிவ' என்ற இடத்தில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரை பற்றிக் கூறப்படுகிறது *(Paranavitana 1982:79-80)*. இந்த 'நாகதிவ' என்ற பெயர் பாளி இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாகதீபம் என்பதில் எந்த ஐயமுமில்லை. இச்சாசனத்தில் காணக்கூடிய சிறப்பம்சம் சாசனத்தில் பிராகிருத மொழியுடன் சில தமிழ்ச் சொற்களும் கலந்து எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக 'நாக' என்ற இடப்பெயரை எழுதுவதற்கு வடமொழிக் 'ஹ' (ga) வுக்குப் பதிலாக இச்சாசனத்தில் தமிழுக்குரிய 'க' (ka) பயன்படுத்தப்பட்டிருப்பதைக் குறிப்பிடலாம். இந்த வேறுபாடுகள் இச்சாசனத்தை நாகதீபத்தில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்தர்கள் எழுதியிருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது.

அண்மையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உடுத்துறை என்ற கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி.2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயம் ஒன்று நாகதீபத்தை அடையாளப்படுத்துவதில் முக்கிய

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0088.jpg

சான்றாகக் காணப்படுகிறது. இந்நாணயத்தின் முன்பக்கத்தில் 'நாகபூமி' (Nākapūmi) என்ற பெயரும், பின்பக்கத்தில் பொலம் என்ற பெயரும் காணப்படுகின்றன. இலங்கைப் பிராமிச் சாசனங்கள் சிலவற்றில் 'பூமி' (Bumi) என்ற சொல்லும், 'நஹபூமி' என்ற பெயரும் காணப்படுகின்றன (Paranavitana 1982:168-9). அவற்றில் நஹபூமி (Nagabumi) என்ற வாசகம் பிராகிருத மொழிக்குரிய வடபிராமியில் எழுதப்பட்டிருக்கும் போது உடுத்துறையில் கிடைத்த நாணயம் தமிழ் மொழிக்கே சிறப்பான தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்டுள்ளமை முக்கிய வேறுபாடாக உள்ளது (புஷ்பரட்ணம் 2003:116-119). இந்த வேறுபாடு பாளியில் நாகதீபம் என அழைக்கப்பட்ட பிராந்தியம் தமிழில் நாகபூமி என அழைக்கப்பட்டதை எடுத்துக்காட்டுவதாக கருத இடமுண்டு.

பாளி மொழியில் நாகதீபம் என அழைக்கப்பட்ட பிராந்தியம் தமிழில் நாகநாடு என அழைக்கப்பட்டதற்கும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. கி.பி. 6ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் தோன்றிய இருபெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை தமிழகத்திற்கு அப்பால் கடல்கடந்து செல்லவேண்டிய இடங்களில் ஒன்றாக நாகநாட்டைக் குறிக்கின்றது. இதன் பின்னர் தோன்றிய கலிங்கத்துப்பரணியில் ஜெயங்கொண்டார் இராஜபாரம்பரியம் பற்றிக் கூறும் போது சோழவம்சத்து கிள்ளிவளவன் நாகநாட்டு இளவரசியை மணந்த கதை கூறப்படுகிறது. இதேபோல் வேலூர்ப்பாளைச் செப்பேட்டில் பல்லவ மன்னன் ஒருவன் நாககுல மகளை மணந்த செய்தி சொல்லப்படுகிறது (பாலசுப்பிரமணியம்). மேற்கூறப்பட்ட மூலாதாரங்களில் கூறப்படும் நாகநாட்டையும், அதனோடு தொடர்புடைய வரலாற்றுச் சம்பவங்களையும் ஆய்வு செய்த அறிஞர்கள் இவற்றில் சுட்டிக்காட்டப்படும் நாகநாடு இலங்கைப் பாளி நூல்கள் கூறும் நாகதீபத்தையே குறிப்பதாக கருதுகின்றனர்.

பாளி இலக்கியங்களில் ஆறாம் நூற்றாண்டின் பின்னர் வடஇலங்கை நாகதீபம் என்ற பெயருடன் உத்தரதேசம் என்ற இன்னொரு பெயராலும் அழைக்கப்படுகிறது. இப்பெயர்கள் ஒரேபிராந்தியத்தை குறித்தனவா அல்லது அப்பிராந்தியங்களின் எல்லைகள் வேறுபட்டிருந்தனவா என்பதற்கு அவ்விலக்கியங்களில் ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆயினும் நாகதீபம், உத்தரதேசம் ஆகிய பிராந்தியங்களுடன் தொடர்புடைய வரலாற்றுச் சம்பவங்களை நோக்கும் போது அவை ஒரு பிராந்தியத்திற்குரிய நிகழ்ச்சிகளாகவே காணப்படுகின்றன. இதற்குப் பின்வரும் சம்பவங்களைக் குறிப்பிடலாம். ஏழாம் நூற்றாண்டில் ஹட்டதத்தன் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த போது அவனுக்குப் பயந்த சிங்கள இளவரசன் 'மானா' என்பவன் உத்தரதேசத்தில் அடைக்கலம் பெற்றுப் பின்னர் தமிழ்நாடு சென்றதாக சூளவம்சம் கூறுகிறது (Culavamsa 47: 2-7). எட்டாம் நூற்றாண்டில் ஸ்ரீநாக என்பவன் தலைமையில் உத்தரதேசத்தில் இருந்து அநுராதபுரத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு பற்றிய செய்திகள் சூளவம்சத்தில் காணப்படுகின்றன (Culavamsa 44: 70-73). ஒன்பதாம் நூற்றாண்டில் (கி.பி.835) பாண்டியமன்னன் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் அநுராதபுரத்திற்கு எதிராகப் படையெடுத்து வந்து உத்தரதேசத்தில் தங்கியிருந்த போது மாதோட்டத்தில் வாழ்ந்த தமிழர்களும் அவர்களுடன் இணைந்து அநுராதபுர அரசைத் தோற்கடித்தனர் என இந்நூல் மேலும் கூறுகிறது (Culavamsa 50:12-42). பக்தி இயக்கத்தை தலைமையேற்று நடாத்திய நாயன்மார்களுள் ஒருவரான சுந்தரர் தேவாரத்தில் தமிழகத்தை அடுத்து முதன்மை பெற்ற ஆலயங்களில் ஒன்றாக வடஇலங்கையில் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரத்தையும், கிழக்கிலங்கையில் திருகோணமலையிலுள்ள கோணேஸ்வரர் ஆலயத்தையும் போற்றிப்பாடுகிறார். பேராசிரியர் வேலுப்பிள்ளை மாதோட்டத்திலுள்ள ஆலயம் கேதீஸ்வரம் என்ற பெயரைப் பெற்றதற்கு அது நாகரின் ஆலயமாக இருந்ததே காரணம் எனக் குறிப்பிடுகிறார் (Kētu is considedered to be a cobra repreaening the Nagas. Veluppillai 2002:154). கி.பி.10ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் வல்லபன் என்பான் நாகதீபத்தின் மீது படையெடுத்த செய்தி காணப்படுகிறது (Culavamsa 53:12-16) இப்படையெடுப்பு தோல்வியில் முடிந்திருக்கலாம் என்பதை வெசகிரியில் கிடைத்த

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0089.jpg

சிங்களச் சாசனம் உறுதிப்படுத்துகிறது *(E.Z,I:35-51)*. கி.பி.13ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜவலிய என்ற சிங்கள இலக்கியத்தில் வடஇலங்கை 'மணிநாகதீப' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இவ்விடம் கந்தரோடையாக இருக்கலாம் என கொடகும்புர குறிப்பிடுகிறார் *(Godakumbara 1968:7)*. ஏறத்தாழ இதேகாலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து வடஇலங்கைமீது படையெடுத்த கலிங்கமாகன் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி அங்கு நாகர்குல அரசனைச் சந்தித்ததாக மட்டக்களப்புமான்மியம் கூறுகிறது *(மட்டகளப்புமான்மியம் :54)*. மேற்கூறப்பட்ட ஆதாரங்களில் இருந்து அநுராதபுரத்திற்கு வடக்கிலிருந்த பிராந்தியம் கி.பி.13ஆம் நூற்றாண்டுவரை நாகதீபம், நாகநாடு, நாகபூமி முதலான பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கலாம் என்பது தெரிகிறது.

பண்டைய வரலாற்று ஏடுகளில் இலங்கையிலுள்ள எல்லாப் பிராந்தியங்களுக்கும் தனித்துவமான வரலாறு இருந்ததாகக் கூறமுடியவில்லை. ஆனால் வடஇலங்கை நாகதீபம் என்ற பெயரால் தனித்து அடையாளப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. இதற்கு வடஇலங்கை புவியியல் ரீதியாக மட்டுமன்றி பண்பாட்டு ரீதியாகவும் தனித்துவமான பிராந்தியமாக இருந்தமை காரணமாக இருக்கலாம். பாளி இலக்கியங்கள் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் பலரும் தெற்கே பல மைல் தொலைவில் உள்ள மகாகமை போன்ற அரசுகளுடன் கொண்டிருந்த அரசியல் உறவுகள் பற்றிக் கூறுகின்றன. ஆனால் அநுராதபுரத்திற்கு வடக்கே மிகக்கிட்டிய தொலைவில் இருந்த நாகதீபத்துடனான அரசியல் உறவுகள் பற்றிக் குறைந்த அளவில் தானும் கூறவில்லை. இந்த வேறுபாடு அநுராதபுர நாகரிக வட்டத்திற்குள் நாகதீபம் உட்பட்டிருக்கவில்லை என எண்ணத்தோன்றுகிறது.

இலங்கையில் நுண்கற்கால, பெருங்கற்காலப் பண்பாடுகளுடன் நாக இனக்குழு தோன்றியதாகக் கூறப்படுகிறது. இப்பண்பாட்டு மக்கள் நாகதீபத்திலும் வாழ்ந்ததற்குப் பல இடங்களில் ஆதாரங்கள் கிடைத்துள்ளன *(முதலாம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது)*. இப்பண்பாடுகளுக்கும் தமிழகப் பண்பாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டிய பேராசிரியர் இந்திரபாலா தமிழகத்தில் இருந்து இப்பண்பாடுகள் முதலில் வடஇலங்கைகுப் (நாகதீபத்திற்கு) பரவி அங்கிருந்தே இலங்கையின் ஏனைய பிராந்தியங்களுக்குப் பரவியதாகக் கூறுகிறார் *(இந்திரபாலா 2006)*. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தமிழ் எழுத்து, தமிழ் மொழி தோன்றியதற்குப் பிராமிச் சாசனங்கள் சான்றாக உள்ளன. அச்சாசனங்களில் தமிழில் நாக, நாகன், நாகர் முதலான பெயர்கள் காணப்படுகின்றன. இலங்கை - தமிழக உறவில் வடஇலங்கை (நாகதீபம்) ஒரு குறுக்கு நிலமாகவும் தமிழகப் பண்பாட்டை முதலில் உள்வாங்கும் தொடக்கவாயிலாகவும் இருந்துள்ளது. இத்தொடர்பின் காரணமாக வடஇலங்கையின் பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக தமிழ் மொழிபேசும் இனமாக நாகர் வாழ்ந்திருக்கலாம் எனக்கூறலாம்.ஏனெனில் இலங்கையின் தொடக்காலக் குடியிருப்புக்கள் கடற்கரை சார்ந்த இடங்களிலும், துறைமுகப் பகுதிகளிலும் ஏற்பட்டு பின்னர் நாட்டின் உட்பகுதிக்குச் சென்று குடியேறியுள்ளனர். பேராசிரியர் சுதர்சன் செனிவரட்ணா இலங்கையின் பூர்வீக குடியிருப்புக்கள் நாட்டின் கரையோரத் துறைமுக நகரங்களில் முதலில் ஏற்பட்டதற்கு நம்பகரமான தொல்லியல் ஆதாரங்கள் இருப்பதாகக் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது *(Seneviratne 1984: 237-307)*. இலங்கையில் சமீப காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் ஈழத்தின் கரையோரப் பகுதிகளில் குறிப்பாக வடக்கு- கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களே அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பண்பாட்டின் பல்வேறு அம்சங்கள் தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டை பெருமளவுக்கு ஒத்தவையாகக் காணப்படுகின்றன. இதனால் இக்கரையோரங்களில் வாழ்ந்த நாக இனக்குழுவின் மொழி தமிழாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இலங்கைப் பிராமிச் சாசனங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பௌத்த மதத்துடன் வடஇந்தியாவில் இருந்து பிராமி எழுத்தும், பிராகிருத மொழியும் அறிமுகமாவதற்கு முன்னர் இங்கு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0090.jpg

தென்னிந்தியாவில் இருந்து அறிமுகமான திராவடி (தமிழ்) எழுத்து இருந்தது எனவும் அது வடபிராமி எழுத்தின் தாக்கத்தால் படிப்படியாக செல்வாக்கிழந்தது எனவும் கூறியுள்ளனர். இக்கூற்று பிராகிருத மொழிக்கு முன்னர் தமிழ் மொழி இலங்கையில் இருந்ததற்குச் சான்றாகும்.

இவ்வாறு கூறுவதற்கு இன்னொரு ஆதாரமும் காணப்படுகிறது. பாளி வரலாற்று ஏடுகளில் இலங்கையின் புராதன துறைமுகங்களின் வரலாறு கூறப்பட்டிருந்தாலும் அவற்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த துறைமுக நகரங்களே 'பட்டன' என்ற விகுதியோடு அழைக்கப்படுகிறது. இதற்கு ஜம்புக்கோளப்பட்டன (யாழ்ப்பாணம்) *(Mahavamsa:xi.23,38, xviii:7,xix 23, 25, 60 xx:25)*, கோணகாமகபட்டன (திருகோணமலை மாவட்டம்) *(Ibid:iii.24, Culavamsa xli: 79,xlviii.5. lxxi.18)*, மஹபட்டன (மன்னார் மாவட்டம்) *(இந்திரபாலா 2006:180)* ஆகிய துறைமுக நகரங்களைக் குறிப்பிடலாம். இதில் பின்னொட்டு விகுதியாக வரும் 'பட்டினம்' என்பதை ஒரு திராவிடச் சொல்லாகக் குறிப்பிடும் மொழியியல் அறிஞர் பரோ இது பட், பட்டி என்ற சொல்லின் அடியாகப் பிறந்ததாகக் குறிப்பிடுகிறார் *(Burrow 1968:211)*. இப்பெயர் மலையாள, கன்னட மொழிகளில் பட்டி எனவும், தெலுங்கில் பட்டு எனவும், சமஸ்கிருதத்தில் பட்டன எனவும் அழைக்கப்படுகிறது. இவை கடற்கரைசார்ந்த நகர், சிறுநகர், கிராமம், ஊர் போன்ற இடங்களைக் குறிக்கின்றன *(Burrow & Emeneau 1961:no.3199)*. சங்க நூல்களில் பட்டினம் என்பது பொதுவாக கடற்கரைசார்ந்த இடங்களுக்குரிய பெயராகக் குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில் ஆந்திராவில் இருந்து கன்னியாகுமரி வரை கடற்கரை சார்ந்த சமூகங்கள் 'பட்டினத்தார்' என அழைக்கும் மரபு காணப்படுகிறது *(Veluppillai 2002:149)*. ஈழத் தமிழரிடம் நகரங்களில் வசிப்போரை பட்டணத்தார் என அழைக்கும் மரபு இன்றும் காணப்படுகிறது. பேராசிரியர் இந்திரபாலா இலங்கையில் ஏனைய துறைமுகங்களுக்கு பட்டினம் என்ற விகுதி பயன்படுத்தப்படாது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த துறைமுகங்களுக்கு மட்டும் அப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளமை ஆதியிலும் இங்கு தமிழ்மொழி பேசுவோர் அல்லது திராவிட மொழிபேசுவோர் வாழ்ந்த இடங்கள் என்பதற்கான மறைமுக ஆதாரங்கள் எனக் குறிப்பிடுகிறார் *(இந்திரபாலா 2006: 180)*.



வவுனியா மாவட்டத்தில் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட
நாகச் சிற்றரசுகள் பற்றிய கல்வெட்டுக்கள்

இலங்கை வரலாற்றில் வடஇலங்கை நாகதீபம் என்ற பெயரால் தனித்து அடையாளப்படுத்தப்பட்டமைக்கு இப்பிராந்தியத்தில் தோன்றி வளர்ந்த அரச மரபும் ஒரு காரணமாகும். அநுராதபுர அரசை முதன்மைப்படுத்திக் கூறும் முதல் வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மஹாவம்சம் கி.மு.6ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்த போது நாகதீபத்தில் இரு நாக மன்னர்களிடையே ஏற்பட்ட சிம்மாசனப் போராட்டத்தை தீர்த்துவைத்ததாகக் கூறுகிறது *(Mahavamsa 8:54)*. இதில் மஹாவம்சம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0091.jpg

கூறும் புத்தர் வருகை ஒரு ஐதீகமாக இருப்பினும் வடஇலங்கையில் அரச மரபு இருந்ததை ஐதீகமாக கொள்ளமுடியாது. தமிழகத்தின் பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய சமீபகால ஆய்வுகள் சங்க இலக்கியம் கூறும் பண்பாட்டின் ஒரு பகுதியாக நோக்கப்படுகிறது. இதற்குப் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் தோன்றிய பல பண்பாட்டு அம்சங்களை சங்க இலக்கியம் பிரதிபலிக்கிறது. அதற்குள் அரச உருவாக்கமும் உள்ளடங்குகிறது. வடஇலங்கையில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய பல இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன (முதலாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது Seneviratne 1991:99-131, Ragupathy 1987, Indrapala 20:5, Sitrampalam 2004:231-282, புஷ்பரட்ணம் : 1993, 2005). இதனால் தமிழகத்தை ஒத்த அரச உருவாக்கம் வடஇலங்கையிலும் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறலாம். கலாநிதி இரகுபதி பல்வேறு ஆதாரங்கள் காட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள கந்தரோடையை பெருங்கற்காலப் பண்பாட்டின் தலைமைக் குடியிருப்பாக குறிப்பிடுகிறார். போல் பீரிஸ் அநுராதபுரத்தை அடுத்து இலங்கையில் தோன்றிய புராதன நகரமாக கந்தரோடையைக் குறிப்பிடுகிறார். இக்கூற்றுக்கள் அரச உருவாக்கம் நிகழ்ந்ததன் அடையாளங்களாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டை பெருங்கற்கால மையத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது அப்பண்பாட்டுக்குரிய மனித எலும்புக்கூட்டின் தலைமாட்டில் கறுப்பு-சிவப்பு நிற வட்டிலில் வைக்கப்பட்டிருந்த ஈரெழுத்துப் பொறித்த முத்திரை மோதிரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இம்முத்திரையின் மேற்பகுதியில் சிந்துவெளி முத்திரைகளை நினைவுபடுத்தும் மூன்று குறியீடுகளும், அதற்கு கீழே ஒலிப்பெறுமானமுள்ள மூன்று பிராமி எழுத்துக்களும் உள்ளன. அவை கோவேத, 'கோவேதம்', கோவேதன் என வாசிக்கப்பட்டுள்ளது. இப்பெயரின் முதலெழுத்தாக வரும் 'கோ' என்ற சொல்லுக்கு அரசன், வேந்தன் என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இம்முத்திரைச் சாசனம் இங்கு தமிழ்ச் சிற்றரசு இருந்ததற்கான ஆதாரமாக காட்டப்படுகிறது (Indrapala 2001: 324-25). இவ்வாதாரம் பெருங்கற்காலப் பண்பாட்டின் வடஇலங்கையில் அரச உருவாக்கம் நிகழ்ந்ததற்கு முக்கிய சான்றாகும். தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு மற்றும் கடல்சார் வாணிபத்துடன் 'வேள்' ஆட்சி தோன்றியதாகக் கூறப்படுகிறது. இதற்கு சங்க இலக்கியத்திலும், பிராமிக் கல்வெட்டுக்களிலும் வரும் 'வேள்', 'வேளீர்' பற்றிய ஆதாரங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. சமகால ஈழத்திலும் இது பற்றிய ஆதாரங்கள் பாளி இலக்கியங்களிலும், பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும், வடஇலங்கையில் வவுனியா மாவட்டத்திலும் உள்ள நான்கு பிராமிக் கல்வெட்டுக்களில் வேள் என்பவன் தலைவனாகவும், ஒரு கல்வெட்டில் குதிரை வணிகனாகவும் குறிப்பிடப்படுகின்றனர் (Paranavithana 190: Nos.353, 355, 403, 477, 529). வடமொழியில் ராஜா என்ற பட்டத்திற்கு சமமான கருத்தில் தமிழில் வேள் என்ற பட்டப்பெயர் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது (Thapar1984:83). யாழ்ப்பாண பேரகராதியில் 'வேள்' என்ற சொல்லுக்கு மண் என்ற கருத்து கொடுக்கப்பட்டுள்ளது (Tamil Lexicon vol.vi:3842). இதன் பொருள் மண்ணை ஆள்பவன் என்ற கருத்தில் வந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. வவுனியா மாவட்டத்தில் காணப்படும் நான்கு பிராமிக் கல்வெட்டுக்கள் நாகச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்ததாகக் கூறுகின்றன (Tamil Lexicon vol.vi:3842). இதில் ஒரு கல்வெட்டு தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களைப் போல் நெடிலில் 'நாஹ' என எழுதப்பட்டிருப்பதுடன், நாக அரசனின் மகள் அநுரதியின் கணவன் உதிய எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. உதிய எனப் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட இப்பெயர் சமகாலத்தில் ஈழத்திலும் தமிழகத்திலும் உதியன், உதிரன் என எழுதப்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன.

மிகிந்தலையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமிச் சாசனம் ஒன்று 'தீபராஜா' என்ற பெயர் கொண்ட மன்னன் ஒருவனைப் பற்றிக் கூறுகிறது. இவன் நாகதீபத்தில் ஆட்சி செய்த மன்னனாக இருக்கவேண்டும் எனப் பேராசிரியர் பரணவிதானா குறிப்பிடுகிறார் (Paranavithane

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0092.jpg

1970: lxiii). சமகால வரலாறு கூறும் ஸம்மோஹவிநோதனீ என்ற பாளி நூல் நாகதீபத்து ஆட்சியாளன் 'தீபராஜ' என்ற விருதைப் பெற்றிருந்தான் எனக் கூறுகிறது. பேராசிரியர் இந்திரபாலா 'தீபராஜ்' என்ற இப்பெயரே பின்னர் தமிழில் 'தீபத்தரையன்' என மாறியதாகக் குறிப்பிடுகிறார் (இந்திரபாலா 2006:191-192).

இலங்கையில் அரச மரபு இருந்ததை உறுதிப்படுத்தும் நம்பகரமான ஆதாரமாக நாணயங்களைக் குறிப்பிடலாம். தென்னாசியாவின் முதன்மை நாணயவியலாளர்களில் ஒருவரான பரமேஸ்வரி லால் குப்தா பண்டைய கால நாணயங்கள் பற்றிய ஆய்வின் மூலம் வடஇந்திய வரலாற்று ஏடுகளில் சொல்லப்படாத சில மன்னர்களினதும், சிற்றரசுகளினதும் வரலாற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார் *(Gupta 2000)*. இந்த உண்மை வடஇலங்கைக்கும் பொருந்தும் எனக் கூறலாம். இலங்கைத் தமிழர் வரலாற்றை ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளியிடப்பட்ட 'சேது' மொழிபொறித்த நாணயங்களைத் தவிர இலங்கையில் கிடைத்த ஏனைய தமிழ் நாணயங்களை இலங்கைத் தமிழருடன் தொடர்புபடுத்திப் பார்க்கவில்லை. இக்கட்டுரை ஆசிரியர் 1990 களில் இருந்து வடஇலங்கையில் மேற்கொண்ட ஆய்வில் அதிக எண்ணிக்கையிலான நாணயங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவற்றுள் சிலவகை நாணயங்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள், சமயச் சின்னங்கள், குறியீடுகள் என்பவற்றைக் கொண்டு இந்நாணயங்களை தமிழ்ச் சிற்றரசர்கள் அல்லது இந்து மதத்தை அரச மதமாக கொண்டிருந்த சிற்றரசர்கள் வெளியிட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இந்நாணயங்களின் வடிவமைப்பு தமிழகத்தில் கி.பி 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் குறிப்பாகச் சங்ககாலத்தில் வெளியிடப்பட்ட நாணய மரபைப் பின்பற்றி வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. ஆயினும் நாணயங்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள், சமயச் சின்னங்கள், குறியீடுகள் என்பன தமிழக நாணயங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டவையாக காணப்படுகின்றன. இந்நாணயங்கள் இலங்கையில் அதிலும் குறிப்பாக வடஇலங்கையிலேயே பெரும்பாலும் கண்டுபிடித்துப்பட்டிருப்பதால் இவற்றை இங்கு ஆட்சி செய்த சிற்றரசர்கள் வெளியிட்டிருக்கலாம் எனக் கூறமுடியும். இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்து வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களை ஆய்வு செய்த நாணயவியல் அறிஞர்களான எலியொட் (Eliot 1970), பிதுல்ப் (Bidduph1966), மிற்சினர் (Mictchiner 1998) போன்றோர் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களில் சில தனித்துவமான அம்சங்கள் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். இருப்பினும் இங்கு தமிழ் அரசமரபு இருக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்ட அவர்கள் இந்நாணயங்களில் காணப்படும் காளை, மீன் போன்ற சின்னங்களை தமிழக அரச வம்சங்கள் வெளியிட்ட நாணயங்களுடன் தொடர்புபடுத்தி இவற்றைப் பல்லவர், பாண்டியர் வெளியிட்ட நாணயங்கள் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். ஆனால் இக்கருத்துக்கள் பொருத்தப்பாடானதாகத் தோன்றவில்லை என்பதற்குப் பின்வரும் காரணங்களை எடுத்துக்காட்டலாம்.

வடஇலங்கையில் கிடைத்த முதலாவது வகை நாணயத்தின் முன்புறத்தில் பலிபீடத்திற்கு முன்னால் நிற்கும் நிலையில் காளையும், பின்புறத்தில் நான்கு கோடுகளால் இணைக்கப்பட்ட சதுரத்திற்குள் சிறிய வட்டமும், அதற்கு மூன்று அல்லது நான்கு புள்ளிகள் கொண்ட சின்னமும் காணப்படுகின்றன. இதன் முன்பக்கத்தில் நிற்கும் நிலையில் காளை உருவம் காணப்படுகிறது. இவ்வடிவம் அப்படியே சங்ககாலப் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களை ஒத்துள்ளன. இவ்வொற்றுமை இலங்கைத்தமிழர் சங்க கால நாணய



வடஇலங்கையில் கிடைத்த
முதலாவது வகை தமிழ் நாணயங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0093.jpg

மரபைப் பின்பற்றி இவ்வகை நாணயங்களை வெளியிட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. ஆனால் நாணயத்தின் பின்பக்கத்தில் சங்ககாலப் பாண்டியர் பொறித்த மீன் இலட்சனை காணப்படவில்லை. மிற்சினர் இந்நாணயத்தை கி.பி.6ஆம் நூற்றாண்டில் பல்லவர் வெளியிட்டதாகக் கூறுகிறார். இவரின் கருத்தையே ஏனைய ஆய்வாளர்களும் பொருத்தமான முடிவாக எடுத்துள்ளனர் *(Codrington 1924:24, Mictchhiner 1998: 135,Seyone 1998:28)*. ஆனால் தமிழகத்தில் கிடைத்த பல்லவ நாணயங்களை ஆராய்ந்தால் அவற்றில் ஒன்றுதானும் சதுரவடிவில் வெளியிடப்பட்டிருந்ததற்கு ஆதாரம் காணப்படவில்லை. அண்மையில் பல்லவர் கால நாணயங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்த இரா.கிருஷ்ணமூர்த்தி, ஆறுமுக சீதாராமன் போன்றோர் தமிழகத்தில் கிடைத்த நூற்றுக்கணக்கான பல்லவர் கால நாணயங்களின் புகைப்படங்களையும் இணைத்துள்ளனர். ஆனால் அதில் ஒன்றுதானும் சதுரவடிவில் காணப்படவில்லை.

இரா.கிருஷ்ணமூர்த்தி தனது நூலின் பின்னிணைப்பில் கொழும்பு, பம்பாய், சென்னை போன்ற இடங்களில் உள்ள அருங்காட்சியகங்களில் இருந்து பெறப்பட்டதாகக் கூறி சதுரவடிவில் அமைந்த சில நாணயங்களையும் சேர்த்துள்ளார் *(Krishnamurthy2004:176)*. அவற்றில் ஒன்று வடஇலங்கையில் கிடைத்த முதலாவது வகை நாணயமாகும். தமிழகத்தில் பல்லவர் சதுரவடிவில் நாணயங்கள் வெளியிட்டதற்கு இதுவரை ஆதாரங்கள் கிடைக்காத போதிலும் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களைப் பல்லவருக்குரியதாகக் கருதுவதற்கு பல்லவர் தமது அரச இலட்சனையாக காளை உருவத்தை சில நாணயங்களில் பயன்படுத்தியிருந்தமை காரணமாகும். ஆனால் காளையுருவம் பொறித்த பல்லவ நாணயங்களில் பெரும்பாலும் மன்னன் பெயர் அல்லது பட்டப்பெயருடன் சங்கு, சக்கரம், கப்பல், விளக்குப் போன்ற சின்னங்களும் இடம்பெற்றிருப்பது பொதுவான அம்சமாகக் காணப்படுகிறது. ஆனால் இந்த அம்சங்களை வடஇலங்கையில் கிடைத்த முதலாவது வகை நாணயங்களில் காணப்படவில்லை. அத்துடன் இந்நாணயத்தின் பின்பக்கத்தில் உள்ள சதுரத்திற்குள் அமைந்த சிறிய வட்டமும் அதற்குள் மூன்று புள்ளிகளும் கொண்ட சின்னம் தமிழக நாணயங்களில் மட்டுமன்றி இந்திய நாணயங்கள் எதிலும் காணப்படவில்லை. ஆனால் இலங்கையில் 2ஆம், 3ஆம் நூற்றாண்டில் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட சிங்க உருவம் பொறித்த நாணயங்களில் இந்த அம்சத்தைக் காணலாம். இந்த ஒற்றுமை தமிழ் - சிங்கள மன்னர்களிடையே நாணயங்களை வெளியிடுவதில் பொதுவான நாணய மரபு இருந்துள்ளதைக் காட்டுகிறது. அண்மையில் இவ்வகை நாணயங்கள் சில தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றை உள்ளூர் நாணயம் எனக் குறிப்பிடும் பேராசிரியர் பொப்பேயாராச்சி அதற்கு ஆதாரமாக நாணயங்களை வெளியிடப் பயன்படுத்திய சுடுமண் அச்சுக்கள் அங்கு கிடைத்திருப்பதை ஆதாரமாகக் காட்டியுள்ளார் *(Bopearachchi 1999)*. இதிலிருந்து இந்நாணயங்கள் வடஇலங்கையிலே வெளியிடப்பட்டதென்பது உறுதியாகத் தெரிகிறது.



சிங்கள மன்னர் நாணயங்கள்



சங்ககால நாணயங்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0094.jpg

வடஇலங்கையில் கிடைத்த இரண்டாவது வகை நாணயத்தின் முன்பக்கத்திலும், பின்பக்கத்திலும் மீன் முக்கிய சின்னமாகக் காணப்படுகிறது. பாண்டியர் மீனை அரச இலச்சனையாக நாணயங்களில் பயன்படுத்தியதால் இவை பாண்டியத் தொடர்பால் வடஇலங்கைக்கு வந்ததெனக் கூறப்பட்டுள்ளது *(Mictchiner 1998:235, Biddulph 1966:32,Seyone 1988:27-30)*. அதில் சதுரவடிவில் அமைந்த நாணயங்களை ஏழாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டதாகவும், வட்டவடிவில் அமைந்த நாணயங்கள் பத்தாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டிருக்கலாம் எனவும் மிற்சினர் கூறுகிறார் *(Mictchiner 1998:235)*. ஆனால் பிதுல்ஃப் சதுரவடிவில் அமைந்த நாணயங்களை ஒன்பதாம் நூற்றாண்டில் ஸ்ரீமாறஸ்ரீபல்லவன் இலங்கையை வெற்றி கொண்ட போது வெளியிட்டிருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார் *(Biddulph 1966:32)*. சதுரவடிவில் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் பாண்டியர் நாணயங்கள் வெளியிட்டதற்கு தமிழகத்தில் ஆதாரங்கள் காணப்படவில்லை. சங்ககாலத்தில் பாண்டியர் வெளியிட்ட சதுரவடிவிலான நாணயங்களில் அரச இலட்சனையான மீன் உருவத்தை பயன்படுத்தியிருந்தாலும் அது கோட்டுருவில் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வகை நாணயங்கள் இலங்கையிலும் கிடைத்துள்ளன. ஆனால் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களில் இதற்குமாறாக மீனின் வடிவம் முழு உருவில் பொறிக்கப்பட்டிருப்பதுடன், அதன் அருகே குத்து விளக்கும் சேர்ந்து காணப்படுகிறது. இந்த அம்சம் நாணயத்தின் பின்பக்கத்திலும் காணப்படுகிறது. இந்த அம்சங்களைப் பாண்டியர் வெளியிட்ட எந்த நாணயங்களிலும் காணப்படவில்லை. மேலும் பாண்டியர் மதுரையில் ஆட்சி செய்த காலத்தில் ஒரு மீன் சின்னத்தையும், கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் திருநெல்வேலியை வெற்றி கொண்டு ஆட்சி செய்த காலத்தில் இரு மீன் சின்னத்தையும் வட்டவடிவில் வெளியிடப்பட்ட நாணயங்களில் பொறித்துள்ளனர். இதை அவர்கள் வெளியிட்ட கல்வெட்டுக்களும் கூறுகின்றன. ஆனால் சதுரவடிவில் சங்ககாலத்தில் வெளியிடப்பட்ட எந்த நாணயத்திலும் இரண்டு மீன் சின்னங்கள் பொறித்ததற்கு ஆதாரங்கள் காணப்படவில்லை. மேலும் இந்நாணயங்கள் வடஇலங்கையைத்தவிர இலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலோ அல்லது தமிழகத்திலோ இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை.



வடஇலங்கையில் கிடைத்த
இரண்டாவது வகை தமிழ் நாணயங்கள்

மூன்றாவது வகை சதுரவடிவிலான நாணயத்தின் முன்பக்கத்தில் இடம் மற்றும் வலப்புறம் பார்த்த நிலையில் படுத்திருக்கும் நிலையில் காளைகளின் உருவமும், அவற்றின் முகத்திற்கு முன்னால் பலிபீடமும், காளைகளுக்கு மேலே நாணயத்தின் விளிம்பை ஒட்டி பிறைச்சந்திரனும் காணப்படுகின்றன. நாணயத்தின் பின்பக்கத்தில் இடம் மற்றும் வலப்புறம் பார்த்த நிலையில் நிற்கும் யானைகளின் உருவமும், அதற்கு மேலே நாணயத்தின் விளிம்பை ஒட்டி பிறைச்சந்திரனும் காணப்படுகின்றது. இவ்வகையான நாணய வடிவமைப்பில் முன்பக்கத்தில் காளை உருவத்தையும், பின்பக்கத்தில் யானை உருவத்தையும் கொண்ட நாணயங்கள் வடஇலங்கையைத்தவிர வேறு



வடஇலங்கையில் கிடைத்த
மூன்றாவது வகை தமிழ் நாணயங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0095.jpg

எந்த இடத்திலும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

நான்காவது வகைநாணயம் வட்டவடிவில் அமைந்துள்ளது. இந்நாணயத்தின் முன்பக்கத்தில் வலப்புறம் பார்த்து நிற்கும் நிலையில் குதிரையின் உருவமும், மேலே பிறைச்சந்திரனும், பின்பக்கத்தில் வலப்புறம் பார்த்த நிலையில் நிற்கும் நிலையில் யானையின் உருவமும், விளிம்பை ஒட்டியதாக அங்குசமும் காணப்படுகின்றன. மிற்சினர் இந்நாணயங்களை ஒன்பதாம் நூற்றாண்டில் வடஇலங்கை மீது படையெடுத்த பாண்டிய மன்னன் ஸ்ரீமாறஸ்ரீபல்லவன் வெளியிடப்பட்டதாகக் கூறுகிறார் *(Mictchiner 1998:235)*. ஆனால் இந்நாணயத்தில் பாண்டியரின் அரச இலட்சனையான மீன் சின்னத்தைக் காணவில்லை. தமிழகத்தில் ஸ்ரீமாறஸ்ரீபல்லவன் வெளியிட்ட நாணயங்களில் பெரும்பாலும் அவனது பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வகை வடிவிலமைந்த நாணயங்கள் எவையும் இதுவரை தமிழகத்தில் கிடைக்கவில்லை. இதனால் இந்நாணயத்தை தமிழக அரச வம்சங்களுடனோ அல்லது ஸ்ரீமாறஸ்ரீபல்லவனுடனோ தொடர்பு படுத்துவது பொருத்தமாகத் தெரியவில்லை.



வடஇலங்கையில் கிடைத்த
நான்காவது வகை தமிழ் நாணயங்கள்

தென்னிலங்கையில் தமிழ், சிங்கள சிற்றரசர்களின் ஆட்சியிலிருந்ததை அக்குறுகொட என்ற இடத்தில் கிடைத்த பிராமி எழுத்துப் பொறித்த ஈய நாணயங்களில் இருந்து அறியமுடிகிறது. அவ்வகையான நாணயங்கள் சில வடஇலங்கையில் கந்தரோடை *(Seyon1998: 94, no. 3-10)*, பூநகரி போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. கந்தரோடையில் கிடைத்த நாணயம் ஒன்றில் ஆண்பாலைக் குறிக்கும் 'அன்' என்ற விகுதி காணப்படுகிறது. இது நாகதீபத்தில் தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்ததற்குச் சான்றாகிறது. இதை மேலும் உறுதிப்படுத்துவதில் உடுத்துறையில் கிடைத்த நாணயத்திற்கு முக்கிய இடமுண்டு (இரண்டாம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது). இந்நாணயத்தின் முன்பக்கத்திலும், பின் பக்கத்திலும் பொறிக்கப்பட்டுள்ள பிராமி எழுத்தின் எழுத்தமைதி கொண்டு இந்நாணயம் கி.பி. 1ஆம் அல்லது கி.பி. 2ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டதெனக் கூறமுடிகிறது. அதில் பொறிக்கப்பட்டுள்ள வாசகத்தை நாகபூமி அல்லது நாகவம்சம் என எடுத்துக்கொள்ள முடிகிறது. இது வடஇலங்கைபாளிமொழியில் நாகதீபம், தமிழில் நாகநாடு என அழைக்கப்பட்டதையும், இங்கு நாகச் சிற்றரசர் ஆட்சி இருந்ததற்கும் சான்றாகிறது.



வடஇலங்கையில் கிடைத்த
ஐந்தாவது வகை தமிழ் நாணயங்கள்

மேற்கூறப்பட்ட நாணய ஆதாரங்களில் இருந்து தமிழகத்திற்கு சமமான காலத்தில் இருந்து தென்இலங்கையிலும், வடஇலங்கையிலும் சிற்றரசர்களின் ஆட்சி தோன்றி வளர்ந்ததெனக் கூறலாம். வடஇலங்கையில் கிடைத்த முதலாவது வகை நாணயங்கள் கந்தரோடை, பூநகரி, மாதோட்டம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0096.jpg

ஆகிய இடங்களிலும், தென்னிலங்கையில் அநுராதபுரம், அம்பாந்தோட்டை முதலான இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Codrinton 1942). இந்நாணயத்தின் பின்பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்கள் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களின் பின்பக்கத்தில் உள்ள சின்னங்களைப் பெரிதும் ஒத்துள்ளன. இதனால் இந்நாணயங்களை நாகதீபத்தில் ஆட்சி புரிந்த சிற்றரசுகள் வெளியிட்டவை எனக் கூறுவதைவிட அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த எல்லாளன் போன்ற தமிழ் மன்னர்களுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமாகும். வடஇலங்கையில் கிடைத்த இரண்டாம், மூன்றாம் வகை நாணயங்கள் சதுரவடிவமைப்பைக் கொண்டவை. தமிழகத்தில் சங்ககாலத்தை அடுத்து சதுரவடிவில் நாணயங்கள் வெளியிடும் மரபு மறைந்து போகிறது. இதனால் வடஇலங்கையில் கிடைத்த இந்நாணயங்களை சங்ககாலத்தின் சமகாலத்தில் அதாவது கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் வெளியிடப்பட்டவை எனக் கூறலாம். நான்காவது வகை நாணயங்கள் வட்டவடிவில் வெளியிடப்பட்டவை. தமிழகத்திலும் இலங்கையிலும் வரலாற்றுத் தொடக்ககாலத்தில் இருந்து வட்டவடிவில் நாணயங்கள் வெளியிடும் மரபு இருந்துள்ளது. இதற்கு உடுத்துறையில் கிடைத்த நாணயம் சான்றாகும். இதனால் வடஇலங்கையில் கிடைத்த நான்காவது வகை நாணயங்கள் எக்காலத்தில் வெளியிடப்பட்டவை எனத் திடமாகக் கூறமுடியவில்லை. ஆயினும் இந்நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள யானையின் தோற்றமும், கலைமரபும் இங்கு கிடைத்த சதுரவடிவிலான நாணயங்களில் பொறிக்கப்பட்ட நாணயங்களில் வரும் யானையின் தோற்றத்தை அப்படியே ஒத்திருப்பதால் அவற்றின் சமகாலத்தில் வெளியிடப்பட்டவை எனக் கருத இடமுண்டு.

மேற்கூறப்பட்ட நாணயங்களில் முதலாவது வகை நாணயங்களைத் தவிர ஏனையவை வடஇலங்கையில் மட்டும் கிடைத்தவை. இதனால் இந்நாணயங்கள் நாகதீபத்தில் இருந்த அரசமரபு பற்றிய ஆய்வில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பொதுவாக தமிழகத்தில் சங்க காலத்திலிருந்து வெளியிடப்பட்ட நாணயங்கள் சமகாலத்தில் இலங்கையுடனான வணிக மற்றும் பண்பாட்டுத் தொடர்பால் ஈழத்திலும் புழக்கத்தில் இருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. ஆயினும் ஒப்பீட்டளவில் இலங்கையில் இவை அரிதாகவே கிடைத்துள்ளன. ஆனால் வடஇலங்கையில் கிடைத்த மேற்கூறப்பட்ட இந்நாணயங்கள் ஒன்றுதானும் இதுவரை தமிழக ஆய்வுகளில் கிடைத்ததாகத் தெரியவில்லை. இவை தமிழ்நாட்டு வம்சங்களால் அந்நாட்டில் வெளியிடப்பட்டிருந்தால் வடஇலங்கையைக் காட்டிலும் அங்குதான் அதிகமாகக் கிடைத்திருக்கும். இந்நாணயங்கள் தொடர்பாக தமிழகத்தின் மூத்த நாணயவியலாளர்கள் பலரின் கருத்தை கேட்டபோது அனைவரும் இந்நாணயங்களை தமிழக அரச வம்சங்கள் வெளியிட்ட நாணயங்களுடன் தொடர்பற்றவை என்ற கருத்தை வெளியிட்டிருந்தமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதனால் இந்நாணயங்களை நாகதீபத்தில் ஆட்சி புரிந்த தமிழ்ச் சிற்றரசர்களால் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் வெளியிட்ட நாணயங்களாக எடுத்துக் கொள்வதே முற்றிலும் பொருத்தமாகும்.

இவ்வாதாரங்கள் ஈழத் தமிழரிடம் நாணயங்கள் வெளியிடும் மரபு பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் ஏற்பட்டதென்ற அறிஞர்களின் முன்னைய கருத்துக்கள் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படவேண்டும் என்பதைக் கோடிட்டுக்காட்டுவதாக உள்ளன. ஏனெனில் இம்மரபு சங்ககாலத்திற்கு சமமான காலத்திலிருந்தே தோன்றியதற்கு உறுதியான ஆதாரங்கள் கிடைத்து வருகின்றன. அண்மையில் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாணயவகைகள் பற்றி ஆராய்ந்த கலாநிதி பவானி ஏறத்தாழ பதினாறு வகையான தமிழ் நாணயங்கள் ஆதிகால, இடைக்கால வரலாற்றில் புழக்கத்திலிருந்ததாக அடையாளப்படுத்தியுள்ளார் (பவானி 2006:11). அவற்றுள் 'ஈழக்காசு', 'அக்கம்' ஆகிய பெயர்களைக் கொண்ட நாணயவகைகள் ஈழத்திற்குரிய தனித்துவமான நாணயங்கள் எனக் குறிப்பிடுகிறார் (மேற்படி:24). இதற்கு கல்வெட்டுக்களோடு நாணயங்களில் வரும் 'அக' (அக்கம்) என்ற பெயரையும் ஆதாரமாகக் காட்டுகிறார். தமிழகத்தில் ஈழக்காசு பற்றிய செய்தி பத்தாம் நூற்றாண்டின்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0097.jpg

பின்னரே புழக்கத்திற்கு வருகிறது. இதற்கு முதலாம் பராந்தக சோழனின் ஈழத்து வெற்றியே காரணமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இவ்வெற்றியின் பின்னரே 'ஈழக்காசு' பற்றிய செய்தி அவன் காலத்திற்குரிய 17 கல்வெட்டுக்களில் காணப்படுகிறது *(மேற்படி:7)*. ஆனால் இலங்கையில் இப்பெயரின் பயன்பாடு இவனது படையெடுப்புக்கு முன்னரே அதாவது கி.பி 7-8ஆம் நூற்றாண்டில் வழக்கத்தில் இருந்துள்ளது. இதற்கு ஆதாரமாக அநுராதபுரத்தில் கிடைத்த குமாரகணத்துப் பேரூர் பற்றிய இரு சாசனங்களைக் குறிப்பிடலாம். இச்சாசனங்கள் அநுராதபுரத்தில் இருந்த ஆலயமொன்றிற்கு அந்நகரில் தங்கியிருந்த வணிகர்கள் 30 ஈழக்காசுகளை வழங்கியதாகக் கூறுகின்றன. குமாரகணம் என்பது அநுராதபுரத்தில் வாழ்ந்த தமிழர்கள் சுயாட்சியுடன் நிர்வாகம் நடாத்திய ஊரெனப் பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிடுகிறார் *(பத்மநாதன் 2006:48)*. இதனால் ஈழக்காசு என்ற நாணயவகையும், அதன் பெயரும் முதலில் ஈழத்தில் தோன்றி இங்கிருந்தே தமிழகத்திற்குச் சென்றுள்ளமை தெரிகிறது. இவ்வாதாரங்கள் இலங்கையில் புழக்கத்திலிருந்த நாணயவகைகள் சிங்கள மொழியில் 'கஹவனு' என அழைகப்பட்டபோது *(Codrington 1924:13)* அது தமிழில் ஈழக்காசு, அகம் என்ற பெயரில் அழைக்கப்பட்டதெனத் தெரிகிறது. இதனால் வடஇலங்கையில் புழக்கத்திலிருந்த தமிழ் நாணயங்கள் ஈழக்காசு, அகம் ஆகிய நாணய வகையைச் சார்ந்ததெனக் கூறலாம்.



வரலாற்றுத் தொடக்கத்தில் இருந்து கி.பி. 13 ஆம் நூற்றாண்டுவரை வெளியிடப்பட்ட காளை உருவம் நந்தி பொறித்த தமிழ் நாணயங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0098.jpg

இந்த இடத்தில் வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு இன்னொரு முக்கிய அம்சத்தையும் குறிப்பிடலாம். 13 ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்களில் பலர் அந்நாணயங்களில் அரச இலட்சனையாகப் பொறிக்கப்பட்ட நந்தியின் உருவம் (காளையின் வடிவம்) இந்தியாவில் உள்ள கலிங்க நாட்டுத் தொடர்பால் ஏற்பட்டதென்ற கருத்தை முன்வைத்துள்ளனர். ஆனால் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களில் பொறிக்கப்பட்ட காளையின் வடிவங்களை நோக்கும் போது வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து இலங்கைத் தமிழர் காளையை அரச இலட்சனையாக, புனிதப் பொருளாக நாணயங்களில் பொறித்துள்ளனர் என்ற உண்மை தெரியவருகிறது. அவற்றின் வடிவங்கள், அழகு, கலை மரபு, தொழில் நுட்பம் என்பன காலமாற்றத்திற்கு ஏற்ப மாற்றமடைந்து யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் தத்துரூபமாக பொறிக்கப்பட்டதை இங்கே கொடுக்கப்பட்டுள்ள நாணயங்களின் புகைப்பட அட்டவணையைக் கொண்டு அறியலாம். இத் தனித்துவத்தை ஈழத்தமிழர் வெளியிட்ட மீன் சின்னம் பொறித்த நாணயங்களிலும் காணலாம்.

கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களால் நாகதீபத்தின் வரலாறு புதிய போக்கில் செல்லத்தொடங்குகிறது. இந்த மாற்றங்கள் நாகதீபத்தில் மட்டுமன்றி இலங்கை வரலாற்றிலும், இலங்கைத் தமிழர் வரலாற்றிலும் பல மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தன. கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் சொல்லப்படாத நாகதீப - அநுராதபுர அரசியல் உறவுகள் இக்காலத்திலிருந்தே பாளி இலக்கியங்கள் சொல்லத் தொடங்குகின்றன. இதன் சமகாலத்தில் இருந்தே இலங்கை அரசியல் தொடர்புகள், படையெடுப்புக்கள் பற்றிய செய்திகள் தமிழக வரலாற்று ஆவணங்களிலும் காணப்படுகின்றன. நாகதீபத்திற்குள்ளேயும் வெளியேயும் வாழ்ந்த தமிழர்கள் தமது இனம், மொழி,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



வரலாற்றுத் தொடக்கத்தில் இருந்து கி.பி. 13 ஆம் நூற்றாண்டுவரை வெளியிடப்பட்ட மீன் சின்னங்கள் பொறித்த தமிழ் நாணயங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0099.jpg

மதம், பண்பாடு என்பவற்றையிட்டு விழிப்புணர்வு பெறத்தொடங்கினர். இலங்கையில் பரந்துபட்டு வாழ்ந்த தமிழர்கள் வடஇலங்கையிலும், கிழக்கிலங்கையிலும் நிரந்தரமாக வாழ்வதில் ஆர்வம் காட்டத் தொடங்கினர். ஏழாம் நூற்றாண்டில் பக்தியியக்கத்தை தலைமையேற்று நடாத்திய நாயன்மார் பாடல்களில் தமிழகத்திற்கு அடுத்த நிலையில் கிழக்கிலங்கையில் இருந்த கோணேஸ்வரத்தையும், வடஇலங்கையில் இருந்த திருக்கேதீஸ்வரத்தையுமே போற்றிப் பாடியுள்ளனர். பேராசிரியர் வேலுப்பிள்ளை சம்பந்தர் தேவாரத்தில் திருகோணமலை பற்றி வரும் "குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்" என்ற சொற்தொடர் அங்கு தமிழர்கள் செறிந்து வாழ்ந்தமைக்கு சான்றாக அமைகின்றதெனக் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது (வேலுப்பிள்ளை 1986).

இந்த மாற்றங்களுக்கெல்லாம் தொண்டை மண்டலத்தில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட பல்லவ அரசு ஒரு பேரரசாக எழுச்சி பெற்றமை காரணமாகும். இவர்கள் ஆட்சியில் எழுச்சி பெற்ற பக்தி இயக்கமும், வணிகக்கணங்களின் தோற்றமும் பண்ணாட்டு ரீதியாகவும் இலங்கை வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தன. பல்லவரைத் தொடர்ந்து பாண்டியரும், சோழரும் தொடர்ச்சியாக ஈழத்துடன் அரசியல், பண்பாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதால் இலங்கைத் தமிழர் வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதன் விளைவால் இங்கு வாழ்ந்த தமிழர்கள் அரசியல், பண்பாட்டு ரீதியில் பலமடைவதற்கு சாதகமான சூழ்நிலைகள் உருவாகியது. இது தொடர்பாக பேராசிரியர் இந்திரபாலா தன் கருத்தைப் பின்வருமாறு கூறுகிறார் (இந்திரபாலா 2006: 233-34).

> "கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பின்னர் தமிழ் நாட்டில் பல்லவப் பேரரசும், பாண்டியப் பேரரசும் எழுச்சிபெற, அவற்றுக்கு அண்மையில் இருந்த வடக்கு இலங்கை (நாகதீபம்), தெற்கு இலங்கையைக் காட்டிலும், கூடுதலான தமிழ்ச் செல்வாக்கிற்கு இலக்காகியது. பல்லவ அரசில் வளர்ந்த பண்பாடு வடக்கு வழியாக இலங்கையில் பரவியது. தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையில் இருந்த கடல் மீண்டும் ஓர் ஒற்றுமைப்படுத்தும் காரணியாகச் செயற்பட்டது. முதலில் தமிழ்நாட்டின் செல்வாக்குப் பௌத்தம் சார்ந்ததாகவும், சைவம் சார்ந்ததாகவும், தமிழ் மொழி சார்ந்ததாகவும், சமஸ்கிருதம் சார்ந்ததாகவும் அமைந்தது. பின்னர் அது பெரும்பாலும் சைவமும் தமிழும் சார்ந்ததாக மாறியது. இவ்விரண்டு காரணிகளும் வடக்கிலும் கிழக்கிலும் உருவாகிய இனக்குழுவை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு பெற்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அங்கு உருப்பெற்றுக் கொண்டிருந்த இனக்குழு, பத்தாம் நூற்றாண்டளவில் உறுதி பெற்று வெளிப்பட்டது".

பேராசிரியர் கே.எம்.டீ சில்வா பக்தி இயக்கத்தின் செல்வாக்கே இலங்கையில் இந்து, பௌத்த என்ற சமய வேறுபாடு தோன்றி தமிழரும் சிங்களவரும் தமது இனத் தனித்துவத்தைப் பேணிப்பாதுகாப்பதில் முனைப்பு பெற்றதுடன், அதன் விளைவால் தமிழர் வாழ்ந்த பிராந்தியங்கள் தென்னிந்தியப் படையெடுப்பாளருக்கு ஆதரவு வழங்கும் தளமாக மாறியதெனவும் கூறுகிறார் (Silwa 1981: 20-21). இந்த மாற்றங்கள் முதலில் ஏற்பட்டதன் தொடக்க வாயிலாக நாகதீபம் காணப்பட்டதால் இங்கிருந்த நாக அரசமரபிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த மாற்றங்களின் பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது நாகதீபம் அநுராதபுர அரசின் மேலாதிக்கத்திற்கு ஒரு சவாலாக மாறியதைக் காணமுடிகிறது. இதற்கு தமிழகப் படையெடுப்பாளரின் ஆதரவில் நாகதீபம் பலமடைந்ததே முக்கிய காரணமாகும்.

ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் நாகதீபத்திற்கும் அநுராதபுர அரசிற்கும் இடையிலான பண்பாட்டு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0100.jpg

உறவுகள் பற்றிய சில செய்திகள் பாளி இலக்கியங்களில் காணப்படுகின்றன (*Mahavamsam : i.54, xx.25, xxxv.125, xxxvi.9,36, Culavamsa:xlii.62*). இதற்கு நாகதீபத்தின் முக்கிய மதங்களில் ஒன்றாக பௌத்தமதம் இருந்தமை காரணமாகும். ஆயினும் இந்த உறவுகள் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பின்னர் படிப்படியாக மறைந்து போகின்றது. இதற்கு பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் இங்கு இந்துமதம் எழுச்சி பெற்றமை முக்கிய காரணமாகும் (இந்திரபாலா 2006: 233). இந்த இடத்தில் சிறப்பாக நோக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம் இதுவரை பௌத்த மத உறவை மட்டும் கூறி வந்த பாளி இலக்கியங்கள் இக்காலத்தில் இருந்தே நாகதீபத்திற்கும் அநுராதபுர அரசிற்கும் இடையிலான அரசியல் உறவைக் கூறுகின்றன. இதற்குப் பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

ஏழாம் நூற்றாண்டில் ஸிலாமேக வண்ண மன்னன் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த காலத்தில் (கி.பி.614-623) ஸ்ரீநாக என்னும் தலைவன் உத்தரதேசத்திலிருந்து (வடஇலங்கையில் இருந்து) தமிழர் படையின் உதவியுடன் அநுராதபுரத்து மன்னனைத் தாக்கி அரசைக் கைப்பற்ற முயன்றதாகச் சூளவம்சம் கூறுகிறது (*Culavamsa 44:70-73*). இங்கே ஆட்சியைக் கைப்பற்ற விரும்பிய ஸ்ரீநாக தனது படையெடுப்பை வடஇலங்கையிலிருந்து மேற்கொண்டமை முக்கியமாக நோக்கப்படவேண்டிய அம்சமாகும். சுவாமி ஞானப்பிரகாசர் படையெடுப்பை மேற்கொண்ட ஸ்ரீநாகன் ஒரு தமிழ் மன்னனாக இருக்கவேண்டும் எனக் கூறுகிறார் (ஞானப்பிரகாசர் சுவாமி 1928:47-50). இப்படையெடுப்பை அநுராதபுர மன்னன் தோற்கடித்த போதும் அநுராதபுர அரசிற்கெதிரான கிளர்ச்சிகள் தொடர்ந்தும் உத்தரதேசத்தில் நடந்ததாகச் சூளவம்சம் கூறுகிறது (*Culavamsa 48:83-84*). ஏறத்தாழ இதேகாலப்பகுதியில் 'மானா' என்ற சிங்கள இளவரசன் அநுராதபுரத்தில் ஆட்சியாளனாக இருந்த ஹட்டதாத்த மன்னனுக்குப் பயந்து உத்தரதேசத்தில்அடைக்கலம் பெற்று பின்னர் அங்கிருந்து தமிழ்நாடு சென்றதாகச் சூளவம்சம் கூறுகிறது (*Culavamsa 47: 2-7.*). இலங்கை வரலாற்றில் தென்னிலங்கையில் சிற்றரசனாக இருந்தவர்கள் அநுராதபுர மன்னர்களாக வருவதும், ஆட்சிப்பீடத்தில் பதவி இழக்க சிங்கள மன்னர்களும், இளவரசர்களும் தென்னிலங்கையில் அடைக்கலம் பெறுவது அல்லது தமிழ் நாடு சென்று தமிழர் படையுதவி பெற்று அநுராதபுர மன்னர்களாக மாறுவது ஒரு பொதுவான நிகழ்வாக இருந்தது. ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிங்கள மன்னர்கள் வடஇலங்கையில் பாதுகாப்பு கருதி அடைக்கலம் பெற்றதற்கோ அல்லது இங்கு சிற்றரசர்களாக இருந்த சிங்கள இளவரசன் அநுராதபுர மன்னனாக வந்ததற்கோ ஆதாரம் காணப்படவில்லை. இந்நிலையில் முதன் முறையாக 'மானா' என்ற சிங்கள இளவரசன் தென்னிலங்கையை விட வடஇலங்கையை பாதுகாப்பெனக் கருதி இங்கு அடக்கலம் பெற்றமை அநுராதபுர அரசின் மேலாதிக்கத்திற்கு வடஇலங்கை சாதகமாக இருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஸ்ரீமாறஸ்ரீபல்லவ என்பான் வடஇலங்கைமீது படையெடுத்த போது மாதோட்டத்தில் வாழ்ந்த தமிழர்கள் பாண்டியப் படைகளுடன் இணைந்து அநுராதபுரத்தில் ஆட்சி செய்துகொண்டிருந்த சேன மன்னனை தோற்கடித்ததாகச் சூளவம்சம் கூறுகிறது (*Culavamsa 49: 84-85*). இந்நிகழ்ச்சி வடஇலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் தமிழகப் படையெடுப்பாளருக்கு ஆதரவாக இருந்ததுடன் அநுராதபுர அரசை அவர்கள் ஒரு பகைமை அரசாகக் கருதிக்கொண்டிருந்தமையும் தெரிகிறது.

ஏழாம் நூற்றாண்டிலிருந்து உரோகண (இலங்கையின் தென்பகுதி), மலைய (இலங்கையின் நடுவே உள்ள மலைப்பிரதேசம்) மற்றும் உத்தரதேசம் (வடஇலங்கை) என்பன இலங்கையின் வேறுபட்ட மூன்று முக்கிய நிர்வாகப் பிராந்தியங்களாக இருந்ததைப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றுள் உரோஹண மற்றும் மலைய பிரதேசத்தை நிர்வகிக்க அநுராதபுர ஆட்சியாளர்கள் தமது குடும்ப வாரிசுகளை நியமித்த போது உத்தரதேசத்தை (வடஇலங்கையை) நிர்வகிப்பதற்கு ஒருவரை நியமித்ததற்கு ஆதாரங்கள் காணப்படவில்லை (*Indrapala 2005:204-5*). இந்த வேறுபாடு வடஇலங்கை அநுராதபுர

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0101.jpg

நிர்வாகத்திற்குள் அடங்கவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. இது தொடர்பாக பேரசிரியர் இந்திரபாலா முன்வைத்துள்ள கருத்துக்களை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும் (இந்திரபாலா 2006:230-31)

> ''உத்தரதேஸத்தைப் பற்றிய குறிப்புக்களை ஆய்வு செய்தால் அப்பிரதேசம் ஏனைய பிரதேசங்களைவிட வேறுபட்டதாக இருந்தது என்பதை அறியலாம். அநுராதபுரத்து மன்னர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பிரதேசமாகப் பலமுறை அதனைக் காணலாம். அநுராதபுர ஆட்சியை எதிர்த்தோர் அங்கு ஆதரவு பெற்றதையும் காணலாம். முற்பட்ட நூற்றாண்டுகளைப் போல் அல்லாது, ஆறாம் நூற்றாண்டின் பின் தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகள் வடபகுதியில் வந்து இறங்குவதையும் அவதானிக்க முடிகிறது. அப்படிவந்த படைகள் வடக்கில் தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்திய பின் அநுராதபுரத்தை நோக்கி முன்னேறினர். இவற்றை நோக்குமிடத்து அநுராதபுரத்து ஆட்சியாளருக்குச் சாதகமான சூழ்நிலை வடபகுதியில் நிலவவில்லை என்பது தெளிவு''

இக்கருத்துக்களின் பின்னணியில் கி.பி.10ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய வல்லபன் நாகதீபத்தின் (உத்திரதேஸம்) மீது படையெடுத்ததாக சூளவம்சத்தில் வரும் குறிப்பின் முக்கியத்துவத்தையும் நோக்குவது பொருத்தமாகும். இப்படையெடுப்பை மேற்கொண்ட மன்னனை வரலாற்றறிஞர்களில் ஒருசாரார் இராஷ்ரகூட மன்னன் எனவும், வேறுசிலர் இரண்டாம் பராந்தக சோழன் எனவும் கூறுகின்றனர். இவன் யாராக இருப்பினும் படையெடுப்பு நடந்த இடம் நாகதீபம் என்பது முக்கிய நிகழ்ச்சியாகும். இப்படையெடுப்பு நாகதீபத்தை வெற்றி கொள்ள மேற்கொள்ளப்பட்டதா அல்லது நாகதீபத்தை வெற்றி கொண்டதன் பின்னர் அங்கிருந்து அநுராதபுர அரசின் மீது படையெடுக்க மேற்கொள்ளப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் ஏறத்தாழ இதேகாலப்பகுதியில் சோழ மன்னர்களாக இருந்த முதலாம், மற்றும் இரண்டாம் பராந்தக சோழன் இலங்கை மீது படையெடுத்தது பற்றிய செய்திகள் தமிழக வரலாற்று மூலங்களில் காணப்படுகின்றன. அதில் முதலாம் பராந்தக சோழன் ஈழத்தில் சில அரசியல் வெற்றிகளை அடைந்ததாக அவன் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன. இந்த வெற்றிகளின் மூலம் அவன் "மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வருமன்" எனப் புகழ்ந்துரைக்கப்பட்டதை அவனது 38ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு கூறுகின்றது (SII. VolI: 35). இச்செய்தியை கலிங்கத்துப்பரணி (இராசபாரம்பரியம் பாடல் : 23), குலோத்துங்கன் உலா (வரிகள்: 44-46), இராசராசசோழன் உலா (வரிகள் : 38-40) முதலான நூல்களும் உறுதிப்படுத்துகின்றன. இருப்பினும் இவ்வெற்றிகளையிட்டு இலங்கை வரலாற்றேடுகளில் எந்தச் செய்திகளும் காணப்படவில்லை. இருப்பினும் யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய பிற்கால இலக்கியங்கள் சோழர் வருகையுடன் கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட தமிழ் அரசின் தலைநகர் சிங்கை நகருக்கு இடமாறியதைச் சூசகமாகத் தெரிவிக்கின்றன. இச்செய்திக்கும் முதலாம், இரண்டாம் பராந்தக சோழனது படையெடுப்புக்களுக்கும் இடையே தொடர்பு இருந்ததற்கான நேரடி ஆதாரங்கள் காணப்படவில்லை. இருப்பினும் இவ்விலக்கியங்கள் எழுந்த காலத்தில் இலங்கையிலும், தமிழகத்திலும் சோழ அரசு மறைந்து ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகள் கடந்துவிட்டன. அப்படியிருந்து தமிழ் அரசின் தலைநகர் மாற்றத்தை சோழர் வருகையுடன் தொடர்பு படுத்தியிருப்பது சோழரைப் பற்றிய வரலாற்று நினைவுகள் இலங்கைத் தமிழரால் மறக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. இங்கே இலங்கைப் பாளி நூல்களில் சொல்லப்படாத பராந்தகனின் இலங்கை வெற்றியை தமிழக வரலாற்றேடுகள் முதன்மைப்படுத்திக் கூறுவதையும், இக்காலத்தில் தென்னிந்திய மன்னனொருவன் நாகதீபத்தின் மீதுபடையெடுத்ததாகச் சூளவம்சம் கூறுவதையும், சோழர் வருகையுடன்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0102.jpg

உக்கிரசிங்கனது தலைநகரான கதிரமலை (கந்தரோடையா?) சிங்கை நகருக்கு இடம்மாறியதாகவும் கூறுவதை நோக்கும் போது அவன் அடைந்த வெற்றி நாகதீப வெற்றியாக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு (புஷ்பரட்ணம் 1993, 2000). இந்த இடத்தில் முதலாம் பராந்தக சோழனது படையெடுப்பின் முக்கியத்துவம் பற்றிப் பேராசிரியர் கா.இந்திரபாலா கூறும் பின்வரும் கருத்துக்களை நோக்குவது அவசியமாகும். .

> "மேற்கூறிய இரு கட்டங்களிலும் நடைபெற்ற சோழப்படையெடுப்புக்களின் (முதலாம், இரண்டாம் பராந்தக சோழன்) விளைவாக வடபகுதி வடகிழக்குப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பிரதேசம் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ள இடமுண்டு. ஏற்கனவே பல்லவர் தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த போது, இப்பிரதேசத்தில் பல்லவர் அதிகாரம் பரவியிருக்கக் கூடும் எனக் கூறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் சோழர் படைகள் வடபகுதியில் வந்திறங்குவதைக் காணலாம். பராந்தக சோழன் காலத்தில் இப்பிரதேசத்தில் சோழர் ஓரளவு அதிகாரம் பெற்றிருப்பர் என்றே தோன்றுகிறது. முதலாம் பராந்தக சோழன் காலத்திலேயே சோழர் பொலநறுவையில் தங்கள் நிர்வாகத்தை நிறுவியிருந்தார்களா என்று தெரியவில்லை. அவர்கள் அதிகார மையம் பொலநறுவைக்கு வடக்கே அல்லது கிழக்கே பதவியா அல்லது கந்தளாய் போன்ற ஓர் இடத்தில் இருந்து பின்னர் பொலநறுவைக்கு மாற்றப்பட்டிருத்தல் கூடும்" *(இந்திரபாலா 2006:262)*

மேற்கூறப்பட்ட அனைத்து அம்சங்களையும் தொகுத்து நோக்கும் போது வடஇலங்கை அதாவது நாகதீபம் பெரும்பாலும் அநுராதபுர அரசின் மேலாதிக்கத்திற்கு உட்படாத ஒரு நாடாக அல்லது தனித்துவமான பிராந்தியமாக இருந்ததென்ற முடிவுக்கு வர முடிகிறது. இதற்கு பண்டுதொட்டு இங்கு அரசமரபு தோன்றி வளர்ந்து வந்தமையும் ஒரு காரணம் எனக் கூறலாம். இக்கருத்திற்கு ஆதாரமாக ஏழாம் நூற்றாண்டளவில் இலங்கை வந்த கொஸ்மஸ் இண்டிகோ பிளிஸ்டிஸ் இலங்கை அரசியல் நிலை தொடர்பாகக் கூறிய கருத்தை ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமாகும். அவரது கூற்றிலிருந்து இலங்கையில் இரு அரசுகள் இருந்தமையும், அவற்றுள் ஒரு அரசின் மன்னனிடம் சென்னிற மணிகள் காணப்படும் நிலப்பகுதியும், இன்னொரு மன்னனிடம் மிகப்பெரிய வணிக நகரத்தை உள்ளடக்கிய துறைமுகம் இருந்தமையும் தெரியவருகிறது. பேராசிரியர் பரணவிதான சென்னிற மணிகள் காணப்படும் நிலப்பரப்பு தென்னிலங்கை அரசு எனவும்,பெரிய வணிக நகரத்தை உள்ளடக்கிய துறைமுகம் மாதோட்டம் எனவும் அது அநுராதபுர மன்னனால் ஆளப்பட்ட பகுதி எனவும் கூறுகிறார். இதில் தென்னிலங்கையில் இன்னொரு சிங்கள மன்னன் ஆட்சி இருந்தமைக்கு அதன் ஆட்சியாளன் அநுராதபுர அரசிற்கு கீழ்படிய மறுத்ததே காரணம் என விளக்கம் கூறுகிறார் *(Paranavithna 1961: 184)*. ஆனால் முதலியார் இராசநாயகம் பெரிய வணிக நகரத்தை உள்ளடக்கிய மாதோட்ட துறைமுகம் யாழ்ப்பாணத்தை உள்ளடக்கிய அரசிற்குரியதெனக் கூறுகிறார் *(Rasanayagam 1928)*. ஏழாம் நூற்றாண்டின் பின்னர் நாகதீபத்திற்கும் அநுராதபுரத்திற்கும் இடையே இருந்த அரசியல் உறவுகளை நோக்கும் போது தென்னிலங்கையைக் காட்டிலும் வடஇலங்கையே அநுராதபுர அரசின் மேலாண்மைக்கு கீழ்படியாதிருந்ததைக் காணமுடிகிறது. இதனால் கொஸ்மஸ் கூறும் பெரிய வணிக துறைமுகத்தைக் கொண்டிருந்த மன்னன் நாகதீபத்தில் ஆட்சி செய்த மன்னர்களில் ஒருவனாகக் கருத இடமுண்டு.

இந்நாக மன்னர்களின் ஆட்சி பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதலாம் பராந்தக சோழனின்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0103.jpg

படையெடுப்போடு சோழரின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருக்கலாம். இதனால் நாக அரசமரபு மறைந்ததென்றோ அல்லது சோழரின் நேரடி நிர்வாகம் இங்கு ஏற்பட்டதென்றோ கூறுவதற்கு எந்த ஆதாரமும் இதுவரை கிடைக்கவில்லை. இதற்கு மாறாக அநுராதபுர அரசின் மேலாதிக்கம் இங்கு ஏற்பட்டதற்கும் ஆதாரங்கள் காணப்படவில்லை. முதலாம் இராஜராஜசோழன் அநுராதபுர அரசை வென்று பொலநறுவையைத் தலைநகராக்கும் வரையான காலப்பகுதியில் நாகதீப நிலைமையை நோக்கும் போது முன்னர் ஆட்சியில் இருந்த நாக மன்னர்கள் பராந்தக சோழனின் மேலாண்மையை ஏற்று அல்லது அவர்களின் ஆதரவோடு தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்தனர் எனக் கருத இடமுண்டு. பதினோராம் நூற்றாண்டில் சோழரின் நேரடி ஆட்சி இலங்கையில் மறைந்ததைத் தொடர்ந்து பதின்மூன்றாம் நூற்றாண்டில் கலிங்கமாகன் ஆட்சியோடு நாகர், நாகதீபம், நாக அரசு பற்றிய செய்திகள் இலங்கை வரலாற்றேடுகளில் மீண்டும் காணப்படுகின்றன. இவற்றை நோக்கும் போது ஆரியச் சக்கரவர்த்திகளின் வருகைக்கு முன்னர் இலங்கைத் தமிழரிடம் நாக அரச மரபு இருந்ததெனக் கருத இடமுண்டு. இந்த உண்மைகளை எதிர்கால ஆய்வுகள் மூலம் மேலும் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படலாம். ■

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

4

பொலநறுவை இராசதானியும் தமிழர்களும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0105.jpg

இயல் நான்கு

பொலநறுவை இராசதானியும் தமிழர்களும்

அறிமுகம்

இலங்கையின் பண்பாட்டு வரலாறு பாரதத்துடன் இணைந்து வளர்ச்சி அடைந்து வந்தாலும் அதன் அரசியல் வரலாறு பெரும்பாலும் தமிழகத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகவே இருந்து வந்துள்ளது. தமிழகத்தில் காலத்திற்கு காலம் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள் சமகால இலங்கையிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. இது பண்பாட்டிலும் மாறுதல்கள் ஏற்பட வழிவகுத்தன. பண்டுதொட்டு இலங்கை வரலாற்றில் தமிழகப் பாண்டிய வம்சத்தை சிங்கள மக்களின் நண்பர்களாகவும், சோழரை எதிரிகளாகவும் பார்க்கும் மரபு காணப்பட்டது. இதற்கு பாளி இலக்கியங்களில் வடஇந்தியாவில் இருந்து வந்த விஜயனும், அவனுடன் வந்த 700 தோழர்களுக்குமான மணப்பெண்கள் பாண்டிநாட்டிலிருந்து வந்தவர்கள் எனக் கூறப்பட்டிருக்கும் வரலாற்று ஐதிகம் ஒரு காரணமாகும். இதனால் இலங்கையில் ஆட்சி செய்த சிங்கள மன்னர்கள் பெரும்பாலும் தமிழகத்தில் சோழ அரசு எழுச்சியடைந்த போதெல்லாம் அவர்களுக்கு எதிராகப் போரிட்ட பாண்டிய மன்னர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்தனர். இதன் விளைவே 10 ஆம் நூற்றாண்டில் சோழர் அநுராதபுர அரசை வெற்றி கொண்டு இலங்கையின் புதிய தலைநகராக பொலநறுவையை உருவாக்கக் காரணமாகும். அது நிகழ்ந்த வரலாற்றைச் சுருக்கமாக இவ்விடத்தில் நோக்கலாம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சங்ககாலத்தில் சிற்றரசர்களாக இருந்து ஆட்சி புரிந்த சேர, சோழ, பாண்டியர்களின் வம்ச வரலாறும் கி.பி 3 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 6 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் தமிழ்நாட்டு வரலாற்றில் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. ஆனால் கி.பி 6 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் காஞ்சியை தலைநகராகக் கொண்டு பல்லவவம்சம் புதிதாக எழுச்சியடைந்த போது மீண்டும் சேர, சோழ, பாண்டிய வம்சங்களின் ஆட்சி தமிழ்நாட்டில் இடம்பெறத் தொடங்கியது. ஆரம்பத்தில் சிறிய நிலப்பகுதிகளில் ஆட்சி புரிந்த பல்லவ, பாண்டிய, சோழ வம்சங்கள் காலப்போக்கில் பரந்த நிலப்பரப்பில் ஆதிக்கம் செலுத்த தமக்குள்ளே பல போராட்டங்களை நடத்தினர். இதன் விளைவால் 9 ஆம் நூற்றாண்டில் சோழ வம்சம் ஒரு வலிமை மிக்க அரசாக எழுச்சியடைந்தது. இதற்கு முதலாம் ஆதித்தசோழன் (கி.பி 846 - 881) தஞ்சையில் அடைந்த வெற்றி அத்திவாரம் அமைத்துக் கொடுத்தது. இவ்வெற்றியைத் தொடர்ந்து சோழருக்குப் போட்டியாக இருந்த பல்லவ, பாண்டிய வம்சங்கள் படிப்படியாக வீழ்ச்சியடைய, சோழர் தமது ஆதிக்கத்தை தமிழ்நாட்டில் நிலைநாட்டிக் கொண்டனர்.

கி.பி 10 ஆம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டின் பரந்த நிலப்பரப்பை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த சோழர் அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் இயற்கை எல்லையைத்தாண்டி தென்னிந்தியாவில் ஆதிக்கம் பெறமுற்பட்டனர். ஆனால், தமிழ்நாட்டிற்கு வடக்கிலிருந்து சோழருக்கு எதிராக ஏற்பட்ட படையெடுப்புக்களும், தமிழ்நாட்டிற்கு மேற்கிலிருந்து ஏற்பட்ட அராபியரது வர்த்தக எழுச்சியும் சோழரின் வளர்ச்சிக்கு சவாலாக அமைந்தன. இதனால் தஞ்சையில் மன்னனாக முடி சூடிக்கொண்ட சோழ அரசர்கள் தமிழ்நாட்டிற்கு வடக்கிலும், மேற்கிலும் அடிக்கடி படையெடுக்க நேரிட்டது. இப்படையெடுப்பாற் சோழர் அடைந்த வெற்றிகள் சோழ அரசை அரசியல் ரீதியாக

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0106.jpg

மட்டுமன்றிப் பொருளாதார ரீதியாகவும் பலப்படுத்தின. இதனால் பல்லவ ஆட்சிக்காலத்தில் தோன்றிய நானாதேசிகர், மணிக்கிராமத்தார், வலஞ்சியர், திசையாயிரத்து ஐநூற்றுவர் முதலான வணிக கணங்கள் சோழர் ஆட்சியில் மிகத்தீவிரமாக செயற்பட்டன. இவ்வணிக கணங்கள் வர்த்தக நடவடிக்கைகளில் மட்டுமன்றி சோழ அரசுடன் இணைந்து புதிய வர்த்தக நகரங்களையும் தோற்றுவிக்கவும், தனிப்பட்ட படைப்பிரிவுகளை உருவாக்கவும், இந்துப்பண்பாட்டை வளர்க்கவும் காரணமாயின. இவ்வாறு 10ஆம் 11ஆம் நூற்றாண்டில் சோழ அரசியலும், வர்த்தகமும் ஒன்றிணைந்து செயற்பட்டமைதான் தென்னிந்திய வரலாற்றில் சோழ அரசு கடல்சார்ந்த பேரரசாக மாறக் காரணமாகியது. இக்காலப்பகுதியிலேதான் சோழரது அரசியல் ஆதிக்கம் இலங்கையுட்பட தென்கிழக்காசிய நாடுகள் வரை பரவின.

சோழராட்சியில் இலங்கை

தென்னிந்தியாவில் சோழ அரசு எழுச்சியடைந்த போது, அவ்வரசின் செல்வாக்கு இலங்கை வரலாற்றில் பல மாறுதல்கள் ஏற்பட வழிவகுத்தது. இம்மாற்றங்களை இலங்கையில் ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்கள் பலரும் விரும்பாததினாற் சோழருக்கு எதிராகப் போரிட்ட தமிழ்நாட்டு வம்சங்களுக்குக் குறிப்பாக பாண்டிய வம்சத்திற்கு ஆதரவாகச் சிங்கள மன்னர்கள் படை உதவியளித்தனர். இதனால், தமிழ்நாட்டில் பாண்டியவம்சத்தை வெற்றிகொண்ட சோழர் அவ்வெற்றியின் பின்னர் இலங்கைமீது படையெடுக்க நேரிட்டது. முதலாம் பராந்தக சோழன் காலத்தில் (கி.பி 907 - 953) ஆரம்பித்த இப்படையெடுப்பு மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலேயே (கி.பி 1178 - 1218) முடிவுற்றது.

முதலாம் பராந்தகசோழன் காலத்தில் சோழருக்கும் பாண்டியருக்கும் இடையே நடந்த ஆதிக்கப் போராட்டத்தில் சோழர் மதுரையைக் கைப்பற்றியபோது அநுராதபுர மன்னன் 5ஆம் கஸபன் (கி.பி 939) பாண்டியருக்கு உதவியாகச் சக்க சேனாதிபதி தலைமையிற் படையனுப்பி வைத்தான். இப்போரில் பராந்தகசோழன் வெற்றியடைந்ததும் தோல்வியடைந்த பாண்டிய மன்னன் இராசசிம்மன் தன் முடியையும், செல்வத்தையும் இலங்கையில் அடைக்கலமாக வைத்துவிட்டு தன் தாயினது நாடாகிய கேரளத்திற்குச் சென்றான். இம்முடியையும், செல்வத்தையும் பெறவிரும்பிய பராந்தகசோழன் இலங்கை மன்னனிடம் தூதனுப்பினான். அப்போது அநுராதபுரத்தில் ஆட்சிசெய்து கொண்டிருந்த 4ஆம் உதயமன்னன் இவற்றைக் கொடுக்க மறுக்கவே முதலாம் பராந்தகசோழன் கி.பி 949 அளவில் வடஇலங்கை மீது படையெடுத்து அநுராதபுரத்தை கைப்பற்றினான். இவ்வெற்றியைப் பராந்தகனின் 38ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு "மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்" எனச் சிறப்பித்துக் கூறுகிறது. சுந்தரசோழன் ஆட்சிக்காலத்தில் (கி.பி 957 - 973) நடைபெற்ற பாண்டிய சோழப் போராட்டத்தில் மீண்டும் சிங்கள மன்னர்கள் சோழருக்கு எதிராகச் செயற்படத் தொடங்கினர். அப்போது அநுராதபுர மன்னனாகவிருந்த 4ஆம் மகிந்தன் பாண்டிய மன்னர்களுக்குச் சார்பாகத் தனது சிங்களப்படை வீரர்களைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பிவைத்தான். ஆனால் இப்போராட்டத்தில் சோழப்படைத்தளபதி இறந்ததும் போர் சமாதானத்தில் முடிவுற்றது. சூளவம்சம் என்ற பாளிநூல் அநுராதபுரத்தில் 4ஆம் மகிந்தன் ஆட்சிசெய்த காலத்தில் (கி.பி 956 - 973) தென்னிந்திய மன்னன் வல்லப யாழ்ப்பாணத்தின் (நாகதீபம்) மீது படையெடுத்தான் எனக் கூறுகிறது. வரலாற்று ஆசிரியர்கள் சிலர் இவ் வல்லப மன்னனை சுந்தரசோழன் எனக்கூறுகின்றனர்.

சுந்தரசோழனை அடுத்து ஆட்சிக்கு வந்த முதலாம் இராஜராஜசோழன் ஆட்சிக்காலத்தில் (கி.பி 985 - 1014) இலங்கைமீது சோழர் மேற்கொண்ட படையெடுப்பு இலங்கை வரலாற்றில் பலவகையிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். முதலாம் இராஜராஜசோழன் பாண்டிய, சேர மன்னர்களுக்கு எதிராகப் படையெடுத்தபோது அநுராதபுரத்தில் ஆட்சிசெய்துகொண்டிருந்த 5ஆம் மகிந்த மன்னன்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0107.jpg

(கி.பி 982) பாண்டிய மன்னர்களுக்குச் சார்பாக நடந்து கொண்டான். இதனால் பாண்டியர்களை வெற்றிகொண்ட முதலாம் இராஜராஜசோழன் தன் மகன் முதலாம் இராஜேந்திரசோழன் தலைமையில் சோழப்படையொன்றை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். இப்படை இலங்கையை வந்தடைந்தபோது அதை எதிர்க்க வலிமையற்ற 5ஆம் மகிந்தன் உருகுணைக்கு தப்பியோடினான். இதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சோழப்படை கி.பி 993 இல் தலைநகர் அநுராதபுரத்தைக் கைப்பற்றி வடஇலங்கையைத் தமது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தது. இவ்வெற்றியைத் தொடர்ந்து முதலாம் இராஜேந்திரசோழன் ஆட்சிக்காலத்தில் (கி.பி 1012 - 1044) மேற்கொள்ளப்பட்ட இன்னொரு சோழப்படையெடுப்பால் 1017 இல் முழுஇலங்கையும் சோழர் ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது.

முதலாம் குலோத்துங்கசோழன் ஆட்சிக்காலத்தில் (கி.பி 1070 - 1120) தென்னிந்தியாவில் ஏற்பட்ட மாறுதல்கள் இலங்கையிற் சோழரது ஆதிக்கத்தை பலவீனமடையச் செய்தது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திய 1ஆம் விஜயபாகு சோழர் ஆட்சியில் இருந்த பொலநறுவையை 1070 இல் கைப்பற்றிக்கொண்டான். இதனால் சிங்கள வம்சத்தின் ஆட்சி பொலநறுவையில் இடம்பெறத் தொடங்கியது. எனினும் சோழமன்னர்களது இலங்கை மீதான படையெடுப்புக்கள் உடனடியாக முற்றுப்பெற்றதாகக் கூறுவதற்கில்லை. பொலநறுவை மன்னர்களும் அநுராதபுர மன்னர்களைப் போல தென்னிந்தியாவில் ஏற்பட்ட வம்சப்போராட்டங்களில் சோழருக்கு எதிராகச் செயற்பட்டதால் தென்னிந்தியாவில் மீண்டும் தமது ஆதிக்கத்தைப் பலப்படுத்திய சோழமன்னர்கள் அவ்வப்போது இலங்கைமீதும் படையெடுத்தனர். இதற்கு முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசாதிராஜசோழன் (கி.பி 1163 - 1178), மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி 1178 - 1218) ஆகியோர் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இலங்கைமீதான படையெடுப்புக்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

எனவே ஏறத்தாழ இலங்கையின் 250 ஆண்டுகால அரசியல் வரலாற்றைத் தென்னிந்தியாவில் ஆட்சிபுரிந்த சோழவம்சத்துடன் தொடர்புபடுத்தி ஆராய்வதே பொருத்தமெனலாம். இக்காலப்பகுதிக்குள் இலங்கையில் ஏற்பட்ட சோழரின் 77 ஆண்டுகால நேரடி ஆட்சி பௌத்த சிங்கள வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட வழிவகுத்தன. கி.பி 993 இல் முதலாம் இராஜராஜன் வட இலங்கையை வெற்றிகொண்டதன் மூலம் 1300 ஆண்டுகள் இலங்கை மன்னர்களின் இராசதானியாக விளங்கிய அநுராதபுரம் கைவிடப்பட்டு புதிய தலைநகர் இராஜராஜனின் விருதுப்பெயரான ஜனநாதமங்கலம் என்ற பெயருடன் பொலநறுவைக்கு மாற்றப்பட்டது. இப்பொலநறுவையே பிற்காலத்தில் சிங்கள மன்னர்களின் தலைநகராக வடஇலங்கையிற் புதிய தமிழரசு தோன்றும் வரை இருந்தது. இம்மாற்றத்தைத் தொடர்ந்து இலங்கை மும்முடிச்சோழமண்டலம் என்ற பெயரில் சோழரின் 9 ஆவது மண்டலமாகச் சோழ நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டது. இதுவரை அரச ஆதரவில் வளர்ச்சியடைந்த பௌத்தமதமும், அம்மதம் சார்ந்த பண்பாடும் சோழராட்சியால் இந்துமதம் அரச ஆதரவில் வளர்ச்சியடைந்தன. இதன் வளர்ச்சி இலங்கைத் தமிழர் வரலாற்றில் நிரந்தரமாக இணைந்து கொண்டதுடன் பிற்காலத்தில் பௌத்த சிங்கள பண்பாட்டிலும் செல்வாக்குச் செலுத்தின. அநுராதபுர அரசில் நீண்ட காலம் பின்பற்றப்பட்ட நிர்வாக முறை பொலநறுவை அரசில் கைவிடப்பட்டுத் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்ட சோழ நிர்வாகமுறை அறிமுகம் செய்யப்பட்டது. இச்சோழ நிர்வாகமுறையை பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள மன்னர்கள் கைவிட்ட போதிலும் சிங்கள நிர்வாகத்தில் தமிழர்கள் பங்கெடுத்ததினால் அத்தமிழ் நிர்வாகிகள் தொடர்பான ஆவணங்களை சிங்கள மன்னர்கள் சிலர் தமிழிலேயே வெளியிட்டனர். சோழப்படையெடுப்புக்களோடு இலங்கை வந்த வேளைக்காரர், வலங்கை, இடங்கை, சிறுத்தனம், பிள்ளைத்தனம், வடுகர் முதலான படைப்பிரிவுகள் பொலநறுவையில் சோழராட்சி 1070 இல் முடிவுற்றதும் பின்னர் இலங்கையில் நிரந்தரமாக தங்கிக்கொண்டன. இப்படைப்பிரிவுகளே முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு, ஜெயபாகு, 2ஆம் கஜபாகு ஆகிய சிங்கள மன்னர் ஆட்சியில் அரசையும்

Tamilelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0108.jpg

பௌத்த மதத்தையும் பாதுகாத்தன. இப்படைப்பிரிவுகள் அரசனுக்கு விசுவாசமாகச் செயற்பட்டாலும் தம் நாட்டிற்கும் இனத்திற்கும் எதிராக சிங்கள மன்னர்கள் நடந்தபோதெல்லாம் அவர்களை எதிர்த்து பொலநறுவை அரசையே கைப்பற்றின. இப்படைப்பிரிவுகளின் செயற்பாடுகளே சிங்கள மன்னர்கள் பொலநறுவை அரசை கைவிடவும், வடஇலங்கையில் தமிழ் அரசு ஒன்று தோன்றுவதற்கும் பின்னணியாக விளங்கின. இக்கூற்றைத் தமிழர் பிராந்தியங்களிற் சோழர் ஆட்சி தொடர்பாக கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

சோழர் ஆட்சியில் தமிழர் பிராந்தியங்கள்

இலங்கையில் சோழராட்சியில் தலைநகராக பொலநறுவை இருந்துள்ள போதிலும் சோழரது அரசியல், வர்த்தக, பண்பாட்டு நடவடிக்கைகள் தமிழர் பிராந்தியங்களில் அதிக அளவில் இருந்துள்ளதை இப்பிராந்தியங்களில் கிடைத்துள்ள சோழர்காலக் கல்வெட்டுக்கள், நாணயங்கள், ஆலயங்களின் அழிபாடுகள், பிற தொல்பொருட்ச் சின்னங்கள் முதலியன உறுதிசெய்கின்றன. இதற்கு சோழரின் நேரடி ஆட்சி இலங்கையில் ஏற்பட முன்னரே அவர்களின் அரசியல், வாணிப நடவடிக்கைகள் இப்பிராந்தியங்களில் அதிக அளவில் ஏற்பட்டிருந்தமை முக்கிய காரணங்களாக இருந்திருக்கலாம். உதாரணமாக தமிழகத்தில் சங்ககாலம் தொட்டு வெளியிடப்பட்ட நாணயங்களும், இலங்கையில் சோழர் ஆட்சியில் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்களும் இலங்கையின் பண்டைய இராசதானிகள் அமைந்திருந்த அநுராதபுரம், பொலநறுவைப் பகுதிகளைவிட தமிழர்கள் செறிவாக வாழ்ந்த இடங்களிலேயே அதிக அளவில் கிடைத்துள்ளன. இலங்கையில் சோழர் வெளியிட்ட 30க்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலான கல்வெட்டுக்கள் திருகோணமலை மாவட்டத்திலிருந்தே கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுக்கள் சிலவற்றிலிருந்து சோழரது அரசியல், இராணுவ வர்த்தக நடவடிக்கைகளின் முக்கிய கேந்திர மையமாக திருகோணமலைப் பிராந்தியம் விளங்கியமை தெரிகிறது. இவ்விடம் தென்னிலங்கையில் இருந்து ஏற்படும் படையெடுப்புக்களைக் கட்டுப்படுத்தவும், தென்கிழக்காசியா, தென்னிந்தியாவுடன் கடல்வழித்தொடர்புகளை ஏற்படுத்தவும் சாதகமாக இருந்தது. இதனால் திருகோணமலை சோழரின் இரண்டாவது தலைநகர் என அழைக்கப்பட்டது.

சோழராட்சியில் கிழக்கிலங்கையில் திருகோணமலை முக்கியத்துவம் பெற்றதைப் போல் வடஇலங்கையில் வடமேற்கிலங்கை பெற்றிருந்ததென கூற இடமுண்டு. சோழ மன்னர்கள் மேற்கொண்ட பெரும்பாலான படையெடுப்புக்கள்



பொலநறுவைக் கல்வெட்டு



பூநகரியில் கிடைத்த சோழ நாணயங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0109.jpg

வர்த்தக நலன்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இதனால் சோழமன்னர்கள் தமது வர்த்தக வளர்ச்சிக்கு சாதகமான இடங்களை அரசியல் ரீதியாக வெற்றிகொள்வதில் அதிக கவனம் செலுத்தினர்.

தமிழ்நாட்டிற்கு மேற்கே உள்ள வர்த்தக மையங்களைச் சோழர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததன் மூலம் அராபியரது வர்த்தக நடவடிக்கைகளை கட்டுப்படுத்தினர். இது காரணமாக அராபியர் தமது வர்த்தகத்தை வங்காளவிரிகுடா ஊடாக வளர்க்க முற்பட்டனர். இதனால் தமிழ்நாட்டிற்கு தென்கிழக்கே உள்ள இலங்கையை சோழர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர நேரிட்டது. சோழரின் இந்த நோக்கத்திற்கு யாழ்ப்பாணம் தொட்டு மாதோட்டம் வரையிலான வடமேற்கிலங்கை வாய்ப்பாக அமைந்தது. இவ்விடத்தை முதலில் சோழர் வெற்றிகொண்டமை அராபிய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தவும் இங்கிருந்து சிங்கள அரசை வெற்றி கொள்ளவும் வாய்ப்பாகியது. எனவே சோழரின் அரசியல் ஆதிக்கம் பொலநறுவையில் ஏற்பட முன்னரே வடமேற்கிலங்கையில் ஏற்பட்டிருக்கலாமென கருத இடமுண்டு. இக்கருத்தை உறுதிப்படுத்துவதில் மாதோட்டத்தில் கிடைத்த சோழச்சாசனங்கள் ஓரளவு உதவுகின்றன. இங்கு கிடைத்த நான்கு கல்வெட்டுக்களிலிருந்து சோழர் காலத்தில் மாதோட்டம் 'ராஜராஜபுரம்' எனக் குறிக்கப்பட்டதையும் இங்கிருந்த வீதியொன்று இராஜராஜப் பெருந்தெரு என்ற பெயரில் வழங்கியது பற்றியும் அறிய முடிகிறது. மேலும் சோழநாட்டுத் தலைவன் இராஜராஜசோழனின் பெயரில் "இராஜராஜேஸ்வரம்" எனும் சிவாலயம் ஒன்றை இங்கு அமைத்ததாகவும், சோழ நிர்வாகத்தில் மாதோட்டம் "அருண்மொழித்தேவ வளநாடு" எனும் பெயரைப் பெற்றிருந்ததாகவும் அறிய முடிகின்றது. இச்சான்றுகளை நோக்கும் போது சோழர் காலத்தின் பல்வேறு சமூகப் பிரிவுகள் குடியேறியிருந்த ஒரு முக்கிய கேந்திர மையமாக மாதோட்டம் விளங்கியது எனக்கூறமுடிகிறது. இக்கூற்றை மேலும் உறுதிப்படுத்துவதில் முதலாம் இராஜேந்திர சோழனின் இலங்கை வெற்றி பற்றிக் கூறும் கல்வெட்டை இங்கு விரிவாக எடுத்து நோக்கலாம்.



ஊர்காவற்துறைக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட சோழக் கல்வெட்டு

இக்கல்வெட்டு ஊர்காவற்துறைக்கும் காரைநகருக்கும் இடையில் உள்ள ஒல்லாந்தர் கடற்கோட்டையாகிய ஹமென் ஹில் கோட்டையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. ஆயினும் இக்கல்வெட்டு மாதோட்டத்திலே பொறிக்கப்பட்டது என்பதை கல்வெட்டின் வாசகத்திலிருந்து நிச்சயப்படுத்த முடிகின்றது. அக்கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. ஈழமு(ழு)
3. (ங்)துவ்கொ
4. ண்டு ஈழ
5. த்தரெச ரெ
6. யும் பெண்
7. டிர் பண்டார
8. மும் பிடிச்
9. சுக் கொடுபொ
10. ன அதிகார
11. த் தண்டநாச
12. கனார் ஜய
13. (ங்) கொண்ட(சா)
14. (ழ) மூ வெந்(த)
15. வெளார் மா
16. தொட்டமான
17. இராசராசபுர

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0110.jpg

இக்கல்வெட்டில் முதலாவது இராஜேந்திர சோழனது படைகள் இலங்கை மீது படையெடுத்து இலங்கை மன்னனையும், அவனது அரசியையும், செல்வங்களையும் கைப்பற்றிக் கொண்டு போன செய்தி கூறப்பட்டுள்ளது. இதே செய்தி விரிவாக சூளவம்சத்திலும் இராஜேந்திரனுடைய கரந்தை (தஞ்சாவூர்) செப்பேடுகளிலும் கூறப்பட்டுள்ளது. மேலும் இக்கல்வெட்டில் இலங்கை முழுவதும் சோழரால் வெற்றி கொள்ளப்பட்ட செய்தி கூறப்படுவதனால் இக்கல்வெட்டு 1070 இன் பின்னர் மாதோட்டத்தில் பொறிக்கப்பட்டது என்பது தெரியவருகின்றது. பொதுவாக சோழர் இலங்கையில் அடைந்த வெற்றி பற்றிக் கூறும் கல்வெட்டுக்கள் தென்னிந்தியாவிலேயே கிடைக்கப்பெற்றுள்ளன. ஆனால் இராஜேந்திர சோழன் கால வெற்றி பற்றிக்கூறும் இக்கல்வெட்டு மாதோட்டத்தில் பொறிக்கப்பட்டதை நோக்கும் போது சோழர் சிங்கள அரசை வெற்றிகொள்ள வடமேற்கிலங்கையில் மாதோட்டத்தை ஒரு தளமாக பயன்படுத்தினர் என எண்ணத் தூண்டுகிறது. இக்கருத்தை பூநகரியில் சோழர் தொடர்பாக கிடைத்துவரும் சான்றுகள் மேலும் உறுதிசெய்கின்றன *(புஷ்பரட்ணம் 1993)*.

பூநகரியில் சோழப்படையெடுப்பு

தமிழ்நாட்டில் முதலாம் பராந்தகசோழன் தொடக்கம் 3ஆம் குலோத்துங்கசோழன் வரை ஆட்சிபுரிந்த பல சோழமன்னர்கள் இலங்கை மீது படையெடுத்தனர். இப்படையெடுப்பால் இலங்கையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களை சோழர் வெற்றிகொண்டதாக இரு நாட்டு வரலாற்று மூலங்களும் எடுத்துக்கூறுகின்றன. ஆயினும் இவ்விடங்கள் அனைத்தும் பிற்காலத்தில் வரலாற்றாசிரியர்களால் அடையாளம் காணப்பட்டதாகத் தெரியவில்லை. சில பெயர்கள் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையிலும், வேறு சில இடங்கள் பிற்காலத்தில் புழக்கத்திலிருக்கும் இடப்பெயர்களை வைத்தும் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆனால் வரலாற்றுச் சான்றுகள் அற்ற நிலையில் பிற்காலத்தில் புழக்கத்திலிருக்கும் இடப்பெயர்களை மட்டும் வைத்து சோழர் வெற்றிகொண்ட இடங்களாக அடையாளங் காணப்பட்ட இடங்கள் சில பொருத்தமற்றவை என்பதை பூநகரி ஆய்வுகள் கோடிட்டு காட்டுகின்றன. இதற்கு இரண்டாம் இராஜாதிராஜசோழன் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்பு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

முதலாம் பராக்கிரமபாகு பொலநறுவையிலிருந்து ஆட்சிசெய்த (கி.பி 1158 - 1187) காலத்தில் தமிழ்நாட்டில் மதுரையிலிருந்து ஆட்சிசெய்த பராக்கிரமபாண்டியனுக்கும் அவன் தமையனாகிய குலசேகரப்பாண்டியனுக்கும் இடையே ஆட்சியுரிமை பற்றிய தகராறு தோன்றியது. இவர்களுள் பராக்கிரமபாண்டியன் சிங்கள வேந்தனாகிய பராக்கிரமபாகுவின் உதவியை நாடினான். இதையேற்றுக்கொண்ட இவனும் இலங்காபுரி தண்டநாயக்கன் தலைமையில் படையொன்றைப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பி வைத்தான். இப்படை அங்கு சில வெற்றிகளைப் பெற்றதோடு தமக்கு சார்பாக இருந்த பராக்கிரமபாண்டியனின் மகனான வீரபாண்டியனை ஆட்சியில் அமர்த்தியது. இந்நிகழ்ச்சி குலசேகரப்பாண்டியனை சோழர் உதவியை நாடுமாறு செய்தது. அப்போது சோழ மன்னனாக இருந்த இரண்டாம் இராசாதிராஜசோழன் (1163 - 1178) குலசேகரப்பாண்டியனுக்கு உதவிசெய்ய திருச்சிற்றம்பலமுடையான் பெருமானாம்பிப் பல்லவராயன் தலைமையில் பெரும் படையொன்றை பாண்டி நாட்டிற்கு அனுப்பி வைத்தான். ஆரம்பத்தில் இரு பாண்டிய மன்னர்களுக்கும் இடையிலிருந்த போராட்டம் இப்பொழுது சிங்கள - சோழப் போராட்டமாக மாறியதுடன் அப்போர் பாண்டி நாட்டிலிருந்து இலங்கைக்கும் மாறியது. இப்போராட்டங்கள் பற்றிக் கூறும் சூளவம்சம் பாண்டிநாட்டிற் சிங்களப் படைகள் அடைந்த சில வெற்றிகளை மட்டும் பெருமையாகக் கூறி ஏனைய சம்பவங்களை மறைத்துள்ளது. இதனால் ஆரம்பத்தில் வெற்றியடைந்த சிங்களப்படைகளுக்கு, பின்னர் என்ன

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0111.jpg

நடந்தது என்பதைச் சோழக்கல்வெட்டுக்களிலிருந்தே அறிய வேண்டியுள்ளது. இவற்றுள் இரண்டாம் இராஜாதிராஜன் காலத்திற் பொறிக்கப்பட்ட திருவாலங்காட்டுச் சாசனமும், பல்லவராயன்பேட்டைச் சாசனமும் இப்போராட்டம் பற்றி விரிவான தகவல்களைத் தருகின்றன (மேற்படி).

ஆரம்பத்தில் சோழப்படைகள் பாண்டிநாட்டிலே சில தோல்விகளைப் பெற்றாலும் பின்பு சோழப்படைத்தளபதியான பல்லவராயன் இங்கிருந்த சிங்களப்படைகளை வென்று புறங்காட்டியோடும்படி செய்தமையோடு சிங்களப் படைத்தளபதி இருவரையும் கொன்று அவர்கள் தலைகளை யாவரும் காணுமாறு மதுரைக் கோட்டை வாயிலிலும் வைப்பித்தான். இந்நிகழ்ச்சி இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவிற்கு பெரும் அவமானத்தினைக் கொடுத்தமையினால் இராஜாதிராஜ சோழனையும், அவனால் ஆதரிக்கப்பெற்ற குலசேகரப்பாண்டியனையும் மீண்டும் போரில் வெற்றி கொள்ள ஊராத்துறை (ஊர்காவற்துறை) புலைச்சேரி, மாதோட்டம், வல்லிகாமம் (வலிகாமம்), மட்டிவாழ் (மட்டுவில்) ஆகிய இடங்களில் தன் படைகளை நிறுத்தி வைத்திருந்தான். இச்செய்தி சோழநாட்டிற்கு எட்டவே அப்போது சோழப்படைத்தளபதியாக இருந்த அண்ணன் பல்லவராயன் இலங்கை மீது படையெடுத்து இவ்விடங்களை வெற்றிகொண்டதோடு சில சிங்களத் தலைவர்களைக் கொன்றும், ஏனையோரைப் பிடித்தும் சோழநாடு திரும்பினான். சோழரால் வெற்றிகொள்ளப்பட்ட இவ்விடங்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் தொட்டு மாந்தை வரையுள்ள வடமேற்கு இலங்கையில் அமைந்துள்ளது என்பதை இலகுவாக அடையாளம் காணலாம். இவற்றுள் மாந்தையிலிருந்து முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு போன்ற சிங்கள மன்னர்களுக்கு எதிராக வேளைக்காரப் படையினரும், இங்கிருந்த மக்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டதாக சூளவம்சம் கூறுகிறது. இதனாலே சோழர் இவ்விடத்தை இலகுவாக வெற்றி கொள்ள இங்கிருந்த தமிழ்ப்படைகளும் காரணமாக இருந்திருக்கலாம். இந்நிலை ஏனைய இடங்களிலும் இருந்திருக்கும் எனக் கொள்ளுதல் பிழையாகாது.

சோழக் கல்வெட்டிலே கூறப்பட்டுள்ள இடங்களை பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் வெறும் பெயர் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு வடமேற்கு இலங்கையில் தற்போதுள்ள இடங்களுடன் அடையாளம் கண்டுள்ளனர். அவ்வாறு அடையாளம் காணப்பட்ட சில இடங்கள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதை பூநகரி ஆய்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இவற்றுள் மட்டிவாழ் என்ற இடம் சிறப்பாக குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தை யாழ்ப்பாணத்திற்கு கிழக்கே 10 மைல் தொலைவில் சாவகச்சேரியிலுள்ள மட்டுவில் கிராமம் என நீலகண்டசாஸ்திரியும், பரணவிதானாவும் அடையாளம் கண்டுள்ளனர். இக்கருத்தையே பிற்கால வரலாற்று ஆசிரியர்களும் ஏற்றுள்ளனர். பூநகரிப்பிராந்தியத்தில் மாந்தைக்கு வடக்காக கடற்கரையை அண்டியுள்ள கிராமம் ஒன்று பாரம்பரியமாக "மட்டுவில் நாடு" என அழைக்கப்பட்டு வருகிறது. ஒரு கிராமத்தை அல்லது குறிச்சியை நாடு என அழைக்கும் மரபு சோழர் காலத்தில் பெருமளவு பின்பற்றப்பட்ட அம்சமாகும். இதை நோக்கும் போது சோழக்கல்வெட்டில் வரும் மட்டிவாழ் என்ற இடம் பூநகரி மட்டுவில் நாட்டையே குறித்தது எனக்கூறலாம். சோழர் கால அரசியல், வர்த்தக நடவடிக்கைகளை நோக்கும் போது அவை பெரும்பாலும் கடற்கரையை அண்டியுள்ள துறைமுகங்களிலும், நகரங்களிலும் இடம்பெற்றதனைக் காணலாம். இக்கல்வெட்டில் வரும் மாந்தை, ஊர்காவற்துறை போன்ற இடங்களும் இதையே உறுதிப்படுத்துகின்றன. பூநகரியிலுள்ள மட்டுவில் நாட்டின் அமைவிடம் மாந்தையிலிருந்து வடக்கே மண்ணித்தலை வரை கடற்கரையை அண்டிய போக்குவரத்திற்கு வாய்ப்பாக இருந்ததோடு இவ்விடங்களில் இருந்து நேரடியாக ஊர்காவற்துறைக்கும் அங்கிருந்து தமிழ்நாட்டிற்கும் கடற்போக்குவரத்துச் செய்யவும் சாதகமாக இருந்துள்ளது.

இது போன்ற ஒரு முக்கியத்துவத்தை சாவகச்சேரிக்கு அண்மையிலுள்ள மட்டுவில் கிராமம் அக்காலத்திலே பெற்றிருக்கும் எனக்கூறுவதற்கு தகுந்த ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0112.jpg

அத்துடன் இவ்விடத்தைச் சோழப்படையோ அல்லது சிங்களப் படையோ கைப்பற்றி வைத்திருப்பதன் மூலம் கடல்மார்க்கமாக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களை தடுத்திருக்கலாம் எனவும் கூறமுடியாது. இங்குள்ள கச்சாய்த் துறைமுகம் (கொடிகாமத்திற்கு கிட்ட உள்ளது) இதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என வாதிட்டாலும் இரண்டிற்கும் இடைப்பட்ட தூரம் அதிகமாக இருப்பதினால் இதையும் ஏற்க முடியாது. பொதுவாக ஓர் இடத்திற்குரிய பெயர்களை பல்வேறு தொடர்புகள் காரணமாக ஏனைய இடங்களும் பெற்றுக்கொள்வதுண்டு. இன்று சாவகச்சேரியிலுள்ள தனங்கிளப்பு, மறவன்புலவு போன்ற இடப்பெயர்கள் சில எதிரே அமைந்த பூநகரியிலும் உண்டு. சாவகச்சேரியில் உள்ள சில சமூகங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் பூநகரியிலிருந்து குடியேறியதற்கு ஆதாரங்கள் உள்ளன. இதேபோல் சாவகச்சேரி, மட்டுவிலுள்ள சிலரின் மூதாதையர் பூநகரி மட்டுவில் நாட்டில் இருந்து குடியேறியதற்கும் ஆதாரங்கள் உள்ளன. அத்தொடர்பின் காரணமாகவே மட்டுவில் என்ற பெயர் இங்கு ஏற்பட்டிருக்க வேண்டும். இதனாலே சோழக்கல்வெட்டில் வரும் மட்டிவாழ், பூநகரி மட்டுவில் நாட்டையே குறித்ததென நிச்சயப்படுத்திக் கூறலாம்.

சோழக்கல்வெட்டிலே கூறப்பட்டுள்ள இன்னொரு இடமான புலைச்சேரி எவ்விடத்தில் இருந்தது என்பதை வரலாற்று ஆசிரியர்கள் இதுவரை அடையாளம் கண்டதாகத் தெரியவில்லை. பூநகரியிலுள்ள ஓர் இடம் புலையர் குடா என அழைக்கப்படுகிறது. இவ்விடமும் சோழக்கல்வெட்டில் வரும் புலைச்சேரியும் ஒன்றென அடையாளம் காணச் சில ஆதாரங்கள் உள்ளன. இவ்விடம் மட்டுவில் நாட்டிற்குத் தெற்காகவும், மாந்தைக்கு வடக்காகவும் கடற்கரையை அண்டிக் காணப்படுகிறது. இது ஒரு பரந்த பிரதேசத்திற்குரிய பெயர் என்பதை இவ்விடப்பெயருடன் இணைந்து வரும் பறையமோட்டை (புலையர் குளம்), பறையகாடு (புலையர்காடு) போன்ற இடப்பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன. இன்று இரணதீவு, வலைப்பாடு போன்ற கிராமங்களில் வசிப்போரின் மூதாதையர்கள் இப்புலையர் குடாப் பகுதியிலிருந்து குடியேறியதற்குச் சான்றுகள் உள்ளன. தற்போது இவ்விடத்தில் மக்கள் குடியிருப்புக்கள் காணப்படாவிட்டாலும் இங்குள்ள புளியன்துறைமுக அழிபாடுகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் செறிவான மக்கள் குடியேற்றங்கள் இருந்ததற்கு சான்று பகிர்கின்றன. பொழிந்த முருகைக்கற்கள் கொண்டு கட்டப்பட்ட இறங்கு துறைமேடைகளின் அழிபாடுகளை இன்றும் அடையாளம் காணமுடியும். இதையண்டிக் காணப்படும் காட்டுப் பகுதியில் மிகப் பெரிய கட்டிடத்தின் அழிபாடுகள் மண்ணுக்குள் மூடுண்டு காணப்படுகின்றன. இத்துறைமுகத்தின் ஊடாக தமிழ்நாட்டுடன் நடந்த வர்த்தகம் பற்றிய நாட்டுப்புறப் பாடல்கள் ஓலைச்சுவடிகளில் காணப்படுகின்றன. சோழக்கல்வெட்டில் சோழப்படைகள் புலைச்சேரி, மாதோட்டம் உள்ளிட்ட ஊர்களிலிருந்து யானைகளைப் பிடித்துக்கொண்டு சோழநாடு சென்றதாகக் கூறப்படுகின்றது. இக்கூற்றானது மாந்தைக்கு அடுத்ததாக புலைச்சேரி அமைந்திருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதாகவும் கொள்ள இடமுண்டு. அதேவேளை புலையர்குடாவிற்கு கிழக்கே யானைப்புட்டு என்ற கிராமம் உள்ளது. ஒரு துறைமுகத்தை அண்டி இவ்விடம் காணப்படுவதை நோக்கும் போது இத்துறைமுகத்தின் ஊடாக யானை வர்த்தகம் நடைபெற்றுள்ளது என்பதை உறுதிசெய்து கொள்ள இடமுண்டு. சோழக்கல்வெட்டில் இவ்விடத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு யானைகள் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. புலைச்சேரியை வெற்றிகொண்ட சோழப்படைத் தளபதி பல்லவராயன் எனக் கூறப்பட்டுள்ளது.

இவன் பெயரில் சில ஊர்கள் சோழர் காலத்திலே தமிழ்நாட்டில் இருந்துள்ளன. இங்கே புலையர் குடாவிற்கு கிழக்காக உள்ள இடம் பல்லவராயன்கட்டு எனப்படுகிறது. இப்பெயர் கூட இவனின் படையெடுப்பு புலையர்குடாப் பகுதியில் நடந்ததை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இவ்விடங்களை அண்டியே வரலாற்றுப் பழைமை வாய்ந்த ஈழவூர், ஈழவன்குடா போன்ற இடங்கள் உள்ளன. இவ்விடங்களிலிருந்து சோழர் கால நாணயங்கள் உட்பட மத்தியகால நாணயங்கள் (கி.பி 10 -12)

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0113.jpg

பல எமது ஆய்வின் போது கிடைத்துள்ளன. எனவே மேற்கூறப்பட்ட ஆதாரங்களையும், மாந்தைக்கு வடக்காக உள்ள புலையர்குடாவின் அமைவிடத்தையும் நோக்கும் போது சோழக்கல்வெட்டில் வரும் புலைச்சேரி பூநகரியிலுள்ள புலையர்குடாவையே குறித்தது எனக் கூறலாம்.

இக்கல்வெட்டிலே கூறப்பட்டுள்ள இன்னொரு இடமாக வல்லிகாமத்தை தற்போது யாழ்ப்பாணத்தில் வழக்கிலுள்ள வலிகாமம் என அடையாளம் கண்டுள்ளனர். ஆனால் சோழர் ஆட்சியில் இவ்விடத்தை தான் இப்பெயர் குறித்ததா என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாதிருக்கிறது. ஈழத்துத் தமிழ் வரலாற்று ஏடுகளை ஆராயுமிடத்து யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பழைய பெயர்களாக மணற்றி, மணற்றிடர், மணற்றிடல் ஆகிய பெயர்கள் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இப்பெயரின் மாற்று வடிவங்களாக மணலூர், மணவூர் ஆகிய பெயர்கள் அமைந்தது என அறிஞர் கொள்வர். இவை காலப்போக்கில் வழக்கொழிந்த பெயர்களாயின. இப்பெயர்கள் சிங்கள மொழியில் வலிகம என மாறியிருக்கலாம் (வலி - மணல், கம - ஊர்) எனச் சிலர் கூறுவர். அப்பெயர்களிற் சில காலப்போக்கில் வழக்கொழிந்து போனாலும் தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் இடத்திற்கு தொடர்ந்தும் காணப்படுகின்றது. இந்தியாவிலும் இலங்கையிலும் பொதுவாக இடப்பெயர்களை நூலிற் குறிப்பிடும் போது நூலின் மொழிக்கு ஏற்றவாறு பெயரிடுவது வழக்கம். இதேபோல் இலங்கையிலிருந்த தமிழ்ப்பெயர்கள் பாளியிலும், பின் சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்படும் பொழுது அவ் இலக்கிய மொழிக்கு ஏற்ப அவை மாறுதல் அடைந்துள்ளன. உதாரணமாக பாளியில் மாதோட்ட என்ற பெயர் சிங்களத்தில் மஹாதித்த எனவும், ஊறாதொட்ட என்பது சூரதித்த எனவும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சோழக்கல்வெட்டில் இவை தமிழ் வடிவங்களைப் பெற்றாலும் சில பெயர்கள் அப்படியே கூறப்பட்டுள்ளன. இதில் வலிகாமமும் ஒன்றாகும். யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் வரையான இடங்கள் சில சிங்களத்தில் வலிகம என்ற பெயரை பெறக்கூடிய மண்தீவு, மணற்காடு, மண்ணூர், மண்ணித்தலை போன்ற பெயர்களைப் பெற்றிருப்பதைக் காணலாம். இப்பெயர்களிலே சில சோழர் காலத்தில் வலிகாமம் என்ற பெயரைப் பெற்றிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. நீலகண்ட சாஸ்திரி சோழர் கல்வெட்டில் வரும் வலிகாமம் மன்னாருக்கு 5 மைல் தொலைவிலுள்ள இடம் எனக் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

சோழக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள ஏனைய இரு இடங்களான மாதோட்டம், ஊர்காவற்துறை ஆகியன தற்போது வடமேற்கு இலங்கையிலுள்ள இடங்களையே குறித்தன என்பதில் சந்தேகமில்லை. பொதுவாக இக்கல்வெட்டிலே கூறப்பட்டுள்ள 5 இடங்களும் 2ஆம் இராஜாதிராஜசோழன் வெற்றி கொள்வதற்கு முன்னரே இவனுக்கு முற்பட்ட கால சோழமன்னர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததற்கு சான்றுகள் உள்ளன. இச்சான்றுகள் சோழர் பொலநறுவையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த காலத்தில் இவ்விடங்கள் அவர்களது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததைக் காட்டுகின்றன.

இலங்கையில் சோழ நிர்வாகம்

சோழராட்சியில் பொலநறுவை தலைநகராக விளங்கிய போதிலும் கூட அவர்களது ஆட்சி தொடர்பான சான்றுகள் பல கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையிலிருந்தே கிடைக்கப்பெற்றுள்ளன. இதற்குச் சோழர் கால இராணுவ, அரசியல், வர்த்தக நடவடிக்கைகள் கூடியளவிற்கு இப்பிராந்தியத்திலிருந்தமை காரணமாகும். இதுபோன்ற ஒரு முக்கியத்துவத்தை பூநகரி உள்ளிட்ட வடமேற்கு இலங்கை பெற்றிருந்தது என்பதற்கு சோழ நிர்வாகம் தொடர்பான சான்றுகள் பூநகரியில் கிடைத்திருப்பது மேலும் ஒரு ஆதரவாக அமைகிறது. சோழரின் 77 ஆண்டுகால ஆட்சியில் (கி.பி 993 - 1070) இலங்கையில் இதுவரை பின்பற்றப்பட்டிருந்த நிர்வாகமுறை கைவிடப்பட்டு, தமிழ்நாட்டிற்கேயுரிய சோழ நிர்வாகமுறை புகுத்தப்பட்டது. இதனால் இலங்கை மும்முடிச்சோழமண்டலம் என்ற பெயரில்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0114.jpg

சோழரின் 9 ஆவது மண்டலமாக சோழ நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டது. சோழ நிர்வாகத்தில் ஒரு மண்டலமாக கணிக்கப்பட்ட இலங்கை நிர்வாக வசதிக்காக வளநாடு, நாடு, கோட்டம் எனவும் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் பொலநறுவை நிகரிலிச்சோழ வளநாடு எனவும், பதவியா உள்ளிட்ட திருகோணமலை வீரபரகேசரி வளநாடு, இராஜேந்திரசிங்க வளநாடு, அபயாஸ்ரய வளநாடு எனவும், வடஇலங்கையில் மாதோட்டம் அருண்மொழித்தேவ வளநாடு எனவும் பிரிக்கப்பட்டிருப்பதை இங்கு கிடைத்த சோழக்கல்வெட்டுக்கள் உறுதிசெய்கின்றன. கந்தளாயில் கிடைத்த இரு சோழக்கல்வெட்டுக்கள் இலங்கையை ஆண்ட சோழப்பிரதிநிதியான சோழ இலங்கேஸ்வரன் பற்றிக் கூறுகின்றன. பதவியாவில் கிடைத்த கல்வெட்டு சோழ நிர்வாகத்தில் பங்குகொண்ட பிரதானிகள் பற்றியும், கொட்டியாரத்தில் கிடைத்த கல்வெட்டு இங்கிருந்து பெற்ற வரிகள் பற்றியும் கூறுகின்றன. பூநகரியைப் பொறுத்தவரை, சோழநிர்வாகம் தொடர்பான சாசன ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் இங்குள்ள வரலாற்றுப் பழைமை வாய்ந்த சோழமண்டலம், மட்டுவில் நாடு முதலிய இடப்பெயர்களை நோக்கும் போது சோழரின் நிர்வாகப்பிரிவு இங்கும் இருந்துள்ளது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

சோழர் ஆட்சியில் இந்துமதம்

இலங்கையில் சோழர் ஆட்சியின் போது சைவம், வைஸ்ணவம், பௌத்தம் ஆகிய மதங்கள் காணப்பட்டன. பௌத்த மதத்தைப் போல் இக்காலத்தில் நிலவிய பிற மதங்களை அறிய இலக்கிய ஆதாரங்கள் காணப்படாவிட்டாலும், இலங்கையில் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், கட்டிட அழிபாடுகள், சிற்பங்கள், சிலைகள், செப்புத்திருமேனிகள் என்பன சோழர் ஆட்சியில் இந்துமதம் அடைந்த வளர்ச்சியை அறிய நம்பகரமான சான்றுகளாக உள்ளன. இவ்வாதாரங்கள் பெரும்பாலும் இலங்கையின் முக்கிய நகரங்கள், அரசதலைநகரங்கள், நிர்வாக மையங்கள், துறைமுகங்கள் போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலான இந்து ஆலயங்கள் அழிவடைந்த நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சோழரின் தலைநகராக இருந்த பொலநறுவையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் பத்து சிவன்கோவில்களும், ஐந்து விஸ்ணு கோவில்களும், ஒரு காளி கோவிலும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் திராவிடக் கலைமரபில் கட்டப்பட்டவையாகும். ஆயினும், அவை சோழர் இங்கு ஆட்சியில் இருந்த போதுதான் கட்டப்பட்டவை என்பதை உறுதிப்படுத்த உறுதியான ஆதாரங்கள் காணப்படவில்லை. மூன்று ஆலயங்கள் சோழர் ஆட்சியின் போது கட்டப்பட்டவை என்பதை தொல்லியலாளர் உறுதிப்படுத்தி அவற்றிற்கு 2ஆம், 5ஆம், 6ஆம் சிவதேவாலயம் எனப் பெயரிட்டுள்ளனர். இவற்றுள் இரண்டாம் சிவதேவாலயம் பூரணமாகப் பேணப்பட்டிருக்கும் கோயிலாகும். அதுமட்டுமல்ல, பொலநறுவையிலுள்ள இந்துக்கோயில்களுள் சிறந்ததாகவும், இலங்கையிலுள்ள சோழர்காலக் கட்டிடங்களுள் உன்னதமானதாகவும் விளங்குகிறது. மேலும், இலங்கையில் சோழர் கட்டிய ஆலயங்களுள் முழுமையாகப் பேணப்பட்டிருக்கும் புராதன ஆலயம் என்ற சிறப்பும் இதற்குண்டு. இவ்வாலயத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களைக் கொண்டு இவ்வாலயம் வானவன்மாதேவி ஈஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டமை தெரிகிறது. இது இராஜேந்திரசோழனின் தாயார் பெயரில் இராஜேந்திரசோழன் அல்லது அவனது நிர்வாகிகள் கட்டியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது (இந்திரபாலா *1999:26*). பொலநறுவையிலுள்ள ஏனைய ஆலயங்களுள் ஐந்தாம் சிவதேவாலயத்தில் கோவிலைக் கட்ட உதவியவர்களின் பெயர்கள் பொறித்த கல்வெட்டுக் காணப்படுகிறது. அவற்றை ஆதாரமாகக் கொண்டு இக்கோயிலை சோழர் ஆட்சியின் போது இங்கிருந்த தமிழர்கள் கட்டியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது (மேலது: *28*). இவ்வாலயம் பொலநறுவையிலுள்ள வானவன்மாதேவி கோயிலை அடுத்து சோழக்கலைமரபில் கட்டப்பட்ட இன்னொரு சிறந்த கோயிலாகக் கருதப்படுகிறது.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0115.jpg



பொலநறுவை 2ஆம் சிவதேவாலயம்

தமிழீழ ஆவணகம்
Tamileelam Archive

தலைநகர் பொலநறுவைக்கு வெளியே சோழர் ஆதிக்கம் நிலவிய இடங்கள் பலவற்றில் அவர்கள் அமைத்த ஆலயங்கள் மற்றும் அவர்களின் கலைமரபில் அமைக்கப்பட்ட ஆலயங்கள் இருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. அவற்றுள் வடமத்திய மாகாணத்தில் உள்ள பதவியா என்ற இடம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பதவியா என்ற இடம் தமிழில் 'ஸ்ரீபதிக் கிராமம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டதை இங்கு கிடைத்த கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. 1893 ஆம் மற்றும் 1960 ஆம் ஆண்டுகளில் இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது நான்கு இந்துக் கோயில்களின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாம் இராசராஜசோழன் பெயரில் அமைந்த 'இரவிதுலமாணிக்கஈஸ்வரமுடையார்' என்ற கோயில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இங்கு பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்து ஆலயங்களுக்குரிய கட்டிட, சிற்ப அழிபாடுகளை நோக்கும் போது பல இந்துக்கோவில்கள் இருந்துள்ளமை தெரிகிறது.

மேலும் இங்கு கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் இங்கு அஞ்ஞாற்றுவர், நானாதேசிகர், நகரத்தர் முதலான வணிகக்கணங்கள் அரசியல், வாணிபம், பண்பாடு என்பவற்றில் செல்வாக்குப் பெற்றிருந்ததைக் காட்டுகின்றன. இதனால் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஆலங்களுக்குரிய அழிபாடுகள் சில வணிகக்கணங்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களாகவும் இருக்கலாம். மேலும் இம்மாகாணத்தில் அத்தாகட என்ற ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு 'உத்தம சோழ ஈஸ்வரம்' என்ற பெயரில் ஒரு ஆலயம் இருந்தது பற்றிக் கூறுகிறது. இவ்வாலயம் 11 ஆம் நூற்றாண்டில் உத்தமசோழன் பெயரால் இங்கிருந்த தமிழ்ப் பிரதானிகளால் அமைக்கப்பட்டது. கல்வெட்டிலிருந்து கோயிலுக்கு ஒரு வேலி நிலமும், நந்தா விளக்கினை எரிப்பதற்கு 20 பசுக்களும், சந்தி விளக்கெரிப்பதற்கு 50 தென்னைமரங்களும் அரங்கன்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0116.jpg

இராமேசன் நன்கொடை வழங்கியதை அறியமுடிகிறது *(SII.Vol.VI.No. 1141)*. இதேபோல் பொலநறுவைக்கு அண்மையிலுள்ள மண்டகிரி என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இன்னொரு கல்வெட்டு 2ஆம் இராஜேந்திரசோழன் காலத்தில் 'பண்டித சோழ ஈஸ்வரம்' என்ற பெயரில் இருந்த ஆலயம் பற்றிக் கூறுகிறது. ஆயினும் இவ்வாலயங்கள் தொடர்பான கட்டிட அழிபாடுகளோ, பிற ஆதாரங்களோ இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

பொலநறுவை சோழர் ஆட்சியின் தலைநகராக இருந்தாலும் அவர்களின் நிர்வாக, இராணுவ, பண்பாட்டு நடவடிக்கைகளின் முக்கிய மையங்களில் ஒன்றாகத் திருகோணமலை இருந்துள்ளது. இதற்கு திருகோணமலையின் அமைவிடமும், அதன் இயற்கைத்துறைமுகமும் சோழருக்கு எதிராக தென்னிலங்கையில் இருந்து ஏற்படும் படையெடுப்புக்களைக் கட்டுப்படுத்தவும், தென்னிந்தியா, தென்கிழக்காசிய நாடுகளுடன் கடல்சார் தொடர்புகளை ஏற்படுத்தவும் வாய்ப்பாக இருந்ததே காரணமாகும். இங்கிருந்த கோணேஸ்வரர் ஆலயத்தை நாயன்மார் போற்றிப்பாடும் அளவுக்கு தமிழகத்தில் பிரபல்யம் பெற்றிருந்தமை சோழர் ஆட்சிக்கு முன்னரே திருகோணமலை இந்துக்கள் செறிந்து வாழ்ந்த இடம் என்பதை உறுதிசெய்கிறது. இதை நாயன்மார் பாடலில் வரும் சில அடிகளும் உறுதிப்படுத்துகின்றன. இது சோழர் ஆட்சியில் மேலும் அதிகரித்திருக்கும்.

இலங்கையில் இதுவரை கிடைத்த சோழக் கல்வெட்டுக்களில் எண்ணிக்கையில் அதிகமானவை திருகோணமலையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டவையாகும். சோழ நிர்வாகத்தில் இலங்கையில் ஆறு வளநாடுகள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் நான்கு வளநாடுகள் திருகோணமலை மாவட்டத்தில் இருந்துள்ளன *(பத்மநாதன் 2008: 9)*. இதனால் முற்பட்ட காலத்தைக் காட்டிலும் இந்து மதமும், அம்மதம் தொடர்பான ஆலயங்களும் நன்கு வளர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அதை இம்மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டுக்களும், கடலில் இருந்து மீட்கப்பட்ட போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்ட இந்து ஆலயங்களின் அழிபாடுகளும் உறுதிசெய்கின்றன.

திருகோணமலைக்கும் பொலநறுவைக்கும் இடைப்பட்ட கந்தளாயில் ஐந்து கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் நான்கு தமிழ்க் கல்வெட்டு. மற்றையது நிஸங்கமல்லனின் சிங்களக் கல்வெட்டு. இக்கல்வெட்டுக்களில் இருந்து 11 ஆம் நூற்றாண்டு முதல் இங்கிருந்த 'இராஜராஜசதுர்வேதி மங்கலம்' என்ற பிராமணக்குடியிருப்பு பற்றியும், ராஜராஜேஸ்வரம் என்ற ஆலயம் பற்றியும் அறியமுடிகிறது.



2015 ஆம் ஆண்டு பதவியாவில் கண்டுபிடிக்கப்பட்ட 11 ஆம் நூற்றாண்டு தமிழ்க்கல்வெட்டு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0117.jpg



2014 இல் திருகோணமலை விளையாட்டரங்கில் கண்டுபிடிக்கப்பட்ட 11 ஆம் நூற்றாண்டுத் தமிழ்க்கல்வெட்டு

தமிழகத்தில் சோழர் ஆட்சியிலிருந்து பிராமணர் வாழ்ந்த பிரமதேயங்கள் சதுர்வேதிமங்கலம் என அழைக்கும் மரபு காணப்படுகிறது. இது நான்கு வேதங்களிலும் வல்லவர்களுக்கான பிராமணர்களுக்கு மன்னர்கள் வழங்கிய ஊர்களாகும். இவ்வூர்களில் குடியிருப்புக்களும், வயல்களும், தோப்புக்களும், குளங்களும் அமைந்திருக்கும். பதவியா சதுர்வேதி மங்கலம் தமிழகத்தைப் போல் சுயாட்சி கொண்ட அமைப்பாக இருந்துள்ளது. இதன் விவகாரங்களைச் சபையார் கவனித்தனர் (பத்மநாதன் 2003: 27). இங்கிருந்த சிவன் ஆலயம் கந்தளாய்ப் பிரதேசத்தில் பிரசித்தமானது. தென்கைலாசம் என்பது அதன் பொதுப் பெயராகும். சோழரின் பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள மன்னர் இங்கிருந்த பிராமணர் குடியிருப்பையும், அங்கிருந்த ஆலயத்தையும் மதித்து அவற்றின் வளர்ச்சிக்கு உதவியதை இங்கு கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதிசெய்கின்றன. சோழரை வெற்றி கொண்டு ஆட்சிக்கு வந்த முதலாம் விஜயபாகு ஆட்சியில் இங்கிருந்த ஆலயம் 'விஜயராஜேஸ்வரம்' என்றும் இங்கிருந்த பிராமணக்குடியிருப்பு 'விஜராஜசதுர்வேதிமங்கலம்' என்றும் அழைக்கப்பட்டது. இதே பெயர் விஜயபாகுவின் பேரன் கஜபாகு காலத்திலும் தொடர்ந்தது. இதை சதுர்வேதி பிரம்மபுரம் எனக் குறிப்பிடும் நிஸங்கமல்லனது சிங்களக் கல்வெட்டு அங்குள்ள பார்வதி சத்திரம் எனும் தானசாலையில் நடைபெற்ற தானதருமங்களை நேரில் பார்வையிட்டான் என்றும், அங்குள்ள கோயிலொன்றில் நடைபெற்ற விழாவிற்குச் சென்றிருந்த சமயத்தில் நாட்டிய நிகழ்ச்சியையும், சங்கீதக் கச்சேரியையும் கண்டுகளித்தான் என்றும் கூறுகின்றது. இவ்வாதாரங்கள் நிஸங்கமல்லன் காலத்திலும் கந்தளாய் சதுர்வேதிமங்கலம் அரசனது ஆதரவையும், பாதுகாப்பையும் பெற்றிருந்ததை உறுதிப்படுத்துகின்றன (பத்மநாதன் 2003: 27).

கிளிவெட்டி திருமங்களாய் சிவன் ஆலயம்

திருகோணமலை மாவட்டத்தில் விரிவான தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் மேலும் பல சைவ ஆலயங்கள் கண்டுபிடிக்கப்பட வாய்ப்புகள் உள்ளன. இதற்கு அண்மையில் கிளிவெட்டிப் பிரதேசத்தின் பிரதான வீதியிலிருந்து ஏறத்தாழ பத்துமைல் தொலைவிலுள்ள 'திருமங்களாய்' என்ற காட்டுப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிவன் ஆலயம் சிறந்த சான்றாகும். 1985 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் செறிவான தமிழ்க் குடியிருப்புக்களைக் கொண்டிருந்த இப்பிரதேசத்தின் மக்கள் படிப்படியாக வேறு இடங்களுக்கு சென்று குடியேறியதால் தற்போது ஏறத்தாழ ஏழு மைல் சுற்று வட்டம் பெருங்காடாகவே காணப்படுகிறது. இவ்விடத்தில் அழிவடைந்த ஆலயத்தின் சிதைவுகள் காணப்படுவதாக தொல்லியற் திணைக்கள அதிகாரி திரு. மணிமாறன் எமக்கு வழங்கியதன் பேரில் அவருடன், தொல்லியற் திணைக்களத்தின் இன்னொரு அதிகாரி திரு. ப. கபிலன் மற்றும் தொல்லியல் சிறப்புக்கலை மாணவர்களும் இணைந்து அவ்விடத்தில் ஆய்வு செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0118.jpg



ஆலயத்தின் வலப்பக்கம்



ஆலயத்தின் இடப்பக்கம்



ஆலயத்தூண்கள்



கல்வெட்டுக்கள் படியெடுக்கப்படுதல்

இந்த ஆய்வின் போது அடர்ந்த காட்டின் நடுவே பெருமளவுக்கு மண்ணுக்குள் புதையுண்ட ஆலயத்தின் அழிபாடுகளைக் கண்டுபிடிக்க முடிந்தது. கருங்கற்களையும், செங்கட்டிகளையும் கொண்டு கட்டப்பட்டுள்ள இவ்வாலயம் கர்ப்பக்கிருகம், அந்தராளம், முன்மண்டபம், கொடிக்கம்பம், துணைக் கோவில்கள், சுற்றுமதில் என்பன கொண்டு கட்டப்பட்டிருக்கலாம் என்பதை பிரதான ஆலயத்தின் நாலா புறத்திலும் காணப்படும் அழிவடைந்த அத்திவாரங்கள், கருங்கற் தூண்கள், செங்கற்கள் என்பன உறுதிசெய்கின்றன. கர்ப்பக்கிருகமும், அதன் மேலமைந்த விமானமும் முற்றாகச் சிதைவடைந்து தற்போது அவ்விடத்தில் சிறு மேடு மட்டும் காணப்படுகிறது. கர்ப்பக்கிருகத்துடன் இணைந்திருந்த கோமுகியைத் தவிர அங்கிருந்த பீடங்களையோ, தெய்வச் சிலைகளையோ, செப்புத் திருமேனிகளையோ அல்லது சிற்பங்களையோ இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வாலயத்தின் அமைப்பு, கலைமரபு, தூண்களின் வடிவமைப்பு என்பன பொலநறுவை இரண்டாம் சிவதேவாலயத்தை நினைவுபடுத்துகிறது. ஆயினும், தோற்றத்தில் இவ்வாலயம் மிகப் பெரியதாக இருந்திருக்கும் என்பதை ஆலயத்தின் அழிபாடுகள் உறுதிசெய்கின்றன.



கி.பி.11 ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0119.jpg



கங்குவேலியில் உள்ள ஆலய மணி



கி.பி.11 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு



கி.பி. 15-16 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இவ்வாலயத்திற்குரிய கருங்கற் தூண்கள் ஆலயச் சுற்றாடலில் ஆங்காங்கே சிதறிக் காணப்படுகின்றன. பல தூண்கள் மண்ணுள் புதையுண்டு காணப்படுகின்றன. அவற்றுள் இருந்து இதுவரை ஐந்து தமிழ்க் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களில் இருந்து மேலும் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்க வாய்ப்புக்கள் உள்ளன. இக்கல்வெட்டுக்கள் தமிழர் வரலாறு, தமிழர் மதம் பற்றிய ஆய்வில் விலைமதிக்க முடியாத வரலாற்றுப் பொக்கிஷங்களாகக் காணப்படுகின்றன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து கல்வெட்டுக்களில் மூன்று கல்வெட்டுக்கள் கி.பி. 10ஆம் - 11 ஆம் நூற்றாண்டையும், ஏனைய இரு கல்வெட்டுக்களும் கி.பி.15ஆம்-16 ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவை என்பதைக் கல்வெட்டுக்களின் எழுத்தமைதி கொண்டு கணிப்பிடமுடிகிறது. இக்காலக் கணிப்பை இந்தியாவின் தலை சிறந்த கல்வெட்டு அறிஞர்களான பேராசிரியர் வை. சுப்பராயலு, கலாநிதி இ. இராஜகோபால், கலாநிதி எஸ். சாந்தலிங்கம் மற்றும் இலங்கை அறிஞர்களான பேராசிரியர் சி. பத்மநாதன் கலாநிதி பொ. இரகுபதி ஆகியோரும் உறுதிப்படுத்தியுள்ளனர். இவற்றுள் 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் இவ்வாலயத்திற்கு தானமாக வழங்கிய பொன்னையும், காசையும் ஏனைய கல்வெட்டுக்கள் தானமாக வழங்கிய பசுக்களின் எண்ணிக்கைகளையும் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுக்கள் அனைத்திலும் இவ்வாலயத்திற்கு தானம் வழங்கியவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பது முக்கிய அம்சமாக உள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட 11ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுக்களில் வரும் திருச்சிற்றம்பலம் உடையார்,

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0120.jpg

திருவெண்ணைக் கூற்றன், திருவரங்கம் முதலான பெயர்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய சோழக் கல்வெட்டுக்களை நினைவுபடுத்துகின்றன.

இங்கு கிடைத்த காலத்தால் முற்பட்ட மூன்று கல்வெட்டுக்களையும் அடிப்படையாகக் கொண்டு இங்கிருந்த ஆலயம் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கிழக்கிலங்கையின் முக்கிய ஆலயங்களில் ஒன்றாக இருந்துள்ளதென்பதில் ஐயமில்லை. ஏனைய இரு கல்வெட்டுக்களும் பிற்காலத்திலும் இவ்வாலயத்திற்கு தானங்கள் வழங்கப்பட்டதைக் கூறுவதால் தொடர்ந்தும் இவ்வாலயம் பிரபல்யம் பெற்றிருந்ததைக் காணமுடிகிறது. திருகோணமலையில் கங்குவேலி என்ற இடத்தில் இவ்வாலயத்திற்குரிய ஆலயமணி ஒன்று காணப்படுகிறது. அம்மணியில் "திருமங்களாய் கோவிலுக்கு அவ்வூரிலிருக்கும் பத்திபெட்டி மகன் பத்தன் யுடைய உபையம்" என்ற வாசகம் கொண்ட சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தைப் பேராசிரியர் சி.பத்மநாதன் கி.பி.16 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது எனக் கூறுகிறார். ஏறத்தாழ இதன் சமகாலத்தில் எழுந்த ஆலயப் பதிகங்கள் திருகோணமலையின் முக்கிய வரலாற்றுப் பழமைவாய்ந்த ஆலயங்களில் ஒன்றாக இவ்வாலயத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன. இவற்றை நோக்கும் போது திருமங்கலாய்ச் சிவன் ஆலயத்திற்கு நீண்ட வரலாறு இருப்பது தெரிகிறது. இருப்பினும் ஆலயம் தொடர்பான கல்வெட்டுக்களை வைத்து கி.பி.11 ஆம் நூற்றாண்டில்தான் இவ்வாலயம் தோன்றியதென்ற முடிவுக்கு வரமுடியாது. இதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இது தோன்றியிருக்கலாம். இவ்வாலயம் அமைந்துள்ள இடத்தில் விரிவான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் இவ்வாலயத்தின் தோற்ற காலம் பற்றிய உண்மைகள் வெளிவர அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

இலங்கையில் சோழர் கால ஆலயங்கள் இருந்த முக்கிய இடங்களுள் மாதோட்டமும் ஒன்றாகும். அநுராதபுர, பொலநறுவை அரசு காலத்தில் இலங்கையின் அரசியல், வாணிப, கடல்சார் தொடர்பில் மாதோட்டத்தில் அமைந்துள்ள துறைமுகம் முக்கிய பங்கெடுத்ததை அங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட பல நாடுகளுக்குரிய பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இது சோழர் ஆட்சியில் மேலும் முக்கியத்துவம் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சோழ நிர்வாகத்தில் மாதோட்டம் ஒரு வளநாடாக இருந்துள்ளதை குறிப்பிடுகின்றன. அவ்வளநாடு இராஜராஜன் பெயரில் 'இராஜராஜவளநாடு' எனவும், இங்கிருந்த வீதி ஒன்று அக்காலத்தில் 'இராஜராஜப்பெருந்தெரு' எனவும் அழைக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றன. அத்துடன் இக்கல்வெட்டுக்களில் இருந்து சோழர்காலத்தில் 'இராஜராஜேஸ்வரம்',



யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட சோழக் கல்வெட்டுக்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0121.jpg

'திருவிராமீஸ்வரம்' எனும் இரு ஆலயங்கள் இருந்தமையும் தெரியவருகிறது. அதில் முதலாவது ஆலயம் சோழப்பிரதிநிதியான தாழிக்குமரனால் அமைக்கப்பட்டது. அவனால் ஏற்படுத்திக் கொடுத்த அறக்கட்டளையில் இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலங்கள், அரச வருமானம், கோயிலுக்காக நெசவாளர், வணிகர் ஆகியோரிடம் பெறப்பட்ட வரிகள், பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட அரிசி, நெல் மற்றும் ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள், உற்சவங்கள் என்பன பற்றிய விபரங்களை அறியமுடிகிறது *(SII.Vol.IV.No.1411)*. இங்கிருந்த திருவிராமீஸ்வரம் ஆலயத்திற்கு விளக்கெரிப்பதற்கு சிறுகுளத்தாருடையான் தேவன் செய்த ஏற்பாடுகள் பற்றி கல்வெட்டுக்களால் அறியமுடிகிறது *(SII. Vol.IV.No.14148)*. அப்பணிகளோடு மாதோட்டத்தில் தங்கியிருந்த வணிகர்கள் முக்கிய பங்கெடுத்தனர் *(பத்மநாதன் 2008:7)*. இருப்பினும் இவ்வாலயங்கள் மாதோட்டத்தில் எந்த இடங்களில் அமைந்திருந்தன என்பதை இதுவரை அறிந்துகொள்ள முடியவில்லை. இங்கு விரிவான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் கல்வெட்டுக்களில் கூறப்பட்ட இரு ஆலயங்களைவிட மேலும் பல ஆலயங்களும், கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்க வாய்ப்புக்கள் உள்ளன.

1970 இல் யாழ்ப்பாணக் கோட்டை வாசல்ப் பகுதியிலிருந்து கி.பி.11 ஆம் நூற்றாண்டுக்குரிய முதலாம் இராஜேந்திரசோழன் காலக் கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு நல்லூர் என்ற இடத்தில் இருந்த ஆலயம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றிக் கூறுகிறது. இதில் கூறப்பட்டுள்ள நல்லூர் என்ற இடம் யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் இராசதானிகால நல்லூரைக் குறித்ததா அல்லது வேறு இடங்களில் இருக்கும் நல்லூரைக் குறித்ததா என்பது தெரியவில்லை. யாழ்ப்பாணக் கோட்டை அமைந்துள்ள இடத்திற்கு 'ஐநூற்றுவன் வளவு' என்ற பெயரும் உண்டு. ஐநூற்றுவன் என்பது சோழர் ஆட்சியில் பலம் பொருந்திய வணிக கணத்தையும் குறிக்கிறது. இவர்கள் இலங்கையில் சுயாட்சி கொண்ட பட்டினங்களைக் கொண்டிருந்ததற்கும், தனிப்பட்ட படைப்பிரிவை வைத்திருந்ததற்கும், தமது வழிபாட்டிற்காக ஆலயங்கள் அமைத்ததற்கும் ஆதாரங்கள் உண்டு. தமிழகத்தில் ஐநூற்றுவன் வணிக கணங்கள் செல்வாக்குப் பெற்ற இடங்களில் நல்லூர் என்ற இடப்பெயர்கள் காணப்படுகின்றன. பொதுவாக அரச திருமணங்களால் ஒன்றிணையும் நிலங்கள், ஆலயங்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்கள் நல்லூர் என்ற பெயரால் அழைக்கப்படும் மரபும் சோழர் காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. தற்போது கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்புனரமைப்பு பணிகளின் போது பல்வேறு காலகட்டத்திற்குரிய, பல நாடுகளுக்குரிய தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் சோழர் காலத்திற்குரிய ஆதாரங்கள் சோழர் காலத்தில் கோட்டை அமைந்த பகுதி ஒரு முக்கிய வணிக மையமாக இருந்திருக்கலாம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இங்கு சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட கருங்கல் மற்றும் சுண்ணாம்புக்கல் கொண்ட ஆலயங்களின் கட்டிடப்பாகங்கள் கிடைத்துள்ளன. இவை கோட்டை கட்டுவதற்காக போர்த்துக்கேயர், ஒல்லாந்தரால் யாழ்ப்பாணத்து ஆலயங்களில் இருந்து எடுக்கப்பட்டவையாக இருக்கவேண்டும். சில கட்டிடப் பாகங்கள் கோட்டைப் பிரதேசத்தில் முன்னர் இருந்த ஆலயங்களின் எச்சங்களாக இருக்கலாம். அவற்றுள் கருங்கற்களாலான ஆலயத்தின் கட்டிட எச்சங்கள் இங்கிருந்த சோழர் கால ஆலயம் எனக் கருத இடமுண்டு. இதை எதிர்கால ஆய்வுகள்தான் உறுதிசெய்ய வேண்டும்.



பூநகரி மண்ணித்தலை சிவாலயம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0122.jpg

1989 ஆம் ஆண்டு பூநகரிப் பிராந்தியத்திலுள்ள மண்ணித்தலை என்ற இடத்தில் அழிவடைந்த நிலையில் சிவன் ஆலயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 21 அடி நீளம் கொண்ட இவ்வாலயத்தின் கருப்பக்கிருகம், அந்தராளம், விமானம் என்பன செங்கல், கோறற்கற்கள், சுதை என்பன கொண்டு கட்டப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் தேவகோஸ்டங்கள், கர்ணக்கூடுகள், மூன்று தளங்கள் கொண்ட விமானம் என்பவற்றின் கலை மரபுகள் முற்பட்ட சோழக் கலைமரபைப் பிரதிபலிக்கின்றது (புஸ்பரட்ணம் 1993, இந்திரபாலா *1999*).

பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி

11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழரது ஆட்சி இலங்கையில் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் சிங்கள மன்னர்களது ஆட்சியேற்பட்டது. சிங்கள மன்னர்கள் சோழரால் உருவாக்கப்பட்ட பொலநறுவையையே தமது தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இதனால் முதலாம் விஜயபாகு காலம் தொடக்கம் (1070), 13ஆம் நூற்றாண்டில் பொலநறுவை வெற்றி கொண்ட கலிங்கமாகனது ஆட்சியோடு பொலநறுவை வீழ்ச்சியடையும் வரை பொலநறுவையே சிங்கள மன்னர்களின் இராசதானியாகவும் விளங்கிற்று. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழரின் நேரடி ஆட்சி இலங்கையில் ஏற்பட்டபோது, அவர்களின் ஆட்சிக்கு எதிரான இயக்கங்கள் தென்னிலங்கையில் உருகுணையை மையமாகக் கொண்டு தோன்றி வளர்ந்தன. இதனால் சோழர் பொலநறுவையிலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் அடிக்கடி தென்னிலங்கை மீது படையெடுக்க நேரிட்டது. இப்படையெடுப்புக்களால் சோழர் தற்காலிகமான சில வெற்றிகளை அடைந்தாலும் நீண்ட காலத்திற்கு அவ்வெற்றிகள் நிலைத்திருக்கவில்லை. பதினொராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தில் சோழப் பேரரசில் ஏற்பட்ட மாறுதல்கள் இலங்கையிலிருந்த சோழரைப் பலவீனமடையச் செய்தது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திய உருகுணை மன்னன் முதலாம் விஜயபாகு 1070இல் சோழரிடமிருந்து பொலநறுவையைக் கைப்பற்றிக் கொண்டான். இந்த அரசியல் அதிகார மாற்றம் இலங்கையில் சோழருக்கு ஏற்பட்ட வீழ்ச்சியையும், சிங்கள அரச வம்சங்களுக்கு ஏற்பட்ட எழுச்சியையும் கோடு காட்டி நிற்கின்றது.

நூலக ஆவணகம்
Tamileelam Archive

முதலாம் விஜயபாகு சோழரை வெற்றி கொண்டதன் மூலம் இலங்கை வரலாற்றில் வேறு எந்த மன்னர்களும் பெறாத முக்கியத்துவத்தை பெறுகிறான். எல்லாளன் என்ற தமிழ் மன்னனைத் துட்டகாமினி வெற்றி கொண்டதற்காக அவனைச் சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக மகாவம்சம் வர்ணிப்பதுபோல், தமிழராகிய சோழரை வெற்றி கொண்டதற்காக முதலாம் விஜயபாகு சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக சூளவம்சம் போற்றிப் புகழ்கிறது. இலங்கையை ஆண்ட மன்னர்களுள் முதலாம் விஜயபாகுவே தலைசிறந்தவன் எனக் கூறும் பரணவிதானா விஜயபாகு இல்லாவிட்டால் இக்காலத்தில் இலங்கையில் சிங்களவர்கள் இருந்திருக்க மாட்டார்கள் எனக் கூறுகிறார். பரணவிதானாவின் இக் கூற்றை மிகைப்படுத்தப்பட்டதெனக் கருதும் நீலகண்ட சாஸ்திரி சிங்கள மக்களின் விடுதலைக்கு விஜயபாகுவே காரணகர்த்தா எனக் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதென்றார். இவ்வாறான புகழுரைகள் விஜயபாகுவிற்கு கொடுக்கப்பட்டமைக்கு சோழரிடமிருந்து இலங்கையை மீட்டெடுத்தமையே காரணமாகும். ஆனால் விஜயபாகுவின் நீண்டகால வரலாற்றையும், அவன் அடைந்த சாதனைகளையும் ஆழமாக ஆராயும்போது அவனுக்கு கொடுக்கப்பட்ட புகழுரைகள் சற்று மிகைப்படுத்தப்பட்டதாகவே தெரிகிறது.

சோழரைச் சிங்கள இனத்தின் விரோதியாகக் கருதும் மனோபாவம் இலங்கையின் நீண்டகால வரலாற்றில் நிலைத்திருந்ததைப் பாளி இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அந்நிலை சோழரின் நேரடியாட்சி இலங்கையில் ஏற்பட்டபோது மிகத்தீவிரமாகக் காணப்பட்டது. முதலாம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0123.jpg

விஜயபாகு பிறப்பதற்கு முன்னரே சோழருக்கெதிரான இயக்கங்கள் தென்னிலங்கையில் தோன்றி வளர்ந்தன. அந்த இயக்கங்களில் சிங்களத் தலைவர்கள் மட்டுமன்றி சோழரால் தோற்கடிக்கப்பட்ட சேர, பாண்டிய இளவரசர்களும், பிற இந்தியநாட்டு இளவரசர்கள் சிலரும் பங்கு கொண்டதாகச் சூளவம்சம் கூறுகிறது. ஆயினும் இக்காலத்தில் சோழப்பேரரசு இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வலிமை பெற்று இருந்ததனால் இவ்வெதிர்ப்பியக்கங்களால் சோழரை வெற்றி கொள்ள முடியவில்லை. இராசாதிஇராச சோழனது 29-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று தென்னிலங்கையில் சோழருக்கு எதிராகப் போரிட்ட மன்னர்களை வெற்றி கொண்டதாகக் கூறுகிறது. அச்சாசனத்தின் முக்கிய பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

"ஒருதனித் தண்டால் பெருகடலிலங்கையர்
கோமகன் விக்கிரம பாகுவின் மகுடமும்
முன்றனக் குடைந்து தென்றமிழ் மண்புலம்
முழுவது மிழந்து எழுகட லீழம்
புக்கவிலங் கேச னாகிய விக்கிரம
பாண்டியன் பருமணி மகுடமும் காண்டகு
தன்ன தாகிய கன்னக் குச்சியிலும்
உளங்கொள் நாடுதன் னுறவொடும் புகுந்து
விளங்குமுடி கவித்த வீரசலா மேகன்
போர்க்களத் தஞ்சித்தன் சார்க்களி றிழிந்து
கவ்வையுற் றோடக் காதலி யொடுந்தன்
தவ்வையைப் பிடித்துத் தாயை முக்கரிய
ஆங்கவ மானம் நீங்குதற் காக
மீட்டும் வந்து வாட்டொழி லுழந்து
வெங்களத் துலந்தவச் சிங்களத் தரைசன்
பொன்னணி முடியுங் கன்னரன் வழிவந்
துரைகொ ளீழத் தரைச னாகியசீர்
வுல்லவன் மதன ராசன் எல்லொளித்
துடமணி முடியுங் கொண்டு என்பதாம்"

இச்சாசனத்திலிருந்து தென்னிலங்கையில் ஆட்சிபுரிந்த விக்கிரமபாகு (இலங்கையர் கோமான்), விக்கிரமபாண்டியன் (இலங்கேஸ்சுரன்), வீரசாலமேகன் (கலிங்கர்மன்), மானாபரணன் (இலங்கையர்க்கிறைவன்), வீரசாலமேகன் (சிங்களத்தரைசன்), சீர்வல்லமதனராஜன் (ஈழத்தரைசன்) ஆகிய ஆறு சிற்றரசர்கள் சோழரால் தோற்கடிக்கப்பட்டமை தெரியவருகிறது. இதிலிருந்து சோழரின் மேலாதிக்கத்திற்குள் தென்னிலங்கை தொடர்ந்தும் உட்பட்டிருக்கவில்லை என்பது புரிகிறது. இத்தகையதொரு சூழ்நிலையில் தான் விஜயபாகு எனப் பின்னர் அழைக்கப்பட்ட கீர்த்தி என்பவன் 18 ஆவது வயதில் (கி.பி 1055) தென்னிலங்கையில் சோழருக்கு எதிராக வலிமை பெற்றிருந்த இயக்கத்திற்கு தலைமை தாங்கத் தொடங்கினான். அவ்வியக்கம் விஜயபாகுவிற்கு முன்னரே தோன்றியிருந்தமை சோழருக்கு எதிரான விஜயபாகுவின் படையெடுப்பு வெற்றியளிக்க ஒரு காரணமாகும். இதனால் விஜயபாகுவின் சாதனையை குறைவாகவும் மதிப்பிடுவதற்கில்லை. விஜயபாகு உருகுணை மன்னனாகப் பதவியேற்று பொலநறுவையிலிருந்த சோழனுக்கு எதிராகப் படையெடுக்க முற்பட்ட போதெல்லாம் தென்னிலங்கையில் அவனுக்கு எதிராகப் பல கலகங்கள் உருவாகின. இவற்றை அடக்கி தனது

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0124.jpg

படையெடுப்பை தொடர்ந்து நடத்திய போது அவன் நம்பியிருந்த படைவீரர்களே அவனுக்கு எதிராகச் செயற்பட்டனர். இது பற்றிப் பரணவிதான கூறிய கருத்தும் நோக்கத்தக்கது. "தன் துணிவும் மனோதிடமுமின்றி வேறொரு உதவியுமில்லாமல் ஒரு பெரிய சாம்ராச்சியத்தின் இராணுவ பலத்தை விஜயபாகு எதிர்க்க வேண்டியிருந்ததோடல்லாமல் பல முறைகளில் அவனுக்கு வெற்றி கிட்டும் சந்தர்ப்பங்களில் அவனது ஆதரவாளர்களே அவனைக் கைவிட்டு போக பின் திரும்பவும் எல்லாவற்றையும் முதலிலிருந்து தொடங்க வேண்டியவனானான்". இவ்வாறான தடைகள் ஏற்பட்ட போதிலும் விஜயபாகு சோழரை வெற்றிகொள்ள வேண்டும் என்ற இலட்சியத்திலிருந்து சிறிதளவும் விலகவில்லை. அத்தடைகளையெல்லாம் தாண்டி தொடர்ந்தும் சோழருக்கு எதிராக போரிட்டு இறுதியில் வெற்றியடைந்தமை விஜயபாகுவின் தனிப்பட்ட சாதனை எனக் கூறலாம். இருப்பினும் சோழருக்கு எதிரான அவனது ஆரம்பகாலப் படையெடுப்புக்கள் விஜயபாகுவிற்கு சாதகமாக முடியவில்லை. இதற்கு விஜயபாகு பக்கத்திலிருந்த பலவீனம் என்பதை விட சோழர் பக்கத்திலிருந்த பலம் பெருமளவு காரணம் எனலாம்.

விஜயபாகு உருகுணையின் மன்னனாகப் பதவியேற்றதும் தனது முதலாவது படையெடுப்பை சோழருக்கு எதிராக மேற்கொண்டான். இப்படையெடுப்பின் போது சோழமன்னனாக இருந்தவன் 2ஆம் இராஜேந்திரனா (1052 - 1064) அல்லது வீரராஜேந்திரனா (1063 -1069) என்பது தெரியவில்லை. 1067 ற்கு முற்பட்ட வீரராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டு இலங்கையில் நிகழ்ந்த போர் பற்றி எதுவுமே கூறாததினால் இப்போர் 1066 இல் நடந்திருக்க வேண்டும் என கொட்றிங்டன் கூறுகிறார். போர் நடந்த காலம் எதுவாக இருந்தாலும், விஜயபாகுவிற்கு இது தோல்வியில் முடிந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்குப் போதிய முன்னாயித்தமின்றி போரில் ஈடுபட்டதே காரணம் எனச் சூளவம்சம் கூறுகிறது.

விஜயபாகுவின் 2ஆவது படையெடுப்பு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இதற்காக அவன் போர்த்தந்திரங்களை மாற்றியதோடு பொலநறுவையிலிருந்த சோழ அதிகாரிகளுக்கு பல தொல்லைகளை ஏற்படுத்தி மக்களுக்கும், சோழ அதிகாரிகளுக்கும் இடையே பகையுணர்வையும் ஏற்படுத்தினான். இதன் மூலம் தனது போராட்டத்திற்கு மக்களின் ஆதரவை பெற முற்பட்டான். இதனால் ஆத்திரமடைந்த சோழ அதிகாரிகள் சோழ மன்னர்களின் ஆணையை கவனியாது தமது மனம் போன போக்கில் நடந்து கொண்டனர். இதை அறிந்த சோழ மன்னன் சோழநாட்டிலிருந்து படை அனுப்பி வைத்தான். இதுபற்றி சூளவம்சம் கூறுவது நோக்கத்தக்கது:

> "இதைக் கேள்வியுற்ற சோழ மன்னன் ஆத்திரமடைந்து ஒரு பெரிய சேனையை அனுப்பி வைத்தான். அச்சேனை மகாதீர்த்த (மாதோட்டம்) என்னுமிடத்தில் வந்திறங்கி அங்குமிங்குமாகச் சனங்களைக் கொன்று இராசரட்டை மக்களை அடக்கிற்று. இச்சேனைத் தலைவன் கரைபுரண்டோடும் வெள்ளம் போன்ற சேனையை நடத்திக் கொண்டு சென்று உருகுணையை எதிர்த்தான். அங்கு ரவிதேவ, சல என்ற வீரர்கள் விஜயபாகுவோடு பகைமைகொண்டு தமிழ்ச்சேனையின் தலைவனைச் சென்றடைந்தனர். இவ்விருவரும் பெருந்தொகையான பரிவாரங்களுடன் தன்னை வந்தடைந்ததை அறிந்த தமிழ்ச்சேனாதிபதி உருகுணை விரைவில் தன்வசப்படும் என நம்பினான்."

சூளவம்சம் சோழப்படையெடுப்பை இத்தோடு நிறுத்திவிடுவதனால் உருகுணைக்கு எதிரான சோழப்படையெடுப்பின் விளைவுகளை அந்நூலிலிருந்து அறிய முடியவில்லை. ஆனால் சோழப்படைத்தளபதி உருகுணை விரைவில் தம்மிடம் வீழ்ச்சியடையும் என நம்பியிருந்தான் எனச் சூளவம்சம் கூறுவதிலிருந்து

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0125.jpg

உருகுணைக்கு என்ன நேரிட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. அந்த ஊகத்தை வீரராஜேந்திரன் கால (1067) கல்வெட்டு ஒன்று உறுதிப்படுத்துகிறது. அக்கல்வெட்டின் முக்கிய பாகம் பின்வருமாறு அமைந்துள்ளது:

> "சோழ மன்னன் பெரிய சேனையை அனுப்பினான். அச்சேனை பாலம் அமைக்காது பெருந்தொகையான கப்பல்களில் கடலைக் கடந்து சிங்களச் சேனையைத் தோற்கடித்து விஜயபாகுவைத் துரத்தி அவனது அரசியைக் கைதியாகக் கொண்டு இலங்கை முழுவதையும் வீரராஜேந்திரனது ஆணைக்குள் கொண்டு வந்தது."

இக்கல்வெட்டிலிருந்து சோழருக்கு எதிராக உருகுணையில் போரிட்ட விஜயபாகு தோற்கடிக்கப்பட்டான் என்பது தெரிய வருகிறது. ஆனால் விஜயபாகுவிற்கு இந்நேரத்தில் ஒரு மனைவி இருந்தாள் என்றும் அப்படி இருந்தால் அவள் சோழரால் கைப்பற்றப்பட்டாளோ என்றும் தெரியாது. முந்தைய போர்களில் சோழர்கள் உண்மையாக இலங்கை அரச குடும்பப் பெண்களை கைப்பற்றிய செய்தியை ஆதாரமாகக் கொண்டு மேற்படி கூறுதல் சோழரின் பெருமையை தம்பட்டமடிக்கும் ஒரு செயலாக இருக்கலாம் என நீலகண்டசாஸ்திரி கூறுகிறார். மேலும் இக்கல்வெட்டில் வீரராஜேந்திரன் முழு இலங்கையையும் ஆண்டான் எனக் கூறப்பட்டாலும், சிறிது காலத்தில் அவனது ஆணை இராஜரட்டைக்குள் மட்டும் அடங்கியிருந்ததாகக் கருதுவதே பொருத்தமாகும். ஆனால் இக்கல்வெட்டிலிருந்தும், சூளவம்சத்தின் கூற்றிலிருந்தும் உண்மை புலனாகிறது. அந்த உண்மை சோழருக்கு எதிரான விஜயபாகுவின் 2ஆவது படையெடுப்பும் தோல்வியில் முடிந்ததென்பதேயாகும்.

விஜயபாகு முதலிரு படையெடுப்புக்களையும் துணிவோடு தொடர்ந்து நடாத்திய போதிலும் பொலநறுவையிலிருந்த சோழரை வெற்றிகொள்ள முடியவில்லை. மாறாக தனது அதிகாரத்தில் இருந்த உருகுணை அரசையும் தற்காலிகமாக சோழரிடம் இழக்க நேரிட்டது. இதற்கு காரணம் சோழர் பொலநறுவையிலும், தமிழ்நாட்டிலும் வலிமையோடு இருந்ததனால் விஜயபாகுவின் படையெடுப்புக்களை இலகுவாக முறியடிக்க முடிந்தமையாகும். ஆனால் விஜயபாகு 3ஆவது முறையாகப் படையெடுத்த போது சோழரின் படைப்பலம் அவர்களுக்கு சாதகமாக இருக்கவில்லை. விஜயபாகுவின் இப்படையெடுப்பு நடந்த காலத்தில் முதலாம் குலோத்துங்கன் (1070) சோழமன்னனாக பதவியேற்றிருந்தான். இவன் ஆட்சியில் சோழப்பேரரசில் ஏற்பட்ட தளர்ச்சியும், முன்னைய சோழமன்னர்கள் கைப்பற்றிய தென்னிந்திய அரசுகளின் எல்லைகளைப் பாதுகாக்க அவன் தொடர்ந்து மேற்கொண்ட படையெடுப்புக்களும், சாளுக்கியருடனான படையெடுப்பில் சோழப்படைவீரர்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்களும் சோழமன்னனின் கவனத்தை இலங்கையிலிருந்து திசை திருப்பியது. இதனால் விஜயபாகுவின் முன்னைய படையெடுப்புக்களை முறியடிக்க தென்னிந்தியாவிலிருந்து படையனுப்பியது போல் விஜயபாகுவின் 3ஆவது படையெடுப்பிற்கு எதிராக படையனுப்ப முடியவில்லை. இதைச் சாதகமாகப் பயன்படுத்திய விஜயபாகு 1070 இல் பொலநறுவையிலிருந்த சோழரின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டான். இத்தகைய அரசியல் சூழ்நிலைகளை மனக்கருத்தில் கொண்ட நீலகண்டசாஸ்திரி விஜயபாகு காற்றுள்ள போது தூற்றிக்கொள்ளும் வல்லமையுடையவனாக இருந்திருக்கலாம் என வர்ணித்துள்ளார். எனவே விஜயபாகு சோழனை வெற்றி கொண்டதற்காக இலங்கை வரலாற்றில் அவனுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை விஜயபாகுவின் தனிப்பட்ட திறமையின் பக்கத்திலிருந்து நோக்காது, சோழருக்கு பாதகமாக இருந்த சூழ்நிலையின் பின்னணியில் இருந்தும் நோக்குவது விஜயபாகுவின் வெற்றியை சரியாக மதிப்பிட உதவும்.

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0126.jpg

சிங்கள மன்னர்களின் ஆட்சியில் தமிழர் பிராந்தியங்கள்

1070 இல் விஜயபாகுவிற்கு ஏற்பட்ட வெற்றி சோழரிடம் இருந்த ஆட்சி அதிகாரம் சிங்கள மன்னர்களின் கைக்கு மாறுவதற்கு வழிவகுத்தன. இதனால் சோழப்படைகள் அழிக்கப்பட்டன என்றோ அல்லது சோழர் ஆட்சியில் குடியேறிய தமிழர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர் என்றோ கூறமுடியாது. மாறாக சோழர் ஆட்சியின் பின்னரும் அவர்கள் இலங்கையிலே நிரந்தரமாக குடியேறினர். அக்குடியேற்றத்தால் இரண்டு வகை மாற்றங்கள் ஏற்பட்டன.

சோழர் ஆட்சியில் படைவீரர்களாக, நிர்வாகிகளாக இருந்த தமிழர்கள் தொடர்ந்தும் சிங்கள மன்னர்களின் ஆட்சியிலும் பங்குகொண்டனர். இது பற்றி பேராசிரியர் அரசரட்ணம் கூறிய கருத்துக்கள் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது:

> "சோழர்கள் தோற்கடிக்கப்பட்டு சிங்கள அரசர்களின் அதிகாரம் மீண்டும் நிலைநாட்டப்பட்ட போதிலும் தமிழர்களின் சனத்தொகைப் பெருக்கமும், அவர்களது செல்வந்த நிலையும் படைத்துறையிலும், நிர்வாகத்துறையிலும் அவர்கள் வகித்த செல்வாக்கான பதவிகளும் இதனைச் சாத்தியமற்றதாக்கிவிட்டது."

சோழர் ஆட்சியில் படைவீரர்கள், நிர்வாகிகள், வர்த்தகர்கள், கலைஞர்கள், பிராமணர்கள் எனப் பல்வேறு சமூகத்தினர் இலங்கை வந்தனர். அவ்வாறாக வந்தவர்கள் சோழர் ஆட்சி முடிந்ததன் பின்னர் இலங்கையில் நிரந்தரமாக குடியேறினர். இதனால் வடஇலங்கையில் தமிழர்களின் சனத்தொகை அதிகரித்தது. சோழர் ஆட்சி ஏற்பட முன்னர் அநுராதபுர ஆதிக்கத்திற்கு கட்டுப்படாது அடிக்கடி படையெடுப்புக்களையும், கிளர்ச்சிகளையும் மேற்கொண்ட வடஇலங்கை (உத்தரதேசம்) சோழராட்சியோடு ஓர் அரசொன்றின் ஆக்கத்திற்கு உட்பட்டது. அந்த ஆக்கம் சோழர் ஆட்சியின் மறைவோடு முழு அரசாக மலர்ச்சிபெற வடஇலங்கையில் ஏற்பட்ட சனத்தொகைப் பெருக்கமும் ஒரு காரணமாக அமைந்தது.

பொலநறுவை காலத்தில் தமிழ் சிங்கள நல்லுறவு

வரலாற்றுத் தொடக்ககாலத்தில் இருந்து அநுராதபுரம், பொலநறுவை அரசுகளை சிங்கள மன்னர்களும், பலசந்தர்ப்பங்களில் தமிழ் மன்னர்களும் மாறிமாறி ஆட்சிசெய்து வந்துள்ளனர். பதவியிழந்த சிங்கள மன்னர்கள் தமிழ்நாடு சென்று படையுதவி பெற்று ஆட்சிக்கு வந்ததற்கும், தமிழ்நாட்டு வம்சங்கள் இலங்கை மீது படையெடுத்த போது இங்கிருந்த தமிழர்கள் அவர்களுடன் இணைந்து சிங்கள மன்னர்களின் ஆட்சியைக் கைப்பற்றியதற்கும், அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டு நாடு பலவீனப்பட்ட சந்தர்ப்பங்களில் இங்கிருந்த தமிழர்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து ஆட்சியாளர்களைத் தெரிவு செய்ததற்கும் ஆதாரங்கள் உண்டு. ஆள்புல விஸ்தரிப்பிற்காக நடந்த போராட்டங்களில் சிங்கள மன்னர்களின் பக்கத்தில் தமிழ்ப்படைவீரர்களும், தமிழ் மன்னர்களின் பக்கத்தில் சிங்களப் படைவீரர்களும் இருந்து போரிட்டுள்ளனர். அரசியலில் ஏற்பட்ட இந்த தமிழ் சிங்கள நல்லுறவு பொலநறுவை இராசதானி காலத்தில் மதம், கலை, பொருளாதாரம், நீர்ப்பாசனம், திருமண உறவு முதலானவற்றில் உன்னத நிலையடைந்தது. இதற்கு அத்திவாரமிட்டதில் சோழருக்கு முக்கிய இடமுண்டு. இது பற்றிப் பேராசிரியர் இந்திரபாலா பின்வருமாறு கூறுகிறார்:

> "பழைய சிங்கள அரசில் மீண்டும் சிங்களவர் ஆட்சி ஏற்பட்டதுடன் சிங்களவர் – தமிழர் உறவு தொடர்பாக ஒரு புதுக்காலகட்டம் தொடங்கியது. அடுத்த ஒரு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0127.jpg

நூற்றாண்டுக்கு மேலாக, எல்லாத் துறைகளிலும் இணைந்து செயற்பட்டுச் சிறப்பான சாதனைகள் சிலவற்றை ஈட்டினர். வம்ச உறவுகளைப் பொறுத்த மட்டில் ஆளும் சிங்கள வம்சத்திற்கும் தமிழ் வம்சங்களுக்கும் இடையில் இக்காலத்தில் உண்டானது போன்ற நெருங்கிய உறவு வேறெந்தக் காலத்திலும் இருக்கவில்லை. அதேபோன்று, நிர்வாகம், படையமைப்பு, வர்த்தகம், நீர்ப்பாசனம், சமயம் மற்றும் கலைகள் ஆகிய பல்வேறு துறைகளில் இரு இனக்குழுக்களும் இணைந்து செயற்பட்டு சாதனைகளை ஈட்டின என்பது வரலாற்று ஆசிரியர்களால் பொதுவாகக் கவனிக்கப்படவில்லை. இவர்கள் இணைந்து செயற்பட்டதன் விளைவால் இலங்கை வரலாற்றில் ஓர் உன்னதமான காலப்பகுதி உதயமாகியது. இதன் உண்மைச் சிறப்பு வெளிப்படாத வகையில் இக்காலப்பகுதி பொலநறுவைக் காலம் என்ற வெறுமையான ஒரு பெயரை வரலாற்று நூல்களில் பெறுகின்றது. சிறப்பை மறைக்கும் இப்பெயருக்குள் அடங்கியிருப்பது ஓர் உண்மையான உன்னத இலங்கையர் நாகரிகம் மலர்ந்த காலமாகும்"

- (இந்திரபாலா 2006: 286-287).

இலங்கை வரலாற்றில் சோழரை வெற்றிகொண்டதன் மூலம் முதலாம் விஜயபாகு சிங்கள இனத்தின் விடுதலை வீரனாகப் பார்க்கப்படுகிறான். மகாவம்சத்தில் எல்லாளன் என்ற தமிழ் மன்னனைத் துட்டகாமினி வெற்றி கொண்டதன் மூலம் அந்நூலின் காவிய நாயகனாக துட்டகாமினி காணப்படுகின்றான். அதேபோல் சோழரை வெற்றி கொண்டதற்காக சூளவம்சத்தின் காவிய நாயகனாக விஜயபாகு பார்க்கப்படுகிறான். இதனால் பிற்கால வரலாற்று ஆய்வுகள் பலவற்றில் இவர்களின் போராட்டங்கள் தமிழ் சிங்கள மன்னர்களுக்கு இடையே நடந்த அரசியல் ஆதிக்கப் போட்டிகளாகப் பார்க்கப்படாது தமிழ் - சிங்கள மன்னர்களுக்கு இடையில் நடந்த இனப்போராட்டங்களாகவே நோக்கப்பட்டுள்ளன.

Tamileelam Archive

ஆனால் விஜயபாகு சோழருக்கு எதிராகப் போரிட்டானே தவிர தமிழருக்கு எதிராகப் போரிடவில்லை. அவன் தென்னிலங்கையில் இருந்து தன் ஆள்புலத்தை விஸ்தரிக்க முற்பட்ட போது பல சிங்களச் சிற்றரசர்களுடன் போரிட நேரிட்டது. சோழரை வெற்றிகொண்டு பொலநறுவையில் ஆட்சி செய்துகொண்டிந்த போது தென்னிலங்கையில் இருந்து ஏற்பட்ட பல சிங்கள மன்னர்களின் கிளர்ச்சிகளை அடக்க நேரிட்டது. சோழர் விஜயபாகு போராட்டத்தில் விஜயபாகு பக்கத்தில் தமிழ்ப் படைவீரர்களும், சோழர் பக்கத்தில் சிங்களப் படைவீரர்களும் இருந்துள்ளனர். சோழர் தென்னிலங்கையை வெற்றி கொள்ள எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு அங்கு உருவாகியிருந்த சோழருக்கு எதிரான எதிர்ப்பியக்கங்கள் முக்கிய காரணங்களாக இருந்தன. அந்த இயக்கங்களில் பதவியிழந்த இரண்டு பாண்டியத் தலைவர்களும், ஒரு வடஇந்திய இளவரசனும் இருந்துள்ளனர்(இந்திரபாலா 2006:285). கி.பி. 1067 ஆம் ஆண்டுக்குரிய சோழக் கல்வெட்டு விஜயபாகு சோழருக்கு எதிராகப் போராடிய போது அவனுக்குச் சார்பாக போரிட்ட குருகுலத்தரையன் என்ற தமிழப் படைத்தளபதி கொல்லப்பட்டான் எனக் கூறுகிறது. அதேபோல் சோழப் படையில் இருந்த சள மற்றும் ரவிதேவ ஆகிய சிங்களப் படைவீரர்கள் விஜயபாகுவிற்கு எதிராகப் போரிட்டதாகப் பாளி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன (மேற்படி: 283). இவ்வாதாரங்களை நோக்கும் போது சோழர் - விஜயபாகு போராட்டத்தை ஒரு இனப்போராட்டமாகக் கொள்ள முடியவில்லை.

பேராசிரியர் இந்திரபாலா சோழரை வெற்றிகொண்ட விஜயபாகு பொலநறுவையிலிருந்து (கி.பி. 1077இல் இருந்து) ஆட்சி புரிந்த காலத்தில் அவன் எடுத்த நடவடிக்கைகள் தமிழரின் செல்வாக்குப்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0128.jpg

பலவீனமடையும் வகையில் அமையவில்லை. மாறாக அவன் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையிலும் இன ஒற்றுமையே காணப்பட்டது எனக் கூறுகிறார் (மேற்படி : 283). அவன் தனது அரசையும், பௌத்த மதத்தையும் பாதுகாப்பதில் சோழர் ஆட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்த படைவீரர்களையே நம்பியிருந்தான். அப்படைப் பிரிவுகளுள் வேளைக்காரப் படைப்பிரிவு சிறப்பாக குறிப்பிடத்தக்கது. சோழர் இலங்கையில் ஆட்சிபுரிந்த காலத்தில் தமிழ்நாட்டைப் போல் இங்கும் வேளைக்காரர் என்ற படைப்பிரிவினரை வைத்திருந்தனர்.

இப்படைப்பிரிவில் இடங்கை, வலங்கை, சிறுதனம், பிள்ளைத்தனம், வடுகர், மலையாளர் முதலான பல சிறு படைப்பிரிவுகளும் அங்கம் வகித்தன. இவ்வேளைக்காரப் படை ஒரு வலிமைமிக்க சமூகத்தினர் என்றும், வல்லமை படைத்த சமுதாயத்தில் உயர் நிலையில் வைக்கப்பட்ட கட்சியினர் என்றும், தனிப்பட்ட படைப்பிரிவு என்றும் வரலாற்றாசிரியர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் பேராசிரியர் நீலகண்டசாஸ்திரி வேளைக்காரப் படை என்பது உயிரை விடுகின்ற சமயத்திலும் அரசனுக்கு கீழ்ப்படிந்தவர்களாக சபதம் செய்துகொண்ட ஒருவகை படை உறுப்பினர்கள் என விளக்கம் கொடுத்துள்ளார். இலங்கையில் சோழர் ஆட்சியில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற இப்படை உறுப்பினர்கள் சோழர் ஆட்சியின் பின்னர் தமிழ் வர்த்தகக்குழுக்களின் கீழ் கடமையாற்றியிருக்க வேண்டும். இவ்வகைப் படைப்பிரிவினர்களே சிங்கள மன்னர்களின் ஆட்சியிலும் நீண்டகாலம் செல்வாக்குப் பெற்றிருந்தனர். விஜயபாகு ஆட்சியில் அவனுக்குத் துணையாக வேளைக்காரப் படையினர் பணிபுரிந்ததை சூளவம்சமும், அவன் ஆட்சிக்காலக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன. இவனது 55ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த பொலநறுவைக் கல்வெட்டு அந்த நகரிலுள்ள தலதாமாளிகையைப் பாதுகாக்கும் பொறுப்பை வேளைக்காரப் படையினர் ஏற்றிருந்ததாகக் கூறுகிறது. விஜயபாகுவைத் தொடர்ந்து பொலநறுவையில் ஆட்சிபுரிந்த ஜெயபாகு, 2ஆம் கஜபாகு, 1ஆம் பராக்கிரமபாகு ஆகிய மன்னர்களின் ஆட்சியிலும் இவ்வேளைக்காரப்படையினர் முக்கிய பங்கெடுத்ததற்கு ஆதாரங்கள் உண்டு. இவர்கள் பௌத்த மதத்தை பாதுகாப்பதில் மட்டுமன்றி சிங்கள மன்னர்களின் உள்நாட்டு, வெளிநாட்டுப் படையெடுப்புக்களிலும் முக்கிய பங்கெடுத்தனர்.



கந்தளாய் கல்வெட்டு

பொலநறுவை காலத்தில் உருவான தமிழ் - சிங்கள நல்லுறவிற்கு அரச வம்சங்களிடையே ஏற்பட்ட

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0129.jpg

திருமணங்களும் முக்கிய காரணமாக இருந்தது. இது விஜயபாகு ஆட்சியில் முன்பொருபோதும் இல்லாத அளவிற்கு நெருக்கமடைந்து காணப்பட்டது. இந்நல்லுறவுகள் சோழரின் பின்னரும் தொடரவும், இலங்கையில் இந்து மதம் வளர்வதற்கும் வாய்ப்பாக அமைந்தது. முதலாம் விஜயபாகு பௌத்த மதத்தவனாக இருந்த போதும் இந்து மதத்தவர்களைப் புறக்கணிக்கவில்லை. அவன் தனது சகோதரி மித்திராவை இந்து மதத்தவனான பாண்டிய இளவரசனுக்கு மணம்முடித்து வைத்தான். அப்பாண்டிய இளவரசனின் மகளின் மகனாகப் பிறந்தவனே பொலநறுவை ஆண்ட தலைசிறந்த மன்னர்களில் ஒருவனான முதலாம் பராக்கிரமபாகு ஆவான். விஜயபாகு அரசியலில் சோழரைப் பகைவராகக் கருதிய போதிலும் தனது மருமகன் வீரபெருமாளை குலோத்துங்கசோழன் மகள் சுந்தரமல்லி ஆழ்வார்க்கு திருமணம் செய்து வைத்தான்.

தமிழ் - சிங்கள அரச வம்சங்களிடையே ஏற்பட்ட திருமண உறவால் சிங்கள மன்னர் ஆட்சியிலும் இந்து மதம் வளர உதவியது. இதற்கு பொலநறுவை அரசர்கள், இளவரசர்கள் மதத்தால் இந்து மதத்தைச் சேர்ந்த அயோத்திய இளவரசி லீலாவதி, கலிங்க இளவரசி திரிலோகசுந்தரி ஆகியோரை திருமணம் செய்தமை மேலும் சாதகமாக அமைந்தது. இதனால் அரச சபைகளிலும், விழாக்களிலும் இந்துமதம் மேலோங்கியது. திரிலோகசுந்தரி பௌத்தத்திற்கு மாறாக நடந்தாள் எனப் பாளி இலக்கியங்கள் கூறுகிறது. இவள் மகன் விக்கிரமபாகு பௌத்தர் அல்லாத பிராமணப் பெண்ணை மணந்ததால் பிராமணியம் அரசி சபையில் செல்வாக்குப் பெற்றது. இவர்களுக்கு மகனாகப் பிறந்த கஜபாகு ஒரு சைவனாகவே ஆட்சி நடாத்தினான் எனப் பேராசிரியர் கிருபாமுனை கூறுகிறார். கஜபாகு தனது பிற்கால ஆட்சியில் கோணேஸ்வரம், கந்தளாய் சதுர்வேதி மங்கலத்தில் கழித்தான் என்பதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கஜபாகு மன்னன் கோகர்ணத்தில் (திருகோணமலையில்) உள்ள சிவாலயம் ஒன்றுக்கு வழங்கிய நன்கொடைகள், திருப்பணிகள் பற்றி கோணேஸ்வரர் கல்வெட்டு, ஸ்ரீதக்ஷண கைலாசபுராணம், திருகோணமலைப்புரம் என்பன விரிவாக எடுத்துக் கூறுகின்றன (பத்மநாதன் 2003: 23).



நயினாதீவில் கிடைத்த தமிழ்க்கல்வெட்டு

சோழரின் பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள மன்னர் கந்தளாயில் இருந்த பிராமணர் குடியிருப்பையும், அங்கிருந்த ஆலயத்தையும் மதித்து அவற்றின் வளர்ச்சிக்கு உதவியதை இங்கு கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதிசெய்கின்றன. சோழரை வெற்றி கொண்டு ஆட்சிக்கு வந்த முதலாம் விஜயபாகு ஆட்சியில் இங்கிருந்த ஆலயம் 'விஜயராஜஈஸ்வரம்' என்றும் இங்கிருந்த பிராமணக்குடியிருப்பு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0130.jpg

'விஜராஜசதுர்வேதிமங்கலம்' என்றும் அழைக்கப்பட்டது. இதேபெயர் விஜயபாகுவின் பேரன் கஜபாகு காலத்திலும் தொடர்ந்தது. இதை சதுர்வேதி பிரம்மபுரம் எனக் குறிப்பிடும் நிஸங்கமல்லனது சிங்களக் கல்வெட்டு அங்குள்ள பார்வதி சத்திரம் எனும் தானசாலையில் நடைபெற்ற தானதருமங்களை நேரில் பார்வையிட்டான் என்றும், அங்குள்ள கோயிலொன்றில் நடைபெற்ற விழாவிற்குச் சென்றிருந்த சமயத்தில் நாட்டிய நிகழ்ச்சியையும், சங்கீதக் கச்சேரியையும் கண்டுகளித்தான் என்றும் கூறுகின்றது. இவ்வாதாரங்கள் பௌத்தர்களே இலங்கையின் ஆட்சியாளர்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த நிஸங்கமல்லன் காலத்திலும் கந்தளாய் சதுர்வேதிமங்கலம் அரசனது ஆதரவையும், பாதுகாப்பையும் பெற்றிருந்ததை உறுதிப்படுத்துகின்றது *(பத்மநாதன் 2003: 27)*. இவ்வாதாரங்கள் சோழரின் பின்னர் பொலநறுவையில் ஆட்சி செய்த மன்னர்கள் பௌத்தர்களாக இருந்தும் இந்து மதம் வளர்வதற்கும் ஆதரவாக இருந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றன.

சோழர் ஆட்சியில் பின்பற்றப்பட்ட தமிழ் நிர்வாக முறை முதலாம் விஜயபாகுவின் ஆட்சியுடன் சிங்கள நிர்வாக முறைக்கு மாறியது. ஆயினும் அவன் ஆட்சிக்காலத்தில் இருந்து தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்த இடங்களில் நிர்வாகம், வாணிபம், மதம் சார்ந்த செய்திகள், ஆணைகள் தமிழில் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கண்டுபிடிக்கப்பட்ட விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு, கஜபாகு, நிசங்கமல்லன் ஆகிய சிங்கள மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். இக்காலத்தில் வடஇலங்கையில் உள்ள மாதோட்ட துறைமுகத்திற்கு அடுத்த நிலையில் ஊர்காவற்துறையில் இருந்த துறைமுகம் முக்கிய வணிக மையமாகவும், துறைமுகமாகவும் விளங்கியதைப் பாளி இலக்கியங்களும், சோழக் கல்வெட்டுக்களும் எடுத்துக் கூறுகின்றன. இக்காலத்தில் இலங்கைக்கும் தென்னிந்தியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இடையிலான யானை வர்த்தகம், அரசியல் தொர்புகள், படையெடுப்புக்கள் என்பன இத்துறைமுகம் ஊடாகவும் நடைபெற்றது. நயினாதீவுக் கடற்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி 12 ஆம் நூற்றாண்டுக்குரிய முதலாம் பராக்கிரமபாகுவின் தமிழ்க் கல்வெட்டு ஊர்காவற்துறைமுகத்தில் வெளிநாட்டு வணிகர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குகள், தங்குமிட வசதிகள், பாதுகாப்பு என்பன பற்றிக் கூறுகிறது. பொலநறுவையில் சிங்கள மொழிக் கல்வெட்டுக்களை வெளியிட்ட பராக்கிரமபாகு தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த வடபகுதில் தமிழில் கல்வெட்டை வெளியிட்டிருப்பதன் மூலம் அவனது நிர்வாகத்தில் தமிழும் ஆட்சிமொழியாகப் பின்பற்றியிருந்ததைக் காட்டுகிறது. இதன் மூலம் பொலநறுவை இராசதானி காலத்தில் இருமொழி நிர்வாகம் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டதெனக் கூறலாம். இது தமிழ் - சிங்கள மக்களுக்கிடையே இருந்த நல்லுறவுக்கு மேலும் ஒரு சான்றாகும். ■

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0131.jpg

5

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பொலநறுவையின் வீழ்ச்சியும் வன்னியும்













இயல் ஐந்து

பொலநறுவையின் வீழ்ச்சியும் வன்னியும்

இலங்கையில் வன்னி,வன்னிமை, வன்னிப்பற்று என்ற பெயர் 13 ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ், சிங்கள இலக்கியங்களில் காணப்படுகின்றன. வடக்கு, கிழக்கு இலங்கையில் அடங்காப்பற்று, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய இடங்களில் தமிழ் வன்னிமைகள் இருந்தது போல் தென் இலங்கையிலும் சிங்கள வன்னிமைகள் இருந்துள்ளன. சிறிய ஆள்புலத்தைக் கொண்ட வன்னிமைகளில் ஆட்சி செய்தவர்கள் வன்னித் தலைவர்கள் அல்லது வன்னிச்சிற்றரசர்கள் என அழைக்கப்பட்டனர். வடஇலங்கையின் பெருநிலப்பரப்பில் இருந்த வன்னி என்ற பெயர் ஆரம்பத்தில் மேல்பற்று, செட்டிக்குளம்பற்று, பனங்காமம்பற்று, முள்ளியவளைப்பற்று, தென்னமரவாடிப்பற்று, கருநாவல்பற்று, கரிகட்டுமூலைப்பற்று என்பவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தையே குறித்து நின்றது. ஆனால் காலப்போக்கில் குறிப்பாக ஐரோப்பியர் ஆட்சியில் நிர்வாக வசதிக்காக வடஇலங்கையின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்ட போது வன்னி என்ற பெயரின் எல்லைகளும் விரிவடைந்தன. இன்று வன்னி என்ற பெயர் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதேசத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதால் வன்னி பற்றிய இவ்வாய்வில் நான்கு மாவட்டங்களும் உள்ளடங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தொல்லியல், வரலாற்று ஆய்வில் அறிஞர்களின் அதிக கவனத்தில் கொள்ளப்படாத பிராந்தியங்களில் ஒன்றாக வன்னி நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. இதனால் வன்னிச் சிற்றரசர்களின் தோற்றத்திற்கு முந்திய வன்னி வரலாறு இலங்கை வரலாற்றில் பெருமளவுக்கு இருள் சூழ்ந்ததாகவே காணப்படுகிறது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் இருந்து 19 ஆம் (1811வரை) நூற்றாண்டின் முற்பகுதி வரை வன்னியின் வரலாறு பெருமளவுக்கு கலிங்கமாகன், சாவகன் மற்றும் வன்னிச் சிற்றரசர்களின் வரலாறாகப் பார்க்கப்பட்டாலும் அவர்களின் வரலாறும், வரலாற்றுச் சாதனைகளும் இதுவரை முழுமையாகக் கண்டறியப்படவில்லை. இன்று பெரும் காடுகள், மக்கள் வாழ முடியாத இடங்கள் பலவற்றில் புராதன குளங்கள், கால்வாய்கள், குடியிருப்புக்கள், இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள், இந்து பௌத்த ஆலயங்கள், கட்டிட சிற்பங்கள், கல்வெட்டுக்கள், வன்னிச் சிற்றரசர்களின் வாழ்விடங்கள், அரண்மனைகள் போன்ற விலை மதிக்க முடியாத சொத்துக்கள் அழிவடைந்தும், கைவிடப்பட்டும் காணப்படுகின்றன. இவ்வாதாரங்கள் வன்னிக்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு இருந்ததைப் பறைசாற்றுகின்றன. ஈழத்தின் புராதன கிராமக்குடியிருப்புக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டின் அறிமுகத்தைத் தொடர்ந்து குள நீர்ப்பாசனத்தை மையப்படுத்தி தோன்றியவை. பாளி இலக்கியங்களிலும், பிராமிக் கல்வெட்டுக்களிலும் வரும் இடப்பெயர்களின் பின்னொட்டுச் சொற்கள் ஆவி, வாவி, குள(ம்) என வருவது இதற்குச் சான்றாகும். வன்னியின் பெரும்பாலான கிராமங்களின் பெயர்கள் குளம் என முடிகிறது. இப்பெயர் அக்கிராமங்கள் பலவற்றிற்கு தொன்மையான வரலாறு இருப்பதைக் காட்டுகிறது. வன்னியில் 1000க்கு மேற்பட்ட குளங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பலவற்றிற்கு நீண்ட வரலாறு உண்டு. இக்குளங்கள் பல மக்கள் ஒன்று சேர்ந்து பல கிராமங்களின் நீர்ப்பாசன விவசாயத்திற்காக உருவாக்கப்பட்டவை. குளங்களின் அபரிதமான எண்ணிக்கை வன்னியில் ஒரு காலத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கையையிட்டுப் பிரமிப்படைய வைக்கிறது. இவ்வரலாற்று தரவுகள் எல்லாம் நம்பகத்தன்மை கொண்ட தொல்லியல் ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்டு ஆராயப்படுவது அவசியம். வன்னி பற்றிப் பிற்காலத்தில் எழுந்த இலக்கியங்கள், வாய்மொழிச்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0133.jpg

செய்திகள், நாட்டார் பாடல்கள், மக்களிடையே நிலவும் ஐதீகக் கதைகள் என்பனவற்றை மட்டும் வைத்து வன்னியின் உண்மையான வரலாற்றை முழுமையாக வெளிச்சத்திற்கு கொண்டு வரமுடியாது. அவ்வரலாறு இங்கு கண்டுபிடிக்கப்படும் தொல்லியல் ஆதாரங்களுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டும். அப்போது வன்னியின் உண்மையான புதிய வரலாறு தோன்றும். இருப்பினும் வன்னியில் கலிங்கமாகன் ஆட்சி தோன்ற முன்னர் வன்னியின் வரலாற்றுப் பின்புலத்தை தெரிந்து கொள்வதற்குச் சில நம்பகரமான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் அவை பற்றி இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகத் தோன்றுகிறது.

1970 களின் பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் விஞ்ஞான பூர்வமான தொல்லியல் ஆய்வுகள் இலங்கை வரலாறு தொடர்பான பாரம்பரிய நம்பிக்கைகள் பலவற்றை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தி வருகின்றன. அதில் உலக மனித வரலாற்றின் தொடக்கமாகக் கருதப்படும் கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களில் ஒன்றாக இலங்கையில் வன்னியில் உள்ள இரணைமடுப்படுக்கை அடையாளம் காணப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக குறிப்பிடத்தக்கது. இது போன்ற கற்கால மக்கள் இரணைமடுவின் சமகாலத்தில் அல்லது பிற்பட்ட காலத்தில் வன்னியில் உள்ள பெரியபுளியங்குளம் மற்றும் கட்டுக்கரைக் குளப்பகுதியிலும் வாழ்ந்திருக்கலாம் என்ற நம்பிக்கை அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளால் உணரப்பட்டுள்ளன. இது எதிர்கால ஆய்வுகளால் உறுதிப்படுத்த அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக நம்புகிறோம்.

தமிழகத்திலும், இலங்கையிலும் குளநீர்ப்பாசனத்தை மையப்படுத்திய கிராமக் குடியிருப்புக்கள் இற்றைக்கு 3000 ஆண்டளவில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றியது என்ற உண்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வன்னியில் மாமடு என்ற இடத்தில் பரந்த அளவில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது போன்ற பெரிய ஈமக்காடு இலங்கையின் வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்வாதாரங்கள் இப் பிரதேசத்தில் மிகப்பெரிய அளவில் பெருங்கற்கால மக்களது குடியிருப்புக்கள் இருந்துள்ளதை உறுதி செய்கின்றன. அண்மையில் வவுனியாவில் பெரியபுளியங்குளம், செட்டிக்குளத்தில் கொங்குராயன்மலை மற்றும் கப்பாச்சி, மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைகுளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது பெருங்கற்கால மற்றும் வரலாற்றுத் தொடக்க கால குடியிருப்புக்கள் இருந்ததற்கான பல்வகைப்பட்ட ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொங்குராயன்மலைப் பகுதியில் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் கற்பதுக்கை என்ற வகையைச் சேர்ந்த ஈமச்சின்னம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதுவரை கப்பாச்சி, பெரியபுளியங்குளம் ஆகிய இடங்களில் கண்டறியப்பட்ட ஆதாரங்களில் இருந்து இற்றைக்கு 1600 ஆண்டளவில் இவ்விடங்களில் பரந்த அளவிலான குடியிருப்புக்கள் இருந்துள்ளமை தெரிய வருகிறது.



பரல் உயர் பதுக்கை, கொங்குராயன்மலை – வவுனியா

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0134.jpg

கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வுகள்



கட்டுக்கரை

பல்லினப் பண்பாடு கொண்ட இலங்கை வரலாற்றில் எந்தொவொரு இடத்திலும் குறிப்பிட்ட ஒரு இனம் அல்லது குறிப்பட்ட ஒரு மொழி பேசிய மக்கள் மட்டும் பண்டைய காலத்தில் வாழ்ந்ததற்கு ஆதாரங்கள் இல்லை என்ற கருத்து அண்மைக்காலத்தில் தொல்லியலாளர் மத்தியில் மேலோங்கி வருவதைக் காணமுடிகிறது. இதற்கு காலத்திற்குக் காலம் பிற நாடுகளில் இருந்து பரவிய பண்பாடுகளும், புலம்பெயர்ந்து வந்த மக்களும் இலங்கையின் பல பாகங்களிலும் ஒன்று பட்டு வாழ்ந்ததும், வளர்ந்ததுமே காரணம் எனக் கூறப்படுகிறது. ஆனால் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வடஇலங்கையின் பெருநிலப்பகுதி வன்னி என்ற பெயரையும், பதினைந்தாம் நூற்றாண்டில் குடாநாடு யாழ்ப்பாணம் என்ற பெயரையும் பெறுவதற்கு முன்னர் இலங்கையின் இரண்டாயிரம் ஆண்டு கால வரலாற்றாய்வில் செல்வாக்கு செலுத்தி வரும் பாளி இலக்கியங்கள் இப்பிராந்தியத்தை நாகதீபம் (தமிழில் நாகநாடு), உத்திரதேசம் (வடபகுதி) என்ற பெயர்களால் தனித்து அடையாளப்படுத்தி கூறும் வரலாற்று மரபைக் காணமுடிகின்றன. இவ்வாறு வடஇலங்கை பண்டுதொட்டு தனித்துவமான பெயர்கள் கொண்டு அடையாளப்படுத்தி வந்தமைக்கு அதன் தனித்துவமான பௌதிக வளங்கள் காரணமா? அல்லது அப்பிராந்தியத்தில் தனித்துவமான பண்பாடுகள் தோன்றி வளர்ந்தமை காரணமா? என்பதற்கு அப்பாளி இலக்கியங்களில் நேரடியான ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை. ஆயினும் 1970 களில் இருந்து வடஇலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகள் பாளி இலக்கியங்களில் வரும் தனித்துவமான பெயர் அடையாளங்களுக்கு இப்பிராந்தியத்தில் தோன்றி வளர்ந்த தனித்துவமான பண்பாடே காரணமாக இருக்கலாம் எனச் சிந்திக்க வைக்கிறது. இதற்கு அண்மையில் கட்டுகரைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட நம்பகரமான ஆதாரங்கள் சிறந்த சான்றுகளாக உள்ளன.

வடஇலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய தொன்மைக் குடியிருப்பு மையங்களில் ஒன்றாகக் கட்டுக்கரைத் தொல்லியல் மையம் காணப்படுகிறது. இவ்விடம் இலங்கையின் வரலாற்றுப் பழமைவாய்ந்த மன்னார் மாவட்டத்தில் இருந்து வடகிழக்கே ஏறத்தாழ 26 கி.மீ. தொலைவில் வட்டக்கண்டல் பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. குளத்தை மையப்படுத்தி தோன்றிய இக்கிராமத்தின் பெயர் தற்காலத்தில் சிங்களத்தில் யோதவேவா எனவும், தமிழில் கட்டுக்கரைக்குளம் எனவும் அழைக்கப்படுகிறது. ஆயினும் இக்குளத்தையும் அதைச் சுற்றியமைந்த சில கிராமங்களும் பாரம்பரியமாக பாலப்பெருமாள்கட்டு என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளது.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0135.jpg

கட்டுக்கரை அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இடம்



பண்டைய காலத்தில் மாதோட்டத்தையும் அநுராதபுரத்தையும் இணைக்கும் ஆற்றுவழிப்பாதையாக காணப்பட்ட அருவியாற்றின் இரு மருங்கிலும் புராதன குடியிருப்புக்கள் இருந்ததை இவ்விடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் உறுதி செய்கின்றன. அவற்றுள் அருவியாற்றுடன் இணைந்துள்ள கட்டுக்கரைக்குளப் பிரதேசம் வடஇலங்கையின் முதன்மைக் குடியிருப்பாகவும், இலங்கையின் தொடக்ககால நகரமயமாக்கலுக்கு உட்பட்ட இடங்களில் ஒன்றாகவும் இருந்திருக்கலாம் என்பதை அப்பிரதேசத்தில் கடந்த ஆறுமாத காலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் மாணவர்களுடன் இணைந்து மேற்கொண்ட தொல்லியல் மேலாய்விலும், தொல்லியல் அகழ்வாய்விலும் கிடைத்த பெறுமதியான ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன.

தொல்லியல் மேலாய்வு

முன்பொரு காலத்தில் செறிவான குடியிருப்புக்களைக் கொண்டிருந்த கட்டுக்கரைக் குளத்தின் வடஎல்லைப் பிரதேசம் தற்காலத்தில் அடர்ந்த காடுகளாகவும், கொடிய விலங்குகள் வாழும் இடமாகவும் காணப்படுகிறது. ஆயினும் இப்பகுதியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வில் இருந்து ஏறத்தாழ இரண்டு கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் பல்வேறு காலகட்டத்திற்குரிய பலதரப்பட்ட சான்றாதாரங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. இவ்வாதாரங்களை எமது குழுவினர் இலகுவாகக் கண்டுபிடித்தமைக்கு காலத்திற்குகாலம் கட்டுக்கரைக் குளத்திலும், அதன் சுற்றாடலிலும் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களே சாதகமாக இருந்துள்ளன.

இன்று வடஇலங்கையில் உள்ள மிகப்பெரிய குளங்களில் ஒன்றாகக் கருதப்படும் கட்டுக்கரைக்குளத்தின் ஆரம்ப தோற்றம் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0136.jpg

ஒன்றாகக் காணப்படுகிறது. தென்னிந்தியா அதிலும் குறிப்பாக தமிழகத்திலும், இலங்கையிலும் நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் காலப்போக்கில் நிலையாக ஓரிடத்தில் குடியேறிய போது தமது பொருளாதார உற்பத்திக்காக சிறிய குளங்களை மையப்படுத்திய கிராமக் குடியிருப்புக்களை ஏற்படுத்தினர். இதற்கு தென்னிந்தியாவிற்கும், இலங்கைக்கும் பொதுவானதாக இருந்த பெருங்கற்காலப் பண்பாட்டின் தோற்றமே காரணமாகும்.

வன்னிப் பிராந்தியத்தில் ஏறத்தாழ 2000க்கும் மேற்பட்ட குளங்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் பல கைவிடப்பட்டு அந்த இடங்கள் மக்கள் வாழாத காடுகளாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பலவற்றிற்கு தொன்மையான வரலாறு உண்டு. இற்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களையும், அவற்றின் சமகாலத்திற்குரிய பாளி இலக்கியங்களையும் ஆராய்ந்தால் அவற்றின் குறிப்பிடப்படும் இலங்கையின் இடப்பெயர்கள் பெரும்பாலும் குளத்தை மையப்படுத்தியதாகவே தோன்றியுள்ளதைக் காணமுடிகிறது. 19ஆம் நூற்றாண்டில் வன்னி பற்றி ஆராய்ந்த லூயிஸ் என்ற அறிஞர் தமிழகத்தைக் காட்டிலும் வன்னியில் தூய தமிழ் இடப்பெயர்கள் இருப்பதாகக் கூறியிருப்பதற்கு இங்கிருக்கும் இடப்பெயர்கள் குளத்தை பின்னொட்டுச் சொல்லாகக் கொண்டிருப்பதே காரணமாகும். கட்டுக்கரைக்குளத்தைப் பொறுத்தவரை இங்கு பெருங்கற்காலப் பண்பாடு நிலவியதற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பதனால் இதன் தோற்ற காலத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கு இடமுண்டு.

ஆனால் கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து பிரித்தானியர் காலம் வரை குளம், கால்வாய், அணைக்கட்டு என்பவற்றை அமைப்பதில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியால் கட்டுக்கரைக் குளம் தற்போதைய நிலைக்கு விஸ்தரிக்கப்பட்டது. இதனால் தொடக்க காலத்தில் இக்குளத்தை மையப்படுத்தி குடியிருப்புக்களை ஏற்படுத்திய மக்கள் அவற்றைக் கைவிட்டு புதிய இடங்களுக்குச் சென்றனர். இதனால்தான் எமது தொல்லியல் மேலாய்வில் குளத்திற்கு வெளியே கிடைத்த சான்றுகளைவிட குளத்திற்கு உள்ளே தொன்மையான அதிக சான்றுகள் கிடைக்க காரணமாகும். அதிலும் குளம் பெருக்கெடுக்கும் காலங்களில் குளத்தின் ஆழமான பகுதியில் இருந்து அதிக தொல்பொருட்ச் சின்னங்கள் கரையை ஒதுங்கியிருப்பதைக் காணமுடிகிறது.

மேலும் இக்குளக்கட்டின் வடக்குப்பக்கமாக அமைந்த நீர் வெளியேறும் வாய்க்காலின் இரு மருங்கிலும் நீர்வற்றிய காலங்களில் அதிக தொல்லியற் சின்னங்களை சேகரிக்க முடிந்தது. இவை குளம் பெருக்கெடுத்த காலத்தில் வெளியேறிய நீருடன் கொண்டுவரப்பட்டதாக இருக்கலாம் அல்லது குளத்திற்கு வெளியே குடியிருந்த புராதன குடியிருப்புக்களின் சான்றுகளாக இருக்கலாம். ஏனெனில் குளத்திற்கு வெளியே காணப்படும் மண்மேடுகள் பல அண்மைக்காலங்களில் பிறதேவைகளுக்காக இயற்கை மண்வரை (ஏறத்தாழ 15 அடி வரை) அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு மண் அகழப்பட்ட குழிகளின் கரையோரங்களில் வேறுபட்ட கலாசார மண் அடுக்குகளில் செறிவான தொல்பொருட்ச் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்வாதாரங்கள் குளத்திற்கு வெளியே பரந்த அளவில் புராதன குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிப்படுத்துவதாக உள்ளன.

நாம் தொல்லியல் ஆய்வை மேற்கொண்ட காலப்பகுதியில் கட்டுக்கரைக்குளப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த பௌதீக மாற்றங்களும், மக்கள் ஏற்படுத்தியிருந்த செயற்கை மாற்றங்களும் தொல்லியல் மேலாய்வில் விலைமதிக்க முடியாத அரிய பல தொல்பொருட்களை கண்டுபிடிக்கச் சாதகமாக இருந்தன. அத்தொல்பொருட்கள் கட்டுக்கரைப் பிரதேசத்திற்கு மட்டுமன்றி புகைபடர்ந்திருக்கும் வடஇலங்கையின் பூர்வீக வரலாற்றிற்கும் புதுவெளிச்சம் பாய்ச்சுவதாக உள்ளன.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0137.jpg

கட்டுக்கரையின் பூர்வீக மக்கள்

கட்டுக்கரைப் பகுதியில் கிடைத்த தொன்மைச் சான்றுகள் யாழ்ப்பாணத்திற்கு முன்னோடியான தொன்மைக் குடியிருப்புக்கள் இங்கிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் அந்த மக்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? என்பதைத் தொடர்ந்து மேற்கொள்ளும் ஆய்வுகளால்தான் உறுதிப்படுத்தலாம். 1970 களில் இரணைமடுப் பகுதியில் இற்றைக்கு 125000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்த கலாநிதி செரான் தெரணியகலா இம்மக்கள் தென்மேற்கே மன்னார் வரை பரந்திருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார். எமது தொல்லியல் மேலாய்வில் பங்கெடுத்த தொல்லியற் திணைக்களத்தில் தொல்லியல் அகழ்வாய்வுக்குப் பொறுப்பாக உள்ள திரு.மணிமாறன் கட்டுக்கரையில் மண் அகழப்பட்ட குழியில் இருந்து கற்கருவியொன்றைக் கண்டுபிடித்துள்ளார். இது கண்டெடுக்கப்பட்ட குழியின் கலாசார மண் அடுக்குகள் குழம்பிய நிலையில் காணப்படுவதால் இக்கருவி பயன்படுத்தப்பட்ட பண்பாட்டையும், அதன் காலத்தையும் நிச்சயப்படுத்திக் கூறமுடியாதிருக்கிறது. இக்கற்கருவிகளைத் தொடர்ந்து தமிழகத்திலும், இலங்கையிலும் முற்பட்ட கற்கால மக்களைக் காட்டிலும் ஓரளவு நாகரிக முன்னேற்றமுடைய இடைக்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் எனக் கருதக் கூடிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இம்மக்கள் குவாட்ஸ், சேட் முதலான கற்களில் நுண்ணிய தொழில் நுட்பத்துடன் கூடிய சிறிய கற்கருவிகளையும் பயன்படுத்தி உள்ளனர். இதனால் இம்மக்களது பண்பாடு இடைக்கற்கால அல்லது நுண்கற்காலப் பண்பாடு என அழைக்கப்படுகிறது. கட்டுக்கரையில் தொல்லியல் மேலாய்விலும், அரிதாக அகழ்வாய்விலும் குவாட்ஸ், சேட் கற்கள், கற்கருவிகள், கற்கருவிகளை ஆக்கும் போது உடைந்த பாகற்கள் என்பன அதிக அளவில் கிடைத்துள்ளன. இக்கற்கருவிகளை இரும்பின் பயன்பாட்டை முதலில் அறிமுப்படுத்திய பெருங்கற்காலப் பண்பாட்டிலும் அரிதாகத் பயன்படுத்தியமைக்கு ஆதாரங்கள் உண்டு. இருப்பினும் கட்டுக்கரையில் இக்கருவிகள் தொடர்பான ஆதாரங்கள் அதிக அளவில் கிடைத்திருப்பது இப்பிரதேசத்தின் தொன்மைக் குடியிருப்புக்கள் பற்றிய ஆய்வில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை.



நுண்கற்காலக் கருவிகளும்
அவற்றின் உடைந்த பாகங்களும் – கட்டுக்கரை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



கட்டுக்கரையில்
கண்டுபிடிக்கப்பட்ட கல்லாயுதம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0138.jpg



பெருங்கற்றகாலச் சின்னங்கள் – கட்டுக்கரை



புராதன மட்பாண்டங்கள் – கட்டுக்கரை



கட்டுக்கரையில் கிடைத்த புராதன கால அயல்நாட்டு மட்பாண்டங்கள்.



மட்பாண்டங்கள் வடிவமைக்கப் பயன்படுத்தி கற்கருவிகள் –கட்டுக்கரை

கட்டுக்கரைத் தொல்லியல் மேலாய்வில் கிடைத்த ஆதாரங்களுள் தென்னிந்தியா சிறப்பாகத் தென் தமிழகத்திலும், ஈழத்திலும் நாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்ட பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய தொல்லியற் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகும். இப்பண்பாட்டில் குறிப்பிட்ட தொல்லியல் மையத்திற்குள் குளம், வயற்பரப்பு, குடியிருப்பு, இடுகாடு என்பன ஒன்றிணைந்து இருப்பது முக்கிய அம்சமாகக் கூறப்படுகிறது. மேலும் இப்பண்பாட்டிற்கே சிறப்பாக உள்ள கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்ட உபயோகம், இரும்பின் பயன்பாடும் என்பன இலங்கையை தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டு வட்டத்திற்குள் ஒன்றிணைய வைத்துள்ளன. கட்டுக்கரைக் குளத்தின் ஆரம்ப தோற்றம் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஏற்பட்ட ஒன்றாகும். இதை அப்பண்பாட்டுக்குரிய கறுப்புச்- சிவப்பு நிற மட்பாண்டங்கள், இரும்புக்கருவிகள், களிமண்ணுடன் நெல்லுமி, வைக்கோல் ஆகியவற்றைக் கலந்து செய்யப்பட்ட சுடுமண் உருவங்கள், மட்பாண்டங்கள் என்பன கட்டுக்கரைக் குளத்திற்கு உள்ளேயும், குளக்கட்டு அணைக்கட்டுக்கு வெளியே குடியிருப்பு பகுதிகளில் இருந்தும் கிடைத்த சான்றுகள் உறுதிசெய்கின்றன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட தாழியின் உடைந்த பாகங்களை தொல்லியற் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு.பாலித்த விரசிங்கா இங்கு கிடைத்த தாழிகளின்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0139.jpg

பாகங்களை கட்டுக்கரைப் பிரதேசத்தின் பெருங்கற்கால இடுகாடாக தாழியடக் முறை இருந்ததைக் காட்டுவதாக இருக்கலாம் எனக் கூறுகிறார். மேலும் இப்பண்பாட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டவை எனக் கருதக்கூடிய கல்மணிகள், கல்லினால் வடிவமைக்கப்பட்ட காப்புகள், சங்கு வளையல்கள், என்பனவும் அதிக அளவில் கிடைத்துள்ளன. இப்பொருட்களுடன் இவற்றை உற்பத்தி செய்யப் பயன்படுத்திய பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கற்கள், கண்ணாடிகள், சங்குகள், மட்பாண்ட அச்சுக்கள், இரும்புருக்கு சுலைகள் என்பனவும் கிடைத்துள்ளன. இவற்றைப் பேராசிரியர் இரகுபதி, தமிழகத் தொல்லியல் அறிஞர்களான இராசன், செல்வக்குமார், இராசவேலு முதலானோர் பண்டைய காலத்திலேயே கட்டுக்கரைப் பிரதேசத்தில் இரும்புருக்கு, கல்மணி, கண்ணாடிப் பொருட்கள், மட்பாண்டங்கள் என்பவற்றை உற்பத்தி செய்யும் சிறுதொழில் கூடங்கள் இருந்ததற்கு முக்கிய ஆதாரங்கள் எனக் குறிப்பிடுகின்றனர். கட்டுக்கரைத் தொல்லியல் மையத்தின் சிறப்பம்சம் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடையதெனக் கூறக்கூடிய குளம், வயற்பரப்பு, குடியிருப்பு, இடுகாடு என்பன குறிப்பிட்ட வட்டத்திற்குள் இருந்தற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகும். இந்த நான்கு அம்சங்களையும் இலங்கையின் ஏனைய பெருங்கற்காலத் தொல்லியல் மையங்களில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பண்டைய காலத்தில் கட்டுக்கரையும் அயல்நாடுகளும்

கட்டுக்கரையில் வாழ்ந்த மக்கள் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே அயல் நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்கு நம்பகரமான தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் இருந்து கட்டுக்கரை மக்களின் தொழில்நுட்பத்திறனும், நாகரிக முன்னேற்றமும் கொண்ட மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது. இந்த உண்மையை கட்டுக்கரைத் தொல்லியல் மேலாய்வில் கிடைத்த பிறநாட்டு நாணயங்கள், இறக்குமதி செய்யப்பட்ட மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் என்பன உறுதி செய்யப்படுகின்றன. அவற்றுள் இங்கு கிடைத்த பெரும்பாலான நாணயங்கள் குளத்தின் கரையோரப் பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டமை சிறப்பாக நோக்கத்தக்கது.



கட்டுக்கரை அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள்



அரசனின் சிலை?

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0140.jpg

தென்னாசியாவில் முதன் முதலாக வெளியிடப்பட்ட முத்திரை நாணயங்களும், இலங்கையில் வெளியிடப்பட்ட திஸ நாணயங்களும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவை இற்றைக்கு 2300 ஆண்டிலிருந்து 1900 ஆண்டு வரை பயன்பாட்டிலிருந்தவையாகும். ஆனால் இந்நாணயங்கள் கட்டுக்கரையில் புழக்கத்திற்கு முன்னரே தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த கற்களும், சிலவகை மட்பாண்டங்களும் இங்கு புழக்கத்தில் இருந்ததற்கும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக புராதன இஸ்லாமிய மட்பாண்டங்கள், பல்லவ நாணயங்கள் (கி.பி. 6-8), அரேபிய மட்பாண்டங்கள், சீன நாட்டுப் பீங்கான் வகைகள் (கி.பி. 9-13), மேற்காசிய மட்பாண்டங்கள் என்பனவும் கட்டுக்கரையில் புழக்கத்தில் இருந்துள்ளன. இங்கு கிடைத்த சுடுமண் உருவம் ஒன்று ஆணுக்குரிய இயல்பான தோற்றத்தில் செய்யப்பட்டிருப்பதுடன் அதன் தலைப்பகுதி அரச வம்சத்துக்குரிய கிரீடம் போன்ற வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. சுடுமண் உருவங்களை ஆய்வில் புலமையுடைய யாழ்ப்பாண பிராந்திய தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பாலித்த வீரசிங்கா இச்சிற்பத்தை அரச வம்சத்துடன் தொடர்புடைய சிற்பம் எனக் கூறுகிறார். இவ்வாதாரங்கள் இன்று காடாகக் காட்சிதரும் கட்டுக்கரைப் பிரதேசம் பண்டைய காலத்தில் ஒரு நகரமாக இருந்ததைக் காட்டுகிறது என யாழ்ப்பாண மத்திய கலாசாரத் திட்ட முகாமையாளர் திரு. லக்ஸ்மன் சந்தன மைத்திரிபாலா கூறுகிறார்.

கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வும் இந்து மதச் சின்னங்களும்.

தமிழரின் பூர்வீக வரலாறும், பண்பாடுகளும் தொல்லியல் அகழ்வாய்வுகளால் வெளிக்கிளம்பும் என்பதற்கு கட்டுக்கரைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாய்வுகள் சிறந்த எடுத்துக்காட்டாகும். நன்கு திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்குழிகள் மூன்று மீற்றர் நீள அகலம் கொண்ட ஐந்து ஆய்வுக் குழிகளில் அவற்றின் இயற்கை மண் அடையாளம் காணப்படும் வரை மேற்கொள்ளப்பட்டது. மூன்று வேறுபட்ட காலத்திற்குரிய கலாசார மண்

Tamileelam Archive



அகழ்வாய்வுக் குழிகள் – கட்டுக்கரை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0141.jpg

அடுக்குகளைக் கொண்ட இவ்வாய்வுக் குழிகளின் மூன்றாவது கலாசார மண் அடுக்கில் செங்கட்டிகளான அத்திவாரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வத்திவாரம் ஒரு ஆலயமாக அல்லது சமயச் சடங்குகள் நடைபெற்ற இடமாக இருந்திருக்கலாம். இக்கட்டிட அத்திவாரத்தை ஒட்டியதாகவே சுடுமண் சிற்பங்கள், சிலைகள், மணிகள், தெய்வ வாகனங்களின் பாகங்கள், அகல் விளக்குகள், தீபங்கள், சமயச் சின்னங்கள், சமய இலட்சனைகள், குறியீடுகள் என்பன பொறிக்கப்பட்ட சுடுமண் பாகங்கள், மட்பாண்டங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இங்கு பலதரப்பட்ட தெய்வ வழிபாட்டை நினைவுபடுத்தும் உருவங்கள் மற்றும் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் பண்டைய காலத்தில் தமிழகத்திலும், இலங்கையிலும் நீர்நிலைத் தெய்வமான ஐயனார் வழிபாடே முக்கிய தெய்வமாக இருந்ததை அகழ்வாய்வின் போது கிடைத்த சான்றுகள் உறுதி செய்கின்றன. அவற்றுள் ஐயனாரின் முக்கிய வாகனமாக இருந்து வரும் யானை, குதிரை என்பவற்றின் நூற்றுக்கணக்கான உடற்பாகங்கள், குதிரை, யானை என்பவற்றின் தலைப்பகுதிகள், தும்பிக்கைகள், 75 இற்கும் மேற்பட்ட யானைத் தந்தங்கள், யானை, குதிரை, நந்தி முதலான வாகனங்களில் சுழுத்தில் அணியப்பட்டிருந்த 50 இற்கும் மேற்பட்ட மணிகள் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வாதாரங்களிடையே கிடைத்த இன்னொரு அற்புதமான சான்றாக யானை அல்லது குதிரையின்



சுடுமண் பெண் உருவங்கள் – கட்டுக்கரை



சுடுமண் தந்தங்களும் நந்தியின் கொம்புகளும் – கட்டுக்கரை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





▲ சுடுமண் யானைத் தந்தம் – கட்டுக்கரை

◀ சுடுமண் குதிரை முகம் – கட்டுக்கரை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0142.jpg

மேல் இருந்த பீடத்தில் தெய்வீக கோலத்தில் இரு கால்களையும் கீழே தொங்கவிட்ட நிலையில் இருக்கும் இரு பெண்தெய்வத்தின் சிற்பங்களாகும். இவை ஐயனாரின் இருதேவியர்களையும் குறிப்பதாக இருக்கலாம்.



சுடுமண் ஆவுடையுடன் கூடிய லிங்கம்



சுடுமண் நந்தி



சுடுமண் சூலம்



சுடுமண் வேல் குறியீடு

ஐயனார் இங்கு முக்கிய தெய்வமாக இங்கு வழிபடப்பட்டு வந்திருந்தாலும் ஏனைய தெய்வங்களை வழிபட்டுவந்த மக்கள் தமது பொருளாதார வளம், பாதுகாப்பு என்பவற்றை வேண்டி ஐயனாரை வழிபட்டபோது தமது குலதெய்வமான சிவன், அம்மன், முருகன், விநாயகர் முதலான தெய்வ உருவங்களை மண்ணிலே செய்து காணிக்கையாக இவ்விடத்தில் வழங்கியிருக்கலாம் அல்லது அவ்விடத்தில் வைத்து வழிபட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இதற்கு இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சிவன் வழிபாட்டுடன் தொடர்புடைய ஆவுடையுடன் கூடிய இலிங்கம், இலிங்க வடிவங்கள், நந்தி, நந்தியின் பாகங்கள், முத்தலைச் சூலங்கள், பிறைச் சந்திரன் என்பவற்றைக் குறிப்பிடலாம். சில பெண் உருவங்கள் சக்தி வழிபாட்டைப் பிரதிபலிக்கின்றன. வேல், மயில் சின்னங்கள் முருகனை நினைவுபடுத்துகின்றன. நாக வடிவங்கள் இங்கு நாக வழிபாடு இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன. சிறிய கலசங்களின் வாயிற்பகுதியில் இருந்து வெளிவரும் உருவங்கள் குடமுனி என அழைக்கப்படும் அகத்தியர் வழிபாட்டை நினைவுபடுத்துவதாக உள்ளன. அதிக எண்ணிக்கையில் விநாயகக் கடவுளைப் பிரதிபலிக்கும் உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை விநாயகர் இப்பிரதேசத்தின் முக்கிய வழிபாட்டுத் தெய்வமாக இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamil Archive



அகத்தியர் கலசங்கள்?

இலங்கையில் இதுவரை கிடைத்த நம்பகரமான தொன்மைச் சான்றுகளாக இச்சமயச் சின்னங்கள் காணப்படுவதால் எதிர்காலத்தில் இந்து மதத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி எழும் ஆய்வுகளுக்கெல்லாம் கட்டுக்கரைத் தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் ஒரு தொடக்கப் புள்ளியாக இருக்கும் என்பதில்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0143.jpg

ஐயமில்லை. இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள் பௌத்தமதம் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் அறிமுகமாவதற்கு முன்னரே இலங்கையில் இருந்த சிவன் ஆலயங்கள் பற்றிக் கூறுகின்றன. பாளி இலக்கியங்களிலும், அதன் சமகாலக் கல்வெட்டுக்களிலும் பிராமண சமூகம் இலங்கை அரசியலிலும், சமூகத்திலும் பெற்றிருந்த செல்வாக்கு பற்றிய ஆதாரங்கள் சமகாலத் தமிழகத்தில் காணமுடியாத ஒன்று. இவற்றை நோக்கும் போது ஈழத்து இந்து மதத்தின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் தமிழகம் மட்டுமல்ல இந்தியாவின் ஏனைய பிராந்தியங்களின் செல்வாக்கும் கலந்திருந்ததெனக் கருத இடமுண்டு. இதற்கு கட்டுக்கரை அகழ்வாய்வில் கிடைத்த சமயச் சின்னங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கட்டுக்கரையில் கிடைத்த தொல்லியற் சின்னங்களின் காலத்தைத் திடமாகக் கூறுவதற்கு மேலும் ஆய்வுகள் செய்யப்படவேண்டியுள்ளன. ஆயினும் மட்பாண்ட விளிம்புகளை அடிப்படையாகக் கொண்டு காலம் கணிப்பதில் புலமையுடைய கலாநிதி புஸ்பகுமார, திரு. பாலித்த போன்ற அறிஞர்கள் கட்டுக்கரை அகழ்வில் கிடைத்த மட்பாண்டங்களை 1400 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கூறுகின்றனர். கலாநிதி இரகுபதி இவற்றை மேலும் ஒரு நூற்றாண்டுக்கு முந்தியதாகக் கொள்ளலாம் எனக் குறிப்பிடுகிறார். ஆனால் தமிழகத் தொல்லியலாளரான பேராசிரியர்கள் இராசன், செல்வகுமார், இராசவேலு போன்றவர்கள் இவற்றின் காலத்தை 2000 ஆண்டுகளுக்கு முந்தியவையாக அதாவது பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடையவை எனக் கூறுகின்றனர். இந்த இடத்தில் காலத்தை நிச்சயப்படுத்தக்கூடிய நாணயங்கள் சில கட்டுக்கரை அகழ்வுக்குழிகளுக்கு மிக அருகில் கிடைத்துள்ளன. அவற்றுள் இரு நாணயங்கள் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அவற்றுள் அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி முத்திரை நாணயம் இந்தியாவில் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னர் முதன் முதலாக வெளியிடப்பட்ட நாணயமாகும். இந்நாணயம் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதன் மூலம் சமகாலத்தில் கட்டுக்கரைப் பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது மட்டுமல்ல, இந்தியாவுடன் வணிகத் தொடர்பை ஏற்படுத்தும் அளவிற்கு அவர்கள் நாகரீகத்தில் முன்னேறியிருந்தனர் என்பதும் உறுதியாகத் தெரிகிறது. தென்னாசியாவில் உலோகத்தில் நாணயங்கள் வெளியிடுவதற்கு முன்னர் சுடுமண் நாணயங்கள் (Terracotta Coins) பயன்படுத்தப்பட்டமைக்கு பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கட்டுக்கரையில் இவ்வகை நாணயங்கள் களவாய்வில் மட்டுமன்றி சமயச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட அகழ்வுக்குழிகளில் இருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் கட்டுக்கரைச் சமயச் சின்னங்களின் தோற்றகாலத்தை மேலும் பின்நோக்கி ஆராயத்தூண்டுகின்றன. அது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகளால் துலக்கம் பெறலாம்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள பிராமிக் கல்வெட்டுக்கள்



பரதவ சமூகம் பற்றிய கல்வெட்டுக்கள்



தமிழ் வணிகர் பற்றிய கல்வெட்டு



வேள் பூதன் பற்றிய கல்வெட்டு

வன்னியின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள உதவும் நம்பகரமான ஆதாரங்களுள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களுக்கு முக்கிய இடமுண்டு. பேராசிரியர் பரணவிதான வன்னியில் 40 பிராமிக் கல்வெட்டுக்களை அடையாளப்படுத்தியுள்ளார் (Paranavithana 1970). அண்மையில்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0144.jpg

இக்கட்டுரை ஆசிரியரால் கொங்குராயன் மலையில் மேலும் 10 கல்வெட்டுக்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. இக் கல்வெட்டுக்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் இருந்து கிபி. 4 ஆம் நூற்றாண்டு வரை அதாவது 700 ஆண்டுகால வன்னி வரலாற்றின் சில அம்சங்களை அறிந்து கொள்ள உதவுகிறது. இக்கல்வெட்டுக்கள் தென்னாசியாவின் ஏனைய நாடுகள் பலவற்றைப் போல் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருந்தாலும் வன்னியில் கிடைத்த சில கல்வெட்டுக்கள் வன்னியுடன் தமிழருக்கிருந்து வரும் உறவை அடையாளப்படுத்தும் முக்கிய சான்றாகக் காணப்படுகின்றன. பெரியபுளியங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரு கல்வெட்டுக்கள் 'விசாக' என்ற தமிழ் வணிகர்கள் பற்றிக் கூறுகின்றன. பொதுவாக பிராகிருத மொழியில் 'தமிட' என எழுதப்படும் பெயர் இங்குள்ள கல்வெட்டொன்றில் தமிழ் வணிக என தமிழ் மொழிக்கே சிறப்பான ழகரம் கொண்டு எழுதப்பட்டுள்ளதைப் பேராசிரியர் கருணாரத்தின சுட்டிக்காட்டுகிறார். இவ்விரு கல்வெட்டுக்களில் இருந்து இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்பிருந்து மொழியால் தமிழர் ஒரு இனக்குழுவாக வன்னியில் வாழ்ந்து வருகின்றனர் என்பது தெரியவருகிறது (இந்திரபாலா 2006). மேலும் இங்குள்ள கல்வெட்டுக்களில் இருந்து வன்னியில் இருந்த தொழிற் பிரிவுகள், சமூகப்பிரிவுகள், இடப்பெயர்கள், சிற்றரசர்கள் பற்றி அறிய முடிகிறது. அவற்றுள் "பரதவ சமூகம் பற்றிய கல்வெட்டுக்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. தமிழில் 'பரதவர்', 'பரவர்' என அழைக்கப்படும் இப்பெயர்கள் பிராமிக் கல்வெட்டுக்களில் அதன் மொழிக்கு ஏற்ப 'பரத' என எழுதப்பட்டுள்ளது. இலங்கையில் இதுவரை 21 பிராமிக் கல்வெட்டுக்களில் பரதவ சமூகம் பற்றிய ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 8 கல்வெட்டுக்கள் வன்னிப்பிராந்தியத்தில் காணப்படுகின்றன. இப்பரதவ சமூகம் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் சுதர்சன் செவிவரட்னா மற்றும் மலோனி போன்ற அறிஞர்கள் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் 'பரத' என்ற பெயரும் தமிழகத்தில் சங்ககாலத்தில் கடற்கரை சார்ந்த பகுதிகளில் வாழ்ந்த 'பரதவர்' என்ற பெயரும் ஒன்று என்பதற்கு பல்வேறு சான்றாதாரங்களை எடுத்துக்காட்டியுள்ளனர் (Maloney 1969:224-240, Seniveratne 1985: 49-56). தற்காலத்தில் வன்னியின் கடற்கரை சார்ந்த கிராமங்கள் சிலவற்றில் பரதவ சமூகம் வாழ்ந்து வருவதற்கும், வன்னியின் சில வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்கள் பரதவ சமூகத்துடன் தொடர்புபடுத்திப் பேசப்படுவதற்கும் ஆதாரங்கள் உண்டு. இவை பரதவ சமூகத்திற்கு வன்னியில் நீண்ட வரலாறு இருந்து வருவதைக் காட்டுகிறது. வன்னியில் உள்ள நான்கு கல்வெட்டுக்கள் நாகச் சிற்றரசர்கள் பற்றியும், இரு கல்வெட்டுக்கள் சமகாலத் தமிழகத்தைப் போல் 'வேள்' என்ற தலைவனின் ஆட்சி இருந்துள்ளதைக் கூறுகின்றன. அவற்றுள் பெரியபுளியங்குளத்தில் உள்ள கல்வெட்டு 'வேள்' என்ற பட்டத்திற்குரிய தலைவனின் பெயர் பூதன் (வேள்பூதன்) என அழைக்கப்பட்டிருப்பதை கலாநிதி இரகுபதி முக்கிய அம்சமாகக் குறிப்பிடுகிறார் (Paranavithana 1970: no. 353, Ragupathy 1991).

வடமேற்கு இலங்கையில் வன்னிப் பெருநிலப்பரப்பில் அமைந்துள்ள மாதோட்டம் கற்காலம் தொட்டு தற்காலம் வரை நீண்ட பாரம்பரிய வரலாறு கொண்ட ஒரு பிரதேசமாகும். அநுராதபுரத்திற்கு அடுத்து இலங்கையில் தோன்றிய புராதன நகரங்களில் ஒன்றாக மாதோட்டம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கு இங்குள்ள இயற்கைத் துறைமுகம் ஒரு முக்கிய காரணமாகும். தமிழில் மாதோட்டம், மாந்தை என அழைக்கப்பட்ட இத் துறைமுகம் பாளி மொழியில் மஹாபட்ன (மாதோட்டம்) என அழைக்கப்படுகிறது. இத்துறைமுகத்தினூடாக பண்டுதொட்டு ஈழம் பிற நாடுகளுடன் அரசியல் வாணிபத் தொடர்பு கொண்டிருந்ததற்கு பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

1894 இல் இருந்து 1984 வரை மாதோட்டம் பல தடவைகள் தொல்லியல் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் இங்கு கண்டறியப்பட்ட ஆதாரங்கள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து இந்தியா, கிரேக்கம், உரோம், அரேபியா, சீனா போன்ற நாடுகளுடன் மாதோட்டம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0145.jpg

நெருங்கிய வணிக, கலாசார தொடர்புகளைக் கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது. அவற்றுள் இந்தியாவுடன் சிறப்பாகத் தமிழகத்துடன் தொடர்ச்சியாகக் கொண்டிருந்த அரசியல் பண்பாட்டுத் தொடர்புகளும், தமிழக அரச வம்சங்களின் நேரடியான செல்வாக்கும் வன்னியின் வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தன. இத்தொடர்புகளும், செல்வாக்கும் துறைமுகம் அமைந்த மாதோட்டப்பிரதேசத்தில் மட்டுமன்றி அதனுடன் இணைந்த வன்னியின் பல வட்டாரங்களிலும் சமகாலத்தில் ஏற்பட்டிருந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வன்னியில் ஆய்வு நடாத்திய பாக்கர் முல்லைத்தீவில் இருந்து 81 வெள்ளி முத்திரை நாணயங்களைக் கண்டுபிடித்தார் (Parkar 1981: 461). இதுவே தென்னாசியாவில் வெளியிடப்பட்ட முதலாவது வகை நாணயமாகும். வடஇந்தியாவில் கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட இந்நாணயங்கள் வணிகத்தொடர்பால் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாடு மற்றும் இலங்கை போன்ற நாடுகளிலும் புழக்கத்திற்கு வந்துள்ளன. அண்மையில் மாதோட்டத்திற்கு தெற்கே வீரபாண்டியன்முனை, ஈழவூர், வெட்டுக்காடு, மண்ணித்தலை ஆகிய இடங்களில் இருந்தும் இவ்வகை நாணயங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (ப.புஷ்பரட்ணம் 2000: 177). மேற்படி இடங்களில் இக்கட்டுரை ஆசிரியர் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து புழக்கத்திற்கு வந்த பெருமளவு லக்ஷ்மி நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது (Pushparatnam 2002: 81-89).



லக்ஷ்மி நாணயங்கள்

தொல்லியல் ஆர்வலர் குணரட்ணம் அக்கிராயனில் மேற்கொண்ட ஆய்வின் போது முத்திரை நாணயங்களுடன் பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்களும், பிற்கால சோழ, பாண்டிய நாணயங்களும் கண்டுபிடித்ததாக அறிய முடிகிறது (கிருஷ்ணராசா 2014: 77-81). அவற்றுள் பிராமி எழுத்துப் பொறித்த நாணயம் ஒன்றில் தமிழில் நாகன் என்ற பெயர் பொறித்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கும் தகவல் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இவ்வாதாரங்கள் இந்நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த காலத்தில் வன்னிப் பிராந்தியம் வடஇந்தியாவுடனும், தென்னிந்தியாவுடனும், இலங்கையின் ஏனைய பிராந்தியங்களுடனும் வர்த்தகத் தொடர்பில் இருந்ததைக் காட்டுகிறது.

கிறிஸ்தவ சகாப்த காலத்தில் உரோமப் பேரரசில் ஏற்பட்ட அமைதியும், கடல் பயணத்திற்கு பருவக்காற்றின் உதவியைக் கண்டுபிடித்தமையும், உரோம நாட்டுடன் இணைந்ததாக இலங்கை, தென்னிந்திய கடல்சார் வர்த்தகம் வளர்ச்சியடையக் காரணமாகியது. பெரிபிளஸ் என்ற நூல் ஆரம்பத்தில் உரோமர் ஈழம் செல்லாமலே தமக்கு வேண்டிய ஈழப் பொருட்களை தென்னிந்தியத் துறைமுகங்களில் பெற்றுத் திருப்தியடைந்ததாகக் கூறுகிறது. தமிழகத்தில் சேர அரசின் உருவாக்கம் உரோம நாட்டு வணிகத்தொடர்பால் ஏற்பட்டதெனக் கூறும் அறிஞர்கள் ஆரம்பத்தில் தமிழகத்தின் மேற்குப் பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபட்ட உரோமர் பின்னர் தமிழகத்தின் கிழக்குப் பகுதியிலும் கி.பி. 1ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையிலும் நேரடியாக வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் கூறுகின்றனர். இவ்வர்த்தக நடவடிக்கைகள் கி.பி. 5ஆம் நூற்றாண்டுவரை நீடித்திருக்கலாம் என்பதை இலங்கையின் புராதன துறைமுகங்கள், வர்த்தக மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட உரோம நாணயங்கள், உரோம

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0146.jpg

மட்கலன்கள், மதுச்சாடிகள் கண்ணாடிப் பொருட்கள் உறுதிசெய்கின்றன. இலங்கையில் இதுவரை இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட உரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது *(Burnett 1998:183)*.

கொட்றிங்ரன் தனது நூலில் இலங்கையில் 40 இடங்களில் கிடைத்த உரோம நாணயங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். அவற்றுள் வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மாதோட்டம், அத்திக்குழி, கல்முனை ஆகிய இடங்களும் உள்ளடங்குகின்றன. அண்மையில் பூநகரிப் பிராந்தியத்தில் இருந்து உரோம நாணயங்கள், மட்பாண்டங்களுடன் பள்ளிக்குடாவில் இருந்து மதுச்சாடியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன *(ப.புஷ்பரட்ணம் 2000: 200-206)*. இலங்கையில் கிடைத்த பிற நாடுகளுக்குரிய புராதன தொல்லியல் ஆதாரங்களில் அதிக எண்ணிக்கைகளானவை உரோம நாட்டுக்கு உரியவையாகக் காணப்படுகின்றன. இவை உரோமர் இலங்கை வர்த்தகத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததைக் காட்டுகின்றன. இதற்கு உரோம வணிகர் பெரிதும் விரும்பிய முத்து, இரத்தினம் என்பன இலங்கையில் இலகுவாகக் கிடைத்தமை காரணமாக இருக்கலாம். பண்டைய காலம் தொட்டு மாதோட்டத்திற்கும் பாண்டிநாட்டிற்கும் இடைப்பட்ட கடற்பரப்பு முத்துக்குளித்தலுக்குப் பெயர் பெற்றிருந்தது.

இலங்கை நாகரிகம் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வளரவும், தமிழ்நாட்டு நாகரிகம் தெற்கில் இருந்து வடக்கு நோக்கிப் பரவவும் பாண்டி நாட்டிற்கும் மாதோட்டத்திற்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் நடந்த முத்துக் குளித்தலே காரணம் எனக் கூறப்படுகிறது. இவற்றின் காரணமாகவே உரோம நாட்டு வணிகரின் நடவடிக்கைகள் வன்னியில் ஏற்பட்டிருக்கலாம் என்பதை அங்கு கிடைத்த உரோம நாட்டு ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன.

தமிழகத்தில் சங்ககால சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வர்த்தக நோக்கத்திற்காக நாணயங்கள் வெளியிட்டுள்ளதை தமிழகத்தின் பல இடங்களில் கிடைத்த நாணயங்கள் உறுதி செய்கின்றன. சில நாணயங்களில் மன்னன் பெயர் அல்லது வம்சப் பெயர் தமிழ்ப் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழகத்திற்கு வெளியே இவர்கள் வெளியிட்ட நாணயங்கள் இலங்கையில் கந்தரோடை, அநுராதபுரம் அக்குறுகொட போன்ற இடங்களிலும், தென்கிழக்காசியாவில் தாய்லாந்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மாதோட்டம் தமிழகத் தொடர்பின் முக்கிய துறைமுகமாக இருந்த போதும் அங்கு இதுவரை சங்ககால நாணயங்கள் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் மாதோட்டத்திற்கு வடக்கே ஈழவூர், மண்ணித்தலை, கல்முனை போன்ற இடங்களில் இருந்து சங்ககால சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சங்ககாலத்தில் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையே நிலவிய வணிக உறவு பற்றிச் சங்க இலக்கியம் கூறுகிறது. இதைச் சமகால பிராமிக் கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன. ஈழத்துப்



வன்னியில் கிடைத்த சங்ககால நாணயங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0147.jpg

பூதந்தேவனார் சங்கப்பாடல்களைப் பாடிய புலவர்களில் ஒருவர் என்பது இலக்கிய மரபு. பூநகரியில் வேரவில் என அழைக்கப்படும் கிராமம் முன்பொரு காலத்தில் ஈழவூர் என அழைக்கப்பட்டது. இந்நிலையில் பூநகரியில் சங்ககால நாணயங்கள் கிடைத்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

சங்ககாலத்தின் பின்னர் தமிழகத்தில் தோன்றிய பல்லவ, சோழ, பாண்டிய வம்சங்களின் ஆட்சிக் காலத்தில் அவர்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் செல்வாக்கு இலங்கையின் ஏனைய பிராந்தியங்களை விட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அதிகமாக இருந்துள்ளது (மூன்றாம், நான்காம் இயல்களைப் பார்க்கவும்). இதனால் வன்னிப்பிராந்தியத்திலுள்ள மாதோட்டம் முக்கிய வணிக நகரமாகவும், சோழர் காலத்தின் முக்கிய நிர்வாக மையமாகவும் எழுச்சி பெற்றது. இதன் தாக்கம் சமகாலத்தில் வன்னியின் உட்பகுதிகளிலும் ஏற்பட்டிருந்தமைக்கு சில ஆதாரங்கள் காணப்படுகின்றன.

வன்னியில் உள்ள வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்களுள் வவுனிக்குளம் சிவாலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் வவுனிக்குள அணைக்கட்டுக்கு அருகில் தென்கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. தற்போது அங்கு காணப்படும் ஆலயம் பிற்காலத்தில் தோன்றியதாக இருப்பினும், அங்கு வழிபடப்பட்டு வரும் சிவலிங்கம் மிகத் தொன்மையானது. இச்சிவலிங்கம் 19 ஆம் நூற்றாண்டில் வவுனிக்குளம் பாலியாற்றுப் பகுதியில் உள்ள கோவில்காடு என்ற இடத்தில் உள்ள புராதன ஆலய அழிபாடுகளுடன் கண்டுபிடிக்கப்பட்டதாகும். இது பற்றிப் பிரித்தானிய அதிகாரி ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்: தான் பார்த்த பெரிய கோவிலின் தூண்கள் சிதைவடைந்து காணப்பட்டதுடன், அதன் சிவலிங்கமும் உடைந்த நிலையில் காணப்பட்டது. அங்கு ஒரு கல்வெட்டும் காணப்பட்டது. அங்கு மேற்கொண்ட சிறிய தேடுதலின் போது பிள்ளையார் சிலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட கல்லையும் காண முடிந்தது.

இக்கூற்றிலிருந்து கோயில் காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன ஆலயத்திற்குரிய சிவலிங்கத்தை வைத்தே தற்போதைய சிவன் ஆலயம் முதலில் சிறிய ஆலயமாகத் தோற்றம் பெற்றமை தெரிகிறது. இச்சிவலிங்கத்தில் சிறிய உடைவுகள் காணப்படுவதால் தற்போதைய ஆலயத்தில் அதன் பழமையைப் பாதுகாக்கும் நோக்கில் தனியாக சிறு ஆலயம் அமைக்கப்பட்டு அச் சிவலிங்கம் வழிபடப்பட்டு வருகிறது. பொதுவாக இச் சிவலிங்கம் சதுர வடிவிலான ஆவுடையைக் கொண்டிருப்பது



வவுனிக்குளம் சிவன் ஆலயம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0148.jpg

சோழர் காலத்திற்குரிய சிறப்பானதொரு அம்சமாகும். சோழரின் பின்னர் பாண்டியர் காலத்தில் இருந்து பெரும்பாலும் ஆவுடைகள் வட்ட வடிவில் அமைக்கப்பட்டது. இவ் வேறுபாட்டையும், கலை நுணுக்கங்களையும் ஆய்வு செய்து பேராசிரியர் கோபாலகிருஸ்ணன் வவுனிக்குளம் சிவாலயத்தில் உள்ள சிவலிங்கம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் சோழக்கலை மரபில் வடிவமைக்கப்பட்டதெனக் கூறுகிறார்.



உருத்திரபுரம் சிவன் ஆலயம்

இது போன்ற வரலாற்றுப்பழமை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் சிவன் ஆலயத்திற்கும் உண்டு. தற்போது அங்கு காணப்படும் சிவன் ஆலயம் 1958 ஆம் ஆண்டு ஆகம முறைப்படி கட்டப்பட்டதாகும். இலங்கையில் திராவிடக் கலை மரபில் கட்டப்பட்ட ஆலயங்களில் இதுவும் ஒன்று என்பது கலை வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். ஆயினும் இவ்வாலயத்தை விட இங்கு வைத்து வழிபடப்படும் சிவலிங்கம் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது. இது யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த வில்லியம் ருவைனம் (William Twynam) அவர்களால் 1882 இல் உருத்திரபுரம் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. இது காணப்பட்ட இடத்திற்கு அருகே உருத்திரபுரம் குளமும் அவரால் அடையாளம் காணப்பட்டது. இது இங்கிருந்த ஆலயத்தின் புனித தீர்த்தக் கேணியாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஆவுடையுடன் கூடிய இச் சிவலிங்கத்தை அப்பிரதேச மக்களால் தொடக்க காலத்தில் அருகில் உள்ள குஞ்சுப்பரந்தனில் உள்ள அம்மன் ஆலயத்திற்கு கொண்டு சென்று அங்கு வைத்து வழிபடப்பட்டு வந்தது. பின்னர் இச் சிவலிங்கத்தை மூல விக்கிரகமாகக் கொண்டு தனியொரு ஆலயத்தை 1958 இல் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து குடியேறிய மக்கள் அமைத்தனர். இச்சிவலிங்கத்தின் ஆவுடை வவுனிக்குளம் சிவாலயத்தில் உள்ளதைப்போல் சதுரவடிவில் அமைந்துள்ளது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இங்கிருந்த தொடக்க கால ஆலயம் கி.பி.12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் சோழர்காலக் கலைமரபில் கட்டப்பட்டதெனக் கலைப்புலவர் சி.வி.நவரட்ணம் குறிப்பிடுகிறார்.

Tamileelam Archive

வன்னிப் பிராந்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான ஆலயங்களில் ஒன்றாக மண்ணித்தலையில் உள்ள இன்னொரு சிவாலயம் காணப்படுகிறது. இது சங்குப்பிட்டி பூநகரி வீதியில் ஆலடிச் சந்தியில் இருந்து வடக்கே ஏறத்தாழ 7 கிலோ மீற்றர் தொலைவில் ஒடுங்கிய மணற்பிரதேசத்தில் அமைந்துள்ளது. ஏறத்தாழ இரண்டு கிலோ மீற்றர் அகலமுடைய இந்நிலப்பரப்பில் அமைந்த இவ்வாலயத்திற்கு தெற்காகப் பெருங்கடலும், வடக்கில் யாழ்ப்பாணத்துடன் இலகுவாக போக்குவரத்து செய்யக்கூடிய 5 கிலோ மீற்றர் அகலமுடைய பரவைக்கடலும் காணப்படுகிறது. ஆணையிறவு தரைவழிப் பாதை திறப்பதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையிலான தரை வழிப்பாதையாக இவ்வாலயம் அமைந்த பிராந்தியம் பயன்படுத்தப்பட்டதை 15 ஆம் நூற்றாண்டில் எழுந்த கோகிலசந்தேசய என்ற சிங்கள இலக்கியம் குறிப்பிடுகிறது. இதன் காரணமாகத்தான் இவ்வாலயத்திற்கு வடக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்கரைக் கிராமம் ஒன்று கொழும்புத்துறை என்ற பெயரைப்பெற்றது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் மீதான தமது படையெடுப்பின் போது அவ்வரசகால பாதுகாப்பு அரண் ஒன்றை கொழும்புத்துறையில் கண்டதாகக் கூறியிருப்பது அக்காலத்தில் இப்பிரதேசம் பெற்றிருந்த முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0149.jpg







பூநகரி மண்ணித்தலை சிவன் ஆலயம்

வடஇலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஆலயங்களுள் ஓரளவு ஆலயத்தின் கலைமரபை அறியக்கூடிய பழைய ஆலயமாக இதைக் கருதலாம். கோறல் கல், செங்கல், சுதை என்பன கொண்டு அமைக்கப்பட்ட இவ்வாலயம் 21 அடி நீளத்தையும் 12 அடி அகலத்தையும், மூன்று தளங்களைக் கொண்ட 7 அடி உயரமான விமானத்தையும் கொண்ட சிறிய ஆலயமாகும் (புஷ்பரட்ணம் 1993). தமிழகத்தின் முதன்மைக் கலைவரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் இராசு காளிதாஸ் இவ்வாலயத்தின் தேவகோஸ்டங்கள், கர்ணக் கூடுகள், குதம், சாலை, பஞ்சரம் என்பன 10 ஆம் நூற்றாண்டுக்குரிய சோழக்கலைமரபைப் பிரதிபலிப்பதாகக் கூறுகிறார். இலங்கைத் தொல்லியற் திணைக்களம் இவ்வாலயத்தை இலங்கையின் தேசிய மரபுரிமைச் சின்னமாக பிரகடனப்படுத்த தீர்மானித்துள்ளது.

மேற்கூறப்பட்ட வன்னியின் வரலாற்றுப் பின்புலம்தான் 13ஆம் நூற்றாண்டில் பொலநறுவை அரசு வீழ்ச்சியடைந்து சிங்கள இராசதானி தெற்கு நோக்கி நகர்ந்த போது வடக்கு நோக்கி நகர்ந்த கலிங்கமாகன் தலைமையிலான அரசு வன்னியில் தோன்றக் காரணமாக அமைந்தது எனக் கருதலாம்.

வன்னியில் கலிங்கமாகன் அரசு

993 இல் சோழரால் ஏற்படுத்தப்பட்ட இலங்கையின் இரண்டாவது தலைநகரான பொலநறுவை 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. இதற்கு இக்காலத்தில் உருவான அரசியல் குழப்பங்கள், திறமையற்ற மன்னர்கள், பொருளாதார வீழ்ச்சி, கொடிய நோய்கள் போன்றவை காரணங்களாகக் கூறப்படுகின்றன (Liyanagamage 1967). இவ்வாறான சூழ்நிலையில்தான் கலிங்கமாகன் 1215இல் தென்னிந்தியாவில் இருந்து 24000 தமிழ், சோழ, கேரளப் படைவீரர்களின் உதவியோடு இலங்கை மீது படையெடுத்து வந்து பொலநறுவை அரசைக் கைப்பற்றினான். இவன் துணை அரசனாகிய ஜெயபாகுவுடன் சேர்ந்து பொலநறுவையில் 21 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் எனச் சூளவம்சமும் (Culavamsam 80: 56-73), 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என எனப் பூஜாவலிய (1956: 105-115) என்ற சிங்கள இலக்கியமும் கூறுகின்றன. இவ்விலக்கியங்களை அடிப்படை ஆதாரங்களாகக்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0150.jpg

கொண்டு கலிங்கமாகன் 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என லியனகமகேயும் *(Liyanagamage 1967: 146)*, 41 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என தங்கேஸ்வரியும் (1995) கூறுகின்றனர். இவன் தமிழர்களுக்குச் சார்பாகவும், சிங்கள மக்களுக்கு எதிராகவும் நடந்து கொண்டதாகக் கூறும் சூளவம்சம் சிங்கள மக்களுக்குச் சொந்தமான வாழ்விடங்களை, வயல் நிலங்களை, வழிபாட்டு இடங்களைத் தனது படைவீரர்களின் இருப்பிடங்களாக மாற்றினான் எனக் குறிப்பிடுகிறது. இதனால் பாளி, சிங்கள இலக்கியங்கள் இவனை ஒரு தமிழ் மன்னனாகவும் ஆங்காங்கே குறிப்பிடுகின்றன. பௌத்த சிங்கள மக்களுக்கு எதிராக இவன் கடைப்பிடித்த கொள்கையால் இவன் மீது வெறுப்படைந்த சிங்கள மக்கள் தமது 250 ஆண்டுகாலத் தலைநகரான பொலநறுவையைக் கைவிட்டு தெற்கு நோக்கிப் புலம்பெயர்ந்தனர். இதன் விளைவாக புதிய சிங்கள இராசதானியாக தம்பதெனியா, யாப்பகூவா, குருநாகல், கம்பளை, கோட்டை எனக் காலத்திற்குக் காலம் இடம்மாறின. சிங்கள இராசதானியும், சிங்கள மக்களும் தெற்கு நோக்கி நகர்ந்த போது கலிங்கமாகனது அரசு வடக்கு நோக்கி நகர்ந்ததைப் பாளி, சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதற்கு வடபகுதியில் பெரும்பான்மையோர் தமிழராக வாழ்ந்து வந்தமையும் இன்னொரு காரணமாகும். ஆயினும் கலிங்கமாகன் வடஇலங்கையில் எந்த இடத்தை தனது தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்தான் என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆனால் சூளவம்சத்தில் இவனுக்குச் சார்பான தமிழ், கேரளப்படைகள் நிலைகொண்டிருந்த இடங்களாக புலத்திநகர (பொலநறுவை) கொட்டசாரா (கொட்டியாரம்), ஹந்தகலக (கந்தளாய்), காகால (காக்கைதீவு), பதி (பதவியா), குருந்தி (குருந்தலூர்), மகாதீர்த்த (மாதோட்டம்), மன்னாரப்பட்டன (மன்னார் பட்டினம்), புலச்சேரி, வலிகாமம், கோணா (கோணாவில்?), மடுபாதபதித்த (இலுப்பக்கடவை), சுறதீர்த்த(ஊர்காவற்துறை) முதலான இடங்களைக் கூறுகிறது *(Culavamsa 83: 15-19)*. பூஜவலியா என்ற நூல் மேற்கூறப்பட்ட இடங்கள் சிலவற்றுடன் தமிடபட்டன (தமிழ்ப்பட்டினம்) என்ற இடத்தையும் குறிப்பிடுகிறது(1956: 106). இவ்விடங்களுள் காக்கைதீவு, ஊர்காவற்துறை முதலான இடங்களைத் தவிர ஏனைய இடங்கள் பெரும்பாலும் வன்னிப்பிராந்தியத்திலும், சில இடங்கள் திருகோணமலையிலும் இருந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது *(புஸ்பரட்ணம் 2000 :125-127)*.

Tamileelam Archive

கலிங்கமாகன் இலங்கையில் நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னனாகப் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறினாலும் அவன் யார்? எந்த வம்சத்தைச் சேர்ந்தவன்? அவனது பூர்வீகம் எங்கிருந்தது? அவனுக்கும் இலங்கை அரச வம்சங்களுக்கும் இடையிலான உறவு என்ன? போன்ற கேள்விகளுக்கான விடைகள் இன்றுவரை கண்டறியப்படவில்லை. மேலும் அவன் ஆட்சியில் வெளியிடப்பட்டதாகக் கூறக்கூடிய கல்வெட்டுக்களோ, நாணயங்களோ, அவனது ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட ஆலயங்களோ இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் இவனது ஆதிக்கம் பொலநறுவையிலும், வடஇலங்கையிலும் இருந்ததெனக் கூறுவதற்கு அப்பால் அவன் வரலாற்றையும், வரலாற்றுச் சாதனைகளையும் கூறமுடியாதிருக்கிறது.

கலிங்கமாகனது அரசு வடஇலங்கையில் இருந்தபோது சந்திரபானு என்னும் சாவக இளவரசன் தம்பதெனிய அரசு மீது படையெடுத்து இரண்டாம் பராக்கிரமபாகுவிடம் தோல்வியடைந்ததாகத் தெரிகிறது *(இந்திரபாலா இளங்கதிர் 21 மலர் :22)*. ஆயினும் இவன் கலிங்கமாகனிடம் அடைக்கலம் பெற்றோ அல்லது அவன் ஆதரவைப் பெற்றோ கலிங்கமாகனின் பின்னர் வடஇலங்கையில் ஆட்சி செய்ததாகத் தெரிகிறது *(மேற்படி:33)*. சூளவம்ஸம் இவன் சிங்கள அரசுக்கு எதிராகப் படையெடுக்க முன்னர் தென்னிந்தியாவிலிருந்து சோழ, பாண்டியப் படைகளுடன் மாதோட்டத்தில் வந்திறங்கி பதி, குருந்தி (குருந்தலூர்) மாவட்டங்களில் உள்ள மக்களை தன்னுடன் இணைத்துக் கொண்டதாகக் கூறுகிறது. இவன் இரண்டாவது தடவை தம்பதெனிய அரசு மீது படையெடுத்த போது வடஇலங்கையின் மன்னனாக இருந்தே படையெடுத்திருக்கலாம் என்பதற்கு தென்னிந்தியக் கல்வெட்டு ஒன்றில் ஆதாரம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0151.jpg

காணப்படுகிறது. இது பற்றி தென்னிந்தியாவில் பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 1262 ஆம் ஆண்டுக்குரிய குடுமியாமலைக் கல்வெட்டு பின்வருமாறு கூறுகிறது:

> "பல அரெசியல் வழக்கம் நெறிபட நாட்டு(ங்) குறிப்பினுர..ட்டிசைந் திருபாதஞ்செ..திரு..8)ந்த மந்திரி சரணமெதிகழந்திகழந்தினிதுநொக்கி முரண் மிகுசிறப்பில் இழ்ழமன்னர் இலகுவரிலொருவனை விழ்ழப்பொருது விண்மிசை யெற்றி உரிமெச்சுற்றமும் உயகுலம் பு(க்)குத்தருமையாண்டுமெ(மெயு)ம் பல9)ப்பெ புரவியும் க(ண்)மணித்தெரும் சீனவடமரும்நாகத்தொ(டு)ம்நவ மணிக்குவெயும் ஆடகத்திரியும் அரி ஆசனுமும் முடியுங்பட்கமும் முழும ணியாரமும் கொடியுங்குடெயும் குளிர் வெண்கவரியும் முரசுஞ்சங்10)கமும் தன(மு)ம் முதலி அரெசு கெழுகாம்டெயவாரி காணா மன்னவர் கண்டு கண்டெங்க கொணாமலையானுந்திரிகூடகிரியினும் உருகெழு கொடிமிசை இருகயலெ ழுதி எனை வெந்தனை ஆனை திறெகொண்டு11) ப(ண்)டெவல்செயயாதிகல் செய்திருந்த சாவன் மைந்தன் நலமிருகதி றெஞ்ச வீரக்கழல்லிரலரைச் (சூ)ட்டித்திருக்கொளம் அலைவாய்ப்படன் கழித்து வழங்கி அருளி முழுங்கு களிறெறிபார் முபதறிய ஊர்வ12)(ல)ஞ்(ய்)வித்து தந்தெ மரபென் நினை ப்பிட்டரெசிட மகிந்து ஆனுர் புரிச்சு விரெயச்செல்கென (வி)டெகுடுத்தரு ளியாகமடந்தை அன்புடன் சாந்தி வாகை சூடம..."என முடிகிறது.

இக்கல்வெட்டில் கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகளின் முக்கியத்துவத்தைப் பேராசிரியர் பத்மநாதன் பின்வருமாறு கூறுகிறார்:

1. வீரபாண்டியன் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்று, அங்குள்ள அரசனொருவனைப் போரிலே கொன்றான்.

Tamileelam Archive

2. போரில் மாண்ட மன்னனின் அரச சின்னங்களான அரியாசனம், முடி, வாள், கொடி, குடை முதலானவற்றையும் சீனவடம், நாகத்தோடு முதலான பெறுமதி மிக்க அணிகலன்களையும் அவனது படையிலுள்ள யானை, குதிரைகளையும் பாண்டியரின் படை கைப்பற்றிவிட்டது.

3. வீரபாண்டியன் தானடைந்த வெற்றியின் அடையாளமாக இணைக்கயல்களின் உருவங்களை திருகோணமலையிலும் திரிகூடகிரியிலும் பொறித்தான்.

4. திருகோணமலையிலே பாண்டியரசன் தங்கியிருந்த சமயத்தில் முன்பு அடங்காது, பகைமை கொண்டு போர் புரிந்த சாவகனின் மைந்தன் பணிந்து வேண்டிக் கொண்டதால், தந்தையினுடைய இராச்சியம் மகனுக்குரியமையாகும் என்பது அரசியல் நெறி என்ற உணர்வினால் அவனுக்கு வீரபாண்டியன் ஆட்சியதிகாரம் வழங்கினான். அவனுக்கு அரசருக்குரிய சின்னமான வீரக்கழலினை அணிந்து, அவனை யானை மேல் ஏற்றி, ஊர்வலம் செய்வித்து அதன் பின்பு அவனுடைய ஊருக்குச் செல்லுமாறு அனுப்பினான்.

5. வீரபாண்டியன் போர் முடிந்த பின் செய்த ஏற்பாடு திருகோணமலையிலே நடைபெற்றது என்று சாசனக் குறிப்பால் உணரப்படும். அந்நாட்களிலே திருகோணமலை சாவக மன்னனின் தலைநகராக அமைந்திருத்தல் கூடும்.

6. இலங்கை அரசன் வேறொருவனிடமிருந்து வீரபாண்டியன் ஆனைகளைத் திறையாகப் பெற்றான். அவன் இரண்டாம் பராக்கிரமபாகுவாதல் வேண்டும் என்பது ஒரு ஊகமாகும்.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0152.jpg

இக் கல்வெட்டில் இருந்து 13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி அளவில் இலங்கையில் இரு அரசுகள் இருந்ததையும், சாவக மன்னன் படையெடுப்பிற்கு அஞ்சிய சிங்கள அரசின் அமைச்சன் ஒருவன் பாண்டிய மன்னனிடம் உதவி கேட்டதன் பேரில் வடஇலங்கை மீது படையெடுத்த பாண்டியரின் படைகள் சாவக மன்னனை அடிபணிந்து திறை வழங்கப் பணித்த போது அதற்கு அவன் மறுத்ததால் அவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்தினர் என்ற உண்மை தெரிகிறது. இக்கல்வெட்டு சாவக மன்னனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்தியதாகக் கூறிய போதும் அவனது பெயரைக் குறிப்பிடவில்லை. இருப்பினும் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட இராசதானி தோன்றுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு வெளியே சாவகன் அவனின் மைந்தன் ஆகியோரின் அரசு இருந்தமை தெரிகிறது. இவ்வரசின் மையம் அல்லது தலைநகர் எந்த இடத்தில் இருந்ததெனப் பாளி, சிங்கள இலக்கியங்கள் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மாறாகக் கலிங்கமாகனது படைகள் நிலைகொண்டிருந்த பெரும்பாலான இடங்களே சாவக மன்னனின் ஆதிக்கம் நிலவிய இடங்களாகக் குறிப்பிடுகின்றன. இவ்விடங்களுக்கு இடையிலான ஒற்றுமைகள் கலிங்கமாகனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சாவக மன்னன் கலிங்கமாகனின் ஆதரவுடன் அல்லது அவனிடம் அடைக்கலம் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கலாம் என்ற பேராசிரியர் இந்திரபாலா கூறும் கருத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது.



முதலாவது வகை நாணயங்கள்

14ஆம் நூற்றாண்டுக்குரிய "திரிசிங்கள கடயம்பொத்" என்ற நூலில் இருந்து சாவகனின் அரசு யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும், திருகோணமலையிலும் ஏற்பட்டிருந்ததை அறிய முடிகிறது. இந்த இராச்சியத்தின் எல்லையிலே தமிழ்ச் சாசனங்கள் நாட்டப்பட்டிருந்ததாகவும் இந்நூல் மேலும் கூறுகிறது. பேராசிரியர் பத்மநாதன் யாழ்ப்பாணத்தில் சாவகனது ஆட்சி ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கு இங்கு புழக்கத்திலிருக்கும் சாவன்கோட்டை, சாவாங்கோட்டை, சாவகச்சேரி முதலான இடப்பெயர்களை ஆதாரமாகக் காட்டுகிறார் *(பத்மநாதன் 1992:32)*. பாளி, சிங்கள இலக்கியங்களில் சாவக மன்னர்களது ஆதிக்கம் நிலவிய இடங்களில் சில திருகோணமலை, யாழ்ப்பாண மாவட்டங்களில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டாலும் பெரும்பாலான இடங்கள் வன்னிப்பிராந்தியத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனால் அவர்களின் ஆதிக்க மையம் வன்னிப்பிராந்தியத்தில் இருந்ததாகச் சிந்திக்க இடமுண்டு. அவ்வாறு கருதுவதற்கு வேறும் சில ஆதாரங்கள் காணப்படுகின்றன.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



இரண்டாவது வகை நாணயங்கள்



மூன்றாவது வகை நாணயங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0153.jpg

இலங்கையில் ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பிருந்து 12 ஆம் 13 ஆம் நூற்றாண்டுகளில் புழக்கத்தில் இருந்த தமிழ் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அதிக எண்ணிக்கையிலான நாணயங்கள் வடஇலங்கையில் அதிலும் குறிப்பாக வன்னிப் பிராந்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன *(Prensep's 1858,Elliot,Biddulph, C.H. 1966, W. 1970, Biddulph, C.H. 1966, Seyon K.N.V 1998, Michener, M 1998).* இந்நாணயங்களின் வடிவங்கள், வேறுபட்ட அளவுகள்,சின்னங்கள், குறியீடுகள், எழுத்துப் பொறிப்புக்கள் என்பவற்றின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதலாவது வகை நாணயத்தின் முன்பக்கத்தில் மூன்று கோடுகளாலான பீடத்தின் மேல் இடம் அல்லது வலப்புறம் பார்த்த நிலையில் படுத்திருக்கும் நந்தியின் உருவமும், நந்தியின் இருபக்கங்களிலும் குத்துவிளக்குகளும், நந்திக்கு மேலே விளிம்பை ஒட்டிப் பிறைச்சந்திரனும் காணப்படுகின்றன. நாணயத்தின் பின்பக்கத்தில் மூன்று கோடுகளாலான பீடத்தின் மேல் இடம் மற்றும் வலப்புறம் பார்த்த நிலையில் கிடையாக இரண்டு மீன் சின்னங்களும், மீன் சின்னங்களின் இருபக்கங்களிலும் குத்துவிளக்குகளும், அதற்கு மேலே விளிம்பை ஒட்டிப் பிறைச்சந்திரனும் காணப்படுகின்றன. இரண்டாவது வகை நாணயத்தின் முன்பக்கத்தில் மூன்று கோடுகளாலான பீடத்தின் மேல் இடம் அல்லது வலப்புறம் பார்த்த நிலையில் படுத்திருக்கும் நந்தியின் உருவமும், நந்தியின் இருபக்கங்களிலும் குத்துவிளக்குகளும், நந்திக்கு மேலே விளிம்பை ஒட்டிப் பிறைச்சந்திரனும் காணப்படுகின்றன. நாணயத்தின் பின்பக்கத்தில் மீன் சின்னங்களுக்குப் பதிலாக தேவநாகரி எழுத்தில் நாணயத்தை வெளியிட்ட மன்னன் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது வகை நாணயத்தில் வலப்புறம் பார்த்த நிலையில் கம்பீரமாக நிற்கும் நிலையில் குதிரையின் உருவமும், அதன் முகத்திற்கு முன்னால் பலிபீடமும், அருகே குத்துவிளக்கும், குதிரைக்கு மேலே அங்குசமும் காணப்படுகின்றன. நாணயத்தின் பின்புறத்தில் செங்குத்தாக மேலே பார்த்த நிலையில் மூன்று மீன் சின்னங்களும், அதற்கு மேலே பிறைச்சந்திரனும் காணப்படுகின்றன.

இந்நாணயங்களை ஆய்வு செய்த அறிஞர்கள் பலரும் மேற்குறிப்பிட்ட இரண்டு மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்களைப் பாண்டிய மன்னர்களே வெளியிட்டு இருக்கலாம் என்ற கருத்தை முன் வைத்துள்ளனர் (மேற்படி). இக்கருத்து முற்றிலுமாக மீளாய்வு செய்யப்பட வேண்டிய ஒன்று. இந்நாணயங்களில் இடம்பெற்றுள்ள நந்தியும், மீன் சின்னங்களும் மூன்று கோடுகள் கொண்ட பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ளன. மூன்று கோடுகள் கொண்ட பீடம் இலங்கைக்குரிய தனித்துவமான அம்சம். இது பண்டு தொட்டு இலங்கையில் தமிழ், சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் காணப்படுகிறது. இந்த அம்சத்தை இலங்கையில் தமிழ் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களைத் தவிர தென்னாசியாவில் வெளியிடப்பட்ட வேறு எந்த நாணயங்களிலும் காணமுடியாது. இதனால் இந்நாணயங்கள் வடஇலங்கையில் இருந்து வெளியிடப்பட்டவை என்பதை உறுதியாகக் கூறலாம். இம்மரபு பிற்காலத்தில் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளியிடப்பட்ட சில வகை சேது நாணயங்களிலும் காணப்படுகிறது. அவற்றில் மூன்று கோடுகளால் ஆன பீடம் புள்ளிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. மூன்று கோடுகளால் ஆன சின்னத்தை இலங்கைத் தமிழர் புனிதச் சின்னமாகப் பயன்படுத்தினர் என்பதை யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட பல நாணயங்களில் நந்திக்கு கீழே மூன்று கோடுகளுக்குப் பதிலாக "சேது" என்ற மங்கல மொழியைப் பயன்படுத்தியதிலிருந்து உணரமுடிகிறது.



தமிழ், சிங்கள நாணயங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0154.jpg



வட இலங்கையில் கிடைத்த பாண்டிய நாணயங்கள்

தமிழகத்தில் சங்ககாலம் தொட்டு கி.பி. 13 ஆம் நூற்றாண்டுவரை பாண்டிய மன்னர் வெளியிட்ட பலவகை நாணயங்கள் வன்னிப் பிராந்தியத்தில் மாதோட்டம், ஈழவூர், நாச்சிக்குடா, பூநகரி முதலான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்நாணயங்களில் இடம்பெற்றுள்ள மீன் சின்னங்களின் வடிவத்திற்கும் மேற்கூறப்பட்ட முதலாவது வகை நாணயங்களில் வரும் மீன் சின்னங்களுக்கும் வடிவ அமைப்பில் எந்த வித ஒற்றுமையும் காணப்படவில்லை. பாண்டியர் 13 ஆம் நூற்றாண்டில் திருநெல்வேலியை வெற்றி கொண்டதன் பின்னரே இரண்டு மீன் உருவம் பொறித்த சின்னங்களை வெளியிட்டனர். அதை அவர்கள் வெளியிட்ட கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன. ஆனால் இலங்கையில் பண்டுதொட்டு இரண்டுக்கு மேற்பட்ட மீன் சின்னங்களைக் கொண்ட நாணயங்களை வெளியிட்டமைக்கு ஆதாரங்கள் உண்டு. இதற்கு உடுத்துறையில் கிடைத்த நாணயம் சிறந்த சான்றாகும் (மூன்றாம் இயலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது). பாண்டிய நாணயங்கள் பலவற்றில் நாணயத்தின் முன்பக்கத்தில் மன்னன் உருவமும், பின்பக்கத்தில் தமிழில் சுந்தரபாண்டியன், கோதண்டராமன், எல்லாம்தலையான் முதலான மன்னன் பெயர்கள், விருதுப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த அம்சங்களை முதலாவது வகை நாணயங்களில் காணமுடியவில்லை.

இந்நிலையில் இந்நாணயங்களை வடஇலங்கையில் ஆட்சி புரிந்த சாவகன் அல்லது அவனின் மகன் வெளியிட்டிருக்கலாம் எனக் கூறுவதே பொருத்தமாகும். அதை உறுதிப்படுத்தும் வகையில் அவனது பெயர் பொறித்த நாணயங்கள் பல வன்னிப் பரப்பில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளது *(ப.புஷ்பரட்ணம் 2000: 200-206)*. இந்நாணயங்களில் முதலாவது வகை நாணயங்களின் முன்பக்கத்தில் வரும் அதே வடிவத்தை ஒத்த நந்தியும், பின்பக்கத்தில் மீன் சின்னங்களுக்குப் பதிலாக தேவநாகரி எழுத்தில் அவற்றை வெளியிட்ட மன்னன் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. 1850 களில் இப்பெயர் பொறித்த நாணயங்களை ஆய்வு செய்த பிரின்செப் என்ற அறிஞர் அப்பெயரை "ஸ்ரீவி..கச" என வாசித்துள்ளார் *(Prenseps 1858: 424)*. இது முற்றிலும் ஒரு தவறான வாசிப்பாகக் காணப்படுகிறது. இடைக்காலத் தமிழகத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் தேவநாகரி எழுத்தில் பொறிக்கப்பட்ட பெயர்களில் "வ","ச" போன்ற எழுத்துக்கள் ஒரே மாதிரியான அமைப்புடையதாகக் காணப்படுகிறது. பிரின்செப் நாணயத்தில் "ச" என வாசிக்கப்பட வேண்டிய முதல் எழுத்தை "வி" எனவும் "வ" என வாசிக்கப்பட வேண்டிய கடைசி எழுத்தை "ச" எனவும் வாசித்துள்ளார். இதற்கு அவர் சாவகன் என்ற மன்னன் பற்றி அறிந்ததை விட 12ஆம், 13 ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சிபுரிந்த விஜயபாகு, வீரபாகு, விக்கிரமபாகு போன்ற சிங்கள மன்னர்களின் வரலாற்றையும், நாணயங்களையும் நன்கு அறிந்திருந்தமை காரணமாக இருக்கலாம். பண்டுதொட்டு இலங்கையில் சிங்கள மன்னர்கள் சிங்கத்தையும், தமிழர்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0155.jpg

நந்தியையும் தமது இலட்சனையாக நாணயங்களில் பயன்படுத்தி வந்துள்ளனர். இந்நிலையில் நந்தி உருவம் பொறித்த நாணயங்களில் வரும் பெயரை சிங்கள மன்னர்களுடன் தொடர்புபடுத்தியிருப்பது பொருத்தமற்ற ஒன்றாகும். மேலும் அவர் இந்நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள பெயரைச் "ஸ்ரீவி.. கச"என வாசிப்பதை விட "ஸ்ரீசாகவன்" என வாசிப்பதே பொருத்தமாக உள்ளது(புஸ்பரட்ணம் 2003 :163). இவ்வாசிப்பை தமிழக, இலங்கை அறிஞர்கள் பலரும் பொருத்தமானதாக எடுத்துக் கொண்டுள்ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது (பத்மநாதன் 2011, Sriwera 2006).

மூன்றாவது வகை நாணயம் வடஇலங்கையில் கிடைத்த ஒரு அரியவகை நாணயமாகும். இவ்வகை நாணயம் வடஇலங்கையில் குறிப்பாக வன்னியைத் தவிர ஏனைய இடங்களில் கிடைத்ததாகத் தெரியவில்லை. இந்நாணயத்தின் முன்பக்கத்தில் நந்திக்குப் பதிலாக குதிரையும், பின்பக்கத்தில் இரண்டு மீன் சின்னத்திற்குப் பதிலாக மூன்று மீன் சின்னங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. முன்னர் குறிப்பிட்டது போல் பாண்டிய மன்னர்கள் மூன்று மீன் சின்னம் பொறித்த நாணயங்களை வெளியிட்டதற்கு இதுவரை சான்றுகள் இல்லை. மதுரையைக் கைப்பற்றி ஆட்சி செய்த போது ஒரு மீன் சின்னம் பொறித்த நாணயத்தையும், தின்னவேலியைக் கைப்பற்றி ஆட்சி செய்த போது இரு மீன் சின்னம் பொறித்த நாணயத்தையும் வெளியிட்டுள்ளனர். பாண்டியர் சாவக மன்னனிடம் இருந்து வட இலங்கையை வெற்றி கொண்டதன் பின்னர் அவ்வெற்றியின் நினைவாக கோணாமலையிலும், திரிகூடகிரியிலும் இரு மீன் சின்னம் பொறித்த கொடியை ஏற்றியதாக குடுமியாமலைக் கல்வெட்டுக் கூறுகிறது. இதனால் மூன்று மீன் சின்னங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களைப் பாண்டியருடன் தொடர்புபடுத்துவது பொருத்தமாகத் தோன்றவில்லை. 1284இன் பின்னர் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் அரசமைத்து ஆட்சிபுரிந்த பாண்டியரின் படைத்தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் தமது நாணயங்களில் "சேது" என்ற மொழியோடு காளையைத் தமது அரச இலட்சனையாகப் பயன்படுத்தியுள்ளனர். அத்தோடு அவ்வரசு தொடர்பான இலக்கியங்களில் இம்மன்னர்களின் அரச சின்னமாகக் காளையையும், சேது மொழியையும் மட்டுமே கூறுகின்றன. எந்த இடத்திலும் பாண்டியர் தமது மேலாதிக்கத்தை நினைவுபடுத்தும் நோக்கில் தமது தாய்நாட்டு அரச இலட்சனையான மீனைப் பயன்படுத்தவில்லை. இதனால் மூன்று மீன் சின்னம் பொறித்த நாணயங்கள் 1262இல் பாண்டியரால் சாவகன் வெற்றி கொள்ளப்பட்டதற்குப் பின் 1284இல் யாழ்ப்பாண அரசு தோன்ற முன் வெளியிடப்பட்டவை என்ற முடிவுக்கு வருவதே பொருத்தமாகும். இக்காலத்தில் சாவகன் மைந்தன் ஆட்சியிலிருந்தான் எனப் பாண்டியக் கல்வெட்டுக் கூறுவதால் அவன் ஆட்சியிலே இந்நாணயங்கள் வெளியிடப்பட்டதெனக் கூறமுடியும். பாண்டியரின் குலச்சின்னமான மீனைப் பிற வம்சத்தினர் பல்வேறு காரணங்களுக்காகப் பயன்படுத்தியுள்ளனர். சோழர் பாண்டிநாட்டை வெற்றி கொண்டதன் நினைவாக அவர்களின் மீன் சின்னத்தை தமது நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர். இங்கே சாவகன் மைந்தன் பாண்டியரிடம் அடிபணிந்து திறை கொடுக்க சம்மதித்ததன் பேரில் அவனை ஆட்சி செய்ய அனுமதித்ததாக கல்வெட்டுக் கூறுகின்றது. இதன் மூலம் பாண்டியரின் மேலாண்மையை ஏற்றதன் நினைவாக மூன்று மீன் சின்னம் பொறித்த நாணயங்களை வெளியிட்டான் எனக் கூறலாம். சில நாணயங்களின் முன்புறத்தில் இரு மீன் சின்னமும், பின்புறத்தில் மூன்று மீன் சின்னமும் காணப்படுகின்றன. இதில் மூன்று மீன் சின்னம் பாண்டியரின் மேலாண்மையையும், இரு மீன் சின்னம் ஏற்கனவே இங்கு ஆட்சியிலிருந்த மன்னர்கள் வெளியிட்ட நாணய மரபையும் நினைவுபடுத்துவதாக இருக்கலாம். இந்நாணயங்களில் காணக்கூடிய இன்னொரு சிறப்பு மூன்று மீன் சின்னத்துடன் நாணயத்தின் முன் புறத்தில் கம்பீரமான தோற்றத்தில் குதிரை, வேள்வி குண்டம், குத்துவிளக்கு போன்ற சின்னங்கள் இடம் பெற்றிருப்பதாகும். இவை இந்நாணயங்களை வெளியிட்ட மன்னன் ஒப்பற்ற பெருமன்னன் என்ற புகழையும், பெயரையும் பெறுவதற்காகச் செய்யப்பட்ட அசுவமேத யாகத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0156.jpg

ஒரு நாட்டின் அல்லது ஒரு வட்டாரத்தில் இருந்து மறைந்து போன அரசமரபை அல்லது ஆட்சியாளர்களை அடையாளப்படுத்துவதில் நாணயங்கள் நம்பகரமான சான்றுகளாகக் காணப்படுகின்றன. வரலாற்று இலக்கியங்களில் சொல்லப்படாத வடஇந்திய, தென்னிந்திய ஆட்சியாளர்கள் மற்றும் வம்சங்களின் பெயர்கள் நாணயங்கள் ஊடாக கண்டறியப்பட்டதற்கு பல ஆதாரங்கள் உண்டு. இலங்கைத் தமிழரிடம் ஏறத்தாழ சங்க காலத்திற்குச் சமமான காலத்திலேயே தமிழ் அரசமரபும், நாணயங்கள் வெளியிடும் மரபும் தோன்றியதற்கு நம்பகரமான தொல்லியல் ஆதாரங்கள் உண்டு. இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் பாளி இலக்கியங்களை முதன்மைச் சான்றுகளாக கொண்டு தமிழ் அரசமரபு பற்றி ஆராய்ந்தோர் இலங்கைத் தமிழரிடம் ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட அரசு 13 ஆம் நூற்றாண்டின் பின்னர் தோன்றியதென்ற கருத்தையே கொண்டிருந்தனர். ஆயினும் அண்மைக்காலத்தில் தமிழர் தொடர்பான தொல்லியற் கண்டுபிடிப்புக்களால் அவர்கள் தமது முன்னைய கருத்துக்களை மறுவாசிப்பிற்கு உட்படுத்தி உள்ளனர். இலங்கைத் தமிழரிடம் நாணயம் வெளியிடும் மரபு தோன்றுவதற்கு தமிழக நாணய மரபு முன்னோடியாக இருந்தது என்பதில் ஐயமில்லை. ஆயினும் இலங்கையில் அது பண்டுதொட்டு சில தனித்துவமான அம்சங்களுடன் வளர்ந்துள்ளதை நன்கு ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் கண்டுகொள்ளலாம். இதற்கு உதாரணமாக சங்ககாலப் பாண்டியரால் வெளியிடப்பட்ட நாணயங்களைக் குறிப்பிடலாம். அவர்கள் தமது அரச இலட்சனையான மீன் உருவத்தை கோட்டுருவில் நாணயத்தின் பின்பக்கத்தில் மட்டும் பொறித்தனர். ஆனால் சமகால இலங்கைத்தமிழர் வெளியிட்ட நாணயங்களில் அது முழு உருவமாக நாணயத்தின் இரு பக்கங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். இத்தனித்துவம் மீன் சின்னத்தில் மட்டுமன்றி பண்டுதொட்டு இலங்கைத் தமிழர் வெளியிட்டு வந்த நாணயங்களில் உள்ள குதிரை, நந்தி, குத்துவிளக்கு, பிறைச்சந்திரன் போன்ற சின்னங்களிலும் காணப்படுகின்றன. இதற்கு மேற்குறிப்பிட்ட சாவகன் கால நாணயங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்நாணயங்கள் பாளி, சிங்கள இலக்கியங்களிலும், பாண்டியக் கல்வெட்டிலும் சொல்லப்படும் சாவக மன்னனது ஆட்சி வடஇலங்கையில் இருந்ததை உறுதிப்படுத்துவதில் முக்கிய சான்றாகத் திகழ்கின்றன. இந்நாணயங்கள் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து மிக அண்மைக்காலம் வரை மாதோட்டம் உள்ளிட்ட வன்னிப் பிராந்தியத்திலிருந்தே அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் "ஸ்ரீசாவகன்" பெயர் பொறித்த நாணயங்கள் வன்னிப் பிராந்தியத்தில் கல்முனை, மண்ணித்தலை, வீரபாண்டியன்முனை, மாதோட்டம், தென்னியங்குளம் ஆகிய இடங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றை நோக்கும் போது சாவக மன்னர்களது அரச மையம் வன்னியில் இருந்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது. பாளி, சிங்கள இலக்கியங்களில் சொல்லப்பட்ட சாவகனது ஆதிக்க மையங்களில் பல வன்னிப்பிராந்தியத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. வன்னிப்பிரரந்தியத்தில் உள்ள தென்னியன்குளம் (பாண்டியர் - தென்னவன், தென்னவர் என அழைக்கப்படுவர்), பாண்டியன்குளம், வீரபாண்டியன்முனை ஆகிய இடப்பெயர்கள் வடஇலங்கை மீது படையெடுத்து சாவக மன்னனை வெற்றி கொண்ட பாண்டியரை நினைவுபடுத்துகிறது. அவற்றுள் வீரபாண்டியன்முனை என்ற இடப்பெயர் பாண்டியப் படைத்தளபதி வீரபாண்டியன் பெயரை நினைவுபடுத்துவதாக உள்ளது. இந்நிலையில் கட்டுக்கரையில் குருவில் என்ற இடத்தில் இருந்து சாவகன்கால நாணயங்கள் சில கிடைத்துள்ளன. இவற்றை நோக்கும் போது பாளி இலக்கியங்கள் கூறும் குருந்தி என்ற இடம் சாவகன் ஆதிக்க மையம் இருந்த குருவிலாக இருக்கலாம் என எண்ணத்தூண்டுகிறது.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0157.jpg

வன்னிச் சிற்றரசுகள்

வன்னி என்ற அடையாளம் எவ்வாறு வந்ததென்பதில் அறிஞர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் உண்டு. ஆனால் வரலாறு, கல்வெட்டு, இலக்கிய ஆதாரங்கள் வன்னியர்களுக்குச் சொந்தமான நிலப்பரப்பு வன்னிப்பற்று, வன்னி என அழைக்கப்பட்டதாகக் கூறுகின்றன. குறுநில மன்னருக்குரிய பதவியைக் குறிக்கும் வன்னிமை, வன்னிபம், வன்னியர், வன்னியரசன் என்ற சொற்கள் சோழர் ஆட்சியில் தொண்டைமண்டலத்தில் இருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. பேராசிரியர் பத்மநாதன் இலங்கையில் இப்பெயர்களின் தோற்றம் சோழர் ஆட்சியுடன் தோன்றியதாகக் கூறுகிறார் (பத்மநாதன் 2014: 175). கலாநிதி இரகுபதி அநுராதபுரம், பொலநறுவை அரசுகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் தென்னிலங்கை - யாழ்ப்பாண அரசுகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் ஓரளவு சுயேட்சையுடன் செயற்படக் கூடிய சூழ்நிலை காணப்பட்டது. அவ்வாறு சுயேச்சையுடன் செயற்பட்ட தலைவர்களின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பே வன்னியபற்று, வன்னியபத்து என்ற பெயரைப் பெற்றிருக்கலாம் எனக் கூறுகிறார் (இரகுபதி 2014: 39). வடஇலங்கையில் வன்னிமைகளின் தோற்றம் சோழரின் வீழ்ச்சியுடன் ஏற்பட்டதற்கான சூழ்நிலை காணப்பட்டாலும், அது பற்றிய ஆதாரங்கள் 13ஆம் நூற்றாண்டிலிருந்து குறிப்பாக கலிங்கமாகன் ஆட்சிக்காலத்தில் இருந்தே காணப்படுகின்றன. இதற்கு கலிங்கமாகன் பொலநறுவையைக் கைப்பற்றி படையாட்சியை வன்னியருக்கு கொடுத்தான் என மட்டக்களப்பு மான்மியம் கூறுவதையும், குளக்கோட்ட மன்னன் திருகோணமலையிலுள்ள நிலாவெளி, கட்டுக்குளம் ஆகிய இடங்களுக்கு வன்னியர்களை நியமித்தான் என கோணேஸ்வரக் கல்வெட்டுக் கூறுவதையும் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

போர்த்துக்கீசர் இலங்கை வருவதற்கு முன்பாகவே இங்கிருந்த கண்டி, கோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய இராசதானிகளின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டதாக தமிழ், சிங்கள வன்னிச் சிற்றரசுகள் இருந்துள்ளன. இச்சிற்றரசுகளின் ஆள்புலம் பெரும் காடுகள் சூழ்ந்த இடங்களாக இருந்ததுடன், பிரதான இராசதானிகளின் தலைநகரங்களில் இருந்து வெகுதூரத்திலும் காணப்பட்டன. இதனால் முக்கிய இராசதானிகளால் இச்சிற்றரசுகள் மீது எல்லாக் காலத்திலும் மேலாதிக்கம் செலுத்த முடியவில்லை. இதனால் பலம் பெற்ற மன்னன் ஒருவன் அதிகாரத்தில் இருக்கும் போது மட்டும் அவர்களைக் கட்டுப்படுத்த முடிந்தது. வன்னிமை ஒன்றுக்கு புதிய தலைவன் ஒருவன் தெரிவாகும் போது அவனுக்குரிய பட்டமும், விருதும் முடியரசனால் வழங்கப்படுவது வழக்கம். அத் தலைவர்கள் தங்கள் அந்தஸ்துக்கு ஏற்ப குடை, கொடி, கவசம், படைக்கலம் என்பவற்றைக் கொண்டிருப்பார்கள். அவர்களின் ஆட்சியுரிமை தலைமுறை தலைமுறையாகச் சென்றது. அவர்களின் ஆள்புலத்திற்கு உட்பட்ட பிரதேச நீதி, நிர்வாகத்திற்கு அவர்களே பொறுப்பாக இருந்தனர்(பத்மநாதன் 214: 176). இவர்கள் ஆண்டுதோறும் அரசனுடைய அரண்மனைக்கு சென்று திறை செலுத்துவது, அரச விழாக்களில் பங்கெடுப்பது, அரசனுக்குத் தேவைப்படுமிடத்தில் படையுதவி அளித்தல் என்பவற்றை தமது முக்கிய கடமைகளாகக் கொண்டிருந்தனர் (மேற்படி: 176).

யாழ்ப்பாண இராசதானி காலத்தில் அதன் அரசியல் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட வன்னி அரசுகளாக மேல்பற்று, செட்டிக்குளம்பற்று, பனங்காமம்பற்று, முள்ளியவளைப்பற்று, தென்னமரவாடிப்பற்று, கருநாவல்பற்று, கரிக்கட்டுமூலைபற்று என்பன காணப்பட்டன. அவற்றுள் பனங்காமத்து வன்னிமை வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பில் அரைவாசிப் பகுதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருந்தது. இதனால் பனங்காமத்து தலைவனே வன்னி அரசனாக அழைக்கப்பட்டான். இதன் அதிகாரம் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் மாதோட்டம் உள்ளிட்ட பரந்த நிலப்பரப்பை உள்ளடக்கியிருந்தது. இவ்விடத்தில் ஒல்லாந்து தேசாதிபதி பான் கூன்ஸ் என்பவர் 1658 ஆம் ஆண்டு வடஇலங்கையில் இருந்த வன்னிமைகள் பற்றிக் கூறியிருப்பது நோக்கத்தக்கது:

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0158.jpg

"இந்த நான்கு மாகாணங்களும், பதின்மூன்று தீவுகளும் யாழ்ப்பாணப்பட்டின இராச்சியம் என அழைக்கப்பட்டன. வன்னி என அழைக்கப்படும் வன்னியருடைய மாநிலம் இந்த இராச்சியத்திற்குரியதாகும். இது யாழ்ப்பாணப்பட்டினத்து அரசர்களின் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட பெருநிலப்பகுதியாகும். இந்நிலை போர்த்துக்கேயரினாலும் பேணப்பட்டதாகும். இப்போது யாழ்ப்பாணப்பட்டின மாநிலத்தின் ஒரு பகுதியாக உள்ளது. எங்கள் ஆட்சியின் கீழ் அமைந்துள்ள போதிலும் அதன் மேல் பூரண இறமை ஏற்படுத்தப்படவில்லை. அதன் எல்லைகள் கடலோரத்தில் இருந்து மூன்று அல்லது நான்கு மைல்களுக்கு உட்புறமாக செட்டிக்குளத்திலே தொடங்கி கொழும்புத்துறைக்கு எதிரேயுள்ள கல்முனைவரை நீடித்து அங்கிருந்து கிழக்கு நோக்கித் திருகோணமலைவரை பரந்து பின் அப்பகுதியில் இருந்து மேற்குப்புறமாக கற்பிட்டி, மாதோட்டம், மன்னார் ஆகிய இடங்கள் வரை செல்கிறது. இப்பெரிய மாவட்டத்திற்குரியனவாய் திருகோணமலைக்கு மேற்குப் பக்கமாகவுள்ள காடுகளை உள்ளடக்கிய பிரதேசங்கள் பின்வருமாறு: ஏறக்குறைய 50 கிராமங்களைக் கொண்ட தென்னமரவாடிப்பற்று, 100 கிராமங்களைக் கொண்ட கரிக்கட்டுமூலைப்பற்று, 70 கிராமங்களைக் கொண்ட முள்ளியவளைப்பற்று, 5 கிராமங்களைக் கொண்ட செட்டிக்குளப்பற்றின் ஒரு பகுதி. வன்னி மாநிலத்திலேயே ஆறு மாகாணங்களும், முந்நூறுக்குக் குறையாத கிராமங்களும் உள்ளன. குடாநாட்டிலுள்ள நான்கு மாகாணங்களைப்போல் யாழ்ப்பாணப்பட்டினத்திற்குரியனவாகிய செட்டிக்குளம், புனேரி, மேல்பற்று என்பவற்றை உள்ளடக்கிய வன்னிப்பிரதேசம் ஏறக்குறைய 80,000 சதுரமைல்கள் சுற்றளவினைக் கொண்டதாகும். அது 42 ஆண்டுகளுக்கு மேலாக பழமையானதும், இறமையாதிக்கமுடையதுமான அரசவம்சத்தைச் சேர்ந்த சங்கிலி என்ற அரசனாலே ஆளப்பட்டது" (பத்மநாதன் 2014: 177).

இக்கூற்றிலிருந்து தமிழ் வன்னிமைகளின் பரப்பும், எண்ணிக்கைகளும் மேற்கூறப்பட்ட ஆறு வன்னிமைகளுக்கும் அப்பால் இருந்துள்ளதை அறியமுடிகிறது. இவ் வன்னிமைகள் யாழ்ப்பாண இராசதானிகளுக்கு உட்பட்டதாக இருந்த போதும் இவ்வன்னிமைகளை ஆட்சி செய்த தலைவர்களையும், அவர்களின் ஆட்சிக்காலங்களையும் முழுமையாக அறியப் போதிய ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. பேராசிரியர் பத்மநாதன் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதாவது ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்த காலத்தில் வன்னியில் ஆட்சி புரிந்த வன்னியரசர்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்திக் கூறுகிறார் (பத்மநாதன் 2014: 184):

இல	வன்னிமை	வன்னியரசர்
1	பனங்காம்	கயிலாயவன்னியன், நல்லமாப்பாணர், காசியனார், நல்லமாப்பாண இலங்கநாரணன்
2	கரிகட்டுமூலை	புதுநல்ல மாப்பாணன், சேந்தனார், புவிநல்லமாப்பாணன்
3	மேல்பற்று	புதுக்கன்உடையார், குட்டிப்பிள்ளை, புவிநல்லமாப்பாணன்
4	முள்ளியவளை	புதுக்கன்உடையார், குட்டிப்பிள்ளை, பெருமைனார் உடையார்
5	கருநாவல்பற்று	திரிகையிலை வன்னிபம், திரிகையிலை வன்னிபம், அம்பலவாணர்
6	தென்னமரவாடி	சண்முக உடையார், செப்பாத்தை உடையார், சேதுகாவல மாப்பாணன்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0159.jpg

பேராசிரியர் பத்மநாதன் கயிலைவன்னியனார் தர்மசாசனப்பட்டயத்தை அடிப்படையாகக் கொண்டு அடங்காப்பற்றில் அதிகாரம் செலுத்திய மேலும் பல வன்னியரசர்களின் பெயர்களை அடையாளப்படுத்துகிறார். இப்பெயர்கள் 17ஆம் நூற்றாண்டில் கொம்பனி அதிகாரிகளின் அறிக்கையில் வரும் பெயர்களை விட மேலதிக பெயர் விபரங்களைத் தருவதாக உள்ளது. ஒல்லாந்தர் ஆட்சிக்காலக் குறிப்புக்கள் எல்லாவற்றிலும் ஆறு வன்னிமைகளுள் ஒன்றாக கருநாவல்பற்று தனிப்பிரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இப்பட்டயத்தில் அது குறிப்பிடப்படவில்லை. இதற்கு இப்பட்டயம் எழுதப்பட்ட காலத்தில் கருநாவல்பற்றில் வன்னிபம் என்ற பதவிபெற்ற எவரும் இல்லாதிருந்தமை காரணமாக இருக்கலாம் எனக்கருதப்படுகிறது (பத்மநாதன் மேற்படி: 189).

இல	கயிலை வன்னியனார் தர்மசாசனப் பட்டயத்தில் கூறப்படும் வன்னிமைகள்	வன்னியரசர்
1	பனங்காம்	நிச்சியச் செயனாதிராய முதலியார், குலசேகரமுதலியார்.
2	கரிகட்டுமூலை	புவிநல்லமாப்பாணர்
3	மேல்பற்று	ரணசுர ரதீரராக வன்னியராய முதலியார்,கந்தயினா வன்னியனார்
4	முள்ளியவளை	இலங்கை நாராயண முதலியார், மயிலாத்தை உடையார்
5	தென்னமரவடி	புண்ணியபிள்ளை

இவ்வன்னிமைகள் யாழ்ப்பாண இராசதானியின் கட்டுப்பாட்டுக்கள் இருந்தாலும் எல்லாக்காலத்திலும், எல்லா வன்னிமைகளும் யாழ்ப்பாண மன்னர்களின் கட்டுப்பாட்டிற்கு அடங்கிச் செயற்பட்டன எனக் கூறமுடியாது. அதிலும் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சியில் பல வன்னிமைகள் பல ஆண்டுகளாக அவர்களின் ஆணைகளை மதிக்காது சுதந்திரமாகச் செயற்பட்டதைக் காணமுடிகிறது. ஆயினும் யாழ்ப்பாண இராசதானியிலும், அதன் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட வன்னிச் சிற்றரசுகளிலும் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் இனம், மொழி, மதம், பண்பாடு என்பவற்றாலும், திருமண உறவாலும் பிணைக்கப்பட்டிருந்ததால் பெரும்பாலான காலங்களில் வன்னி அரசர்கள் யாழ்ப்பாண இராசதானிக்கு கட்டுப்பட்டவர்களாகவே நடந்து கொண்டனர். ஆண்டுதோறும் யாழ்ப்பாணம் சென்று தமக்குரிய வரியைச் செலுத்துவது வழக்கமாக இருந்தது. போர்த்துக்கீசர் யாழ்ப்பாண இராசதானி மீது படையெடுத்த காலங்களில் முள்ளியவளை, பனங்காமம் வன்னிச் சிற்றரசர்கள் படை உதவி அளித்ததுடன், தாமே முன்னின்று யாழ்ப்பாண அரசைப் பாதுகாக்க போர்த்துக்கேயருக்கு எதிராகவும் போரிட்டனர்.

யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கீசர் வெற்றி கொண்டதன் பின்னர் யாழ்ப்பாண மன்னர்களைப்போல் வன்னி அரசர்களிடம் இருந்து திறைகளைப் பெறுவதற்கு முயற்சிகளை எடுத்தனர். ஆனால் எல்லா வன்னிச் சிற்றரசர்களும் அவர்களின் ஆணைகளுக்கு கட்டுப்பட முன்வரவில்லை. வன்னி அரசுகளுள் மிகப்பரந்த நிலப்பரப்பைக் கொண்டிருந்த பனங்காமத்து வன்னியன் போர்த்துக்கேயர் ஆட்சியில் 14 ஆண்டுகள் யாழ்ப்பாணத்திற்குச் செல்லவும் இல்லை, போர்த்துக்கீசருக்கு வரி செலுத்தவுமில்லை. இந்நிலையில் போர்த்துக்கீசர் படைகொண்டு வன்னி அரசுகள் மீது மேலாதிக்கம் செலுத்தவும் முடியவில்லை. இதற்கு வன்னி அடர்ந்த காடுகளைக் கொண்டிருந்ததுடன், அடங்காப்பற்றை கைப்பற்றி அதிகாரம் செலுத்துமளவிற்கு போர்த்துக்கீசரிடம் படைப்பலமும் இருக்கவில்லை. இந்நிலையே ஒல்லாந்தர் காலத்திலும் காணப்பட்டது (பத்மநாதன் 2014: 178). இதனால் 1811 இல் பிரித்தானியரால் பண்டாரவன்னியன் வெற்றிகொள்ளப்படும் வரை ஐரோப்பியர் யாழ்ப்பாணத்தில் மேலாதிக்கம் செலுத்தியது போல் வன்னி அரசுகள் மீது முழுமையான மேலாதிக்கத்தை செலுத்தமுடியவில்லை.

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0160.jpg

இதனால் ஒல்லாந்த அதிகாரிகள் வன்னியர்களோடு கூட்டாகவும், தனித்தனியாகவும் காலத்திற்கு காலம் திறைகள், கடமைகள் தொடர்பான உடன்படிக்கைகளைச் செய்தனர். தங்கள் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய இறைகடமைகளையும், சேவைகளையும் வன்னியர்களே பெற்றனர். ஊர்க்காவல் உள்ளூர் நிர்வாகம் முதலிய விடயங்களும் அவர்களின் பொறுப்பாகவே இருந்தன. அவர்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்ற தானியங்களின் பெறுமதி குறிப்பிடப்பட்டு அதற்கேற்பவே அவர்கள் ஒவ்வொருவருக்கும் எத்தனை யானைகளைத் திறையாகக் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஆண் யானை ஒன்றின் பெறுமதி 300 இறைசால் எனவும் பெண் யானை ஒன்றின் பெறுமதி 250 இறைசால் எனவும் தீர்மானிக்கப்பட்டது. காலப்போக்கில் வன்னியில் கிடைக்கக் கூடிய மரம், மான்தோல் போன்ற பொருட்களையும் வன்னியரிடம் இருந்து திறையாகப் பெற்றுக்கொள்ள முற்பட்டனர். இத்தகைய ஏற்பாட்டின் பிரகாரம் ஆறு வன்னிகளிடமும் இருந்து ஆண்டுதோறும் பெறும் இறைகள் பின்வருமாறு அமைந்திருந்தது *(பத்மநாதன் 2014:179)*.

இல.	வன்னிமைகள்	யானைகள்	மரம்	மான் தோல்
1	பனங்காம்	16 யானைகள்	25 மரங்கள்	45 மான் தோல்கள்
2	கரிகட்டுமூலை	7 யானைகள்	40 மரங்கள்	20 மான் தோல்கள்
3	மேல்பற்று	1 யானைகள்	30 மரங்கள்	20 மான் தோல்கள்
4	முள்ளியவளை	1 யானைகள்	15 மரங்கள்	20 மான் தோல்கள்
5	கருநாவல்பற்று	4 யானைகள்	--	--
6	தென்னமரவடி	1 யானைகள்	--	--

போர்த்துக்கீசர் வன்னி தொடர்பாக பின்பற்றிய அணுகுமுறைகளுடன் ஒப்பிடும் போது ஒல்லாந்தர் அதன் அரசியல் நலன்களைவிடப் பொருளாதார நலன்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். இதற்கு இலங்கையின் அரசியல் நிலை ஒல்லாந்தருக்குப் பாதகமாக இருந்தமையும் ஒரு காரணமாக இருக்கலாம். இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்கு எதிராக நாட்டின் பல பாகங்களிலும் கலகங்கள் ஏற்பட்ட போது வன்னி அரசர்கள் ஒல்லாந்தருக்கு எதிராகப் போராடிய கண்டி மன்னனுடன் நல்லுறவைப் பேணிவந்தனர். இதனால் ஒல்லாந்தர் வன்னி மீது படையெடுத்த போது அதன் அரசர்கள் கண்டி மன்னனின் உதவியை நாடினர்.

ஆனால் ஒல்லாந்தரோ கண்டி மன்னனுக்கும் வன்னிச் சிற்றரசர்களுக்கும் இடையே நல்லுறவு ஏற்படாமல் தடுப்பதைத் தமது முக்கிய கொள்கையாகக் கொண்டிருந்தனர். ஆனால் இதற்கு மாறாக வன்னி அரசர்களின் நடவடிக்கைகள் இருந்ததால் ஒல்லாந்தர் இலங்கையின் அரசியல் சூழ்நிலைகள் தமக்குச் சாதகமாக இருந்த காலங்களில் எல்லாம் வன்னி மீது படையெடுப்புக்களை மேற்கொண்டனர். அதில் சில வெற்றிகளையும் பெற்று வன்னி அரசர்கள் சிலருடன் தமக்குச் சாதகமான பொருளாதார உடன்படிக்கைகளைச் செய்துகொண்டனர். ஆனால் அவை நீண்டகாலத்திற்கு நிலைக்காத வகையில் வன்னி அரசர்கள் நடந்துகொண்டனர். கயிலாய வன்னியனும் ஏனைய வன்னியரசர்கள் சிலரும் ஒல்லாந்த அதிகாரிகளின் ஆணைகளுக்கு கட்டுப்பட முன்வரவில்லை. கயிலாய வன்னியன் தலைமையில் மேல்பற்று, கருநாவல்பற்றுத் தலைவர்களும் ஒல்லாந்தருடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை மதிக்காது நடந்து கொண்டனர். வன்னியருடன் நல்லுறவைப் பேணிவந்த கண்டி அரசுக்கு எதிராக ஒல்லாந்தர் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது வன்னியிலும், வன்னிக்கு வெளியே ஒல்லாந்தர் ஆட்சி நிலவிய பிரதேசங்களிலும் அவர்களுக்கு எதிரான செயற்பாடுகளே காணப்பட்டன.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0161.jpg

1671இல் பணாமை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளை வெற்றி கொண்ட தேசாதிபதியின் இளைய புதல்வனாகிய பான்கூன்ஸ் வன்னியரைக் கைப்பற்றும் வாய்ப்பைப் பெற்றான். அவன் தனது படைகளுடன் முல்லைத்தீவுக்குள் நுழைந்து கயிலாய வன்னியனின் இருப்பிடமான அம்பலப்பெருமாள் என்ற கிராமத்தில் நிலைகொண்டான். இதனால் வன்னி அரசர்கள் எல்லோரும் அங்கு சென்று மன்னிப்புக் கோரியதுடன் சமாதானம் செய்துகொண்டனர். கயிலாய வன்னியன் சுகயீனத்தைக் காரணம் காட்டி தன் உறவினரை அனுப்பி வைத்தான். இதன் விளைவால் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடிய ஒல்லாந்து அதிகாரிகளும், வன்னி அரசர்களும் திறை, மேலாதிக்கம் தொடர்பான உடன்பாட்டுக்கு வந்தனர். ஆனால் புதிய உடன்படிக்கை ஏற்பட்டு ஐந்து ஆண்டுகளுக்குள் கயிலாயவன்னியன், புண்ணியபிள்ளை உடையார் ஆகியோரின் நடவடிக்கைகள் ஒல்லாந்தருக்கு எதிராக அமைந்தது. இந்நிலையில் 1678 ஆம் ஆண்டு கயிலாய வன்னியன் இறந்ததும் வன்னி நாடு பெரும்தலைவனை இழந்தது. ஒல்லாந்தர் ஆட்சியில் அடங்காப்பற்றில் ஆறு வன்னிமைகள் இருந்தும் பனங்காமப்பற்றே வன்னியின் அரைப்பங்கு ஆள்புலத்தை தமக்குள் கொண்டிருந்தது. ஒல்லாந்தரும் வன்னியில் இருந்து கிடைக்கும் திறையின் அரைப்பங்கை பனங்காமத்தில் இருந்தே எதிர்பார்த்தனர். ஆனால் கயிலாய வன்னியனின் மேலாதிக்கத்திற்கு கட்டுப்படாமல் ஒரு சுதந்திர மன்னனாகவே ஆட்சிபுரிந்ததால் அவன் அரசன் என்றே வருணிக்கப்பட்டான். ஆனால் அவனுடைய மரணம் ஒல்லாந்தருக்கு சாதகமாக அமைந்ததால் ஒல்லாந்தரின் ஆதிக்க நிலையைப் பலப்படுத்திக் கொள்ள புதிய வழிபிறந்தது *(மேற்படி : 181).*

கயிலாய வன்னியனின் பின்னர் அடங்காப்பற்றில் தோன்றிய இன்னொரு தலைவனாகப் பண்டார வன்னியன் காணப்படுகிறான்.அவன் வன்னி மண்ணின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயரை இறுதிவரை



பண்டாரவன்னியன் நினைவுக்கல்



பண்டாரவன்னியன் சிலை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0162.jpg

எதிர்த்துப் போரிட்டதால் வரலாற்றில் வன்னியின் மைந்தன் எனவும் அழைக்கப்படுகிறான். இவன் 21வது வயதில் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன் என்ற பெயருடன் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஆட்சிபுரிந்தான். இவனது ஆதிக்கம் முல்லைத்தீவிலிருந்து பற்றாப்பளை வரை 2000 சதுரமைல் பரப்பைக் கொண்டிருந்தது. தனது அரசின் அமைச்சராக தனது தம்பி கயிலாயவன்னியனையும், படைத்தளபதியாக தனது இளைய தம்பியான பெரியமைனரையும் நியமித்திருந்தான். பண்டாரவன்னியனின் சகோதரிகளான நல்லநாச்சான் வன்னிச்சி, உமாநாச்சான் வன்னிச்சி ஆகியோர் அன்னியருக்கு எதிரான படை நடவடிக்கைகளில் முக்கிய பங்கெடுத்தனர்.

வன்னியில் கிடைத்த சாயவேரை, யானை வர்த்தகத்தை தமது கட்பாட்டுக்குள் கொண்டு வருவது அல்லது அவற்றை வன்னி அரசர்களிடம் இருந்து திறையாகப் பெறுவது ஐரோப்பிய ஆட்சியாளரின் நோக்கமாக இருந்தது. ஆனால் பண்டாரவன்னியன் ஒல்லாந்தருக்கும், ஆங்கிலேயருக்கும் திறைகொடுக்க மறுத்ததுடன் அவர்களுக்கு எதிராகவும் போரிட்டான். இதனால் பண்டாரவன்னியனின் வாழ்க்கை வரலாறு, போராட்டம் நிறைந்ததாகவே இருந்தது. இவன் வன்னியில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் பரவாமல் தடுக்க இறுதிவரை போரிட்டான். அதேவேளை ஈழத்தில் இருந்து அவர்களை வெளியேற்ற போரிட்ட கண்டி மன்னனுக்கும் படை உதவியும் அளித்தான். 1803 இல் கண்டிக்கு எதிரான ஆங்கிலேயரின் படையெடுப்பு தோல்வியில் முடிந்தமைக்கு பண்டாரவன்னியனின் படை உதவிகளும் ஒரு காரணமாகும். இப்படையெடுப்பு நிகழ்ந்த காலத்தில் தான் பண்டாரவன்னியன் தனது படையணிகளை மூன்று வழிகளாக அனுப்பி ஆங்கிலப் படைவீரர் தங்கியிருந்த ஆனையிறவு, இயக்கச்சி, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் இருந்த கோட்டைகளைக் கைப்பற்றினான். ஆங்கிலப் படைவீரர்கள் பலர் கொல்லப்பட்டனர். பலபடைவீரர் யாழ்ப்பாணத்திற்கு தப்பியோடினர். இவ்விடங்களில் இருந்தும், முல்லைத்தீவு கோட்டை அரண்களில் இருந்தும் பல பீரங்கிகள் பண்டாரவன்னியன் படைவீரர்களால் கைப்பற்றப்பட்டன. இதனால் ஆங்கிலேயர் பெரும் தோல்வியைச் சந்தித்தனர்.



செட்டிக்குளம் கப்பாச்சி சிவன் ஆலயம்



வெளவாளைக் கேணி

இத்தோல்வியைத் தொடர்ந்து ஆங்கிலேயர் திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து படைவீரர்களை வரவழைத்து போருக்கு தயாரானார்கள். இந்நிலையில் 1803 இல் முல்லைத்தீவில் நடந்த கடும் சமரில் பண்டாரவன்னியனின் பல படைவீரர்களும் முக்கிய தளபதிகளும் கொல்லப்பட்டனர். ஆனால் மனம் தளராத பண்டாரவன்னியன் ஏழு ஆண்டுகள் பனங்காமத்தில் தங்கியிருந்து மீண்டும் போரிடத் தயாரானான். ஆயினும் 1811 இல் உடையாவூரில் நடந்த சமரில் பண்டாரவன்னியன் விழுப்புண்பட்டு இறந்தான். பண்டாரவன்னியனின் இறப்பை பெரும் வெற்றியாகக்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0163.jpg

கொண்டாடிய பிரித்தானியப் படைத்தளபதி கப்டன் வொன்றிபேக் அதன் நினைவாக கற்சிலைமடுவில் கல்வெட்டு ஒன்றை நாட்டினான். பண்டாரவன்னியனின் போராட்ட வரலாறும், விடுதலை உணர்வும் தமிழ் மக்களது வரலாற்றுடன் இரண்டறக் கலந்து காணப்படுகின்றன. அவனை மையப்படுத்தி எழுந்த இலக்கியங்கள், நாட்டார்பாடல்கள், நாடகங்கள், மரபுக்கதைகள் என்பன தமிழகத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்ட வீரபாண்டிய கட்டப்பொம்மன் வரலாற்றை எமக்கு நினைவுபடுத்துவதாக உள்ளன.

வடமாகாணத்து வன்னிமைகளுக்கு 500 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு உண்டு. இவை 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை யாழ்ப்பாண இராசதானிக்கும் பின்னர் யாழ்ப்பாணத்தை நிர்வகித்த ஐரோப்பியரது நிர்வாக மேலாதிக்கத்திற்கும் உட்பட்டவையாக இருந்தாலும், வன்னிமைகளின் நீதி, நிர்வாகப் பொறுப்புக்கள் அதன் தலைவர்களிடமே காணப்பட்டன. வன்னியர்கள் தங்கள் பதவிகளையும், நிலவுரிமையையும் பரம்பரை வழியாகப் பெற்றுக்கொண்டனர். வன்னிச் சிற்றரசர்களில் பலர் உறவினர்களாக இருந்ததுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டுக்கு மேற்பட்ட வன்னிமைகளின் ஆட்சியாளர்களாகவும் இருந்துள்ளனர். வன்னி அரச முறையில் வலுப்பெற்று வந்த இம்மரபை மாற்றியமைக்கும் வலுவான நிலையில் யாழ்ப்பாணத்தை நிர்வகித்த ஐரோப்பிய அதிகாரிகளும் இருக்கவில்லை. இதனால் நிர்வாகப் பொறுப்புக்கள் அனைத்தையும் வழமைபோல் வன்னித்தலைவர்களிடம் வழங்கிய ஐரோப்பிய நிர்வாகம் அவர்களிடம் யானைகளையும், பிறபொருட்களையும் திறையாகப் பெறுவதிலே அக்கறை காட்டினர். இவ்வாறான அரசாட்சி முறையால் வன்னி அரசர்கள் தமது ஆள்புலத்தின் பொருளாதார, பண்பாட்டுத்துறைகளில் பல பணிகளைச் செய்வதற்கான வாய்ப்பை பெற்றனர். 19 ஆம் நூற்றாண்டில் வன்னி பற்றி ஆய்வை நடாத்திய லூயிஸ் போன்ற ஐரோப்பிய அதிகாரிகள் வன்னியில் அரசாட்சி புரிந்த சிற்றரசர்களின் அரண்மனைகள், வாழ்விடங்கள் மற்றும் ஆலயங்கள், குளங்கள், அணைக்கட்டுக்கள், கால்வாய்கள் என்பவற்றின் அழிபாடுகளைக் கண்டதாகக் கூறுகின்றனர். அவற்றுள் வன்னியரசர்களின் வரலாற்றுப் பணிகளையும், சாதனைகளையும் வெளிப்படுத்தும் தொல்லியல், வரலாற்று ஆதாரங்களும் உள்ளடங்கியிருக்கலாம். ஆயினும், அவற்றைக் கண்டறியும் நோக்கில் இதுவரை முழுமையான ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை. இருப்பினும் அண்மைக்காலங்களில் வன்னிப் பெருநிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் வன்னிச் சிற்றரசர்களுடன் தொடர்புபடுத்தக்கூடிய சில ஆதாரங்கள் கிடைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் புளியங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு, செட்டிக்குளம், பனங்காமம் முதலான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆலய அழிபாடுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பெரியபுளியங்குளத்தில் காணப்பட்ட தமிழ்க் கல்வெட்டு ஐந்து வரிகளில் எழுதப்பட்ட கல்வெட்டின் ஒரு பகுதியாகும். அவற்றைத் தமிழகக் கல்வெட்டு அறிஞர் பேராசிரியர் சுப்பராயலு பின்வருமாறு வாசிக்கிறார்.

1. .....
2. ஆஞ்ஞை மூந்று த
3. (ன்ம) ஆஞ்ஞை வல்ல-
4. வரையன் சத்தியம் இ-
5. து அழிப்பார் நர(கம்) புகுவார்.



புளியங்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட
13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0164.jpg

இக்கல்வெட்டை எழுதியதன் நோக்கம் ஒரு ஆலயத்திற்கு கொடுக்கப்பட்ட தானத்தை அல்லது அரசனால் அல்லது ஒரு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறி நடப்போர் அழிந்து நரகத்திற்கு போவது நிச்சயம் என்ற செய்தியைச் சொல்வதாகும். இதில் வரும் மூந்துத(ன்ம) என்ற சொல் 12-13ஆம் நூற்றாண்டில் வன்னியில் செயற்பட்ட தமிழ் வணிக கணங்களை அல்லது வேளைக்காரர், இடங்கை, வலங்கை ஆகிய தமிழ்ப் படை அமைப்பைக் குறிக்கலாம். வல்லவராயன் என்ற பெயர் வன்னியில் ஆட்சி புரிந்த சிற்றரசனை அல்லது வினாயகக் (கணபதி) கடவுளைக் குறித்திருக்கலாம். இக்கல்வெட்டின் எஞ்சிய பாகம் எதிர்காலத்தில் கிடைக்குமாயின் இவ்வாணை பிறப்பித்த வன்னி அரசன் அல்லது மத நிறுவனம் பற்றியும், அதில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் மற்றும் பிற வரலாற்றுச் செய்திகளை முழுமையாக அறிந்து கொள்ளமுடியும். எவ்வாறாயினும் இக்கல்வெட்டு 13 ஆம் நூற்றாண்டில் வன்னியில் ஆணை பிறப்பிக்கும் நிலையில் அதிகாரமிக்க அரசமைப்பு அல்லது மத நிறுவனம் ஒன்று இருந்ததற்கு சிறந்த சான்றாகும்.

செட்டிக்குளத்தில் தற்போது மக்கள் குடியிருப்புக்கள் அற்ற காட்டுப்பகுதியில் அழிவடைந்து காணப்படும் சந்திரசேகரர் ஆலயத்தை செட்டிக்குளப் பற்றில் ஆட்சி செய்த சிற்றரசர்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு. இவ்வாலயம் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் கப்பாச்சி என்ற காட்டுப்பிரதேசத்தில் ஆற்றின் கரையோராக அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் தொன்மை, சிறப்புப் பற்றி மக்களிடையே பல ஐதீகங்களும், வாய்மொழிச் செய்திகளும் காணப்படுகின்றன. அவற்றை ஆதாரங்களாகக் கொண்டு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வாலயத்தின் அழிபாடுகளை கண்டுகொண்ட ஜே.பி லூயிஸ் என்ற அரச அதிகாரி இவ்வாலயம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: "கலியுககாலம் 3348இல் வீரநபராயணன் செட்டி என்பவன் அடங்காப்பற்றுக்கு வந்து செட்டிக்குளத்தில் குடியேறி வெளவாலை எனும் கேணியை வெட்டிக்கட்டி சந்திரசேகர சுவாமிக்கு திருக்கோயில் ஒன்றைக் கட்டினான். கோவிலுக்கு அண்மையில் உள்ள ஒரு கிணற்றில் கோவில் செல்வத்தைப் புதைத்தார். இச்செல்வம் அனைத்தையும் காவுவதற்கு அறுபது யானைகள் தேவைப்பட்டன. இப்புதையலைக் காக்க சடாமுனி எனும் பிசாசையும் விட்டுச் சென்றார். இதன் பின்னர் வீரநாராயண செட்டி இறந்தார்".



பணங்காமம் சிவன் ஆலயம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0165.jpg

இக்கூற்றில் நம்பமுடியாத மிகையான செய்திகள் காணப்பட்டாலும் இவ்வாலயம் பழமையானதென்பதற்கு பல ஆண்டுகளாக மக்கள் வாழாத காட்டுப்பகுதியில் அமைந்திருப்பதும், பழமையான ஆலயங்களைப் போல் கருங்கல், செங்கட்டிகள் கொண்டு கட்டப்பட்டிருப்பதும் சான்றாக உள்ளன. அத்துடன் யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் காலத்தால் முந்திய வையாபாடலிலும் இவ்வாலயம் பற்றிக் கூறப்பட்டிருப்பது இதன் பழமைக்கு மேலும் ஒரு சான்றாகும். அண்மையில் இவ்வாலயம் அமைந்த சுற்றாடலில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் இற்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை அக்காலப்பகுதியில் இருந்து இப்பிராந்தியத்தில் செறிவான குடியிருப்புக்கள் இருந்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வரலாற்றுப் பின்புலம்தான் இடைக்காலத்தில் செட்டிக்குளத்தில் வன்னிச் சிற்றரசு தோன்றக் காரணமாகும். இவ்வாலயத்தின் பழமை தொடர்பான ஆதாரங்களும் 17 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருப்பதால் இவ்வாலயத்தை செட்டிக்குள வன்னி அரசுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பது பொருத்தமாகும்.

வன்னிச் சிற்றரசர்களது காலத்துடன் தொடர்புபடுத்தக் கூடிய இன்னொரு ஆலயமாக பனங்காமச் சிவன் ஆலயம் காணப்படுகிறது. இவ்வாலயம் மாந்தை கிழக்கில் மல்லாவி பிரதேச சபைக்கு உட்பட்ட மூன்று குறிப்பில் உள்ள நட்டன்கண்டிற்கு தெற்கே 2கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. தற்போது இங்கு காணப்படும் ஆலயம் 1950 களில் கட்டப்பட்ட ஒன்றாகும். ஆனால் இவ்வாலயம் அமையப்பெற்ற இடத்தில் புராதன ஆலயமொன்றிருந்ததை ஆலயச் சுற்றாடலிலும், அயலில் உள்ள காட்டுப்பகுதியிலும் காணப்படும் புராதன கட்டிட அழிபாடுகள் உறுதிசெய்கின்றன. மேலும் புராதன ஆலயத்தில் வைத்து வழிபடப்பட்ட சிவலிங்கங்களே தற்போதைய ஆலயத்தின் பிரதான விக்கிரகங்களாகவும் காணப்படுகின்றன. ஆலயச் சுற்றாடலில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் ஆதாரங்கள் இவ்வாலயம் அமையப்பெற்றுள்ள பனங்காமத்திற்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதை உறுதி செய்கின்றன. 1982 இல் கலாநிதி இரகுபதி இலங்கைத் தொல்லியற் திணைக்களத்துடன் இணைந்து பனங்காமத்தில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வில் கிறிஸ்தவ சகாப்த காலத்தை அண்டிய புராதன குடியிருப்புக்கள் இருந்ததற்கான பலவகை மட்பாண்டங்களைக் கண்டுபிடித்துள்ளார். அவற்றை மேலும் உறுதிப்படுத்தும் சான்றுகளை அண்மையில் எமது களவாய்வின் போதும் அடையாளம் காணமுடிந்தது.

Tamileelam Archive





பனங்காமம் சிவன் ஆலயத்தின் புராதன சிவலிங்கங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0166.jpg

இங்கிருந்த புராதன ஆலயம் எப்போது கட்டப்பட்டதென்பதை உறுதிப்படுத்தக் கூடிய நம்பகரமான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் அழிவடைந்த ஆலயக் கட்டிடச் சிதைவுகள், சிலைகள், சிற்பங்கள் என்பவற்றின் கலைமரபுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயம் மிகப்புராதன காலத்திற்குரியதெனக் கூறமுடிகிறது. தற்போதைய ஆலயம் மூன்று காலகட்ட கலைமரபுக்குரிய கட்டிடப்பாகங்களைக் கொண்டு கட்டப்பட்டதாகக் காணப்படுகிறது. தற்போதைய ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஆவுடையுடன் கூடிய மூன்று சிவலிங்கங்களும் இவ்விடத்தில் இருந்த புராதன ஆலயத்திற்கு உரியதாகும். ஆனால் புராதன ஆலயத்தில் ஐந்து சிவலிங்கங்கள் இருந்துள்ளன. அதனால் அவ்வாலயம் பஞ்சலிங்கேஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வாலயத்திற்குரிய ஐந்து சிவலிங்கங்களுள் ஒன்று இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் என்ற இடத்தில் அமைக்கப்பட்ட ஆலயம் ஒன்றில் வைத்து வழிபடப்பட்டு வருகிறது. இன்னொரு சிவலிங்கம் உடைந்த நிலையில் காட்டுப்பகுதியில் காணப்படுகிறது. தற்போதைய ஆலயத்தில் உள்ள மூன்று சிவலிங்கங்களுள் மிகப்பெரிய சிவலிங்கம் பிரதான தெய்வமாக கர்ப்பக்கிருகத்தில் வைக்கப்பட்டுள்ளது. மற்றைய இரு சிவலிங்கங்களும் புராதன ஆலயத்திற்குரிய விநாயகர் சிற்பத்துடன் தற்போதைய ஆலயத்தின் முன்மண்டபத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள வழிபாட்டு இடத்தில் வைக்கப்பட்டுள்ளன.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புராதன ஆலயத்துக்குரிய சிற்பங்கள்

கர்ப்பக்கிருகத்தில் உள்ள கருங்கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ள ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் ஏறத்தாழ 114செ.மீ உயரத்தைக் கொண்டது. ஆவுடைக்கு வெளியே காணப்படும் இலிங்கத்தின் உயரம் 43செ.மீற்றராகும். சிவலிங்கத்தின் விட்டம் 2.8 செ.மீற்றராகும். வட்டவடிவில் அமைந்த ஆவுடையின் உயரம் 71செ.மீற்றராகும். அதன் சுற்றளவு 90 செ.மீற்றராகும். இச்சிவலிங்கம், ஆவுடை என்பவற்றின் உயரம், வடிவமைப்பு, கலைமரபு என்பன மாதோட்டம், பாலியாறு, உருத்திரபுரம் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கங்களைப் பெரிதும் ஒத்ததாகக் காணப்படுகிறது. இவ்வாலயத்தில் உள்ள ஏனைய இரு சிவலிங்கங்களும் இவற்றை ஒத்த தன்மையையே கொண்டுள்ளன. தமிழகத்தில் இத்தகைய வடிவில் உள்ள சிவலிங்கம் பெரும்பாலும் பல்லவர் அல்லது முற்பட்ட சோழர் காலத்திற்குரியதாகக் காணப்படுகின்றன. இதனால் இங்கிருந்த புராதன ஆலயத்தின் தோற்ற காலத்தை கி.பி.8ஆம் 10ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலமாக எடுத்துக் கொள்ள இடமுண்டு.

ஆயினும் தற்போதைய ஆலயத்தின் கருப்பக்கிருகம் வாசல்பகுதியில் வைத்துக் கட்டப்பட்டுள்ள

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0167.jpg

புராதன ஆலயத்திற்குரிய புடைப்புச் சிற்பங்கள், ஆலயச் சுற்றாடலில் காணப்படும் கபோதங்கள், கொடுங்கைகள், யாளிமட்டங்கள், விநாயகர் சிற்பம் என்பன சிவலிங்கங்களின் காலத்தைவிட காலத்தால் சற்றுப்பிற்பட்டதாகக் காணப்படுகின்றன. கலாநிதி இரகுபதி இவற்றின் கலைமரபுகள் கி.பி.13-14 நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதுகிறார். அடங்காப்பற்று வன்னிமைகளுள் பனங்காமம் பொருள் வளமும், பரந்த நிலப்பரப்பையும் கொண்டிருந்த பிரதேசமாகும். இந்நிலப்பரப்பில் ஆட்சிபுரிந்த வன்னியரசர்கள் 19 ஆம் நூற்றாண்டுவரை பல்வேறு காலகட்டங்களில் ஐரோப்பியரின் ஆணைகளுக்கு கட்டுப்படாமல், திறைசெலுத்தாது ஒரு சுதந்திர அரசனாகவே ஆட்சி புரிந்துள்ளனர். இங்குள்ள ஆலயம் பனங்காமத்து வன்னியரசர்களின் ஆட்சிக் காலத்திலும் இருந்துள்ளதென்பதில் ஐயமில்லை. இதனால் இவ்வாலயம் இவர்களின் ஆட்சியில் தோன்றியிருக்கலாம் அல்லது அவர்களின் ஆதரவைப் பெற்று மேலும் வளர்ந்திருக்கலாம் எனக் கூறமுடியும். ■

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

6

யாழ்ப்பாண இராச்சியம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





















New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0169.jpg

இயல் ஆறு

யாழ்ப்பாண இராச்சியம்

அறிமுகம்

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை வடஇலங்கையில் ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு பலமான அரசாக யாழ்ப்பாண அரசு காணப்பட்டது. இதன் தலைநகரான நல்லூர், வரலாற்றுப் பழமைவாய்ந்த கொழும்புத்துறை, பண்ணைத்துறை என்பவற்றை எல்லைகளாகக் கொண்ட மூன்று மைல் சுற்றுவட்டத்தை உள்ளடக்கியிருந்திருக்கலாம் என்பதற்கு இவ்வரசு தொடர்பாக எழுந்த தமிழ் இலக்கியங்களிலும், போர்த்துக்கேய ஆவணங்களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இத்தலைநகர் பற்றி யாழ்ப்பாண வைபவமாலையில் பின்வருமாறு கூறப்படுகிறது (குலசபாநாயகம் 1995: 34-44):



நல்லூர் இராசதானி நினைவுச் சின்னங்கள்



சங்கிலியன் தோரண வாசல்



சங்கிலித்தோப்பு



யமுனா ஏரி

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0170.jpg

''நல்லூர்ப் பகுதியிலே அரசிருக்கையை ஸ்தாபிக்க கருதிச் சோதிடர்கள் தேர்ந்து சொல்லிய நன்முகூர்த்தத்தில் அஸ்திவாரம்போட்டு நாலு மதிலும் எழுப்பி, வாசலுக்கு ஒழுங்காய் விடுவித்து, மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், பூங்காவும், பூங்காவின் நடுவே ஸநான மண்டபமும் முப்படைக்கூடமும் உண்டாக்கி, அக்காத்தில் யமுனா நதி தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு, நீதிமண்டபம், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, சேனா வீரரிப்பிடம் முதலிய அனைத்தும் கட்டுவித்து, தன்னுடன் வந்த காசியிற் பிரமகுல திலகரான கெங்காதர ஐயரும், அன்னைபூரணி அம்மாள் என்னும் அவர் பத்தினியும் வாசஞ் செய்வதற்கு அக்கிரகாரமும் உண்டாக்கிக் கீழ்த்திசைக்குப் பாதுகாப்பாக வெயிலுவந்த பிள்ளையார் கோயிலையும், மேற்றிசைக்கு வீரகாளியம்மன் கோவிலையும், வடதிசைக்கு சட்டநாதர் கோயில், தையல் நாயகியம்மன் கோவில், சாலை விநாயகர் கோவிலையுங் கட்டுவித்துத் திலகவதியார் என்னும் பத்தியாருடனே பிரவேசஞ் செய்து வாழ்ந்திருந்தான்''

இக்கூற்றில் மிகைப்படுத்தப்பட்ட அம்சங்கள் சில காணப்பட்டாலும் அவற்றில் பல உண்மைகளும் உண்டு என்பதை கோகிலசந்தேஸய என்ற சிங்கள இலக்கியமும், போர்த்துக்கேய ஆவணங்களும் உறுதிசெய்கின்றன. இந்நல்லூரைத் தலைநகராகக் கொண்டே ஏறத்தாழ 350 ஆண்டுகள் தமிழ் மன்னர்கள் நிர்வாகம் நடாத்தினர். இதனால் இத்தலைநகர் நல்லூர் இராசதானி எனவும், யாழ்ப்பாண இராச்சியம் எனவும், இதிலிருந்து ஆட்சி செய்த மன்னர்களின் பெயரால் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு எனவும் அழைக்கப்பட்டது. யாழ்ப்பாண அரசை 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருப்புகழ் மற்றும் பாண்டியக் கல்வெட்டில் யாழ்பாணயன் பட்டினம் எனவும், சமகாலச் சிங்கள இலக்கியங்களில் யாப்பபட்டுன எனவும், போர்த்துக்கேயர் ஆவணங்களில் யவ்னா எனவும், சமகாலத் தமிழகக் கல்வெட்டுக்களில் யாழ்ப்பாண தேசம் எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்வாதாரங்கள் யாழ்ப்பாண அரசின் ஆதிக்கம் நிலவிய எல்லைகளுக்கு அப்பால் உள்ள நாடுகளாலும், அரசுகளாலும் யாழ்ப்பாணம் நன்கு அறிமுகமாக இருந்ததைக் காட்டுகின்றன. யாழ்ப்பாண அரசு தொடர்பாக பிற்காலத்தில் எழுந்த யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, வையாபாடல் முதலான தமிழ் நூல்களில் மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் காணப்பட்டாலும் யாழ்ப்பாண அரசின் சமகாலத்தில் எழுந்த போர்த்துக்கேய ஆவணங்களும், சிங்கள வரலாற்று நூல்களான ராஜவலிய, அளகோஸ்வரயுத்த, நிகாயசங்கிரகய என்பனவும், கோகிலசந்தேஸய, பறவிசந்தேஸய, பரகும்பாளமித போன்ற இலக்கியங்களும், இவற்றின் சமகாலத்தில் வெளியிடப்பட்ட தமிழ், சிங்களக், கல்வெட்டுக்களும், யாழ்ப்பாண இராசதானிகால மன்னர்களால் வெளியிடப்பட்ட 'சேது' மொழி பொறித்த பலவகை நாணயங்களும் ஓரளவுக்கு உதவுகின்றன.

ஆதிக்கால எல்லைகள்

இவ்வரசின்கீழ் கீழ் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், பச்சிலைப்பள்ளி ஆகிய மாவட்டங்களும், மன்னார் மற்றும் பதினேழு தீவுகளும், வன்னிமைகளான பனங்காமம், முள்ளியவளை, தென்னமரவாடி, என்பனவும் உள்ளடங்கியிருந்தன. சில காலங்களில் இதன் ஆதிக்கம் கிழக்கிலங்கையிலும், தென்னிலங்கையிலும் பரவியிருந்ததாகத் தெரிகிறது. இந்த இடத்தில் 1658இல் ஒல்லாந்து தேசாதிபதியாக இருந்த பான்கூன்ஸ் எழுதிய ஆதாரபூர்வமான அறிக்கையில் யாழ்ப்பாண அரசின் ஆதிக்க எல்லைகள் பற்றிக் கூறிய குறிப்பை நோக்கலாம்:

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0171.jpg

"இந்த நான்கு மாகாணங்களும், 13 தீவுகளும் யாழ்ப்பாணப் பட்டினம் எனச் சொல்லப்பட்டன. வன்னியரின் ஆட்சியின் கீழமைந்த வன்னி என்னும் பகுதியும் இதனைச் சேர்ந்ததாகும். புறச்சமயிகளான யாழ்ப்பாணத்து அரசர் அந்தப் பெரும் நிலப்பகுதியைக் கைப்பற்றி அங்கு தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டினார்கள். அந்த நிலப்பகுதி மேற்கே கற்பிட்டி, மாதோட்டம் ஆகிய தீவுகளிலே பரந்துள்ளது. கிழக்கிலே அது திருகோணமலைப் பகுதியை எல்லையாகக் கொண்டுள்ளது. 50 கிராமங்களை கொண்டுள்ள தென்னமரவாடிப் பற்று, 100 கிராமங்களை கொண்டுள்ள கரிக்கட்டுமுலைப் பற்று, 90 கிராமங்களை கொண்டுள்ள முள்ளியவளைப்பற்று, 3ளி கிராமங்கள் அமைந்திருக்கும் மேல்பத்து, 70 ஊர்களைக் கொண்ட கருநாவல் பற்று முதலிய மாகாணங்கள் இந்த பெருநிலப்பகுதியில் உள்ளன. அவற்றுக்கப்பால் இன்னொரு மாவட்டத்திற்குரிய மாதோட்டம் வில்லிப்பற்று, பொன்னேரிப்பற்று என்ற பிரிவுகளும் உண்டு. அவற்றிலே 12 கிராமங்கள் உள்ளன. யாழ்ப்பாணப் பட்டினத்தைப் போல் இவையும், செட்டிக்குளத்தின் ஒடு பகுதியும் கொம்பஞ்ஞயலின் ஆதிக்கத்தின் கீழ் அமைந்துள்ளன. ஆறு மாகாணங்களும், முன்னூறுக்கு குறையாத கிராமங்களும் வன்னியில் உள்ளன. இதுவும் யாழ்ப்பாணப் பட்டினத்திற்குரியனவாகிய செட்டிக்குளம், பொன்னேரி, மேல்பற்று ஆகியனவும் ஒட்டுமொத்தமாக 80,000 ஜேர்மன் மைல் சுற்றளவு கொண்டனவாகும். இந்தப் பகுதியானது திருகோணமலையிலிருந்து கற்பிட்டிவரையான ஒரு நேர்கோட்டின் மூலம் இலங்கையின் ஏனைய பகுதியிலிருந்து பிரிக்கப்படுகிறது. தீவுகள் நீங்கலாகவுள்ள யாழ்ப்பாணப்பட்டினத்தின் சுற்றளவு 100,000 ஜேர்மன் சுற்றளவாகும். இந்த இராச்சியம் 42 வருடங்களுக்கு மேலாகச் சங்கிலி என்ற கிறிஸ்தவமல்லாத சமயம் ஒன்றைச் சேர்ந்த அரசனால் ஆளப்பட்டது. அவன் ஒரு புராதனமானதும் இறைமை கொண்டதுமான அரசவம்சத்தைச் சேர்ந்தவன். அவனுடைய வம்ச வழியினரையும், இராச்சியத்தையும் போர்த்துக்கேயர் நிர்மூலம் செய்துவிட்டனர்" *(பத்மநாதன் 2011 103-104, Rycklof Wan Goens 1909:84-86).*

Tamileelam Archive

14 ஆம் நூற்றாண்டுக்குரிய நம்பொத்த என்ற சிங்கள நூல் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் அநுராதபுரத்திற்கு வடக்கே திருகோணமலை உள்ளிட்ட பிராந்தியத்தை தெமளபட்டன (தமிழ்ப் பட்டினம்) எனக் கூறுகிறது. அதற்குள் நாகர்கோவில், கந்தரோடை, தெல்லிப்பளை, மல்லாகம், காரைதீவு, முள்ளியவளை, திருகோணமலை, பெரியகுளம், இலந்தகொடை முதலான ஊர்கள் உள்ளடங்கியிருந்ததாக கூறப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசைத் தோற்றுவித்தவர்கள்

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வடஇலங்கை மீது படையெடுத்த பாண்டியரின் படைத் தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகளே நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர் என்பது அறிஞர்களின் பொதுவான கருத்தாகும். பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பொலநறுவையைக் கைப்பற்றிய கலிங்கமாகன் தமிழ், சோழ, கேரளப்படை வீரர்களின் உதவியுடன் பௌத்த, சிங்கள மக்களுக்கு எதிராக ஆட்சி நடாத்தினான். இதனால் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்கள இராசதானியும் தெற்கு நோக்கி நகர்ந்த போது வடஇலங்கையில் தமிழர்களுக்கு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0172.jpg

சார்பான அரசு கலிங்கமாகன், சாவகன் காலத்தில் தோன்றியதாகப் பாளி. சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியாமலையில் கண்டுபிடித்த 1262 ஆம் ஆண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டு சிங்கள அமைச்சன் ஒருவன் உதவி கேட்டதன் பேரில் பாண்டியப்படை வடஇலங்கை மீது படையெடுத்து அங்கு ஆட்சியில் இருந்த சாவக மன்னனைக் கொன்று அவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்தியதாகக் கூறுகிறது. காலப்போக்கில் தமிழகத்தில் ஏற்பட்ட இஸ்லாமியரின் ஆதிக்கத்தால் பாண்டிய அரசு பலவீனமடைந்த போது பாண்டியரின் படைத் தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்திகள் வடஇலங்கையில் ஆட்சி செய்துகொண்டிருந்த சாவகனின் மகனைப் வெற்றி கொண்டோ அல்லது வேறு வழிகளிலோ அகற்றி நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர் எனக் கூறப்படுகிறது. இதற்குச் சான்றாக யாழ்ப்பாண அரசின் தலைநகர் நல்லூர் என்ற பெயரைப் பெற்றதற்கு அது பாண்டிநாட்டில் பெரிதும் புழக்கத்தில் இருந்ததையும், யாழ்ப்பாண அரசால் வெளியிடப்பட்ட நாணயங்களில் நந்தி உருவமும், அதற்கு கீழே சேது என்ற மங்கள மொழியும் பொறிக்கப்பட்டமைக்கு ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழகத்தில் சேது தலத்துடன் கொண்டிருந்த தொடர்பே காரணம் எனவும் கூறப்படுகின்றன *(Pathmanathan 1978, இந்திரபால 1972)*. யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு தோன்றுவதற்கும், அதன் ஆரம்பகால அரசர்களாக ஆரியச்சக்கரவர்த்திகள் இருந்தமைக்கு பாண்டியரின் செல்வாக்கு காரணம் என்பதில் ஐயமில்லை. ஆனால் நாணயங்களில் நந்தி அரச இலட்சனையாக இடம்பெறுவதற்கும், தலைநகருக்கு நல்லூர் என்ற பெயர் ஏற்படவும் பாண்டி நாட்டுத் தொடர்பே காரணம் எனக் கூறப்படுவது மேலும் ஆராய்ந்து பார்க்கப்படவேண்டும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



நல்லூர் கந்தசாமி கோயிலின் ஆரம்பகாலத் தோற்றம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0173.jpg

பாண்டியர் ஒரு அரசை அல்லது இன்னொரு நாட்டை வெற்றி கொண்டு அங்கு தமது மேலாதிக்கத்தைச் செலுத்தும் போது அந்த வெற்றியை உறுதி செய்ய தமது அரச இலட்சனையான மீனைக் கல்வெட்டுக்களிலும், நாணயங்களிலும் பொறித்துள்ளனர். வடஇலங்கையில் சாவகனை வெற்றி கொண்ட பாண்டியர் அந்த வெற்றியின் நினைவாக தமது அரச இலட்சனையான இரு மீன் சின்னத்தையே சாவகனது கொடிகளில் பொறித்ததாக அவர்களது குடுமியாமலைக் கல்வெட்டுக் கூறுகின்றது (Puthukoddai inscriptions 236, No 366). இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் திருகோணமலைக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட பாண்டியரது கல்வெட்டிலும் இரு மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டலாம். யாழ்ப்பாண அரசு காலத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளால் வெளியிட்ட எந்த நாணயத்திலோ, கல்வெட்டுக்களிலோ, கொடிகளிலோ மீன் சாதாரண சின்னமாகவோ அல்லது அரச இலட்சனையாகவோ பயன்படுத்தியதற்கு எந்த ஆதாரமும் காணப்படவில்லை.

தமிழகத்தில் பாண்டியர், சோழர் வெளியிட்ட நாணயங்களில் நந்தி அரச இலட்சனையாகப் பயன்படுத்தப்படவில்லை. சில நாணயங்களில் அரச இலட்சனையுடன் நந்தி சாதாரண சின்னமாகப் பிற சின்னங்களில் ஒன்றாக பொறிக்கப்பட்டாலும் அதன் வடிவமைப்பு யாழ்ப்பாண இராசதானிகால நாணயங்களில் பொறிக்கப்பட்ட நந்தியின் வடிவமைப்பில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. ஆனால் இலங்கையில் பண்டுதொட்டு தமிழ்ச் சிற்றரசர்கள், அரசர்கள் வெளியிட்ட நாணயங்களில் எருது (நந்தி) முக்கிய சின்னமாக பொறிக்கப்பட்டுள்ளது (மூன்றாம் அத்தியாயத்தில் உள்ள நாணய அட்டவணையைப் பார்க்கவும்). நல்லூர் இராசதானிக்கு முற்பட்ட சாவகன் ஆட்சியில் வெளியிடப்பட்ட நாணயங்களில் நந்தியே அரச இலட்சனையாக இருந்துள்ளது. அதில் ஸ்ரீசாவகன் என்ற பெயர் பொறித்த நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள நந்தி யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளியிடப்பட்ட நாணயம் என மயங்குமளவிற்கு நெருங்கிய ஒற்றுமை கொண்டு காணப்படுகிறது. இவ்வொற்றுமையை நோக்கும் போது யாழ்ப்பாண அரசு கால நாணயங்களில் நந்தி அரச இலட்சனையாகப் பொறிக்கப்பட்டமைக்கு சாவகன் அரசு காலத் தொடர்பே காரணம் எனக் கூறமுடிகிறது.

Tamileelam Archive

அரச தலைநகருக்கு நல்லூர் என்ற பெயர் ஏற்பட ஆரியச் சக்கரவரத்திகளின் ஆட்சி காரணம் எனக் கூறப்படுகிறது. தமிழகத்தில் பண்டுதொட்டு பயன்பாட்டிலிருந்து வரும் முக்கிய இடப்பெயர்களில் ஒன்றாக நல்லூர் காணப்படுகிறது. பல்லவர், சோழர், பாண்டியர் ஆட்சியில் அரச தலைநகரங்கள், நிர்வாக மையங்கள், ஆலயங்கள் அமையப்பெற்ற இடங்கள் நல்லூர் என அழைக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. சோழர் ஆட்சியில் கோயிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட ஊர்களும், அரச திருமணங்களால் ஒன்றிணைக்கப்பட்ட நிலங்களும் நல்லூர் என்ற பெயரைப் பெற்றதற்கு கல்வெட்டுக்கள் சான்றாக உள்ளன. இலங்கையில் சோழரின் 77 ஆண்டுகால நேரடி ஆட்சியில் தமிழ்நாட்டில் வழக்கிலிருந்த நிர்வாகப்பிரிவுகள், ஆலயப்பெயர்கள் சமகாலத்தில் இலங்கையிலும் புழக்கத்தில் இருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு (பத்மநாதன் 2002).

நல்லூர் என்ற பெயர் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி பூநகரி, திருகோணமலை, களுத்துறை, குருநாகல் போன்ற மாவட்டங்களிலும் உள்ளன. இவற்றுள் சிலவற்றிற்கு தொன்மையான வரலாறு இருக்கலாம். அண்மையில் யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட சோழக்கல்வெட்டு கி.பி.11 ஆம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழன் நல்லூரில் இருந்த ஆலயம் ஒன்றிற்கு தானமளித்தது பற்றிக் கூறுகிறது. யாழ்ப்பாணக் கோட்டை அமைந்த இடம் சோழர் ஆட்சியில் முக்கிய வணிக மையமாக இருந்ததை அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகள் உறுதி செய்கின்றன. அங்கு கிடைத்துள்ள கருங்கல்லாலான ஆலய அழிபாடுகள் அங்கு சோழர்கால ஆலயங்களும் இருந்திருக்கலாம் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. இதனால் கல்வெட்டில் வரும் நல்லூர் என்ற இடம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0174.jpg

கோட்டையைக் குறித்திருக்கலாம் அல்லது யாழ்ப்பாண இராசதானியின் தலைநகராக பின்னர் மாறிய நல்லூரைக் குறித்திருக்கலாம். இந்நிலையில் நல்லூர் என்ற இடப்பெயரை ஆரியச்சக்கரவர்த்திகளுடன் மட்டும் தொடர்புபடுத்துவது பொருத்தமாகத் தெரியவில்லை. சோழரைப் போல் பாண்டியரும் தமது நாட்டில் பின்பற்றிய நிர்வாக முறையையே தமது ஆதிக்கத்திற்கு உட்பட்ட இடங்களில் தொடர்ந்ததற்கு கல்வெட்டுக்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாண அரசு கால நிர்வாக முறையை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் பத்மநாதன் அவ்வரசை நிர்வகித்த அதிகாரிகள் பலரின் பெயர்கள் தமிழகத்திலுள்ள பாண்டியர் கால நிர்வாக அதிகாரிகளின் பெயர்களை விட சோழர் மற்றும் பொலநறுவையில் ஆட்சிபுரிந்த நிர்வாகிகளின் பெயர்களை ஒத்ததெனக் குறிப்பிடுகிறார் *(Pathmanathan 1978)*.

மேற்கூறப்பட்ட வேறுபாடுகள் யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட முன்னரே இன்னொரு அரசின் ஆதிக்கம் இங்கிருந்துள்ளதைக் காட்டுகின்றன. அது சாவகன் ஆட்சியாக இருக்கலாம். அவன் ஆதிக்க மையங்கள் சில யாழ்ப்பாணத்தில் இருந்ததைப் பாளி, சிங்கள இலக்கியங்கள் உறுதிசெய்கின்றன. இவன் ஆதிக்க எல்லைகளை வரையறை செய்ய உதவும் பதின்நான்காம் நூற்றாண்டுக்குரிய திரிசிங்களகடயம் என்ற நூல் இந்த இராச்சியத்தின் எல்லையிலே தமிழ்ச் சாசனங்கள் பொறிக்கப்பட்ட தூண்கள் நாட்டப்பட்டிருந்ததாகக் கூறுகிறது. இன்று யாழ்ப்பாணத்தில் புழக்கத்தில் உள்ள சாவகச்சேரி (சவகிரி), சாவாங்கோட்டை, சாவகக்கோட்டை முதலான இடப்பெயர்கள் சாவகன் ஆட்சியிருந்ததன் அடையாளமாகக் கொள்ளத்தக்கது *(பத்மநாதன் 1992)*. இதனால் யாழ்ப்பாண அரசிற்கும் ஆரியச்சக்கரவர்த்திகளுக்கும் இடையிலான தொடர்பை ஒரு ஆட்சி மாற்றம், தலைநகர் மாற்றமாகவே கருத இடமுண்டு. இது யாழ்ப்பாண அரசின் தலைநகராக் கூறப்படும் சிங்கநகரும், நல்லூரும் சரிவர அடையாளம் காணப்படும் போது மேலும் துலக்கம் பெறலாம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தொடக்ககால மன்னர்கள்

ஆரியச்சக்கரவர்த்திகளே நல்லூரைத் தலைநகராகக் கொண்ட இராசதானியில் ஆட்சி செய்த முதல் மன்னர்கள் என்பது அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும். இதற்கு சூளவம்சத்தில் வரும் பின்வரும் கூற்று சான்றாகக் காட்டப்படுகிது:

> ''முன்பு பஞ்சமொன்று நிலவிய காலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் படையொன்றை அனுப்பிவைத்தார்கள். அவன் ஆரியனல்லானாயினும் மிகுந்த செல்வாக்கும், அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்துவிட்டு அரண்கள் பொருந்திய சுபபட்டனத்தினுள் அவன் புகுந்தான். அங்கிருந்த புனித தந்ததாதுவையும் விலைமதிக்கமுடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு திரும்பிச் சென்றான். அங்கு பாண்டியர்குலம் என்னுந் தாரைக்கொடியின் மொட்டினை மலர்விக்கின்ற உதயசூரியன் போல் விளங்கிய குலசேகர மன்னனிடம் சம்பபுத்தரின் தந்தாதுவை ஒப்படைத்தான்''
>
> (சூளவம்சம், 90: 43-47).

மாறவர்மன் குலசேகரன் காலத்தில் ஏற்பட்ட மேற்கூறப்பட்ட படையெடுப்பே ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி யாழ்ப்பாணத்தில் ஏற்படக் காரணம் எனக் கூறும் பேராசிரியர் பத்மநாதன் அது பற்றிப்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0175.jpg

பின்வருமாறு கூறுகிறார்:

> "ஆரியச்சுரவர்த்தி ஒருவன் யாழ்ப்பாணத்திலே அதிகாரம் பெற்றுக் காலப்போக்கில் அரசனாகிவிட்டான். மண்டலாதிபதியாக நியமனம் பெற்றிருந்த ஒருவன், தென்னிந்தியாவிலே பாண்டியரின் ஆதிக்கம் நிலைகுலைந்த சமயத்திலே, சுதந்திரமான இராச்சியமாக யாழ்ப்பாண தேசத்தைப் பிரகடனப்படுத்தியதோடு பரம்பரை முடியாட்சி முறையினை அங்கு உருவாக்கிக் கொண்டான். அவர்கள் இராமநாதபுரத்துச் செவ்விருக்கை நாட்டுச் சக்கரவர்த்தி நல்லூரை இருப்பிடமாகக் கொண்டவர்கள். அவர்களிற் சிலர் பாண்டியரின் அரண்மனை அதிகாரிகளாகவும், சேனாதிபதிகளாகவும கடமை புரிந்தவர்கள்"

எனக் குறிப்பிடுகிறார் (பத்மநாதன் 2011111).

மேற்கூறப்பட்டவற்றில் இருந்து யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்ட வரலாற்றை ஓரளவுக்கு ஊகிக்கமுடிகிறது. இம்மரபில் வந்தவர்கள் சிங்கையாரியன், கங்கைநாடான், சேதுகாவலன் என்ற சிறப்புப் பெயர்களையும், செகராசசேகரன், பரராசசேகரன் என்றும் சிங்காசனப் பெயர்களையும் பெற்றிருந்தனர். அவற்றுள் சிங்கையாரியன் எனும் பெயர் சிங்கை, ஆரியன் என்னுஞ் சொற்களின் கூட்டுமொழியாகும். சிங்கை என்பது சிங்கைநகர் என்னும் பெயரின் சுருக்கமாகும். அதேபோல் ஆரியன் என்பது ஆரியச்சக்கரவர்த்தி என்ற பெயரின் சுருக்கமாகும். சிங்கை நகரான இராசதானியிலிருந்து ஆட்சி புரிந்த மன்னர்களை சிங்கையாரியன் என்று குறிப்பிடலாயிற்று (பத்மநாதன் 2011; 105). ஆயினும் இப்பெயருக்குரிய எத்தனை மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர், எப்போது? எத்தனை ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர், என்ன சாதனைகளைச் செய்தார்கள் என்ற வரலாறு இற்றைவரை புகைபடர்ந்த நிலையிலேயே காணப்படுகிறது. யாழ்ப்பாண வைபவ மாலையில் விஜயகூழங்கை சக்கரவர்த்தி, குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன், குணபூஷண சிங்கையாரியன், ஜெயவீரசிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனகசஆரிய சிங்கையாரியன் முதலான மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவர்களுள் முதலில் குறிப்பிடப்படும் மன்னர்கள் சிலரது பெயர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளுக்கு முன்னர் ஆட்சியில் இருந்ததாகக் கருதப்படும் மன்னர்களது பெயர்களும் ஆரியச்சக்கரவர்த்திகளுடன் இணைக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் செண்பகப்பெருமாளின் ஆட்சி 1567இல் முடிவுற்றதன் பின்னர் இங்கு ஆட்சி புரிந்த முதலாம் சங்கிலி, காசிநயினார், பெரியபிள்ளை, புவிராஜபண்டாரம், எதிர்மன்னசிங்க குமாரன், இரண்டாம் சங்கிலி முதலான மன்னர்களது பெயர்களை நோக்கும் போது அவர்கள் சுதேசமன்னர்கள் என்பது தெரிகிறது.

கோட்டையின் மேலாதிக்கத்தின் கீழ் யாழ்ப்பாண இராச்சியம்

கி.பி.1450இல் செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதன் மூலம் 17 ஆண்டுகள் யாழ்ப்பாணம் கோட்டையின் மேலாதிக்கத்திற்குள் வந்தது. இப்படையெடுப்பை நடாத்திய மலையாள இளவரசன் எனக் கருதப்படும் செண்பகப்பெருமாள் எனப்படும் சபுமால்குமாரய கோட்டை மன்னன் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனாவான். கி.பி.1415 இல் கோட்டை மன்னனாகப் பதவி பெற்ற ஆறாம் பராக்கிரமபாகு பல நூற்றாண்டுகளாகப் பலவீனமுற்றிருந்த சிங்கள இராச்சியத்தை வலுப்பெறச் செய்ததன் மூலம் இலங்கை வரலாற்றில் முக்கிய மன்னர்களில் ஒருவனாகக் கருதப்படுகிறான்.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0176.jpg

இலங்கை முழுவதையும் தன் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரப் போராடிய இவன் கண்டி, யாழ்ப்பாணம், வன்னிச் சிற்றரசுகளை வெற்றி கொண்டதன் மூலம் பூஜாவலிய மற்றும் சமகால சிங்கள இலக்கியங்களில் தலைசிறந்த மன்னனாகப் புகழ்ந்துரைக்கப்படுகிறான். இவன் சார்பாக செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த போது ஆட்சியில் இருந்த கனகசூரிய சிங்கை ஆரியன் படையெடுப்பை எதிர்கொள்ள முடியாது மனைவி, மக்களுடன் தமிழகம் சென்றதாகக் கூறப்படுகிறது.

17ஆண்டுகள் ஸ்ரீபுவனேகபாகு என்ற பெயருடன் ஆட்சி செய்த செண்பகப்பெருமாளின் வரலாறு கைலாயமாலையில் தனிச் செய்யுளாகக் காணப்படுகிறது. இவன் ஆட்சியில் புதிய அரச மாளிகை, பிறகட்டிடங்கள், கோட்டை என்பன கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை செண்பகப் பெருமாள் தாபித்தான் என்பதற்கு அக்கோவிலில் இன்றுவரை ஓதப்பட்டு வரும் கட்டியம் ஆதாரமாக உள்ளது. யாழ்ப்பாணப் பிரதான வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட இவனது கல்வெட்டு யாழ்ப்பாண அரச வரலாற்றை அறிய ஓரளவு உதவுகிறது. கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு இறந்ததன் பின்னர் அங்கு ஏற்பட்ட அரசியல் குழப்பத்தால் செண்பகப்பெருமாள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்ய முடியவில்லை. இதனால் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது படைகளோடு கோட்டைக்குச் சென்று அங்கு 1467 இல் அதிகாரத்தைக் கைப்பற்றி ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு என்ற பெயருடன் ஆட்சி புரிந்தான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

செண்பகப்பெருமாள் கோட்டை திரும்பியதும் முன்னர் பதவியிழந்த கனகசூரிய சிங்கை ஆரியன் தமிழகப் படை உதவிகளுடன் ஆட்சிப்பொறுப்பை ஏற்றான். இவனின் பின்னர் அவன் மகன் பரராசசேகரன் நீண்டகாலம் ஆட்சி செய்தான். இப்பெயர் பிற்பட்ட மன்னர்களால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டதால் இது பட்டப்பெயராகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் இக்காலத்தில் இருந்து ஆரியச்சக்கரவர்த்திகளைக் குறிக்கும் அடைமொழி மறைந்து போவதால் ஆரியச்சக்கரவர்த்திகளது ஆட்சி முடிவுற்றதென்றே கூறலாம். இதன் பின்னர் முதலாம் சங்கிலியன், காசிநயினார், பெரியபிள்ளை, புவிராஜபண்டாரம், எதிர்மன்னசிங்க குமாரன் முதலான மன்னர்கள் ஆட்சி புரிந்த வரலாறு காணப்படுகிறது. அவர்களுள் முதலாம் சங்கிலி, இரண்டாம் சங்கிலி மன்னர்களது ஆட்சி யாழ்ப்பாண வரலாற்றில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. யாழ்ப்பாண அரசில் நீண்டகால ஆட்சியில் இருந்த முதலாம் சங்கிலி மன்னன் (கி.பி.1519-1561) காலத்தில்தான் போர்த்துக்கேயப் படையெடுப்புகளும், அவர்களது தலையீடுகளும் அதிகரித்துக் காணப்பட்டன.



யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட பராக்கிரமபாகுவின் தமிழ்க் கல்வெட்டு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0177.jpg







சங்கிலி மன்னன்

இந்துக்கள் கத்தோலிக்க மதத்திற்கு மாறத் தூண்டாதென்பதில் தீவிர அக்கறை காட்டிய இவன் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிட்ட சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னை, கோட்டை மன்னன் விதியபண்டாரன் ஆகியோருடன் இணைந்து போரிட்டான். ஆயினும் 15 ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் எழுச்சி பெற்ற விஜயநகரப் பேரரசும், நாயக்க அரசும் அடிக்கடி யாழ்ப்பாண அரசில் தலையீடு செய்ததால் காலப் போக்கில் யாழ்ப்பாண இராச்சியம் விஜயநகரப் பேரரசின் மேலாண்மையை ஏற்க நேர்ந்தது. இவ்வாறான சூழ்நிலையில் இரண்டாம் சங்கிலி மன்னன் ஆட்சியில் இருந்தபோது 1619 இல் அவன் போர்த்துக்கேயரால் சிறைபிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரின் நேரடி ஆதிக்கத்திற்குள் வந்தது.

சேது நாணயங்கள்

யாழ்ப்பாண அரசின் வரலாறு, பொருளாதாரம், சமயம், கலை, ஆதிக்கப்படர்ச்சி, அயல்நாட்டுத் தொடர்புகள் முதலியனவற்றை அறிந்து கொள்ள உதவும் நம்பகரமான ஆதாரங்களில் அக்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களுக்கு முக்கிய இடமுண்டு. இவை பல அளவுகளில், பல வடிவங்களில் வெளியிடப்பட்ட பொன், வெள்ளி, செப்பு நாணயங்களாகும். அவற்றுள் செப்பு நாணயங்கள் வகையிலும், தொகையிலும் அதிகமாகும். இவை இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவின் முக்கிய வரலாற்று மையங்களிலும், துறைமுகப் பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்நாணயங்களின் முன்பக்கத்தில் பெரும்பாலும் நிற்கும் அல்லது இருக்கும் நிலையில் மன்னன் உருவமும், அதன் இருமருங்கிலும் குத்துவிளக்கு, வச்சிராயுதம், அல்லது முத்தலைச் சூலம் என்பனவும் காணப்படுகின்றன.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0178.jpg



சேது நாணயங்கள்

சில நாணயங்களில் நிற்கும் நிலையிலுள்ள மன்னன் உருவத்திற்கு இடது பக்கத்தில் நந்தியும், இருக்கும் நிலையில் உள்ள மன்னனின் இடது பக்கத்தில் சேது என்ற மங்கல மொழியும் காணப்படும். அளவில் சிறிதான நாணயங்கள் சிலவற்றின் முன்பக்கத்தில் மன்னன் உருவத்திற்குப் பதிலாக விரிந்த தாமரை மலரும், அதன் நடுவே சேது என்ற மங்கல மொழியும் காணப்படும். நாணயத்தின் பின்பக்கத்தில் வலப்புறம் நோக்கிய நிலையில் படுத்திருக்கும் நந்தியும் அதற்கு முன்னால் குத்துவிளக்கும், நந்திக்கு மேலே பிறைச்சந்திரனும், நந்திக்கு கீழே தமிழில் சேது என்ற மங்கல மொழியும் எழுதப்பட்டிருக்கும். இந்நாணயங்களில் வரும் சின்னங்கள் நாணயங்களை வெளியிட்ட மன்னர்களும், அவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த மக்களும் சைவசமயத்தவர்களாக இருந்தனர் என்பதைப் பிரதிபலிக்கின்றன. அதிலும் நாணயங்களில் பொறிக்கப்பட்டிருக்கும் நந்தி உருவம் அக்காலத்தில் சிவ வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்ததைக் காட்டுகிறது. யாழ்ப்பாண மன்னர்கள் இடபத்தை தமது அரச இலட்சனையாக நாணயங்களில் மட்டுன்றி கொடிகளிலும், முத்திரைகளிலும் பயன்படுத்தியுள்ளனர். தக்ஷிணகைலாச புராணம் சிங்கையாரியனை 'இடாவான் கொடி எழுதிய பெருமான்' எனக் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. நாணயத்தில் வரும் சேது என்ற மொழி அவர்கள் தமிழக இராமேஸ்வரம் சேது சிவதலத்துடன் கொண்டிருந்த ஈடுபாட்டைக் காட்டுகிறது. சேதுகாவலன் என்பது யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்திய விருதுப்பெயர்களில் ஒன்று என்பதை தக்ஷிணகைலாச புராணம் செகராசசேகரனை சேதுகாவலன் எனக் கூறுவதிலிருந்து தெரிகிறது. கல்வெட்டுக்களில் வழக்கமாக வரும் 'ஸ்வஸ்தி ஸ்ரீ' என்ற மங்கல மொழிக்குப் பதிலாக யாழ்ப்பாண மன்னர்கள் 'சேது' என்ற மங்கள மொழியையே தமது சாசனத்தில் பயன்படுத்தியுள்ளனர். இதற்கு தென்னிலங்கையில் கொட்டகம என்ற இடத்தில் கிடைத்த சிங்கையாரியனின் கல்வெட்டு சான்றாகும் (பத்மநாதன் 2011:193). இவையனைத்தும் சேது சிவதலத்துடன் யாழ்ப்பாண மன்னர்களுக்கிருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றன.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0179.jpg

கந் (கந்தன்) ஆ (ஆறுமுகன்) பெயர்கள் கொண்ட நாணயங்கள்



செண்பகப் பெருமாள்
வெளியிட்ட நாணயங்கள்

யாழ்ப்பாண அரசு கால நாணயங்கள் பற்றி ஆராய்ந்த பலரும் அவர்கள் சேது என்ற மங்கல மொழி பொறித்த நாணயங்களை மட்டுமே வெளியிட்டனர் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். ஆனால் எமது அண்மைக்கால ஆய்வில் இருந்து அவர்கள் கந்தன், ஆறுமுகன் ஆகிய பெயர்கள் பொறித்த நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. அவற்றுள் முதலாவது வகை நாணயத்தில் இடப்புறம் பார்த்த நிலையில் உள்ள மயில் சின்னம் காணப்படுகிறது. ஏனைய நாணயங்களில் மயிலின் வாயில் பாம்புச் சின்னம் காணப்படுகிறது. ஆனால் இந்நாணயத்தில் உள்ள சின்னம் பாம்பு உருவத்திலிருந்து சற்று வேறுபட்ட உருவமாக உள்ளது. மயிலுக்கு மேலே விளிம்பை ஒட்டியவாறு பிறைச்சந்திரன், சூரியன் என்பன காணப்படுகின்றன. நாணயத்தின் பின்புறத்தில் வேல் சின்னத்துடன் தமிழில் 'கந்'(தன்) என்ற பெயர் காணப்படுகிறது. இதன் கீழ் கால்களைக் செண்பகபெருமாள் வெளியிட்ட நாணயங்கள் குறிக்கும் இரு கோடுகள் காணப்படுகின்றன. இரண்டாவது வகை நாணயத்தில் உள்ள மயில் இடப்புறம் பார்த்த நிலையில் காணப்படுவதுடன் அதன் வாயில் காணப்படும் பாம்பும் தெளிவாகத் தெரிகிறது. நாணயத்தின் பின்புறத்தில் 'ஆ' என்ற எழுத்துக் காணப்படுகிறது. இதனுடன் இணைந்த நிலையில் முதலாவது நாணயத்தில் வருவது போல் மனித வடிவில் அமைந்த கால் உருவங்கள் காணப்படுகின்றன. இதற்கு இடது, வலது புறமாக முதலாவது நாணயத்தில் வரும் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்வகை நாணயங்கள் வடஇலங்கையைத் தவிர இலங்கையின் ஏனைய பாகங்களிலோ தென்னிந்தியாவிலோ இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. தமிழக நாணயங்களில் முக்கிய சின்னமாக இடம் பெறும் அரச இலட்சனை எதுவும் இந்நாணயங்களில் காணப்படவில்லை. ஆகவே இந்நாணயங்கள் யாழ்ப்பாண இராசதானிகாலத்தில் வெளியிடப்பட்டதென்பதில் ஐயமில்லை *(Pushparatnam 2002.127-142)*.

மேற்குறிப்பிட்ட இரு நாணயங்களில் ஒன்றில் மயில், வேல் சின்னத்தோடு 'கந்' என்ற பெயரும், மற்றையதில் இதே சின்னங்களுடன் 'ஆ' என்ற எழுத்தும் இடம் பெற்றுள்ளன. இரு நாணயங்களிலும் உள்ள மயிலின் தோற்ற அமைப்பு, சின்னங்களிடையேயும் காணப்படும் ஒற்றுமைகள், நாணயங்களின் வடிவமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இவை குறிப்பிட்ட காலப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு வம்சத்தால் அல்லது மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் என்பது தெரிகிறது. இரு நாணயங்களிலும் மயில், வேல் ஆகியவை முக்கிய சின்னங்களாக இடம் பெற்றிருப்பதைக் கொண்டு இந்நாணயங்களை வெளியிட்ட மன்னர்களும், அவர்களின் ஆட்சிக்குட்பட் மக்களும் முருகவழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. சேது மொழி பொறித்த நந்திக்கு முன்னால் சிறு உருவமாக வடிவமைக்கப்பட்ட மயில் இவ்விரு நாணயங்களிலும் பிரதான சின்னமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள 'கந்', 'ஆ' என்பவை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0180.jpg

கந்தன், ஆறுமுகன் ஆகிய தெய்வப் பெயர்களின் சுருக்கமாகும். அப்பெயர்கள் இறைவனின் தலைப்பாகத்தையும், கீழ் உள்ள பாகம் இறைவனின் உடற்பாகத்தையும் குறிக்கிறது. இம்மரபில் நாணயங்கள் வெளியிடும் முறை இடைக்காலத் தென்னிந்தியாவில் இருந்துள்ளது. இதற்கு சேரமன்னர் நாணயங்களில் பயன்படுத்திய 'ச' என்ற எழுத்தையும் *(Mitchiner 1998 : 160 – 1)*. மூன்றாம் வல்லாள மன்னன் ஆட்சியில் (கி.பி.1292 - 1345) வெளியிட்ட நாணயங்களில் வரும் 'ப' என்ற எழுத்தையும் குறிப்பிடலாம். இங்கே 'ஆ' என்ற எழுத்திற்கும். 'கந்' என்ற பெயருக்கு கீழே நடுவில் உள்ள பகுதி இறைவனின் இடுப்புடன் இணைந்த காற்பகுதியாகத் தோன்றுகிறது. இதை 'ஆ' என்ற எழுத்துப் பொறித்த நாணயங்களில் தெளிவாகக் காணமுடிகிறது.

இந்த இடத்தில் யாழ்ப்பாண அரசு காலத்தில் நல்லூரில் அமைக்கப்பட்ட கந்தன் ஆலயம் தொடர்பாக கைலாயமாலையில் வரும் குறிப்பை மேற்கூறப்பட்ட நாணயங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது இந் நாணயங்களை வெளியிட்ட மன்னன் யார் என்பது ஓரளவுக்குத் தெரியவரலாம். கைலாயமாலையில் வரும் தனிச் செய்யுள் நல்லூரில் கந்தன் ஆலயத்தையும், யாழ்ப்பாண நகரத்தையும் அமைத்தவன் புவனேகபாகு எனக் கூறுகிறது. இச்செய்யுள் குறிக்கும் காலத்தைச் சக வருடம் எண்ணூற்றெழுபதாக எடுத்துக் கொண்டு பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் மந்திரி புவனேகபாகு காலத்தில் அரசும், கந்தன் ஆலயமும் தோன்றியதாகக் கூறுகின்றனர் *(Rasanayagam 1928)*. ஆனால் இக்கூற்றை ஏற்கக் கூடிய அளவுக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. இலங்கையில் புவனேகபாகு என்ற பெயரில் 7 மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுள் 6ஆம் பராக்கிரமபாகு தென்னிலங்கையில் ஆட்சி செய்த காலத்தில் அவன் வளர்ப்பு மகனாகிய சபுமால்குமர என்ற செண்பகப்பெருமாள் 1540 இல் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் புவனேகபாகு என்ற பெயருடன் ஆட்சிபுரிந்துள்ளான். இதை யாழ்ப்பாணத்தில் கிடைத்த இவன் காலக் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றது *(Indrapala 1971 :29 :31)*. இவனே மேற்படி செய்யுளில் வரும் புவனேகபாகு என்பதையும், அவனே ஏற்கனவே இருந்த கந்தன் ஆலயத்தைப் புதுபித்துக்கட்டினான் என்பதையும் பேராசிரியர் இந்திரபாலா பொருத்தமான சான்றாதாரங்கள் காட்டி நிறுவியுள்ளார். இந்நாணயங்கள் சேதுமொழி பொறித்த நாணய மரபில் இருந்து வேறுபட்டு இருப்பதைக் கொண்டு யாழ்ப்பாண அரசை ஆட்சி புரிந்த செண்பகப்பெருமாளே இந்நாணயங்களை வெளியிட்டுள்ளான் என்ற முடிவுக்கு வரமுடிகிறது *(Pushparatnam 2002.127-142)*.

இந்நாணயங்கள் தொடர்பாக பேராசிரியர் பத்மநாதன் தனது அண்மைக்கால ஆய்வொன்றில் பின்வருமாறு கூறுகிறார்:

> 'கந்' என்ற எழுத்துக்கள் கந்தசாமியினது பெயரையும், 'ஆ' என்ற எழுத்து ஆறுமுகசுவாமியினது பெயரையுங் குறிப்பனவாதல் வேண்டும். அவ்வாறாகில் இந்த நாணயங்கள் கந்தக் கடவுளின் பெயரால் வழங்கப்பட்டவை. அவற்றைச் செண்பகப்பெருமாள் வெளியிட்டான் என்று கொள்ள முடிகிறது. ஆதியான கந்தசாமி கோயிலை அவனே அமைத்தான் என்பது பல நூற்றாண்டுகாலமாக நிலவி வரும் ஐதீகம் என்பது குறிப்பிடற்குரியது. இந்த அடிப்படையில் நோக்குமிடத்து யாழ்ப்பாண தேசத்தவரது சமய வழிபாட்டு மரபுகளுக்கும் மொழி வழக்கிற்கும் ஏற்றவகையிலேயே தனது பதவிக்கும் அதிகாரத்திற்கும் உரிய சின்னங்களை அமைத்துக் கொண்டான் என்பது தெளிவாகிறது. அது பிரமிக்கத்தக்கவொன்று. அது குடியாட்சி அரசியல் நெறி புரிந்துணர்வின் வழி ஏற்பட்ட நவ்லெண்ணத்தின் அடையாளம், நல்லெண்ணத்திற்கு நல்லதொரு உதாரணம்
>
> *(பத்மநாதன் 2011.99)*.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0181.jpg

படைப்பலம்

யாழ்ப்பாண இராசதானிகால மன்னர்கள் நாட்டையும் மக்களையும் பாதுகாக்கவும், அமைதியை நிலைநாட்டவும் சிறந்த படையமைப்பைக் கொண்டிருந்தனர். இதற்கு 14 நூற்றாண்டு இலங்கை அரசியல் நிலை தொடர்பாக ராஜாவலிய என்ற சிங்கள நூல் தரும் செய்தி நோக்கத்தக்கது:

> "பராக்கிரமபாகுவின் மகன் கம்பளையில் இருந்தான். அளகக்கோனார் என்னும் மந்திரி நயிகமத்தில் இருந்தான். யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஆரியச்சக்கரவர்த்தி இருந்தான். இம்மூவருள் சேனாபலத்திலும், பொருள் பலத்திலும், ஆரியச்சக்கரவர்த்தி மேலோங்கியிருந்தான். அதனாலேயே அவன் மலைநாட்டிலுலிருந்தும், கீழ்நாட்டிலிருந்தும், ஒன்பது துறைமுகங்களில் இருந்தும் திறைபெற்றான்."

இக்கூற்றை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் நிகாயசங்கிரய என்ற சிங்கள நூலிலும், கோட்டகம என்ற இடத்தில் கிடைத்த யாழ்ப்பாண அரசு காலக் கல்வெட்டிலும், மடவல சிங்களச் சாசனத்திலும் சில குறிப்புகள் காணப்படுகின்றன. இவை யாழ்ப்பாண அரசின் இராணுவ, பொருளாதார எழுச்சியான காலப்பகுதியைக் குறிக்கிறது எனலாம். குவேரோஸ் சுவாமியார் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த காலத்தில் முதலாம் சங்கிலி மன்னன் தலைநகரைப் பாதுகாக்க 12000 இற்கும் மேலான போர் வீரர்களை நிறுத்தியிருந்தான் எனக் கூறுகிறார். இப்படைப் பிரிவில் தென்னிந்தியாவின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த படைவீரர்களும் சேவை செய்துள்ளனர். ராஜவலிய என்ற சிங்கள நூல் செண்பகப்பெருமாள் என்னும் ஆறாம் பராக்கிரமபாகுவின் சேனாதிபதி 15ஆம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்துச் சென்ற போது தமிழர், கருநாடர், கேரளர், துளுவர், வன்னியர், சோனகர் முதலியோரைக் கொண்ட யாழ்ப்பாண மன்னர்களின் படையை எதிர்கொண்டதாகக் கூறுகிறது. 16ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் கன்னட நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட படைவீரர்கள் யாழ்ப்பாண மன்னர்களது படையில் இருந்ததாகப் போர்த்துக்கேய நூல்கள் மேலும் கூறுகின்றன *(பத்மநாதன் 1992:109)*.



கம்பளையில் கிடைத்த யாழ்ப்பாண இராசதானி காலக் கல்வெட்டு

14ஆம் -15 ஆம் நூற்றாண்டுகளிலே யாழ்ப்பாண அரசில் பலம் பொருந்திய கடற்படை இருந்தது. இது போருக்காகவும், கடல்சார் வாணிபத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டது. சமகால வரலாறு கூறும் நிகாய சங்கிரகய மற்றும் ராஜாவலிய முதலான சிங்கள நூல்கள் கம்பளை அரசனுக்கு எதிராக யாழ்ப்பாண மன்னன் அனுப்பிய படை தரைவழியாகவும், கடல்வழியாகவும் நீர்கொழும்பு, சிலாபம், வத்தளை, கொழும்பு, தெமட்டக்கொடை, கோற்கான ஆகிய இடங்களைக் கைப்பற்றியதாகக் கூறுகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில் தென்னிலங்கையில் கேகாலை மாவட்டத்தில் கோட்டகம என்ற

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0182.jpg

இடத்தில் கிடைத்த வெண்பா யாப்பிலமைந்த கல்வெட்டில் "சேது-கங்கணம், கண்ணிணையாற் காட்டினார் காமர் வளைப் பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார் - பொங்கொலிநீர்ச் சிங்கநக ராரியனைச் சேரா வனுரேசர் தங்கள் மடமாதர் தாம்" எனக் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து யாழ்ப்பாண அரசின் மேலாதிக்கம் தென்னிலங்கையில் ஏற்பட்டிருந்தமை தெரிகிறது *(சிவசாமி 1992 : 18)*. 14ஆம் நூற்றாண்டில் (1344ஆண்டு) முதன் முதலாக இலங்கை வந்த மொரோக்கோ நாட்டுப் பயணியான இபன் பற்றுற்றாவின் பயணக்குறிப்புக்கள் யாழ்ப்பாண அரசு காலக் கடற்படைப் பலத்தை அறிந்து கொள்ள மேலும் உதவுகிறது. இபன் பற்றுற்றா ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களில் ஒருவனை பத்தள என்ற இடத்தில் (புத்தளம்?) சந்தித்து உரையாடியது பற்றியும், அம்மன்னனின் பண்பு, பரோபகாரம், கடற்படைக் கப்பல்கள், மிகப்பெரிய அளவில் நடைபெற்ற வெளிநாட்டு வர்த்தகம், அம்மன்னன் தங்கியிருந்த துறைமுகத்திற்கு அருகே மலைபோலக் குவிக்கப்பட்டிருந்த கறுவாவினை மலையாளம், தமிழகத்திலிருந்து வந்த வணிகர்கள் புடவைகளைக் கொடுத்து அதற்குப் பதிலாக கறுவாவை பெற்று கப்பல்களில் ஏற்றிச் சென்றமை என்பன பற்றி தனது நூலில் விரிவாகக் கூறுகிறார். மேலும் அவர் ஆரியச்சக்கரவர்த்தி மன்னனுடைய நூற்றுக்கணக்கான கப்பல்கள் ஒரு சமயத்திலே யெமென் தேசத்தை நோக்கி சென்று கொண்டிருந்ததை தான் பார்த்ததாகவும் குறிப்பிடுகிறார். ஆயினும் இவர் தனது நூலில் தான் சந்தித்த மன்னன் பெயரைக் குறிப்பிடாது பொதுப்பட ஆரியச்சக்கரவர்த்தி மன்னன் என்றே கூறுகிறார். ஆயினும் அவரது குறிப்புக்கள் 14 ஆம் நூற்றாண்டின் யாழ்ப்பாண அரசில் இருந்த கடற்படை வலிமை பற்றி அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகிறது *(சிவசாமி 1992 :7)*.

சமயநிலை

இலங்கையில் இந்து மதத்திற்கும், அதற்கு முன்னோடியான புராண வழிபாட்டு மரபுகளுக்கும் தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு. அவற்றின் தொடக்கமாகப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களால் வழிபடப்பட்ட சுடுமண் தெய்வ உருவங்கள், சமயச்சின்னங்கள், குறியீடுகள் காணப்படுகின்றன *(சிற்றம்பலம் 1995: 182, புஷ்பரட்ணம் 1991:38)*. கி.மு. 4ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த பண்டுகாபயன் காலத்தில் இரு சைவ ஆலயங்கள் இருந்ததாக மகாவம்சம் கூறுகிறது. கி.பி. 4ஆம் நூற்றாண்டு மகாசேன மன்னன் காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இருந்த மூன்று இந்து ஆலயங்களை இடித்தழித்து அவ்விடங்களில் பௌத்த விகாரைகள் கட்டியதாக அந்நூல் மேலும் கூறுகிறது *(Mahavamsa XXXVI:4)*. எல்லாளன் துட்டகாமி போராட்டத்தில் அநுராதபுரத்தில் எல்லாளனுக்கு சார்பாகப் போரிட்ட தமிழ்ப்படை வீரர்கள் தங்கியிருந்த இடமாக இஸ்ஸமரண (இஸ்சுறுமுனியா) என்ற இடம் கூறப்படுகிறது.

அண்மையில் தொன்னாசிய நாடுகளின் புராதன சிவாலயங்கள் பற்றி ஆராய்ந்த 'டகி" என்பவர் அவற்றின் தொன்மைச் சான்றுகள் காணப்படும் நாடுகளில் இலங்கையில் உள்ள இசுறுமுனிய என்ற இடத்தையும் குறிப்பிடுகிறார் *(Dhaky 1982:130-34)*. இங்குள்ள சிற்பத் தொகுதிகளை தமிழக மாமல்லபுரச் சிற்பத் தொகுதிகளுடன் ஒப்பிடும் கலைவரலாற்று ஆசிரியர்கள் இங்கு தத்துவரூபமாகச் செதுக்கப்பட்டுள்ள கி.பி. 6ஆம் 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு புடைப்புச் சிற்பங்களை ஐயனார், சிவன் பார்வதி என அடையாளப்படுத்தியுள்ளனர். அநுராதபுரத்தில் கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட திராவிடக் கலைமரபில் கட்டப்பட்ட 12 சைவ, வைஷ்ணவ ஆலயங்களின் அழிபாடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் காளிகோவிலைத் தவிர ஏனைய ஆலயங்களின் அழிபாடுகளை அதிகம் காணமுடியவில்லை. தமிழகத்தில் பக்தி இயக்கத்திற்கு தலைமையேற்ற நாயன்மார்கள் தமிழகத்தை அடுத்து ஈழத்தில் உள்ள திருக்கேதீஸ்வரத்தையும், திருக்கோணேஸ்வரத்தையும் போற்றிப்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0183.jpg

பாடியிருப்பது கி.பி.7-ஆம் 8ஆம் நூற்றாண்டுகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்து மதம் அடைந்த வளர்ச்சி நிலையைக் காட்டுகிறது.

இலங்கையில் 10ஆம் 11 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சோழர் ஆட்சியில் முன்னரைக் காட்டிலும் திராவிடக் கலைமரபில் பல இந்து ஆலயங்கள் தோற்றம் பெறக் காரணமாயின. இவை தலைநகர் பொலநறுவைக்கு வெளியே சிறப்பாக கிழக்கிலங்கையிலும், வடஇலங்கையிலும் அதிக எண்ணிக்கையில் இருந்துள்ளதை அவ்விடங்களில் உள்ள ஆலயங்கள், அங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஆலய அழிபாடுகள், சிலைகள், சிற்பங்கள், செப்புத்திருமேனிகள், கல்வெட்டுக்கள் என்பன உறுதிசெய்கின்றன. இவ்வாலயங்கள் சிலவற்றிக்கு பொலநறுவையில் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் நன்கொடை வழங்கி ஆதரித்தமைக்கும் ஆதாரங்கள் உள்ளன. பொலநறுவையின் வீழ்ச்சிக்குப் பின்னர் வடஇலங்கையில் அரசமைத்த சாவகன் ஆட்சியிலும் இந்துமதம் முதன்மை பெற்றிருந்ததெனக் கூறலாம்.

சாவகன் வெளியிட்ட நாணயங்களின் முன்பக்கத்தில் இடம் அல்லது வலப்பக்கம் பார்த்த நிலையில் படுத்திருக்கும் நிலையில் நந்தியின் உருவமும், அதற்கு இருமருங்கிலும் குத்துவிளக்கும், நந்திக்கு மேலே நாணய விளிம்பை ஒட்டிப் பிறைச்சந்திரனும், நந்திக்கு கீழே இலங்கைத் தமிழரால் பண்டுதொட்டு வெளியிட்ட நாணயங்களில் வரும் மூன்று கோடுகளாலான பீடமும் காணப்படுகின்றன. இப்பீடம் தமிழ், சிங்கள மன்னர்களால் வெளியிடப்பட்ட இலங்கை நாணயங்களில் மட்டுமே காணப்படுகின்றது. இந்நாணயத்தின் பின்பக்கத்தில் தேவநாகரி எழுத்தில் 'ஸ்ரீசாவகன்' என்ற பெயர் காணப்படுகிறது. இந்நாணயத்தை யாழ்ப்பாண அரசு கால நாணயத்துடன் ஒப்பிடும் போது 'சேது' என்ற மங்கள சொல்லைத் தவிர ஏனைய சமயச் சின்னங்கள் பெருமளவுக்கு ஒரே நாணயம் எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமை கொண்டுள்ளன. சாவகனது நாணயங்களில் இடம்பெற்ற மூன்று கோடுகளான பீடம் அமைந்த இடத்தில் யாழ்ப்பாண அரசு கால நாணயத்தில் சேது என்ற மங்கள மொழி பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றை நோக்கும் போது சாவகன் நாணயங்களிலும், அதற்கு முற்பட்ட இலங்கைத் தமிழர் வெளியிட்ட நாணயங்களில் வரும் பீடம் மங்கள மொழிக்குச் சமனான சமய முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது எனக் கூறலாம். இவ்வரலாற்றுப் பின்புலம்தான் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் இந்துமதம் மேலும் முதன்மைபெறக் காரணம் எனலாம்.

யாழ்ப்பாண இராசதானி காலம் இலங்கையின் இந்துமத வரலாற்றிலும், வளர்ச்சியிலும் முக்கிய காலப்பகுதியாக நோக்கப்படுகிறது. இவ்ராசதானியைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகள் குலத்தால் அந்தணர். அவர்களது விருதுப்பெயர்களும், அரச சின்னங்களும் சமயச் சார்புடையன. அவர்கள் பயன்படுத்திய சேதுகாவலன், தேவையர்கோன், கங்கையாரியன், கங்கைநாடான் முதலான விருதுப்பெயர்கள் அவர்கள் சைவசமயத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டைப் பிரதிபலிப்பன *(Pathmanathan 1978: 234 238,257)*. இவ்வரசால் வெளியிடப்பட்ட 11 வகையான நாணயங்களில் நந்தி, வேல், மயில், தாமரை, வச்சாயிரம், பிறை, சந்திரன் முதலான சின்னங்களும், சேது, கந்தன், ஆறுமுகன் முதலான பெயர்களும் இடம்பெற்றுள்ள. இவை நாணயங்களை வெளியிட்ட மன்னர்களும், அவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பெரும்பாலான மக்களும் சைவர்களாக இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன *(Pushparatnam 2002 : 151-152)*.

யாழ்ப்பாண அரசு தொடர்பாக பிற்காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் தலைநகர் நல்லூரில் அமைக்கப்பட்ட நாற்றிசைக் கோவில்கள் பற்றியும், இராசதானியின் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் இருந்த ஆலயங்கள் பற்றியும் கூறுகின்றன. கள்ளியங்காட்டில் கிடைத்த இரு செப்பேடுகளில் ஒன்று யாழ்ப்பாண அரசனான பரராஜசேகர மகாராஜா சைவர்களின் முக்கிய தலமான சிதம்பரத்தில் உள்ள மடங்களுக்கு வழங்கிய தானங்கள் பற்றிக் கூறுகின்றது.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0184.jpg

இது அரசனின் சமய ஈடுபாட்டையும் சமகாலத்தில் தமிழகத்தோடு யாழ்ப்பாண அரசிற்கிருந்த சமயத் தொடர்புகளையும் புலப்படுத்துகிறது. பேராசிரியர் பத்மநாதன் இக்காலத்தில் நல்லூர், மாவிட்டபுரம், கீரிமலை, நயினாதீவு, செல்வச்சந்நிதி, வல்லிபுரம், ஒட்டுசுட்டான், வெருகல், சித்தாண்டி, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களிலும், பாடல்பெற்ற திருத்தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியன தேசத்துக் கோயில்கள் என்று கொள்ளத்தக்க வகையைச் சேர்ந்த ஆலயங்கள் எனக் கூறுகிறார் (பத்மநாதன் 2011:175). போர்த்துக்கேயர் நல்லூரில் இருந்த பெரிய ஆலயத்தைக் கைப்பற்றி அதையே தமது இராணுவ மையமாகவும், நிர்வாக மையமாகவும் பயன்படுத்தியதாக அவர்களின் ஆட்சிக்கால ஆவணங்கள் கூறுகின்றன.

இன்று யாழ்ப்பாண இராசதானி காலத்தில் இருந்த ஒரு ஆலயத்தை தானும் முழுமையாகக் காணமுடியவில்லை. இதற்கு போர்த்துகீசரும், ஒல்லாந்தரும் சுதேச மதங்களுக்கு எதிராகக் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கை முக்கிய காரணமாகும். போர்த்துக்கீசர் தமது ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் சிறிதும், பெரிதுமாக இருந்த 500 ஆலயங்களை அழித்து அங்கிருந்த கற்களைக் கொண்டு தமது கோட்டைகள், கிறிஸ்தவ ஆலயங்கள், நிர்வாக மையங்களை அமைத்ததாக குறிப்பிடுகின்றனர். இதில் குறிப்பிடப்படும் ஆலயங்களின் எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றலாம். ஆயினும் அதில் நம்பக்கூடிய பல உண்மைகள் உண்டு என்பதை தற்போது யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்படும் மீள்புனரமைப்பு பணிகளின் போது கிடைத்து வரும் சான்றுகள் உறுதிசெய்கின்றன.


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யாழ்ப்பாணக் கோட்டையில் கிடைத்த ஆலய அழிபாடுகள்

17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கீசரால் சதுரவடிவில் கட்டப்பட்ட கோட்டையை ஒல்லாந்தர் 52 ஏக்கர் நிலப்பரப்பில் நட்சத்திரவடிவில் மீள்உருவாக்கம் செய்தனர். இக்கோட்டை கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கோறக்கற்கள் கோட்டையைச் சுற்றியுள்ள தீவுகளிலும், கடலில் இருந்தும் கொண்டுவரப்பட்டு அவை சற்சதுரவடிவில் வெட்டப்பட்டு கோட்டையை கட்டுவதற்குப்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0185.jpg

பயன்படுத்தப்பட்டுள்ளன. கடந்தகால அனர்த்தங்களால் கோட்டையின் உட்பகுதியில் உள்ள பெரும்பாலான கட்டிடங்கள் அழிவடைந்த நிலையில் உள்ளன. இவற்றை மீள் உருவாக்கம் செய்யும் பணி 2010 இல் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கோட்டையை கட்டுவதற்கு பெருமளவுக்கு கோறல் கற்கள், செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள நிலையில் பீரங்கித் தளங்கள், சுடுதளங்கள், காவல் அரன்கள், கோட்டையில் வாசல் பகுதிகள் என்பவற்றில் பாதுகாப்புக் கருதி வேறுபட்ட அளவிலும், வடிவங்களிலுமுள்ள கருங்கல் மற்றும் சுண்ணாம்புகல் தூண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில தூண்கள் 17 ஆம் நூற்றாண்டில் கோட்டைக்குள் கட்டப்பட்டுள்ள கிறிஸ்தவ தேவாலய அழிபாடுகள் இடையேயும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை யாழ்ப்பாணத்தில் இருந்த இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு அங்கிருந்து கொண்டு வரப்பட்டவை என்பது தெரிகிறது. தூண்களின் வடிவமைப்புக்கள், அவற்றில் செதுக்கப்பட்டுள்ள புடைப்புச் சிற்பங்கள், கபோதங்கள், கொடுங்கைகள், விக்கிரகங்களை வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பீடங்கள் என்பன இந்து ஆலயங்களுக்கு உரியவை என்பதை உறுதிசெய்கின்றன. அவற்றுள் கருங்கற்தூண்கள் யாழ்ப்பாண இராசதானிக்கு முற்பட்டகால ஆலயங்களுக்கும், சுண்ணாம்புகற் தூண்கள் யாழ்ப்பாண இராசதானி கால ஆலயங்களுக்கும் உரியதாக இருக்கலாம். இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண இராசதானி காலத்திற்கு முன்பும் யாழ்ப்பாண இராசதானி காலத்திலும் இந்துமதம் பெற்றிருந்த முக்கியத்துவத்தை ஓரளவுக்கு அறியமுடிகிறது *(Pushparatnam 2014)*.

சமீப காலத்தில் இக்கட்டுரை ஆசிரியர் குடாநாட்டில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வில் சாவகச்சேரி, நெடுந்தீவு, வட்டுக்கோட்டை முதலான இடங்களில் யாழ்ப்பாண இராசதானிக்கு முன்பின்பாகத் தோன்றிய ஆலயங்களின் அழிபாடுகளைக் கண்டுபிடிக்க முடிந்தது. இவை ஐரோப்பியரால் அழிக்கப்பட்டன அல்லது அவர்கள் ஆட்சியால் கைவிடப்பட்டவை எனக் கருதலாம். 1990 களில் தற்போது சாவகச்சேரி நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்ற வளவிலும், அதையொட்டி அமைந்துள்ள சந்தைப்பகுதியிலும் பிறதேவைகளுக்காக நிலம் அகழப்பட்டபோது அம்மன், புவனேஸ்வரியம்மன், சூரியன், ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. 16 ஆம் நூற்றாண்டில் எழுந்த தக்ஷிணைகைலாசபுராணத்தில் சாவகச்சேரிப் பிராந்தியத்தில் இருந்த வாரிவாணேஸ்வரர் ஆலயம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. வரலாற்றறிஞர்கள் இவ்விலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலயம் தற்போதைய நீதிமன்றம் இருக்கும் வளவில் இருந்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். முதலியார் இராசநாயகம், போர்த்துக்கீசர் இவ்வாலயத்தை அழித்தே அதற்கு முன்னால் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தை அமைத்ததனர் என கூறுகிறார். 2010ஆம் ஆண்டளவில் தற்போதைய புதிய நீதிமன்றம் அமைப்பதற்கு அத்திவாரங்கள் வெட்டப்பட்டபோது பெருமளவு ஆலயக் கற்களும், செங்கட்டிகளும் வெளிவந்தன. அக்கற்கள் ஒரு ஆலயத்திற்கு உரியவை என்பதை அவற்றின் வடிவமைப்புக்களைக் கொண்டு உறுதிசெய்ய முடிகிறது. இதனால் தக்ஷிணை கைலாசபுராணத்தில் குறிப்பிடப்படும் வாரிவாணேஸ்வரர் ஆலயம் இவ்விடத்தில் இருந்ததெனக் கூறலாம்.

இங்கு கிடைத்த நான்கு விக்கிரகங்களும் திராவிடக் கலைமரபில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இங்கு கிடைத்த அம்மன் விக்கிரகம் இலங்கையில் உள்ள உயரமான அம்மன் விக்கிரகங்களில் ஒன்றாகக் கருதக்கூடியது. சோழக்கலைமரபில் சதுரவடிவில் அமைக்கப்பட்ட ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் மாதோட்ட அகழ்வாய்வில் கிடைத்த சிவலிங்கத்தை பெருமளவுக்கு ஒத்ததாகக் காணப்படுகிறது. இந்நான்கு விக்கிரகங்களின் காலத்தையும், கலைமரபையும் ஆய்வு செய்த கலாநிதி இரகுபதி மற்றும் தமிழகக் கலை வரலாற்றுப் பேராசிரியர் ஆசிரியர் சேதுராமன் இவை எறத்தாழ கி.பி.13 ஆம் நூற்றாண்டில் திராவிடக்கலைமரபில் செதுக்கப்பட்ட விக்கிரகங்கள் எனக் கூறுகின்றனர். தமிழில் சாவகச்சேரி என அழைக்கப்படும் இடப்பெயர் 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோகிலசந்தேன்ய

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0186.jpg

என்ற சிங்கள இலக்கியத்தில் 'சாவக்கோட்டை' எனவும், 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திரிசிங்கள் கடயிம் எய வித்தி என்ற இன்னொரு சிங்கள இலக்கியத்தில் 'சாவகிரி' எனவும் அழைக்கப்பட்டுள்ளது. இங்கு சாவகன் ஆட்சி ஏற்பட்டதன் நினைவாகவே இவ்விடத்திற்கு சாவகச்சேரி என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்வாதாரங்களை எல்லாம் நோக்கும் போது இங்கிருந்த ஆலயம் சாவகன் ஆட்சியின் பிற்பகுதியில் அல்லது யாழ்ப்பாண இராசதானியின் முற்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறமுடியும்.



சாவகச்சேரி வாரிவாணேஸ்வரர் ஆலய அழிபாடுகள்

2010 ஆம் ஆண்டு நெடுந்தீவு மேற்கில் புக்காடு என்ற இடத்தில் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்ட போது அழிவடைந்த ஆலயம் ஒன்று அடையாளம் காணப்பட்டது. 40 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட இவ்வாலயம் அப்பிரதேசத்தில் இலகுவாகக் கிடைக்கக் கூடிய கோறல் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. அதன் கர்ப்பக்கிரகம், அந்தராளம் 5அடி நீள அகலத்தில் அமைந்துள்ளது. இத்துடன் முன்மண்டபம், துணைக்கோவில்கள், சுற்றுமதில்கள் இருந்ததற்கான அடையாளங்களும் காணப்படுகின்றன. நீண்டகாலமாக கற்குவியல்களாக இருந்த அந்தராளம், கர்ப்பக்கிரகம் இருந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கோமுகி, சிற்பங்கள், சிலைகள், விமானத்தின் தூபி, நீர்ப்பாசனக்குழாயின் பாகங்கள் என்பன வெளிப்பட்டன. அத்துடன் ஆலயத்தின் கர்ப்பக்கிரகம்,

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0187.jpg

அந்தராளம் என்பவற்றின் எஞ்சியிருந்த சுவர்களையும் வெளிப்படுத்த முடிந்தது. இவ்வாதாரங்கள் இவ்வாலயம் ஆகம மரபில் கட்டப்பட்டதை உறுதி செய்கின்றன.









புக்காடு சிவன் ஆலயம் - நெடுந்தீவு

இவ்வாலயம் எப்போது கட்டப்பட்டது என்பதை உறுதிப்படுத்த கல்வெட்டுக்களோ அல்லது காலத்தை அடையாளப்படுத்தக் கூடிய பிற ஆதாரங்களோ இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் ஆலயம் அமைந்துள்ள சுற்றாடலில் இருந்து 10ஆம் நூற்றாண்டுக்கும் 15 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டகால தமிழக சோழ, பாண்டிய அரசு கால நாணயங்களும், யாழ்ப்பாண மற்றும் பொலநறுவை இராசதானிகள் கால இலங்கை நாணயங்களும் கிடைத்துள்ளன. இவ்வாலயம் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் முதன்மை பெற்றிருந்த மாகாவலித் துறைமுகத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதால் இடைக்கால இலங்கை - தென்னிந்திய கடல்சார் தொடர்புகளில் இவ்விடம் முக்கியத்துவம் பெற்றிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. மேலும் இவ்வாலயத்தின் கர்ப்பக்கிருகத்தை மிகவும் ஒட்டியவாறு இத்துறைமுகத்திற்குச் செல்லும் ஒல்லாந்தர் கால வீதியொன்று காணப்படுகிறது.

இவ்வாலயம் ஒல்லாந்தரால் வீதியமைக்கப்பட்டதன் பின்னர் கட்டப்பட்டிருந்தால்

துணைவி சிவன் ஆலயம் - வட்டுக்கோட்டை







மு அல்வா



சந்தா



ராஜ் ஆ



தீமா



சயலி



பிரகேஷ்வ



ரன்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0188.jpg

ஆலயத்திற்கும், ஆலய வழிபாட்டிற்கு இடையூறு தரக்கூடிய இடத்தைக் கோயில் கட்டுவதற்குப் பொருத்தமான இடமாகத் தெரிவு செய்ய வாய்ப்பிருந்திருக்காது. இதனால் இவ்வாலயம் 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் அதாவது போர்த்துக்கீசர் வருகைக்கு முன்னர் கட்டப்பட்டதெனக் கூறுவதே பொருத்தமாகும். போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் தமது ஆட்சியில் சுதேச மதங்களுக்கு எதிரான கலையழிவுக் கொள்கையை கடைப்பிடித்ததால் இங்கிருந்த ஆலயத்தை அவர்கள் அழித்திருக்கலாம் அல்லது ஆலயத்தை அலட்சியப்படுத்தி இவ்வீதியை அமைத்திருக்கலாம். இவ்வாறான கலையழிவுக் கொள்கையை போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் நெடுந்தீவில் பின்பற்றியிருக்கலாம் என்பதற்கு மேலும் சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன. நெடுந்தீவு கிழக்கில் மேற்கூறப்பட்ட ஆலயத்தை ஒத்த ஆலயங்கள் சிலவற்றின் அழிபாடுகள் காணப்படுகின்றன. அவ்விடங்கள் தற்போது மக்கள் குடியிருப்புக்களை ஏற்படுத்த பொருத்தமற்ற இடங்களாகக் காணப்படுகின்றன. ஆனால் முன்பொரு காலத்தில் அவ்விடங்களில் மக்கள் வாழ்ந்திருக்கலாம் என்பதை அவர்கள் அமைத்த கல்வேலிகளின் சிதைவுகள் உறுதிப்படுத்துகின்றன. அவ்வழிவுகளிடையே இருந்து ஆலயங்களுடன் இணைந்த இரண்டு கபோதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆலயங்கள் கோறல் கற்களால் கட்டப்பட்டிருந்தும் இக் கபோதங்கள் வைரமான கற்களில் உயர்ந்த கலை நுட்பத்துடன் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றின் கலைமரபு பாண்டியர் காலக் கலைமரபை நினைவுபடுத்துவதாக உள்ளது. அக்கபோதங்களில் ஒன்று தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது *(Pushparatnam 2014)*.

2012ஆம் ஆண்டு வலிகாமத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு தெற்கே 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள துணைவிக் கிராமத்தில் பெருமளவுக்கு அழிவடைந்த ஆலயம் ஒன்று அடையாளம் காணப்பட்டது. 50 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகம் 6 அடி நீளமும், 4 1/2 அடி அகலமும் கொண்டது. கருங்கற்களால் கட்டப்பட்ட கர்ப்பக்கிருகத்தை தவிர ஏனைய கோறல் கற்கள் கொண்டு கட்டப்பட்ட அந்தராளம், முன்மண்டபம், துணைக்கோயில், சுற்றுமதில் என்பன பெருமளவுக்கு அழிவடைந்து காணப்படுகின்றன. கர்ப்பக்கிரகத்தின் மேற்குப்பக்கச் சுவரில் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்ட ஏழு சாசனப் பாகங்கள் காணப்படுகின்றன. இச்சாசனங்கள் இவ்வாலயம் பற்றி முழுமையாக எழுத்தப்பட்ட



கைலாய பிள்ளையார் ஆலய விமானச் சிற்பங்கள்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0189.jpg

சாசனத்தின் சில பகுதிகளாகும். இவ்வாலயம் அழிவடைந்து கைவிடப்பட்ட போது இவ்வாலயத்திற்கு முன்னால் பிற்காலத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலயத்திற்கு இங்கிருந்து எடுக்கப்பட்ட கற்களும் பயன்படுத்தப்பட்டதாக அறிகிறோம். இதனால் கற்களுடன் சாசனம் பொறிக்கப்பட்ட கற்களும் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம். இதனால்தான் இங்கிருக்கும் ஆலயத்தின் கர்ப்பக்கிரகம் பிற்காலத்தில் மீள்உருவாக்கம் செய்யப்பட்ட போது சாசனங்கள் பொறிக்கப்பட்ட கற்கள் பொருத்தமற்ற முறையில் வைத்துக் கட்டப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இருப்பினும் தற்போது எஞ்சியுள்ள சாசனங்களில் இருந்து சில சொற்களையும், ஆட்பெயர்களையும் அறிய முடிந்ததோடு இவ்வாலயம் அக்காலத்தில் பிரகேஸ்வரன் என்ற பெயரில் அழைக்கப்பட்டதையும் அடையாளம் காணமுடிகிறது. இப்பெயரில் தமிழகத்தில் பல சிவன் ஆலயங்கள் 10ஆம் நூற்றாண்டிலிருந்து அமைக்கப்பட்டு வந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. இருப்பினும் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது கிரந்த எழுத்துச் சாசனம் என்ற வகையில் இவ்வாலயச் சாசனத்திற்கு தனிமுக்கியத்துவம் உண்டு. இச்சாசனத்தின் எழுதமைதி கொண்ட இவ்வாலயம் 15 ஆம் அல்லது 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென்பது தெரிகிறது *(Pushparatnam 2014)*.

இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வரலாற்றுப் பழமைவாய்ந்தவை எனக் கூறப்படும் ஆலயங்கள் பலவும் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் சுதேச மக்களுக்கு மத சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் தோன்றியவையாகக் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலான ஆலயங்கள் யாழ்ப்பாண இராசதானி காலத்திற்கு முன்னரும், யாழ்ப்பாண இராசதானி காலத்திலும் முன்னைய ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது அவற்றிற்கு அருகில் கட்டப்பட்டவையாகும். அதனால்தான் பழைய ஆலயங்களின் பெயருடன் அவற்றின் வரலாற்றை நினைபுபடுத்தி இன்றும் வழிபடப்பட்டு வருகின்றன. இதற்கு உதாரணமாக திருகோணமலை கோணேஸ்வரர், மாதோட்டம் திருக்கேதீஸ்வரம், மட்டக்களப்பு திருக்கோயில், மாவிட்டபுரம் கந்தசாமி, கீரிமலை நகுலேஸ்வரர், நல்லூர் கைலாயபிள்ளையார், நல்லூர் கந்தன், சட்டநாதர், வீரகாளியம்மன் ஆகிய ஆலயங்களைக் குறிப்பிடலாம். அவற்றுள் நல்லூர் கைலாயநாதர் ஆலயம் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் மத சுதந்ததிரம் வழங்கப்பட்டதன் பின்னர் அதே பெயரில் அமைக்கப்பட்டதை அவ்வாலய விமானத்தில் செதுக்கப்பட்டுள்ள போர்த்துகேயர், ஒல்லாந்த காலப் போர்வீரர்கள், அதிகாரிகள், அக்காலப் பெண்கள் என்போரை நினைவுபடுத்திக்காட்டும் சிலைகள், சிற்பங்கள், ஆடை அமைப்புக்கள், ஆபரணங்கள் என்பன எடுத்துக் காட்டுகின்றன. இவை சுதேச மக்களின் கலைமரபில் ஐரோப்பியர் காலக் கலைமரபின் செல்வாக்கும் ஏற்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. இவை போன்ற வரலாற்றுப் பழமைவாய்ந்த ஆலயங்கள் இருந்திருக்கக்கூடிய இடங்களைக் கண்டறிந்து விரிவான தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் இலங்கைத் தமிழரின் தொன்மையான, தொடர்ச்சியான மதங்கள், அவை சார்ந்த ஆலயங்களின் வரலாற்று உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவர முடியும் *(Pushparatnam 2014)*.

இலங்கைத் தமிழர் வரலாற்றில் யாழ்ப்பாண இராசதானி காலம் புதிய காலகட்டத்தைக் குறிக்கிறது. இவ்வரசில் வளர்ந்த தமிழர் பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களுக்கு இலங்கையில் நீண்டகால வரலாறு இருப்பினும் அவை தனிப்போக்குடன் முன்னெடுத்துச் செல்லப்பட்டமைக்கு யாழ்ப்பாண அரசு முக்கிய காரணமாக இருந்துள்ளதென்பதில் ஐயமில்லை. ஆட்சி செய்த மன்னர்கள் தமது ஆதிக்கத்திற்குட்பட்ட ஆள்புலத்து மக்கள் பாதுகாப்பாகவும், அமைதியாகவும் வாழ்வதற்கு ஏற்றவகையில் தமது ஆட்சிப்பரப்பை பல்வேறு நிர்வாக அலகுகளாகப் பிரித்து அவற்றைக் கண்காணிக்கவும், நிதி வசூலிக்கவும், நிர்வகிக்கவும் அதிகாரமுள்ள அதிகாரிகளை நியமித்திருந்தனர். அவர்கள் முதலியார், பண்டாரப்பிள்ளை, கண்காணி, உடையார், மணியகாரன், தலையாரி, வன்னியனார் முதலான பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டனர். விவசாயம், கைத்தொழில் கடல்சார் வர்த்தகம் என்பவற்றை அரச

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0190.jpg

பொருளாதாரமாகக் கொண்ட யாழ்ப்பாண இராச்சியத்தில் மக்களிடம் இருந்து பல்வேறு வரிகளும் பெறப்பட்டன. அவை தானியவரி, கலைவரி, அதிகாரிவரி, இனவரி ஊழியம் என அழைக்கப்பட்டன. ஏற்றுமதி வர்த்தகத்தில் முத்துக்குளித்தல், யானைவர்த்தகம், சாயவேர் என்பன முக்கிய இடத்தைப் பெற்றன. சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த பெருமை இவ்வரசர்களுக்கு உண்டு. தமிழ் மொழி, வடமொழி வளரவும், அம்மொழிகளில் இலக்கியம், சோதிடம், வைத்தியம், காவியம், நாடகம், சமயம், வரலாறு சார்ந்த நூல்களும் தோன்றுவதற்கும் இவ்வரசு காரணமாக இருந்தது. இக்காலத்தில் இசை, நடனம், நாடகம், நாட்டுப்புறக் கலைகள் வளர்ச்சியுற்றன. இப்பங்களிப்புக்களோடு ஏறத்தாழ 350 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரின் படையெடுப்புக்களால் 1619 இல் வீழ்ச்சியடைந்தது.

போர்த்துக்கேயரது படையெடுப்புகளும் யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியும்.

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கேயர் இலங்கை வந்த போது இங்கு கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்னும் மூன்று இராச்சியங்களும், இவர்களின் மேலாண்மைக்கு உட்பட்டும், சுதந்திரமாகச் செயற்பட்டும் சிறிய நிலப்பரப்பைக் கொண்ட தமிழ், சிங்கள வன்னிச் சிற்றரசுகளும் இருந்ததாகப் போர்த்துக்கேய ஆவணங்கள் கூறுகின்றன. கீழைநாடுகளில் இஸ்லாமியரின் வர்த்தக ஆதிக்கத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு இங்கு வந்த போர்த்துக்கேயர் அதன் பின்னால் தமது கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதையும், காலப்போக்கில் இங்கிருந்த அரசுகளைப் பலவீனமடையச் செய்து அவற்றில் தமது அரசியல் மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதையும் தமது கொள்கையாக நடை முறைப்படுத்தி வந்தனர். தென்னிலங்கையில் போர்த்துக்கேயரது வர்த்தக நலன்களுக்குச் சாதகமான பொருட்கள் இயற்கையாகவே கிடைத்ததால் வர்த்தகத்தில் தம்மைப் பலப்படுத்திக் கொண்ட போர்த்துக்கேயர் தமது சமயத்தைப் பரப்பி வந்ததுடன் அங்கிருந்த அரசுகளிலும் மேலாதிக்கம் செலுத்திவந்தனர்.

இலங்கையின் வடபகுதி தென்னிலங்கையைப் போல் போர்த்துக்கேயருக்கு வேண்டிய கறுவா, கராம்பு போன்ற வாசனைத்திரவியங்களை கொண்டிருக்கவில்லை. இதனால் போர்த்துக்கேயர் தொடக்ககாலத்தில் வடஇலங்கை மீது தமது கவனத்தை செலுத்துவதில் ஆர்வங்காட்டவில்லை. ஆனால் போர்த்துக்கேயர் தென்னிலங்கையில் வர்த்தகத்திலும், அரசியலிலும் பலமடைந்து வந்த நிலையில் அவர்களின் யுத்த தந்திரோபாயங்களுக்கும், வர்த்தக நலன்களுக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வடபகுதியும், அங்குள்ள இயற்கைத்துறைமுகங்களும் அவசியம் என்பதை உணரத்தொடங்கினர். இதனால் 1540 இல் இருந்து போர்த்துக்கேயரின் நடவடிக்கைகள் முதன் முதலாக வடஇலங்கையை நோக்கியும் நகர்த்தப்பட்டன. அதேவேளை இதற்கு ஏற்ற சூழ்நிலைகள் யாழ்ப்பாண அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட வடபகுதியில் உருவாகியிருந்தன அல்லது உருவாக்கப்பட்டன என்பதற்கு பின்வரும் சம்பவங்களை எடுத்துக்காட்டலாம்.

கி.பி 1540ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயரின் பண்டங்கள் நிரம்பிய மரக்கலமொன்று யாழ்ப்பாணக்கரையில் ஒதுங்கியது. அப்போது ஆட்சியில் இருந்த முதலாம் சங்கிலி மன்னன் அதிலிருந்த பொருட்களை கைப்பற்றிக் கொண்டான். இதனால் தமது கப்பலை மீட்பதற்காக 1543இல் மாட்டின் அல்போன்சோ டி சூசா 20 கப்பல்களில் தம் படைகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி, சங்கிலி மன்னனால் கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கு இழப்பீடு தரும்படி கோரினான் *(Silva 1995:17).*

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0191.jpg

இப்படைகளை எதிர்த்து போரை விரும்பாத சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருடன் சமாதானமான முறையில் நடந்து கொண்டான். இதற்காக போர்த்துக்கேய படைத்தலைவனை சந்தித்து சங்கிலி மன்னன் அவர்களுக்கு நட்டஈடு வழங்குவதுடன், ஆண்டு தோறும் திறையாக 5000 பாதோஸ்களும் (பணம்), இரண்டு யானைகளும் கொடுப்பதாகவும் உறுதி வழங்கினான். இதன் முன்னேற்பாடாக இரண்டு வருடத்திற்குரிய மேற்படி பணத்தையும், யானைகளையும் வழங்கி போர்த்துக்கேயரை வழியனுப்பி வைத்தான் *(Ibid 108)*. இதன் மூலம் சங்கிலி தனது ஆட்சியை உறுதிப்படுத்திக் கொண்டான். இருப்பினும் இவ்வுடன்படிக்கையும், உறுதிமொழியும் நீண்டகாலம் நிலைத்திருக்கவில்லை. இதற்கு வடபகுதி மீதான போர்த்துக்கேயரின் சமய நடவடிக்கைகள் முக்கிய காரணம் எனலாம்.

1543ஆம் ஆண்டில் தென்னிந்தியாவில் மதநடவடிக்கையில் ஈடுபட்ட பிரான்சிஸ் சவேரியார் என்னும் துறவியின் சீடன் ஒருவனால் மன்னார் மாவட்டத்தில் வாழ்ந்த 600 மக்கள் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டனர். இம்மதமாற்றம் தேசப்பற்றும், மதப்பற்றும் கொண்ட சங்கிலி மன்னனுக்கு போர்த்துக்கேயர்மீது ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இதனால் 1544இல் சங்கிலி மன்னனின் 5000 போர்வீரர்கள் மன்னார் சென்று கத்தோலிக்க மதம் மாறியவர்களை மீண்டும் சைவத்திற்கு மதம் மாறும்படி கேட்டனர். அதற்கு மதம் மாறிய கத்தோலிக்கர்கள் மறுத்ததினால் 600 கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் சங்கிலி மன்னனது படையினரின் வாளுக்கு இரையாக்கினர் *(குணசிங்கம் 2008 :161)*.

இக்காலப்பகுதியில் கோட்டை அரசில் போர்த்துக்கேயரின் தொடர்புகள் அபிவிருத்தியடைந்து அவர்களின் மேலாண்மை நிலைநாட்டப்பட்டிருந்தது. கோட்டை மன்னன் புவனேகபாகு யாழ்ப்பாண இராச்சியத்தை தனதாக்கித் தந்தால் போர்த்துக்கேயர் தரவேண்டிய நிலுவையிலுள்ள கடன்களை இரத்துச் செய்வதாகவும், 400 குவின்ரல்கள் கறுவாவினை வருடந்தோறும் மேலதிகமாக தருவதாகவும் போர்த்துக்கேயருக்கு வாக்குறுதி அளித்தான் *(Silva1995 -108-109)*. இவ்வேளையில் புவனேகபாகுவின் மகன்களில் ஒருவன் கத்தோலிக்கத்தை தழுவியதுடன் தனது பெயரையும் டொம் ஜுயிஸ் என்ற கிறிஸ்தவப் பெயராக மாற்றினான் *(Ibid. 108)*, தொடர்ந்து மக்களும் மதம் மாறுவதற்கு அவன் அனுமதியளித்தான். யாழ்ப்பாணத்திலும் சங்கிலியன் அரசாட்சியில் அதிருப்தி கொண்டவர்கள் அரசுரிமை பெறுவதற்கு போர்த்துக்கேயரின் உதவியை நாடினர். இச்சம்பவங்கள் யாழ்ப்பாணத்திலும் சில தாக்கங்களை ஏற்படுத்தின. இம்மாற்றங்களைப் புரிந்துகொண்ட சங்கிலி மன்னன் 1545 ஆம் ஆண்டின் பின்னர் போர்த்துக்கேயருக்கு எதிராக கோட்டை, கண்டி, சீதாவாக்கை அரசுகளுடன் இணைந்து செயற்பட்டான். அவன் சீதாவாக்கை அரசன் மாயாதுன்னையுடன் இணைந்து கிபி 1545ஆம் ஆண்டின் பின்னர் போர்த்துக்கேயரையும், அவர்களை ஆதரித்த புவனேகபாகுவிற்கும் எதிராகப் போரிட்டான் *(Ibid. 109)*. ஆயினும் சங்கிலி, மாயாதுன்னையின் கூட்டு முயற்சிகள் புவனேகபாகுவால் முறியடிக்கப்பட்டது.

இதுவரை போர்த்துக்கேயரை ஆதரித்த கோட்டை மன்னன் புவனேகபாகுவும் 1549ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயரின் எதிரியாக மாறி அவர்களை எதிர்த்தான். ஆனால் 1552இல் அவன் இறந்ததும் அவன் உறவினரான தர்மபாலன் அரசனானான். இந்நிலையில் தர்மபாலனின் தந்தை விதியபண்டாரன் கோட்டை அரசசபைச் சொத்துக்களுடன் சங்கிலி மன்னனிடம் சரணடைந்து சங்கிலியுடன் இணைந்து போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடினான். இத்தகைய சம்பவங்கள் சங்கிலி மீது போர்த்துக்கேயருக்கு மேலும் வெறுப்பையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தின.

இந்நிலையில் 1558இல் இந்தியாவில் வைஸ்ரோயாக இருந்த கொன்ஸ்தாந்தினோ த பிரகன்ஸாவிற்கு போர்த்துக்கேய அரசிடமிருந்து கட்டளை அனுப்பி வைக்கப்பட்டது. அக்கட்டளையில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்குள்ள கத்தோலிக்கர்களை அமைதியான முறையில் வாழ்வதற்கு வழியேற்றுக்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0192.jpg

கொடுப்பதோடு, இந்தியாவின் மேற்கு கரையோரத்திலுள்ள வடுகப்படையினை அடக்கி அங்குள்ள கத்தோலிக்கர்களது பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும்படியும் ஆணையிடப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இக்கட்டளை கிடைக்கப் பெற்றவுடன் படையெடுப்பிற்கான துரிதமான முன்னேற்பாடுகளை கோவாவில் கொன்ஸ்தாந்தினோ த பிரகன்ஸா மேற்கொண்டிருந்த போது 1560இல் புன்னைக்காயலிலுள்ள போர்த்துக்கேயரின் கோட்டையினை வடுகப்படையினர் தாக்கி அழித்தனர் *(Queyroz. op.cit., 1930 - 386)*. இதன் விளைவாக 1560இல் கொன்ஸ்தாந்தினோ த பிரகன்ஸா 1200பேர் கொண்ட பாரிய கடற்படையொன்றை யாழ்ப்பாணம் நோக்கி நகர்த்தினான். போர்த்துக்கேயப் படைகள் 1560இல் யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறையை வந்தடைந்ததுடன் மறுநாட்காலை நல்லூர் இராசதானியை நோக்கி நகர்ந்தன. இதன்போது சங்கிலி மன்னன் பாதுகாப்புக் கருதி கோப்பாயிலுள்ள தனது கோட்டைக்கு பின்வாங்கினான். போர்த்துக்கேயர் நல்லூர் இராசதானியைக் கைப்பற்றி அங்குள்ள செல்வங்களை சூறையாடியதுடன் விதியபண்டாராவினால் சங்கிலி மன்னனிடம் அடைக்கலமாக வைத்த செல்வங்களையும் புத்த தந்ததாதுவையும் போர்த்துக்கேயர் கைப்பற்றினர். இதன்போது சங்கிலி கோப்பாயினை நோக்கி பின்வாங்கியதுடன் போர்த்துக்கேயருக்கு தன்னைக் காட்டிக் கொடுக்க முனைந்த பல தமிழர்களையும் கொலை செய்தான். இதேவேளை சங்கிலி மன்னனை போர்த்துக்கேயப் படைகள் நல்லூரிலிருந்து கோப்பாயை நோக்கி பின்தொடர்ந்தன. இதனால் சங்கிலி கோப்பாயிலிருந்து பச்சிலைப்பள்ளிக்கு பின்வாங்கினான் *(குணசிங்கம். மே.கூ. நூல்: 164)*. அவ்வேளை சங்கிலி நல்லூர் இராசதானியில் இருந்த உணவுக்களஞ்சியத்தை தீக்கிரையாக்கி விட்டுச் சென்றான் *(மேலது 164)*. இதனால் போர்த்துக்கேயப் படைகளுக்கு பாரிய உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டவேளை பலர் நோய்வாய்ப்பட்டனர். இத்தகைய சூழ்நிலையில் கொன்ஸ்தாந்தினோ த பிரகன்ஸா சங்கிலியுடன் உடன்படிக்கையொன்றினை மேற்கொண்டான். அதன்படி யாழ்ப்பாண இராச்சியம் சங்கிலி மன்னனால் அல்லது அவனது மகனால் தொடர்ந்து ஆட்சி செய்யப்படலாம். ஆனால் தீவுப்பகுதியும் மேற்குக் கரையோரங்களும் போர்த்துக்கேயரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். யாழ்ப்பாண மன்னன் எந்தவொரு துப்பாக்கி வெடிக்கும் போர்க்கருவிகளைப் பாவிக்கக்கூடாது. வெளிநாட்டுப் படைகளை அழிப்பதற்கு முற்றாகத்தடை விதிக்கப்பட்டதோடு போர்த்துக்கேயப் படைகளை உள்நாட்டில் அனுமதிக்க வேண்டும். சங்கிலி 1இலட்சம் பாதோலில் பெறுமதியான தங்கத்தையும் விதியபண்டாராவின் செல்வங்கள் அனைத்தையும் உடனடியாக போர்த்துக்கேயத் தளபதியிடம் கையளிக்க வேண்டும். மேலும் வருடாவருடம் 10யானைகளை போர்த்துக்கேயருக்கு கப்பமாக வழங்க வேண்டும். உள்ளூர் மக்களை கத்தோலிக்க மதத்திற்கு மாற்றுவதற்கு எந்தவித தடைகளுமின்றி அனுமதிக்க வேண்டும். அதற்கு மக்களிடமிருந்து வரிகளை யாழ்ப்பாண மன்னன் பெற்றுக் கொள்ளலாம். இறுதியாக யாழ்ப்பாண இராச்சிய இளவரசனும் இரண்டு முதலிமார்களும் பிணைக்கைதிகளாக போர்த்துக்கேயருக்கு வழங்கப்பட வேண்டும் *(Queyroz. op.cit. :351-372)*. போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வுடன்படிக்கையைத் தொடர்ந்து 1561இல் யாழ்ப்பாண அரசில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. சங்கிலி மன்னன் பிணைக் கைதியாக இருந்த தனது மகனை விடுவித்து அவனை அரசனாக்க முயன்ற போது இன்னொரு மகனான புவிராஜ பண்டாரம் என்பவன் அரசனாகினான். இவ்வேளை காசிநயினார் என்பவர் புவிராசபண்டாரத்திடமிருந்து அரசை கைப்பற்றிக் கொண்டான். இதனால் புவிராசபண்டாரம் மன்னார் தளபதி ஜோர்ச் த மெலோ முறையிடவே காசிநயினார் சிறையில் அடைக்கப்பட்டு தளபதிக்கு சார்பானவன் அரசனாக்கப்பட்டான். ஆனால் காசிநயினார் புதிய மன்னனைக் கொன்றுவிட்டு மன்னாரையும் தாக்கி அரசனானான். இறுதியில் இவனும் கொலை செய்யப்பட்டான். இதைத் தொடர்ந்து போர்த்துக்கேயரால் 1570இல் பெரியபிள்ளை அரசனாக்கப்பட்டான். இவன் செகராஜசேகரம் என்ற பெயருடன் 1582 வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி புரிந்தான். இவ்வேளை மீண்டும்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0193.jpg

புவிராசபண்டாரம் அரசைக் கைப்பற்றி பரராசசேகரம் என்ற பெயருடன் 1591 வரை ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தான். இவனது நடவடிக்கை பற்றி திரினிடாடோ சுவாமி கூறுமிடத்து புவிராஜ மன்னன் தனது மக்களை சிறு காரணங்களுக்காக கொலைத் தண்டனைக்கு உட்படுத்தும் கொடியவனாக இருந்தான். போர்த்துக்கேயருக்கும் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் பெரும் எதிரியாக விளங்கினான் என்று கூறுகின்றார் (சிந்தனை, தொகுதி vi, இதழ் iii , 1994 155). இத்தகைய இயல்பு கொண்ட புவிராஜபண்டாரம் கி.பி.1590ஆம் ஆண்டு மன்னார் மீது திட்டமிட்டு தாக்குதலை மேற்கொண்டான். இம்மன்னனின் படைகள் போர்த்துக்கேயருக்கு எதிராக 1590இல் 75 சிறிய கப்பல்களில் சென்று மன்னாரில் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டன. இப்படையெடுப்பு வெற்றியளிக்காத போதும் தொடர்ந்தும் 1591இல் கள்ளிக்கோட்டை சமோரின் உதவியுடன் படையெடுப்பை மேற்கொண்டான். ஆயினும் இத்தாக்குதல் வெற்றியளிக்கவில்லை. மாறாக போர்த்துக்கேயரின் யாழ்ப்பாண இராசதானி நோக்கிய வருகையை உக்கிரப்படுத்தும் சம்பவமாகவே இத்தாக்குதல் அமைந்தன.

இதன்படி த மென்டொங்கா தலைமையில் போர்த்துக்கேயப்படை யாழ்ப்பாண இராசதானி நோக்கிப் படையெடுத்தது. இப்போரில் புவிராஜ பண்டாரம் சிரைச்சேதம் செய்யப்பட்டதோடு 800க்கும் அதிகமான வடுகப்படையினரும் சமோரினின் முஸ்லிம் படையினர் பலரும் கொல்லப்பட்டனர் (குணசிங்கம். மே.கூ. நூல் 168). இதைத் தொடர்ந்து பெரியபிள்ளை செகராஜசேகரனின் மகன் எதிர்மன்னசிங்ககுமாரன் ஆட்சியில் அமர்த்தப்பட்டான். இவன் போரொன்றின் போது சைமான் பிச்சான் எனும் போர்த்துக்கேயப் படைத்தளபதியால் காப்பற்றப்பட்டதால் அவர்களின் நிபந்தனைக்கு உட்பட்டு மன்னனாக நியமிக்கப்பட்டான். எனவே இப்போரின் முடிவில் எதிர்மன்ன சிங்ககுமாரன் மன்னனாக்கப்பட்டு நல்லூரில் மென்டொங்காவிற்கும் மன்னனுக்கும் இடையில் பல அதிகாரிகளின் முன்னிலையில் உடன்படிக்கை ஒன்று எழுதப்பட்டது. இதில் போர்த்துக்கேய மன்னனின் பெயரால் ஆட்சி செய்வதற்கும், திறை செலுத்தவும், கத்தோலிக்க மதத்தை நடவடிக்கைகளை சுதந்திரமாக செய்யப்படவும் உறுதி அளிக்கப்பட்டு 1591இல் உடன்பாடு செய்யப்பட்டது. இது நல்லூர் உடன்படிக்கை எனப்பட்டது. இதனடிப்படையில் யாழ்ப்பாண அரசின் மீது போர்த்துக்கேயரின் மேலாண்மை நிலைநாட்டப்பட்டது.

1617 இல் எதிர்மன்னசிங்கன் மரணமடைந்ததைத் தொடர்ந்து எதிர்மன்னசிங்கனின் சகோதரனான அரசகேசரி தன்னை மன்னனாக்கும்படி கோவாவில் உள்ள போர்த்துக்கேய வைஸ்ரோயிடம் வேண்டுகோள் விடுத்தவேளை எதிர்மன்னசிங்கனின் மருமகன் இரண்டாம் சங்கிலிகுமாரன் அரசைக் கைப்பற்றிக் கொண்டான். சங்கிலிகுமாரன் தனது இரு சொந்த கிராமங்களை கிறிஸ்தவ மிசநெறிமார்க்கத்திற்கு வழங்கியதாலும் கண்டி மன்னனுக்கு உதவிகள் வழங்கமாட்டேன் என போர்த்துக்கேயருக்கு உறுதிமொழி வழங்கியதாலும் அவன் அரசனாவதை போர்த்துக்கேயர் எதிர்க்கவில்லை (மேலது. 170). அதேவேளையில் போர்த்துக்கேயர் கோட்டை அரசில் தமக்கு எதிராக எழுச்சி பெற்ற கிளர்ச்சியாளர்களை அடக்குவதில் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருந்தமையினால் அவர்கள் யாழ்ப்பாண அரச விவகாரத்தில் தலையிட முடியாமல் போயிற்று (Silva, Op.cit. 116). இவ்வேளையில் 1618இல் சின்ன மிகாப் புள்ளை ஆராச்சி என்பவன் கிறிஸ்தவ மதத்தை தழுவி டொம்ஜுயி என்னும் பெயருடன் பல கிறிஸ்தவ முதலிமார்களையும் ஒருங்கிணைத்து சங்கிலி குமாரனுக்கு எதிராகப் படையெடுத்தான். இதன்போது சங்கிலிகுமாரன் ஊர்காவற்துறைக்கு தப்பியோடி மன்னாரிலுள்ள போர்த்துக்கேயத் தளபதியிடம் படையுதவி கேட்டபோது அவன் உதவி வழங்காமையினால் தஞ்சாவூர் நாயக்கரிடம் 5000போர் வீரர்களைப் பெற்ற எதிரிகளை அடக்கினான் (Ibid. 116). இந்நிகழ்வு போர்த்துக்கேய வைஸ்ரோய் டொம்ஜோ கொட்டினோவுக்கு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது. இப்போர் நடவடிக்கைக்கான தலைமைப் பொறுப்பை இலங்கையின் போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ்தாந்தினோ த சநொறன்கா பொறுப்பேற்றான். இந்நேரத்தில் சங்கிலி மன்னன் டச்சுக்காரரோடு கூட்டுச்சேர்ந்து விட்டதாகவும்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0194.jpg

திறை செலுத்துவதை நிறுத்தி விட்டான் எனவும் அறிந்த போர்த்துக்கேய தளபதி நொறன்கா சங்கிலியை தண்டிக்குமாறு பிலிப் த ஒலிவீரா என்பவன் தலைமையில் 1618இல் படையொன்றை அனுப்பிவைத்தான். இப்படை ஊர்காவற்றுறையில் இறங்கி திறை செலுத்தும்படி கேட்க சங்கிலி மன்னன் நிலுவையில் இருந்த கப்பத்தொகுதியில் ஒரு பகுதியைக் கொடுத்தான். இவ்வேளை ஒலிவீரா தனது படைகளை மீளப்பெற்றுக் கொள்ளும் பொருட்டு வண்ணார் பண்ணையை நோக்கி நகர்த்திய போது போர்த்துக்கேயப் படைக்கும் தமிழ்ப்படைக்கும் இடையில் போர் மூண்டது. இதன்போது சங்கிலிகுமாரன் இந்தியாவுக்கு தப்பி ஓட முற்பட்டவேளை போர்த்துக்கேயப்படைகளால் கைது செய்யப்பட்டு கோவாவிற்கு கொண்டு செல்லப்பட்டு தூக்கிலிடப்பட்டு கொலை செய்யப்பட்டார். சங்கலிகுமாரனின் முடிவுடன் யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் வசமானது. இதன்விளைவால் இதுவரை யாழ்ப்பாண அரசின் மேலாதிக்கத்தின் கீழிருந்த பிராந்தியங்கள் சிறப்பாக பெரும்பாலான கரையோரப் பிரதேசங்கள் போர்த்துக்கேயரின் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. ■

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

7

ஐரோப்பியர் ஆட்சியில் இலங்கைத் தமிழர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive















இயல் ஏழு

ஐரோப்பியர் ஆட்சியில் இலங்கைத் தமிழர்

இலங்கையின் அமைவிடமும், இங்கு இயற்கையாக கிடைத்த வர்த்தகப் பொருட்களும் பண்டுதொட்டுப் பல நாட்டவரையும் கவர்ந்து வந்தது. அவற்றுள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் வருகையும், அவர்களின் அரசியல், பொருளாதார, சமய, பண்பாட்டு மேலாதிக்கமும் இலங்கை வரலாற்றின் புதிய அத்தியாயமாகப் பார்க்கப்படுகிறது. இதனால் போர்த்துக்கேயர் தொட்டு பிரித்தானியர் காலம் வரையான 450 ஆண்டுகால இலங்கைத் தமிழர் வரலாறு ஐரோப்பியரது ஆட்சியின் பின்புலத்தில் இருந்தே நோக்கப்படவேண்டியுள்ளது.

போர்த்துக்கேயர் ஆட்சியில்

கி.பி15ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களும், அங்கு நிலவிய சூழ்நிலைகளும் போர்த்துக்கேயரை கீழைத்தேசம் நோக்கிய பயணத்திற்கு உந்துதலாகக் காணப்பட்டது. கி.பி 1453இல் துருக்கியரால் கொன்ஸ்தான்தினோபிள் கைப்பற்றப்பட்டதன் விளைவாக செங்கடல் வழியாக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டு வந்த தூரகிழக்காசிய நாடுகளுக்கான ஐரோப்பிய வாணிப வர்த்தக மார்க்கங்களில் பெருந்தடைகளும், இடையூறுகளும் ஏற்பட்டன. இதன் காரணமாக ஆசியாவிற்கான கடல் மார்க்கங்களை தேடிக்கொள்ளும் தேவை போர்த்துக்கேயருக்கு ஏற்பட்டது. மேலும் இக்காலப்பகுதியில் ஐரோப்பாவில் ஏற்பட்ட நூற்றாண்டுப்போரும் அதன் விளைவாக பிற்பட்ட மத்தியகால ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கடும்பஞ்சமும், மக்கள் இறப்பும் கீழைத்தேசம் நோக்கிய தேவையை விரைவுபடுத்தியது. அதேவேளை மறுமலர்ச்சியைத் தொடர்ந்து பயன்பாட்டிற்கு வந்த வெடிபொருட்களும், திசையறிகருவிகளும் கீழைத்தேசம் நோக்கிய போர்த்துக்கேயரின் பயணத்திற்கு உந்துசக்தியாகின. இத்தகைய பின்னணியில் வர்த்தகமும், அதன் பின்னால் கத்தோலிக்க மதத்தை பரப்புவதையும் நோக்கமாகக் கொண்டு கீழைத்தேச நாடுகளுக்கு வந்த போர்த்துக்கேயருக்கு அந்நாடுகளில் நிலவிய அரசியல் குழப்பங்கள், பொருளாதாரப் பின்னடைவுகள் வாய்ப்பாக அமைந்தன. இப்பின்புலமே இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையமாக இருந்த இலங்கையில் போர்த்துக்கேயரின் மேலாதிக்கம் ஏற்படக்காரணமாகியது *(Arasaratnam 1958)*.

போர்த்துக்கேயரின் கீழைநாடுகளை நோக்கிய முதலாவதாக பயணத்தில் பத்தலமேயுடயஸ் என்பவர் கி.பி 1487களில் தென்னாபிரிக்காவில் உள்ள நன்னம்பிக்கை முனையை சென்றடைந்து பின்னர் மீண்டும் போர்த்துக்கல் திரும்பினார். அவரைத்தொடர்ந்து போர்த்துக்கேய இராணுவத்தளபதி வாஸ்கோதகாமா 1498இல் இந்தியாவிலுள்ள கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார். இந்நிகழ்வைத் தொடர்ந்து எதிர்பாராத வகையில் போர்த்துக்கேய இராணுவத்தளபதி லூறென்சோ டீ அல்மெய்டர் 1505இல் இலங்கையின் தென்மேற்கு கரையோரத்தில் உள்ள காலித் துறைமுகத்தை வந்தடைந்தார். வர்த்தக நோக்கோடு கீழைநாடுகளை நோக்கி வந்த போர்த்துக்கேயருக்கு இஸ்லாமியரின் இலங்கைக்கான கறுவா வர்த்தகத்தை தம்வசப்படுத்திக் கொள்வதற்கு இந்நிகழ்வு வாய்ப்பாக அமைந்தது. மேலும் இந்துசமுத்திரத்தின் கேந்திர நிலையமான இலங்கையும், அங்கு இயற்கையாகக் கிடைத்த தரமான கறுவா போன்ற வாசணைத்திரவியங்கள், முத்து, மாணிக்கம், காட்டுயானைகள் என்பன வணிகநோக்கோடு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0197.jpg

வந்த போர்த்துக்கேயரை இலங்கையில் அரசியல் ரீதியாகவும் மேலாதிக்கம் செலுத்த வழிவகுத்தது. போர்த்துக்கேயர் இலங்கை வந்தபோது இங்கு கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்ற மூன்று பிரதான இராச்சியங்களும், வன்னி சிற்றரசுகளும் இருந்தன. அவற்றுள் கோட்டை இராசதானி கறுவா உற்பத்தியை அரசின் ஏகபோக உரிமையாகக் கொண்டிருந்ததால் ஆட்சியில் இருந்த தர்மபராக்கிரமபாகுவுடன் வியாபார உடன்படிக்கையை மேற்கொண்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். காலப்போக்கில் கோட்டை அரசில் காணப்பட்ட அரசியல் பலவீனங்களைப் பயன்படுத்திய போர்த்துக்கேயர் அவ்வரசில் தமது அரசியல், பொருளாதார நிலையை வலுப்படுத்திக்கொண்டதன் பின்னர் நாட்டின் ஏனைய இராசதானிகளின் ஆதிக்க எல்லைகளுக்குட்பட்ட பிராந்தியங்களிலும் தமது மேலாண்மையை நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். அவற்றுள் தமிழ்ப்பிரதேசங்களாக இருந்த மன்னாரை 1560இல் கைப்பற்றிக்கொண்ட போர்த்துக்கேயர் 1619இல் யாழ்ப்பாணப் பிரதேசம் முழுவதையும் தமது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தனர். 1623இல் திருகோணமலையையும், 1628இல் மட்டக்களப்பினையும் கைப்பற்றிய போர்த்துக்கேயர் சமகாலத்தில் தமிழ்ப் பிரதேசமாக இருந்த வடமேற்குப்பகுதிகளையும் கைப்பற்றி தமது மேலாண்மையின் கீழ் கொண்டுவந்தனர். இதன் மூலம் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, நீர்கொழும்பு ஆகிய தமிழ்ப் பிரதேசங்கள் யாவும் ஐரோப்பிய இனத்தவரான போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்டது. ஆயினும் வடஇலங்கையின் பெருநிலப்பரப்பான வன்னி யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து வன்னிச் சிற்றரசர்களால் ஆளப்பட்டன. அதேபோல் படையெடுப்புகளுக்கு தடையான இயற்கை வளங்கொண்ட கண்டி இராசதானி போர்த்துக்கேயர் ஆளுகைக்குட்படாத சுதந்திர அரசாக செயற்பட்டது (ஐடினை).

யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சியைத் தொடரந்து வன்னி தவிர்ந்த தமிழர்கள் வாழ்ந்து வரும் பெரும்பாலான பிராந்தியங்கள் போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சிக்குப்பட்டது. இந்த ஆட்சிமாற்றம் தமிழரின் அரசியல் மற்றும் பாரம்பரிய பொருளாதார, பண்பாட்டுக் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்களை ஏற்படுத்தின. இதுவரை தமிழ் இராசதானியின் தலைநகராக இருந்த நல்லூர் அதன் முக்கியத்துவத்தைப் படிப்படியாக இழக்க யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரின் தலைநகராக மாற்றப்பட்டது. கடற்கரைசார்ந்த யாழ்ப்பாணத்தை போர்த்துக்கேயர் தலைநகராகத் தேர்ந்தெடுத்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன. இவ்விடத்தை தலைநகராகத் தெரிவு செய்வதற்கு காரணமாக இருந்த போர்த்துக்கேய ஆள்பதியான ஒலிவேறா எதிரிகளின் போர் நடவடிக்கைகளை தடுப்பதற்கும், தலைமையகத்துடன் தொடர்பு வைப்பதற்கும், தேவை ஏற்படும்போது அங்கிருந்து உதவிப்படைகளைப் பெறுவதற்கும் கடலுக்கு அண்மித்த யாழ்ப்பாண நகர் நல்லூரை விட முக்கியத்துவம் உடையதென 1624இல் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

போர்த்துக்கேயரின் பாதுகாப்பு, இராணுவ நடவடிக்கை மற்றும் நிர்வாகம் போன்ற தேவைகளுக்காக போர்த்துக்கேயர் தமது ஆதிக்கம் நிலவிய நாடுகளில் கோட்டைகளைக் கட்டியிருந்தனர். அதேபோல் இலங்கையின் கரையோரங்களில் உள்ள துறைமுகப்பகுதிகளின் பாதுகாப்பின் பொருட்டு கோட்டைகளைக் கட்டும்படி போர்த்துக்கேய மன்னன் கோவையிலுள்ள வைஸ்ரொயிற்கு கட்டளையிட்டான். இதன் பிரகாரம் திருகோணமலை, மட்டக்களப்பு, ஊர்காவற்றுறை, நீர்கொழும்பு, வெலிகம, காலி ஆகிய துறைமுகங்களில் கோட்டை கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முதலில் திருகோணமலையில் கோட்டை கட்டும்படி வைஸ்ரோயால் நொறன்காவுக்கு அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் நொறன் தலைமையில் சென்ற படை 1623இல் கோணேஸ்வரர் கோயிலை அழித்து அங்கிருந்த கருங்கற்களைக் கொண்டு கோட்டையை கட்டியது. இதற்குத் தேவையான சுண்ணாம்பு கற்களும், சுண்ணாம்பும் ஒலிரோவினால் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 1624இல் யாழ்ப்பாணத்தில் ஒரு பிரதான கோட்டை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இது நாற்சதுரவடிவில்

தமிழ் கலைக்களஞ்சியம்
Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0198.jpg

பீரங்கித்தளம், சுடுதளம், ஆயுதக்களஞ்சியம், சிறைச்சாலை, படையினரின் இருப்பிடங்களைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. பின் ஆட்சிக்கு வந்த ஒல்லாந்தர் இதை காலிக்கோட்டைக்கு அடுத்த இலங்கையின் இரண்டாவது பெரிய கோட்டையாக மீளுருவாக்கம் செய்தனர். யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சியுடன் அதன் கீழ் இருந்த மட்டக்களப்பு மீது மேலாண்மை செலுத்தி வந்த கண்டிய மன்னன் செனரத் 1628களில் போர்த்துக்கேயருடன் முரண்பட ஆரம்பித்தான். இதன் விளைவாக கரையோரங்கள் எங்கும் தமது பாதுகாப்பு அரண்கள் இருக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. மட்டக்களப்பில் துறைமுகம் இல்லாத நிலையிலும் வைஸ்ரோய் கொண்டி த விடுகுவேறா (Conde de Vidiguvera) வின் கட்டளைப்படி ரொறன்சோ ஆடி 1628இல் மட்டக்களப்பில் மூன்று மைல் தொலைவில் ஊர்ப்பக்கமாக கோட்டை கட்டப்பட்டது. இதைக் கட்டி முடிப்பதில் 1000 போர்த்துக்கேய வீரர்களும், 2000 சிங்கள கூலிப்படைகளும் பங்கெடுத்தனர். இக்கோட்டைகளைத் தவிர 1561இல் மன்னார், நீர்கொழும்பு மற்றும் பூநகரி, ஊர்காவற்துறை ஆகிய இடங்களிலும் கோட்டைகள் கட்டப்பட்டன. மேற்கூறப்பட்ட கோட்டைகள் முதலில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டாலும் தற்காலத்தில் அக்கோட்டைகள் போர்த்துக்கேயரின் கட்டமைப்பில் அவர்களின் கலைமரபில் காணப்படவில்லை. அவை பிற்காலத்தில் ஒல்லாந்தர் ஆட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்டு முற்றிலுமாக ஒல்லாந்தர் கலைமரபில் கட்டப்பட்டதால் தற்காலத்தில் அவை ஒல்லாந்தர் கோட்டை என்றே அழைக்கப்படுகின்றன. அதேவேளை இக்கோட்டைகள் அமைந்துள்ள இடங்களின் வரலாற்றுப் பின்னணிகளை ஆராய்ந்தால் அவற்றுள் பெரும்பாலான இடங்கள் போர்த்துக்கேயருக்கு முன்பாகவே யாழ்ப்பாண அரசு காலத்திலும், அதற்கு முன்னரும் முக்கிய துறைமுகங்களாகவும், பிரதான வணிக மையங்களாகவும் இருந்ததை இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுக்கள், தொல்லியற் சின்னங்கள் உறுதிசெய்கின்றன. யாழ்ப்பாண இராசதானி காலத்திலும் கோட்டையிருந்ததாக தமிழ், சிங்கள இலக்கியங்கள் கூறுவதும் நோக்கத்தக்கது *(Pushparatnam 2014)*.

தமிழ் ஆவணக்காப்பகம்

போர்த்துக்கேயர் இலங்கையில் தமது ஆள்புலங்களுக்கு உட்பட்ட பிராந்தியங்களில் புதிய நிர்வாக முறையைக் கொண்டுவந்தனர். அது ஏற்கனவே இலங்கையில் நடைமுறையில் இருந்த நிர்வாக முறையில் இருந்து சில அம்சங்களில் வேறுபட்டதாக இருந்தது. இந்நிர்வாக முறையில் போத்துக்கல்லில் லிஸ்பனிலிருந்த மன்னனே குடியேற்ற நாடுகளின் தலைவராக இருந்தார். அவர் கி.பி 1510 இல் கோவாவில் அமைக்கப்பட்ட போர்த்துக்கேய தலைமைப்பீடத்தில் அரசபிரதியாக செயற்பட்ட அதிகாரியிடம் கீழை நாடுகளில் உள்ள போர்த்துக்கேயப் பகுதிகளை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைத்தார். அவரின் கீழ்தான் இலங்கைக்கான தலைமை அதிகாரியும் செயல்பட்டார். இவர் சிவில் மற்றும் இராணுவக் கடமைகளை கவனித்து வந்தார். இவருக்கு ஆலோசனைகளை வழங்க இராணுவ அதிகாரிகள், கத்தோலிக்க மதகுருக்களைக் கொண்ட சபை இருந்தது.

இவர்களின் பிரதான நிர்வாக மையமாக இருந்த கோட்டைப்பிரதேசம் நான்கு திசவாலிகாகவும் (மாகாணம்), அவை பற்றுகளாகவும், பற்றுக்கள் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம், வடமராச்சி, தென்மராச்சி, பச்சிலைப்பள்ளி தனிப்பிரிவாகவும், யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள தீவுகள் இன்னொரு தனிப்பிரிவாகவும் பிரிக்கப்பட்டிருந்தது *(சிவசாமி 2014:91)*. கோட்டை அரச ஆள்புலத்தை தமது நேரடிக் கண்காணிப்பில் வைத்திருக்க புதிய நிர்வாகப் பிரிவுகளை ஏற்படுத்திய போர்த்துக்கேயர் நாட்டின் கரையோரப்பகுதிகளில் குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்கனவே இருந்த நிர்வாக முறை போத்துகேயரின் எல்லா நடவடிக்கைகளுக்கும் சாதகமாக இருந்ததால் அவற்றில் அதிக மாற்றங்களைக் கொண்டுவரவில்லை.

இந்நிர்வாக முறையில் தமிழ்ப்பிரதேசத்தின் பிரதம அலுவலராக இராணுவத்தளபதி நியமிக்கப்பட்டார்.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0199.jpg

இவர் இலங்கை முழுவதற்கும் பொறுப்பான பிரதம இராணுவத்தளபதியின் மேற்பார்வையில் செயற்பட்டார். யாழ்ப்பாண இராச்சிய மன்னர்களால் பின்பற்றப்பட்ட நிர்வாக நடைமுறைகளை யாழ்ப்பாண இராணுவத்தளபதியும் பின்பற்றியதைக் காணலாம். வருமான அலுவலர்களை நியமித்தல், வருமானங்கள் செலவுகளை கவனித்தல் போன்ற செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தளபதி மேற்கொண்டிருந்தான். யாழ்ப்பாணத்தின் முதலாவது இராணுவத்தளபதியாக பிலிப் த ஒலிவேறா செயற்பட்டிருந்தான். இருப்பினும் கொழும்பிலுள்ள வருமானக்கட்டுப்பாட்டு அதிகாரியின் (Vedor) மேற்பார்வையின் கீழே இவனது நடவடிக்கைகள் அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. சிவில் நிர்வாகமானது யாழ்ப்பாண இராச்சிய மன்னர் காலத்தில் முதலியார்களின் அதிகாரத்தின் கீழ் இருந்தது போன்றே போர்த்துக்கேயரும் அதைத் தொடர்ச்சியாக பின்பற்றினர். அரசவருமானங்கள் வருமான அதிகாரிகள் என்பவர்களால் (Adigare) சகஅதிகாரிகளின் உதவியுடன் அறவிடப்பட்டது. நிலவரிகள் தனியாக அறவிடப்பட்டது. இவர்களைவிட அதிகாரிகள், விதானைகள் போன்றோரும் வரி அறவிடல் நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்தனர். தலையார், பட்டங்கட்டி போன்றோர் இவர்களுக்கு துணையாகச் செயற்பட்டு வந்தனர். உள்ளூர் அதிகாரிகளான முதலி, விதானை, அதிகாரி, தலையார், பட்டங்கட்டி போன்றவர்களின் உதவியுடன் தோம்பு எழுதத்தலைப்பட்டன. குற்றங்கள் நடைபெறும் போது அதற்கென உருவாக்கப்பட்ட மன்றில் விசாரித்து தண்டனைகள் வழங்கப்பட்டன. அதில் ஏற்கனவே வழக்கிலிருந்த தேசவழமையைப் பின்பற்றி நீதி வழங்கினர். இத்தேசவழமையைப் பின்னர் வந்த ஒல்லாந்தர் தேசவழமைச்சட்டங்களாகக் கொண்டு வந்தனர். யாழ்ப்பாண மன்னரால் மக்களிடமிருந்து வரி பெறும் பொருட்டு தயாரித்த தோம்புகள் போர்த்துக்கேயரின் படைநடவடிக்கைகளின் போது அழிக்கப்பட்டதால் சமகாலத்தில் நிலவும் நிலைமைகளை கண்டறியும் பொருட்டும் புதிதாக தோம்பு தயாரிக்க முனைந்தனர். இதன்படி மன்னாருக்கும், யாழ்ப்பாணத்திற்கும் தனித்தனியான தோம்புகள் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1620இல் லிங்கரோட் த செயிஸாஸ் என்ற வரி அறவிடும் அதிகாரி மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டபோது அங்கு நிலங்கள் பதியப்படாமல் இருந்தமை தெரியவந்தது. இதனால் 1635, 1636 ஆண்டுகளில் அமரோ ரொயிஸ் என்ற அதிகாரி மன்னாருக்கு விஜயம் செய்து நிலவரி அறவிடுவதற்கான கட்டளைகளையும், காணிப்பதிவு சம்மந்தமான அறிக்கைகளையும் தயாரித்தார். இதேபோன்று யாழ்ப்பாணத்திற்கும் தோம்பு தயாரிக்கப்பட்டதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1623இல் தொடங்கப்பட்ட இம்முயற்சி 1637ஆம் ஆண்டளவில் அமரோ ரொயிஸ் என்பவரால் செய்து முடிக்கப்பட்டது. இத்தோம்பில் எவ்வளவு வருமதிகள் நிலுவையாக உள்ளன, யார் யார் காணிச்சொந்தக்காரர்கள், காணிகளின் தன்மைகள், அளவுகள் போன்ற பல்வேறு விபரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கை பின்னர் டச்சுக்காரர்களினால் எரிக்கப்பட்டது. ஆனால் இவ்விபரமான அறிக்கை இருந்திருந்தால் தமிழ்ச் சமூகம் பற்றிய விபரங்களை பெறுவதற்கு உதவியாக அமைந்திருக்கும்.

போர்த்துக்கேயர் இலங்கையில் குறிப்பாக தமிழர் பிராந்தியங்களில் முறையான பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. இதற்கு தாய்நாட்டில் ஏற்பட்ட மாறுதல்களும், இலங்கையில் கண்டி அரசுடன் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டமையும் முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன. போர்த்துக்கேய ஆசிரியரான குவேரோஸ் இலங்கையின் திறைச்சேரி நீண்டகாலமாக காலியாக இருந்ததாகவும், இதுவே போர்த்துக்கேயர் இலங்கையை இழப்பதற்கு காரணம் எனக் கூறுகிறார். போர்த்துக்கேயர் முடிந்தளவு மக்களின் பொருளாதார நலன்களைச் சுரண்டி தமது வருவாயைப் பெருக்கிக் கொள்வதை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வந்தனர். இதற்கு ஏற்றமுறையில் தமிழர் பிரதேசங்களில் போர்த்துக்கேயர்கள் புதிய நாணய பெறுமதி முறைகளை அறிமுகப்படுத்தியிருந்தனர். போர்த்துக்கேயரின் தலைமைப்பீடமான கோவாவில் புழக்கத்தில் இருந்த நாணயம் கோவாறெயிஸ் (Goareis) என அழைக்கப்பட்டது. 24 கோவாறெயிஸ் 1யாழ்ப்பாணமாகவும், 270 கோவாறெயிஸ்

Tamilselam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0200.jpg

1யாழ்ப்பாண செறாபின் (Xerapin) ஆகவும் 450 கோவாறெயிஸ் 1யாழ்ப்பாணம் பாதோ (Jaffna pardo) ஆகவும் பெறுமதியிடப்பட்டது. இவ்வகையான நாணயப் பெறுமதிகள் ஊடாக தமிழர் பிரதேசங்களில் போர்த்துக்கேயர்கள் ஈட்டிய வரவு, செலவுகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும் யாழ்ப்பாண மன்னர்களின் ஏகபோக உரிமையாக இருந்த அதிக வருவாய் ஈட்டிக் கொடுத்த யானை வர்த்தகம், முத்துக்குளிப்பு போன்றவற்றையும் போர்த்துக்கேயர் தமது ஏகபோக உரிமையாக்கிக் கொண்டனர். மேலும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட துறைமுகவரி, மரணவரி, மீன்பிடிவரி, பனைவரி, நிலவரி என்பவற்றின் மூலமும் போர்த்துக்கேயர் அதிக வருவாயை ஈட்டினர். இவற்றைத் தவிர யாழ்ப்பாணப் குடாநாட்டில் பெரிதும் உற்பத்தி செய்யப்பட்ட புகையிலை, சாராயம், கள்ளு போன்றவற்றுக்கும் வரி விதிக்கப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் மக்களால் மன்னர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த பால், நெய், தேன், அரிசி, வெற்றிலை, வாழைப்பழம், விவசாய உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றை போர்த்துக்கேய அதிகாரிகளுக்கும் கொடுக்க வேண்டியிருந்தது. யாழ்ப்பாண அரசுகாலத்தில் முக்கிய வர்த்தகப் பொருளாக இருந்த சாயவேர் வர்த்தகம் போர்த்துக்கேயர் ஆட்சியிலும் முதன்மை பெற்றது. மன்னார், மட்டக்களப்பு பகுதிகளில் கிடைக்கப்பெற்ற சாயவேர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள புடவைத் தொழிற்சாலைகளுக்கு கொண்டு வரப்பட்டு அவை புடவைகளாக யாழ்ப்பாணத்தின் முக்கிய சந்தைகளில் ஒன்றான வண்ணார்பண்ணையில் விற்கப்பட்டன. அவற்றை அதிக அளவில் இந்தியா, எகிப்து நாட்டு வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். இவ்வாறான ஏற்றுமதி, இறக்குமதி பொருட்களுக்கு போர்த்துக்கேயர் அதிகளவு சுங்கவரியை அறவிட்டார்கள். இச்சுங்கவரி காலத்திற்கு காலம் ஏனைய வரிகள் போன்று அதிகரிக்கப்பட்டிருந்தமையைக் காணலாம். பொதுவாக போர்த்துக்கேயர் தமிழ் பிரதேசங்களில் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கை சதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவவில்லை என்றே கூறலாம். சிறிய அளவில் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டிருந்தாலும் அதிக வருவாய்தரும் யானை வர்த்தகம், முத்து வர்த்தகம் போர்த்துக்கேயரின் ஏகபோக உரிமையாக இருந்ததுடன் பலவற்றிற்கும் மக்களிடம் வரி அறவிடப்பட்டமை, மக்களின் உற்பத்திப் பொருட்களை இலவசமாகப் பெற்றமை, சுதேச விவசாயம் புறக்கணிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் தமிழ் பிரதேச மக்கள் பொருளாதார ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டனர். அபேசிங்க என்ற அறிஞர் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் போர்த்துக்கேய ஆதிக்கமானது பேரழிவாகவே அமைந்தது. அதன் சனத்தொகை குறைந்தது. வர்த்தகம் பாதிக்கப்பட்டது. அதன் மக்கள் மேலும் ஏழைகளாயினர்.' என்ற கூற்றிலிருந்து அறிய முடிகிறது *(Abesinghe. 1966)*.

இலங்கை வரலாற்றில் போர்த்துக்கேயர் ஆட்சியால் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களில் ஒன்று தமிழருக்கு அன்னியமாக இருந்த கத்தோலிக்க மதத்தை புதிதாக அறிமுகப்படுத்தியதாகும். போர்த்துக்கேயரின் கீழைநாடுகளுக்கான வருகையின் நோக்கம் வர்த்தக மேலாதிக்கம் பெறுவதாக இருந்தாலும் அதன் பின்னால் தமது மதத்தைப் பரப்புவதே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டனர். இதனால்தான் போர்த்துக்கேயரின் அரசியல் மேலாதிக்கம் இலங்கையிலும், தமிழ்ப் பிரதேசங்களிலும் ஏற்பட முன்னரே கத்தோலிக்க மாதமாற்றம் ஏற்படக் காரணமாகும். போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் யாழ்ப்பாண அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிராந்தியங்களில் இந்துமதமே அரச ஆதரவுபெற்ற மதமாக இருந்தது. ஆனால் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றியதன் பின்னர் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கு ஆக்கபூர்வமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நிர்வாக ஆலோசனை சபையில் கத்தோலிக்க மதகுருமாரையும் இணைத்துக்கொண்ட போர்த்துக்கேய அரசு பிரான்சிஸ்கன்சபை, இயேசுசபை, ஒகஸ்ரீனியன்சபை, டொமினிக்கன்சபை முதலான கிறிஸ்தவ சபைகள் ஊடாக அரசமட்டத்திலும், சாதாரண மக்கள் மத்தியிலும் கத்தோலிக்க சமயத்தை நிலைநாட்டும் முயற்சிகளை முன்னெடுத்தனர். அதேவேளை அரச அங்கீகாரத்துடன் மதமாற்றும் பணிகளில் ஈடுபட்ட

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0201.jpg

கத்தோலிக்க மதகுருமாரும் அம்மதத்தை மக்கள் விரும்பி ஏற்கும் முறையில் தமது பிரச்சாரத்தை முன்னெடுத்தமை மக்களைப் பெரிதும் கவர்ந்தது. சமகாலத்தில் தென்னிந்தியாவில் பிரான்சிஸ்கன் சவேரியர் எனும் மதகுருமாரின் சமயப் பிரச்சாரத்தால் அதிக மக்கள் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டனர். இந்நிலையில் தென்னிந்தியாவுடன் நொருங்கிய தொடர்புகளை வைத்திருந்த மன்னார் பிரதேச மக்கள் சவேரியரை மன்னாருக்கு வரவழைத்தனர். அவரின் வருகை தமிழ்ப்பிரதேசங்கள் கத்தோலிக்க மதம் காலூன்றுவதற்கு தொடக்கப்புள்ளியாக இருந்தது. இதன் மூலம் யாழ்ப்பாண இராசதானியைப் போர்த்துக்கேயர் வெற்றி கொள்வதற்கு முன்னரே அவர்களின் ஆதிக்கப் பரப்பில் கத்தோலிக்க மதம் பரவுவதற்கு வழியேற்பட்டது எனலாம்.

மன்னாரில் சவேரியரின் குறுகிய காலப் பிரச்சாரத்தில் அதிக எண்ணிக்கையிலான இந்துக்கள் கத்தோலிக்கத்திற்கு மாறினர். இம்மத மாற்றத்தை அறிந்த சங்கிலிய மன்னன் காலப்போக்கில் தனது ஆட்சிக்கும், சைவர்களுக்கும் இது பாதகமாக அமையும் எனக் கருதி தனது படையை மன்னாருக்கு அனுப்பி வயது, பால் வேறுபாடின்றி மதம் மாறிய 600 பேரைக் கொலை செய்தான் எனக் கூறப்படுகிறது. இச்சம்பவத்தை போர்த்துக்கேய ஆவணங்கள் 'மன்னார் படுகொலைகள்' எனக் குறிப்பிடுகின்றன. இந்த எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்டதாக இருப்பினும் மதம்மாறியோர் சங்கிலிய மன்னனால் கொல்லப்பட்டனர் என்பதை மறுதலிக்கவும் ஆதாரங்கள் இல்லை. சங்கிலிய மன்னன் மதமாற்றத்தைத் தடுப்பதற்கு சில நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த எதிர்மன்னசிங்ககுமாரன் மற்றும் பரராசசேகரன் காலத்தில் மதமாற்றத்தில் ஈடுபட்ட பிரான்சிஸ்கன் குருமார்கள் யாழ்ப்பாண இராச்சியத்திற்குள் நுழையத் தொடங்கினர். அவர்கள் இராதானியில் உயர்பதவியிலிருந்த முதலியார், தலையாழி போன்ற உயர்வகுப்பினரை முதலில் மதம்மாற்றுவதற்கு முயற்சி எடுத்து அதில் ஓரளவு வெற்றியும் பெற்றனர். இது யாழ்ப்பாண இராச்சியம் மீதான போர்த்துக்கேயரின் வெற்றிக்குக் காரணமாகியது. இவ்வெற்றியைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் மிசநெறிகளின் நடவடிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. 1622இல் இயேசுசபைக் குருமார் ஒரு கல்லூரியை நிறுவி அதனையே யாழ்ப்பாண இராச்சியத்தின் சமய நடவடிக்கைகளின் மையமாகப் பயன்படுத்தினர். 1624 - 1626ஆம் ஆண்டுகளில் பிரான்சிஸ்கன் சபையின் கீழ் 52 000 பேர் மதம் மாறியதாகக் கூறப்படுகிறது. யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சியுடன் இந்துக்களுக்கு உதவக்கூடியதாக தலைவர்கள் இல்லாதிருந்தனர். சமகாலத்தில் தமிழகத்தில் தஞ்சாவூரில் நாயக்கர்கள் இந்து ஆட்சியாளர்களாக இருந்த போதும் யாழ்ப்பாணத்திற்கும் தஞ்



மன்னார் மாதோட்டம்
திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயம்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0202.jpg

சாவூருக்குமான தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது. இவற்றின் காரணமாக யாழ்ப்பாண இந்துக்கள் எதிர்ப்பைக் காட்ட முடியாத நிலையில் கத்தோலிக்க மதத்தைச் சேர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தீவிரமான மதமாற்றத்தைக் கருத்தில் கொண்டே குவைரோஸ் சுவாமிகள் யாழ்ப்பாணத்தை கிறிஸ்தவ நாடு என வருணிக்கும் அளவிற்கு நிலமை மாறியிருந்தது.



திருகோணமலை
கோணேஸ்வரர் ஆலயம்

Tamileelam Archive

போர்த்துக்கேயர் தமது மதம் பரப்பும் முயற்சிகளின் போது ஒரு புறம் இந்து மதத்தை முற்றாக அழித்தலையும், மறுபுறம் அவ்விடத்தில் கத்தோலிக்க மதத்தை நிலையூன்றச் செய்வதையும் கொள்கையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தி வந்தனர். இதற்கு மன்னாரில் திருக்கேதீஸ்வரம் (1560), நயினைதீவில் நாகபூசணி அம்மன் (1622), கீரிமலை நகுலேஸ்வரம், நல்லூர் கந்தசுவாமி (1621), திருகோணமலையில் திருக்கோணேஸ்வரம் கோயில் (1623) முதலான ஆலயங்கள் அழிக்கப்பட்டதை ஆதாரங்களாகக் காட்டப்படுகின்றன. இதற்குப் போர்த்துக்கேய ஆட்சியின் முதற் தேசாதிபதியாக விளங்கிய பிலிப் த ஒலிவேரா என்ற படைத்தளபதியால் யாழ்ப்பாணத்தில் 500ற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டதை போர்த்துக்கேய ஆவணங்களில் பெரும் சாதனையாக புகழ்ந்துரைக்கப்பட்டதை ஆதாரமாகக் கொள்ளமுடிகிறது. இவ்வாறு இடித்தழிக்கப்பட்ட ஆலயங்களில் இருந்து எடுக்கப்பட்ட கற்கள், தூண்கள் பிற கட்டிடப் பொருட்கள் போர்த்துக்கேயர் காலத்தில் அமைக்கப்பட்ட கோட்டைகள், கிறிஸ்தவ ஆலயங்கள், நிர்வாக மையங்கள் என்பவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு கோணேஸ்வரர் ஆலயச் சுற்றாடலில் இருந்து எடுக்கப்பட்ட புராதன ஆலயக் கட்டிட எச்சங்களும், மாதோட்ட அகழ்வாய்வில் கிடைத்த புராதன சிற்பங்கள், சிலைகள், தற்போது கோட்டை அகழ்வாய்வில் கிடைத்துவரும் புராதன ஆலயங்களுக்குரிய சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய பலதரப்பட்ட தூண்களும் சான்றாக உள்ளன. சில இடங்களில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இந்துக்கோவில்களுக்கு அருகில் அவர்களின் கத்தோலிக்க தேவாலயங்கள் கட்டப்பட்டன. இதற்கு நல்லூரில் முத்திரைச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள தேவாலயம், சாவகச்சேரியிலுள்ள தேவாலயம்,

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0203.jpg

மானிப்பாய் மருதடியிலுள்ள தேவாயம் என்பன ஆதாரங்களாகக் காட்டப்படுகின்றன.

போர்த்துக்கேயர் தமது ஆட்சியில் அறிமுகப்படுத்திய கடுமையான சட்டங்கள், தண்டனைகள் என்பவற்றின் மூலம் இந்து சமயத்தவர்களுக்கு பல அசௌகரியங்களை ஏற்படுத்தினர். சமய வழிபாட்டிற்கு தடை விதித்திருந்தனர். 'சைவமத' வணக்கம் செய்யப்படக்கூடாது, பூசைகள் மற்றும் விரதங்கள் என்பன அணுட்டிக்கப்படலாகாது. அதைச் செய்வோர் தண்டிக்கப்படுவர் எனச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. அவ்வாறு செய்தவர்களை ஒற்றர்கள் மூலம் கண்டறிந்து தண்டிக்கப்பட்டனர். இருந்தபோதிலும் தீவிர சைவர்கள் இத்தடைகளை மீறி தமது இஷ்ட தெய்வங்களை மறைவாக வழிபாடு செய்து வந்ததுடன், விரதநாட்களில் தாம் உணவருந்தப் பயன்படுத்திய வாழையிலைகளை கூரைகளிலும், வேலிகளிலும் மறைவாக ஒளித்து வைத்தனர். 1567 இல் கோவாவில் நமந்த மகாநாட்டில் கத்தோலிக்கமானது பலாத்காரம் மூலம் பிரச்சாரம் செய்யக்கூடாதென்றும், கத்தோலிக்கமே போர்த்துக்கேயரின் பிரதான பிரச்சார நோக்கமென்றும், கத்தோலிக்க திருச்சபைக்கு அரசு ஆதரவு அளிக்கவேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் இலங்கையில் போர்த்துக்கேயர் நேரடியாக பலாத்காரத்தைப் பயன்படுத்தி மதமாற்றம் செய்யதற்கு ஆதாரங்கள் இல்லாவிட்டாலும், எதிர்மறையான பலாத்கார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன *(சிவசாமி 2014: 189)*.

மேலும் போர்த்துக்கேயர் ஆட்சியில் இந்து மதத்தவர்களுக்கு உயர் பதவிகள், பதவி உயர்வுகள், கல்வி வாய்ப்புக்கள், வரிவிலக்குகள் முதலான சலுகைகளை வழங்கி அவர்களையும் மதமாற்றம் செய்தனர். மதம் மாறிய கத்தோலிக்கர்களுக்கு பதவிகள் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்பட்டது. உயர் பதவிகள் பெறுபவர்களுக்கு அவர் வாழ்ந்த இடத்திற்குப் பொறுப்பான பாதிரியாரின் சிபாரிசு அவசியமாக இருந்தது. மதம் மாறியவர்களுக்கே கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்படும் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டது. கத்தோலிக்க மதத்தைச் சாராத ஒருவர் இறக்கும் பட்சத்தில் அவருடைய சொத்துக்கள் யாவும் அரசுக்கே உரியது என்ற நிலை உருவாக்கப்பட்டது. இவ்வாறான கடும் சட்டங்கள், நடைமுறைகள் காரணமாக கல்வி, வரிச்சலுகைகள், உயர் பதவிகள் என்பவற்றைப் பெறுவதற்காக உயர் வகுப்பினரும் கத்தோலிக்க மதத்திற்கு மாறநேரிட்டது. கொடூரமான கொலைக் குற்றவாளிகள் அத்தண்டனையில் இருந்து தப்புவதற்காகவும் மதம் மாறினர். போர்த்துக்கேய மன்னனான டொன்ஜோவா 1546 இல் தமது இந்திய அரசப்பிரதிநிதிக்கு எழுதிய ஆணையிலே கத்தோலிக்க குடிகளுக்கு உலகியல் சார்பான நன்மைகளை வழங்குமாறு குறிப்பிட்டிருந்தார் *(சிவசாமி 2014 : 192)*. மதமாற்றம் தீவிரமாக நடந்த காலகட்டத்தில் 1628 -29 காலப்பகுதியில் யாழ்ப்பாணக்குடா நாட்டிலுள்ள தமிழ்ப் படைகளும் கண்டி மன்னனது படைவீரர்களும் இணைந்து இரண்டு தடவைகள் போர்த்துக்கேயருக்கு எதிராகப் படையெடுத்தனர். இப்படையெடுப்பில் இரண்டு கத்தோலிக்கப் பாதிரிமார் கொலை செய்யப்பட்டதுடன் 13க்கும் அதிகமான தேவாலயங்களையும் கத்தோலிக்க மதச்சின்னங்களையும் அழித்தொழித்திருந்தனர். இதுவே போர்த்துக்கேயருக்கெதிராக தமிழ்ப் படைகள் மேற்கொண்ட இறுதிப்போர் நடைவடிக்கை ஆகும். இருந்தபோதிலும் 1658இல் போர்த்துக்கேயர் ஆட்சி முடியும்வரை தமிழ்ப் பிரதேசத்தில் மதமாற்றம் தொடர்ந்த வண்ணமே இருந்தது.

தமிழ்ப் பிரதேசத்தில் போர்த்துக்கேயர் மேற்கொண்ட கத்தோலிக்க மதமாற்ற நடவடிக்கைகளை ஆராயும் போது மதம்மாறிய இந்துக்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தை முழுமனதோடு ஏற்றுக் கொண்ட நிலையில் அம்மதத்திற்கு மாறியதாகத் தெரியவில்லை. போர்த்துக்கேய அரசின் மதம்சார்ந்த கடுமையான சட்டங்கள், தண்டனைகள், இராணுவ உத்தியோகத்தினரது மதமாற்று அணுகுமுறை, கல்வி, பதவி, பதவி உயர்வுகள், வரிமுறைகள் என்பவற்றில் இருந்த நடைமுறைகள், தடைகள், தண்டனைகள் பலரை நிர்ப்பந்தத்தின் பேரில் மதம்மாறச் செய்தது. அதேவேளை சமகாலத்தில்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0204.jpg

இங்கு நிலவிய அரசியல், பொருளாதார, சமூகக் காரணங்களும் குறிப்பிட்ட ஒரு பகுதி மக்களை கத்தோலிக்க மதத்தை விரும்பி ஏற்கச் செய்தது. குறிப்பாக எப்போதும் அதிகாரவர்க்கத்துடன் இணைந்து சலுகைகளை பெற்றுக் கொள்வதில் ஆர்வம்காட்டிய உயர் வகுப்பிலிருந்த சில முதலிமார், விதானைகள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மதம் மாறிய போது அவர்களுக்கு கீழ்ப்பட்ட சமூக மட்டத்தில் பின்தங்கிய மக்களும், வரிகள் செலுத்த முடியாமல் வறுமையில் வாடிய மக்களும் கத்தோலிக்க மதத்தை தாமாக ஏற்றுக் கொண்டனர். கத்தோலிக்க மதத்தில் காணப்பட்ட சாதிக்கட்டுப்பாடுகளின் நெகிழ்ச்சித் தன்மையும் மதமாற்றத்தைத் தூண்டின. மேலும் கத்தோலிக்க மிசநெறிகளினதும், சமயக்குருமார்களினதும் அணுகுமுறைகளும், மனிதநேயப்பணிகளும் மக்களின் மதம் மாற்றத்திற்கு காரணமாக இருந்தது. மதப்பிரச்சாரத்தில் ஈடுபட்ட கத்தோலிக்க மகுருமார் சுதேச மொழிகளில் நன்கு புலமை பெற்று அம்மொழிகளில் தமது மதப் பிரச்சாரத்தை மேற்கொண்டமையும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. கத்தோலிக்க மத வழிபாட்டு முறையில் காணப்பட்ட கவர்ச்சிகரமான ஆடம்பர சடங்காசாரங்கள், விக்கிரகங்கள், பூசைகள், செபமாலை, தூபம், பவனி, விழாக்கள், விரதங்கள் என்பன இங்கிருந்த சுதேச சமய நிகழ்வில் இருந்து அதிகம் வேறுபாடு கொண்டிருக்கவில்லை. இவை மதம்மாறியோரைப் பெரிதும் கவர்ந்ததன. ஆயினும் கத்தோலிக்கத்தைப் புதிய மதமாக ஏற்ற மக்களில் ஒரு பிரிவினர் ஒல்லாந்தர் வருகையுடன் அறிமுகப்படுத்தப்பட்ட புரட்டஸ்தாந்து மதத்திற்கு மாறினர். அதேவேளை 1802 இல் யாழ்ப்பாணத்தில் 136000 இருந்த கிறிஸ்தவர்கள் 1806 இல் இங்கு ஏறக்குறைய மறைந்துவிட்டனர் எனப் புசன் என்பவர் குறிப்பிடுகிறார் *(சிவசாமி 2014: 193)*. இதற்குக் கிறிஸ்தவர்கள் மீண்டும் கத்தோலிக்க மதத்திற்கு மாறியதே காரணமாகும். இந்த மதமாற்றத் தளம்பல்கள் மதம்மாறிய மக்களின் பலவீனத்தை அல்லது சுயநலத்தைக் காட்டுவதாகக் கொள்ளலாம். இலங்கையில் தமிழ், சிங்கள மக்களைத் தனித்து அடையாளப்படுத்தும் பண்பாட்டுக்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு. இம்மக்கள் பண்டு தொட்டு இந்தியா, கிரேக்கம், உரோம், அரேபியா, சீனா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். இதனால் அந்நாடுகளின் பண்பாடுகள் அவ்வக்காலங்களில் இலங்கையில் பரவி அவை தமிழ், சிங்கள மக்களின் பண்பாடுகள் தனிப்போக்குடன் வளர உதவின. இவற்றின் தொடர்ச்சியாக ஐரோப்பியரது பண்பாடுகள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் பரவின. ஆயினும் இவர்களின் பண்பாடுகள் இலங்கையில் வர்த்தகத்தால் மட்டுமன்றி அவர்களின் ஆட்சி அதிகாரம், அரச ஆதரவு பெற்ற சமயங்கள் என்பவற்றின் பின்னணியில் நடைபெற்றவை. இதனால் அப்பண்பாடுகள் இலங்கை மக்களின் பாரம்பரிய பண்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றங்களை ஏற்படுத்தக் காரணமாக இருந்தன. அவற்றுள் சில பண்பாட்டு அம்சங்கள் தனித்தும், சில பண்பாட்டு அம்சங்கள் சுதேச பண்பாடுகளுடன் கலந்தும் காலப்போக்கில் இலங்கைக்கே உரிய பண்பாடாக வெளிக்கிளம்பின. போர்த்துக்கேயரது ஆட்சியில் அவர்களது பண்பாடு தமிழர் பிராந்தியங்களில் பரவுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நிர்வாகத்தில் உயர் பதவிகளை வகித்தவர்களுக்கு போர்த்துக்கேயர் தமது பெண்களைத் திருமணம் முடித்துக்கொடுத்து கலப்புத் திருமணத்தை ஊக்கப்படுத்தினர். இப்புரட்சிகரமான மாற்றத்தால் போர்த்துக்கேயப்பண்பாடு மிக இலகுவாக தமிழரின் பாரம்பரிய பண்பாட்டுடன் இரண்டறக் கலப்பதற்கு வழிகோலியது. இக்கலப்புத் திருமணத்தால் உருவான பிற்காலச் சந்ததியினர் தற்காலத்திலும் நெடுந்தீவு, யாழ்ப்பாணம், வடமராச்சி போன்ற இடங்களில் வாழ்ந்து வருவதைக் காணலாம். போர்த்துக்கேயர் தமது மதம் மற்றும் மதம் சார்ந்த பண்பாட்டைப் பரப்புவதற்கு கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். அவர்கள் அறிமுகப்படுத்திய கத்தோலிக்க மிசநெறிப் பாடசாலை முறை தமிழரின் பாரம்பரியத் திண்ணைப் பள்ளிக் கல்வி முறை படிப்படியாக மறைந்து பாடசாலைக் கல்வி முறை வளர்வதற்கு வழிவகுத்தது. போர்த்துக்கேய ஆவணங்கள் 1634இல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 25 கல்வி நிலையங்களில் 70000 கத்தோலிக்க மாணவர்களுக்கு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0205.jpg

மதக் கல்வியும், அடிப்படைக் கல்வியும் போதிக்கப்பட்டதாகக் கூறுகின்றன. இதன் விளைவால் யாழ்ப்பாணச் சமூகத்தில் கத்தோலிய மதம் சாரந்த புதிய வகுப்பினர் தோன்றினர். இந்த மாற்றங்கள் தமிழ் சமூகத்தில் மிகவும் இறுக்கமாக இருந்த சாதிக்கட்டுப்பாடுகள், ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றில் ஒருவித தளர்ச்சி நிலையை ஏற்படுத்தின. போர்த்துக்கேயர் ஆட்சியில் மேலைத்தேய வைத்தியமுறை அறிமுகமாகியது. இதற்கு மன்னாரில் ஊனமுற்றவர்களுக்கும், நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிப்பதற்காக அமைக்கப்பட்ட இரு வைத்தியசாலைகளை உதாரணமாகக் காட்டலாம். இதனால் போர்த்துக்கேயர் ஆட்சியில் தமிழரின் பாரம்பரிய சித்தவைத்தியம் மற்றும் உள்ளூர் வைத்திய முறையுடன் மேலைத்தேய வைத்திய முறையும் பயன்பாட்டிற்கு வந்தது. தமிழர் பிராந்தியங்களில் போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சி ஏறத்தாழ 37 ஆண்டுகள் நிலைத்திருந்தாலும் அவர்களின் வாழ்வியல் அம்சங்கள் பல தமிழர் சமூகத்தில் கலந்து அவற்றின் எச்சசொச்சங்கள் தற்காலத்திலும் பயன்பாட்டிலிருப்பதைக் காணலாம். தற்காலத்தில் பெரிதும் புழகத்திலிருந்து வரும் விறாந்தை, யன்னல், கதிரை, அலுமாரி, சப்பாத்து, தொப்பி, பொலிஸ் போன்ற சொற்கள் போர்த்துக்கேய மொழிச் சொற்களாகும். மேலும் அவர்களின் ஆட்சியில் பெரிதும் பயன்பாட்டிலிருந்த அன்னாசி, பாண், கோதுமை, முள்ளங்கி, வினாகிரி, மதுபானம் போன்ற உணவுவகைளும், அவற்றிற்குரிய பெயர்களும் தற்காலத்திலும் நிலைத்திருப்பதைக் குறிப்பிடலாம். இன்று கத்தோலிக்க மதத்தவர் மத்தியில் பெரிதும் வழக்கிலுள்ள அல்மேடா, மத்தியூஸ், மார்ட்டின், நிக்கலஸ், செபஸ்ரியன் போன்ற தனிநபர் பெயர்கள் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தை நினைவுபடுத்துவதாக உள்ளன. போர்த்துக்கேயர் ஆட்சியோடு கத்தோலிக்க மதம் சார்ந்த இலக்கிய மரபு தோன்றியது. இதற்கு உதாரணமாக ஞானப்பள்ளு, அர்ச்சயாகப்ப அம்மானை, ஞானாந்தபுராணம் போன்ற நூல்களைக் குறிப்பிடலாம். அன்னியமான கட்டிட, சிற்பக்கலை மரபுகளும், இசை, நாடகம், கூத்து முதலிய கலைகளும் அறிமுகமாயின. இப்பண்பாட்டுச் செல்வாக்கு வடஇலங்கையின் பெருநிலப்பரப்பான வன்னியைச் சென்றடையவில்லை. தமிழ்ப் பிராந்தியங்களான திருகோணமலை, மட்டக்களப்பில் போர்த்துக்கேயரின் மேலாதிக்கம் பிற்பகுதியில் ஏற்பட்டதால் அவர்களின் பண்பாட்டுச் செல்வாக்கின் தாக்கம் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்பட்டன.

ஒல்லாந்தர் ஆட்சியில்

ஒல்லாந்து தேசம் பல ஆண்டுகளாக ஸ்பானிய சாம்பிராயத்தின் ஒரு பகுதியாகவிருந்தது. பதினாறாம் நூற்றாண்டில் பல காரணங்களை முன்னிட்டு ஒல்லாந்து ஸ்பானியரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டு சுதந்திரத் தனிநாடாக எழுச்சி பெற்றது. 17 ஆம் நூற்றாண்டிலிருந்து விஞ்ஞானம், வணிகவியல், கப்பல் கட்டுதல் என்பவற்றால் இந்நாட்டின் கடலாதிக்கம் வளர்ந்தது. இந்நிலையில் 16ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் போர்த்துக்கேய - ஸ்பானிய வல்லரசுகளுக்கெதிராக அத்திலாந்திக் கரையோர நாடுகளாகிய ஒல்லாந்துடன் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் எழுச்சி பெற்றன. புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்த இந்நாடுகள் கத்தோலிக்க நாடான போர்த்துக்கல்லுக்கு எதிராக ஆசியா மீதான தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்தத் தொடங்கினர். இதற்கு வர்த்தகக் கம்பனிகளைப் பயன்படுத்திக் கொண்டனர். இவ்வர்த்தகக் கம்பனிகள் தனிப்பட்டவர்களால் ஸ்தாபிக்கப்பட்டாலும் இவற்றிற்கு அரச ஆதரவுகள் இருந்தன. அதில் இங்கிலாந்து - ஆங்கில கிழக்கிந்தியக் கம்பனி (English East India Company) மூலமாகவும், ஒல்லாந்து - ஐக்கிய கிழக்கந்திய கம்பனி (Veerinigde Ost–Indische Compagnie) ஊடாகவும், பிரான்ஸ் - பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பனி ஊடாகவும் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவ்வர்த்தக நடவடிக்கைகளினால் ஐரோப்பியர்களிடையே ஏற்பட்ட போட்டியின் முடிவில் இந்தியாவில் ஆங்கிலேயரும் இலங்கையில் ஒல்லாந்தரும் ஆதிக்கம் பெற்றனர் *(Arasaratnam 1958)*.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0206.jpg

ஒல்லாந்தர் இலங்கையை கைப்பற்றுவதற்கு இதன் அமைவிடம், இயற்கையாகக் காணப்பட்ட பொருளாதார வளங்கள், திருகோணமலைத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவம், கடல்சார் தொடர்புகளுக்குச் சாதகமான துறைமுகங்கள் மற்றும் புரட்டஸ்தாந்து மதத்தை இலங்கையில் பரப்புதல் என்பன முக்கிய காரணங்களாக இருந்தன. இதற்கு கண்டி மன்னனுடன் ஏற்படுத்திய நல்லுறவுகளும், உடன்படிக்கைகளும், கண்டி மன்னர்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையிலான பகைமையுணர்வும் ஒல்லாந்தர் இலங்கையில் கால்பதிக்கச் சாதகமாக அமைந்தன. இக்காலப்பகுதியில் கோட்டை, யாழ்ப்பாண இராச்சியங்களை கைப்பற்றியிருந்த போர்த்துக்கேயர் தமது மேலாண்மையை கண்டி அரசின் மீதும் ஏற்படுத்தப் பல தடவைகள் படையெடுப்புக்களை மேற்கொண்டனர். ஆயினும் இறுதிவரை போர்த்துக்கேயரால் கண்டியை வெற்றி கொள்ளமுடியவில்லை. இந்நிலையில்தான் கண்டி மன்னன் 2ஆம் இராஜசிங்கன் போர்த்துக்கேயரது ஆட்சியை இலங்கையில் இருந்து அகற்றும் நோக்கில் கடல்வலிமை கொண்ட ஒல்லாந்தரின் (டச்சுக்காரரின்) உதவியை நாடி அவர்களுடன் 1638இல் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டான். இவ்வுடன்படிக்கையின்படி ஒல்லாந்தர் தங்கள் கடற்படையுடனும், தரைப்படையுடனும் கண்டியரசுக்குத் துணையாகப் போர்த்துக்கேயரை எதிர்த்துப் போரிட்டு அவர்களை இலங்கையின் கரையோரங்களில் இருந்து கலைத்து, அவர்களின் முக்கிய கோட்டைகளைக் கைப்பற்றி, அந்நாடுகளை அரசனுக்கு மீட்டுக் கொடுக்க இணங்கினர். இதற்குப் பதிலாக கண்டி அரசன் இலங்கையில் வளரும் கறுவா முழுவதையும் மற்றும் இலங்கையின் வர்த்தகத்தையும் ஒல்லாந்தருக்கே ஒப்படைப்பதென உடன்பட்டு, வேறு அன்னியரை உள்ளே நுழைய அனுமதிப்பதில்லை என்ற உடன்பாட்டுக்கும் வந்தனர் *(அரசரட்ணம் 2014 :63)*.

இவ்வொப்பந்தத்தைத் தொடர்ந்து கண்டி மன்னனின் உதவியுடன் போர்த்துக்கேயரை விரட்டிய ஒல்லாந்தர் இறுதியில் இலங்கைத்தீவின் கரையோரப் பிரதேசங்களை முழுவதையும் தம் மேலாண்மைக்குள் கொண்டு வந்திருந்தனர். இதற்கு அமைவாக போர்த்துக்கேயருக்கு எதிராகப் படையெடுத்த ஒல்லாந்தர் முதலில் 1638இல் மட்டக்களப்பையும், அதையடுத்து 1639இல் திருகோணமலையும் கைப்பற்றி கண்டி மன்னன் இராசசிங்கனிடம் ஒப்படைத்தனர். அடுத்த ஆண்டிலேயே நீர்கொழும்பையும் கைப்பற்றினர். ஆயினும் போர்த்துக்கேயர் ஒரு சில மாதங்களில் திரும்பவும் நீர்கொழும்பைக் கைப்பற்றினர். இந்நிலையில் இலங்கை முழுவதனையும் தமது மேலாண்மைக்குள் கொண்டுவர விரும்பிய ஒல்லாந்தர் கறுவாக்காடுகள் அதிகம் காணப்பட்ட மேற்குப் பிரதேசங்களைக் கைப்பற்றும் நோக்கில் 1640 இல் காலியையும், 1644 இல் திரும்பவும் நீர்கொழும்பையும் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். மன்னாரில் கிடைத்த முத்தும், யாழ்ப்பாணத்தின் யானை வர்த்தகமும் வடக்கு நோக்கிய ஒல்லாந்தரின் ஆதிக்க விஸ்தரிப்பிற்கு ஒரு காரணமாக இருந்தது. 1652 இல் ஐரோப்பாவில் ஒல்லாந்தருக்கும் போர்த்துக்கேயருக்கும் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து இலங்கையின்

மட்டக்களப்பில் உள்ள ஒல்லாந்தர் கோட்டை



New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0207.jpg

கரையோரப்பகுதிகளைப் படிப்படியாக வெற்றி கொண்ட ஒல்லாந்தர் 1658 இல் மன்னாரையும், நான்கு நாட்கள் கடந்த நிலையில் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றியிருந்தனர். தொடர்ந்து 1659ஆம் ஆண்டளவில் புத்தளம், கற்பிட்டி, 1665இல் திருகோணமலை, 1668களில் மட்டக்களப்பு போன்ற தமிழ்ப் பிரதேசங்களையும் கைப்பற்றி 1796 வரை இலங்கையை தமது மேலாதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர். இதன் மூலம் ஒல்லாந்தரின் அரசியல், பொருளாதார, சமூக, சமய, பண்பாட்டு விழுமியங்கள் இலங்கையில் செல்வாக்குப் பெற்றன.

நெடுந்தீவில் உள்ள ஒல்லாந்தர் கோட்டை



தமிழ்நெட் ஆவணக்காப்பகம்
TamilNet Archive

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட ஒல்லாந்தர் தமது ஆட்சியைப் பலப்படுத்தவும், அன்னியப் படையெடுப்புக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் தமது ஆதிக்க மையங்களைப் பலப்படுத்திக் கொண்டனர். இதற்காக கரையோரப் பகுதிகளில் தடைமுகாங்களையும், பாதுகாப்பு அரண்களையும் ஏற்படுத்தினர். இதற்கு தமிழ்ப் பிரதேசங்களான முல்லைத்தீவு, பூநகரி, ஆனையிறவு, கற்பிட்டி போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட தடைமுகாம்களைக் குறிப்பிடலாம். இதைத் தொடர்ந்து கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் மிகப் பெரிய கோட்டைகளைக் கட்டினர். இவற்றைத் தவிர கற்பிட்டி(1659), மட்டக்களப்பு (1668), மன்னார், திருகோணமலை, நீர்கொழும்பு போன்ற இடங்களிலும் கோட்டைகள் கட்டப்பட்டன. இவற்றைத் தவிர யாழ்ப்பாணத்திலே பருத்தித்துறை (1665), காங்கேசன்துறை (1675), நெடுந்தீவு, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களிலும் கோட்டைகள் கட்டப்பட்டன. இக்கோட்டைகளில் பெரும்பாலானவை ஏற்கனவே போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகளை அழித்து அல்லது மீள்உருவாக்கம் செய்து மிகப்பெரிய அளவில் ஒல்லாந்துக் கட்டடக்கலை மரபில் கட்டப்பட்டதால் இன்று போர்த்துக்கேயர் காலக் கோட்டைகள் என்ற பெயர் மறைந்து ஒல்லாந்தர்காலக் கோட்டை என்ற பெயரே காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வெற்றிலைக்கேணி, இயக்கச்சி ஆகிய இடங்களிலும் ஒல்லாந்தரால் கோட்டைகள் கட்டப்பட்டன. யாழ்ப்பாண இராசதானி கால தென்னிந்திய, வன்னிப் பிரதேச கடல், தரைவழி வாணிபத் தொடர்புகள் இவ்விடங்கள் ஊடாகவே நடைபெற்றன. இதற்காக அவ்விடங்களில் வரி அறவிடப்படும் ஆயக்கடவைகள் அமைக்கப்பட்டன. பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால ஆட்சியில் இவ்விடங்கள் ஊடாகவே சட்டவிரோதமாகப் பொருட்கள் கடத்தப்பட்டதால் அவற்றைத் தடுக்கும் நோக்கில் ஒல்லாந்தர் இவ்விடங்களில் கோட்டைகளை அமைத்தனர்.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0208.jpg

வெற்றிலைக்கேணியில் கோட்டையிருந்த இடத்தில் வெளிச்சவீட்டையும், கோட்டையின் சிதைவுகளையும் தவிர ஏனைய கட்டிடப் பாகங்களைக் காணமுடியவில்லை. இயக்கச்சியில் கோட்டை அரண்களின் சில பாகங்களையும், ஆயுதக்களஞ்சிய அறையின் இடியுண்ட பாகங்களையும் தவிர ஏனைய கட்டடப் பாகங்கள் அழிவடைந்து காணப்படுகின்றன. ஆயினும் இவ்விடங்களில் கோட்டைகள் கட்டப்பட்டதைக் கொண்டு பிரித்தானியர் ஆட்சிக்கு முன்னர் இப்பிரதேசம் பெற்ற முக்கியத்துவத்தை உணரமுடிகிறது. ஒல்லாந்தர் ஆட்சியில் இலங்கையில் காலியை அடுத்துக் கட்டப்பட்ட மிகப் பெரிய கோட்டையாக யாழ்ப்பாணக் கோட்டை காணப்படுகிறது.



யாழ்ப்பாணத்தில் உள்ள ஒல்லாந்தர் கோட்டை



நட்சத்திர வடிவான யாழ்ப்பாணக் கோட்டை

யாழ்ப்பாண நகருக்குத் தெற்கே கடற்கரை ஓரமாக அமைந்துள்ள இக்கோட்டை போர்த்துக்கேயரால் நாற்சதுர வடிவில் கட்டப்பட்டு பின்னர் ஒல்லாந்தரின் (17-18 ஆம் நூற்றாண்டுகளில்) ஆட்சியில் நட்சத்திரவடிவில் மாற்றி அமைக்கப்பட்டது. 62 ஏக்கர் பரப்பில் அமைந்த இக்கோட்டையின் அரண் 30 அடி உயரமும், 40 அடி தடிப்பும் கொண்டது. எதிரியின் படையெடுப்புக்களை இலகுவாக முறியடிக்கும் வகையில் கோட்டை அரண் மேலிருந்து கீழ் நோக்கிச் சரிவாக அமைக்கப்பட்டுள்ளது. கோட்டையைச் சுற்றி ஆழமான அகழியும், அதன் மூலைகளில் பீரங்கித் தளங்களும், சுடுதளங்களும், கண்காணிப்பு மையங்களும் காணப்படுகின்றன. 34 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட கோட்டையின் உட்பகுதியில் நிர்வாக மையங்கள், இராணுவ வீரர்களின் இருப்பிடங்கள், கிறிஸ்தவ தேவாலயம், இந்து ஆலயம், இராணிமாளிகை, சிறைக்கூடங்கள், ஆயுதக்களஞ்சிய அறைகள் என்பவற்றிற்குரிய கட்டடங்கள் காணப்படுகின்றன *(Nilsan 1984)*. இலங்கையில் உள்ள ஒல்லாந்தரது காலி, கொழும்பு கோட்டைகள் இராணுவ மையமாக மட்டுமன்றி நிர்வாக மையமாகவும் செயற்பட்டு வரும் நிலையில், யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந்தர் ஆட்சியில் இருந்து அண்மைக்காலம் வரை ஒரு இராணுவ மையமாகவே செயற்பட்டு வந்துள்ளது. 2010 இல் இருந்து இக்கோட்டையை மீள் உருவாக்கம் செய்யும் பணியில் இலங்கை அரசும், நெதர்லாந்து அரசும் இணைந்து செயற்பட்டு வருகிறது. இப்பணி முழுமைபெறும் நிலையில் வடஇலங்கையில் முதலாவது உலக மரபுரிமைச் சின்னம் என்ற பெயரை இக்கோட்டை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0209.jpg

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பலமான கோட்டைகளையும், பாதுகாப்பு அரண்கள், காவலரண்கள் என்பவற்றையும் ஏற்படுத்திய ஒல்லாந்தர் இலங்கையில் குறிப்பாக, தமிழ்ப் பிரதேசங்களில் பல நாடுகளைச் சேர்ந்த பல இனங்களை உள்ளடக்கிய படைவீரர்களையும் கொண்டிருந்ததை அவர்களின் ஆட்சிக்கால ஆவணங்கள் ஊடாக அறியமுடிகின்றது. அப்படைகளில் ஒல்லாந்து வீரர்களுடன் யாவா, மலாயா தீபகற்பங்களைச் சேர்ந்த போர்வீரர்களும் கடமை புரிந்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 1762ஆம் ஆண்டு புள்ளிவிபர அறிக்கையின்படி இலங்கையில் மொத்தமாக 7294 இராணுவத்தினர் இருந்ததாகத் தெரிகிறது. இவர்களில் ஐரோப்பிய போர் வீரர்கள் 2447 பேர் இருந்துள்ளனர். அவர்களுள் 264 ஒல்லாந்து போர் வீரர்கள் யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும், 52 ஒல்லாந்து போர் வீரர்கள் கற்பிட்டியிலும், 723 ஒல்லாந்து போர் வீரர்கள் கொழும்பிலும் நிறுத்தப்பட்டிருந்த போதும் ஏனைய ஐரோப்பியப் போர் வீரர்கள் பற்றிய தகவல்களை அறிய முடியவில்லை. இதேவேளை 2387 தென்னிந்தியா, மலாயா, யாவா போர்வீரர்களும் பணியாற்றி இருந்துள்ளனர். இவர்களுள் 114 போர்வீரர்கள் கற்பிட்டியிலும், 314 போர்வீரர்கள் யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும், 372 போர்வீரர்கள் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையிலும் கடமையாற்றியுள்ளனர்.



தமிழ்ப் பிரதேசங்களில் ஒல்லாந்தர் தமிழ் மொழியில் வெளியிட்ட நாணயங்கள்

ஒல்லாந்தர் இலங்கையில் பின்பற்றிய நிர்வாக முறை போர்த்துக்கேயர் கால நிர்வாக முறையில் இருந்து சற்று மென்போக்குக் கொண்டதாகக் காணப்பட்டது. அவர்கள் தமது ஆட்சி நிர்வாகத்தில் இலங்கையை யாழ்ப்பாணக் கொமாண்டரி, கொழும்புக் கொமாண்டரி, காலிக் கொமாண்டரி என மூன்றாகப் பிரித்து ஆட்சி புரிந்தனர். யாழ்ப்பாணக் கொமண்டரியின் நிர்வாக எல்லைகள் வடக்கே தீபகற்பத்தையும், அயலிலுள்ள தீவுகள், வன்னிப்பகுதி, கரையோரத்திலுள்ள மன்னார் வரையுள்ள சில பகுதிகளையும் உள்ளடக்கி மட்டக்களப்பின் தென்பாகம் வரை கொண்டிருந்தது. காலங்களில் திருகோணமலைப் பிரதேசம் வரை நிர்வாகப் பிரிவு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வெல்லைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழரால் நிர்வாகம் செய்யப்பட்டதைக் காட்டுகின்றன (குணசிங்கம் 2008: 255). இவ்விடத்தில் இன்னொரு முக்கிய அம்சமும் நோக்கத்தக்கது. இலங்கையில் ஒல்லாந்தர் தமது ஆட்சியில் வெளியிடப்பட்ட நாணயங்களில் வி.ஒ.சி (V.O.C) என்ற மூன்று எழுத்துக்களை நாணயங்களின் முன்பக்கத்தில் பொறித்துள்ளனர். இவை ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பனி (Vereenigde

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0210.jpg

Oost–Indische Compagnie) என்ற பெயரின் சுருக்கமாகும். ஆனால் தமிழர் பிராந்தியங்களுக்கென அவர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களின் முன்பக்கத்தில் மேற்குறிப்பிட்ட அம்சங்களுடன் தமது ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தைக் குறிக்கும் முதல் எழுத்தை நாணயங்களின் முன்பக்கங்களிலும், நாணயங்களின் பின்பக்கத்தில் நாணயங்கள் வெளியிடப்பட்ட ஆண்டைத் தமிழிலும் வெளியிட்டுள்ளன. இவ்வாதாரங்கள் அவர்களின் ஆட்சியில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்களே பெரும்பான்மையாக வாழ்ந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

ஒல்லாந்தர்களின் ஆசியாவுக்கான நிர்வாக மையமாக இந்தோனேசியாவிலுள்ள பற்றேவியா காணப்பட்டது. இலங்கைக்கான நிர்வாகத் தலைமை அதிகாரியாக தேசாதிபதியும், அவருக்கு உதவியாக ஒல்லாந்து கிழக்கிந்திய கம்பனியின் கவுன்சில் அதிகாரிகளும் பற்றேவியா அரசினால் நியமிக்கப்பட்டு இருந்தனர். கொழும்பு தலைமையகமாகவும், காலி, யாழ்ப்பாணம் ஆகியன ஒவ்வொரு தளபதியின் கீழும் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தது. பிராந்தியத்திற்கான தளபதி ஒருவர் கடற்படை, தரைப்படைக்குப் பொறுப்பாகவும், நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவும் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டார். 1671இல் மட்டக்களப்பிற்கென தனியான தளபதி ஒருவர் நியமிக்கப்பட்டார். நிர்வாக வசதிக்காக மேலும் உயர்மட்ட அதிகாரிகளும், மூன்று திசாவைமாரும் கொழும்பு, யாழ்ப்பாணம், மாத்தறைப் பகுதிகளுக்கு நியமிக்கப்பட்டு இருந்தனர். இத்திசாவைமார் இராணுவத் தளபதியின் கீழ் நிதி, நிர்வாக அலுவல்களுக்குப் பொறுப்பாக இருந்தனர் (குணசிங்கம் மு.கூ.நூல், அரசரட்ணம் 2014).

யாழ்ப்பாண இராச்சிய காலத்திலும், பின்னர் போர்த்துக்கேயர் ஆட்சியிலும் நடைமுறையில் இருந்த பாரம்பரிய நிர்வாக முறையின் பல அம்சங்களை ஒல்லாந்தர் தமது உள்ளூர் நிர்வாகத்தில் தொடர்ந்தும் பின்பற்றினர். இதற்காக முன்னர் சிவில் சேவைகளில் அனுபவம் பெற்றிருந்த முதலியார்களையும், விதானைமார்களையும் தமது நிர்வாக நடவடிக்கைகளுக்காக நியமித்தனர். கிராம, நகர மட்டத்திலுள்ள நிதி, நிர்வாக நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த இச்சிவில்சேவை உத்தியோகத்தர்களுக்கு குறைந்தளவு ஊதியமே வழங்கப்பட்டது. இவ்நிர்வாக சேவைக்கு கிறிஸ்தவ மிசநெறிகளில் கல்வி கற்ற இளைஞர்களையும் குறைந்த ஊதியத்தோடு நியமித்து நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இருப்பினும் உயர் பதவிகளுக்கு ஒல்லாந்தரே நியமிக்கப்பட்டனர். ஒல்லாந்தர் தமிழ்ப் பிரதேசத்தில் பின்பற்றிய நிர்வாக முறை குறைந்த செலவில் அதிக வருவாய் ஈட்டும் அவர்களின் நோக்கைத் தெளிவாகக் காட்டுவதாக உள்ளது.

ஒல்லாந்தர் இலங்கையில் குறிப்பாக தமிழர் பிராந்தியங்களில் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை குறைந்த நிர்வாகச் செலவில் கூடுதலான இலாபத்தைப் பெறுவதான அவர்களின் நோக்கத்தை நிறைவு செய்வதாக இருந்தது. இந்நோக்கத்தை கீழைநாடுகளுக்கான ஒல்லாந்தரின் தலைமைப் பீடமான பத்தேவியாவில் இருந்து வர்த்தகக் குழுவின் செயலாளர் இலங்கையில் உள்ள அதிகாரிகளுக்கு இடப்பட்ட கட்டளைகளில் அதிக செலவீனங்களைத் தவிர்த்து மிகக்கூடிய இலாபத்தினைப் பெறுவதற்கான வழிகளைக் கண்டறியுமாறு கூறியிருப்பதன் மூலம் அறிய முடிகிறது. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு ஒல்லாந்தர் வர்த்தகப்பொருட்களுக்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தி வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலமும் பல்வேறுபட்ட வரிமுறைகளைக் கையாண்டு வருமானத்தை அதிகரித்துக் கொண்டனர். இதற்கு ஏற்றவகையிலேயே ஒல்லாந்தர் தமிழர் பிரதேசங்களில் அதிகம் உற்பத்தி செய்யப்படும் பாக்கு, புகையிலை, பருத்தி உள்ளிட்ட பொருட்களுக்கு நிரந்தரச் சந்தை வாய்ப்புக்களை உருவாக்கி அவற்றின் மூலம் அதிகளவு இலாபத்தைப் பெற்றனர். புகையிலை யாழ்ப்பாணத்தில் அதிகளவிலும் மன்னார், வன்னிப் பகுதிகளில் குறிப்பிட்டளவிலும் உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வுற்பத்தி ஒல்லாந்தர் ஆட்சியில் முன்னைய ஆட்சிக் காலங்களைவிட

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0211.jpg

உச்சநிலை அடைந்திருந்தது. இவற்றைத் தென்னிந்திய வர்த்தகர்களே அதிகளவில் வாங்கிச் சென்றனர். ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இது அவர்களின் ஏகபோக உரிமையாக இருக்கவில்லை. இதனால் புகையிலைத் தோட்ட உரிமையாளர், அதில் வேலைசெய்யும் தொழிலாளர்கள், போக்குவரத்துக்களை நடத்துபவர், தரகர் எனச் சமுதாயத்தின் பலதரப்பட்ட பிரிவினர் அதிக பணவருவாயைப் பெற்றனர். ஆயினும் ஒல்லாந்தர் பின்பற்றிய புகையிலை உற்பத்திற்கான வரி, மற்றும் புகையிலை விற்பனை வரி என்பவற்றின் மூலம் அதிக இலாபத்தைப் பெற்றனர் *(சிவசாமி 2014; 122- 135)*.

ஒல்லாந்தர் ஆட்சியில் அதிக வருவாய் தரும் பொருட்களாக முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல் காணப்பட்டன. இதற்கு ஏற்ற இடங்களாக மன்னார் மாவட்டத்தில் உள்ள மாதோட்டமும், அதற்குத் தெற்கேயுள்ள குதிரைமலையும் காணப்பட்டன. குறிப்பிட்ட காலங்களில் நடைபெறும் இவ்வர்த்தகத்தில் இந்தியா, பாரசீகம், அராபியா முதலான நாடுகளில் இருந்து வரும் வணிகர்களே இப்பொருட்களை அதிக அளவில் வாங்கிச் செல்வது வழக்கமாக இருந்தது. இவ்வர்த்தகத்தை ஒல்லாந்தர் தமது ஏகபோக உரிமையாக வைத்திருந்ததால் அதிலிருந்து அதிக வருவாயைப் பெற்றனர். 1666இல் மன்னாரில் நடைபெற்ற முத்து வர்த்தகத்தின் மூலம் ஒல்லாந்தர் 22 824 றிக்ஸ் டொலர்களை வரியாகப் பெற்றதை அவர்களின் ஆட்சிக்கால ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இவற்றோடு முத்துக்குளிப்பில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் முத்து வர்த்தகம் நடைபெறும் காலங்களில் விற்கப்படும் பிற பொருட்களுக்கான வரி என்பவற்றில் இருந்தும் ஒல்லாந்தர் அதிக வருவாயைப் பெற்றனர் *(குணசிங்கம் 2008)*.

யாழ்ப்பாண இராசதானி காலத்தில் முக்கிய வருவாய்தரும் பொருளாக இருந்த யானை வர்த்தகம் ஒல்லாந்தர் ஆட்சியில் அதிக வருவாயை தேடிக்கொடுத்தது. ஒல்லாந்தர் ஆட்சியில் வன்னி, மன்னார் ஆகிய வட்டாரங்களில் இருந்து யானைகளைப் பிடித்து யாழ்ப்பாணத்திலுள்ள ஆனைப்பந்தியில் அடைத்து வைத்து பின்னர் ஆனைக்கோட்டை சந்தையில் இந்தியர்களுக்கு விற்றனர். ஒல்லாந்தரைப் பொறுத்தவரை வன்னியில் இருந்து (கரையோரப் பிரதேசங்கள் சிலவற்றில்) பெறப்பட்ட நிலவரி, உற்பத்தி வரி என்பவற்றைக் காட்டிலும் யானை வர்த்தகத்திற்கான வரியில் இருந்தே அதிக வருவாயைப் பெற்றனர். இதன் காரணமாகவே வன்னிச் சிற்றரசர்களுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே அடிக்கடி முரண்பாடுகள் தோன்றின. ஒல்லாந்தர் தமது வருமானம் ஈட்டுவதற்காக உள்ளூர் உத்தியோகத்தர்களின் உதவியுடன் தோம்புகளை புதுப்பித்து பல்வேறு வரிகளையும் அறவிட்டனர். அவற்றுள் நிலவரி, தொழில்வரி, தலைவரி, ஆள்வரி, அதிகாரிவரி என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவற்றுடன் நெல், பயறு, உழுந்து, எள்ளு, கொள்ளு, குரக்கன் போன்ற தானியங்களுக்கும் பழமரங்களுக்கும், பிற உற்பத்தி பொருட்களுக்கும் தானியவரிகள் அறவிடப்பட்டன. கடுமையான வரிமுறையால் பெரிதும் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மக்கள் வன்னிக்குப் புலம்பெயர்ந்ததாக ஒல்லாந்தர் கால ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. ஒல்லாந்தர் ஆட்சியில் வருவாய்தரும் ஒரு துறையாக மர ஏற்றுமதி காணப்பட்டது. அவற்றுள் மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி போன்ற இடங்களிலிருந்து பெறுமதியான கருங்காலி, முதிரை போன்ற மரங்களை வெட்டி பற்றேவியா, நெதர்லாந்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். 1669ஆம் ஆண்டளவில் மரங்கள் வெட்டுவதற்கென இந்தியாவிலிருந்து 100 குடும்பங்களை வரவழைத்தனர். 1678ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் மரம் அரியும் ஆலையொன்றை அமைத்தனர். இதன் மூலம் கப்பல் கட்டுவதற்கும், கட்டடங்களை அமைப்பதற்கும் தேவையான பலகைகள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டன. ஒல்லாந்தருக்கு யாழ்ப்பாணத்தின் கற்பகத் தருவான பனைமரங்கள் இருவழிகளில் வருவாயைத் தேடிக்கொடுத்தது. ஒன்று பனை மரம் மீதான வரி. இரண்டு பனைமரங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைத்த வருமானம். இப்பனைமர ஏற்றுமதியில் பெண் பனைகள் தவிர்க்கப்படும் எனக் கூறப்பட்டிருந்தது. ஆயினும் 1704ஆம் ஆண்டு அறிக்கையின்படி பெண் பனைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டதாகத் தெரிகிறது. பனைமரங்களுடன் பனைசார் உற்பத்தி

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0212.jpg

பொருட்களான பனங்கிழங்கு, ஒடியல், பனாட்டு, பனங்கட்டி போன்ற உணவுப் பொருட்களும், பனைஓலை, பனைநாரால் செய்யப்பட்ட பாய், பெட்டி, சுளகு, போன்ற பாவனைப் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டு அவை தென்னிலங்கைக்கும், சிலவகைப் பொருட்கள் தென்னிந்தியாவிற்கும் ஏற்றுமதி செய்து வருமானத்தைப் பெற்றனர் *(சிவசமி 2014: 122- 135)*.

ஒல்லாந்தர் மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பிராந்தியங்களில் சாயவேர் அதிகமாக காணப்பட்டமையினால் அதற்குரிய சாயவேர்த் தொழிற்சாலையை அமைத்து அதிகப்படியான வருமானத்தினை பெற்றுக் கொண்டனர். மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும் காணப்பட்ட சாயவேரில் இருந்து பெறப்படும் சாயம் தென்னிந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட சாயத்தைக் காட்டிலும் தரமாக இருந்தது. இதனால் இந்தியாவிலிருந்து துணிகளை அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டு அவை யாழ்ப்பாணத்தில் சாயமிட்டு ஐரோப்பா, தென்கிழக்காசியா முதலான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இத்துணி வர்த்தகத்தால் ஒல்லாந்தர் வருடமொன்றுக்கு 50 000 றிக்ஸ் டொலர்களை இலாபமாகப் பெற்றிருந்தனர். அதேவேளை யாழ்ப்பாணத்து நெசவாளர்கள் ஒல்லாந்தருக்குத் தெரியாமல் வன்னியிலிருந்து பருத்தியைக் கொண்டு வந்து தரமான சாயமிட்டு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் துணி விற்பனையில் ஈடுபட்டனர். இதனால் ஒல்லாந்தரின் துணி வியாபாரம் பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது *(Arasaratnam 1958)*.

ஒல்லாந்தர் வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கில் அடிமை வியாபாரத்திலும் ஈடுபட்டனர். 1658 - 1659 இடைப்பட்ட காலப்பகுதியில் தஞ்சாவூர், மதுரை போன்ற இடங்களில் ஏற்பட்ட பஞ்சத்தைப் பயன்படுத்தி ஒல்லாந்தர் இந்தியாவிலிருந்து பல அடிமைகளை விலைக்கு வாங்கி இலங்கைக்கு கொண்டு வந்தனர். இவ்வடிமைகள் மூலம் ஒல்லாந்தர் தமிழ்ப் பிரதேசங்களில் இலவச சேவையைப் பெற்றனர். அத்துடன் பயன்படுத்தாமல் இருந்த காணிகளை கட்டாய ஊழிய சேவையின் ஊடாக பயிர்செய்கைக்கு உட்படுத்தியதுடன், அரச தரிசுநிலங்களை ஏலத்தில் விற்றும் இலாபம் ஈட்டினர். இதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய யாழ்ப்பாணத்துச் செல்வந்தர்களும், நில உடமையாளர்களும் அடிமைகளை வாங்கினர். இவர்கள் வாங்கிய அடிமைகள் எண்ணிக்கை ஒல்லாந்தர் வாங்கிய அடிமைகளின் எண்ணிக்கைகளைவிட அதிகமாக இருந்தது. 1694- 1696 காலப்பகுதிகளில் மட்டும் தனிப்பட்டவர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட அடிமைகளின் எண்ணிக்கை 3589 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தனிப்பட்டவர்கள் தமது அடிமைகளை தங்களின் நிலங்களில் இலவச சேவைக்குப் பயன்படுத்தியதுடன், அரச ஊழியசேவைக்கும் அவர்களை அனுப்பி வருவாயைப் பெருக்கிக் கொண்டனர். ஒல்லாந்தர் ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் வெடிமருந்து ஆலையொன்றும் நிறுவப்பட்டது. இதற்குத் தேவையான கந்தகம் வங்காளத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வெடிமருந்தும் தயாரிக்கப்பட்டது *(Arasaratnam 1958, குணசிங்கம் 2008)*. இத்தொழிற்சாலை உள்ளூர் மூலவளங்களை மேலும் சுரண்டுவதற்கு காரணமாக அமைந்தது. பொதுவாக ஒல்லாந்தர் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கையால் சுதேச மக்களின் பொருளாதார வளங்கள் பெருமளவு சுரண்டப்பட்டன என்றே கூறலாம். அதில் தமிழ்ப் பிரதேசங்களான மட்டக்களப்பு, திருகோணமலை, கற்பிட்டி, மன்னார் போன்ற பிரதேசங்களைக் காட்டிலும் யாழ்ப்பாணத்திலே பெருமளவு பொருளாதார சுரண்டல்களை மேற்கொண்டு அதிக வருமானத்தைப் பெற்றனர். இதனால் கிடைத்த மேலதிக இலாபத்தைக் கொண்டே ஏனைய தமிழ்ப் பிராந்தியங்களுக்கான நிர்வாகத் தேவையைப் பூர்த்தி செய்தனர்.

ஒல்லாந்தர் ஆட்சியால் இலங்கையின் பாரம்பரிய பண்பாட்டில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களில் ஒன்று அவர்களின் புரட்டஸ்தாந்து மதம் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். அரசியல், பொருளாதார மேம்பாட்டினையே கருத்திற் கொண்டிருந்த கிழக்கிந்தியக் கம்பனியும், அரசும் தமிழ்ப் பிரதேசங்களில்

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0213.jpg

இந்து மதத்தினைப் பலவீனமடையச் செய்வதிலும், தமது மதத்தினைப் பரப்புவதிலும் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வந்தனர். தமிழ்ப் பிரதேசங்களில் இதற்கு ஏற்ற இடமாக யாழ்ப்பாணத்தை தேர்ந்தெடுத்த ஒல்லாந்தர் அம்மதத்தைப் பரப்புவதற்கு பிலிப்பஸ்போல்டியஸ் என்ற பாதிரியாரையும், இரு குருமார்களையும் அங்கு அனுப்பிவைத்தனர். இவர்களது வருகையின் போது யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கு மேலோங்கியும், இந்து மதத்தின் நிலை பலவீனமாகவும் காணப்பட்டது. இவற்றைக் கருத்தில் கொண்ட ஒல்லாந்தர் தமது மதத்தை சுதேச மக்கள் மத்தியில் பரப்புவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டனர்.



ஒல்லாந்தர் கால மணற்காடு கிறிஸ்தவ ஆலயம்

இதற்காக போர்த்துக்கேயர் ஆட்சியில் தமிழ்ப் பிரதேசங்களில் அமைக்கப்பட்ட கத்தோலிக்க தேவாலயங்கள் பலவற்றை தமது கலைமரபில் புரட்டஸ்தாந்து தேவாலயங்களாக மாற்றி, அங்கு ஞாயிறு தோறும் நடைபெறும் ஆராதனையில் சுற்றாடலில் வாழ்ந்த அனைத்து ஒல்லாந்தர்கால மணற்காடு கிறிஸ்தவ ஆலய மக்களும் கிரமமாகக் கலந்து கொள்ளவேண்டும் எனவும் கட்டளையிட்டனர். ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தை தழுவிய மக்கள் முன்னர் வழக்கில் இருந்த விக்கிரக ஆராதனையில் ஈடுபடுவதைத் தடுத்தனர். அதை மீறி நடப்பவர்களுக்கு பகிரங்க சவுக்கடியும், ஒரு வருடம் சங்கிலியால் பூட்டி வைக்கும் தண்டனையும் வழங்கப்படும் எனக் கூறினர். ஒல்லாந்தர்களால் 'அஞ்ஞானிகள்' என அழைக்கப்பட்ட இந்துக்களிடம் அதிக வரியினை அறவிட்டதுடன், இந்துக்களிடையே அவர்களிடையே வழக்கத்திலிருந்த தலைப்பாகை கட்டும் முறையினை சிலுவை வடிவில் மாற்றியமைக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தனர். இவ்வாறான நடவடிக்கைகளால் வெறுப்படைந்த புரட்டஸ்தாந்து மதத்தை ஏற்க விரும்பாத தமிழர்களும், ஏற்கனவே கத்தோலிக்க மதத்திற்கு மாறிய மக்களும் கண்டி மன்னனிடம் அடைக்கலம் பெற்று அங்கு வாழ்ந்தனர். அவர்களுக்கு கண்டி மன்னன் இராசசிங்கன் பௌத்த மதத்திற்குச் சமமான உரிமையும், அந்தஸ்தும் கொடுத்திருந்தான் என ரொபேட்நொக்ஸ் தனது நூலில் குறிப்பிடுகிறார்.



ஒல்லாந்தர்கால சங்கானை கிறிஸ்தவ தேவாலயம்

ஒல்லாந்தரால் யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் புரட்டஸ்தாந்து மதம் பரப்பப்பட்ட அளவுக்கு வன்னி, கற்பிட்டி, புத்தளம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பகுதிகளில் பரப்பப்படவில்லை. 1671ஆம் கணக்கெடுப்பின்படி யாழ்ப்பாணத்தில் 141456 மக்கள் புரட்டஸ்தாந்து மதத்தை தழுவியிருந்தனர். இவ்வெண்ணிக்கை 1707ஆண்டளவில் 172951ஆக அதிகரித்திருந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் மதம் மாறியிருந்தமைக்கு புரட்டஸ்தாந்து சபையினால் வழங்கப்பட்ட இலவச மற்றும்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0214.jpg

மேலைத்தேச கல்வி, தொழில் ரீதியாக கிடைக்கப்பெற்ற சலுகைகள், இறுக்கமான சாதிக்கட்டுப்பாடுகள் என்பன காரணமாக இருந்தன. ஆனால் பெருநிலப்பரப்பான வன்னியின் பாதுகாப்பான இயற்கைச் சூழல், வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சி, இந்து மதத்தின் மீது அதீத ஈடுபாடு கொண்ட மக்கள், வன்னி மற்றும் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்ட கண்டியரசனின் தலையீடுகள் என்பவற்றின் காரணமாக இங்கெல்லாம் புரட்டஸ்தாந்து மதம் அதிக செல்வாக்கை பெறமுடியவில்லை.

ஆயினும் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் மதமாற்றம் செய்யும் வேகம் படிப்படியாக தமிழர் பிரதேசங்களில் குறையத் தொடங்கியது. இதற்கு ஆசிய நாடுகளில் காலணித்துவ ஆட்சியில் இருந்து பெற்ற அனுபவங்கள், ஒல்லாந்துக் கிழக்கிந்தியக் கம்பனியின் செலவுச் சுருக்கக்கொள்கை, மதம் பரப்புவதில் கிழக்கிந்திய கம்பனி போதிய அக்கறை காட்டாமை, புரட்டஸ்தாந்து மதகுருமாருக்கும் கம்பனிக்குமிடையிலான முரண்பாடுகள், இந்துக்களில் பலர் சலுகைகள், பதவிகள் என்பவற்றிற்காக அகத்தே இந்துசமயத்தினையும் புறத்தே புரட்டஸ்தாந்து சமயத்தினை பின்பற்றியமை என்பன காரணமாக இருந்தன. இதனால் ஒல்லாந்தர் தமது ஆட்சியின் பிற்பகுதியில் சுதேச மக்களுக்கு மத சுதந்திரம் வழங்கினர். இதனால் சுதேச மதங்கள் சிறப்பாக இந்துமதம் மறுமலர்ச்சி அடையத் தொடங்கியது. இன்று தமிழர் பிராந்தியங்களில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள வரலாற்றுப் பழமைவாய்ந்தவை எனக் கூறப்படுபவை ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியிலிருந்து அவர்களின் அனுமதி பெற்றுக் கட்டப்பட்டவையாகும். இவை பெரும்பாலும் ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்னர் ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது அதற்கு அருகில் முன்னைய ஆலயப் பெயர்கள் கொண்டு கட்டப்பட்டவையாகும் அவ்வாறு கட்டப்பட்ட அல்லது புனருத்தானம் செய்யப்பட்ட ஆலயங்களுள் 1787 இல் வண்ணார்பண்ணைச் சிவன் கோயில், 1793இல் நல்லூர் கந்தசுவாமி கோயில் மற்றும் நயினை நாகபூசணி அம்மன், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், தென்மராட்சியிலுள்ள வேலம்பிராய் கண்ணகியம்மன் ஆலயம், கும்பிட்டான் கற்பகவிநாயகர் ஆலயம், கல்வளைப் பிள்ளையார் ஆலயம் என்பவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இக்காலத்தில் இருந்து பல புதிய கோயில்களும் ஆங்காங்கே ஸ்தாபிக்கப்பட்டன. இதற்கு உதாரணமாக தென்னிந்தியாவிலிருந்து வந்த சேணியச் செட்டிகளால் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்ட பெருமாள் கோயில், ஒல்லாந்தரின் மந்திரிகளில் ஒருவராக இருந்த கனகசபைப்பிள்ளை என்பவரால் யாழ்ப்பாணத்தில் நீராவி என்ற இடத்தில் அமைக்கப்பட்ட பிள்ளையார் கோயிலையும் குறிப்பிடலாம்.

ஒல்லாந்தர் மதம் பரப்புவதை நோக்காகக் கொண்டு பாடசாலைக் கல்வியை ஊக்கப்படுத்தியிருந்தவர். ஆயினும் அது தமிழர் மத்தியில் கல்வியறிவு வளரப் பெரிதும் துணையாக இருந்தது. கிறிஸ்தவ தேவாலயங்களோடு அமைக்கப்பட்ட சிறிய பாடசாலைகளில் மதக்கல்விக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. மதபோதகர்களும், கிறிஸ்தவ அதிகாரிகளும் பாடசாலைகளில் கிறிஸ்தவ மதத்தைக் கற்பிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டனர். இப்பாடசாலைக்கான செலவீனத்தின் ஒரு பகுதியை வழங்கிய ஒல்லாந்து அரசாங்கம் மிகுதி செலவீனங்களை பாடசாலைகளின் சொந்த வருமானத்திலேயே நடாத்த வேண்டும் எனக் கூறியது. இதனால் ஆசிரியர்களுக்கான செலவுகள் தண்டப்பணத்தில் இருந்தே ஈடுகட்டப்பட்டது. 1659ஆம் ஆண்டில் நடைபெற்ற திருச்சபைக் கூட்டத்தின்படி ஒவ்வொரு போதகரும் அவருக்கு கீழுள்ள பாடசாலைகளை மேற்பார்வை இடுவதோடு அவற்றை நடத்தும் பணிக்கு பொறுப்பானவர்களாக இருக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

போர்த்துக்கேயர் காலக் கல்வி முறையைக் காட்டிலும் ஒல்லாந்தர்காலக் கல்வி முறையில் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வி முறை காணப்பட்டது. ஆரம்பக்கல்வியைக் கட்டாய கல்வியாக வலியுறுத்திய ஒல்லாந்து அரசாங்கம் அக்கல்வியை ஆண் சிறுவர்களுக்கு வழங்கப்படுவது போல் பெண்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0215.jpg

சிறுமிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என விரும்பினர். இதனால் பெண் சிறுமிகளும் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். இருப்பினும் அவர்கள் ஆண்களுக்கு முன்பாகவே பாடசாலைகளை விட்டு விலகிக் கொண்டனர். ஒல்லாந்தர் உள்ளூர் இளைஞர்களுக்காக பயிற்சி வழங்குவதற்காக 1690இல் நல்லூரில் ஒரு தமிழ் செமினரியை அமைத்தனர். இதில் ஆண்-பெண் இருபாலாரும் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் காலையில் டச்சு மொழியும், மதியத்தில் தமிழ்மொழியும் கற்பிக்கப்பட்டு வந்தது. 1696இல் இப்பயிற்சிக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட 28 மாணவர்களில் மூன்று வன்னியர், இரண்டு பிராமணர், ஒரு செட்டி, பதின்மூன்று வெள்ளாளர், இரண்டு அகம்படியர், ஒரு மடப்பள்ளியர், ஒரு மலையாளி, மூன்று பரதேசிகளும் கல்வி கற்று வந்தனர். இச்செமினரி ஆரம்பிக்கப்பட்ட முதல் 10ஆண்டுகளில் அரசின் ஆதரவைப் பெற்று பல சிறந்த மாணவர்களை உருவாக்கி இருந்தது. இவர்களில் சிலருக்கு 1696இல் கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்ட செமினரியிலும் கல்வி பயிலும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இதேவேளை தமிழ்ப் பிரதேசங்களில் சுதேச பாடசாலைகள் நிறுவப்பட்டு தமிழ்மொழி போதிக்கப்பட்டு வந்தது. 1769களில் வண்ணார்பண்ணையில் 50 மாணவர்களையும், சிலாபத்தில் 80 மாணவர்களையும் கொண்டு இயங்கிய பாடசாலைகள் இருந்ததாக அறிய முடிகிறது. ஆனால் யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங்களில் ஒல்லாந்தரின் மதம், கல்வி நடவடிக்கை வெற்றியளித்தது போன்று கிழக்கு, வடமேற்கு மற்றும் வன்னிப்பகுதிகளில் வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் காலத்தில் சுதேச மக்களிடையே இலகுவாக தமது மதத்தைப் பரப்பும் நோக்கில் பாதிரிமார்களும், போதகரும் தமிழ்மொழியைக் கற்றனர். இதனால் தமிழ் மொழிபெயர்ப்பில் பல கிறிஸ்தவ நூல்கள் வெளிவந்தன. இவற்றின் செல்வாக்கால் பிறதுறை சார்ந்த தமிழ் நூல்களும் வெளிவந்தன. இதற்கு உதாரணமாக ஒல்லாந்தர்களின் வேண்டுகோளுக்கு அமைய 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மாதகலைச் சேர்ந்த மயில்வாகனப் புலவரால் 'யாழ்ப்பாண வைபவமாலை' என்னும் வரலாற்று நூல் எழுதப்பட்டதைக் குறிப்பிடலாம். மேலும் இக்காலத்தில் 'மகாபாரதம்', 'இராமாயணம்' போன்ற இதிகாசக்கதைகளும் 'தேவசகாயம்' என்ற கிறிஸ்தவக் கதையும் தமிழில் நாடகவடிவம் பெற்றன. அத்துடன் கணபதிஐயர் என்பவரால் எழுதப்பட்ட அலங்காரரூப நாடகம்', 'அதிரூபவதி விசாலம்', 'வாலயீக' நாடகம் முதலான நூல்களால் நாடகக்கலைக்கு புத்துயிர்ப்பு அளிக்கப்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் இந்து மதத்திற்கு கிடைத்த மதச் சுதந்திரத்தால் ஆன்மீக உணர்வைத் தூண்டும் தலபுராணங்கள் தோன்றுவதற்கு காரணமாகியது. இதற்கு வட்டுநகர்ப் பத்திரகாளியம்மைப் பதிகம், பறாளை விநாயகர் 'பள்ளு', 'நல்லைக்கலிவெண்பா' முதலான தலபுராணங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், வடமேற்குப் பிரதேசத்திலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தபோதிலும், அவர்கள் கடைப்பிடித்த பொருளாதார, நிர்வாகக் கொள்கையால் பல்லினச் சமூகம் ஒன்று தோன்றக் காரணமாகியது. ஒல்லாந்தர் வர்த்தக நலனுக்காகவும், நிர்வாக வசதிக்காகவும் தமது நாட்டு மக்களை தமது ஆதிக்கத்திற்கு உட்பட்ட கீழைத்தேச நாடுகளில் குடியேற்ற விரும்பினர் *(சிவசாமி 2014: 238)*. இதற்காக தமது நாட்டு மக்களுக்கு பல சலுகைகளை வழங்க முன்வந்தனர். ஆயினும் தமிழர் பிரதேசங்களில் கணிசமான மக்களே குடியேறினர். 1634இல் யாழ்ப்பாணத்தில் 494 பேரும், மன்னாரில் 116 ஒல்லாந்தர்களும் வாழ்ந்தனர். அவர்களுள் 166 பேர் திருமணமான தம்பதியர்கள். மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, கற்பிட்டி, புத்தளம் ஆகிய பகுதிகளில் ஒல்லாந்தர் வாழ்ந்திருந்த போதிலும் அவை பற்றிய பூரண விபரம் கிடைக்கவில்லை. ஒல்லாந்தரின் ஆட்சிக்கால ஆவணங்கள் முன்னர் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வந்த முஸ்லீம் மக்களும் தமிழர் பிராந்தியங்களில் வாழ்ந்ததை குறிப்பிடுகின்றன. இவர்களுடன் தென்னிந்தியாவிலிருந்து வந்த அடிமைகளும், பாதுகாப்பு பணிக்காக அமர்த்தப்பட்ட

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0216.jpg

ஒல்லாந்து, யாவா மற்றும் மலாயா தீபகற்பத்தைச் சேர்ந்த படைவீரர்களும் இங்கிருந்துள்ளனர். இதனால் ஒல்லாந்தர் காலத் தமிழர் பிராந்தியங்களில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த கலப்பு சமூகம் உருவாகியதெனக் கூறலாம் (குணசிங்கம் 2008).

ஒல்லாந்தர் ஆட்சியில் தமிழர் பிராந்தியங்களில் பின்பற்றிய நீதி நிர்வாக நடைமுறைகள், பண்பாடு என்பன தமிழரின் பாரம்பரிய நடைமுறைகளுக்கு அன்னியப்பட்டு இருந்தாலும் அவற்றால் பல நன்மைகளும் ஏற்பட்டன. இதனால் அவை தமிழர் சமூகத்தில் தொடர்ந்தும் நடைமுறையில் இருந்து வருகின்றன. சட்டத்தின் முன் சமன் என்ற கருத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் ஒல்லாந்தர் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நீதிமன்ற முறையைக் கொண்டுவந்தனர். இதற்காக கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மூன்று பெரிய நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. இதில் சிவில் அல்லது இராணுவ அதிகாரிகள் பிற கடமைகளுடன் நீதித்துறையையும் கவனித்தனர். இவர்கள் காலத்திலேயே உரோமன் டச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஒல்லாந்தர் தமிழர் பிரதேசங்களில் வழக்கிலிருந்து வந்த பழக்க வழக்கங்களை தேசவழமையெனத் தொகுத்து அவற்றிற்கு நீதிக்கான சட்ட அந்தஸ்தைக் கொடுத்தனர் (சிவசமி 2014; 87-98).

ஒல்லாந்தர் காலத்தில் தமிழர் பிராந்தியங்களில் ஏற்பட்ட நன்மையின் இன்னொரு அடையாளம் அவர்கள் அமைத்த வீதிகளாகும். அவர்கள் ஆட்சிக்கு முன்னர் இருந்த வீதிகள் பெரும்பாலும் வண்டிப்பாதைகளாகவே இருந்தன. இவற்றுள் பல ஒல்லாந்தரால் மாற்றியமைக்கப்பட்டன அல்லது கைவிடப்பட்டன என்பதை முன்னர் இவ்வீதிகளுக்கு அருகே மாட்டுவண்டிப் பயணத்திற்கு அல்லது மக்களின் நடைப்பயணத்திற்கு உதவும் பொருட்டு அமைக்கப்பட்டிருந்த ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி, மடம், குளம் அல்லது கேணி என்பவற்றின் அழிபாடுகள் உறுதிசெய்கின்றன. ஒல்லாந்தர் காலத்து வீதிகள் குடியிருப்புக்களையும், சந்தைகளையும், தேவாலயங்களையும், துறைமுகப்பட்டினங்களையும் இணைத்துக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. இன்று யாழ்ப்பாணத்தின் நகரப்பகுதியிலும், கிராமப்புறங்களிலும் உள்ள சில வீதிகள் டச்ரோட் என்ற பெயரால் அழைக்கப்படுவதற்கு அவை ஒல்லாந்தர் ஆட்சியில் அமைக்கப்பட்டதே காரணம் எனக் கூறப்படுகிறது. ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியகால வைத்திய முறையின் தொடர்ச்சியையும், அவற்றில் ஒல்லாந்தர் ஏற்படுத்திய மாற்றங்களையும் இன்றும் காணமுடிகிறது. இதற்கு உதாரணமாக இக்காலத்தில் நிறுவப்பட்ட யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரி, மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை, நாயன்மார்கட்டு ஆயள்வேத வைத்திய சாலை என்பவற்றைக் குறிப்பிடலாம். ஒல்லாந்தர் ஆட்சியில் தமிழரின் திராவிடப் பாரம்பரிய கலைமரபிற்கு அன்னியமான மேற்கத்தேய கட்டிட, சிற்பக்கலை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்காக கடற்கரைப்பிரதேசத்தில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட கோறல் கற்களைக் கொண்டு கோட்டைகள், காவல் அரண்கள், வெளிச்சவீடுகள் மற்றும் மனைகளை அமைத்தனர். ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்னர் கற்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களே வழிபாட்டு இடமாகவும், அரண்மனையாகவும், இராணுவ, நிர்வாக மையமாகத் தொழிற்பட்டன. ஆனால் ஒல்லாந்தர் ஆட்சியில் மக்களின் மனைகள் அகன்ற விறாந்தைகள், உயரந்த கூரைகள், வட்டமான தூண்கள், வளைவான முன்முகப்புகள் என்ற வடிவில் கட்டப்பட்டன. இக்கலைமரபு காலப்போக்கில் சுதேச மக்களிடையே சில மாற்றங்களுடன் தனித்தும், கலந்தும் வளர்ச்சியடைந்தன. இதை ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்காலப் பகுதியில் அமைக்கப்பட்ட இந்து ஆலயங்களில், மனைகளில் காணலாம். இதற்கு நல்லூர் கைலாயநாதர் ஆலய விமானத்தில் செதுக்கப்பட்டுள்ள ஒல்லாந்து அதிகாரிகள், படைவீர்கள் அவர்களின் மனைவிமார் ஆகியோர் சிற்பங்களின் முகபாவங்கள், ஆடை அணிகலன்கள் என்பவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். இவ்வாதாரங்கள் இவ்வாலயம் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் மீள் உருவாக்கம் செய்யப்பட்டதையும், அதில் ஐரோப்பியக் கலை மரபு செல்வாக்கு ஏற்பட்டதையும் உறுதிப்படுத்துகிறது.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0217.jpg

பிரித்தானியரின் ஆட்சியில்

தென்னாசியாவில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் மொகலாயப் பேரரசு என்பன தளர்ச்சியடைந்து கொண்டிருந்த நிலையில் ஐரோப்பாவில் புதிய வல்லரசுகளாக எழுச்சி பெற்ற பிரான்சு, பிரித்தானியாவும் ஆசியாவில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட போராடின. இப்போராட்டத்தின் விளைவாக 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலே இந்தியாவும், இலங்கையும் பிரித்தானிய ஆட்சிக்கு உட்பட்டன. இலங்கையின் அமைவிடமும், கிழக்கிலங்கையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகமும் பிரித்தானியரின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த கீழைத்தேச நாடுகளைப் பாதுகாக்கவும், இந்தியாவை முழுமையாக தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவும், புயல் அபாயங்களிலிருந்து தனது கடற்படையைப் பாதுகாக்கவும் சாதகமாக இருந்தன. இதையுணர்ந்த பிரித்தானியர் திருகோணமலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒல்லாந்தருக்கு தூதுக்குழுக்களை அனுப்பி வந்தனர். இந்நிலையில் கண்டி மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான நல்லுறவு முறிந்து இலங்கையில் இருந்து ஒல்லாந்தரை அகற்ற விரும்பிய கண்டி மன்னன் படைப்பலம் கொண்டிருந்த பிரித்தானியருடன் நல்லுறவை ஏற்படுத்தினான். மேலும் இக்காலத்தில் இலங்கையின் கரையோரப்பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த ஒல்லாந்தரின் நிதி, நிர்வாக, இராணுவ கட்டமைப்புக்களும் சீர்குலைந்து கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பிரித்தானியர் 1795ஆகஸ்டில் திருகோணமலையையும், செப்ரம்பரில் மட்டக்களப்பையும், அதைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தையும், 1798 பெப்ரவரி 15இல் கொழும்பையும் கைப்பற்றி 1802இல் இலங்கையை தமது காலணித்துவ நாடாகப் பிரகடனப்படுத்தியிருந்தனர். இருப்பினும் வடஇலங்கையில் பெருநிலப்பரப்பில் உள்ள வன்னியும், நாட்டின் உட்பகுதியில் உள்ள கண்டி இராச்சியமும் தொடர்ந்தும் சுதந்திர அரசுகளாகவே இருந்தன.

Tamileelam Archive



பிரித்தானியர் ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் இருந்த கச்சேரி

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0218.jpg

வன்னியின் கடைசி மன்னனாக இருந்த பண்டாரவன்னியன் ஆங்கிலேயரை (பிரித்தானியரை) எதிர்த்து தொடர்ந்தும் சுதந்திர மன்னனாகச் செயற்பட்டான். இதற்காக ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட கண்டி மன்னனுடன் நல்லுறவையும் ஏற்படுத்தினான். இதனால் பிரித்தானியர் பண்டார வன்னியனுக்கு எதிராக படையெடுக்க நேரிட்டது. இந்நிலையில் 1803 இல் மன்னாரில் இருந்து வொண்டிறிபேர்க் தலைமையில் வந்த பிரித்தானியப் படை கச்சிலைமடுவில் பண்டார மன்னனின் படைகளை எதிர்த்துப் போரிட்டு பண்டாரவன்னியனை தோல்வியுறச் செய்தது. இந்த வெற்றியை பெரும் சாதனையாக கருதிய படைத்தளபதி கப்டன் வொண்டிறிபேர்க் அவ்வெற்றியை நினைவுபடுத்தி கற்சிலைமடுவில் நிறுவிய ஆங்கில வாசகத்தில் பொறிக்கப்பட்ட Here Abouts Caption Dribercaefeated Pandara Pandara Vanniya 31st Oct 1803 இன்றும் வன்னியின் பெருமை கூறும் முக்கிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இவ்வெற்றியைத் தொடர்ந்து ஏறத்தாழ 400 ஆண்டுகளாக ஐரோப்பிய மேலாதிக்கத்தை எதிர்த்து வந்த சிற்றரசர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த வன்னியும் ஆங்கிலேயர் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. வன்னி வெற்றியைத் தொடர்ந்து எஞ்சியிருந்த கண்டி இராசதானியை வெற்றி கொள்வது ஆங்கிலேயரின் நோக்கமாக இருந்தது. இந்த முயற்சியில் பல எதிர்ப்புக்கள், தடைகளைச் சந்தித்த ஆங்கிலேயர் 1815இல் கண்டி இராச்சியத்தையும் கைப்பற்றினர். இதன் மூலம் இலங்கை முழுவதும் பிரித்தானியரின் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனால் இலங்கையின் 152 வருடகால வரலாறு (1796 -1948) பிரித்தானியர்கால வரலாறாகவே பார்க்கப்படுகிறது.

இலங்கை முழுவதையும் ஒன்றுபடுத்திய பிரித்தானியர் அதற்கு ஏற்ற நிர்வாக கட்டமைப்பையும் உருவாக்கினர். 1829 ஜனவரி 18ஆம் திகதியில் கோல்புறூக்கும், 1830 ஏப்ரல் 30ஆம் திகதியில் கமரோன் என்பவரும் இலங்கை வந்து இலங்கையின் நிதி, நிர்வாக, நீதி நடவடிக்கைகளை ஆராய்ந்து தமது அறிக்கைகளை பிரித்தானிய அரசுக்கு வழங்கினர். இவ்வறிக்கையே கோல்புறூக் சீர்திருத்தம் என அழைக்கப்படுகிறது. இச்சீர்திருத்தத்தில் கண்டி இராச்சியம் மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டதுடன், இலங்கை நிர்வாக அலகுகள் ஐந்து மாகாணங்களாகவும், பதினாறு மாவட்டங்களாகவும் வகுக்கப்பட்டதுடன் அவை ஒவ்வொன்றும் அரசாங்க அதிபரின் கீழ் கொண்டு வரப்பட்டன. இதன் மூலம் இலங்கையில் ஐந்து மாகாண நிர்வாக அலகுகளாக மேல்மாகாணம் - கொழும்பு, மத்திய மாகாணம் கண்டி, தென்மாகாணம் - காலி, வடமாகாணம் - யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணம் - திருகோணமலை என்ற பெயரில் உருவாக்கப்பட்டன. இச்சீர்திருத்த மாற்றத்தால் இதுவரை ஒன்றிணைந்திருந்த தமிழர் பிராந்தியம் வடக்கு, கிழக்கு எனப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டமை தமிழர் வரலாற்றில் பல பாரிய தாக்கங்களை ஏற்படுத்த காரணமாகியது. 1889ஆம் ஆண்டளவில் ஐந்து மாகாணங்கள் ஒன்பது மாகாணங்களாக அதிகரிக்கப்பட்டது. அவை முறையே வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவாமாகாணம், சப்பிரகமுவ மாகாணம் என்பனவாகும். இம்மாகாணங்களின் நடவடிக்கைகளுக்கு அரசாங்க அதிபர் பொறுப்பாக இருந்ததோடு அவரது கட்டுப்பாடு இல்லாத பிரதேசங்களுக்கு உதவி அரசாங்க அதிபர் பொறுப்பாக இருந்தார். இவர்கள் யாவரும் பிரித்தானிய அதிகாரிகளாகவும், பிரித்தானிய அரசுக்கு விசுவாசிகளாகவும் இருந்தனர் (குணசிங்கம், 2008: 285). நாட்டின் தலைவராக பிரித்தானிய அரசினால் நியமிக்கப்பட்ட தேசாதிபதி கொழும்பில் இருந்து செயற்பட்டார். இவருக்கு உதவியாக நிர்வாகசபை உறுப்பினர்களும், மாவட்ட அரசாங்க அதிபர்களும் செயற்பட்டனர்.

உள்ளூர் நிர்வாகத்தை பொறுத்தமட்டில் தமிழ்ப் பிரதேசங்களில் முன்னைய உள்ளூர் நிர்வாக முறைமையே பெருமளவிற்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதில் சுதேசிகளே பெரும்பாலும் அதிகாரம் பெற்றிருந்தனர். கிராம மட்டத்தில் விதானை என்ற பதவிக்குரியவர் செல்வாக்குடையவராக இருந்தார். கிராமத்தின் எல்லா சிவில் குற்றவியல் செயற்பாடுகளும் இவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு பின்னரே

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0219.jpg

உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. இவரே அரசாங்க கட்டணங்களையும், வரிகளையும் அறவிடும் பொறுப்பையும் கொண்டிருந்தார். இவரோடு ஏனைய உள்ளூர் அதிகாரிகளான முதலியார், முகாந்திரம் என்போரும் பிரித்தானியரின் நம்பிக்கைக்குரிய உத்தியோகத்தர்களாக இருந்து பிரித்தானிய அரசிடம் இருந்து அதிக நலன்களைப் பெற்றனர். இதனால் தமிழ்ச் சமூகத்தில் இவ்வுள்ளூர் அதிகாரிகள் மிகுந்த செல்வந்தர்களாகவும், செல்வாக்கு மிகுந்தவர்களாகவும் காணப்பட்டனர். இதனால் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அரசியல், சமய, கலாசார மறுமலர்ச்சி நடவடிக்கைகளில் முக்கிய பிரிவினராக செயற்பட்டுக் கொண்டனர் (மேலது).

பிரித்தானியர் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரப் பூட்கைகள் சுதேச மக்களின் பாரம்பரிய பொருளாதார முறையில் பல சாதக, பாதக விளைவுகள் ஏற்டக்காரணமாகியன. இவர்களின் வர்த்தகப் பொருளாதாரத்தினால் இலங்கையின் பாரம்பரிய நெற் செய்கை வீழ்ச்சியடையத் தொடங்கியது. வன்னி மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமது சேனைப் பயிற்செய்கை போன்ற பாரம்பரிய உற்பத்தி முறைகளைக் கைவிடாதபோதும், அவை முழுநாட்டுக்கும் போதுமானதாக இருக்கவில்லை. இருப்பினும் தேசாதிபதி கிறெகோரியினால் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன சீர்திருத்தங்கள் வன்னி மற்றும் கிழக்கு மாகாணங்களில் நெல் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்படக் காரணமாக இருந்தன. ஆனால் யாழ்ப்பாண மக்கள் தமது வருமானத்திற்காக நெற்பயிற்செய்கையில் ஈடுபடுவதைக் குறைத்து பணப் பயிற்செய்கையிலும், வர்த்தக நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தோட்டச் செய்கையிலும் ஈடுபடத் தொடங்கினர். பிரித்தானிய அரசும் உள்ளூர் நெற்செய்கையில் ஆர்வம் காட்டவில்லை. அதேவேளை நெல்லை உள்ளூரில் உற்பத்தி செய்வதைவிட இறக்குமதி செய்வது இலாபகரமாக இருந்தது. இதனால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியைப் பணம் கொடுத்து வாங்கும் நிலைக்கு மக்கள் மாறினர்.

பிரித்தானியர் ஆட்சியிலும் யாழ்ப்பாணத்தின் முக்கிய பணப்பயிர்களில் ஒன்றான புகையிலைச் செய்கை வளர்ச்சியடைந்தது. 1851 காலப்பகுதியில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் 10000 ஏக்கர் காணியில் புகையிலை பயிரிடப்பட்டுள்ளது. அவற்றின் மூலம் பெறப்பட்ட புகையிலையும், சுருட்டும் இலங்கையின் தெற்கு, மேற்கு பகுதிகளுக்கும், இந்தியாவில் கொச்சின் மற்றும் திருவாங்கூர் முதலான இடங்களுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன *(Hindu Organ,1898, July6)*. இதன் மூலம் யாழ்ப்பாணத் தமிழர்கள் பெருமளவு செல்வத்தை ஈட்டமுடிந்தது. புகையிலை உற்பத்தியுடன் வெங்காயம், மிளகாய், மரக்கறிவகை, தேங்காய், நிலக்கடலை, ஆமணக்கு விதை ஆகிய உற்பத்திகளும் விரிவாக்கம் அடைந்தது. இந்நிலையில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட திராட்சை உற்பத்தியும் இணைந்து கொண்டது. பிரித்தானியர் ஆட்சியின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்றாகப் பனைமரம் காணப்பட்டது. 1850களில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் மட்டும் 35000 ஏக்கர் பரப்பில் பனைகள் காணப்பட்டதுடன், வருடாந்தம் 60000 பனைமரத் துண்டுகள் ஏற்றுமதியும் செய்யப்பட்டன *(Morning Star., 1851, Feb27)*. அவற்றில் சராசரியாக 297 973 பனைமரத் துண்டுகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன. இவற்றுடன் வனப்பொருள் உற்பத்திகளான சாயப்பட்டை, பாலைப்பழவற்றல், வேலப்பட்டை என்பனவும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன (குணசிங்கம் *2008: 291)*. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தைப் போலவே பிரித்தானியர் ஆட்சியிலும் யானை வர்த்தகம் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்றாகக் காணப்பட்டது. பிரித்தானியரின் ஆட்சியில் தமிழரின் பாரம்பரிய சிறு கைத்தொழில்களான நெசவு, சாயம் இடுதல், பாய்மரம் கட்டுதல், கூடை பின்னுதல், சுருட்டு மற்றும் பீடி சுற்றுதல், மட்பாண்டம் வனைதல், செங்கற்கள் சுடுதல், மரத்தளபாடங்கள் செய்தல், தங்கம், வெள்ளி, இரும்புக் கைத்தொழில் என்பன முக்கியத்துவம் பெற்றிருந்தன *(Arasaratnam 1994: 45)*. அவற்றுள் தையல், நெசவு, சாயம் இடுதல் என்பன முக்கிய

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0220.jpg

சிறு கைத்தொழில்களாக இருந்தன. இந்தியாவிலிருந்து துணிகள் இறக்குமதி செய்யப்பட்ட துணிகளுக்கு இங்கு சாயமிடப்பட்டு பின்னர் அவை இந்தியாவிற்கும் பிறநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன (குணசிங்கம் 2008: 292). இக்காலத்தில் தையல் வேலைக்கும், நெசவு நெய்தலுக்கும் என்ற அமைப்பு தோன்றியது (Morning Star., 1851, Nov16). சிறு கைத்தொழில்களுடன் கடல்சார் உற்பத்திப் பொருட்களும் இக்காலப் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. கடலில் இருந்து பெறப்படும் மீன், மீன்கருவாடு, முத்து, சிற்பி, சங்கு என்பன முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாக இருந்தன. இவை மீனவ சமூகத்தினருக்கு அதிக வருவாயைத் தேடிக்கொடுத்தன. இவற்றுடன் யாழ்ப்பாணத்தில் உப்பு விளைவிக்கப்பட்டு அது வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இக்காலத்தில் தொண்டமனாறு களஞ்சியத்தில் இருந்து மட்டும் 12090 ரூபா பெறுமதியான 37200 அந்தர் உப்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது (Hindu Organ, 1895, August 7). தமிழரின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றம், வளர்ச்சி என்பவற்றிற்கு ஏற்ப அவர்கள் பிரித்தானிய அரசுக்கு தலைவரி, தாலியங்களுக்கானவரி, சந்தைவரி, புகையிலைவரி, நாய்வரி, முத்திரை வரி என்பவற்றைப் செலுத்த வேண்டியிருந்தது. அவற்றுள் தலைவரியும், சந்தைவரியும் மக்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வரிகளாக இருந்தன (குணசிங்கம் 2008: 426). இவ்வரிகளுக்கு தமது அதிருப்தியையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்திய மக்கள் தமது பொருளாதார நலன்களைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தகக்கம்பனி (1877), யாழ்ப்பாண வர்த்தக கூட்டுறவுச்சங்கம் (1880), புகையிலைச்சங்கம், அச்சுவேலி வர்த்தக கூட்டுறவுச்சங்கம் (1891) போன்ற அமைப்புக்களையும் உருவாக்கினர் (மேலது :429).

பிரித்தானியர் ஆட்சியின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்று அவர்கள் ஆட்சியில் தமிழர் பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளாகும். இதற்காக மக்களிடம் இருந்து பெறப்பட்ட வரிப்பணத்தின் ஒரு பகுதியை வீதிகள், நீர்ப்பாசனக் கட்டமைப்பு, வைத்தியசாலைகள் என்பவற்றை உருவாக்கப் பயன்படுத்தினர். 1848 மார்ச்சில் Jaffna friend in- Need - Society என்ற செயற்குழுவினால் யாழ்ப்பாணத்தில் ஒரு வைத்தியசாலையும், மருந்துநிலையத்தையும் நிறுவுவதற்கான பிரேரணை முன்மொழியப்பட்ட ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. பாலங்கள் அமைக்கும் வேலைகளும் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்க வரவு செலவுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. 1854ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி மோனிங்ஸ்ரார் கூற்றிலே அரசாங்கம் யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு 2609.09 ஸ்ரேலிங் பவுண்களும், மன்னாருக்கு 462.02 ஸ்ரேலிங் பவுண்களும், வன்னிக்கு 175.00 ஸ்ரேலிங் பவுண்களும் செலவிடப்பட்டதென குறிப்பிட்டுள்ளது (Morning Star,1854. August:16). இக்காலத்தில் விரிவுபடுத்தப்பட்ட வீதிகள் பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமன்றி தமிழ் மக்களை ஒன்றிணைக்கவும் உதவின. 1860களின் பின்னர் தமிழர் பிரதேசங்களில் நீர்ப்பாசன அபிவிருத்திக்கான பாரியளவிலான வேலைத்திட்டங்கள்



பிரித்தானியர் ஆட்சியில் மீள் உருவாக்கப்பட்ட தேக்கம் அணைக்கட்டு – வவுனியா

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0221.jpg

மேற்கொள்ளப்பட்டன. இதற்காக 1900 மே மாதம் 15ஆம் திகதி நீர்ப்பாசனத் திணைக்களம் என்ற தனிப்பிரிவு உருவாக்கப்பட்டு நீர்ப்பாசன நடவடிக்கைகள் யாவும் நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளரின் கீழ் கொண்டுவரப்பட்டது (குணசிங்கம் 2008:294).

பிரித்தானியர் தமது ஆட்சியின் தொடக்கத்தில் விவசாயத்தைக் காட்டிலும், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை அதிக வருவாய்தரும் துறையாகக் கருதினர். இதனால் தமிழர் பிரதேசங்களில் தமது கிறிஸ்தவத்தை பரப்புதல், கல்வி வழங்குதல் முதலியவற்றில் அதிக அக்கறை காட்டவில்லை. இதனால் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் பெற்ற மதசுதந்திரத்தை இந்துசமயத்தவர் தொடர்ந்தும் பிரித்தானியர் ஆட்சியிலும் பேணிக்கொள்ள முடிந்தது. ஆயினும் பிரெடரிக்நோத் (1790-1805), ரொபேட்ட்பிரவுண்றிக் (1812-1820) போன்ற தேசாதிபதிகளின் காலத்தில் இந்நிலையில் மாற்றமேற்படத் தொடங்கியது. இதற்கு இவர்கள் ஆட்சியில் வருகை தந்த மிசநெறிமார் தமிழர் பிராந்தியங்களில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட சமய நடவடிக்கைகள் காரணமாக அமைந்தன. இவர்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்கு ஏற்றதாக கல்வியை முதன்மைப்படுத்தி உயர்கல்வி நிலையங்களையும், பாடசாலைகளையும் ஸ்தாபித்து அங்கு கிறிஸ்தவ சமயத்திற்கு முன்னுரிமை அளித்தனர். கல்விப் பணிகளுக்கு அப்பால் துண்டுப் பிரசுரங்கள் மூலம் இந்து சமயத்தை கண்டித்தும், கிறிஸ்தவதமதத்தை முன்னிலைப் படுத்தியும் மக்களிடையே துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டதுடன், அநாதைசாலைகள், சிறுவர் இல்லங்கள், வயோதிப இல்லங்கள் போன்ற மனிதநேய சமூக நலன் பேணும் தாபனங்களை முக்கிய இடங்களில் ஸ்தாபித்து பலரைத் தம்மதத்திற்கு மாற்றிக்கொண்டனர் (யூட்.எஸ்.கே.இலங்கை திருச்சபை வரலாறு 2010: 64). இலங்கைக்கு காலத்திற்கு காலம் மதம் பரப்பும் நோக்கில் பல மிசனறிகள் வந்தன. இவர்களின் நோக்கங்களில் ஒன்று மதம் பரப்புவதுடன் ஆங்கில மொழியில் கல்வியை வளர்ப்பதுமாகும். ஆயினும் அவர்களே சுதேச மொழியைக் கற்று வேதாகமத்தின் போதனைகளைப் பரப்பி சைவத்தை தளர்வடையச் செய்கின்ற முயற்சிகளிலும் ஈடுபட்டனர் (குணசிங்கம். 2008:309). இதனால் ஏற்படும் ஆபத்தை உணர்ந்த சைவப்பெரியார்கள் இந்து சமயத்தை நிலைநிறுத்தும் பொருட்டு பல பணிகளில் ஈடுபட்டனர். அவர்களுள் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுக்கும் முதன்மையான இடமுண்டு. பன்மொழிப் புலமை கொண்ட ஆறுமுகநாவலர் அவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு எதிராக சைவத்தையும், தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்டார். அவரின் பணிகளும், தொண்டுகளும் தமிழ்த் தேசியத்திற்கு தனியடையாளத்தை ஏற்படுத்திக் கொடுத்த தொடக்கப்புள்ளியாக அமைந்தன. இதன் தாக்கம் ஈழத்தில் மட்டுன்றி சமகாலத் தமிழகத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது. நாவலர் பெருமான் முன்னெடுத்த இப்பணிகளை அவரின் சீடர்களால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. இதனால் ஐரோப்பியர்களின் ஆட்சியால் மறைந்த அல்லது மறக்கப்பட்டு வந்த சுதேச பண்பாட்டு அடையாளங்கள் பிரித்தானியர் ஆட்சியின் முடிவில் மீண்டும் மேற்கிளம்பத் தொடங்கின.

பிரித்தானியர் ஆட்சியில் கல்வித்துறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் இலங்கை வரலாற்றில் புதிய காலகட்டத்தின் தொடக்கமாகப் பார்க்கப்படுகிறது. இக்கல்விச் சீர்திருத்தங்களின் ஆரம்ப காலச் செயற்பாடுகள் கல்வியூடாக கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதாக இருந்தது. இது பிரித்தானியா, அமெரிக்க புரட்டஸ்தாந்து மிஷனரிகளின் ஊடாக செயற்படுத்தப்பட்டு வந்தது. இதற்காக தமிழர் பிரதேசங்களில் வெஸ்லியன் மிஷனரிக்குழு, அமெரிக்கன் மிஷனரிக்குழு, திருச்சபை மிஷனரிச் சங்கம் போன்றன தொழிற்பட்டு வந்தன. இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கல்விக்கான மதிப்பு உயர்வாக இருந்தபோதும், வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலும் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய போதிய வசதிகள் காணப்படவில்லை. இதனால் அப்பிரதேசங்களில் கல்வி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருந்தன. மிஷநெறியினர் தமது கல்வித் திட்டத்தில் புவியியல், வரலாறு, தூயகணிதம், மொழி, வானசாஸ்திரம், அட்சரகணிதம், மருத்துவம் போன்ற புதிய பாடங்களை

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0222.jpg

அறிமுகப்படுத்தியதுடன், பல புதிய பாடசாலைகளையும் தோற்றுவித்தனர். இந்நடவடிக்கைகள் தமிழர்களை அதிகளவில் கல்வி கற்க ஊக்கப்படுத்தியதுடன், கல்விக்கேற்ற தொழில்துறைகளையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் வழங்கியது.

யாழ்ப்பாணத்தில் அமெரிக்க சிலோன் மிஷன் ஆரம்பத்தில் மொத்தம் 633 மாணவர்களைக் கொண்ட 15 பாடசாலைகளை நிறுவியிருந்தது. தொடர்ந்து தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை மற்றும் ஏனைய இடங்களில் இருபாலாருக்குமான விடுதிப் பாடசாலைகளை நிறுவியது. இப்பாடசாலைகளில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கல்வி போதிக்கப்பட்டது. 1875 அளவில் ஆரம்பக் கல்வியை விஸ்தரிக்கும் நோக்கில் அமெரிக்க சிலோன் மிஷன் 6588 பிள்ளைகள் கல்வி கற்றும் 121 பாடசாலைகளாக அதன் எண்ணிக்கையை அதிகரித்தது. இம்மிஷநெறியினர் மாணவர்களிடம் கட்டணம் எதுவும் அறவிடாமல் இலவசக்கல்வியை அறிமுகப்படுத்தினர். 1878அளவில் அமெரிக்க சிலோன் மிஷநெறியின் கீழ் 8120 மாணவர்களைக் கொண்ட 135 பாடசாலைகள் இருந்தன (மேலது. 432). அமெரிக்க மிஷனரியினர் போன்று வெஸ்லியன் மிஷனரியினரும் தமது கல்விச் செயற்பாடுகளைத் தமிழ்ப் பிரதேசங்களில் வழங்கியிருந்தனர். இவர்கள் 1818அளவில் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்த நான்கு வட்டாரங்களில் 21ஆரம்பப் பாடசாலைகளை நிறுவியிருந்தனர். மேலும் இம்மிஷனரி 1865இல் வடபகுதியில் 1194 மாணவர்களைக் கொண்ட 32 பாடசாலைகளைக் கொண்டிருந்தது. 1865- 1889 காலப்பகுதியில் இவர்களின் நிர்வாகத்தின் கீழ் பாடசாலைகளின் எண்ணிக்கை நான்கு மடங்காக அதிகரித்ததோடு, மாணவர்களின் எண்ணிக்கை எட்டு மடங்காக அதிகரித்துக் கொண்டது. *(Report of the American Mission in Ceylon in 1878: 5)*. கல்வி அபிவிருத்தியில் ஈடுபாடு கொண்டிருந்த இன்னொரு அமைப்பான திருச்சபை மிஷநெறியினால் 1820இல் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையில் 20 மாணவர்களே கல்வி கற்றனர். இவர்களின் முதலாவது பாடசாலை யாழ்ப்பாணத்தில் சுண்டுக்குளியில் 1842இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து திருச்சபை மிஷனரியின் கல்விச் செயற்பாடுகள் விரிவடைந்தன. 1868அளவில் 1358 மாணவர்களையும் 26 பாடசாலைகளையும் கொண்டிருந்த இச்சபையின் நிர்வாகத்தில் 1897 ஆண்டு காலப்பகுதியில் 3234 மாணவர்களையும் 67 பாடசாலைகளையும் கொண்டதாக வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது *(குணசிங்கம். 2008:325-326)*. மிஷநெறியினால் முன்னெடுக்கப்பட்ட பெண்களுக்கான கல்வி தமிழர் சமூகத்தில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றமாகும். இவர்களால் பெண்களுக்கென தனியான பாடசாலைகள் உருவாக்கப்பட்டதுடன், அவர்களுக்கு எண், எழுத்து, வாசிப்பு முதலான பாடங்களும் போதிக்கப்பட்டன. இவர்களுக்கு ஆண்களுக்குச் சமமான கல்வி வழங்கப்பட்ட போதிலும் நீண்டகாலமாக ஆண்களைவிட கல்வி கற்ற பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது. ஆயினும் காலம் செல்லச் செல்ல கல்வி கற்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றன. இதனால் சமூகத்தில் பெண்கள் தொடர்பாக இதுவரை இருந்து வந்த கட்டுப்பாடுகள், மூடநம்பிக்கைகள் மறைந்து சமூகம் முன்னேற்றம் ஏற்படக் காரணமாக அமைந்தது.

பிரித்தானியர் ஆட்சியில் மிஷநெறிகளால் முன்னெடுக்கப்பட்டுவந்த கல்விச் சீர்திருத்தங்கள், பாரம்பரிய கல்விக் கட்டமைப்பில் ஏற்படுத்திய மாற்றங்கள், நகரங்கள் தொட்டு குக்கிராமம்வரை தோன்றிய பாடசாலைகள், விடுதிப் பாடசாலைகளின் உருவாக்கம், பெண்கல்வி, கல்வி கற்பதில் அனைவருக்கும் சமவாய்ப்பு, கல்வி கற்பதில் சுதேச மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு என்பன தமிழர் சமூகம் நவீன யுகத்தை நோக்கிப் பயணிக்கக் காரணமாக இருந்தது. ஆயினும் இக்கல்வி அபிவிருத்திக்குப் பின்னால் கிறிஸ்தவ மதத்தின் ஆதிக்கமும் இணைந்து கொண்டமை சுதேசமக்கள் பலரிடையே எதிர்வலைகளை உருவாக்கின. இந்நிலை தொடர்ந்தால் தமிழர்கள் அனைவரும் கிறிஸ்தவ சூழலில் வாழும் நிலை ஏற்படும் என அச்சம் கொண்டனர். இவற்றை எதிர்த்து மாற்றுவழிகாண்பதற்கு

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0223.jpg

தீவிர சைவர்கள் தோன்றினர். அவர்களுள் வண்ணார்பண்ணை வைத்திலிங்கச் செட்டியார், முத்துவேல்செட்டியார், சிறாப்பர் குருநாதர் முதலியார், இரகுநாத முதலியார் ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனர். இவர்கள் கிறிஸ்தவப் பாடசாலைகளை நிராகரிப்பதிலும், தமிழ்ச் சிறார்கள் சைவச் சூழலில் கல்வி கற்பதற்கான பாடசாலைகளை அமைப்பதிலும் அக்கறை காட்டினர். ஆயினும் நிதிப்பற்றாக்குறை, ஒன்றிணைந்து செயற்பட முடியாத சூழ்நிலை, மக்களுக்கு போதிய அறிவின்மை போன்ற காரணங்களால் அப்பணிகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியவில்லை.



ஆறுமுக நாவலர்

1842இல் இருந்து ஆறுமுகநாவலர் முன்னெடுத்து வந்த பணிகள் தமிழர் வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயமாக பார்க்கப்படவேண்டிய ஒன்று. ஐரோப்பியரது பண்பாட்டு ஆதிக்கத்திலிருந்து பௌத்த, சிங்களப் பண்பாட்டை மீட்டெடுக்கத் தென்னிலங்கையில் அனாகரியதர்மபாலா போன்ற தலைவர்கள் தோன்றிய போது வடக்கே தமிழையும், சைவத்தையும் பாதுகாக்கத் தோன்றிய தலைவராக ஆறுமுகநாவலர் பார்க்கப்படுகிறார். பல்துறை ஆளுமையும், பன்மொழிப் புலமையும் கொண்ட ஆறுமுகநாவலர் ஆங்கில மொழியை எதிர்க்கவில்லை. அதேவேளை கிஸ்த்தவ மதத்தையும் ஆதரிக்கவில்லை. "பிள்ளைகள் பண்பாட்டு சூழலிலே வாழ வேண்டும். கல்வி தேசியப்பண்பாட்டு வாழ்விற்கு உதவக்கூடியதாக இருக்க வேண்டுமே தவிர நிலை தடுமாற செய்வதாக இருக்கக் கூடாது" என்ற சிந்தனைக் கொண்டிருந்த ஆறுமுகநாவலர் சைவத்தையும், தமிழையும் வளர்க்க கடுமையாக உழைத்தார். அதற்காகப் பல பணிகளை முன்னெடுத்தார். அப்பணிகளுள் ஆலயங்களிலும், சபைகளிலும் சமயப் பிரச்சாரங்களையும், விரிவுரைகளையும் நிகழ்த்துதல், மாணவர்களுக்கு சைவசமய நூல்களை ஆக்கி வெளியிடுதல், தமிழ்மொழி இலக்கண இலக்கிய நூல்களையும், சைவப்பிரபந்தங்களையும், தமிழ்ச் சிறார்களுக்கான வினாவிடை வடிவிலமைந்த நூல்களையும் வெளியிடுதல், பொதுமக்களிடையே காணப்பட்ட தவறான கருத்துக்கள், வழக்குகள் என்பவற்றைப் போக்க கண்டன துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுதல், வயதில் முதிர்ந்தவர்களுக்கு தமது இல்லத்தில் கல்வி வழங்குதல் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

ஆறுமுகநாவலரின் முயற்சியால் பல சைவப்பாடசாலைகள் தோற்றம்பெற்றன. இதுவரை சிறிய திண்ணைப் பள்ளிகளாக இருந்த சமயப் பாடசாலைகள் ஆறுமுகநாவலரின் காலத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட பாடசாலைகளாக வளரத் தொடங்கின. இதற்காக 1848இல் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் வேதாகமப் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டதோடு, 1849இல் அச்சுக்கூடமொன்றும் நிறுவப்பட்டது (ரஞ்சிதமலர். என், *1979*, நாவலர் வாழ்க்கையில் முக்கிய சம்பவங்கள்: *300*). ஆறுமுக நாவலரின் முயற்சியால் 1855இல் கோப்பாயில் மேலுமொரு பாடசாலையை நிறுவப்பட்டது. இவர் சைவப்பாடசாலைகளை நிறுவி தமிழ் போதானா மொழியாக இருக்க வலியுறுத்தி வந்தபோதும் தமிழ்ச்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0224.jpg

சமூகத்துக்கு ஆங்கிலமொழி அறிவு அவசியம் என்பதை உணர்ந்து 1872இல் வண்ணார்பண்ணையில் ஆங்கிலப் பாடசாலையொன்றை நிறுவினார். இப்பாடசாலை இரண்டு ஆண்டுகளின் பின்னர் கைவிடப்பட்டு அது 1890இல் யாழ்ப்பாணம் இந்து உயர் பாடசாலை என பெயர்மாற்றம் பெற்றது. 1895இல் அப்பாடசாலையே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி என்ற பெயரில் நிறுவப்பட்டது *(Hindu Organ. 1895 October 2).*

கி.பி1879 இல் நிகழ்ந்த ஆறுமுகநாவலரின் மறைவு தமிழ் சமூகத்திற்குப் பெரும் பின்னடைவாகப் பார்க்கப்பட்டது. ஆயினும் நாவலர் பெருமான் தான் வாழ்ந்த காலத்திலேயே தனது பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கு நல்ல சீடர்களை உருவாக்கியிருந்தார். இதனால் ஆறுமுகநாவலரின் மறைவின் பின்னரும் அவர் காட்டிய வழியில் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இச்சீடர்களின் முயற்சியால் காரைநகர் இந்துக்கல்லூரி, மட்டுவில் கமலாசினி வித்தியாசாலை, கரணவாய் மாணிக்க வித்தியாசாலை, அல்வாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, துன்னாலை காசிநாதர் வித்தியாசாலை, உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை, வல்வை சிவகுரு வித்தியாசாலை, அனலைதீவு சதாசிவ வித்தியாசாலை போன்ற புதிய சைவத்தமிழ் பாடசாலைகள் உருவாகின. இந்த எண்ணிக்கை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 150 ஆரம்ப, இடைநிலை சைவப்பாடசாலைகளாக தமிழர் பிரதேசமெங்கும் தோற்றம்பெற்றன. இந்நிலையில் சுதேச மக்களின் முயற்சியால் மதச்சார்பான பாடசாலைகள் வளர்ச்சியுற்று வருவது மக்களிடையே மதச்சார்பான முரண்பாடுகளை உருவாக்கும் என்பதை உணர்ந்த பிரித்தானிய அரசு அதைத் தவிர்ப்பதற்கு தமிழர் பிரதேசங்களில் பல அரச பாடசாலைகளை நிறுவி அங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒரு தொகைப் பணம் சம்பளமாகவும் வழங்கினர்.



காரைநகர் இந்துக் கல்லூரி

ஆரம்ப காலத்திலும் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவை நிறுவனமயப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. அவ்வப் பிரதேசத்திலுள்ள பெரியவர்கள் தமக்குத் தெரிந்த வாழ்க்கைக்குத் தேவையான நல்ல விடயங்களையும் சைவச்சமயச்சார்பான சாஸ்திரங்கள், புராணங்கள் போன்றவற்றையுமே மாணவர்களுக்கு போதித்து வந்தனர். ஆனால் இந்நிலைமையினை பிரித்தானியர்காலப் பாடசாலைகள் மாற்றியமைத்தன. இப்பாடசாலைகள் சமயம்சார் கல்வியை வழங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் ஒழுங்கமைக்கப்பட்ட கல்வித்திட்டத்திற்கமைய கல்வி நடவடிக்கைகளை மாணவர்களுக்கு வழங்கின. குறிப்பாக வாய்மொழிப் பரீட்சை முறைகளிற்குப் பதிலாக எழுத்துமுறைப் பரீட்சை மிஷநெறியினரால் வழங்கப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

எனவே பிரித்தானியர்கால தமிழர் பிரதேசத்தின் கல்வி நிலையை நோக்கும் போது அங்கு கிறிஸ்தவ பாடசாலைகளும், சுதேச பாடசாலைகளும், அரச பாடசாலைகளும் பக்கம்பக்கமாக வளர்ந்ததைக் காணமுடிகிறது. சுதேச பாடசாலை கல்விமுறையால் அக்கல்வியில் புலமையுடைய பலர் தோன்றினர். இவர்கள் சைவத்தமிழ் பாரம்பரிய அம்சங்களை கற்று, அவற்றை வளர்ச்சியடையச் செய்து, பாதுகாத்து பிற்கால சந்ததியினருக்கும் வழங்கினர். கிறிஸ்தவ, சைவ, அரச பாடசாலைக் கல்விமுறையால் தமிழர் பிரதேசங்களில் படித்த மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றது. அவர்களில் மத்தியதர வகுப்பினரில்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0225.jpg

சிலர் அரச புலமைப்பரிசில்களைப் பெற்று இங்கிலாந்துக்குச் சென்று உயர்கல்வி பெறும் வாய்ப்பை பெற்றனர். இவர்களில் சிலரே பிரித்தானியர் ஆட்சியின் இறுதிப் பகுதியில் இலங்கையில் தோன்றிய அரசியல் மறுமலர்ச்சியில் முக்கிய செயற்பாட்டாளர்களாகவும் செயற்பட்டனர் (குணசிங்கம் 2008).

தமிழ் இலக்கிய வரலாற்றில் பிரித்தானியர் ஆட்சிக்காலம் ஒரு முக்கிய காலகட்டமாகக் காணப்படுகிறது. இக்காலத்தில் மதம் பரப்பும் பணியில் ஈடுபட்ட கிறிஸ்தவ மிஷனறிமார் சுதேச மொழிகளை கற்பதில் ஆர்வங்கொண்டிருந்ததோடு சுதேச இலக்கியங்களை மறுபதிப்புச் செய்கின்ற பணியினையும் மேற்கொண்டனர். இதேபோன்று சைவத்தமிழ் அறிஞர்களும் சைவத்தமிழ் மறுமலர்ச்சி ஏற்பட்டவேளை சைவத்தமிழ் இலக்கியங்களை புனரமைத்தல், புதிதாக எழுதுதல் போன்ற பணிகளை மேற்கொண்டிருந்தனர். அவ்வகையில் நாவலரால் சிறப்பு இலக்கியங்களை மறுபதிப்புச் செய்தல், உரைவிளக்கங்களை வெளியிடுதல், புதிய இலக்கியங்களை ஆக்குதல் என பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நாவலராலும் அவரைப் பின்பற்றியோராலும் கோவில்புராணம், கந்தபுராணம், சேதுபுராணம், பெரியபுராணம், பாரதம், நைடதம், தொல்காப்பியத்திலிருந்து இலக்கணம், இலக்கண விளக்கம், கலித்தொகை, வீரசோழியம், சூளாமணி, நீதிவிளக்கம், தணிகைப்புராணம், இறையனார் அகப்பொருள், நான்மணிக்கடிகை, யாப்பருங்கலம், வெண்பாப்பட்டியல் போன்ற இலக்கியங்கள் மறுபதிப்புச் செய்யப்பட்டன. இவைதவிர சிவஞானசித்தியார், திருக்கோவையார், காளிதாச சரிதம், இலங்கைச்சரித்திர சூக்கணம், யாழ்ப்பாணச்சரிதம், கதிர்காமக்கலம்பகம் போன்றன புதிய இலக்கியப் படைப்புக்களும் தோன்றின. இக்காலத்திலேயே பல புதிய சைவத்தமிழ், கிறிஸ்தவப் பத்திரிகைகளும் வெளியிடப்பட்டன. அவற்றுள் இலங்கை நேசன் (1877), சைவ உதயபானு (1880), இந்து ஒகன் (1889), இந்துசாதனம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. மேலும் பிரித்தானியர் தமது நடவடிக்கைகளை வெளியிட மோனிங்ஸ்ரார் என்ற பத்திரிகையை வெளியிட்டனர். இப்பத்திரிகைகள் ஊடாக பிரித்தானியர்கால அரசியல், பொருளாதார, சமூக, சமய நிலைமைகள், சைவத்தமிழ் மறுமலர்ச்சி நடவடிக்கைகள் போன்ற பல்வேறு வரலாற்றுத் தகவல்களைப் பெறமுடிகிறது. தமிழரின் பாரம்பரிய மதம், மொழி, கல்வி, இலக்கியம் ஏன்பவற்றில் மாற்றங்களும், வளர்ச்சிகளும் ஏற்படக் காரணமாக இருந்த பிரித்தானியர் ஆட்சியால் தமிழரின் பாரம்பரிய வாழ்வியலிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றுள் மேலைநாட்டு ஆடை அணிகலன்கள், உணவுப்பழக்கவழக்கங்கள், தனிநபர் பெயர்கள், கட்டிட சிற்பக்கலைகள், இசை, நடனம், நாடகம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பிரித்தானியர்கால அரசியல் சீர்திருத்தங்களும் தமிழர்களும்

இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சனைக்குரிய காரணங்கள் பற்றிய ஆய்வில் பிரித்தானியர் காலத்தில் கொண்டுவரப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களின் விளைவுகளையும் பின்னோக்கிப் பாரக்கும் மரபு காணப்படுகிறது. இதற்கு இவர்களின் ஆட்சியில் காலத்திற்கு காலம் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் நாட்டின் இனங்களுக்கிடையே ஐக்கியம் ஏற்படுவதற்கு உதவவில்லை. மாறாக இன முரண்பாடுகளையும், பிரிவினைவாதத்தையும் ஏற்படுத்தும் வகையில் அவர்களின் அரசியல் சீர்திருத்தங்களில் தமிழரின் அடையாளங்களும், அரசில் அவர்களின் பிரதிநிதித்துவமும் படிப்படியாகப் பலவீனமடையச் செய்யப்பட்டிருந்ததே காரணமாகும். அச்சீர்திருத்தங்களை தெரிந்து கொள்வது தற்காலத் தமிழரின் நிலையைப் புரிந்து கொள்ளப் பெரிதும் உதவலாம்.

பிரித்தானியருக்கு முன்னர் இலங்கையில் ஆட்சி செய்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் சமயம், சட்டம் சார்ந்த துறைகளில் சட்ட மாற்றங்களைக் கொண்டுவந்திருந்தாலும், அவர்கள் அரசியல், பொருளாதாரத் துறைகளில் மாற்றங்களைக் கொண்டுவர முற்படவில்லை. ஆனால் பிரித்தானியர் ஆட்சியில் நாட்டின்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0226.jpg

அரசியல், நிர்வாகம், பொருளாதாரம் என்பவற்றில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து அவற்றை நடைமுறைப்படுத்தி வந்தனர். அவற்றுள் கோல்புறூக் (1833), குறுமக்கலம் (1910), மனிங் (1921), மனிங்டிவன்சயர் (1924), டொனமூர் (1931), சோல்பரி (1947) என்பன இவர்களின் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய யாப்புக்களாகும். பிரித்தானியரால் முதன்முதலாக இலங்கையில் அறிமுகப்படுத்திய கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் இலங்கை வரலாற்றில் ஒரு புதிய திருப்பமாக கருதப்படுகிறது. இச்சீர்திருத்தத்தினால் இலங்கையில் பல்வேறு அபிவிருத்திகள் ஏற்பட்ட அதேவேளை தமிழர் சமுதாயத்திலும் சில மாற்றங்கள் ஏற்படக் காரணமாகிது. இச்சீர்திருத்தத்தினால் இலங்கையின் அனைத்துப் பிராந்தியங்களும் ஒன்றிணைக்கப்பட்டு கொழும்பு என்ற நிர்வாக மையத்தின் கீழ் அவை கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களாக இருந்து வந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டு ஏனைய பிரதேசங்களுடன் இணைக்கப்பட்டது. அத்தோடு தமிழரின் பாரம்பரிய பிரதேசமாக இருந்த புத்தளம் பகுதியையும் சிங்கள, முஸ்லிம் சமுதாயத்திடம் இழக்க வேண்டி ஏற்பட்டது. கோல்புறூக் சீர்திருத்தமே முதன்முதலாக தமிழர்கள் சட்டசபையில் அங்கத்துவம் வகிப்பதற்கு வாய்ப்பை வழங்கியது. பதினைந்து அங்கத்தவர்களைக் கொண்ட சட்டசபையிலே ஒன்பது பேர் உத்தியோகப்பற்று உள்ளவர்களாகவும், ஆறு பேர் உத்தியோகப்பற்று அற்றவர்களாகவும் விளங்கினர். இந்த உத்தியோகப்பற்று அற்றவர்களில் மூன்று பேர் ஐரோப்பியராகவும், ஒருவர் பறங்கியர், ஒருவர் தமிழர், ஒருவர் சிங்களவர் என அங்கத்துவம் வகித்தனர். 1889 இல் சட்டசபையில் உத்தியோகப் பற்றற்றவர்களின் தொகை எட்டாக அதிகரித்த போது கண்டியச் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் தலா ஒவ்வொரு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. இதன் மூலம் சிங்கள அங்கத்தவரின் எண்ணிக்கை ஒன்றால் அதிகரிக்கப்பட்டது.

இந்நிலையில் கோல்புறூக் யாப்பில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டிய சுதேச மக்கள் சட்டசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துமாறு, அரசிற்கு அழுத்தம் கொடுத்தனர். இதனால் 1910இல் இலங்கைக்கு இன்னொரு சீர்திருத்தமாக குறுமக்கலம் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்யாப்பினூடாக முதன்முதலாக சட்டசபையில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பு மட்டக்களப்பு மக்களுக்கு அளிக்கப்பட்டு, தமிழரும் சிங்களவரும் சபையில் பெரும்பான்மை நிலையைப் பெற்றனர். மேலும் படித்த இலங்கையர் சார்பில் சேர். பொன். இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார். இத்தெரிவில் தமிழ் மக்களுடன் சிங்கள மக்களும் இணைந்து சேர். பொன். இராமநாதனை தெரிவு செய்தமை இலங்கைத் வரலாற்றின் முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது. பொதுப்பட கோல்புறூக் - குறுமக்கலம் யாப்புகளினால் ஏற்பட்ட விளைவுகளை நோக்கும் போது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டமை, தமிழரிடம் இருந்த புத்தளம் சிங்கள இஸ்லாமிய சமூகத்திடம் இழந்தமை தமிழர்கள் தங்கள் பாரம்பரிய பிரதேசங்களை இழந்து தமிழர் சிறுபான்மை இனமாக மாற்றப்படக் காரணமாகியது. இந்நிகழ்வே 1948இல் பிரித்தானியரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த போது இலங்கையின் அதிகாரங்கள் சிங்களவர்களின் கைகளுக்குச் சென்று அவர்கள் மட்டுமே நாட்டை நிர்வகிக்கின்ற நிலைக்கு இட்டுச்சென்றது.

1921இல் அறிமுகப்படுத்தப்பட்ட மனிங் சீர்திருத்தம் முன்னைய இரு சீர்திருத்தங்களையும் விட தமிழ், சிங்கள மக்களிடையே இனமுரண்பாட்டையும், பிரிவினையும் ஏற்படுத்திய அரசியல் சீர்திருத்தமாகக் காணப்படுகிறது. இச்சீர்திருத்தத்தால் இனவாரியும், பிரதேசவாரியும் கலந்த தொகுதிகளை அடிப்படையாகக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்யாப்பால் ஏற்படுத்தப்பட்ட சட்டசபையில் உத்தியோகப்பற்றற்றவர்களாக நான்கு சிங்களவர்கள், ஒரு தமிழரும், ஒரு பறங்கியர், இரண்டு முஸ்லிம்கள், ஒரு இந்தியர், மூன்று ஐரோப்பியர்கள் அங்கம் வகித்தனர். இதில் முன்னைய சீர்திருத்தங்களில் காணப்பட்ட சிங்களவருக்குச் சமமான விதத்தில்

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0227.jpg

தமிழருக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. இந்நிலையில் மேல்மாகாணத்தில் தமிழருக்கு ஆசனத்தை தருவதாக ஒப்புதல் வழங்கப்பட்டபோதும் இறுதியில் அதை சிங்களவர் கைப்பற்றிக் கொண்ட நிகழ்வு இரு இனங்களுக்கும் இடையில் பகைமை உணர்வு தீவிரமடைய வழிவகுத்திருந்தது. இதேபோன்று 1924ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மனிங்டிவன்சயரும் தமிழ் மக்களுக்கு நன்மை தரும் வகையில் சீர்திருத்தத்தைக் கொண்டுவரவில்லை. இச்சீர்திருத்தத்தில் சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்ட இருபத்தி மூன்று பேரில் பதினாறு பேர் சிங்களவராகவும், ஏழு பேர் தமிழ்மக்கள் சார்பாகவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1931இல் கொண்டுவரப்பட்ட டொனமூர் சீர்திருத்தம் இலங்கையில் ஜனநாய ஆட்சியை கொண்டுவர அறிமுகப்படுத்திய முக்கிய சீர்திருத்தமாகப் பார்க்கப்படுகிறது. ஆயினும் இச்சீர்திருத்தமும் நடைமுறையில் தமிழருக்குப் பாதகமாகவே அமைந்தது. இச்சீர்திருத்தத்தினால் 21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தேர்தலில் வாக்களிக்கும் உரிமை (சர்வசன வாக்குரிமை) அறிமுகப்படுத்தப்பட்டதோடு, பெண்களும் வாக்களிப்பதற்கான உரிமை வழங்கப்பட்டது. இதன் மூலம் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதில் மக்களுக்கு அதிக வாய்ப்பளிக்கப்பட்டதுடன் பெண்களும் அரசியலில் பிவேசிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இச்சீர்திருத்தத்தின் மூலமே இலங்கையில் இனவாரி பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டு பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் தமிழர் பிரித்தானிய அரசிடம் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை கோரி நின்றபோதும் டொனமூர் குழுவினர் சிங்கள மக்கள் கோரி நின்ற பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையையே கொண்டுவந்தனர். இதனால் சட்டசபைக்கு தெரிவுசெய்யப்பட்ட சிங்களவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டது. ஐம்பது அங்கத்தவர்களைக் கொண்ட சட்டசபையில் முப்பத்தெட்டு சிங்களவரும், ஏழு இலங்கைத் தமிழரும், இரண்டு இந்தியத் தமிழரும், இரண்டு ஐரோப்பியரும், ஒரு முஸ்லிமும் இடம்பெற்றுறிருந்தனர். இதன் மூலம் அரசியல் அதிகாரமானது பெரும்பான்மையினரின் சென்றடைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதுடன் தமிழர்களை அரசியலில் செல்வாக்கற்ற இனமாக மாறுவதற்கும் வழியேற்படுத்தப்பட்டது. இதன் விளைவுகள்தான் தமிழர்கள் இலங்கையில் தமக்குரிய இருப்பையிட்டு அதிருப்தி கொள்ளவும், தமிழ், சிங்கள மக்களிடையே இனமுரண்பாடு கூர்மையடையவும் இச்சீர்திருத்தமே வழிவகுத்ததென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆயினும் டொனமூர் சீர்திருத்தத்தினால் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் திருப்தி கொள்ளவில்லை. மாறாக அதிக உரிமைகளையும், சலுகைகளையும் எதிர்பார்த்து பிரித்தானிய ஆட்சியாளருக்குத் தொடர்ச்சியான அழுத்தங்களை கொடுத்து வந்தனர். இதன் காரணமாகவே இலங்கை சுதந்திரமடைந்ததற்கு ஓராண்டுக்கு முன்னர் அதாவது 1947ஆம் ஆண்டு சோல்பரி சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இச்சீர்திருத்தத்திலும் தமிழர்களால் முன்வைக்கப்பட்ட நியாயமான பல கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு சிங்கள மக்களால் முன்வைக்கப்பட்ட பல கோரிக்கைகளே ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. இச்சீர்தித்தத்தில் 95 பிரதிநிதிகளை கொண்ட சட்டசபையில் 68 சிங்களப்பிரதிநிதிகளும், 13 இலங்கைத்தமிழ் பிரதிநிதிகளும், 7 இந்தியத்தமிழ் பிரதிநிதிகளும், 6 முஸ்லிம் பிரதிநிதிகளும், ஒரு பறங்கிய சமூகப் பிரதிநிதியும் அங்கத்துவம் வகித்தனர். மேலும் தேசாதிபதியினால் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து ஐரோப்பியரும், ஒரு பறங்கியரும் பிரதிநிதிகளாக இருந்தனர். ஆகவே இச்சட்டசபை அங்கத்துவத்தில் இருந்து சிங்கள கட்சிகளே பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளமை தெரிகிறது. இதனால் பிரித்தானியர் ஆட்சி முடிவுற்று 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த போது இலங்கையின் ஆட்சி அதிகாரம் பெரும்பான்மைச் சிங்கள மக்களிடமே சென்றடைய வழியேற்பட்டது. அந்நிலையே தற்காலம் வரை தொடர்கிறது. ■

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0228.jpg

உசாத்துணை நூல்கள், கட்டுரைகள்

1. அரசரட்ணம், , "ஒல்லாந்தர் ஆட்சியின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்" இலங்கை வரலாறு (கி.பி. -), (ப.அ) அருந்தவராஜா, க., கட்டுரைத் தொகுப்பு, நல்லூர்: 62-69.
2. ஆறு. திருமுகன்., 2016, சைவத் தமிழரின் கலங்கரை விளக்கம்.
3. இந்திரபாலா,கா., 1969, யாழ்ப்பாணக் கல்வெட்டுக்கள், சிந்தனை, மலர் 2, இதழ் 4, பேராதனை.
4. ..... 1972, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், கண்டி.
5. .....2006, இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
6. இந்திரபாலா, கா., 1999, இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, சென்னை.
7. இராசன், கா., 2004, தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
8. இரகுபதி, பொ., 2006, வல்லியக்கனும் வல்லிபுரநாதரும், புலரி மறுபிரசுரம், யாழ்ப்பாணம்.
9. இராஜகோபால்,சு., 1989, "இலங்கைத் தமிழப் பிராமி எழுத்துக்கள் - ஓர் ஒப்பாய்வு" (பிரசுரிக்கப்படாத கையெழுத்துப் பிரதி).
10. சிவசாமி, வி., 2014, இலங்கையில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர்கால நிர்வாகமுறை - ஓர் ஒப்பியல் ஆய்வு, இலங்கை வரலாறு (கி.பி. 1505-1796), (ப.அ) அருந்தவராஜா, க., கட்டுரைத் தொகுப்பு, நல்லூர்: 87-98.
11. .....2014, ஒல்லாந்தர் காலத்தேய யாழ்ப்பாணத்தின் பொருளாதாரநிலை - சில குறிப்புக்கள், இலங்கை வரலாறு (கி.பி. 1505-1796), (ப.அ) அருந்தவராஜா, க., கட்டுரைத் தொகுப்பு, நல்லூர்: 99- 109.
12. சேனக பண்டாரநாயக்கா.,1985, (தமிழாக்கம்) "இலங்கை மக்கள் வசிப்பிடமாதல், தேசிய பிரச்சனை, வரலாறு, இனம் தொடர்பான சில கேள்விகள்" இலங்கையில் இனத்துவமும் சமூகமாற்றமும், சமூக விஞ்ஞான மன்றம், கொழும்பு:1-23.
13. சிற்றம்பலம், சி.க., 1992, யாழ்ப்பாண இராச்சியம், (பதிப்பு), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
14. ..... 1984, 'ஈழமும் இந்து மதமும் -அநுராதபுர காலம்' சிந்தனை தொகுதி-2, இதழ்-2, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு 108-142.
15. ..... 1994 யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.
16. ..... 1996, ஈழத்து இந்துசமய வரலாறு பாகம் -1, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.
17. கிருஷ்ணராஜா, செ., 1998, தொல்லியலும் யாழ்ப்பாண தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், பிறைநிலா வெளியீடு.
18. குணசிங்கம்.மு.இ 2008, இலங்கையில் தமிழர், ஒரு முழுமையான வரலாறு - கி.மு. 300 - கி.பி.2000, விட்லி
19. கைலாயமாலை, 1939, ஐம்புலிங்கபிள்ளை (பதிப்பு), சென்னை.
20. ஞானப்பிரகாசர் சுவாமி, 1928, யாழ்ப்பாண வைபவவிமர்சனம், அச்சுவேலி.
21. பத்மநாதன், சி., 2004, ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
22. ....., 2005, இலங்கையில் இந்து மதம், அகில இலங்கை இந்துமாமன்ற பொன்விழா வெளியீடு, கொழும்பு.
23. ....., 2006, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
24. ..... 2011, யாழ்ப்பாண இராச்சியம் - ஒரு சுருக்க வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0229.jpg

25. பவானி, மா., 2006, தமிழகத்தில் நாணயச் செலவாணி முறை (கி.பி. 600-1600), மனோ பதிப்பகம், தஞ்சாவூர்.
26. புஷ்பரட்ணம், ப., 1993, பூநகரி - தொல்பொருளாய்வு, (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.
27. ....., 1999, "தென்னிலங்கையில் கிடைத்த தமிழ் நாணயங்கள் - ஒரு வரலாற்று நோக்கு" நாவாவின் ஆராய்ச்சி, இதழ்.49, சென்னை:55-70.
28. ....., 1999, "வடஇலங்கைச் சமூக வழக்கில் பெருங்கற்காலக் குறியீடுகள்" வளர்தமிழியல் அறிவியல், அனைத்திந்திய அறிவியியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.
29. ....., 2000, தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, குமரன் பதிப்பகம், சென்னை.
30. ....., 2003, "உடுத்துறையில் கிடைத்த அரிய தமிழர் நாணயங்கள்", ஆவணம், இதழ். 14, தமிழகத் தொல்லியற் கழகம், தஞ்சாவூர்: :116-119.
31. ....., 2004, தமிழ் எழுத்தின் தோற்றம் - ஈழத்திலிருந்து தமிழகத்திற்கு, யாழ்ப்பாணம்.
32. ..... 2012, "இலங்கையில் தமிழ் மொழியின் தொன்மை - அண்மைக்காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்டது" யாழ்ப்பாண வாழ்வியல், (ப.ஆ), புஷ்பரட்ணம், ப., கொழும்பு: 25-35.
33. பூங்குன்றன்,ஆர்., 1999, "பண்டைய தமிழகத்தில் அரச உருவாக்கம்", முனைவர் பட்டத்திற்காக தஞ்சைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்ட ஆய்வேடு, தஞ்சாவூர்.
34. மட்டகளப்பு மான்மியம், 1952, (பதிப்பாசிரியர்) நடராசா, எவ்.எக்ஸ்.சி., கொழும்பு.
35. யாழ்ப்பாண வைபவமாலை, 1951, சபாநாதன்,குல. (பதிப்பு), கொழும்பு.
36. வையாபாடல், 1921, அருட்பிரகாசம், ஜெ.டபிள்யு, (பதிப்பு) யாழ்ப்பாணம்
37. *Abayasinge, T,.1966,* **Portuguese Rule in Ceylon** *1594- 1612, Colombo.*
38. *Arasaratnam.S., 1958,* **The Dutch Power in Ceylon 1658- 1687**, *Colombo.*
39. *....., 1994,* **Sri Lankan Tamils Under Colonial Rule, in Sri Lankan Tamils: Ethnicity and Identity,** *ed. By Manogarar.C & Pfaffenberger.B.*
40. *Bandaranayake, Senaka., 1974,* **Sinhalese Monastic Architecture, Leiden**.
41. *Bell, H.C.P., 1982,* **Annual Report of the Archaeological Survey of Ceylon** *for 1892-1893, Colmbo.*
42. *Biddulph, C.H. 1966,* **Coins of Pandyas**, *NNMno11 of the Numismatic Society of India.*
43. *Bopearachchi, O. and Wickramesinhe, W., 1999,* **Ruhuna an Ancient Civilization** *Revisited, -Numismatic and Archaeological Evidence on Inland and Maritime Trade, Nugegoda – Colombo.*
44. *Champakalakshmi, R., 1975,* **Archaeology and Tamil Literary Tradition in Puratattva**, *8:110-122.*
45. *....., 1996, Trade,* **Ideology and Urbanization of South India 300 B.C to A.D.1300**, *Oxford University Press, Delhi*
46. *Codrington, H.W. 1924,* **Coins and Currency, Memoirs of the Colombo Museum**, *Series A, No.3, Colombo.*
47. *Conigham,Robin.,2002,* **"Beyond and Before the Imperial Frontiers: Early Historic Sri Lanka and the Origions of Indian Ocean Trade"** *Man and Environment, Journal of the Indian Society for Prehistoric and Quaternary Studies;Vol.XXVII,No.1:99-107.*
48. *Culavamsa, 1953, Geiger. W. [E.d],* **Ceylon Government Information Department,** *Colombo.*
49. *Depavamsa, 1959, Bimala Chum Law, (Ed),* **The Historical Journal** *Vol. III No.1-4.*
50. *Deraniyagala, S.U., 1992,* **The Prehistory of Sri Lanka: An Ecological Perspective,** *Department of Archaeological Survey, Colombo.*

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0230.jpg

51. *Lewis, P., 1895,* **Mannual of the Vanni District,** *Colombo.*
52. *Elman,R., 1975,* **Origins of the State and Civilization,** *New York.*
53. *Indrapala K., 2005,* **The Evolution of an Ethnic Identity, The Tamils in Sri Lanka (C 300BCEto C 1200C),** *M.V. Publication, Sydney.*
54. *Liyanagamage, A., 1968,* **The Decline of Polonnaruwa and the Rise of Dambedeniya** *(circa 1180-1270 A.D), Department of Cultural Affairs.*
55. *Karunaratne,S.M., 1984,* **"Lithic and Other Inscriptions of Ceylon"** *in Epigraphia Zeylanica, Archaeology Department of Ceylon, Colombo, Vol.VII.*
56. *Mahadevan, I., 2004,* **Early Tamil Epigraphy,** *Chennai.*
57. *……., 2010.* **"An Epigraphic Perspective on the Antiquity",** *The Hindu, on 24th June, Chennai.*
58. *Mahavamsa, 1950, (e.d) Geiger, W.,* **The Ceylon Government Information Department,** *Colombo.*
59. *Michener, M 1998,* **The Coinage and History of Southern India,** *Hawakins Publication.*
60. *Navaratnam, C.S., 191960,* **Vanni and the Vanniyars,** *Jaffna.*
61. *Nilakanda Sasthiri, 1955,* **The Cholas, 2nd Edition, Madras.**
62. *Paranavitana, S., 1961,* **The Arya Kindom in Northen Sri Lanka"** *Journal of the Royal Asiatic Society Ceylon Branch, Vol. VII, pt. 2: 174-224.*
63. *……., 1970,* **Inscription of Ceylon: Early Brahmi Inscriptions,** *The Department of Archaeology Ceylon, Colombo, I.*
64. *……., 1983,* **Inscription of Ceylon: Late Brahmi Inscriptions,** *The Department of Archaeology Sri Lanka, Moratuwa, and II [1].*
65. *Pathmanathan, S., 1978,* **Kingdom of Jaffna,** *Part-1, Colombo.*
66. *Peris, P.E., 1922,* **Nagadipa and Buddhist Remains in Jaffna** *Part. I in Journal of the Royal Asiatic Society Ceylon Branch, 11-20.*
67. *Pushparatnam, P. 2000,* **Tamil Brahmi Graffiti from Northern Sri Lanka"** *Studies in Indian Epigraphy, Vol.XXVI, Maysore.*
68. *……., 2002,* **Ancient Coins of Sri Lankan Tamil Rulers,** *Chennai.*
69. *……., 2002,* **Naka Dynasty as Gleaned from the Archaeological Evidences in Sri Lanka"** *Jaffna Science Association Tenth Annual Session:1-34.*
70. *……., 2014,* **"Tamil Brahmi Inscription Belonging in 2200 year ago, Discovered by German Archaeology Team in Southern Sri Lanka"** *in Jaffna University International Conference, 541-545.*
71. *……., 2014,* **Tourism and Archaeological Heritage Monuments in Northern Sri Lanka,** *Colombo.*
72. *……. 2014,* **"Commercial Ties Between Northern Sri Lanka and Foreign Countries up to 13th Century A.D.",** *in National Archaeological symposium – 2014,Department of Archaeology, Sri Lanka, Colombo.*
73. *…….2016,* **" Jaffna – Multi Lateral Views",** *Essaya on History Culture and Foreign Relations: Festschelations: Festschrift for Professor S.Pathmanathan,(fds), Mahinda Somathilake and N.A. Wimalasena, Colombo:383- 408.*
74. *Queroz,Fr Fernaode, 1930,* **The Temporal and Spiritual Conquest of Ceylon,** *Fr. S.G. Perera, Colombo.*
75. *Ragupathy, P., 1987,* **Early Settlements in Jaffna: An Archaeological Survey,** *Mrs.Thillimalar ,*

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0231.jpg

Ragupathy, and Madras.

76. *Rajan,K.,1 994,* **Archaeology of Tamil Nadu***(Kongu Country), Book India Publishing Co, Delhi.*
77. *…… 2015,* **Early Writing System, A Journey from Grafitti to Brahmi,** *Chennai.*
78. *Rajavaliya, 1959, (e.d)* **Pemananda Bhikhu,** *Colombo.*
79. *Rasanayagam, C., 1926,* **Ancient Jaffna,** *A.S., Everyman's Publishers Ltd, Madras.*
80. *Ray,H.C., 1959, (ed),* **University of Ceylon, History of Ceylon,** *Vol.I, Part.I University of Ceylon Tress Board, Colombo.*
81. *Seneviratne, S., 1984,* **The Archaeology of the Megalithic-Black and Red Ware Complex in Sri Lanka in Ancient Ceylon,** *Journal of the Archaeological Survey of Sri Lanka, 5:237-307.*
82. *……., 1985,* **The Baratas: A Case of Community Integration in Early Historic Sri Lanka in Festschrift 1985 James** *Thevathasan Ratnam, [E.d], Amerasinghe, A.R.B., Colombo: 49-56.*
83. *Silva, K. M.D., 1981,* **History of Sri Lanka** *Colombo.*
84. *……., 1995, (e.d),* **University of Peradeniya, History of Srilanka** *vol . II , (C1500-1800).*
85. *Sitrampalam, S.K., 1990,* **Proto Historic Sri Lanka: An Interdisciplinary Perspective** *in Journal of the Institute of Asian Studies, VIII [1]: 1-8.*
86. *……., 2004,* **"Perspectives from the North"** *Dealing with Diversity- Sri Lankan Discourses on Peace and Conflict, (eds) Georg Frerks and Bart Klem, The Netherlands Institute of International Relations 'Clingendael' : 209-237.*
87. *Thapar, Romila., 1995, [e.d],* **Recent Perspectives of Early Indian History**, *Popular Prakashan, Bombay.*
88. *Veluppillai, A., 2002,* **"The History of Buddhism Among Tamils in Pre- Colonial Ilankai",** *The History of Buddhism Among Tamils in Pre- Colonial Tamilakam and Ilam- Part-I (e.d) Peter Schalk, Uppsala: 145-166.*

Tamileelam Archive

New Doc 2020-03-23 11.24.48 (1)_page-0232.jpg



சிரேஷ்ட பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையிலே தொல்லியல் இணைப்பாளராகக் கடமையாற்றி வருகிறார். வட மாகாணத்திற்கான மத்திய கலாசார நிதியப் பணிப்பாளரும் மற்றும் இலங்கைத் தொல்லியற் திணைக்கள யாழ்ப்பாணக் கோட்டை மீள்புனரமைப்புத் திட்டத்தின் பிரதான ஆலோசகர்களில் ஒருவரும் ஆவார்.

தென்னாசியாவின் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் வை. சுப்பராயலுவின் வழிகாட்டலில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவர். தமிழரின் பூர்வீக வரலாற்றைத் தொல்லியல் அகழ்வாய்வின் மூலம் வெளிக்கொணர அயராது உழைத்து வரும் இவர் அந்த ஆய்வுகளின் மூலம் முன்வைத்த முடிவுகள் பல இன்று அறிஞர்கள் பலரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுப் பின்புலத்துடன் எழுதப்பட்டுள்ள இந்நூலில் பேராசிரியர் புஷ்பரட்ணம் அண்மைக்காலத்தில் பூநகரி, வேலணை, முள்ளியான், புளியங்குளம், செட்டிக்குளம், கப்பாச்சி, கட்டுக்கரைக்குளம், நாகபடுவான் மற்றும் திருமங்கள்ளாய் (திருகோணமலை) ஆகிய இடங்களில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகளையும் இணைத்திருப்பது இந்நூலைச் சிறப்படையச் செய்கிறது. இந்நூல் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு மட்டுமல்ல தமிழர் வரலாற்றை அறிய விரும்புபவர்களுக்கும், மேலும் ஆய்வு செய்ய விரும்புபவர்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் பேராசிரியர் புஷ்பரட்ணம் எழுதிய பூநகரி – தொல்பொருளாய்வு: 1993 (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு), தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு: 2000, 2002 (சென்னை), இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள்: 2002 (சென்னை), தொல்லியல் நோக்கில் ஈழத் தமிழரின் மதமும் கலையும்: 2001 (கொழும்புத் தமிழ்ச் சங்கம்), இலங்கையில் தமிழும் தமிழரும் 2002: (கொழும்புத் தமிழ்ச் சங்கம்), தமிழ் எழுத்தின் தோற்றம் ஈழத்தில் இருந்து தமிழகத்திற்கு: 2004 (யாழ்ப்பாணக் கச்சேரி), ஈழத்தமிழரும் நாக அரசமரபும்: 2003 (சென்னை), நல்லூர் இராசதானியும் யாழ்ப்பாணக் கோட்டையும்: 2012 (கொழும்புத் தமிழ்ச் சங்கம்), பத்மம் (ப.ஆ): 2000 (சென்னை), யாழ்ப்பாண வாழ்வியல் (ப.ஆ) 2011(வீரகேசரி கொழும்பு), Ancient Coins of Sri Lankan Tamil Rulers : 2002 (Chennai), Tamil Place Names as Gleaned from Sri Lankan Brahmi Inscriptions (Monograph: Chennai), Tourism and Monuments of Archaeological Heritage in Northern Sri Lanka : 2014 (Colombo) முதலான நூல்களும் ஈழத்தமிழர் வரலாற்றை ஆய்வு செய்ய விரும்புபவர்களுக்கு மேலும் பயனுள்ளதாக இருக்கும்.

978-3-906871-15- 8

தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
TAMIL EDUCATION SERVICE SWITZERLAND